இலகுவழி ஆங்கிலம்

என்னும்

வித்துவான் வை. முத்துசாமி ஐயர் அவர்களால் இயற்றப்பட்ட

ஆயுர்வேத பூஷணம்

பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார்.

AYURVEDIC CHEMISTRY
AND
THERAPEUTICS.

இரஸரத்தின ஸமுச்சயம்.

மாதவ நிதானம்

என்னும்

ரோக விநிச்சய நூல்.

பஞ்சநிதானங்கள் என்கிற முறைப்படியும், வேறு பல வகையிலும் ஸகல வியாதிகளையும் பரீக்ஷிப்பதற்கு மிகவும் உபயோகமான நூல். மாதவகரன் என்னும் வைத்திய ஸார்வபௌமன் ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றிய மிகப் பிராசீன வியாதி பரீக்ஷாக்ரந்தத்தின சரியான தமிழ் மொழிபெயர்ப்பு. விரிவான டிப்பணி, விஷய அகராதி முதலியவைகளுடன் கூடியது.

ரோகபரீக்ஷைக்கு மிக்க அவசியமான பிராசீன வைத்திய நூல் இது ஒன்றே.

ஆயுர்வேதபூஷணம்
பண்டித மே. துரைஸ்வாமி
ஐயங்கார்
அவர்களால் மொழி
பெயர்க்கப்பட்டது.

விலை. ரு. 5-4-0

வைத்திய கலாநிதி ஆபீஸ்.
வேப்பேரி—மதராஸ்.

RASARATNA SAMUCHCHAYA

A COMPENDIUM OF AYURVEDIC CHEMISTRY
OF
ACHARYA VAGBHATA

Translated from Sanskrit Original into

TAMIL

With Notes and Introduction

BY

AYURVEDA BHUSHAN
Pandit M. DURAISWAMI AIYANGAR, A.V.S.
Diplomed Ayurvedic Medical Practitioner, Ex-Chief Physician, S.K.P.D.Ay. Hospital, Translator of ASHTANGA HRIDAYAM, SARNGADHARA SAMHITA, MADHAVA NIDANAM, KADAMBARI, MEGHASANDESA, &c., into Tamil, Author of KIRATARJUNIYA GADYA SANGRAHA, TRIDOSHA TATTWA, NIDANASARA, &c., in Sanskrit, Vice-President, The All-India Ayurveda Vidya Pitha &c., and Examiner to Government and many other Ayurvedic Institutions.

MADRAS:
THE VAIDYA KALANIDHI OFFICE,
MEDICAL PUBLISHERS,
VEPERY.

(All Rights Reserved.)

1931.

இரஸரத்தின ஸமுச்சயம்

என்னும்

வித்த ரஹாயந நூல்.

ஆசார்ய வாக்படருடைய

ஸம்ஸ்க்ருத மூலக்கிரந்தத்தின்

மொழி பெயர்ப்பு.

ஆயுர்வேத பூஷணம்

பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார், எ. வி. எஸ்.

அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு

அவர்கள் இயற்றிய

டிப்பணி, நூன்முகம், விஷய அகராதிகள் முதலியவற்றுடன்

கூடியது.

சென்னை :

வைத்திய கலாநிதி ஆபீஸ்.

வேப்பேரி.

1931.

நூன் முகம்.

ஆயுர்வேத - நூல்களில் இரஸௌஷதங்கள்.

இரஸதந்திரம் அல்லது இரஸசாஸ்திரம்[1] என்பது ஆயுர்வேத சாஸ்திரத்தில் மிகப் பிரதானமான ஒரு பாகம். வெகுப் பிரஸித்தமான சரகஸம்ஹிதை, ஸுச்ருதஸம்ஹிதை என்கிற ஆயுர்வேத மூலக்கிரந்தங்களைத் தவிர மற்றெல்லாப் பிராசீன ஆயுர்வேத நூல்களிலும் பெரும்பாலும் இரஸௌஷத முறைகள் விஸ்தாரமாகவோ சுருக்கமாகவோ மொழியப்பட்டிருக்கின்றன. பிராசீன கிரந்தங்களுள் ஒன்றான அஷ்டாங்க ஹ்ருதயத்திலும் இரஸமுறைகள் கூறப்படவில்லை யென்றாலும், அதன் ஆசிரியரான வாக்படர் இரஸரத்ன ஸமுச்சயம் என்னும் பிரத்தியேகநூல் இரஸவிஷயமாக இயற்றியிருக்கிறார். வாக்படர் இரஸரத்ன ஸமுச்சயம் இயற்றியவர் என்பதைப்பற்றி இந்நூன்முகத்தில் வேறிடத்தில் விவரிக்கப்படும். சரக-ஸுச்ருத-பாஹடங்களிலும்[2] தாதுப்பொருட்கள் சில ஔஷதமுறைகளில் ஒரு சிறிது குறிக்கப்பட்டிருக்கின்றன;[3] அதனால் மூலிகைகளல்லாத உலோஹாதிதாதுக்களும் வியாதிநிவாரணத்திற்கு உபயோகமானவை யென்பதை சரகர் முதலானவர்களும் அறிந்திருந்தனர் என்று விளங்குகிறது. ஔஷதத்திரவ்யங்களை ஸேந்த்ரியங்கள், நிரிந்த்ரியங்கள் என்றும்

---

1. இரஸம் என்பதால் இரஸ-கந்தகங்கள், சிலாஜது-மாக்ஷிகம் முதலியவை, அயம்-தாம்ரம் முதலிய உலோஹங்கள் ஆகிய எல்லாக் கனிஜபதார்த்தங்களும் அல்லது தாதுப்பொருட்களும் குறிக்கப்படும்; அவ்விதமான சரக்குகளாலான மருந்துகள் இரஸௌஷதங்கள் என்றும், அவற்றைப்பற்றி விவரிக்கும் கிரந்தம் இரஸதந்திரம் அல்லது இரஸசாஸ்திரம் என்றும் வழங்கப்படும்.

2. வாக்படருக்கு பாஹடர் என்றும் பெயர். அவர் இயற்றிய நூல் பாஹடம் அல்லது வாகடம் எனப்படுகிறது.

3. (a) உலோஹம் (அயம்) லோஹரஸாயநத்தில் குறிக்கபபடுகிறது. ஐந்த்ரீ ரஸாயநத்தில் ஸ்வர்ணம் (பொன்) சேர்க்கப்படும்படி கூறப்படுகிறது. சிலாஜது யோகத்திலும், சிலாஜது ரஸாயநத்திலும் சிலாஜது என்னும் தாதுப்பொருள் சேர்க்கப்படுகிறது. (சரகம்-சிகி.-அத்தி. 1.) மற்றோரிடத்தில் சிலாஜதுவும், மாக்ஷிகமும் (நிமிளை) ஒரு ஔஷதமுறையில் சேர்க்கப்படுகின்றன. (சரகம் - சிகி. அத்தி. 29. ச்லோ. 157.) இந்நூன்முகம் கஎ-ம் பக்கமும் பார்க்க. (b) அன்ன

சரகர் பிரித்துக் கூறியிருக்கிறார்.[1] இதிலிருந்து அவர் ஔஷதிகள்-பிராணிகள் இவற்றின் ஸம்பந்தமான சரக்குகளையும், உயிரில்லாச் சரக்குகளான தாதுப்பொருட்களையும், அவற்றிற்கு வைத்திய சாஸ்திரத்தில் உபயோக முண்டென்பதையும் அவ்வளவு பண்டைக் காலத்திலும் பகுத்தறிந்தே அவ்விதம் பெயரிட்டிருப்பதாகத் தெரியவில்லையா?

சரகாதி ஸம்ஹிதைகளில் தாதுவர்க்கங்களைக் கொண்டுள்ள ஔஷதமுறைகள் மிகச் சொற்பமே குறிக்கப்பட்டிருப்பதையும், பிறகு அந்நூல்களையே பெரிதும் பின்பற்றி எழுதப்பட்டுள்ள சார்ங்கதர ஸம்ஹிதை, சக்ரபாணி ஸங்கிரஹம், பாவப்ரகாசம் முதலியவற்றில் மூலிகைகளாலான ஔஷதங்களைப் போலவே தாதுச்சரக்குகளால் பக்குவம் செய்யப்படும் ஔஷதங்களும் தாராளமாக விவரிக்கப்பட்டிருப்பதையும் நோக்குமிடத்து, மூலிகைச் சரக்குகளினும் இரஸ-லோஹபாஷாணங்களைப் பிரயோகிப்பதில் இயற்கையிலேயே அபாயங்கள் அதிகம் உண்டென்பதை முற்காலத்தியவர் அறிந்து, ஆகியில் விசேஷமாக அவ்விதச் சரக்குகளைக் கையாளத் துணியாமலிருந்தனர் என்றும், க்ரமமாக இரஸ-லோஹ-பாஷாணாதிகள் மனிததேஹத்தில் பிரயோகிப்பதற்கு ஏற்றவை யென்பதை ஆராய்ந்து அறிந்து, பிற்காலத்திய சாஸ்திரவல்லோர் சிகித்ஸாமுறைகளில் அவற்றையும் பகுத்தறிவுடன் தாராளமாக உபயோகிக்க ஆரம்பித்தனர் என்றும் நன்கு விளங்குகிறது. அவ்விதம் ஔஷதிவர்க்கங்களாலும், இரஸவர்க்கங்களாலும்

பேதி, அத்தம, தாளகம, மஹச்சிலை (ஸுச்ரு. சிகி. அத்தி. 1. ச்லோ. 107.); ஹரிதாளம், மஹச்சிலை, அத்தம், (சிகி. அத்தி. 9.) அயஸ்க்ருதி யென்னும் முறையில் அயம். (சிகி. அத்தி. 10.) ஸ்வர்ணம் சிகி. 28-ஆம் அத்தியாயத்தில் விஸ்தாரமாகக் கூறப்படுகிறது. மேலும் ஸுச்ருதத்தில் திரவ்ய ஸங்கிரஹணீயாத்யாயத்தில் "த்ரபு-ஸீஸ-தாம்ர-ரஜத-க்ருஷ்ண லோஹ-ஸுவர்ணகி லோஹ மலஞ்ச" என்று பித்தளை, நாகம், செம்பு, வெள்ளி, பொன், அயம், மண்டூரம் ஆகிய உலோஹங்கள் ஔஷதங்களுக்காகக் க்ரஹிக்கப்பட்டுள்ளன. சிகித். 25-ம் அத்தியாயத்தில் பாதுகம் (பாதரஸம்) உபயோகிக்கப்படுவதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. (c) அயமும், மண்டூரமும் முறைகளில் குறிக்கப்படுகின்றன. (அஷ்டாங்க. சிகி. அத்தி. 16.) சிலாஜதுவானது சுத்திமுறை முதலியதோடு விளக்கப்படுகிறது. (உத்தர. அத்தி. ச்லோ. 131—139. சிகித். பிரமேஹ சிகித்ஸையிலும் பார்க்க.) மேலும் தாம்ரம், அயம், வெள்ளி, பொன் இவைகளும் ஔஷதங்களில் சேர்க்கப்படுகின்றன. (உத்தர. அத்தி. 39. ச்லோ. 141.)

1. "ஸேந்த்ரியம் சேதனம் த்ரவ்யம் நிரிந்த்ரியமசேதனம்" (சரக. ஸூத்தி. அத்தி. 1. ச்லோ. 47.) ஸேந்த்ரியத்ரவ்யங்கள்—Organic matters. நிரிந்த்ரியத்ரவ்யங்கள்—Inorganic matters.

பக்குவம் செய்யப்பட்ட பலவேறு சிறந்த ஔஷத முறைகளை ஒரு நூலில் வியாதிகளுக்குத் தக்கவாறு ஒழுங்கான வகையில் சேர்த்து எழுதிய பிராசீன வைத்தியாசிரியர்களுள் சார்ங்கதரனையே முதன்மையாகக் கூறலாம். இதைப்பற்றி நமது சார்ங்கதர ஸம்ஹிதை மொழிபெயர்ப்பின் முகவுரையில் விவரங்களைப் படிக்கலாம்.

வேறு இரஸக்கிரந்தங்கள்.

இரஸௌஷதங்களை யுபயோகிப்பதில் உள்ள பலநன்மைகளை ஆதிகாலத்திய ஆயுர்வேதாசிரியர்கள் நன்றாக உணர்ந்தே இரஸச் சரக்குகளையேபிரதானமாகக்கொண்ட அநேகம் நூல்களையும் இயற்றினர். அந்நூல்களியற்ற அனைவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய மூன்று காரணங்களையும் அவ்வாசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்: "மூலிகைகளாலான ஔஷதங்களைக் காட்டிலும் இரஸௌஷதங்கள் (1) மிகச் சொற்ப அளவில் பிரயோகிக்கக் கூடியவைகளாகவும், (2) அருசியுண்டாகாமல் உட்கொள்ளக் கூடியனவாகவும், (3) எளிதில் வியாதிநிவாரணம் செய்து ஆரோக்கியநிலைமையை யுண்டு பண்ணுபவையாகவும் இருக்கின்றன"[1] என்பவையே அக்காரணங்கள். ஆகவே இரஸௌஷதங்களை விவரிக்கும் அநேக கிரந்தங்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்தே அச்சரக்குகளைப் பரிசோதனை செய்த சாஸ்திரவல்லோரால் இயற்றப்பட்டு, அவ்விஷயம் ஆயுர்வேதத்தின் ஒரு முக்கியாம்சமாகப் போயிற்றென்று கருதப்படுகிறது. அவ்விதமான பிராசீன இரஸக் கிரந்தங்களுள் முக்கியமானவை:—நாகார்ஜுனன் இயற்றிய இரஸரத்நாகரம், சிவபெருமான் இயற்றியதாகக் கூறப்படும் இரஸார்ணவம், நித்யநாதன் இயற்றிய மற்றொரு இரஸரத்நாகரம், கோவிந்த பகவத்பாதரது இரஸஹ்ருதயம்[2], யசோதரனது இரஸப்ரகாச ஸுதாகரம், கோவிந்தாசார்யரது இரஸஸாரம், சாமுண்ட வைத்தியரது இரஸஸங்கேத கலிகா, ஸ்ரீபிந்து இயற்றிய இரஸபத்ததி, ஸுரேச்

1. "ஸ்வல்பமாத்ரோபயோகித்வாத் அருசேரப்ரஸங்கத: . க்ஷிப்ர மாரோக்யதாயித்வாத் ஔஷதீப்யோதிகோ ரஸ:"—இரஸாத்தினஸமுச்சயம், அத். 28. ச்லோ. 1.

2. இவரை 'பிகூ-கோவிந்தர்' என்பார்கள். இரஸஹ்ருதயம் இயற்றிய பிகூ-கோவிந்தர் ஸ்ரீ சங்கராசார்யருக்கு குருவாக இருந்தார் என்று கூறப்படுகிறது. இதற்குப் பிரமாணம் வருமாறு—"தஸ்யோபதர்சிதவதச் சரணௌ குஹாயா தீவாரே ந்யபூஜயத பேத்ய ஸ சங்காரார்ய:. ஆசார இத்யுபதிதேச ஸ தத்ர தஸ்மை கோவிந்தபாதகுரவே ஸ குரூர் யதீநாம். வ்யாஸ: பராசரஸுத: கில ஸத்யவத்யாம் தஸ்யாத்மஜ: சுகமுனி: ப்ரதிதாநுபாவ:. தச்சிஷ்யதாமுபகத: கில கௌடபாதோ கோவிந்தநாதமுநிரஸ்ய ச சிஷ்யபூத:. சச்சாவ தஸ்ய நிகடேகிலசாஸ்த்ரஜாலம்****" ஸ்ரீ சங்கரதிக்விஜயம். 5-ம் ஸர்க். 101—106. ச்லோ. ஆநந்தாச்ரமப்பதிப்பு.

வரருடைய லோஹஸர்வஸ்வம், மாதவன் என்பவனது [1] ஆயுர்வேத ப்ரகாசம், ஸோமதேவனது இரஸேந்திர சூடாமணி,[2] பதஞ்ஜலியினுடைய லோஹதந்திரம்,[3] விஷ்ணுதேவன் இயற்றிய இரஸராஜ லக்ஷ்மி,[4] மதநாந்தகதேவஸூரியின் இரஸசிந்தாமணி, தேவதத்தன் இயற்றிய தாதுரத்நமாலை, கோபாலபட்டனது இரஸேந்திர ஸாரஸங்கிரஹம், மதநஸஞ்ஜீவனது இரஸநக்ஷத்திர மாலை, மற்றும் இரஸேந்திர சிந்தாமணி, இரஸராஜஸுந்தரம், இரஸேச்வரதர்சநம், இரஸகல்பம், ஸ்வச்சந்த பைரவம், நந்தியின் இரஸதந்திரம்,[5] காக சண்டீச்வர தந்திரம், இரஸப்ரதீபம், தாதுமஞ்ஜரி முதலியன. இவ்விதம் முன்பு அநேகம் ஸித்தர்களும், அவர்களால் இயற்றப் பட்ட அநேகம் இரஸநூல்களும் ஸம்ஸ்கிருதத்தில் இருக்கும் போது, அவற்றில் பல அச்சிட்டு வெளியிடப்பட்டும் இருக்கையில் தமிழில்தான் அத்தகைய நூல்கள் விசேஷமாயிருப்பதாகவும், ஆகவே ஸித்தவைத்தியமென்று தமிழ் நாட்டில் பிரத்தியேகமாக ஒரு வைத்தியமுறை இருப்பதாகவும் கூறி விதண்டாவாதம் செய்யப்படுகிறது. இத்தனைக்கும் இரஸரத்தினஸமுச்சயம் முதலியதைப் போல் ஒழுங்காக விசேஷ பரிபாஷைகளடங்கிய இரஸநூல் ஒன்றுவது பிரமாண நூலாகத் தமிழில் இருப்பதாக இதுவரையில் வாதம் செய்பவர் எவரும் எடுத்துக் காட்டவில்லை. மேலும் அகத்தியர் இயற்றிய "கரிசல்" என்னும் வைத்தியநூலில் இங்ஙனம் கூறப்படுகிறது:—

"வேது விதமாயுரு வேதக்கிரந்தம் தொகையுணர்ந்தோதித் தொகுத்த
வைத்தியார்த்தரத்நாகரம் இரசசிந்தாமணி இரசசூடாமணி யிரசப்
பிரகாணம்
இரசமாலை யிரசகாமதேனு இரசதந்திரதூல் இரசராசாங்கம்
இரசவகை வடநூலிவை பிறவும் வைத்திய சிந்தாமணி ***
இருளினை யகற்று மிரவியைப் போல அருளொளிபோல் தமிழாக
விரித்தனன்
பொதிய மலையகத்திய முனிபுங்கவனே."

இது முதலிய ஆதாரங்கள் பலவற்றிலிருந்து தமிழில் இரஸநூல் முதலியது எதேனும் இருந்தால் அதுவும் ஆயுர்வேதநூல்களை ஆதாரமாகக் கொண்டே ஏற்பட்டதாகத் தீர்மானமாகக் கூறலாம்.

1. மாதவ நிதாநம் இயற்றிய மாதவகரன் வேறு.

2. இக்கிரந்தமே வாக்படரால் இரஸரத்தினஸமுச்சயத்தில் அதிகமாக உபயோகிக்கப் பட்டது எனத் தெரிகிறது.

3. பதஞ்ஜலியைப்பற்றி பிறகு விவரிக்கப்படுகிறது.

4. இவர் புக்கதேவமன்னனுடைய ஆஸ்தானவைத்தியராக இருந்தவர்.

5. ஆதியில் கோஷ்டி முதலிய யந்திரங்களைக் கண்டறிந்து அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்தவர் நந்தி என்றும், அவருடைய தந்திரத்தையே பெரும்பாலும் ஆதாரமாகக் கொண்டு ஸோமதேவன்

பிறகு பிரக்ருத விஷயத்தைப் பரிசீலனை செய்வோம். முன்னூல் கி. பி. நான்காம் நூற்றாண்டுக்குப் பிறகு சில நூற்றாண்டுகளளவும் இத்தேசத்தில் இரஸசாஸ்திரவல்லோர் அச்சாஸ்திரத்தில் மூன்று கொள்கைகளைக்கொண்டு அதிக ஊக்க மேலிட்டு இரஸக் கிரந்தங்களை இயற்றலாயினர்:—(1) இரஸவாதத்தைப் பெரிதாக மதித்து, உலோஹங்களுள் மிகச் சிறந்ததான பொன்னைச் செயற்கை யுபாயங்களால் உண்டுபண்ணும் நோக்கம் ஒன்று; இச்செய்கைகளுக்கான முறைகளைப் பொதுவாக இரஸவாதம், காதுவாதம், இரஸவேதம், காதுவேதம் என்கிற பெயர்களால் வழங்குகின்றனர். (2) இரஸச் சரக்குகளைச் சுத்திசெய்தும், பஸ்ம-ஸித்தூர-ஸத்து வாதி முறைகளாலும் வேறு வகைகளாலும் பக்குவம் செய்தும் பொல்லாத வியாதிகளையும் எளிதில் நிவாரணம் செய்ய அவற்றைத் தாராளமாக ஔஷதங்களாய் உபயோகிப்பது இரண்டாவது கொள்கை; இவ்விதச் சிகித்ஸாகிரமத்தை இரஸசிகித்ஸை யென்றும், இரஸாயந சிகித்ஸை யென்றும்[1] கூறலாயினர். (3) யோக மென்கிற காயஸித்திமுறைகளில் இரஸகுளிகைகளும், வேறு இரஸௌஷதங்களும் யோகிகளால் உபயோகிக்கப்பட்டு, அணிமாதிஸித்திகளைப் பெறுவதற்கு இரஸலேவநம் கருவியாவதாகக் கருதியது மூன்றாம் கொள்கை; இரஸச்சரக்குகள் முறைப்படி யுபயோகிக்கப்படுமானால் அவை தேஹவேதம் (அணிமாதி மஹிமையை) உண்டுபண்ணும் என்றும் கருதினர். இவ்விதக் கொள்கைகளையுடைய சாஸ்திரஞ்ஞர்களே பெரும்பாலும் இரஸசாஸ்திரங்கள் இயற்ற நேரிட்டதால், அப்பெரியோர்கள் ஸித்தர்களென்று அழைக்கப்பட்டனர். அவ்விதம் இரஸசாஸ்திரம் இத்தேசத்தில் விருத்தியான சில சதாப்தங்களை இக்காலத்திய சரித்திராராய்ச்சிக்காரர் "தாந்த்ரிக காலம்" என்பர்.

மிகப் பண்டைக் காலத்தில் இரஸசாஸ்திரம்.

இவ்விதம் மிகப் பண்டைக் காலத்திலிருந்தே இரஸசாஸ்திரம் இத்தேசத்தில் ஆரம்பித்து விருத்தியானதாகக் கூறுவதற்குச் சில பிரமாணங்கள் உண்டு; அவற்றுள் இந்த இரஸரத்தின ஸமுச்சயத்தைப்பற்றிய காலநிர்ணயமே ஒரு சான்றும். ஆனால் இதைப் பற்றி நாம் பின்னர் பரிசீலனை செய்வோம். வராஹமிஹிரர் காலத்திலே இரஸவைத்தியமுறை பிரஸித்தியடைந்திருந்ததென்றால்,

தனது இரஸக்கிரந்தத்தை இயற்றியதாகவும் இரஸேந்திர சூடாமணியிலேயே ஸோமதேவனால் குறிக்கப்படுகிறது.

1. இரஸச் சரக்குகளாலான அரிய ஔஷதங்கள் கடும் வியாதிகளைத் தீர்க்கவும், ஆரோக்கியத்தை விருத்தி செய்து ஆயுளைப் பெருக்கி நீடித்த தேஹவன்மையை அளிக்கவுங்கூடியனவெனக் கருதி, அவ்வித ஔஷதங்களுக்கு இரஸாயநம் என்று பாரிபாஷிகப் பெயர் வந்தது. (ரஸாயநம் தத் விஜ்ஞேயம் யஜ்ஜராவ்யாதி நாசநம்.)

அவர் காலத்திற்கு வெகு வருடங்கள் முன்பே அச்சாஸ்திரம் பெரிதும் பயிலப்பட்டு அநுஷ்டானத்தில் இருந்ததாகக் கருத வேண்டுமல்லவா? வராஹமிஹிரர் ஆரும் நூற்றாண்டில் இருந்தவர். அவர் ப்ருஹத்ஸம்ஹிதையில் பொன்நிமித்தம், அயம், சிலாஜது, இரஸம் ஆகிய தாதுப்பொருட்களை மிகவும் சிறந்த இரஸாயநச்சரக்குகளாகக் கூறுகிறார்.[1] ஆரும் நூற்றாண்டில் இருந்த பட்டபாணன் ஹர்ஷசரிதத்திற் பலவிடங்களில் இரஸாயநாதிகளைப்பற்றியும், காதம்பரியில் சில விடங்களில் - முக்கியமாகத் திரவிடதார்மிகனை வர்ணிக்கும் இடத்தில் இரஸாயநத்தைப் பற்றியும், இரஸவாதாதிகளைப் பற்றியும் விளங்கக் குறிப்பிடுகிறான். இவ்விதம் வைத்தியரல்லாதவர் கூட நன்றாகக் குறிப்பிடக் கூடியவாறு ஒருவித வைத்தியமுறை இக்கவிகளுடைய காலத்தில் பிரஸித்தி யடைந்திருந்தால், அவ்வித இரஸௌஷதமுறைக்கு அஸ்திவாரம் அக்காலத்திற்கு அநேகம் நூற்றாண்டுகளுக்கு முன்பே பலமாக அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று யோசிப்பது நியாயமல்லவா? இரஸசாஸ்திரத்தை விவரிக்கும் நூல்களுள் நாகார்ஜுநதந்திரத்தை (இரஸரத்நாகரப்) மிகப் பிராசீனமான பிரமாண நூலாகக் கற்றறிந்த வைத்தியர்கள் கருதுகிறார்கள். அனைத்தினும் முக்கியமாக விளங்கிய இரஸக்கிரந்தம் 'இரஸார்ணவம்' என்பதாகவும்,[2] அதை ஆதாரமாகக் கொண்டே அநேகம் பிந்திய ஆசிரியர்கள் இரஸநூல்கள் இயற்றியதாகவும் சிலர் அபிப்பிராயம். வாக்படர் கூட தாம் இயற்றும் இரஸக்கிரந்தத்திற்குப் பிரமாண நூலாயிருந்தவைகளுள் இரஸார்ணவம்[3] ஒன்று எனக் கூறுகிறார். பிறகு நாம் விவரிப்பதுபோல் பதஞ்ஜலியானவர் (2000 - வருஷங்களுக்கு முன்) உலோஹசாஸ்திரம்[4] இயற்றியிருக்கிறார் என்பதிலிருந்து, இத்தீதசத்தில் தாது வர்க்கங்களை ஔஷதங்களாக உபயோகிப்பதில், மிகப் பண்டைக் காலத்திலிருந்தே ஆயுர்வேதசாஸ்திரஞ்ஞருக்கு விசேஷமாகப் பயிற்சி யிருந்ததாகக் கூற முகாந்தரங்கள் உண்டு.

1. "மாகூகீகதாது-மது பாரத- லோஹசூர்ண-பத்யா-சிலாஜது விடங்க்ருதாநி யோத்யாத். ஸேச்சியாநி வம்சவிரஹோபி ஜராந்விதோபி ஸோசிதிகோபி ரமயத்யபலாம் யுவேவ"—ப்ருஹத்ஸம்ஹிதை.

2. இந்த நூல் சென்னை ஓரியண்டல் புஸ்தகசாலையில் ஓலை வட்டுப் பிரதியாக கிரந்தலிபியில் இருக்கிறது; இதில் பதிஞ்று படலங்கள் மாத்திரம் காணப்படுகின்றன; அது முழுப்புஸ்தகம் அல்லவென்று நன்றாகத் தெரிகிறது. காச்மீரத்தில் இரஸார்ணவம் வேறொரு பிரதி இருப்பதாகக் கூறப்படுகிறது.

3. "ரஸார்ணவாதிசாஸ்த்ராணி நிரீக்ஷ்ய கதிதம் மயா"—இரஸரத்தின ஸமுச்சயம். 11-ஆம் அத்தியாயம். (இந்நூலில் 137-ம் பக்கம 10-ம் வரியையும் பார்க்க.)

4. தாதுவர்க்கங்களைப் பற்றிய கிரந்தம்.

மேல்நாட்டில் இரஸசாஸ்திரப் பிரசாரம்.

ஐரோப்பாவில் இரஸச்சரக்குகளை ஔஷதங்களாக உபயோகிக்கக் கூடுமென்கிற கொள்கை 15-ம் நூற்றாண்டுக்கு முன்பு எவர் மனதிலும் விளங்கத் தோன்றினதில்லை. இரஸகஜ்ஜலி, இரஸலோஹ-பாஷாணாதிகளை பஸ்மாதிகளாகச் செய்தல், அவற்றை உட்கொள்ளும் வகைகள் முதலிய அரிய விஷயங்கள் நாகார்ஜுனன், பதஞ்ஜலி முதலியவர்களால் இத்தேசத்தில் சற்றேறக் குறைய 1800 வருஷங்களுக்கு முன்னிருந்தே ஆராய்ந்து அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டன. ஐரோப்பாவிலோ உண்மையில் கி. பி. 17-ம் நூற்றாண்டு முதல்தான் இவ்விஷயம் வழங்கத் தலைப்பட்டது. பாரிஸ் நகரத்து (Faculty of Medicine) வைத்தியக்கல்லூரியில் 1566-ல் இரஸ-லோஹாதிகள் ஸம்பந்தமான சரக்குகளை ஔஷதமாக உபயோகிப்பதில் மிகவும் அபாயமிருப்பதாகப் பயந்து, அக்கல்லூரியின் அதிகாரிகள் இரஸௌஷத பிரயோகங்களைக் கண்டித்திருக்கிறார்கள். எய்ன்ஸ்லீ (Ainslie) என்பவர் 19-ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் இயற்றியுள்ள 'லெப்ரா அராபம்' (Lepra Arabum) என்னும் நூலில் "கீழ் நாட்டார்—இந்தியர்—பலவித சர்மரோகங்களிலும், முக்கியமாக குஷ்டத்திலும், மேஹ ரோகங்களிலும், வேறு பல கடுமையான வியாதிகளிலும் இரஸச்சரக்குகளை உபயோகிக்கக் கூடுமென்கிற உண்மையை முதலில் தெரிந்துப் பிரயோகித்தவராவர்" எனக் கூறியிருக்கிறார். மேனாடுகளில் ஆதியில் கணிதம், வைத்தியம் முதலியவற்றைப் பற்றிய சாஸ்திரம் பரவியதற்கு அரேபிய நிபுணர்கள் காரணமாயிருந்ததாகச் சில ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். ஆனால் மேனாட்டார் உலகதத்துவம் அறியாமல் பெரிதும் அஞ்ஞானாந்தகாரத்தில் மூழ்கியிருந்த அந்நாளில், பல வழிகளிலும் இந்தியாவில் பிரகாசித்துக் கொண்டிருந்த ஞானவிளக்கின் சுடரொளிகளைத் தகும் பலவித சாஸ்திரங்களின் ஜோதி அரேபியா முதலிய நாடுகளிலும் வீசியது என்பது தான் உண்மை. சாஸ்திரஞ்ஞான விஷயத்தில் ஆதியில் சுயஞ்ஜோதியாய் விளங்கியது இந்தியாவேயன்றி வேறு எந்நாடுமல்ல. முக்கியமாக மேனாடு வைத்தியத்திலும், இரஸசாஸ்திரத்திலும் (Chemistry) மேன்மை பெற்று விளங்க அடிப்படையான தத்துவாம்சங்களை யுணர்ந்ததற்கு இந்தியா நேர் முகமாகவோ வேறு முகமாகவோ மூலகாரணமாயிருந்ததென்பதைப் பல ஆராய்ச்சிக்காரர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள். 13-ம் நூற்றாண்டிலிருந்த ஹாஜீ கலீபாவும், மற்றொரு வருமாக இந்துக்களுடைய ஸம்ஸ்கிருத வைத்தியக் கிரந்தங்களுள் முக்கியமான பலவற்றை, கலிபாக்களான ஹருண், மன்ஸூர் என்பவர்களுடைய அபிப்பிராயங்களுக்கிணங்க அரேபிய பாஷையில் மொழிபெயர்த்த விஷயம் வியக்தமானது. "அரேபியர்கள்

இந்தியாவிலிருந்து கிரஹித்து வந்து, தமது பாஷையில் மொழி பெயர்த்துப் படித்துத் தெரிந்து கொண்ட புதிய விஷயங்களுள் முக்கியமாக வைத்திய சாஸ்திரத்தைக் கூறலாம். சரகம், ஸுச்ருதம், மாதவ நிதானம் முதலிய பிரபலமான வைத்திய நூல்கள்—இரஸ சாஸ்திரம் உட்பட—அரேபியர்களால் தமது பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு முன்னூல் கற்கப்பட்டன. இது ஹருண், மௌஸூர் காலத்தில் நிறைவேறிய விஷயம். ஆதியில் பாரஸீக பாஷையில் அச்சாஸ்திரநூல்கள் மொழிபெயர்க்கப்படுவதற்கு முன்பே அரேபியபாஷையில் மொழிபெயர்க்கப் படடுப்போனது உண்மை" என்பது டாக்டர் எச். எச். வில்ஸனுடைய குறிப்பு.[1] மேலும் கீழ் நாட்டுச் சாஸ்திர நிபுணரான ஹாஸ் (Haas) என்பவர் "சரகம், ஸுச்ருதம், அஷ்டாங்க ஹ்ருதயம், நிதானம் முதலிய இந்துக்களுடைய வைத்தியக்கிரந்தங்கள் சாஸ்திரக்கல்வியில் ஆர்வமுடைய முகம்மதியர்களால், அரேபியபாஷையில் மொழி பெயர்ப்பு மூலமாகக் கற்கப்பட்டன. அரேபிய பாஷையில் சரகம் 'ஸரக்' என்றும், ஸுச்ருதம் 'ஸுஸ்ருத்' என்றும், நிதானம் 'பதான்' என்றும், அஷ்டாங்க ஹ்ருதயம் 'அஸங்கர்' என்றும் மாற்றப்பட்டுத் திரிபடைந்தன. பாக்டாடிலிருந்த அதிகாரிகளால் இந்தியாவிலிருந்து முன்பு அநேக வைத்திய சாஸ்த்ரிகள் வரவழைக்கப்பட்டு, அச்சாஸ்திரநிபுணர்கள் அத்தேசத்தினருக்கு வைத்தியத் தொழில் நடத்திவும் உதவிபுரிந்து வந்தனர்" என்று கூறுகிறார். ஆகவே மேனாடுகளில் மற்றச் சாஸ்திரவிஷயங்களைப்போலவே வைத்தியசாஸ்திரமும் இரஸதந்திரவிஷயங்களோடு முதலில் பரவி விருத்தியானதற்குப் பண்டைக் காலத்திய இந்தியர்களின் சாஸ்திரக்கல்வியே வெகுதூரம் காரணமாயிருந்ததெனத் தீர்மானிக்கலாம்.

பதஞ்ஜலியும் இரஸசாஸ்திரமும்.

எவ்விதமாயினும் கி. பி. பதினேந்தாம் நூற்றாண்டுக்கு முன்பு மேனாடுகளில் வைத்திய சாஸ்திரவாஸனையே கிடையாதென்பது அனைவரும் ஒப்புக்கொண்ட விஷயம். அதற்குப் பல நூற்றாண்டுகளுக்குமுன்பே—கி. பி. நான்காம் நூற்றாண்டு முதற்கொண்டு—இந்தியாவில் வைத்திய சாஸ்திரத்தின பல பிரிவுகளுடன் இரஸசாஸ்திரம் மிகப் பிரபலமடைந்து வந்ததாகக் கூறினேனும். ஆனால் இத்தேசத்தில் இரஸவித்யை கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முன் அறியப்படாத அம்சமென்று நமது வாசகர்கள் கருதிவிடவேண்டாம். மேனாட்டாரது பரமாசிரியரான கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே இத்தேசத்தில் மிகச் சீர்பாடுகளமைந்த ஸம்ஸ்கிருத பாஷையைப் போலவே, கணிதம் முதலிய வேறு பல சாஸ்திரங்

1. Journal of Royal Asiatic Society, Old Series, VI, pp. 105—115.

களையும் போலவே, வைத்திய சாஸ்திரமும், அதன் பகுதியான இரஸ சாஸ்திரமும் எற்பட்டுப் பிரசாரத்திலிருந்ததற்கும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக இதற்குப் பதஞ்ஜலியின் நூல்களைக் குறிப்பிடலாம். வியாகரண மஹாபாஷ்யம் இயற்றிய பதஞ்ஜலி கி. மு. 200-வருஷங்களுக்கு (2200 வருஷங்களுக்கு) முன் இருந்தவர்.[1] இப்பதஞ்ஜலியே சரகர் என்கிற வேறு பெயர் பூண்டவர் என்றும், அவரே வைத்திய சாஸ்திரத்தில் மிகப் பிரபல்யம் வாய்ந்த 'சரகஸம்ஹிதை' இயற்றியவரென்றும் சிலரது கொள்கை; வேறு சில ஆராய்ச்சிக்காரர்கள் பதஞ்ஜலியானவர் பாணினி ஸூத்திரங்களுக்கு பாஷ்யம் இயற்றியதுபோல் சரகஸம்ஹிதைக்கும் பாஷ்யம் இயற்றியதாகக் கருதுகிறார்கள். ஆனால் அப்பதஞ்ஜலியே ஆயுர்வேதக்கிரந்தம் இரண்டொன்று இயற்றியிருப்பதாகவும், சரகஸம்ஹிதைக்கு இவர் ஆசிரியராகவோ உரையாசிரியராகவோ[2] இருந்ததாகவும் நம்புவதற்குப் போதிய அத்தாட்சிகள் பல உண்டு. மறுமைக்கு உதவவேண்டி பாதஞ்ஜல யோகம் என்கிறகிரந்தம் இயற்றியதோடு, இரஸசாஸ்திரத்தையும் மோக்ஷஸாதனமாகக் கருதி வெளியிட்டதாகவும் தெரியவருகிறது.[3] பிணியால்

1. பண்டார்கருடைய இண்டியன் ஆண்டிகொரி (Indian Antiquary. pp. 298—302) பார்க்கவும்.

2. (a) பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்த பாவமிச்சர், ஆதிசேஷாவதாரமென்று பலரால் நம்பப்படும் பதஞ்ஜலியே சரகராக அவதரித்து ஸம்ஹிதையொன்று வைத்தியசாஸ்திரவிஷயமாய் இயற்றியதாகத் தமது பாவப்ரகாசத்தில் விவரித்திருக்கிறார். (b) "சப்தாகாமங்சாஸநம் விததா பாதஞ்ஜலே குர்வதா வ்ருத்திம் ராஜ்ருகாங்கஸம்ஜ்ஞகமபி வ்யாதங்வதா வைத்யகே. வாக்-சேதோ-வபுஷாம் மல: பணிப்ருதாம் பர்த்ரேவ யேநோத்த்ருதஸ் தஸ்ய ஸ்ரீரண ரங்கமல்லங்ருபதேர் வாசோ ஜயந்த்யுஜ்வலா:" என்று பாதஞ்ஜல யோகஸூத்ரவ்ருத்தியின் ஆரம்பத்தில் போஜன் கூறுகிறார். இப்பத்தியத்தில் சப்த சாஸ்திரம், யோக சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம் மூன்றையும் பதஞ்ஜலி இயற்றியதாக விளங்கக் குறிப்பிடப்படுகிறது. (c) ஸாங்க்யக்கொள்கையை அனுஸரித்து யோகமே மோக்ஷஸாதனமென்று 'கதிதாபுருஷீயம்' முதலிய அத்தியாயங்களில் சரகத்தில் கூறப்படும் வாக்கிய விஷயங்களுக்கும், பாதஞ்ஜல தர்சனத்தில் மோக்ஷஸாதனமான யோகத்தைப் பற்றியுள்ள அநேகம் ஸூத்திரங்களுக்கும் பெரும் பாலும் ஒற்றுமையிருப்பதையும் இக் கொள்கைக்கு ஆதாரமாகக் கூறலாம்.

3. "இரஸசாஸ்திரம் தாதுவாதாதிகளுக்காக மாத்திரம் அல்ல, ஆனால் தேஹவேதம் செய்ய உபாயம் கூறி மோக்ஷத்திற்கும் காரணமாகிறது" (ந சரஸசாஸ்த்ரம் தாதுவாதார்த்தமேவேதி மந்தவ்யம், தேஹவேதத்வாரா முக்தேரபி பரம்பரயோபஜநத்வாத்) என்று ஸர்வதர்சனஸங்கிரஹம். இவ்விஷயமாகவே இரஸரத்நஸமுச்சயம் முதல் அத்தியாயத்திலும் சில விவரம் பார்க்க.

வருந்தும் பலருக்கு இம்மையிலும் பெரும் பிரயோஜன மளிக்கக் கருதியும் இரஸசாஸ்திரத்தை வேறு ஆயுர்வேதக்கிரந்தத்தைப் போலவே பதஞ்ஜலி இயற்றியதாக எண்ணுகிறோம்.[1] மாநஸிக தோஷகங்களைப் போக்க யோகசாஸ்திரத்தையும், வாக் தோஷங்களை விலக்க வியாகரணத்தையும், தேஹதோஷங்களை நீக்க வைத்திய சாஸ்திரத்தையும் பதஞ்ஜலிபகவான் இயற்றி வெளியிட்டதாக நம் பெரியோர் கூறுகின்றனர்.[2] ஆனால் பதஞ்ஜலிக்கு மிக்க முற்பட்டவரான பாணிநி 'கடசரகால் லுக்' என்னும் ஸூத்திரத்தில் சரகரைக் குறிப்பிட்டிருப்பதால், வியாகரணபாஷ்யமியற்றிய பதஞ்ஜலியே சரகராக இருந்திருக்க முடியாதென்று சிலர் ஆக்ஷேபிக்கின்றனர். அது சரியல்ல. யஜுர்வேதத்தில் சில மந்திரங்கள் கடங்கள் என்றும், சரகங்கள் என்றும் வழங்கப்படுவதால்[3] அவற்றைப் பற்றியது அப்பாணிகிஸூத்திரம். ஆகவே அந்த ஸூத்திரம் குறிப்பிடும் சரகசப்தத்திற்கும், வைத்திய சாஸ்திரமியற்றிய சரகருக்கும் ஸம்பந்தம் ஏதுமில்லை யென்பது நிச்சயம். பிரக்ருத விஷயத்தில், வைத்தியசாஸ்திரம் இயற்றிய பதஞ்ஜலிமுனிவர் தேஹஸித்திக்கு அவசியமாகக் கருதி இயற்றிய இரஸசாஸ்திரத்தில் உலோஹாதிகளைப் பஸ்மாதிரூபமாகப் பக்குவம் செய்யும் முறை முதலியவைகளையும் சீராக விளக்கியிருப்பதற்கும் ஆதாரங்கள் ஆங்காங்கு காணப்படுகின்றன.[4] சரகஸம்ஹிதையிலும், நாம்

1. "யோக சாஸ்திரத்திற்கு ஸூத்திரங்களையும், வைத்திய சாஸ்திரத்திற்குச் சிறந்த ஸம்ஹிதையையும் இயற்றி இவ்வுலகத்தைக் காப்பாற்ற பதஞ்ஜலி முனிவர் பிரசாரம் செய்தார்" (ஸூத்ராணி யோகசாஸ்த்ரே வைத்யகசாஸ்த்ரே ச ஸம்ஹிதாமபி லோகோபகாராய ப்ரசாரயாமாஸ ஜகதிதம் த்ராதும்) எனறு இராம பத்ரதீக்ஷிதர் பதஞ்ஜலி சரிதத்தில் (5-ம் ஸர்க்கம்) கூறுகிறார்.

2. (a) "யோகேந சித்தஸ்ய பதேந வாசாம் மலம் சரீரஸ்ய ச வைத்யகேந. யோபாகரோத் தம் வரதம் முநீநாம் பதஞ்ஜலிம் ப்ராஞ்ஜலிராநதோஸ்மி."—விஜ்ஞாநபிக்ஷு வின் யோக வார்த்திகம். வாஸவதத்தாவியாக்யாநத்தில் சிவராமனும் இதை எடுத்துரைக்கிறார். (b) "பாதஞ்ஜல-மஹாபாஷ்ய-சரகப்ரதி ஸம்ஸ்க்ருதை:. மநோ-வாக்-காயதோஷாணாம் ஹர்த்ரேஹிபதயே நம:". சக்ரபாணியின் சரகாடீகா.

3. "யஜுர்வேதஸ்ய கடஸீதிர் பேதா பவந்தி. தத்ர 'சரகா:' நாம த்வாதச பேதா:. ஆஹ்வரகர:, கட:, ப்ராச்சிய கடா: இத்யாதி." வியாஸரது சரணவ்யூஹம்.

4. சிவதாஸன் சக்ரதத்தடீகையில் லோஹபாகவிதியைப் பற்றி வியாக்யாநம் செய்கையில் இவ்விதம் கூறுகிறார்:—"பதஞ்ஜலியின் கிரந்தத்தில் உலோஹத்திற்குப் பரிசம் முதலியதைக்கொண்டும் பக்குவ முறையின் பரீக்ஷை மொழியப்படுகிறது. அப்பதஞ்ஜலி முறை:—'தாவல் லோஹம் பரிசேத் வைத்யோ யாவத் வஸ்த்ரேண பீடிதம். ஸமுத்ரம் ஜாயதே வ்யக்தம் ந நிஸ்ஸரதி ஸந்திபி:' என்பது முதலியது."

இந்நூன்முகத்தின் ஆரம்பத்திற் குறிப்பிட்டவைகளைத் தவிர சிகித்ஸாஸ்த்தாநத்தின் முதல் அத்தியாயத்திலும், ஏழாம் அத்தியாயத்திலுங்கூட முக்கியமாய் இரஸம் உட்பட அயம், பொன், வெள்ளி, நிமிளை, கந்தகம், வஜ்ரம், சிலாஜது ஆகிய முக்கியமான பல தாதுப்பொருட்கள் உட்கொள்வதற்கான ஔஷதமுறைகளில் உபயோகிக்கும்படி மொழிந்திருப்பதைப் பார்க்கலாம்[2]. ஆக இவை முதலிய விஷயங்களைப் பரிசீலனை செய்யுங்கால், வியாகரணமஹாபாஷ்யம் இயற்றிய பதஞ்ஜலி முனிவருக்கும் சரகஸம்ஹிதையியற்றிய சரக முனிவருக்கும் பெயரளவிலேயே பேதமிருப்பதாகவும்[3], சரக ஸம்ஹிதையியற்றிய பதஞ்ஜலி இம்மை மறுமைகளுக்கான நன்மைகளைக் கருதி இரஸசாஸ்திரத்தையும் எழுதி வைத்திய முறையைப் பூர்த்தி செய்யவேண்டி அவ்விதம் செய்ததாகவும் நாம் பலமாக அபிப்பிராயப்படுகின்றோம். துருஷ்க குலத்தைச் சேர்ந்த கநிஷ்க என்கிற அரசனிடம் (கி. பி. 2-ம் நூற்றாண்டு) சரகர் என்னும் வைத்தியர் இருந்ததாகச் சிலர் கூறும் விஷயத்துக்குப் போதிய ஆதாரங்கள் இல்லையாகையால் ஆராய்ச்சிக்காரர் அதை நம்பவில்லை. ஆகவே இப்போதைக்குச் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்தே இத்தேசத்தில் ஆயுர்வேதம் இரஸ சாஸ்திரத்துடன் கூடிச் செழிக்கத் தலைப்பட்டதென்னும் உண்மையை இதனால் குறிப்பிட விரும்புகிறோம்.

1. இது விஷயமாய் நூன்முகம் முதற் பக்கமும் பார்க்க.

2. (a) "ஏவந் ஏவ ச லோஹாதிநாம் ப்ரயோகஸ் ஸம்ப்ரகீர்த்தித:. அநேகைவ விதாநேந ஹேம்நஶ் ச ராஜதஸ்ய ச. ஆயு:ப்ரகர்ஷக்ருத் ஹித்த: ப்ரயோகஸ் ஸர்வரோகநுத்"—சரக. சிகி. அத்தி. 1. கரப்ரதீய ரஸாயநபாதம். (b) "கந்தக யோக ஸுவர்ணமாக்ஷிக யோகா தேவ. ஸர்வவ்யாதிவிநாசநமத்ப்யத் குஷ்ட ரஸஞ் ச நிக்ருஹீதம். வஜ்ரம் சிலாஜது ஸஹிதம்****. ததச்சாயச்சூர்ணநாம் ஷ்டபலம் ப்ரக்ஷிபேத் ***"—சரக. சிகி. அத்தி. 7. ச்லோ. 69—72.

3. கி. பி. 1706 இல் இருந்ததாகக் கூறப்படும் நாகேச பட்டன் லகுமஞ்ஜூஷை யென்னும் வியாகரண நூலில் இங்ஙனம் கூறுகிறார்:— "ஆப்தோ நாமாநுபவேந வஸ்துதத்வஸ்ய கார்த்ஸ்ந்யேந நிச்சயவாந், ராகாதிவிசாதபி நாங்யதாவாதீ ய: ஸ இதி சரகே பதஞ்ஜலி:". [சரக. விமாந. அத்தி. 4:—"ஆப்தா ஹி அவிதர்க்க ஸ்ம்ருதிவிபாகவ்தோ நிஷ்ப்ரீத்யுபதாபதர்சிநச் ச. தேஷாமேவங் ருணயோகாத் யத்வசநம் தத் ப்ரமாணம்,—"ஆப்தர்களென்றால் ஸந்தேஹமின்றி ஞாபகப் பிசகின்றி பருத்தறிவுடன் தீர்மானிக்கும் சக்தியுள்ளவர்களாய், பிரீதிக்காகவாவது அநுதாபத்திற்காகவாவது பேசாதவராய் தடஸ்தராயிருப்பவர்; அவர்களின் பேச்சே பிரமாணமாம்" என்கிற சரக ஸம்ஹிதா வாக்கியத்தை நாகேசபட்டன் என்பவர் மேற்கோளாக எடுக்குமிடத்து, அது சரகத்தில் பதஞ்ஜலியினால் கூறப்பட்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார். இதிலிருந்து பதஞ்ஜலியும் சரகரும் வேறுபட்டவரல்லர் எனத் தெரிகிறது.]

நாகார்ஜுனனும் இரஸ சாஸ்திரமும்.

பதஞ்ஜலிக்குப் பிறகு இரஸ சாஸ்திரப் பிரவர்த்தகர்களுள் மிகப் பிரதான புருஷனாக எண்ணக்கூடியவன் நாகார்ஜுனன். இரஸ சாஸ்திர விஷயங்களை விவரிக்கும் பிராசீன கிரந்தங்களில் நாகார்ஜுனனுடைய கிரந்தத்திலிருந்து விஷயங்களைக் கிரஹிக்காத இரஸநூல் அரிது. இவன் எழுதிய இரஸரத்நாகரம் என்னும் இரஸக்கிரந்தம்[1] முன்னூல் மிகப் பிரபலமாகவும், அத்துரையில் ஈடுபட்ட சாஸ்திரஞ்ஞருக்கு மிகவும் உபயோகமுள்ளதாகவும் இருந்து வந்தது. இவன் இயற்றிய வேறு கிரந்தங்கள் ஆரோக்கிய மஞ்ஜரி, கக்ஷபுட தந்திரம் என்பவை. யோகசதகம், யோகஸாரம் என்கிற வேறு இரண்டு நூல்களும் இவன் பெயரால் வழங்கப்படுகின்றன. சக்ரபாணியும் நாகார்ஜுனரை இரஸசாஸ்திரத்திற்கு அதிகாரியாகப் புகழ்ந்து கூறியிருக்கிறான்.[2] மேலும் இவன் இரஸ சாஸ்திரம் எழுதியது மாத்திரமில்லாமல், ஆயுர்வேதக் கிரந்தங்களுள் பிரபலமாயுள்ள ஸுச்ருத ஸம்ஹிதையையும் சீர்திருத்தி அமைத்ததாகவும் பிரஸித்தியுண்டு.[3] இரஸரத்நாகரமுச்சயத்தின் ஆரம்பத்திலும், ஆறும் அத்தியாயத்திலும் குறிப்பிட்டுள்ள இருபத்தேழு ஸித்தர்களில் நாகார்ஜுனன் பெயரும் இருப்பதைப் பார்க்கலாம். இதே நூலில் இரஸரத்நாகரத்தை அநுஸரித்துச் சில விஷயங்களை எழுதியதாகவும்,[4] 'நாகார்ஜுனன் முதலிய ஸித்தர்களால் இவ்விதம் மொழியப்படுகிறது' என்பதாகவும்[5] வேறு சில விடங்களிலும் கூறப்படுகிறது. இரஸசாஸ்திர விஷயமாக நாகார்ஜுனரைப்பற்றி நாம் பிரஸ்தாபிக்கும்போது, பௌத்தமதாசிரியனாக நாகார்ஜுனன் ஒருவன் இருந்த விஷயம் விமர்சகர்களுக்கு நினைவில் வருவது ஸஹஜம்.

முன்பு ஹிந்துதேவாலயங்களைச் சூறையாடிய கஜினி முஹம்மதுவோடு இத்தேசத்தில் வந்து, இங்கு அப்பொழுது

1. நித்யநாதன் என்பவனால் இயற்றப்பெற்ற 'இரஸ ரத்நாகரம்' என்னும் மற்றொரு நூல் உண்டு. அதில் சில யவநதேசத்தியவை போன்ற ஔஷத முறைகளும் காணப்படுவதால், இத்தேசம் முகமதிய அரசர்களால் ஆளப்பெற்றிருந்த காலத்தில் இது இயற்றப்பட்டதாயிருக்கவேண்டும் எனக் கருதுகிறார்கள். கி. பி. 11-ம் நூற்றாண்டில் இவன் ஜீவித்திருந்ததாகவும் கூறுகிறார்கள். இந்த இரஸரத்நாகரமே இப்பொழுது கிடைக்கக் கூடியது.

2. "நாகார்ஜுநோ முநீந்த்ரச் சகாஸ யல் லோஹசாஸ்திரமதி கஹநம்." (சக்ரஸங்கிரஹம், இரஸாயநாதிகாரம்) முதலியன.

3. ஸுச்ருத வியாக்யாநத்தில் டல்லணாசாரியர் ஸுச்ருதத்தைப் பரிசோதித்தவர் நாகார்ஜுனரே (ப்ரதிஸம்ஸ்கர்த்தாபீஹ நாகார்ஜுந ஏவ) என்கிறார்.

4. இப்புஸ்தகத்தில் 62-ம் பக்கம் பார்க்க.

5. இப்புஸ்தகம் 38-ம் பக்கம் பார்க்க.

மிகச் செழித்தோங்கிய ஸம்ஸ்கிருதபாஷையின் பெருமையையும், ஸாங்க்ய-நியாய-வைத்திய சாஸ்திராதிகளின் சீர்மைகளையும் கண்டு அவற்றில் பேரவா கொண்டு, அவற்றைக் கற்றறிந்த அல்பேரூனி என்கிற கல்விமான், தான் இருந்த காலத்திற்குச் (கி. பி. 1017—1030) சுமார் நூறு வருஷங்களுக்கு முன்பு லோமஹர்ஷணரைத் திரத்திற்கு அருகில், ஒரு கோட்டையில் நாகார்ஜுனன் என்கிற ஒரு இரஸவாதி இருந்ததாகவும், அவன் அபூர்வமாக ஒரு இரஸவாதநூல் இயற்றியிருந்ததாகவும் எழுதியிருப்பதால், இந்த நாகார்ஜுனன் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்திருக்கலாமென்று கூறுவார் உளர். ஆனால் அல்பேரூனி யென்பவன் அந்த இரஸவாதநூலைப் பார்த்ததாகவாவது, அந்த நாகார்ஜுனன் வேறு என்ன செய்தானென்றாவது விளங்கத் தகவல் ஒன்றும் கொடுக்கவில்லை. ஸாதாரணமாய் ஒரு பெயர் ஓரிடத்திற் குறிப்பிட்டிருப்பதைக் கொண்டு மாத்திரம் நாம் ஒரு தீர்மானம் செய்துவிட முடியாது. அந்த நாகார்ஜுனன் பௌத்த மதத்தைச் சேர்ந்தவனென்றும் தெரியவில்லை. பொதுவாக வைத்தியசாஸ்திரம், முக்கியமாய் இரஸசாஸ்திரஸம்பந்தமான கிரந்தங்கள் இயற்றியவர்களிற் பெரும்பாலோர் பௌத்தர்களாகவே இருந்திருக்கிறார்கள்[1]. பௌத்தர்களுக்குப் பரமாசார்யனாக இருந்து, அம்மதத்தில் மாத்யமிகக் கொள்கையைப் பரவச்செய்தவனும், மஹாயாந ஸம்பிரதாயத்தை ஸ்தாபித்தவனுமான நாகார்ஜுனனே இரஸரத்நாகரம் முதலிய கிரந்தங்களுக்கு ஆசிரியனுயிருந்து பொதுவாக வைத்திய சாஸ்திரத்தையும், விசேஷமாக இரஸதந்திர முறைகளையும் விருத்திசெய்தவன் என்று நாம் பலமாக அபிப்பிராயப்படுகிறோம். பௌத்தகுருவான நாகார்ஜுனன் கி. பி. 2-ம் நூற்றாண்டில் இருந்ததாக கீத் என்பவர் கூறுகிறார்.[2] கி. பி. 629-க்குப் பிறகு இந்தியாவில் சில வருஷகாலம் யாத்திரை செய்த

1. கௌமாரப்ருத்யம் என்னும் வைத்திய முறையிற் கைதேர்ந்தவனும், ஆகவே கோமாரபச்ச (பாலிபாஷையில் கௌமாரப்ருத்யம் அங்ஙனம் வழங்கப்படும்) என்று பிரஸித்தியடைந்தவனுமான ஜீவகன் என்னும் பௌத்த வைத்தியன் பிம்பிஸாரன் என்னும் அரசனுக்கு வைத்தியனுயிருந்த விஷயம் பிரஸித்தம்:—Kern's Manual of Buddhism. p. 30.

2. History of Sanskrit Literature by Keith. ["சுமார் கி. பி. 200இல் பௌத்த குரு நாகார்ஜுனன் காலம். "மூலமாத்யமக காரிகை," அதற்கு "அகுதோபய வியாக்யாநம்", "தர்ம ஸங்கிரஹம்" "ஸுஹ்ருல் லேகை" முதலியவை அவன் இயற்றியவை. மூலவாக்ய அகுதோபய வியாக்யாநம் திபேத் பாஷையில் குமாரஜீவன் என்பவரால் (கி. பி. 405 இல்) மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது." என்று ஆசிரியர் கீத் Buddha Philosophy (P. 229) என்னும் நூலில் எழுதுகிறார்.

ஹியோன் த்ஸாங் என்கிற சீனயாத்ரிகன் நாகார்ஜுனனைப் பற்றி எழுதியுள்ள சில குறிப்புகளிலிருந்து நாகார்ஜுனன் என்பவன் வடதேசத்தில் இரஸ சாஸ்திரத்திற் சிறப்புற்று விளங்கியதாகவும், அவன் ஸாதவாஹந அரசனுக்கு நண்பனை வைத்தியனாய் இருந்ததாகவும் தெரிய வருகிறது[1]. நாகார்ஜுனன் என்னும் ஒரு பௌத்த பிக்ஷு இருந்ததாகவும், இரஸாயனவித்தையில் அவன் நிபுணனென்றும், ஸாதவாஹநராஜனுக்கு அவன் நண்பனாயிருந்ததாகவும், ஹர்ஷவர்த்தனனிடம் திவாகரமிச்சன் என்னும் பௌத்தஸந்நியாஸி கூறுவதாக ஹர்ஷசரித்தத்திலும் மொழியப்படுகிறது.[2] ஸாதவாஹநன் என்பவன் ஆந்திரதேசத்தின் வட புறத்தில் கோஸலநாட்டை ஆண்ட மிகவும் பலம் பெற்றிருந்த அரசன் என்றும், கி. பி. 2-ம் நூற்றாண்டில் அவன் அரசு புரிந்தான் என்றும், அக்காலத்தில் பௌத்த மடாதிபதியான நாகார்ஜுனன் தென் தேசங்களில் (ஓட்ர தேசம் உட்பட) யாத்திரை செய்து அநேக பௌத்த விஹாரங்களை யமைத்து, அம்மதத்தைப் பலப்படுத்தினன் என்றும் கூறுவதற்கு ஆதாரங்கள் அநேகம் காணப்படுகின்றன.[3] இக் காரணங்களைக் கொண்டும், சக்ரபாணி முதலியவர்களின் வேறு சில குறிப்புகளைக் கொண்டும்[4] நாகார்ஜுனன் பௌத்த மதாசார்யனாயிருந்ததோடு, பௌத்தர்களுக்கு இயல்பான ஜீவதயை மேலிட்டவனாய் வைத்திய சாஸ்திரத்தையும் முக்கியமாக இரஸதந்திரத்தையும் விருத்தி செய்ய முயன்றான் என்றும், அவன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் அல்லது அதற்குச் சிறிது முற்பட்ட காலத்தில் இருந்தவனென்றும் நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. நாம் இங்கே பதஞ்ஜலிக்கு அடுத்தபடியாக நாகார்ஜுனைக் குறிப்பிட்டு விவரிப்பதற்கு இவ்விருவரிடமும் பல அம்சங்களில் ஒற்றுமை காணப்படுவதும் காரணமாம். இவ்விருவரும் இரண்டு மூன்று சதாப்தங்கள் ஏற்றக் குறைவான மிகப் பண்டைக் காலத்திய சாஸ்திரப் பிரவர்த்தகர்கள். இருவரும் இரஸ சாஸ்திரப் பிரவர்த்தகர்களாயிருந்ததோடு, ஆச்சாஸ்திரம் உலகில் மூலத்துப் பெருகுவதற்கு மூலபுருஷர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஆயுர்வேதக் கிரந்தங்களுள் மிகப் பிராசீனமும் பிரபலமுமான சரக ஸம்ஹிதைக்கு அவ்விருவரில் முந்தியவர் உரை வரைந்தும், ஸுச்ருத ஸம்ஹிதையைப் பிந்தியவர் சீர்திருத்தியும் இருக்கின்றனர். மேலும் முதல்வர் யோகசாஸ்திரம் இயற்றி ஆத்மார்த்தமான நன்மையைச் செய்ததுபோல, இரண்டாமவர் பௌத்ததர்மத்திற்கான நூல்களை இயற்றி இம்மை மறுமைகளுக்கான நன்மை பயன்றிருக்கிறார். இருவரும் மஹான்களென்று உலகத்தோரால் போற்றப்படுபவர். ஆகவே இவர்களுடைய வரலாற்றை இரஸசாஸ்திரத்தின் நூன் முகத்தில் ஒரு சிறிது விவரித்துக் கூறலாமென்றும்.

1. மஹாயாந ஸம்பிரதாயப் பிரவர்த்தகர்களாய் தேவன், அச்வகோஷன், குமாரலப்தன், நாகார்ஜுனன் என்ற இந்தியாவுக்கு நான்கு சூர்யர்களைப் போன்ற பௌத்த குருக்கள் இருந்தனர் என்றும், நாகார்ஜுநபோதி ஸத்வக்கிரந்தம், சீனபாஷையில் தாராநாதன் என்பவனால் (401-கி.பி.) எழுதப்பட்டதென்றும் அச்சீனயாத்ரிகன் குறிப்பு.

2. ஹர்ஷசரிதம் 8-ம் உச்சவாஸம் கடைசியிற் பார்க்க.

3. "ஸாதவாஹநவம்சத்து அரசர்கள்—ஆந்திரர் கி. மு. 2-ம் நூற்றாண்டு முதல் சுமார் கி. பி. 3-ம் நூற்றாண்டு வரையில் மிகச் செல்வாக்குடன் அரசாண்டிருக்கின்றனர். மாத்யமிக மதஸ்தாபகனும், மிகப் பிரபலமான பௌத்தாசார்யருமான நாகார்ஜுனன் இந்தியாவில்—விசேஷமாகத் தென் பாகத்தில் யாத்திரை செய்து ஒரிஸா (ஓட்ரதேசம்) வைச் சுற்றிலும், வேறிடங்களிலும் பௌத்தாலயங்களை நிர்மித்தும், அம்மதத்தைப் பிரசாரம் செய்தும், தான்யகடகம் என்னுமிடத்தில் (தரணிகோட) மிகப் பெரிய பௌத்தாலயம் ஸ்தாபித்தும் அக்காலத்தில் கீர்த்திபெற்றான். அக்காலத்தில் இவ்வாந்திர அரசரது இராஜ்யம் கோஸல நாடு வரையிற் பரவியிருந்தது :—Archæological Survey of S. India. Vol. I. P. 3.

4. "போதி ஸத்வேந பாஷிதம்" என்று சக்ரபாணி குறிப்பிடுகிறான். ஒரு அஞ்ஜநௌஷதமுறையை சக்ரபாணியும், ப்ருந்தமாதவனும் தமது நூல்களில் எழுதும்போது "நாகார்ஜுநேந லிகிதா ஸ்தம்பே பாடலிபுத்ரகே"-அவ்வௌஷத முறை நாகார்ஜுனனால் பாடலீபுத்ரத்தில் ஒரு கற்றூணில் வரையப்பட்டுள்ளது—என்று குறிப்பிடுகிறார்கள்.

இரஸரத்தின ஸமுச்சயம்.

இனி இரஸரத்தின ஸமுச்சய மொழிபெயர்ப்பைப் பற்றிச் சிறிது கூறுவோம். நாம் வேறு ஸம்ஸ்க்ருத வைத்தியக் கிரந்தங்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள விஷயம் இதைப் படிப்பவர் அனைவருக்கும் தெரிந்ததே. அவ்வித மொழி பெயர்ப்புகளைச் செய்து வெளியிட முயன்றது முதல், நாம் தீர்மானித்திருந்த ஏற்பாடுகளின்படி அவ்வைத்திய நூல்களின் வரிசையில் சிறந்த இரஸக்கிரந்தம் ஒன்றிரண்டை மொழிபெயர்த்து வெளியிடுவதும் நமது கோரிக்கை. ஆகவே இந்நூல் இங்ஙனம் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது. ஸம்ஸ்க்ருதத்தில் அநேகம் ஸித்தர்களும் வேறு பல நிபுணர்களும் இயற்றிய இரஸநூல்கள் அநேகம் உண்டென்று நாம் முன்னமே கூறியிருக்கிறோம். இப்பொழுது கிடைக்கக் கூடிய அவ்வித இரஸக் கிரந்தங்களுள் இரஸரத்தினஸமுச்சயமே அநேகவகையிற் சிறந்தது. அநேகம் ஏட்டுப் பிரதிகளைப் பரிசீலனை செய்து, பல பாடபேதங்களுடன் சுமார் 40-வருஷங்களுக்கு முன் அச்சிடப்பட்ட பூனப்பதிப்பு உட்பட இரஸரத்நின ஸமுச்சயம் முழுப்புஸ்தகமும் இரண்டு மூன்று பிரசுரகர்த்தாக்களால் வெளியிடப்பட்டிருப்பதோடு, இரண்டொரு பதிப்புகளுக்கு ஸம்ஸ்கிருதத்திலும் வேறு வடதேசத்துப் பாஷைகளிலும் உரைகளும் வெளியாயிருப்பதால், இந்நூலை மொழி பெயர்த்துத் தமிழில் வெளியிடுவது ஒருவாறு ஸௌகரியமாகக் கருதப்பட்டது.

இந்த இரஸக்கிரந்தத்தை நாம் முதலில் மொழி பெயர்க்க முயன்ற தற்கு முக்கியமானது மற்றொரு காரணம்; அதாவது இரஸரத்தின ஸமுச்சயத்தில் ஆதிமுதல் விஷயங்களெல்லாம் ஒழுங்காகப் பாகு பாடு செய்யப்பட்டு, எல்லா அம்சங்களும் குறைவின்றியும் விளங் கவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. விஷயங்களைப் பாகுபாடு செய்து ஒழுங்காய் ஸாத்தியமான வரையில் விளங்க உரைத் திடுவதில் பிராசீன வைத்தியசாஸ்திரஞ்ஞருள் வாக்படர் பெயர் போனவர். இப்பொழுது கிடைக்கக்கூடிய இரஸார்ணவாதிக் கிரந்தங்கள் வாதவிஷயங்களும் மந்திரபாகங்களும் அதிகமாய் அடங்கியவை; வேறு சில நூல்கள் மிகச் சுருக்கமானவை; மற்றுஞ் சில அதிக விஸ்தாரமானவை. இரஸரத்தின ஸமுச்சயம் விஷயங் களைப் போதியவளவிலும் அதிக விஸ்தாரமில்லாமலும் விளக்கும் அரிய நூலாகும். தாதுவர்க்கங்களின் குணபாடங்கள் இதிற் குறிப் பிடப்படுகின்றன. அவற்றைப் பல வகைகளிற் சுத்தி செய்யும் முறைகளும், அவற்றின் பஸ்மமுறைகளும், ஸ்த்துவபாதநக்கிர மங்களும், திருதியென்கிற திராவக விதிகளும்—ஒவ்வொன்றுக் கும்—அததற்கென்றேறற்படுத்திய அத்தியாயங்களில் விவரித்துக் கூறப்படுகின்றன. அநேகவிதமான புடமிடும் முறைகளும், இரஸாதிகளைப் பல வேறு வகையிற் பக்குவம் செய்வதற்கான வெவ்வேறுவிதமான யந்திரங்களுடைய அமைப்புகளுக்கான உபா யங்களும் இதில் விவரிக்கப்படுகின்றன. இரஸசாஸ்திரத்திற் கான சாஸ்த்ரீய பரிபாஷைகளும், இந்நூலிலேயே விஸ்தாரமாய் மொழியப்பட்டுள்ளன. இவ்விதமான சாஸ்த்ரீய விஷயங்களடங் கிய நூல் தமிழிற் கிடையாதென்பது உண்மை. வெகு விஸ்தார மான சகாதி ஸம்ஹிதைகளைப் பார்த்து, அவ்விஷயங்களை யெல் லாம் திரட்டி ஒழுங்காக அஷ்டாங்கஹ்ருதய - ஸங்கிரஹங்கள் இயற்றியது போலவே, பிராசீனமான இரஸார்ணவாதிநூல் களைப் பரிசீலனை செய்து இச்சங்கிரஹக் கிரந்தமும் இரஸசாஸ்திர விஷயமாய் வாக்படரால் இயற்றப்பட்டதென்பதில் ஆக்ஷேப மில்லை.[1] இந்நூலின் ஆரம்பத்திலேயே தாம் தமக்கு முன்னிருந்த இருபத்தேழு ஸித்தர்கள் இயற்றிய இரஸதந்திரங்களையும், வேறு நூல்களையும்[2] படித்துத் தொகுத்து இக்கிரந்தம் எழுதப் படுவதாக ஆசிரியரே கூறுகிறார். இரஸரத்தின ஸமுச்சயம் இய ற்ற அவசியமான ஸாராம்சங்களைத் திரட்டுவதற்குத் தாம் ஆதார மாகக்கொண்ட இரஸநூல்களின் ஆசிரியர்களையும் முதல் அத்தியா யத்திலேயே ஆரம்பத்தில் இவ்வாசிரியர் குறிப்பிடுகிறார். ஆயுர்

1. "ரஸசாஸ்த்ராணி ஸர்வாணி ஸமாலோச்சிய யதாக்ரமம்"—இரஸரத்தின ஸமுச்சயம். அத்தி. 6. ச்லோ. 1.

2. வேறு நூல்களை யென்பதால் இரஸார்ணவ இரஸகூடா மணி முதலிய நூல்களும் குறிப்பிடப்படுவதாகக் கருதவேண்டும்.

வேத மறிந்தவரும் இதையே இரஸசாஸ்திரத்திற்குப் பிரமாண நூலாகக் கருதுகிறார்கள். ஆனதுபற்றியே நாம் இக்கிரந்தத்தை மொழி பெயர்த்துத் தமிழ் நாட்டுக்கு உதவ முயன்றோம்.

இரஸவைத்தியமும் இரஸவாதமும்.

இரஸ சாஸ்திரம் வைத்திய முறைக்கே அதிக உபயோகமான தென்னும் கொள்கையை இரஸரத்நாகரம், இரஸேந்திர சிந்தாமணி, இரஸார்ணவம், இரஸரத்தின ஸமுச்சயம் முதலிய சில நூல்களே நிலைநிறுத்தக் கூடியவைகளாய் ஏற்பட்டன. இவற்றிலும் இரஸ ரத்தினஸமுச்சயமே முதன்மையானது. இவற்றைத் தவிர வேறு இரஸநூல்களும் இரஸவாத விஷயத்தில் முக்கிய நோக்கங் கொண்டு ஏற்பட்டவையாகத் தோற்றுகின்றன. இரஸசாஸ் திரத்திற்கு ஆதியில் சிவபெருமான் உபதேசகர் என்கிற நம்பிக் கையுடன் பெரும்பான்மையான இரஸ நூல்களில் இடையிடையே சிவபிரானைப் பற்றிய பிரார்த்தனைகள் காணப்படும். முக்கியமாகத் தென்னாட்டில் இரஸநூல்கள் எழுதியவர்களிற் பெரும்பான்மை யோர் சைவர்களாகவே இருந்ததும் குறிப்பிடத் தகுந்தது. "ஆர்யரல்லாதவர்களால் இரஸ நூல்கள் என்னும் பெயரால் இயற் றப்பட்டுள்ளவைகள் அநேகமாய் தாதுவாதமுறைகளிலேயே நோக்க முள்ளனவாயும், அனுபவத்தில் அம்முறையிற் பயனடைய முடியாதவர் சில தைவங்களை வழிபாடு செய்து பலிகளிட்டுப் போற்றுவது வழக்கமாய் ஏற்பட்டு, மந்திரங்களை அந்நூல்களிற் பெருவாரியாகச் சேர்த்து, க்ரமமாக ஏவல் என்னும் கிரியை களிலும், இரஸவாத வழிகளிலும் பிரவேசிக்கலாயினர்" என்று டாக்டர் ராய் கூறுகிறார். சுமார் ஆறும் நூற்றாண்டுக்கு முன்பி ருந்தே மனிதத்தன்மையை அதிகரித்ததோர் சக்தியைப் பெறு வதில். ஆவல்கொண்ட சிலர் யோகாப்யாஸாதநங்களையும், ஸாதாரண ஜனங்களைப் பிரமையுறச் செய்யத் தகும் ஐஹிகமான சில பலன்களையும் பெறுவதற்காகக் காளி, சண்டி, சாமுண்டி, சக்தி என்கிற தைவங்களைப் பலவகையான ஜீவபலிகளிட்டுத் தொழும் வழக்கமும் ஏற்பட்டது.[1] அது இரஸவாத வித்தையைப் பயிலுபவரிடமும் பெரிதும் பற்றிக் கொண்டது[2]. இவ்வழக்கத்

1. பைரவாசாரியர் என்கிற ஒரு வீர சைவர் மானிடத்தன்மை க்கு மேலான ஒருவித ஸித்தி பெற விரும்பி, மயானத்தில் சவத்தின் மேல் இருந்துகொண்டு செய்யும் சடங்குகளும் (ஹர்ஷசரிதம் 3-ம் உச்சுவாஸம்), பவபூதி மாலதீ மாதவம் 5-ம் அங்கத்தில் இயற்றியுள்ள காபாலிகர்களுடைய வர்ணனைகளும், வேறு பலவும் இதற்குச் சான்றும்.

2. இவ்விதமான ஹீன மனோவ்ருத்திகளையும், இரஸவாதிகளுக்கு இருந்த சில அகாகரிக்கக் கொள்கைகளையும் பரிஹாஸ தோரணையில் பாணகவி கண்டித்தெழுதியதை காதம்பரியிலும் திரவிடதார் மிக வர்ணனையில் படிக்கலாம். (இவ்விரு கவிகளும் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பு இருந்தவர்கள்.)

தைத் தென்னாட்டில் வழங்கும் சில தமிழ் நூல்களிலே மிகுதி யாக அவற்றின் ஆசிரியர்கள் அனுஸரித்திருப்பதைப் பார்க்கலாம். இந்நூலிலும் சில மந்திர பாகங்கள் இல்லாமற் போகவில்லை. ஆனால் மற்றெல்லா நூல்களினும் அவ்விஷயம் இதில் மிகச் சொற்ப அள வென்பது இரஸ சாஸ்திரம் அறிந்தவருக்குத் தெரிந்த விஷயம். பதினெண் ஸித்தர்கள் தமிழில் இயற்றியதாகச் சொல்லப்படும் எந்த நூலும் இப்பொழுது கிடைப்பதில்லை. அவர்கள் பெயரால் கிடைப்பவை சில கேவலம் ஞானம், யோகம், வாதம் இவைகளைப் பற்றிய பல அம்சங்கள் அடங்கியவைகளாக இருக்கின்றனவே யன்றி, வைத்தியத்திற்கு அவசியமான இரஸசாஸ்திர விஷயங்களை ஸ்பஷ்டமாக விளக்கக் கூடியவையாகவாவது ஒழுங்காகவாவது அமைந்தவைகளாகக் காணப்படவில்லை.[1] ஆகவே ஒழுங்காகவும் கூடிய மட்டிலும் விளங்கவும் பிராசீன இரஸ சாஸ்திர விஷயங்களை விவரிக்கும் கிரந்தமொன்றை இங்ஙனம் தமிழில் வெளியிடுவது அவ சியமென யோசித்து, இந்நூலைத் தமிழ்நாட்டுக்கு உதவுகின்றோம். இந்த இரஸரத்தின ஸமுச்சயம் இரஸார்ணவம், இரஸரத்தி நாகரம் முதலியவற்றைச் சிறிது பின்பற்றி யெழுதப்பட்டிருப்பதோடு, ஸோமதேவனது இரஸநூலிலிருந்தும்,[2] வேறு சிலவற்றிலிருந்தும் இவ்வாசிரியர் அநேக பாகங்களைக் கிரஹித்து இதை இயற்றிய தாக விளங்குகிறது.

இந்நூலின் ஆசிரியர்.

இனி இரஸரத்தின ஸமுச்சயத்தை இயற்றியவர் யார் என் பதைச் சற்று விசாரிப்போம். இதன் ஆசிரியர் வாக்படர் என் பதைப்பற்றி ஆக்ஷேபிப்பார் யாருமில்லை; ஆனால் அஷ்டாங்க ஸங் கிரஹ - அஷ்டாங்க ஹ்ருதயங்களை இயற்றிய வாக்படர்[3] இரஸ ரத்தின ஸமுச்சயம் எழுதிய வாக்படரினும் வேறுபட்டவர் என் பது சிலரது கொள்கை. ஆனால் அஷ்டாங்க ஸங்கிரஹம், அஷ் டாங்க ஹ்ருதயம், இரஸரத்தின ஸமுச்சயம் ஆகிய மூன்று நூல்

1. "கோரக்கர், சத்தியநாதர் முதலிய சித்தர்கள் பதார்த்தங் களின் பருதிகளை நிச்சயித்து, அவற்றைத் தமதெண்ணப்படி ஏவல் கொள்ளும் ஆற்றலுடையாராதலால் அவர்கள் சித்தர் எனப்படுவர். ரசாயன சாஸ்திரங்களும் வைத்திய சாஸ்திரங்களும இவர் இயற்றினர். அந்த நூல்கள் பெரும்பாலும் இறந்தன. இவர்களால் செய்யப்பட்ட நூல்களென்று சொல்லப்பட்டு இக்காலத்து வழங்குவன யாவரோ சாமானியர் பாடிய புரட்டு நூல்களேயாம்."—பி. ராமநாதன் அவர் களின் தமிழ்ப் பெயரகராதி.

2. இம்மொழி பெயர்ப்பில் 8-ம் அத்தியாயத்திலும், 9-ம் அத்தி யாயத்திலும் ஆரம்ப வாக்கியங்களைப் பார்க்க.

3. அஷ்டாங்க ஸங்கிரஹம் இயற்றிய வாக்படரே அஷ்டாங்க ஹ்ருதயமும் இயற்றிய விஷயமாக நமது அஷ்டாங்கஹ்ருதய மொழி பெயர்ப்பின் முகவுரையில் நிரூபணங்களைப் படிக்கலாம்.

களையும் இயற்றியவர் ஒரு வாக்படரே யென்பது நமது கொள்கை. ஆனால் இக்கொள்கை விஷயமாயுள்ள ஆக்ஷேபங்களை முதலிற் கூறு வோம். (1) அஷ்டாங்க ஹ்ருதயத்திலாவது, ஸங்கிரஹத்திலாவது இரஸலோஹாதி விஷயங்களாவது, இரஸரத்தின ஸமுச்சயத்தி லுள்ள விஷயங்களாவது ச்லோகங்களாவது காணப்படவில்லை யென்பது ஆக்ஷேபத்திற்கான ஒரு காரணம். (2) அஷ்டாங்க ஸங் கிரஹ-ஹ்ருதயங்களுக்குப் பிந்திய காலத்தவரான ஸோமதேவன் முதலானோருடைய நூல்களிலிருந்தும் சில விஷயங்கள் எடுத்து இரஸரத்தின ஸமுச்சயத்திற் சேர்க்கப்பட்டிருப்பது இரண்டாம் காரணம். (3) பத்தியநடை முதலியவை அஷ்டாங்கஹ்ருதயாதி களில் இருப்பவைபோல அவ்வளவு அழகாய் அமையாமல் சிறந்த நடை யெழுதத் தெரியாத ஒருவரால் இந்நூல் எழுதப்பட்டது போலக் காணப்படுதல் மூன்றும் காரணம். இவற்றிற்கு இதனடி யில் விமர்சபூர்வகமாய் விடையளிப்போம்:—

(1) முதல் ஆக்ஷேபத்தைக் கவனிப்போம்: வாக்படருக்கு முற்பட்டவர்களுடைய சரக - ஸுச்ருதாதிக் கிரந்தங்களை அலசிப் பார்த்து அவற்றிலிருந்து கிரஹித்த அம்சங்களாயுள்ள மூலிகை களாலான ஔஷத முறைகளையும், அவற்றாலான சிகித்ஸா கிரமங் களையும்—இரஸ - லோஹாதிகளின் ஸம்பந்தமில்லாமல் — தொகு த்து விளக்குவதற்கென்றே அஷ்டாங்க ஸங்கிரஹ ஹ்ருதயங்கள் வாக்படரால் இயற்றப்பட்டவை. அவ்விதந் நூல்களில் தாதுப் பொருட்களாலான ஔஷதங்களைக் கலந்து எழுதுவதை உசிதமாகக் கருதாமல், அதற்காகப் பிறகு வேறொரு கிரந்தம் இரஸரத்தின ஸமுச்சயம் என்பதாக அவரால் எழுதப்பட்டது. மேலும் தாதுப் பொருட்களைப் பற்றி அஷ்டாங்கஹ்ருதய-ஸங்கிரஹங்களில் ஏதும் குறிப்பில்லையென்றும் கூறுவது பொருந்தாது. தாதுப்பொருட் களைப்பற்றி அஷ்டாங்க ஹ்ருதயத்திற் காணப்படும் குறிப்புகளைப் பற்றி இதற்கு முன்பே இந்நூன்முகத்திற் கூறியிருக்கின்றோம். அன்றியும் "இரஸரத்தின ஸமுச்சயம்" என்று இந்நூலுக்குப் பெயரிட்டிருப்பதின் கருத்தைக் கவனித்தலும் அவசியம். உச்சயம் என்றால் திரட்டிச் சேர்க்கப்பட்டது என்றும், ஸமுச்சயம் என்றால் நன்கு சீராகத் திரட்டப்பட்டது என்றும் பொருள்; என்றால் மிக வும் ஸாரமான விஷயங்களை ஒருமிக்கத் திரட்டி இயற்றப்பட்டது என்பது அதன் விளக்கமான பொருள். 'ஆங்காங்கு பலவாறு திரிதருண்டிருந்த ஆயுர்வேத விஷயங்களிலிருந்து மிகவும் ஸாரமான அம்சங்களைத் திரட்டி யெடுத்து அஷ்டாங்கஹ்ருதயம் இயற்றப்படு கிறது' என்று அந்நூலின் ஆரம்பத்தில் கூறப்பட்டிருப்பதையும் கவனிக்கவேண்டும்.[1] அவ்விடத்திலும் ஸாரதரோச்சயம் என்கிற

1. "தேப்யோதி விப்ரகீர்ணேப்ய: ப்ராயஸ் ஸாரத ரோச்சய:. க்ரியதேஷ்டாங்க ஹ்ருதயம்****"—ஸூ. அத். 1. ச்லோ. 4.

சொல் பிரயோகிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தகுந்தது. ஸாரத ரோச்சயம் என்கிற பதமும், ஸமுச்சயம் என்னும் பதமும் சொல்லி லும் பொருளிலும் வேறு பட்டவையல்ல. மேலும் வைத்திய சாஸ்திரத்தில் ஹ்ருதயம் என்பது மூன்று முக்கியமான மர்மங் களுள் ஒன்று என்று வழங்கப்படுகின்றது. சாஸ்திரத்தின் மர்மங்களெனத் தகும் மிகவும் ஸாரமான விஷயங்கள் அடங் கியதால் ஒரு கிரந்தத்திற்கு ஹ்ருதயம் என்றும், இரத்தினம்போல் அருமையாயுள்ள ஸாரமான விஷயங்களின் நிரட்சி ரூபமான மற் றொரு கிரந்தத்திற்கு ஸமுச்சயம் என்றும் ஒரே கருத்தை விளக் கும் இரண்டு பதங்கள் இவ்விரு நூல்களின் பெயர்களிலும் கூட் டப்பட்டிருக்கின்றன. எனவே அஷ்டாங்க ஹ்ருதயத்தின் ஆரம் பத்திற் குறிக்கப்பட்டுள்ள ஸாரதரோச்சயம் என்னும் சொல்லின் சுருக்கமான ஸமுச்சயம் என்கிற அதுபோன்ற பதத்தையே தமது இரஸக்கிரந்தத்தின் பெயரோடு ஆசிரியரான வாக்படர் சேர்த்து இந்நூலை அப்பெயரால் வழங்கச்செய்தார் என்பதே நமது கொள்கை. அஷ்டாங்கஸங்கிரஹத்திலும், அஷ்டாங்க ஹ்ரு தயத்திலும் ஆரம்பத்திலுள்ள மங்கள ச்லோகங்களும், முடிவுரை முதலியனவும் இரஸரத்தினஸமுச்சயத்திலும் பெரும்பாலும் ஒரே சீராய் அமைந்திருப்பதையும் காணலாம்.[1] அன்றியும் அஷ் டாங்க ஸங்கிரஹத்தின் உத்தரஸ்தானத்தில் இறுதியிற்கூறியுள்ள

1. அஷ்டாங்க ஸங்கிரஹம். மங்கள ச்லோகங்களில் ஒன்று:— "ராகாதிதோகாஸ் ஸஹஜாஸ் ஸமூலா யேகாச ஸர்வே ஜகதோப்ய பாஸ்தா:. தூமேகவைதூயம் சிரஸா நமாமி வைத்யாகமஜ்ஞாம்ச்ச பிதாமஹாதீந்."

அஷ்டாங்க ஹ்ருதயம். மங்களச்லோகம்:—ராகாதிரோகாந் ஸததாநுஷக்தாந் அசேஷகாயப்ரஸ்ருதாந் அசேஷாந். ஸௌத்ஸுக்ய மோஹாராதிதாந் ஜகாத யோ பூர்வ வைத்யாய நமொஸ்து தஸ்மை."

இரஸரத்தின ஸமுச்சயம். மங்களச்லோகம்:—" பக்தாநாம் ப்ரபவப்ர ஸம்ஹ்ருதி ஜரா ராகாதி ரோகா: கூணத் சாந்திம் யாந்தி ஜகத்ப்பாதாந பிஷஜே தஸ்மை பரஸ்மை நம:."

இம்மூன்று கிரந்தங்களின் முடிவுரைகளிலும் ஒரே மாதிரியாக அடியிற் கூறப்படும் விஷயங்களும் காணப்படுகின்றன:—"பலம் ப்ர யாத்யூர்த்வம் அதஸ்த்ரிவ்ருச் ச ப்ரத்யக்ஷத: கஸ்ய ந வித்திமேதி"— இரஸரத்தின. அத். 30. ச்லோ. 106. "ஊர்த்வமேதி மதநம் த்ரிவ்ருதா தோவஸ்து மாத்ரக இதி ப்ரதிபாத்யே. மத்விதோ யதி வதேதத வாத்ரி: கத்யதாம் க இவ கர்மணி பேத."—அஷ். ஸங்கிர. உத்தரஸ்த். முடிவு. " அபிதாத்ருவசாத் கிம் வா திரவ்யசக்திர் விசிஷ்யதே". அஷ். ஹ்ரு. உத்தர. அத். 40. ச்லோ. 86. " இதமாகமவித்தத்வாத் ப்ரத்யக்ஷபலதர்சநாத். மந்த்ரவத் ஸம்ப்ரயோகத்வ்யம் ந மீமாம்ஸ் யம் கதஞ்சந."—இரஸரத். அத். 30. இதே ச்லோகம் அஷ்டாங்க ஸங்கிரஹ – ஹ்ருதயங்களிலும் உத்தர ஸ்தானம் இறுதியிற் காணப் படும். " அஜ்ஞாத சாஸ்திரஸத்பாவாந் சாஸ்த்ரமாத்ரபராயணந்.

அநேகம் ச்லோகங்களும், அச்வினீ குமாரர்களின் வர்ணனை முத லியனவும் இரஸரத்தினஸமுச்சயத்தின் முடிவிலும் அவ்வவ்வி தமே அமைந்திருப்பதை நமது வாசகநேயர்கள் கவனிப்பார்க ளாக.[1] அஷ்டாங்கஸங்கிரஹம் இயற்றியவர் தனக்கு வாக் படன் என்று தன் பாட்டனுருடைய பெயரே இடப்பட்டதென் றும், தன் தந்தையின் பெயர் ஸிம்மகுப்தன் என்றும் தாமே அக் கிரந்தத்தின் முடிவுரையில் விளங்கக் கூறுகிறார்.[2] இரஸரத்தின ஸமுச்சயத்திலும் ஆரம்பத்திலேயே இக்கிரந்தகர்த்தா தம்மை ஸிம்மகுப்தனுடைய புத்திரனென்று குறிப்பிட்டிருக்கிறார்.[3] அல் லாமலும் ஆயுர்வேத ப்ரகாசத்தில் அநேக விடங்களில் அஷ்டாங்க ஹ்ருதயத்திலிருந்தும் இரஸரத்தினஸமுச்சயத்திலிருந்தும் விஷ யங்கள் கிரஹித்து எழுதப்பட்டிருக்கின்றன; அவ்விடங்களி லெல்லாம் பொதுவாக வாக்படன் பெயர் அந்நூலில் குறிக்கப்பட் டிருக்கிறது.[4] இவை முதலிய அத்தாட்சிகளைக் கொண்டு முதல் ஆக்ஷேபம் கவைக்குதவாத தெனத் தெரிந்துகொள்ளலாம்.

(2) இரண்டாம் ஆக்ஷேபத்தை இனி கவனிப்போம். ஸோம தேவன் முதலியவர்களுடைய நூல்களிலிருந்து விஷயங்கள் இரஸ

தாந் வர்ஜயேத் பிஷக் பாசாந் பாசாந் வைவஸ்வதாகிவ."—இரஸரத். 30. அத். 111-ம் ச்லோ. இதே ச்லோகம் அஷ்டாங்க ஹ்ருதய-ஸங்கிர ஹங்களிலும் உத்தர ஸ்தானங்களின் இறுதியிற் காணப்படும்.

1. " லோபயந்த்யாகாரம் வைத்யா யே சித்தை: கர்ம கௌசலை:. தேப்யோ ரஸேந்த் ஸதாத்மாநம் ஆத்மா யஸ்மாத் ஸுகாலப:. தே குணைரவத் கஞ்சிதத்கார்ய நியதாயுஷம். க்ருந்தி வைத்யாபி மாநேந சதாங்யியதாயுஷாம். * * * * க்வசித்தர்ம: க்வசிந்மைத்ரீ க்வசிதர்த்த: க்வசித் யச:. கர்மாப்யாஸ: க்வசிச்சேஷ சிகித்ஸா காஸ்தி நிஷ்பலா. * * * யஜ்ஞஸ்ய ஹி சிரச்சிந்நம் அச்விப்யாம் ஸந்திதம் புந:. பாதிதா தூஷா: பூஷ்ணே பதஸ்ய ச விலோசநே". இவை முத லிய ச்லோகங்கள் அஷ்டாங்க ஸங்கிரஹத்திலும் இரஸரத்தின ஸமுச் சயத்திலும் பொதுவான விஷயங்கள். (இரண்டு நூல்களின் இறு திகளைப் படிக்க.)

2. "பிஷக்வரோ வாக்படே இத்யபூந் மே பிதாமஹோ நாமத ரோஸ்மி யஸ்ய. ஸுதோபவத் தஸ்ய ச ஸிம்மகுப்தஸ் தஸ்யாப் யஹம் விங்ஷதிவர்ஷலப்தஜந்மா."—அஷ்டா. ஸங்கி. உத்தர. அத்தி 50.

3. "ஸுதுநா ஸிம்மகுப்தஸ்ய ரஸரத்நஸமுச்சய:"—இரஸ ரத்நஸ. அத்தி. 1. ச்லோ. 9. (இதை பிரகடிப்தமாக இருக்கலாமென்று ஸ்ரீ கணநாதஸேனன் முதலியவர் காரணம் குறியாமற் கூறுவதற்குச் சமாதானம் அவசியகம். இரஸரத்தின ஸமுச்சயத்தில் ஒவ்வோர் அத்தியாயத்தின் முடிவிலும் "ஸிம்மகுப்தனுடைய புத்திரன் வாக் படன்" என்றிருப்பதையும் கவனித்தால் நமது கொள்கையே பலமான தென்று விளங்கும்.

4. ஸ்ரீ யாதவஜீ ஆசார்யா வெளியிட்டுள்ள ஆயுர்வேத ப்ரகாசத் தில் 75, 80, 101, 112, 158, 195-ம் பக்கங்களைப் பார்க்க.

ரத்தின ஸமுச்சயத்தில் கிரஹித்து எழுதப்பட்டிருப்பது உண்மை. ஸோமதேவன் என்பவனுடைய காலத்தைப்பற்றி டாக்டர் பி. ஸி. ராய் சொல்லும் காரணம் திருப்திகரமாகாது. அவர் 1070 இல் ஸோமதேவன் காலமென்று அபிப்பிராயப்படுகிறார். அந்த ஸோமதேவன் கதாஸரித்ஸாகரம் இயற்றியவன். அவன் தான் 'கரவாள பைரவம்' என்னும் ஒரு பட்டணத்துக்கு அதிகாரியாயிருந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வைத்தியக் கிரந்தங்கள் இயற்றிய வாக்படர் கி. பி. ஆரும் நூற்றாண்டுக்கு முந்தியவர்; இதற்கு ஆதாரமான காரணங்கள் பல பிறகு விவரிக்கப்படும். அதற்கு முற்பட்டவன் இரஸக் கிரந்தம் இயற்றிய ஸோமதேவன். வாக்படர் ஆரும் நூற்றாண்டுக்கு முந்தியவரென்று வேறு பல காரணங்களால் நிரூபிக்கும்போது, அவர் குறிப்பிடும் இரஸக் கிரந்தகர்த்தாவான ஸோமதேவன் வேறென்பதும், வாக்படருக்கு முந்திய காலத்தவனென்பதும் வியக்தமாகுமல்லவா? ஆகவே இரஸரத்தின ஸமுச்சயம் இயற்றியது அஷ்டாங்க ஹ்ருதய கர்த்தாவான வாக்படர் தான் என்பதை ஆக்ஷேபிப்பதற்கு இது ஒரு நிலை நிற்கக்கூடிய காரணமாகாது. இது பின்னால் இன்னும் நன்கு விளங்கும்.

(3) அஷ்டாங்கஹ்ருதய - அஷ்டாங்கஸங்கிரஹங்களில் பத்யாதிகளின் நடை முதலியவை வெகு நன்றாய் அமைந்திருப்பதாகவும், இரஸரத்தின ஸமுச்சயத்தில் அவ்விதம் இல்லையென்றும் கூறுவது இம்மூன்று நூல்களையும் நன்கு பரிசீலனை செய்யாமலே கூறும் கூற்றாகும். இம்மூன்றுக் கிரந்தங்களையும் நாம் பலமுறை முற்றிலும் உற்றுப் படித்ததில், இம்மூன்றுக்கும் ஆசிரியர் ஒருவனுகவே இருக்க வேண்டுமென்கிற கொள்கை தான் திடப்படுகிறது. இரஸரத்தின ஸமுச்சயத்தில் முதல் அத்தியாயத்தில் ஹிமாலயாதி வர்ணனைகள், வாஜீகரணத்தியாய-இரஸாயனாத்தியாயாதிகளிலுள்ள பத்யங்கள் முதலியவைகளையும், அஷ்டாங்க ஹ்ருதயத்தில் இரஸாயன - வாஜீகரணத்தியாயங்களில் (உத்தரஸ்தானம்) உள்ள பத்யங்களையும் மாத்திரம் படித்து, ஒன்றுக் கொன்றுள்ள வாக்கியாதிகளின் நடைகளில் காணப்படும் ஒற்றுமைகளை யுணரலாம். ஆனந்தாச்ரமஸம்ஸ்க்ருதக்கிரந்தாவளியில் வெளியாயுள்ள இரஸரத்தினஸமுச்சயம் அநேகம் பிழைகள் அடங்கியதாயிருப்பதைக் கண்டு, ஆதிகிரந்தகர்த்தாவிஷயத்தில் குணதோஷம் கூறுவது பொருந்தாது; ஆனந்தாச்ரமப் பதிப்பில் அப்பதிப்புக்கு ஆதாரமாயிருந்த பல ஏட்டுப் பிரதிகள் ஒழுங்காக எழுதப்படாமலிருந்த வகைகளை, அப்பதிப்பிற் குறித்துள்ள பல பாட பேதங்களாலும், சுமார் மூப்பது பக்கங்கள் கொண்ட பிழைதிருத்த ஏடுகளாலும் ஒருவாறு அறிந்துகொள்ளலாம். (ஆகிலும் அநேகம் பாடபேதங்கள் ஆனந்தாச்ரமப் பதிப்பில் அச்சிடப்பட்டிருப்பதானது ஆராய்ச்சி செய்பவருக்கு உபயோகமாயிருக்கின்றதாகையால் அப்பதிப்பை நாம் இம்மொழிபெயர்ப்புக்கு முக்கியமாக உபயோகப்படுத்திக் கொள்ளநேர்ந்தது.) சுமார் 40-வருஷங்களுக்கு முன்பு வெளியான ஆனந்தாச்ரமப் பதிப்பில், அவர்கள் வெளியிட்ட மூலக் கிரந்தத்திற்கு ஆதாரமான ஏட்டுப் பிரதிகள் மிகவும் புராதனமானவை யென்றும், அவற்றில் அத்தியாயங்களின் முடிவில் "ஸ்ரீ வைத்யபதி விஷ்ணுகுப்தனுடைய புத்திரனை வாக்படாசார்யர் இயற்றிய இரஸரத்தினஸமுச்சயம்" என்று[1] எழுதப்பட்டிருக்கிறதென்றும் அந்த ஸம்ஸ்கிருத ரஸரத்தின ஸமுச்சயத்தின் முகவுரையில் மொழிந்துள்ள விஷயமும் குறிப்பிடத் தகுந்தது.

மேலும் அஷ்டாங்க ஹ்ருதயத்தில் அதன் ஆசிரியர் எங்கும் தம்பெயரை தாம் குறிப்பிடவில்லை. இரஸரத்தின ஸமுச்சயத்திலாவது தம்மை விஷ்ணுகுப்தனுடைய புத்திரன் எனக் குறிப்பிட்டிருக்கிறார். அப்படிக்கிருந்தும் அஷ்டாங்க ஹ்ருதயமானது அஷ்டாங்க ஸங்கிரஹம் இயற்றிய வாக்படாரேலேயே எழுதப்பட்டதாகப் பெரும்பாலும் அனைவரும் ஆக்ஷேபமின்றியே வழங்குகிறார்கள். ஆத்ரேய-ஸுச்ருத - அக்னிவேசாதி முனிவர்கள் இயற்றிய ஆயுர்வேதக் கிரந்தங்களைப் பரிசீலனை செய்து, எட்டு அங்கங்களடங்கிய ஆயுர்வேத சாஸ்திரத்தைத் திரட்டி ஒரு ஸங்கிரஹக்கிரந்தமான 'அஷ்டாங்கஹ்ருதயத்தை' இயற்றிய வாக்பட்டர், பதஞ்ஜலி நாகார்ஜுன-ஸோமதேவாதி ஸித்தர்கள் இயற்றிய பலவித இரஸக் கிரந்தங்களைப் பரிசீலனை செய்து விஷயங்களை ஒழுங்காகத் தொகுத்து 'இரஸரத்தின ஸமுச்சயம்' என்கிற இரஸக்கிரந்தத்தையும் இயற்றினதாக நமது தீர்மானம். விஷ்ணுகுப்தனுடைய புத்திரனை வேறொரு வாக்படனுடைய பெயர் சரித்திரத்திலேயே கிடையாது.[2] இரண்டொருவர் இந்நூலின் ஆசிரியரைப்பற்றிய விஷயத்திற் சிறிது ஸந்தேஹத்தைக் கிளப்பவே, வேறு சிலர் இரஸரத்தின ஸமுச்சயத்திற்கு அச்வினீகுமாரர்களையும், நித்யநாதரையும் ஆசிரியராகக் குறிப்பிட்டுத் தோன்றியவாறு அபிப்பிராயம் கூற முயல்கிறார்கள். ஆதாரமில்லாத அவ்வீண் கூற்றுகளைப்பற்றி நாம் கவனிக்கப்போவதில்லை.

வாக்படருடைய காலமும் மதமும்.

வாக்படருடைய காலத்தைப்பற்றியும் பலவிதமான அபிப்பிராய பேதங்கள் உண்டு. அவர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில்

1. "ஸ்ரீ வைத்யபதிவிஷ்ணுகுப்தஸ்ய ஸுனோர் வாக்படாசார்யஸ்ய க்ருதௌ ரஸரத்ந ஸமுச்சயே * * *"—ஸம்ஸ்க்ருத இரஸரத்தின ஸமுச்சயம்.

2. வாக்படாலங்காரம் இயற்றிய வாக்படன் வேறொருவன் உண்டு; அவன் பிதாவுக்கு ஸோமன் என்று பெயர். மற்ற விவரங்களுக்கு இது விஷயமாய் நமது அஷ்டாங்க ஹ்ருதய முகவுரை பார்க்க.

இருந்ததாகத் தான் நாம் தீர்மானிக்கிறோம். சிலர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாக்படர் இருந்ததாகக் கருதுகிறார்கள். ஜயலிற்மன் ராஜன் காச்மீரத்தை ஆண்ட காலத்தில் வாக்படர் இருந்ததாக அவர்களது கருத்து. ஜயலிற்மன் காலம் கி.பி. 12-ம் நூற்றாண்டு தான். இதற்கு ஆதாரம் இராஜதரங்கிணியிலும் (8-ம் தரங்கம்), அதற்கு ஸ்டீன் (Stein) என்பவர் எழுதியுள்ள இங்கிலீஷ் முகவுரை முதலியதிலும் பார்க்கலாம். வாக்படரைப்பற்றி இராஜதரங்கிணியில் ஆதாரம் இருப்பதாகவும் வைத்யகசப்தலிந்துவின் முகவுரையிற் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இராஜதரங்கிணியில் வாக்படரைப்பற்றிய பிரஸ்தாவமே காணப்படவில்லை. ஒருக்கால் அவ்விஷயம் வாக்படாலங்காரம் இயற்றிய வாக்படனைப் பற்றியதாயிருக்கக் கூடுமேயன்றி வைத்திய நூல்களியற்றிய வாக்படனுக்குப் பொருந்தாதென்பது நிச்சயம். சரக-ஸுச்ருதர்களுக்கும், சரகஸம்ஹிதையைப் பூர்த்தி செய்த த்ருடபலனுக்கும் பிற்காலத்தில் இருந்த மிகப் பெரிய அறிவாளி இவ்வாக்படன். வாக்படாசாரியர், அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் கல்பஸ்தானத்தில் சரகஸம்ஹிதையின் கல்பஸ்தானத்திலுள்ள சில விஷயங்களை கத்யரூபமாக அப்படியே கிரஹித்து உபயோகித்திருக்கிறார். த்ருடபலன் என்பவன் பஞ்சநதம் என்னுமிடத்தில் வஸித்து வந்த மிகப் பண்டைக் காலத்திய வைத்தியர்[1]. மாதவநிதானம், லித்த யோகம், சக்ரதத்த ஸங்கிரஹம் முதலிய நூல்களில் அஷ்டாங்கஹ்ருதயாதிகளிலுள்ள சில விஷயங்கள் எடுத்து உபயோகிக்கப் பட்டிருப்பதோடு, வாக்படனுடைய பெயரும் ஆங்காங்கு குறிக்கப் பட்டிருக்கின்றன. ஆயுர்வேதநூல்களைப் படித்தவருக்கு இவ்விஷயம் நன்றாகத் தெரியுமாகையால் இதற்கு மேற்கோள்களை நாம் இங்கு எடுத்து எழுதவில்லை. ஆகவே த்ருடபலனுக்குப் பிந்தியும், மாதவகரப்ருந்தமாதவாதிகளுக்கு முந்தியும் வாக்படருடைய ஜீவித காலம் எனக் கூறவேண்டும். வங்கதேசத்தில் நயபாலன் என்கிற அரசனுக்கு ஆப்த வைத்தியராகவும் பாகசாலைக்கு அதிகாரியாகவும் இருந்த சக்ரபாணி[2], வாக்படருடைய வைத்தியக் கிரந்தங்களை அநுஸரித்து நூல் எழுதியிருப்பதால், பத்தாம் நூற்

1. "இதமந்யுநசப்தார்த்தம் தந்த்ரம் தோஷவிவர்ஜிதம். அகண்டார்த்தம் த்ருடபலோ ஜாத: பஞ்சநதே புரே. க்ருத்வா * * *".—சரக. வித்தி. அத்தி. 12. ச்லோ. 78.

2. "கௌடாதிநாதாஸவத்யதிகாரிபாத்ரநாராயணஸ்ய தநயஸ்ஸுநயோந்தரங்காத். பாதோரது ப்ரதிதலோத்ரபலீகுலீக: ஸ்ரீசக்ரபாணி ரிஹ கர்த்ருபதாதிகாரீ".—சக்ரதத்தம். [கௌடாதிநாதன் என்னும் வங்கதேசத்து அரசன். இப்போதைய வங்காளத்துக்கு கௌடதேசம் என்று முற்காலத்தில் பெயர்:—ஸ்டீன் இங்கிலீஷ் ராஜதரங்கிணி.]

றாண்டுக்குப் பிறகு வாக்படர் காலத்தைக் குறிப்பதற்கில்லை. ஏனெனில் நயபாலன் 1040 முதல் 1060 வரையில் அரசு செலுத்தியிருக்கிறான்.[1] இதற்கு முன் நாம் எழுதியுள்ளபடி வாக்படம் கலிபாவின் உத்தரவுப்படி அவர்களது பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதையும், ஜியார்ஜ் ஹூத் (Huth) என்பவர் தம் ஆராய்ச்சியில், வாக்படர் காலம் கி. பி. 8-ம் நூற்றாண்டுக்குப் பிந்தியதாயிருக்க முடியாதென்று கூறியிருப்பதையும் ஆலோசிப்போமானால், வாக்படர் காலம் ஐந்தாம் நூற்றாண்டென்கிற நம் அபிப்பிராயத்திற்குச் சிறிது நெருங்கிய அத்தாட்சிகள் கிரமமாகக் காணப்படுகின்றன. டாக்டர் மோரெச்வர குண்டே '2200-வருஷங்களுக்கு (கி. மு. 200-ஆம் ஆண்டு) முன்பட்டவர் வாக்படர்' என்று வாக்படக் கிரந்தத்திலடங்கிய விஷயங்களின் தன்மைகளைக் கொண்டு அபிப்பிராயப்படுகிறார்.[2] அப்படியானால் வாக்படன் ஸுச்ருதருக்குச் சமானகாலத்தியவராகப் போவதுடன், சரகருக்கு முந்தியவராகவும் இருந்ததாகும்; அது முற்றிலும் ஏற்கக் கூடாத அபிப்பிராயம். சரக-ஸுச்ருத-பேளாதிகளின் பெயர்களையும், அவர்களது கிரந்த விஷயங்களையும் வாக்படர் கிரஹித்திருக்கும்போது குண்டே அவர்கள் அவ்வளவு ஸந்தேஹமின்றி வாக்படர் காலத்தை அவ்விதம் கூறுவது எங்ஙனமென்று விளங்கவில்லை. சீனதேசத்து யாத்ரிகன் இத்ஸிங் என்பவன் இங்ஙனம் கூறியிருப்பது சரித்திரக்காரருக்குத் தெரிந்திருக்கும்:—"ஆயுர்வேதம் எட்டு அங்கங்கள் அடங்கியது. ஒவ்வொன்றுக்கும் பல ஆசிரியர்கள் தனித்தனி நூல்கள் எழுதியிருந்தனர். பிறகு அவ்வெட்டு அங்கங்களும் ஒன்றுகத் தொகுக்கப்பட்டு அஷ்டாங்கங்களடங்கிய ஒரு ஸங்கிரஹநூல் ஒருவனால் எழுதப்பட்டது."[3] என்கிற இதிலிருந்து அச்சீனதேசத்து யாத்ரிகன் குறிப்பிடும் கிரந்தம் அஷ்டாங்க ஸங்கிரஹம் அல்லது அஷ்டாங்க ஹ்ருதயமாக இருக்கவேண்டுமென்று விளங்குகிறது. திருச்சூரிலிருந்து வெளியாயுள்ள அஷ்டாங்க ஸங்கிரஹத்திற்கு முகவுரை இயற்றியிருப்பவர் இரண்டாம் நூற்றாண்டில் வாக்படர் இருந்திருக்கலாம் என்கிறார். அப்படியானால் நாகார்ஜுனன், அவனுக்கும் பிந்திய ஸோமதேவன் முதலியவர்களைப் பற்றிய குறிப்புகள் வாக்பட நூல்களில் காண்பதற்கு ஹேதுவில்லை. சீனயாத்ரிகன் தான் யாத்திரை செய்த காலத்திய கல்விமான் முதலியவர்களுடைய வரிசையில் வாக்படரைப்பற்றிய விஷயத்தைக் குறித்திருக்கவும் அவசிய மேற்பட்டிருக்காது. ஆகவே

1. டாக்டர் பி. ஸி. ராய். ஹிந்து கெமிஸ்ட்ரி. இரண்டாம் பதிப்பு. Vol. I.P. IV. (4)

2. அஷ்டாங்க ஹ்ருதயத்தின் இங்கிலீஷ் முகவுரை—நிர்ணயஸாகர பிரஸ் பதிப்பு பார்க்க.

3. I'Tsing:—" Records of the Buddist Religion " by Takkakasu. P. 128.

நாம் வாக்படர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் இருந்தார் என்கிற முடிவுக்கு வருகிறோம்.

வாக்படர் வட இந்தியாவில் ஸிந்துதேசத்தில் பிறந்து வளர்ந்தவரென்பது அவர் எழுதிய ச்லோகத்திலேயே பிரஸித்தம்[1]. ஜெஜ்ஜடன், கயாதாஸன், இந்து முதலிய பல வைத்திய சாஸ்திரப் பிரமுகர்கள் அவருடைய சீடர்களென்று கூறப்படுகிறது.[2] அஷ்டாங்கஹ்ருதயாதிகளில் வேதமந்திரங்களைப் பிரஸ்தாபிப்பதாலும், பிராம்மணர்களையும் இருஷிகளையும் பூஜிக்கும் முறைகளை மொழிவதாலும் வாக்படர் பிராம்மணர் என்று சிலரது எண்ணம். வேறு சிலர் அவர் முதலில் பிராம்மணராயிருந்து, பிறகு புத்தமதத்தைத் தழுவியவர் என்று கூறுகிறார்கள். ஆனால் அவர் சுத்த புத்தரென்பது நமது கொள்கை. அக்காலத்தில் பௌத்தர்கள் சாஸ்திர விஷயங்களைக் கூறுவதில் மதபேதக் கொள்கைகளை மனதில் வைக்காமல் அவசியமான விஷயங்களை நிஷ்கபடமாய் வெளியிடுபவராகவே இருந்தனர். ஹிந்துக்களும் முற்காலத்தில் அவ்விதமே இருந்ததாகவும் தெரியவருகிறது. உதாரணமாக அமரஸிஹ்மன் (கி.பி. 1-ம் நூற்றாண்டில்) இயற்றிய நிகண்டுவில் ஹிந்துக்களுடைய ஏற்பாடுகளை அனுஸரித்து இந்துதேவங்களைப்பற்றியும், வர்ணாச்ரமதர்மங்களை அநுஸரித்த விஷயங்களைப்பற்றியும், தான் ஜைனன் என்பதைப் பாராட்டாமல், தனித் தனி வர்க்கங்களமைத்து நூல் இயற்றியதும், ஹிந்துக்களும் தாராளமான கொள்கையுடன் புத்த தேவன் அஸாதாரணமான குணங்களையும் மஹிமையையும் பெற்றிருந்ததைக் கண்டு அவரை விஷ்ணுவின் ஓர் அம்சாவதாரமாகக் கொண்டு முதலில் கௌரவித்ததும் இதற்குச் சான்றும். அமரஸிஹ்மன் மதக்கொள்கைகளைக் காட்டாமல் நிஷ்பக்ஷபாதமாக நிகண்டு இயற்றியது போலவே, ஆசாரியவாக்படனும் பௌத்தனாயிருந்தும் தம் மதக் கோட்பாடுகளைப் பாராட்டாமல் அக்காலத்திலிருந்த வைத்தியஸம்பந்தமான அநுஷ்டானங்களையும் விஷயங்களையும் தமது நூலில் விளக்கவேண்டியதையே தம் கடமையெனக் கருதியதாகக் கொள்ளவேண்டும். நாம் வாக்படனை முற்றிலும் பௌத்தனென்றுதான் தீர்மானிக்கின்றோம். நமது இத்தீர்மானத்திற்கு ஆதாரமாக வேறு பல பிரமாணங்களைக் குறிப்பிட்டு நமது அஷ்டாங்க ஹ்ருதய மொழி பெயர்ப்பின் முகவுரையில் விஸ்தாரமாகவும் விளக்கவும் எழுதியிருப்பதால், அவ்விஷயங்களை

1. "பிஷக்வரோ வாக்பட இத்யபூன்மே பிதாமஹோ நாமத ரோஸ்மி யஸ்ய. ஸுதோபவத் தஸ்ய ச ஸிஹ்மகுப்தஸ் தஸ்யாப்யஹம் ஸிந்துஷு ஜாதஜந்மா" — அஷ்டாங்க ஸங்கிரஹம்.

2. லம்பச்மச்ருகலாபமம்புஜநிபச்சாயேக்ஷணம் வைத்யகாந் அந்தேவாஸிந இந்து ஜெஜ்ஜடமுகாந் அத்யா பயந்தம் ஸதா * * * * த்யாயே த்ருடம் வாக்படம்."

மீண்டும் இங்கு விவரிக்கக் கருதவில்லை. ஆசார்யவாக்படன் ஆயுர்வேத சாஸ்திரத்தில் மிகப் பிரவீணனாயிருந்து, சரகாதிகளுக்குப் பிறகு—சரகாதிஸம்ஹிதைகளினும் பல சீர்பாடுகளமைத்த—மிகச் சிறந்த அஷ்டாங்க முறைகளை வெளியிட்டார். அவர் சிகித்ஸா சாஸ்திரத்தையே—முக்கியமாக இரஸ-மூலிகா முறைகளைப்—புதுப்பித்து உலகத்துக்கு உபகரித்ததால் அவருடைய பெயரைக் கொண்டே தமிழ்நாட்டில் ஏற்பட்ட சிகித்ஸா கிரந்தங்கள் வாகட நூல்கள் என்றும் வழங்கப்படுகின்றன.[1] வாக்படர் விவரித்துள்ள இரஸசாஸ்திரஸம்பந்தமான பரிபாஷைகளின் பெரிய வரிசைகளைப் படிப்பவர், தமிழில் அவ்வித இரஸ வைத்தியநூல் ஏதும் கிடையாதென்பதையும், பண்டைக் காலத்தில் இரஸ சாஸ்திரம் ஸம்ஸ்கருதத்தில் மிகவும் மேன்மையடைந்திருந்ததென்பதையும் உணருவர் என்பது உண்மை. வாக்படர் வைத்திய சாஸ்திரத்தில் மிகப் பெருமை வாய்ந்தவராயிருந்ததோடு, இதரசாஸ்திரங்களிலும் அவர் வல்லவராயிருந்ததாகத் தெரிகிறது. அவர் எழுதியுள்ள வைத்திய நூல்களிற் பல பாகங்கள், சாஸ்திர விஷயங்களை அழகிய காவ்யங்களாகச் செய்தது போலவே இரஸிகரான வைத்தியர்களுக்குப் புலப்படும். வாக்குவன்மையில் பெரும் கியாதியடைந்ததற்கு முற்றிலும் ஏற்ற வகையில் அவருக்கு வாக்படன் என்னும் பெயர் வழங்கப்படுகிறது. சரக ஸுச்ருதர்களுக்குப் பிறகு வைத்திய சாஸ்திரத்திற்குப் பிரமாணபுருஷனாகக் கருதப்படுபவர் இவ் வாக்படரே. முற்காலத்தில் வெவ்வேறு ஆசிரியர்கள் இயற்றிய பலவேறு வைத்தியக் கிரந்தங்களில் சிதறிக் கிடந்த சிறந்த விஷயங்களைத் தொகுத்துச் சீர்திருத்தி, அவசியமான அகில அம்சங்களும் அடங்கிய ஆயுர்வேத நூல்களையும், அதேவிதமாகச் சிறந்த இரஸக் கிரந்தத்தையும் இயற்றிய வாக்படனைச் சரக-ஸுச்ருதாதிகளினும் உயர்வாக உரைத்திடும் வித்வான்களும் உளர். அது காரணம் பற்றியே நாம் முன்பு சரகாதிக் கிரந்தங்கள் இருக்கையில் வாக்படருடைய அஷ்டாங்க ஹ்ருதயத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டோம். அக்காரணத்தினாலேயே, வேறு பல இரஸக் கிரந்தங்கள் வடமொழியில் இருக்க, வாக்படருடைய அரிய இரஸவைத்தியநூலான இக்கிரந்தத்தையும் இங்ஙனம் மொழி பெயர்த்துப் பிரசுரம் செய்யலானோம்.

மொழி பெயர்ப்பு முறை.

அஷ்டாங்கஹ்ருதயாதி ஸம்ஸ்கருதக் கிரந்தங்களை மொழி பெயர்த்த முறையையே இதிலும் அநுஸரித்திருக்கிறோம். ஆனால்

1. வாக்படரை ஆந்திரதேசத்திலும் வேறு இடங்களிலும் பாஹடன் என்றும் வழங்குவதோடு, அவர் இயற்றிய நூலும் பாஹடம் என்றே மொழியப்பட்டு வந்ததால், பிற்காலத்திலேற்பட்ட ஔஷத முறை ஸம்பந்தமான வைத்தியநூல்களும் தமிழரால் வாகடம் (Pharmacopœia) என்னும் பெயரால் வழங்க நேரிட்டன.

முதல் அத்தியாயத்தில் ஹிமாலயவர்ணனையிலும், மூன்றும் அத்தியாயத்தில் கந்தக உற்பத்தி வர்ணனையிலும், வேறு இரண்டோரிடத்திலும் வைத்தியசாஸ்திரத்திற்குச் சமபந்தமில்லாத சில வர்ணனைகளின் அம்சம் இம்மொழி பெயர்ப்பில் சேர்க்கப்படவில்லை. நாம் ஆநந்தாச்ர ஸம்ஸ்கிருதக் கிரந்தாவளியில் வெளியான இரஸரத்தின ஸமுச்சயத்தை முக்கியமாகவும், கல்கத்தாவிலும் பம்பாயிலும் வெளியான இரண்டு மூன்று வேறு பதிப்புகளைச் சிறிது உதவியாகவும் வைத்துக்கொண்டு இத்தமிழ் மொழி பெயர்ப்பை நிறைவேற்றினேம். சாஸ்த்ரீயமான பாரிபாஷிகச் சொற்களைத் தமிழிலும் (அவ்விதச் சொற்கள் தமிழில் கிடையாவாகையால்) அவ்வவ்வாறே எழுதி, அவ்வருஞ் சொற்களுக்கும், வேறு அரிய விஷயங்களுக்கும் விஸ்தாரமாக டிப்பணியும் எழுதியிருக்கின்றோம். ஒவ்வோர் அத்தியாயத்திலுமுள்ள விஷயங்களை ஏற்றவாறு பகுத்து, அவ்விதம் பகுக்கப்பட்ட பாகங்களுக்குப் பக்கங்களில் அவ்வவ்விஷயங்களைக் குறிப்பிடுபவையான தலையங்கங்களும் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விஷய அகராதிகள், அட்டவணை முதலியவைகளும் நாம் மற்ற நூல்களுக்குச் செய்தது போலவே இதற்கும்ஒழுங்குபட எழுதிச் சேர்த்திருக்கிறோம். இப்பொழுது வெளியிட்டுள்ளது இரஸரத்தின ஸமுச்சயத்தின் 'முதற்பாகம்'. இதில் இரஸ-லோஹ-தாதுப் பொருட்களின் பல வேறு வகுப்புகள், அவற்றின் குணபாடங்கள், அவற்றைச் சுத்தி-பஸ்ம-திராவக-ஸத்துவாதிகளாகச் செய்யும் அநேகம் அரிய முறைகள், அவற்றின் உபயோகக் கிரமங்கள், அம்முறைகளை நிறைவேற்றுவதற்கான மூஷைகள், யந்திரங்கள், கோஷ்டிகள் ஆகிய சாஸ்த்ரீய விஷயங்கள் பதினேர் அத்தியாயங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. நாம் முதலிற் கோரியபடி இரண்டாம் பாகத்தையும் தொடர்ந்து வெளியிட தற்காலம் நமக்கு இயலவில்லையென்பதைக் குறிப்பிட வருந்துகிறோம். மொழிபெயர்த்தல் முதலிய பெரும் சிரமத்தைப் பொது ஜனங்களின் கைம்மாறின்றி நாம் ஏற்றுக்கொண்டதோடு, அம்மொழிபெயர்ப்பை வெளியிடுவதற்கான பெருஞ் செலவையும் நாமே சுமரவேண்டியிருக்கின்றது. அவ்விதம் செய்தும் நூல்களை விலைக்காவது வாங்க முன்வரும் வைத்தியர்களும் அபிமானிகளும் அரிதாயிருப்பது வருந்தக்கூடிய விஷயமல்லவா? அத்துடன் பிராசீனமான அரிய சாஸ்திர விஷயங்களின் விருத்தியிற் கருத்தின்றி வீணிற் பொருமை பொதிந்த மனத்தினரான இக்காலத்திய தமிழ்நாட்டு வைத்தியர்களுக்கிடையே நாம் இவ்வளவு பெருங்காரியத்தைச் செய்து தமிழ்நாட்டுக்கு எம்மாலான ஊழியம் செய்வதை உவக்கும் உத்தமபுருஷர் சிலரேனும் உலகில் தோன்றக்கூடுமென்கிற ஓர் ஆற்றலே இச்செலவு பெருகிய வைத்தியப் பிரசுரத்தில் நமக்குத் தூண்டுதலாயிருந்தது.

மே. துரைஸ்வாமி ஐயங்கார்.

பொருளடக்கம்.

முதல் அத்தியாயம்.

(இரஸோத்பத்தி)

பக்கங்கள். 1—5

	பக்கம்.
கடவுள வழிபாடு	1
இருபத்தேழு ஸித்தர்கள்	,,
இந்நூலுக்கு ஆதாரமான ஆதி இரஸக்கிரந்தங்கள்	2
இந்நூலின் பெயரும் ஆசிரியரும்	,,
இந்நூலில் வழங்கப்படும் விஷயங்கள்	,,
இரஸத்தின் உற்பத்தியும் மஹிமையும்	,,
ஐந்துவித இரஸ பூஜைகள்	,,
ஐந்துவித ரஸங்கள்	3
இரஸத்தின் கஞ்சுகாதி தோஷங்கள்	4
இரஸத்திற்குப் பஞ்ச கதிகள்	,,
இரஸத்தை கிரஹித்தல்	5

இரண்டாம் அத்தியாயம்.

(மஹா ரஸங்கள்)

பக்கங்கள். 5—24

மஹாரஸங்கள் எட்டு	5
அப்ரகம்	,,
அப்ரகத்தின் பொது குணங்கள்	,,
அப்ரகத்தை யெடுக்க வேண்டிய ஸ்தலத்தின் ஆழம்	6
மாண்குவித அப்ரகங்களும் அவற்றின் குணகுணங்களும்	,,
அப்ரகத்தின் குணதோஷங்கள்	7
பரீக்ஷையென்னும் தோஷம்	,,
அப்ரக சுத்தி முறைகள்	,,
கஷ்யாரப்ரகம்	,,
அப்ரக பஸ்ம முறைகள்	8
அப்ரக வித்தார முறைகள்	,,
அப்ரக ஸத்வபாதந முறைகள்	,,
அப்ரகத்தை நயப்படுத்தல்	9
ஸத்வாப்ரக ரஸாயந முறைகள்	10
சந்த்ரிகையைப் போக்குதல்	,,
அப்ரகத்ருதி அஸாத்யம்	11
திவ்யாப்ரக குணங்கள்	,,
வைக்ராந்தம்	,,
வைக்ராந்த லக்ஷணம்	,,
வைக்ராந்தத்தின் பொது குணங்கள்	,,
வைக்ராந்தத்தின் தைவீக வரலாறு	12
வைக்ராந்தத்தைப் பற்றி வேறு சிலரது கொள்கை	,,
வைக்ராந்தத்தை கிரஹிக்கும் விதி	,,
வைக்ராந்த சுத்தி	,,
வைக்ராந்த பஸ்ம முறைகள்	,,
வைக்ராந்த ஸத்துவம்	13
வைக்ராந்த ரஸாயந முறையும் குணங்களும்	,,
மாக்ஷிகம்	,,
மாக்ஷிகத்தின் உற்பத்தி	,,
மாக்ஷிகத்தின் பேதமும் குணங்களும்	14
மாக்ஷிக சுத்தி	,,
மாக்ஷிக பஸ்மம்	,,
மாக்ஷிக ஸத்துவம்	15
மாக்ஷிக ஸத்துவ ரஸாயநமும் குணமும்	,,
மாக்ஷிகத்ருதி	16
விமலம்	,,
விமல பேதங்கள்	,,
விமலத்தின் உருவமும் குணமும்	,,
விமல சுத்தி	,,
விமல பஸ்மம்	,,
விமல ஸத்துவம்	,,
விமல ரஸாயநம்	17

	பக்கம்.
சிலாஜது	17
சிலாஜது பேதங்கள்	,,
சிலாஜது லக்ஷணம்	18
சிலாஜதுவின் பொதுகுணங்கள்	,,
சிலாஜது சுத்தி	,,
சிலாஜது பஸ்மம்	19
சிலாஜது ரஸாயநம்	,,
சிலாஜது ஸத்துவம்	,,
கர்ப்பூர சிலாஜது	,,
தாத்தம்	,,
தாத்தவுற்பத்தி முதலிய விசேஷம்	,,
அத்தத்தின் குணங்கள்	20
அத்த சுத்தி	,,
அத்த பஸ்மம்	,,
அத்த ஸத்துவம்	,,
அத்தஸத்துவமோதிரமும் அதன் உபயோகமும்	21
சபலம்	,,
சபல பேதங்களும் அவற்றின் தன்மைகளும்	,,
சபலத்தின் குணங்கள்	,,
சபல சுத்தியும் ஸத்துவபாதநமும்	22
இரஸகம்	,,
இரஸக பேதங்கள்	,,
இரஸகத்தின் குணங்கள்	,,
இரஸக சுத்தியும் இரஞ்ஜநமும்	23
இரஸக ஸத்துவபாதந முறை	,,
இரஸக பஸ்மமும் உபயோகமும்	24

மூன்றும் அத்தியாயம்.

(உபரஸங்களும் ஸாதாரண ரஸங்களும்.)

பக்கங்கள். 24—44

	பக்கம்.
எட்டு உபரஸங்கள்	24
கந்தகம்	25
கந்தக பேதங்கள்	,,
கந்தகத்தின் குணங்கள்	,,
கந்தக சுத்தி முறைகள்	26
சுத்த கந்தக ரஸாயநம்	,,
கந்தகத்திருதிகளும் அவற்றின் குணங்களும்	26
கந்தகமுபயோகிக்கையில் விலக்க வேண்டியவை	27
சில கந்தக யோகங்கள்	,,
கந்தக தைலம்	28
சுத்த கந்தக குணங்கள்	,,
கைரிகம்	,,
கைரிகம் இரண்டு வகை	,,
கைரிகங்களின் குணங்கள்	,,
கைரிக சுத்தி	29
கைரிக ஸத்துவம்	,,
காஸீஸம் - அன்னபேதி	,,
அன்னபேதியின் குணங்கள்	,,
காஸீஸ சுத்தி	,,
காஸீஸ ஸத்துவம்	,,
காஸீஸ ரஸாயநம்	30
தூவரி	,,
தூவரியின் பேதங்கள்	,,
தூவரியின் லக்ஷணங்கள்	,,
தூவரியின் பொதுகுணங்கள்	,,
தூவரியின் சுத்தி	31
தூவரியின் ஸத்துவம்	,,
தாளகம்	,,
தாளகத்தின் பொதுகுணங்கள்	,,
அசுத்த தாளகத்தின் பொதுகுணங்கள்	,,
தாளக சுத்தி முறைகள்	,,
தாளக பஸ்ம முறை	32
தாளக ஸத்துவ முறைகள்	,,
மநச்சிலை	33
மநச்சிலை மூன்று விதம்	,,
மநச்சிலையின் குணங்கள்	,,
மநச்சிலையின் சுத்தி முறைகள்	34
மநச்சிலை ஸத்துவ பாதந முறைகள்	,,
அஞ்ஜநங்கள்	,,
ஐந்துவித அஞ்ஜநங்கள்	,,
ஸௌவீராஞ்ஜநம்	,,
இரஸாஞ்ஜநம்	35
ஸ்ரோதோஞ்ஜநம்	,,
புஷ்பாஞ்ஜநம்	36
நீலாஞ்ஜநம்	,,

	பக்கம்.
அஞ்ஜநங்களின் சுத்தி	36
அஞ்ஜநங்களிலிருந்து ஸத்துவமெடுத்தல்	,,
ஸ்ரோதோஞ்ஜநத்திற்கு இரஸபந்தந குணம்	,,
கங்குஷ்டம்	37
கங்குஷ்ட பேதங்கள்	,,
கங்குஷ்ட குணங்கள்	,,
கங்குஷ்ட சுத்தி முதலியது	,,
கங்குஷ்டத்தை ஔஷதமாயுபயோகித்தல்	38
இரஸௌபதங்களின் பொதுவான சுத்திமுதலியது	,,
ஸாதாரண ரஸங்கள்	,,
ஸாதாரண ரஸங்கள் எட்டு	,,
கம்பில்லமும் அதன் குணங்களும்	,,
கௌரி பாஷாணம்	39
கௌரி பாஷண பேதங்கள்	,,
கௌரி பாஷாணத்தின் குணதிகள்	,,
நவஸாரம்	,,
நவஸார குணங்கள்	,,
வராடம்	40
வராடத்தின் குணம் முதலியன	,,
அக்னி ஜாரமும் அதன் குணதிகளும்	41
கிரிஸிந்தூரமும் அதன் குணதிகளும்	,,
ஹிங்குளம்	42
லிங்கம்	,,
ஹிங்குளத்தின் சுத்தி முதலியது	,,
லிங்கத்திலிருந்துரஸமிறக்குதல்	,,
ம்ருத்தாரச்ருங்கம்	43
மாதாரசிங்கு	,,
ஸாதாரண ரஸங்களின் சுத்திமுறை	,,
இராஜாவர்த்தம்	,,
இராஜாவர்த்தத்தின் சுத்தி முதலியது	44
இராஜாவர்த்த பஸ்மம் முதலியன	,,

நான்காம் அத்தியாயம்.

(இரத்தினங்கள்)

பக்கங்கள் 44—54.

	பக்கம்.
பொதுவான இரத்தினங்கள்	44
பஞ்ச ரத்தினங்கள்	,,
நவ ரத்தினங்கள்	,,
இரத்தினங்களின் பொது உபயோகங்கள்	45
மாணிக்கமும் அதன் குணதிகளும்	,,
நல் முத்து	,,
நல் முத்தின் குணகுணங்கள்	,,
பவளமும் அதன் குண குணங்களும்	46
மரகதமும் அதன் குண குணங்களும்	47
புஷ்பராகத்தின் குணகுணங்கள்	,,
வஜ்ரம் மூன்று விதம்	,,
வஜ்ரத்தின் உட்பிரிவுகள்	48
வஜ்ரத்தின் குணங்கள்	,,
இரத்தினங்களின் பொதுதோஷங்கள்	,,
வஜ்ர சுத்தி	49
வஜ்ர பஸ்ம முறைகள்	,,
வஜ்ர குளிகை	50
வஜ்ர பஸ்ம ரஸாயநம்	,,
நீல ரத்தினம் இருவகை	,,
நீலரத்தினத்தின் குண தோஷங்கள்	,,
நீலரத்தினத்தின் உபயோகங்கள்	,,
கோமேதகமும் அதன் குணதோஷங்களும்	51
கோமேதத்தின் உபயோகங்கள்	,,
வைடூர்யம்	,,
வைடூர்யத்தில் சிறந்ததும் தோஷமுள்ளதும்	,,
வைடூர்யத்தின் உபயோகங்கள்	52
நவரத்தினங்களின் சுத்தி முறைகள்	,,
இரத்தினத்ருதி—பொது	,,
மௌக்திக த்ருதி	53

	பக்கம்.
வஜ்ர த்ருதி	53
வைக்ராந்த த்ருதி	,,
த்ருதிகளைச் சேமித்து வைக்குமுறை	,,
இரத்தினங்களை அணிதலின் உபயோகம்	,,

ஐந்தாம் அத்தியாயம்.

(உலோஹங்கள்)

பக்கங்கள் 54—84.

உலோஹங்களின் ஜாதிகள்	54
ஸ்வர்ணம் - பொன்	,,
ஸ்வர்ணம் ஐந்து விதம்	,,
பொன் - வெள்ளிகளின் பொதுகுணங்கள்	55
பிராக்ருதாதி ஸ்வர்ணங்கள்	,,
பொன்னின் குணங்கள்	56
அசுத்த ஸ்வர்ணத்தால் உண்டாகும் தீமை	,,
ஸ்வர்ண சுத்தி முறை	,,
நான்கு வகையான உலோஹபஸ்ம முறைகள்	57
ஸ்வர்ண பஸ்ம முறைகள்	,,
ஸ்வர்ண த்ருதி	,,
ஸ்வர்ண பஸ்ம குணங்கள்	,,
இராஜதம்—வெள்ளி	58
மூன்றுவித வெள்ளிகள்	,,
சிறந்த வெள்ளியின் இலக்ஷணங்கள்	,,
வெள்ளியின் தோஷங்கள்எட்டு	,,
வெள்ளியின் பொதுகுணங்கள்	59
அசுத்த வெள்ளியாலுண்டாகும் தீர்க்குணங்கள்	,,
வெள்ளியின் சுத்தி முறைகள்	,,
இராஜத பஸ்ம முறைகள்	,,
இராஜதத்ருதி அல்லது வெள்ளித்திராவகம்	60
இராஜத ரஸாயநம்	,,
தாம்ரம்—செம்பு	,,
தாம்ரம் இரண்டுவிதம்	,,
தாம்ரத்தின் குணங்கள்	61
அசுத்த தாம்ரத்தாலுண்டாகும் தீங்குகள்	61
தாம்ர சுத்தி முறைகள்	,,
தாம்ர பஸ்ம முறைகள்	62
ஸோமநாத தாம்ரம்	,,
தாம்ர ரஸாயநம்	63
அயஸ்—அயம்	,,
லோஹம்	,,
முண்டலோஹம் மூன்று விதம்	,,
முண்டலோஹத்தின் குணங்கள்	64
அசுத்த லோஹத்திலுண்டாகும் தீங்குகள்	,,
தீக்ஷ்ணலோஹம் ஆறுவிதம்	,,
தீக்ஷ்ணலோஹத்தின் குணங்கள்	65
காந்தலோஹம் ஐந்துவிதம்	,,
காந்தம் நிரஹிக்கத்தகுந்த பூமி	66
காந்தலோஹத்தைப் பரீக்ஷிக்கும்முறைகள்	,,
காந்தத்தின் பொதுகுணங்கள்	67
காந்தத்திற்கு இரஸவிந்துவிற்கூறிய குணங்கள்	,,
உலோஹத்தின் சுத்திபஸ்மாதி முறைகள்	,,
உலோஹ சுத்திமாரணங்களைப்பற்றிய பொது விதிகள்	,,
லோஹசுத்தி முறைகள்	68
லோஹபஸ்ம முறைகள்	,,
திக்ஷ்ணத்ருதி முறைகள்	70
லோஹ ரஸாயநம்	,,
இராமராஜி முறைப்படி காந்த லோஹாதிகளின் சுத்தி பஸ்மாதிகள்	71
லோஹ சுத்யாதி முறைகளில் வேறு சிலவகைகள்	72
மண்டூரத்தின் சுத்திபஸ்மம் உபயோகம் முதலியன	,,
அசுத்த லோஹத்தின் தீர்க்குணங்களும் சுத்தலோஹத்தின் குணங்களும்	73
வங்கம்	73
வங்கம் இரண்டுவிதம்	,,
வங்கத்தின் பொதுகுணங்கள்	74
இருவங்கங்களுடையவும் சுத்திமுறை	,,
வங்கம் - நாகம் - வெண்கலம் - தாம்ரம் - இவற்றின் பொதுவான சுத்தி முறை	,,
வங்கபஸ்ம முறைகள்	,,
வங்க ரஸாயநம்	75
ஸீஸம்	,,
நாகம்-கருவங்கம்	,,
ஸீஸத்தின் லக்ஷணங்கள்	,,
ஸீஸத்தின் குணங்கள்	76
ஸீஸசுத்தி	,,
பிரஷ்டயந்திரம்	,,
ஸீஸபஸ்மமுறைகள்	,,
ஸீஸரஸாயநம்	77
பித்தளை	,,
பித்தளை இரண்டுவிதம்	,,
பித்தளைகளின் குணங்கள்	,,
பித்தளையிற் சிறந்ததும் இகழ்ந்ததும்	78
பித்தளையின் சுத்தி முறை	,,
பித்தளை பஸ்மம்	,,
பித்தளை ரஸாயநம்	,,
வெண்கலம்	79
காம்ஸ்யம்-கோஷம்	,,
வெண்கலம் கலப்புலோஹம்	,,
வெண்கலத்திற் சிறந்ததும் இகழ்ந்ததும்	,,
வெண்கலத்தின் குணங்கள்	,,
காம்ஸ்யத்தின் சுத்தியும் பஸ்ம முறைகளும	,,
மிச்சலோஹம்	80
மிச்சலோஹத்தின்குணங்கள்	,,
மிச்சலோஹ சுத்தியும் பஸ்மமும்	,,
மிச்ரலோஹ-பாஷாணங்கள் பஸ்மமான பிறகே இரஸமுறைக்கு உபயோகம்	,,
பூநாகஸத்துவம்	81
இரஸ-வஜ்ரங்களில் பூநாகஸத்துவத்தின் உபயோகம்	81
பூநாகஸத்துவமெடுக்கும் முறைகள்	,,
பூநாகஸத்துவ அங்குலீயகமும் அதன் குணங்களும்	82
தைல பாதந முறை	83
அங்கோல பீஜதைலம்	,,
பலவேறு சாக்குகளிலிருந்து தைலம் இறக்கு முறைகள்.	,,

ஆறும் அத்தியாயம்.

(சிவ்யோபரயநம்)

பக்கங்கள் 84—91.

இரஸசாஸ்திரப் பிரகடநத்திற்கு முகாந்தரம்	84
இரஸசாஸ்திர குருவின் இலக்ஷணங்கள்	,,
இரஸ சாஸ்திரம் பயிலும் மாணாக்கனது இலக்ஷணதிகள்	85
இரஸபாகங்களில் ஸஹாயகர்கள்	,,
இரஸவித்தையில் வித்திபெறவியலாதவர்	,,
இரஸசாலையின் அமைப்பு	,,
இரஸ லிங்கமும் அதன் பூஜை முறைகளும்	86
அகோர மந்திரம்	87
இரஸசாலையில் இரஸாதிகளை வைக்கும் முறை	88
இரஸசக்திகள்	,,
உபரஸங்கள்	,,
மஹாரஸங்கள்	,,
அஷ்டலோஹங்கள்	89
இரஸகர்மத்தில் உதவும் கருவி முதலியன	,,
இருபத்தேழு வித்தர்கள்	90
இரஸவித்தி பெறுவதற்கான யோக்யதைகள்	91
இரஸசாஸ்திரோபதேசத்திற்குப் பாத்திரமானவர்கள்	,,

ஏழாம் அத்தியாயம்.

(இரஸ சாலே)

பக்கங்கள் 92—96.

இரஸ சாலே அமைக்கப்பட வேண்டிய வகை 92
இரஸ சாலேயில் எதெது எவ் வெவ்விடத்தில் அமைக்கப் படவேண்டுமென்பது ,,
இரஸ சாலேயில் இருக்க வேண்டிய வஸ்துக்கள் 93
மூன்றுவித சல்லடைகள் ,,
மூன்றுவித ஔஷதங்கள் முதலியன 94
கரி முதலியன ,,
குப்பிகள் - கிண்ணங்கள் முதலியன ,,
இரஸ சாலேக்கு வைத்தியர்கள் - பரிசாரகர்கள் முதலானேர் ,,
அம்ருதஹஸ்தன் 95
தக்ஷத்தஹஸ்தன் ,,
நிதி ஸாதகம் ,,
பலி ஸாதகம் ,,
இரஸாயநம் ,,
தாது வாதம் ,,
ஔஷதிக் கிரஹணம் ,,
இரஸ வீர்த்தியும் பலனும் 96

எட்டாம் அத்தியாயம்.

(இரஸ பரிபாஷை)

பக்கங்கள் 96—110.

இரஸ பாஷை - முகவுரை 96
தன்வந்தரி பாகம் ,,
ருத்ரபாகம் ,,
கஜ்ஜலி 97
இரஸபங்கம் ,,
பிஷ்டி ,,
பாதந பிஷ்டி ,,
ஹோம க்ருஷ்டி ,,
தாம க்ருஷ்டி ,,
வரலோஹம் 98
ஹோம ரக்தி ,,
தாம ரக்தி ,,
சந்திர தளம் ,,
அக்னி தளம் 98
சுல்பகாகம் ,,
பிஞ்ஜரி 99
சந்திரார்க்கம் ,,
நிர்வாபணம் ,,
வாரிசரம் ,,
அபுநர்ப்பவம் 100
ஊநமம் ,,
நிருத்தம் ,,
பீஜம் அல்லது உத்தாரணம் ,,
தாடநம் ,,
தான்யாப்ரகம் 101
ஸத்வபம் ,,
ஏககோலீஸகம் ,,
திராவணதி வேலைகளுக் குரிய விதிகள் ,,
ஹிங்குளாக்ருஷ்டம் ,,
கோஷாக்ருஷ்டம் ,,
வராகம் 102
உத்தாபநா ,,
டாளநம் ,,
நாகசபலம் ,,
வங்கசபலம் ,,
தௌதம் ,,
த்வந்த்வாநம் ,,
பஞ்ஜரி 103
சுல்லகா ,,
பதங்கீராகம் ,,
ஆவாபம் ,,
அபிஷேகம் ,,
நிர்வாபம் ,,
ஆவாபாதிகளுக்கான விதி ,,
சுத்தாவர்த்தம் ,,
பீஜாவர்த்தம் 104
ஸ்வாங்க சீதம் ,,
பஹிச் சீதம் ,,
ஸ்வேதநம் ,,
மர்த்தநம் ,,
மூர்ச்சநம் ,,
உத்தாபநம் 105
நிஷ்ட பிஷ்டி ,,
பாதநம் ,,
சோதநம் ,,

நியமநம் 105
தீபநம் 106
கிராஸ மாகம் ,,
ஜாரணத்ரயம் ,,
ஜாரணத்வயம் ,,
இராக்ஷஸ முகரணம் 107
சாரணை ,,
கர்ப்பத்ருதி ,,
பாஷ்யத்ருதி ,,
த்ருதி லக்ஷணம் ,,
ஜாரணை ,,
பிடம் 108
இரஞ்ஜநம் ,,
ஸாரணை ,,
வேத முறைகள் 109
உத்காடநம் ,,
ஸ்வேதநம் 110
ஸந்நியாஸம் ,,
ஸ்வேதந ஸந்நியாஸங் களின் பயன் ,,
இரஸ பரிபாஷை முடிவுரை ,,

ஒன்பதாம் அத்தியாயம்.

(இயந்திரங்கள்.)

பக்கங்கள் 111—121.

இயந்திரங்களின் முகவுரை 111
டோளா யந்திரம் ,,
ஸ்வேதநீ யந்திரம் ,,
அதஃபாதநயந்திரம் 112
ஊர்த்வபாதநயந்திரம் ,,
தீபிகாயந்திரம் 113
டேகீயந்திரம் ,,
ஜாரணயந்திரம் (முதல்) ,,
ஜாரணயந்திரம் (இரண்டாவது) ,,
கர்சபயந்திரம் 114
விர்யாதாரயந்திரம் ,,
பிரமாநலயந்திரம் 115
கர்ப்பயந்திரம் ,,
தூமஸ்பாதயந்திரம் ,,
பாதுகாயந்திரங்கள் 116
திரிவேணயந்திரம் ,,
நாளிகாயந்திரம் ,,
வாலுகாயந்திரம் ,,

பத்தாம் அத்தியாயம்.

(மூஷை முதலியன)

பக்கங்கள் 122—135

மூஷைகள் 122
மூஷையின் விவரணம் ,,
மூஷையின் ஸந்திபந்தநம் ,,
மூஷைக்கான ம்ருத்திகை முதலியன ,,
வஜ்ரமூஷை ,,
யோக மூஷை 123
வஜ்ரத்ராவண மூஷை ,,
கார மூஷை ,,
வர மூஷை 124
வர்ண மூஷை ,,
ரூப்ய மூஷை ,,
பிட மூஷை ,,
வஜ்ரத்ராவண மூஷை (இரண்டாவது) ,,
மூஷாப்யாயநம் 125
வருந்தாக மூஷை ,,
கோஸ்தந மூஷை ,,
மல்ல மூஷை ,,
பூதரயந்திரம் 117
புடயந்திரம் ,,
கோஷ்டியந்திரம் ,,
திர்யக் பாதநயந்திரம் ,,
பாலிகா யந்திரம் 118
கட யந்திரம் ,,
இஷ்டகா யந்திரம் ,,
ஹிங்குளாக்ருஷ்டி வித்யாதரயந்திரம் ,,
டமருகயந்திரம் 119
நாபி யந்திரம் ,,
ஜல ம்ருத்திகை ,,
அக்னி ம்ருத்திகை ,,
கிரஸ்த யந்திரம் ,,
ஸ்த்தாலீ யந்திரம் ,,
தூப யந்திரம் 120
கந்தக யந்திரம் ,,
கல்வங்கள் ,,
மூன்றுவித கல்வங்கள் 121
லோஹ கல்வம் ,,

	பக்கம்.
பக்வ மூலை	125
கோள மூலை	126
மஹா மூலை	,,
மஞ்ஜிஷ்ட மூலை	,,
மூஸல மூலை	,,
கோஷ்டிகள்	127
கோஷ்டிகளின் பொது உபயோகம்	,,
அங்காரகோஷ்டி	,,
பாதாள கோஷ்டி	,,
ஸத்வபாதந கோஷ்டி	,,
காரகோஷ்டி	128
வங்கநாளம்	,,
கோஷ்டியின் பொதுலக்ஷணம்	,,
புடங்கள்	,,
புடமிடுவதாலுண்டாகும் பலன்	,,
மஹா புடம்	129
கஜபுடம்	,,
வராஹபுடம்	,,
குக்குடபுடம்	130
கபோதபுடம்	,,
கோவரம்	,,
கோவரபுடம்	,,
பாண்ட புடம்	,,
ம்ருத்பாண்டபுடம்	,,
வாலுகாபுடம்	131
பூதரபுடம்	,,
லாவகபுடம்	,,
புடங்களை நிர்ணயிப்பதில் பொதுவிதி	,,
வறட்டியின் பெயர்கள்	,,
ஔஷதாதிவர்க்கங்கள்	,,
அக்ஷட லோஹங்கள்	,,
ஆறு லவணங்கள்	,,
க்ஷாரத்ரயம்	132
க்ஷாரபஞ்சகம்	,,
மதுரத்ரயம்	,,
தைலவர்க்கச் சரக்குகள்	,,
வஸாவர்க்கம்	,,
மூத்ரிவர்க்கம்	,,
பஞ்ச மாஹிஷம்	,,
பஞ்ச சாகலம்	,,
அம்லவர்க்கம்	133
பஞ்சாம்லம்	133
பஞ்ச ம்ருத்திகைகள்	,,
விஷவர்க்கம்	,,
உபவிஷங்கள்	134
க்ஷீரவர்க்கம்	,,
மலவர்க்கம்	,,
ரக்தவர்க்கம்	,,
பீதவர்க்கம்	,,
ச்வேதவர்க்கம்	,,
க்ருஷ்ணவர்க்கம்	135
ரக்தாதிவர்க்கங்களின் உபயோகம்	,,
சோதநீய வர்க்கம்	,,
லோஹ காடிந்ய நாசி வர்க்கம்	,,
த்ராவண வர்க்கம்	,,
க்ஷாராதிகளின் பொது உபயோகம்	,,

பதிநேராம் அத்தியாயம்.

(ரஸ ஸம்ஸ்காராதிகள்)

பக்கங்கள் 136—152.

மாநபரிபாஷை	136
நிறைகள் அல்லது அளவுகள்	,,
ரஸ ஸம்ஸ்கார முறைகள் பதிநெண்வகை	138
ரஸத்திற்குப் பல வேறு நிலைமைகளிலுள்ள குணங்கள்	,,
ரஸத்தின் பன்னிரண்டு தோஷங்கள்	,,
ரஸஸம்ஸ்கார முறைகள்	139
ஸம்ஸ்காரத்திற்குத் தேவையான ரஸபரிமாணம்	,,
ஸ்வேதநம்	140
மர்த்தநம்	,,
மூர்ச்சநம்	,,
உத்தாரணம்	141
பாதநம்	,,
நிரோதநம்	142
நியமநம்	143
தீபநம்	,,
ரஸ முலிகாவர்க்கம்	144

	பக்கம்.
ரஸ பந்தந முறைகள்	144
இருபத்தைந்து வித ரஸ பந்தநங்கள்	,,
ஹடபந்தம்	,,
ஆரோட பந்தம்	,,
ஆபாஸ பந்தம்	,,
க்ரியாஹீந பந்தம்	145
பிஷ்டிகா பந்தம்	,,
கூபாரபந்தம்	,,
கோடபந்தம்	146
போடபந்தம்	,,
கல்கபந்தம்	,,
கஜ்ஜலிபந்தம்	,,
ஜீவபந்தம்	,,
நிர்ஜீவபந்தம்	,,
நிர்பீஜபந்தம்	147
பீஜபந்தம்	,,
ச்ருங்கலாபந்தம்	,,
த்ருதிபந்தம்	,,
பாலபந்தம்	,,
குமாரபந்தம்	,,
தருணபந்தம்	148
வ்ருத்தபந்தம்	,,
மூர்த்திபந்தம்	,,
ஜலபந்தம்	,,
அக்நிபந்தம்	,,
மஹாபந்தம்	149
ஸுஸம்ஸ்க்ருதபந்தம்	,,
ஜலூகாபந்தம்	,,
ரஸபஸ்ம முறைகள்	150
ரஸௌஷதமுட்கொள்ளும் முறை	151
ரஸௌஷதங்களுக்குப் பத்தியமுறை	,,
ரஸபஸ்ம பரீக்ஷை	,,
ரஸகர்ப்பூர முறை	,,
ஸகாராதிகணங்கள்	152
ரஸஸௌஷதத்தாலுண்டாம் கோளாறுகளுக்குப் பரிஹாரங்கள்	,,
ரஸௌஷதத்தின் வீர்யத்தை விருத்திசெய்பவை	,,
ரஸஸிம்ஸ்கார முறைகள் (அநுபந்தம்)	153
பக்ம்—153—158	
அப்ரகக்ராஸமாகம்	,,
சாரணம்	154
கர்ப்பத்ருதி	,,
பாஷ்யத்ருதி	,,
ஜாரணம்	,,
ஸாரணம்	156
நிராமணம்	,,
வேதநம்	,,
ரஸ ஸேவநம்	167
ரஞ்ஜநம்	,,
விஷய அகாரதி	159—176
இந்நூலில் குறிக்கப்பட்டுள்ள நிரந்தங்களுடையவும் நிரந்தகரந்தகர்த்தாக்களுடையவும் பெயராகாதி	177—180

இரஸ ரத்தின ஸமுச்சயம்.

பூர்வ கண்டம்.

முதல் அத்தியாயம்.

இரஸோத்பத்தி.

மங்களத்திற்குக் காரணமான கலியெனக் கருதப்படுவதும், ஆனந்தப் பெருக்கினுல் தோன்றியதும், பேரொளி வீசுவதும், ஸித்தர் செய்யும் இரஸ ஸித்திகளுக்கு அமுதமெனக் கூடியதுமான எவரது கருணைகடாக்ஷமாகும் அம்ருதக்கடலால் பக்தர்களுடைய பிறப்பு இறப்பு மூப்பு விருப்பு முதலான எல்லாப்பிணிகளும்[1] கொடிப் பொழுதில் விலகிப் போகின்றனவோ, உலகத்திற்குப் பிரதான வைத்தியரான அப் பரம புருடனைப்[2] பணிவேனுக. 1.

கடவுள் வழி பாடு.

ஆதிமர்,[3] சந்திரஸேனர், லங்கேசர், விசாரதர், கபாலி, மத்தர், மாண்டவ்யர், பாஸ்கரர், சூரஸேனர், இரத்தின கோஷர்,[4] சம்பு, ஸாத்விகர், நரவாஹனர், இந்திரர், கோமுகர், கபிலர்,[5] வியாடி, நாகார்ஜுனர், ஸுராநந்தர், நாகபோதி, யசோதனர், கண்டர், கபாலிகர், பிரஹ்மா, கோவிந்தர், லம்பகர், ஹரி என்கிற இருபத்தேழு ஸித்தர்கள் இரஸஸித்தி யளித்தவராவர். 2—4½.

இருபத்தேழு ஸித்தர்கள்.

---

1. பிறப்பு இறப்பு முதலிய ஸஹஜ வியாதிகளும், விருப்பு வெறுப்பு (ராக-த்வேஷாதிகள்) முதலிய மானஸிகரோகங்களும் குறிக்கப் படுவதால் மற்றச் சாரீர வியாதிகள் தீருவதைப்பற்றி ஐயமில்லை யென்பது கருத்து.

2. இதனுல் ஸ்ரீமந்நாராயணன் குறிக்கப்படுவதாய் அறிக. அக் கருத்தைக் கொண்டே "வைத்யோ நாராயணோ ஹரி:" என்று ஆன் றோர் கூறுவர். ஸ்ரீமஹா விஷ்ணுவின் அபாரமூர்த்தியான ஸ்ரீதன்வந் தரியைக் குறிப்பிடுவதாகவும் கருதலாம். அல்லது கருணையே உரு வெடுத்து வந்ததாகச் சொல்லப்படும் பகவதவதாரங்களில் ஒருவராகிய புத்ததேவனைக் குறிப்பிடுவதாகக் கருதுவதும் பொருந்தும்.

3. இரஸவித்தியை முதலிற் கண்டறிந்தவராகையால் 'ஆதி மர்' என்றே அந்த ஸித்தர் வழங்கப்பட்டதாகத் தோன்றுகிறது. மஹேச்வரருக்கு ஆதிமன் என்று பெயர் வழங்கப்பட்டதாகவும், சிலர். ஆதிமர் என்றும் வேறுபாடம் வழங்குவதுண்டு.

4. இரத்தினகோசர் என்றும் பாடமுண்டு.

5. கபிலர் என்பதற்குப் பதிலாய் 'கம்பலி' என்கிற பாடமு முண்டு.

இரஸாங்குசர், பைரவர், நந்தி, ஸ்வச்சந்தபைரவர், மந்தர பைரவர், காக சண்டீச்வரர், வாமதேவர், ருச்யசருங்கர், க்ரியா தந்த்ர ஸமுச்சயி, இரஸேந்த்ர திலகயோகி, பாலுகி, மைதிலர், மஹாதேவர், நரேந்திரர், வாஸுதேவர்,[1] ஹரீச்வரர் ஆகிய இவர்களுடையவும், மற்றும் பலருடையவும் இரஸக் கிரந்தங்களை ஆராய்ந்தெடுத்து, சிகித்ஸா விஷயத்தில் முற்றிலு முபயோகமாயுள்ள இரஸவர்க்கங்களாலாகிய ஸித்தௌஷதமுறைகளைத் தொகுத்து விளக்குவதற்காக ஸிஹ்மகுப்த புத்திரரால்[2] இந்த இரஸ ரத்தின ஸமுச்சயம்[3] என்னும் நூல் இயற்றப் படுகிறது. 5–8½.

இந்நூலுக்கு ஆதாரமான ஆதி இரஸக் கிரந்தங்கள்.

இந்நூலின் பெயரும் ஆசிரியரும்.

இரஸங்கள், உபரஸங்கள், லோஹங்கள், அவற்றின் சுத்தி முதலியதற்கான யந்த்ரமுறைகள், சுத்தி முதலியதற்கான பலவேறு உபாயங்கள், ஸத்துவபாதம்-த்ருதிகள்-பஸ்மங்கள் ஆகிய முறைகளைப்பற்றிய விஷயங்கள்[4] இதில் விளங்கக் கூறப்படும். 9, 10.

இந்நூலில் வழங்கப்படும் விஷயங்கள்.

வடதிசையிற் பனிக்கு உறையிடமாக மிகப் பிரஸித்தமாய் அமைந்துள்ள, எல்லாப் பர்வதங்களுக்கும் அரசனெனக் கூடிய ஹிமாலயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானிடமிருந்து உலகத்தைக் காப்பதற்கென் றுற்பவித்தது மஹாரஸமரம். இரஸலிங்கம் செய்து ஒருவன் அதை பக்தியோடு போற்றி வந்தால், மூலைகளிலுள்ள லிங்கங்களைப் பூஜிப்பதாலான பலனை அவன் அடைவான். இரஸத்தை உண்பது, பரிஷிப்பது, தானம் செய்வது, தியானிப்பது, அர்ச்சிப்பது ஆகிய வகைகளில் இரஸ பூஜை ஐந்து விதமென்றும், அப்பூஜைகள் மஹாபாதகங்களையும் நிவர்த்திக்க வல்லவை யென்றும் கூறப்படுகிறது. முறைப்படி சுத்தி செய்து பஸ்

இரஸத்தின் உற்பத்தியும் மஹிமையும்.

ஐந்து வித இரஸ பூஜைகள்.

1. வாஸுதேவர் என்பதற்குப் பதிலாய் ஜாத்நாகர் என்றும் பாடமுண்டு.

2. ஆசார்ய வாக்படர் என்று பொருள்.

3. இரஸப் பிரதானமான ஔஷதமுறைகள், இரஸ-லோஹாதி கனிஜச் சரக்குகளின் சுத்திமாரணாதி முறைகள் ஆகியவற்றுள் வெகு சிரேஷ்டமான அம்சங்களே மாத்திரம் பொறுக்கித் திரட்டி யியற்றிய ஸங்கிரஹக் கிரந்தம் என்பது 'இரஸரத்தின ஸமுச்சயம்' என்பதன் கருத்து.

4. இரஸோபரஸாதிகளைப் பற்றியும், அவற்றின் சுத்தி–பஸ்மத்வ பாதநாதி க்ரமங்களையும்பற்றிய எல்லா விவரங்களையும் இனி வரும் அந்தந்த விஷயங்கள் அடங்கிய அத்தியாயங்களில் பார்க்க.

மாதி முறைகளிற் பக்குவம் செய்த இரஸத்தை ஏற்ற ரோகங்களில் பிணியாளிக்குக் கொடுப்பவன் அச்வமேதயாகாதிகளைச் செய்வதாலான பலனைப் பெறுவான். இரஸமானது தான் மூர்ச்சித்து நோயைப் போக்கும்; தான் பந்தஞ மடைந்து முத்தியளிக்கும்; ம்ருத்யுடைந்து அமரத்வத்தைக் கொடுக்கும்;[1] ஆகவே அவ்வித இரஸத்தினும் கருணை மேலிட்டவர் வேறெவர் உளர்? குருஹத்தி, கோஹத்தி, ப்ரஹ்மஹத்தி முதலிய ஹிம்ஸாகரமான மஹாபாபங்களைச் செய்வதன் பலனு முண்டாகும் க்ஷித்ரம் என்கிற நோயையும் போக்கக் கூடியதானுல் அவ்வித இரஸத்தினும் மேலான புனித வஸ்து வேறொன்று முண்டோ? ஈச்வரனிடமிருந்து கழுவி அக்னி முகத்தில் வீழ்ந்த அளவற்ற வீர்யமானது நூறு யோஜனை ஆழமும் விஸ்தீர்ணமுமுள்ள ஐந்து பிரதேசங்களில் ஆழ்ந்து வியாபித்தது. அதுமுதலாக அவ்வீர்யம் அப்பூமிகளின் குணங்களுக்கேற்றவாறு ஐந்து விதமான தன்மைகளைப் பெற்றன; அவை இரஸம், இரஸேந்திரம், ஸுதம், பாரதம், மிச்ரகம் என்பனவாம். அவற்றுள் (1) இரஸம் என்பது சென்னிறமானது; எவ்விததோஷக்கலப்பும் அதற்கு இராது; இரஸாயயநம் என்னும் விசேஷ குணமுள்ளது; அதனுலே தேவர்கள் நோயற்றவராகவும், மூப்பு-இறப்பில்லாதவராகவும் ஆயினர். (2) இரஸேந்திரம் என்பதும் தோஷம் நீங்கிய கலப்பற்ற சரக்காகவே இருக்கும்; அது ஒருவித கபில நிறமானது; ரூக்ஷமாகவும் அதிக நிர்மலமாகவும் இருக்கும்; நாகர்களென்னும் தேவஜாதிகள் அதை இரஸாயநமாக உட்கொண்டு முதுமையும் மரணமும் அற்றவராய்விட்டனர். அவ்விரு இரஸங்களையும் பிறருக்குக் கிடைக்காவண்ணம் தேவர்களும் நாகர்களும் பின்னர் மறைத்துப் போட்டனர். (3) ஸுதம் என்கிற இரஸம் சிறிது மஞ்சள் நிறமுள்ளதாய், பரிஷிப்பதற்கு ரூக்ஷமாயிருக்கும்; அது தோஷங்கலந்த சரக்கு; பதினெண்வகையான ஸம்ஸ்காரங்களால் பக்குவம் செய்யப்படுமானுல் இந்த ரஸம் தாரஹத்தை லோஹம்போல வன்மையுள்ளதாகச் செய்யும். (4) மற்றொரு ஆழ்ந்த பூமியில் தங்கியிருந்த இரஸம் வெண்மையானது; அது பாரதம் என வழங்கப்படுகிறது; அநேகவிதமான ஔஷதமுறைகளில் உபயோகிக்கப்படுவதும் பெரும்பாலான வியாதிகளையும் போக்கவல்லதும் இதுதான். (5) மயிற் றோகைக்குச் சமமான நிறங்களைப் பெற்ற இரஸம் மிச்ரகம் எனப்படுகிறது; முடிவும் 'அஷ்டாதச ஸம்ஸ்காரங்கள்' என்கிற பதினெட்டு விதமான சுத்திமுறைகளைக் கொண்டு பதன் செய்யப்படு

1. மூலிகை முதலியதால் கஞ்சுகமென்கிற லோஹாதி ஆவரணங்களை அல்லது கலப்புகளைப் போக்கி இரஸத்தைச் சுத்தப்படுத்தி வியாபிப்பது மூர்ச்சநம் எனப்படுகிறது. பந்தஞ மென்பது கட்டுவது. மருத்யு என்றால் பஸ்மமாக்குவது.

மாஞல் பலவிதமான லித்திகளைத் தரும். (1) எல்லா தாதுக்களையும் கிரஹிக்கும் தன்மையுடையதாகையால் ரஸம் என்று கூறப்படுகிறது; அல்லது கிழத்தனம், பிணி, மரணம் இவற்றைப் போக்குவதற்கு உபயோகமாகிறதென்கிற காரணத்தினால் ரஸம் எனப்படுகிறது. (2) இரஸங்கள், உபரஸங்கள் இவற்றிற்கு அரசன் எனக்கூடியதா யிருப்பதால் இரஸேந்திரம் என்று வழங்கப்படுகிறது. (3) தேஹலித்தியையும், லோஹலித்தியையும் உண்டுபண்ணுவதால் [1] ஸூதம் எனப்படுகிறது. (4)) ரோகங்களாகும் ஆழ்கடலில் அமிழ்பவரைக் கரைசேர்ப்பதால் [2] பாரதம் என்று பெயர் வந்தது. (5) ஸகலதாதுக்களுக்குமுள்ள தேஜோரூபமான குணங்கள் எதில் மிச்ரமா யிருக்கிறதோ அந்த இரஸம், மிச்ரகம் எனப்படுகிறது; அது பலவிதமான பலன்களைத் தரும். 11—81½.

மானிடருக்கு இயல்பான மிருத்யுவையும் பிணிகளையும் பரிஹரிக்கும் இயல்புள்ள இத்தகைய இரஸத்தின் பிரபாவத்தினால் மனிதரும் தேவர்களுக்குக் கொப்பான வலிமையையும் ஆயுளையும் பெருவதைப் பார்த்து, தேவேந்திரன் கவலையுற்று ஈசனைப் பிரார்த்திக்க, அப்பால் கஞ்சுகாதி தோஷங்கள். தோஷங்களை அதில் சேர்ப்பித்தார்; அதுமுதலாக இரஸமானது சுத்தி முதலிய ஸம்ஸ்காரங்களை முறைப்படி நிறைவேற்றினு லன்றி சிறிதும் பயன் படுவதில்லை. (1) ஜல ரூபமாகப் பெருகுவதால் ஜலகதியையும், (2) அன்னம் போன்று அசைவதாலே ஹம்ஸகதியையும், (3) மலின வஸ்துக்களுடன் சேர்ந்து மாலிந்யமடைவதால் மலகதியையும், (4) அக்னிஸம்பந்தத்தினால் புகை யுருவங் கொள்வதால் தூமகதியையும் பெறுவது இரஸத்திற்கு இயல்பு. (5) ஜீவகதி யென்பது இரஸத்தின் ஓர் அபூர்வமான சக்தி; அது தேவர்களுக்கே புலனாகும்; அண்டத்திலிருந்து ஓர் ஜீவன் கிளம்புவதுபோல இரஸத்தில் இச்சக்தி தோன்றுகிறது. அவ்விசேஷ குணம் ஜீவராசிகளை உஜ்ஜீவிக்கச் செய்கிறது; ஆகவே இரஸம் ஜீவன் எனப்படுகிறது; இவற்றுள் முதல் நான்கு கதிகளும் பார்க்கக் கூடியவை; ஐந்தாவது கதி காணக் கூடாதது; அதன் ஐந்தாம் கதி மந்திரம் முதலியவற்றுலே தகையக் கூடியதாம். இரஸத்தின் கதிகள் இவ்விதம் பலவாறு பேதமடைவதால் அதை நன்றாக ஸம்ஸ்கரிப்பது அரிதான காரியம்; மிகத் திறமை வாய்ந்தவர்களே அதை ஸம்ஸ்கரிக்க வல்லவர். (1) பூமியை விட்டுச் சில விடங்களிலிருந்து இரஸத்தை எடுப்பார்கள். (2) தரத தேசத்தில் [1] அக்னி முகத்திலிருந்து குருத்தன்மையினால் சிதறி வீழ்ந்த இரஸம் பூமியில் மண்ணோடு மறைந்திருக்கும்; அந்த மிருத்திகையை [2] அவ்வப் பிரதேசங்களில் வஸிப்பவர் கிரஹித்து பாதகயந்திரத்தில் [3] போட்டு, அதிலிருந்தும் இரஸத்தை கிரஹிக்கிறார்கள். 82—90.

இரஸத்தை கிரஹித்தல்

1. ஸூதேத—(தேஹ லோஹ லித்திகளை) உண்டுபண்ணுகிறது என்று 'ஸூதம்' எனப் பெயர் வந்தது.

2. பாரஸ்ய தாகாத் (வியாதிகளின் கரை சேர்க்குமியல்பு கடையதால்) 'பாரதம்' என்று வழங்கப்படுகிறது

இரண்டாம் அத்தியாயம்.

மஹா ரஸங்கள்.

அப்ரகம், வைக்ராந்தம், மாக்ஷிகம், விமலம், சிலாஜது, ஸஸ்யகம், சபலம், ரஸகம் என்பவை எட்டு மஹா ரஸங்கள். இவற்றைப் பகுத்தறிந்து கிரஹித்து வைத்துகொள்ளவும். [4] 1.

மஹா ரஸங்கள் எட்டு.

அப்ரகம்.

அப்ரகம் கௌரியின் இரஜோதாது வெனப்படுகிறது. அமிருதத்தைப்போன்று மிக சிலாக்யமான குணந் தரத் தக்கது. வாத-பித்தக் கோளாறுகளையும், கூஷ்ய ரோகத்தையும் ஹரிக்கும். அறிவைத் தூண்டி விருத்தி செய்யும். பொதுவாகப் பெரும்பான்மையான முக்கிய ரோகங்களைத் தணிக்கும். விருஷ்யம், ஆயுஷ்யம் என்கிற குணங்களிற் சிறந்தது. பல்யம், ருசிகரம், [5] கபஹரம், தீபநம் என்னும் குணங்களை யுடையது. ஸ்திக்தம், சீதவீர்யம் என்னும் தன்மைகளைப பெற்றது. மேலும் அந்தந்த பிரயோக முறைகளுக்கேற்ப ஸகல ரோகங்களையும் நிவர்த்தி செய்யவல்லது. பாரதத்தைக் கட்டுவதற்குமுப யோகமானது. 2.

அப்ரகத்தின் பிரதான குணங்கள்.

1. தரத தேசம்—ஹிமாலயத்திற்கு அருகில் காச்மீரத்தைச் சார்ந்த சில பூபிரதேசம் தரதம் என்று வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. அல்லது தரதம் என்னும் மிருத்திகையைப் பெற்ற பிரதேசம் என்றும் கூறுவர்.

2. ஹிங்குளம் என்கிற இரஸம் நிரம்பிய மிருத்திகை.

3. பாதக யந்திரம்—ஊர்த்வபாதகம், திர்யக்பாதகம் என்கிற யந்திரங்கள். (யந்திரங்களின் விவரணம் பிறகு ஒன்பதாம் அத்தியாயத்தில் பார்க்க.)

4. இந்த மஹாரஸங்களின் விவரணம் கிரமமாக இனி வரும். [அப்ரகம், விமலம், சிலாஜது, சபலம், இரஸகம், தரதம் (ஹிங்குளம்), வைக்ராந்தம், அப்ரகம் ஆகியவை மஹாரஸங்கள் என்று இரஸார்ணவம் கூறுகிறது.]

5. வருஷ்யம்—ஆண்மையை விருத்தி செய்வது. ஆயுஷ்யம்—ஆயுளை விருத்தி செய்வது. பல்யம்—தேஹவன்மையை விருத்தி செய்வது. ருசிகரம்—அரோசகத்தைப் போக்கி நாக்கில் சுவையை விருத்தி செய்வது.

ஓர் இராஜஹஸ்தம் [1] அளவான ஆழத்திற்குக் கீழே கனியிலி
அப்ரகத்தை யெடுக்கவேண்டிய ஸ்தலத்தின் ஆழம்.
ருந்து யாதேனும் அப்ரகம் வெட்டி யெடுக்கப்படுகிறதேனும் அஃது சாஸ்திரத்திற் கூறிய பலனைத் தரும்; மற்றது ஸத்துவ ஹீனமாகவும் பயனற்றதாகவும் இருக்கும். 3.

நான்கு விதமான அப்ரகங்களும் அவற்றின் குண குணங்களும்.
அப்ரகமானது பிநாகம், நாகம், மண்டூகம், வஜ்ரம் என்று நான்கு வகைப்படும். அவற்றுள் ஒவ்வொன்றும் வெளுப்பு, சிவப்பு, பசுமை, கறுப்பு என்று நீண்டும் நாது வகைப்படும். அவற்றுள் (1) பிநாகம் என்னும் அப்ரகத்தை அக்னியிற் காய்ச்சினால் செதில் செதிளாகப் பலவாறு பிரியும்; அஃது உட்கொள்ளப்படுமானால் மலங்களைக் கட்டி [2] மனித னுயிரை மாய்க்கும். (2) நாகம் என்னும் அப்ரகத்தை நெருப்பிலிட பாம்பு சீறுவதுபோலச் சப்திக்கும்; அதையுட்கொண்டால் மண்டல குஷ்டம் உண்டாகும். (3) மண்டூகம் என்னும் அப்ரகத்தை அக்னியிலிட்டு ஊதினால் அது தவளையைப்போல் குதித்து விழும்; அது புஜிக்கப்படுமானால் சஸ்திரத்தினலன்றி வேறு வகையில் நிவர்த்திக்கக் கூடாத அச்மரீ ரோகத்தையுண்டாக்குகிறது. (4) வஜ்ராப்ரகமானது அக்னியிற் காய்ச்சப்படுமானால், அதிலடங்கிய அழுக்குகள் நீங்கி எவ்வித விகாரமுமடையாமலிருக்கும். இது தேஹத்திற்கு இரஸாயநமாகவும், லோஹங்களைப் பக்குவம் செய்வதற்கும், எல்லாப் பிணிகளைத் தீர்ப்பதற்கும் உபயோகமானது. மேலும் நிறத்திலும் நான்கு வகைப்பட்ட அப்ரகங்களுள் ச்வேதாப்ரகமானது வெண்மையான முறைகளிலும், ரக்தாப்ரகம் சிவப்பு நிறமுள்ள முறைகளிலும், பீதாப்ரகம் பசுமையான முறைகளிலும் சிறப்பாக உபயோகமாகின்றன. [3] இந்த நான்கு நிறமுள்ள அப்ரகங்கள் யாவும் இரஸாயநமாக உபயோகமாவதாய் சாஸ்திரத்திற் கூறப்படினும், கிருஷ்ணப்ரகம் என்னும் கருநிறமான அப்ரகமே அவ்விஷயத்தில் கோடி மடங்கு குணத்திற் சிறந்ததாம். 4—11.

1. 'இராஜஹஸ்தம்' என்பது கீண்ட $1\frac{1}{4}$ கை கொண்டது (ஸபாதகர:) என்று ஆயுர்வேதப்ரகாசத்திலும், 36 அங்குலங் கொண்ட அளவென்று பாரத ஸம்ஹிதையிலும் கூறப்படுகிறது.

2. மலங்கள் என்பதால் ஜலம், மலம், வியர்வை முதலிய கழிவுகள் குறிக்கப்படுகின்றன.

3. வெள்ளி, வித்தாராதி சிவப்பு ஔஷத தாதுக்கள், மஞ்சளான பொன்வேலை ஆகிய முறைகளில் பீதாப்ரகம் முதலியவை முறையே பிரயோகிக்கப் படுவதாகக் கருத்து. [சிவப்பும் பசுமையுமான இரண்டு அப்ரகங்களும் ஸ்வர்ணம் செய் முறையிலும், கறுப்பான அப்ரகம் பொன் செய்முறை வெள்ளி செய் முறையிலும் உபயோகப்படுகின்றன. கிட்டரூபமான அப்ரகத்தை எதற்கும் உபயோகிக்கக் கூடாது என்று இரஸார்ணவம் கூறுகிறது.]

அப்ரகத்தின் குண தோஷங்கள்.
(1) ஸ்நிக்தமாகவும், [1] அகன்ற தளங்களையுடையதாகவும், இயற்கையான சிறந்த நிறமுள்ளதாகவும், பாரமுள்ளதாகவும், மெளிதிற் பிரிக்கக்கூடிய செதிள்களுடையதுமான அப்ரகம் சிறந்ததாகும். (2) சந்திரிகைகளுள்ளதும், [2] சிட்டங்கட்டியதுமான அப்ரகம் சிறந்ததல்ல; அவ்விதமான அப்ரகத்தை இரஸம் கிரஹிப்பதில்லை. [3] இரஸக்ரியைக்குக்கேற்ற அப்ரகமே லோஹ முறைகளிலும் இரஸாயந முறையிலும் உபயோகிக்கக் கூடியதாம். சந்திரிகை யொழிந்ததும், மாரணம் செய்யப்பட்டதுமான [4] அப்ரகமே எல்லா வியாதிகளிலும் உபயோகிக்கத் தகுந்தது. சந்திரிகையோடு கூடிய அப்ரகம் உட்கொள்ளப்படுமானால் மேஹ ரோகத்தையும், அக்னிமாந்த்யத்தையும் உண்டு பண்ணும். பத்ராப்ரகம் [5] இரஸாயநமாகுமென்று கூறுபவர் காலகூடவிஷம் உயிரளிக்கவல்லதென்பார்கள். ஆகவே ஸத்துவமெடுப்பதற்கும், உட்கொள்ளும் ஔஷதத்திற்கும் சுத்தி செய்த அப்ரகத்தையே உபயோகிக்கவேண்டும்; அன்றேல் தூக்குணை முண்டுபண்ணி பல கோளாறுகளைக் காட்டுவது திண்ணம். 12—16.

சந்திரிகை யென்னும் தோஷம்.

அப்ரக சுத்தி முறைகள்.
(1) அப்ரகத்தை ஏழுமுறை நெருப்பில் காய்ச்சிக் காய்ச்சிக் காஞ்சிகமென்னும் காடியில் போட்டு எடுக்கவும்; இப்படிச்செய்ய அது சுத்தமாகும். (2) அவ்விதமே பசுமூத்திரத்திலாவது, (3) த்ரிபலா கஷாயத்திலாவது, (4) முக்கியமாகப் பாலிலாவது ஏழு முறை தோய்த்து எடுத்தாலும் தோஷம் நீங்கியதாகும். 17, $17\frac{1}{2}$.

அப்ரகபர்பம்.
சுத்திசெய்து, பிறகு சூர்ணமாகச் செய்யப்பட்ட அப்ரகத்தை ஒரு வஸ்திரத்தில் சேர்த்து, அதைக் காடியில் வைத்துப் பிசைய, அவ்வஸ்திரத்தின் கண்ணறைகளினூடே காடியில் வந்து வழவழப்பாகப் படியும்

1. ஸ்நிக்தம்—எண்ணெய்ப்பசை அல்லது அது போன்ற கண்ணெய்மை.

2. சந்திரிகை—அப்ரகத்திற்கு இயல்பாயுள்ள கண்ணாடியைப் போன்ற மினுமினுக்கும் தன்மை

3. கிரஹித்தல்—தன்னுள் ஐக்யப்படுத்திக் கொள்ளுதல். இது ஜீரணமாகும் என்று வழங்கப்படும்.

4. மாரணம்—பஸ்மமாகச் செய்தல். [உலோஹங்களுக்கு இயல்பாயுள்ள கண்ணெய்மையைப் பற்றறவே போக்கி, தேஹதாதுக்கள் அவற்றை ஜீரணம் செய்து கொள்ளக்கூடிய வகையில் பஸ்மமாகவோ வித்யமானமோ பக்குவம் செய்யப்பட்ட முறை மாரணம், ம்ருதி என்றும் வழங்கப்படும். இதையே அபுநர்ப்பவம் என்றும் வழங்குவர்.]

5. பத்ராப்ரகம்—சுத்தி செய்யப்படாமல் இதழிதழாயுள்ள அப்ரகம்.

துண்ணிய அப்ரகத்தால் தான்யாப்ரகம் எனப் படுகிறது. 18½.[1]

அப்ரக பஸ்ம முறைகள்.

(1) அதை தான்யாப்ரகமாகச் செய்த பிறகு, கையாந்தகரைச்சாற்றில் ஆட்டி, சக்கிரங்களாப்போல வட்டமாகத் தட்டி யுலர்த்தி, அரை கஜபுடத்தில் எரித்தெடுக்கவும். அவ்விதமே வெள்ளைச் சாறடைச்சாற்றில் அரைத்து அரைத்து ஆறு முறை புடமிடவும். பிறகு அவ்வப்ரகத்தை நாலிலொரு பங்கு வெண்காரம் கூட்டி நிறைய ஜலம் விட்டு அரைத்து, சக்கிரங்களாப்போல அடைதட்டி யுலர்த்தி, அங்ஙனமே ஏழு முறை அரை கஜபுடமிட்டு எரிக்கவேண்டும். முற்கூறிய வகையில் ஆடாதோடைச் சாற்றில் ஆட்டி ஏழு முறையும், முள்ளுக்கீரைச் சாற்றில் ஆட்டி ஏழு முறையும் புடம் போடவேண்டும். இவ்விதமாகப் பக்குவம் செய்யப்பட்டுள்ள அப்ரகம் ஸகல முறைகளிலும் உபயோகிக்கத் தகுந்ததாம். (2) தான்யாப்ரகத்தைத் தகரயிலைச் சாற்றில் ஆட்டியாட்டி பத்துமுறை புடம்போட நிச்சயமாய் பஸ்மமாகும். (3) அதேவிதமாய் கோரைக் கிழங்கு ரஸத்தாலாவது, (4) முள்ளுக்கீரைச் சாற்றாலாவது அப்ரகத்தைப் புடமிடலாம். 19—24½.

அப்ரகஸிந்தூர முறைகள்.

மஞ்சள், நெல்லிக்கனி, முருங்கைப்பட்டை இவற்றின் இரஸங்களால் தனித்தனியே அப்ரகத்தை ஆட்டி, அடைதட்டியுலர்த்தி புடமிடவும்; இவ்விதம் அறுபது புடங்களில் எரிக்க அப்ரகம் ஸிந்தூரமாகும். அந்தந்த ரோகங்களுக்கு ஏற்ற அநுபானத்துடன் உபயோகிக்க அது க்ஷயம் முதலிய அநேக ரோகங்களைப் போக்கவல்லது. (2) ஆலம் வேரின் பட்டையைக் கஷாயமிட்டு அதனாலாவது, (3) வெற்றிலையின் சாற்றாலாவது, (4) ஆடாதோடை-கையாந்தகரை இவற்றின் சாற்றாலாவது, (5) கரிசிலாங்கண்ணி-பாகலிலை இவற்றின் ஸ்வரஸத்தினாலாவது, (6) ஆலம்பாலாலாவது அப்ரகத்தை அரைத்து, இருபது முறை புடமிடலாம்; அது மிகச் சிவப்பாக ஸிந்தூரமாகும். 25—28.

அப்ர ஸத்துவ பாதநமுறைகள்.

(1) அப்ரகத்தை அதற்கு நாலிலொரு பங்கு வெங்காரம் சேர்த்து, நிலப்பனங்கிழங்குச் சாற்றில் ஆட்டியெடுத்து, கோஷ்டியென்னும் கும்மட்டியில் வைத்து, பலமாக ஊதினால் அது ஸத்துவரூபமாக[1] ஆய்விடும். (2) தகரவிதை, கோரைக்கிழங்கு, கொத்தமல்லி, ஆடாதோடை, சாறடை, கரிசிலாங்கண்ணி, பாகல், செருப்படை இவற்றின் சாற்றால் தனித்தனியே அரைத்து, வெயிலில் உலர்த்தியெடுக்கவும்; அவ்விதம் அரைக்கும்போது கோதுமையின் சூர்ணம், நிறமீன், வெண்காரம் இவற்றை அப்ரகத்துக்கு எட்டில் ஒரு பாகம் வீதம் சேர்த்துக் கூட்டவும். அப்பால் பஞ்சாஜம், பஞ்ச கவ்யம், பஞ்ச மாஹிஷம்[2] இம்மூன்று வர்க்கங்களில் எதையேனும் ஒன்றைக் கூட்டி அரைத்து, பெரிய கோலிகளாக உருட்டி, அரஂபாதக கோஷ்டத்தில்[3] அவற்றைப் போட்டு, நீயிட்டு ஊதி, ஸத்துவத்தை இறக்கவேண்டும்; பிறகு கோஷ்டியென்கிற அந்த மூலையைத் திறந்து, அதிற் படிந்துள்ள கிட்டங்களைப் பொடித்து, அவற்றிலடங்கிய ரவைகளைப் போன்றுள்ள ஸத்துவத்தைப் பிரித்தெடுக்கவும். மிகுந்துள்ள கிட்டத்தைச் சிறிது வெண்காரம் கூட்டிப் பசு மூத்திரத்தினால் ஆட்டி, கோலிகள் செய்து உலர்த்தி, மீண்டும் முன்போலவே நீயிட்டு எரித்து ஸத்துவமெடுக்கவும். அப்பால் ரவை போன்ற அந்த ஸத்துவங்களைக் காடியில் சேர்த்துக் காய்ச்சி, சோதநீய கணச்சாக்குகளைக் கட்டி, மூஷையில் அடைத்து, அக்னியில் வைத்தூதி, நன்றாக யுருகியபிறகு எடுக்கவும்; இவ்விதம் இரண்டு முறை உருக்க, ஸத்துவம் வெகு சுத்தமாயிருக்கும். அந்த ஸத்துவத்தை இரவிளாஷத முறைகளிலும், இரஸாயந முறைகளிலும் உபயோகிக்கலாம். 29—38.

அப்ரகத்தை ஸத்துவமாக்கல்.

அப்ரகஸத்துவத்தை உருக்கி, நேரன், கைலம், நெய் இவற்றில் பத்து முறை ஊற்றவும்; இவ்விதம் பத்து முறை செய்தால் கடினமான உலோஹாதிகளைப்போலவே அப்ரகஸத்துவம் மிருதுத்தன்மையடையும். 39.

(1) மிருதுவாகச் செய்த ஸத்வாப்ரகத்தை தூண்மையாகப் பொடித்து, ஒரு கொப்பரையில் நெய் ஊற்றி அதில் சேர்த்து அடுப்பிலேற்றி கிளக்க வறுக்கவும்; அல்லது அதில் தூரும்பைப்

1. தான்யாப்ரகத்தைப்பற்றிய மூலச்லோகம் ஸம்ஸ்கிருத நூலில் பலவித அப்ரகபஸ்மமுறைகளுக்கு இடையே 23-வது ச்லோகமாகக் கூறப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பில் ஒழுங்காக அமையும் பொருட்டு இது 18½ என்று மாற்றப்பட்டிருக்கிறது.

1. ஸத்துவம்—ஒவ்வொரு உலோஹமும் அல்லது தாதுவும் மனிததேஹத்தில் ஊறி வியாதிகளைப் போக்கவோ, சரீரத்தைப் பலப்படுத்தவோ உபயோகமாகும்; அப்படிப்பட்ட லோஹ தாதுக்களுடைய ஸூக்ஷ்மமான ஸாராம்சம் ஸத்துவம் எனப்படுகிறது.

2. பஞ்சாஜம்—வெள்ளாட்டைச் சேர்ந்த ஐந்து அம்சங்கள். பஞ்ச கவ்யம்—பசுவைச் சேர்ந்த ஐந்து வஸ்துக்கள். பஞ்ச மாஹிஷம்—எருமையின் ஐந்து வஸ்துக்கள்; அவையாவன:—வெள்ளாடு, பசு, எருமை இவற்றின் பால், தயிர், நெய், சிறுநீர், சாணம் ஆகியவையாம்.

3. கோஷ்டம்—குண்டம் அல்லது வாலை கோஷ்டி என்றும் சொல்லப்படும்.

போட அது எரியுமளவுமாவது வறுத்து, அதைச் சூர்ணம்செய்து கொள்ளவும். இவ்விதமே ஏழு தடவை பக்குவம் செய்யவும்; அப்பால் ஸமபாகம் கந்தகம் சேர்த்து, ஆலம்வேரின் கஷாயத்தினால் ஆட்டி வராஹபுடமிடவும்; இவ்விதமாக இருபது முறை புடமிட வேண்டும்; அதன் பிறகு த்ரிபலா கஷாயத்தினால் ஆட்டி இருபது தடவை புடமிடவேண்டும்; பிறகு த்ரிபலா கஷாயம், கொட்டைக் கரந்தைச் சாறு, கையாந்தகரைச் சாறு, கடுக்காய் கஷாயம், தான்றிக்காய் கஷாயம், நுணாவேர் கஷாயம் இவற்றில் தனித் தனியே பாவனை செய்து எடுக்கவும். அளவறிந்து எல்லா ரோகங்களிலும் இதை உபயோகிக்கலாம். இது ஸ்வாப்பரகத்திலும் சிரேஷ்டமானது; தோஷம் நீங்கி குணத்தில் மேன்மையுற்றது. இவ்விதமாக நூறு தடவை புடமிட்டு பக்குவம் செய்தால் ஸர்வோத்கிருஷ்டமான குணமுள்ளதாகும்; பாரத-நீபனத்தன்மைகளிலும் சிறந்ததாகும். (2) அப்பகத்தை வெல்லம் கரைத்த ஆமணக்கிலைச் சாற்றில் பாவனை செய்து, மேலும் ஈரமும் ஆவிலைகளால் மூடி புடமிடவும்; இவ்விதம் மூன்று புடங்க ளிட்டால் அப்பகத்திலுள்ள சந்த்ரிகைகள் நீங்கிப்போம். இதை அரை குஞ்ஜாபிரமாண முபயோகித்தால் நன்கு பசியுந்தீபனமாகும். அந்தந்த ரோகத்திற்குத் தகுந்த அநுபானங்களோடு உபயோகிக்க எல்லா வியாதிகளையும் தீர்க்க வல்லது. (3) அப்பக ஸத்துவத்தின் கோலியை உருக்கி, மயில்துத்தம் கரைத்த காடியில் ஊற்றி யெடுத்து, அந்த கஷணத்திலேயே சம்மட்டியால் அடிக்கவும்; அடித்துப் பெருப்படியான அதன் பொடிகளை மீண்டும் காய்ச்சி, காடியில் சேர்த்து எடுத்து முன்போலவே சம்மட்டிகளால் அடித்துப் பொடியாக்கவும். அச்சூர்ணத்தை முன் போலவே பசுவின் நெய்யில் சேர்த்து வறுத்து, நெல்லிக்கனிச் சாற்றையாவது, நெல்லியிலைச் சாற்றையாவது கூட்டி கல்வத்தில் நன்றாக அரைக்க வேண்டும்; இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும். பிறகு சாறடை, ஆடாதோடை இவற்றின் சாற்றோடு காடியையும் கூட்டி அதனால் உடனே அரைக்கவும்; இவ்விதம் அரைத்தரைத்து பத்து புடங்களிடவும்; பிறகு கந்தகம் கூட்டி அரைத்து பத்து புடங்கள் போடவும். இவ்விதம் சுத்தமாய் பக்குவம் செய்யப்பட்ட அப்ரகம் குணத்தில் மிகச் சிறந்தது. இதை ஜாரணமுறைகளிலும், இரஸாயனமுறைகளிலும் இஷ்டப்படி யுபயோகிக்கலாம். 40—52.

ஸ்வாப்பரக ரஸாயன முறைகள்.

சந்த்ரிகையைப் போக்குதல்.

அப்ரகத்தைத் திரவமாகச் செய்யலாமென்று சில நூல்களில் கூறப்பட்டிருப்பினும், அவ்வாறு செய்வது சிவனருளன்றி ஸித்திப்பதில்லை யாகையால், அம்முறை அஸாத்ய மென்று நிச்சயித்து இங்கு கூறப்படவில்லை. 53.

அப்ரகத்தருதி அஸாத்யம்.

முற்கூறியவாறு பக்குவம் செய்த திவ்யாப்ரகத்தை இரண்டு குஞ்ஜா பிரமாணத்தில் வாய்விடங்கம், த்ரிகடுகு இவற்றுடன் கலந்து, நெய் கூட்டி யுட்கொள்ளலாம். இதனால் கஷயம், பாண்டு, கிரஹணி, வயிற்றுவலி, ஆமதோஷம், மற்றுமுள்ள குடலேப்பற்றிய பிணிகள், ஊர்த்வ ச்வாஸம், பிரமேஹம், அரோசகம், பலமான காஸம், அக்னிமாந்த்யம், ஜ்வரோதரம் ஆகிய வியாதிகள் தீரும்; மேலும் அந்தந்த அநுபான முறைகளோடு சேர்த்து உபயோகிக்க மற்றும் ஸகலமான ரோகங்களும் நிவாரணமாம். 54.

திவ்யாப்ரக குணங்கள்.

வைக்ராந்தம். [1]

எட்டு மூலைகளையும், எட்டு பட்டைகளையும், ஆறு கோணங்களையும் உடையதாய், மழமழப்பாகவும், கனமாகவும், சுத்தமான வர்ணமுள்ளதாய் அல்லது பலவேறு நிறங்களின் கலப்புள்ளதாகவும் இருப்பது வைக்ராந்தம் என்று கூறப்படுகிறது. இதில் வெளுப்பு, சிவப்பு, பசுமை, நீலம், மாடப்புறு நிறம், மேகவர்ணம், கறுப்பு, நிரந்திரவர்ணம் ஆக நிறத்தில் எட்டுவித பேதங்களுண்டு. 55, 56.

வைக்ராந்த லக்ஷணம்.

வைக்ராந்தமானது ஆயுளை விருத்தி செய்யும்; தேஹத்திற்கு பலத்தையும் நிறத்தையும் கொடுக்கும்; விருஷ்ய குணத்தில் சிறந்தது; அறிவைக் கொடுக்கும்; ஸந்நிபாத ஸம்பந்தமான வியாதிகளை ஹரிக்கும்; அக்னியை உத்தீபகம் செய்யும்; உலோஹங்களின் பக்குவ முறைகளிலும் உபயோகமானது; வஜ்ரம் என்கிற இரத்னத்திற்குச் சமானமான மற்ற குணங்களும் இதற்குண்டு; வெகு கடினமானது. மேலும் வைக்ராந்தம் இரஸாயனச் சரக்குகளுள் முக்கியமாகிய சிறந்த வீர்யமுள்ளது; கோளாறடைந்த எல்லா தோஷங்களையும் போக்கும்; வஜ்ரத்திற்குப் பதிலாகவும் உபயோகிக்கத் தகுந்தது. 57, 58.

வைக்ராந்தத்தின் மற்ற குணங்கள்.

---

1. வைக்ராந்தம் என்பது படிகக் கல்லைப் போன்றதோர் தாதுப் பொருள், ஸாதாரணமாய் வெண்மையாகவும், வெகு கடினமாகவும், பல்வேறு கலர்களுள்ளதாகவும், பளுவாகவும் இருக்கும். "விக்ருதா வஜ்ர ஸங்காஸா யே வைக்ராந்தாக்யாம் பஜந்தி தே. ஜாதயச் சோதநம் ஸ்ம்ருதம் ஸர்வே தோஷாந்து வஜ்ரவத்"—விகாரமடைந்த வஜ்ரத்தை ஒத்தவைகளே வைக்ராந்தமாகின்றன; அதன் பேதங்களும், சுத்தி செய்யுமுறையும், ஸ்மை முறையும், குணங்களும் வஜ்ரகத்திற்கு இருப்பது போலவேயாம் என்று கூறப்படுவதுண்டு.

வைக்ராந்தத்தின் தைவீக வாலாறு.

முன்னொல் துர்க்கா தேவியானவள் தேவர்களைத் துன்புறுத்திய மஹிஷாஸுரனைச் சூலத்தினால் ஸம்ஹரித்தாள். அவனுடைய இரத்தம் பூமியில் விழுந்து எவ்வெவ்விடத்தில் தங்கிற்றோ அவ்வவ்விடத்தில் வஜ்ரத்திற்கொப்பான வைக்ராந்தம் என்னும் மஹாரஸம் உண்டாயிற்று. இது விந்தியபர்வதத்திற்குத் தெற்கேயும் வடக்கேயும் விசேஷமாயுண்டு. 59—60½.

வைக்ராந்தத்தைப்பற்றி வேறு சிலரது கொள்கை.

(1) உலோகங்களை அறுக்கக்கூடிய வகையில் வெகு கடினமாயிருப்பதாலே இது 'வைக்ராந்தம்' என்று கருதப்படுகிறது. (2) இதில் வெளுப்பு, மஞ்சள் நிறம், சிவப்பு, கறுப்பு, மேகவர்ணம், மயிலின் கழுத்து போன்ற நிறம், மரகதப்பச்சை நிறம் ஆக ஏழு வகையுண்டு. (3) அவற்றுள் கறுப்பு வைக்ராந்தம் தேஹஹரித்தியுண்டுபண்ணும். மஞ்சள்நிறமுள்ளது பொன் வேலைக்கும், வெண்மையானது வெள்ளிவேலைக்கும்உபயோகமானது. சிவப்பும் பச்சையுமான இரண்டு வைக்ராந்தங்களும் எல்லா முறைகளிலும் வெகு உபயோகமானவை. மற்ற இரண்டு வைக்ராந்தங்களும் உபயோகமற்றவையாகையால் விலக்கத்தகுந்தவையாம். இவ்வாறு வைக்ராந்தம் ஏழுவிதமென்று சிலரது கருத்து. 61—64.

வைக்ராந்தத்தை கிரஹிக்கும் விதி.

எங்கே வைக்ராந்தம் இருக்கின்றதோ அவ்விடத்தில் பைரவியும், விநாயகரையும் முறைப்படி பூஜித்துவிட்டு, நிர்மலமான மனத்துடன் அதை கிரஹிக்கவேண்டும்; அப்பொழுதுதான் அது குணத்தில் வஜ்ரத்திற்குச் சமானமாகவும், தேஹபலத்தை விருத்தி செய்வதாகவும், உலோஹங்களைப் பக்குவம் செய்வதற்கு ஏற்றதாகவும், விஷஹரம் முதலிய குணங்களை யுடையதாகவும் இருக்கும்; அது ஜ்வரம், குஷ்டம், க்ஷயம் இவைகளைப் போக்கும் மஹாரஸமாகவும் கருதப்படும். 65, 66.

வைக்ராந்த சுத்தி.

வைக்ராந்தச் சிலைகளோடு க்ஷாரங்களையும் இலவணங்களையும் கூட்டி, காடிகளுடையவாவது, மூத்ரங்களுடையவாவது, கொள்ளுக் கஷாயத்தினுடையவாவது, வாழைச் சாற்றினுடையவாவது ஆவிநீரில் மூன்று நாள் பக்குவம் செய்ய சுத்தமாகும்; வயசு தானியக் கஷாயத்தில் பக்குவம் செய்தாலும் சுத்தமாகும். கொள்ளுக்கஷாய ஆவியில் மாத்திரம் பக்குவம் செய்தாலும் சுத்தமாகும். 67, 67½.

வைக்ராந்த பஸ்ம முறைகள்.

(1) கந்தகத்தை வைக்ராந்தத்தோடு கூட்டி, எலுமிச்சம்பழ ரஸத்தினால் ஆட்டி புடமிடவும்; இவ்விதம் எட்டுத்தடவை புடம்போட வைக்ராந்தம பஸ்மமாகும. (2) அல்லது வைக்ராந்தத்தைக் காய்ச்சிக் காய்ச்சி அநேகமுறை குதிரையின் மூத்ரத்தில் போட்டு எடுத்து பிறகு புடம்போட்டாலும் பஸ்மமாம். இவ்வாறு பஸ்மமாக்கிய வைக்ராந்தத்தை வஜ்ரத்திற்குப் பதிலாய் உபயோகிக்கலாம். 68—69½.

வைக்ராந்த ஸத்துவம்.

(1) நீரடிமுத்து, அழிஞ்சில், பலாசு இவற்றின் பட்டைகளின் க்ஷாரங்களைப் பசுவின் மூத்ரத்திற் கலக்கி, அந்த நீரில் வைக்ராந்தத்தின் பொடியை பாவனை செய்யவும்; அவ்வைக்ராந்தத்தைக் காட்டுக்கருணைக்கிழங்கு, மஞ்சள் இவற்றின் கல்கத்தோடும், த்ரிபலாசூர்ணத்தோடும் கலக்கவும்; அத்தோடு வெண்காரம், கொம்பரக்குப்பொடி, கவாசாரம் இவற்றையும் கூட்டி, ஆடுதீண்டாப்பாளையின் ஸ்வரஸம் சேர்த்து, பிண்டமாகச்செய்து, மூசையில் அடைத்து, காடாக்னியிட்டு ஊதிஞலை, வைக்ராந்தத்தின் ஸத்துவம் அம்மூசையிலே விழும். (2) ஸத்துவபாதங்முறைப்படி வைக்ராந்தத்தை நன்றாக அரைத்து கோளமாகச்செய்து, மூசையிலிட்டு, அதை ஒரு பாண்டத்தில் வைத்து, அவ்விதமே காடாக்னியில் ஊதிஞலும் ஸத்துவம் வெளிவரும். 70—73.

வைக்ராந்த ரஸாயந முறையும் குணங்களும்.

(1) வைக்ராந்தம் பஸ்மமான பிறகு, அதில் ஒரு குஞ்ஜா பிரமாணம் எடுத்து, அதற்குக் கால்பங்கு ஸ்வர்ணபஸ்மத்தைக் கூட்டி, சிறிது திப்பிலி-வாய்விடங்கம் நெய் இவற்றையும் ஒருமிக்கச் சேர்த்து உட்கொள்ளலாம். இது க்ஷயம், உதரரோகம், பாண்டு, அர்சஸ், ச்வாஸம, காஸம், கடுமையான கிரஹணீ, ப்ரமேஹம் முதலிய ரோகங்களைத் தீர்க்க வல்லது; தேஹத்திற்குப் புஷ்டியையும் தரும். (2) கருநிறமான வைக்ராந்தத்தின் பஸ்மம் ஒரு பங்கு, இரஸ பஸ்மம் அரைப் பங்கு, அப்ரக ஸத்துவம் அவ்விரண்டுக்கும் ஸம அளவு; ஆக இவ்வனைத்தையும் கூட்டி அரைத்து வைத்துக் கொள்ளவும். இக்கூட்டுமருந்தில் ஒரு குஞ்ஜாபிரமாணம் எடுத்து நெய் அல்லது தேன் கூட்டி, விடியற்காலையில் உட்கொண்டுவர, இதர ஔஷதங்களால் நிவர்த்திக்கக் கூடாத ரோகங்களனைத்தும், கொடிய பாவங்களை கங்காஜலம்போல மூன்று வாரத்தில் நீக்கும். 74—76.

மாக்ஷிகம். [1]

மாக்ஷிகத்தின் உற்பத்தி.

மாக்ஷிகமென்கிற பொன்னுருவமான இந்த ரஸம் ஸ்வர்ணமுண்டாகும் மலையில் விஷ்ணுவினால் உண்டாக்கப்பட்டது. தாபி அல்லது தபதீ என்னும் தேசத்திலும், நதியிலும, கிராத தேசங்களிலும், சீன தேஸத்திலும், யவநதேசத்திலுங்கூட உண்டாகிறது. ஸாதாரணமாய் மாக்ஷிக தாதுவானது வைகாசி மாஸத்தில் கடும் வெயிலால் உருகப்பட்டு வெளியாவதைக் காணலாம். 77, 77½.

1. மாக்ஷிகம்—நிமிளையென்று தமிழில் வழங்கப் படுகிறது.

(1) ஹேம மாக்ஷிகம்,[1] தார மாக்ஷிகம்[2] என்று மாக்ஷிகம் இரு வகைப்படும். அவற்றுள் முதலாவதான காந்யகுப்ஜ தேசத்தில் உண்டாகும் ஹேம மாக்ஷிகமானது ஸ்வர்ணம்போல் காணப்படும். தபதீ நதியின் கரையில் உண்டாவது பஞ்சவர்ணங் கலந்து பொன் போன்றதா யிருக்கும். இரண்டாவதான தார மாக்ஷிகமானது விசேஷமாகப் பாலாணம் கலந்த தாய், குணத்திற் குறைவானதா யிருக்கும். பொன் நிறமான மாக்ஷிகம் சுவையில் இனிப்பானது; வெள் ளியைப் போன்ற மாக்ஷிகம் சுவையில் அம்லமாகவும், சிறிது துவர்ப்புடன் இனிப்புங் கலந்ததாகவும் இருக்கும்; இது சீதவீர்ய மும், இலகுகுணமும், கடிபாகமும் உள்ளது.[3] (2) மாக்ஷிகமென் னும் இந்த தாதுப்பொருள் ஸகல வியாதிகளையும் பரிஹரிக்கவல் லது; வ்ருஷ்யகுணத்திற் சிறந்தது; இரஸாயனமான ஔஷதங் களுக்குள் மிகவும் ஶ்ரேஷ்டமானது; இலேஸந்நிரத்திற்குப் பிரா ணன் போன்றது;[4] ஒன்றோடொன்று சேரக்கூடாத இரண்டு உலோஹங்களைச் சேர்க்கவல்லது. இது மிகவும் சிலாக்யமான ஔஷதச் சரக்கு. 78—82.

மாக்ஷிகத்தின் பேதமும், குணங்களும்.

(1) ஆமணக் கெண்ணெயிலாவது, (2) கொடிமாதுளைச் சாற்றி லாவது மாக்ஷிகத்தைப் போட்டுக் காய்ச்சினால் அது சுத்தமாகும். (3) வாழையின் கிழங்கினுடைய சாற்றில் போட்டு இரண்டு நாழிகைக் காய்ச்சியெடுத்தாலும் சுத்தி யடைகிறது. (4) மாக்ஷிகத்தைக் காய்ச்சி த்ரிபலாகஷாயத்தில் தோய்த்தெடுத்தாலும் சுத்தமாகும். 83, 83½.

மாக்ஷிக சுத்தி.

(1) மாக்ஷிகத்தை கந்தகத்தோடு சேர்த்து, கொடிமாதுளைச் சாற்றால் ஆட்டி, மூஷையினுள் அடைத்து, ஐந்து பராறைபுடங்களிட்டு[5] எரிக்க அது பஸ்மமாகும். (2) ஆமணக் கெண்ணெயினும் பசுவின் நெய்யினும் சேர்த்துக் காய்ச்சி னாலும், (3) கொடிமாதுளஞ் சாற்றால் ஆட்டி காடாக்னியிட்டு பக்கு வம் செய்தாலும் அப்பஸ்மம் விந்தூரம் போல் ஆய்விடும். இவ் வாறு பக்குவம் செய்த மாக்ஷிக பஸ்மத்தை இரஸௌஷதி முறை களினும், இரஸாயன விதியினும் உபயோகிக்கலாம். 84—86.

மாக்ஷிக பஸ்மம்.

1. ஹேம மாக்ஷிகம்—ஸ்வர்ண மாக்ஷிகம், பொன் நிமிளை.

2. தார மாக்ஷிகம்—ச்வேத மாக்ஷிகம், வெண்ணிமிளை.

3. "பங்கே ஸ்வர்ண ஸங்காஶா மதாக் க்ருஷ்ணே பஹிச்சவி: ப்ருஹத்வர்ண இதி க்யாதோ மாக்ஷிக: ச்ரேஷ்ட உச்சியதே" — உடைத்துப் பார்க்க உட்புறம் பொன்போன்றதாகவும், வெளிப் புறம் ஒரு சிறிது கறுநிறமாகவு முள்ள சரக்கு **ப்ருஹத்வர்ணமாக்ஷிகம்** (ஸ்வர்ண மாக்ஷிகம்) எனப்படும்; இது ஔஷத முறைக்குச் சிறந் தது.—இரஸரத்நாகரம்.

4. இரஸத்தைக் கொண்டு செய்யப்படும் ஔஷதங்களில் இது அதிக உபயோகமானது என்று கருத்து.

5. வராஹபுடம்—பத்தாவது அத்தியாயத்தில் விவரம் காண்க.

மாக்ஷிக ஸத்துவம்.

(1) மாக்ஷிகத்தோடு அதற்கு முப்பதில் ஒரு பங்கு நாகம் சேர்த்து,[1] வஜ்ராயங்களும் அப்லங்களும் கூட்டி அரைத்து, மற்றை மூஷையில்[2] அடைத்து அக்னி யில் ஊத ஸத்துவம் வெளியாகும், பிறகு அச்சத்து வத்தை உருக்கி, கருநொச்சிலைச் சாற்றில் ஊற்றவும்; இவ்விதமாக ஏழுமுறை உருக்கி அச்சாற்றில் ஊற்ற, மாக்ஷிகஸத்துவத்துடன் கலந் திருந்த நாகம் விலகிப் போகும். (2) தேன், ஆமணக்கெண்ணெய், நெய் இவற்றால் மாக்ஷிகத்தை ஆட்டி, பிறகு பசுமூத்ரத்திலும் வாழைக்கிழங்கின் சாற்றிலும் பலமுறை பாவனை செய்து, மூசை யில் அடைத்து அக்னியிட்டு ஊதினால் நிறத்தில் தாம்ரம் போன்ற தாய் மிருதுவான ஸத்துவம் வெளியாகும். அதை உருக்கி ஆற்றி யெடுத்தால் குன்றுமணிக்குச் சமானமான நிறமுள்ளதாயிருக்கும், இவ்விதம் பக்குவமான மாக்ஷிகஸத்துவம் மிகவும் சுத்தமானதும் தேஹத்திற்கு அதிக வன்மைதரக் கூடியது[3]. 87—91.

மாக்ஷிகஸத்துவமும் குணமும்.

மாக்ஷிக ஸத்துவத்தை உருக்கி, இரஸேந்த்ரத்துடன் சேர்த்து அவ்விரண்டும் ஒருமிக்கக் கலந்ததும், கந்தகமும் அப்ரக ஸத்துவத்திருதியும்[4] கூட்டி, கல்வத்திலிட்டு அரைக்கவும். அதை ஒரு கோளமாகச் செய்து, இலவண யந்த்ரத்தில்[5] மிருதுவாக அக்னியிட்டு ஆறை நாள் எரிக்கவும். பிறகு அதை தாளகமே ஆகியபின்பு எடுத்து, கண்ணுக்குச் சூர்ணம் செய்து வைத்துக் கொள்ளவும். இதில் இரண்டு குஞ்ஜா பிரமாணம் எடுத்து த்ரிகடு,[6] வாய்விடங்கம் இவற்றின் சூர்ணத்தோடு கூட்டி, தேனில் கலந்து உட்கொள்ளலாம். இதனால் அகாலத்தில் தேஹநாசம் நிகழ்ந்துண்டாகும் மிருத்யுவும் கிழத்தனத் தாலான பலக்குறைவும் நீங்கும். ஏழு நாட்கள் உபயோகித்தால் கஷ்ட ஸாத்யமான வியாதிகளும் குணமடையும். அமுதத்துக் கூட இதற்கிணையாகாது. 92—94.

1. நாகம்—ஈயம், கருவங்கம் அல்லது காரீயம்.

2. மஹாமூஷை—பத்தாவது அத்தியாயத்தில் மூஷைகளின் விவரங்களைப் பார்க்க.

3. கோமூத்ரைச் ஸப்தவாரீக்ருதைர்பாவ்ய மோண்டதைலகை: மாக்ஷிகம் திநமேகந்து மர்தித்தம் வடகீ க்ருதம்; அப்ரவத் தமயேத் ஸத் யம்—மாக்ஷிகத்தைப் பசுவின் மூத்ரத்திலும், கள்ளிப்பாலிலும் பாவனை செய்து, ஆமணக்கெண்ணெயினால் ஒரு நாள் அரைத்து, வட கம் போல் செய்து, அக்னியிலிட்டு ஊத, அப்ரகத்தைப் போல் ஸத்து வம் வெளிப்படும்.—இரஸார்ணவம்.

4. அப்ரக ஸத்துவத்ருதி—திரவமாக்கிய அப்ரகஸத்துவம்.

5. இலவணயந்த்ரம்—ஒன்பதாவது அத்தியாயம் பார்க்க.

6. த்ரிகடு—சுக்கு, திப்பிலி, மிளகு இவற்றின் கூட்டு. இக் கூட்டுக்கு த்ரியூஷணம் என்றும் பெயர்.

குண்டுமணி, வெங்காயம் இவற்றை ஆமணக்கெண்ணெயும் தேனும் சேர்த்து அரைத்துக் குழம்பாகச் செய்யவும். இதில் மாகூகிகளைத்துவந்தை உருக்கிச்சேர்க்க அதிக திரவமாய்விடும். 95.

விமலம் [1]

விமலம் மூன்று விதம்: அவற்றுள் ஒன்று ஹேமவிமலம்; மற்றொன்று தாரவிமலம்; மூன்றாவது காம்ஸ்ய விமலமாம். அந்தந்த லோஹத்திற்குள்ள காந்தியைக் கொண்டு ஒவ்வொரு விமலதாதுவுக்குமுள்ள பேதங்களை அறிய வேண்டும். [2] இது உருண்டை வடிவத்துடன், பட்டை தீர்க்கப்பட்டது போலவும், சில கோணங்களோடு கூடியதாகவும், ஸ்நிக்தமாகவும் இருக்கும். விமலமானது பொதுவில் வாதஹரம், பித்தஹரம், விருஷ்யம் என்னும் குணங்களுள்ளது; இரஸாயன குணம் இதற்கு விசேஷம். இவற்றுள் முதலாவது ஸ்வர்ணவேலைகளுக்கும், இரண்டாவது வெள்ளிவேலைகளுக்கும், மூன்றாவது ஒளஷத முறைகளுக்கும் உபயோகமானது. காம்ஸ்ய விமலத்தினும் தார விமலமும், அதைவிட ஹேமவிமலமும் குணத்தில் முறையே சிறந்தவை. 96—98.

விமல பேதங்கள்.

விமலத்தின் உருவமும் குணமும்.

(1) ஆடாதோடையின் சாற்றில் விமலத்தைப் போட்டுப் பக்குவம் செய்தெடுக்க அது சுத்தமாகும். (2) அல்லது எலுமிச்சம்பழச் சாற்றிலாவது, (3) ஆடுதீண்டாப் பாளையின் ஸ்வரஸத்திலாவது பக்குவம் செய்தாலும் மற்ற தாதுப் பொருட்களையுப் போலவே விமலமும் சுத்தமாகிறது. விமலத்தோடு கந்தகமும், மனச்சிலையும் சேர்த்து, எலுமிச்சம்பழச்சாற்றில் ஆட்டி புடமிடவும்; இவ்வாறு பத்துமுறை புடம் போட்டால் விமலதாது பஸ்மமாகும். 99, 100.

விமல சுத்தி.

விமல பஸ்மம்.

வெண்காரத்தையும் விமல பஸ்மத்தையும் ஆடுதீண்டாப்பாளையின் சாற்றிலும் எலுமிச்சம்பழச் சாற்றிலும் அரைத்து, மஹாமூஷையின் உட்புறத்தில் அதைத் தடவி, உலர்த்தியெடுத்து, ஆறுபடி கட்டைக் கறியினுள் அம்மூஷையை அடக்கம் செய்து, அக்னியிட்டு ஊதினால் ஈயம்போன்றதாய் விமல ஸத்துவம் வெளியாகும். இத்துடன் இரஸபஸ்மமும் கலந்துபிரயோகிக்கஇது இரஸாயனமாக உபயோகமாகும்.

விமல ஸத்துவம்.

1. விமலம் என்பதும் வைக்ராந்தம் போன்றதோர் தாதுப்பொருள். விமலமும் வைக்ராந்தமும் ஒருவித கந்தக ஸம்பந்த மான (Pyrites) தாதுப்பொருட்கள் என்று கருதப்படுகிறது.

2. பொன்போன்று தளதளப்பாயுள்ளது ஹேமவிமலம்; வெள்ளியைப்போல வெண்மையாயிருப்பது தாரவிமலம்; வெண்கலம் போன்ற நிறமுள்ளது காம்ஸ்ய விமலம். (ஹேமம்—பொன்; தாரம்—வெள்ளி; காம்ஸ்யம்—வெண்கலம்.)

(2) விமலத்தோடு படிகாரம், அன்னபேதி, வெங்காரம், காட்டுக் கருணைக் கிழங்கு இவற்றைக் கூட்டி, முருங்கைப்பட்டையின் சாற்றில் ஆட்டியுலர்த்தி, அதை வாழைபின் சாற்றில் பாவனை செய்யவும். பிறகு நீரடிமுத்து மாப்பட்டையின் க்ஷாரத்தை அத்துடன் கலந்து மூஷையிலிடைத்து, அதை நெருப்பிலிட்டு ஊதினால், சந்திரன் அல்லது ஸூர்யன்போல் பிரகாசமுள்ள ஸத்துவம் உண்டாகும். 101—104.

விமல மயாயகம்.

விமல ஸத்துவத்தோடு ஸம அளவு இரஸம் கலந்து நன்றாகக் கல்வத்திலாட்டி, மெழுகுபோலச் செய்யவும்; கந்தகத்தை உருகவைத்து, அதில் அம்மெழுகைச் சேர்த்து, மூன்று பங்கு சுத்ததாளகத்தையும் கூட்டிக்கொள்ளவும். பிறகு ஐந்து மடங்கு மனச்சிலையையும், பத்திலொரு பங்கு இரஜதபஸ்மத்தையும் சேர்த்து, அனைத்தையும் ஒருமிக்கக் கல்வத்தில் அரைத்து, வஸ்திரகாளகம் செய்து, கஸ்தூரிக்குப்பியில் போட்டு நிரப்பி வாலுகாயந்திரத்தில் பக்குவம் பார்த்தெடுக்கவும். இதை வாய்விடங்கம், த்ரிகடு, த்ரிபலை இவற்றோடு கலந்து நெய்கூட்டியுட்கொள்ளலாம். இது பகந்தரம், இருமல், ஸ்வாஸரோகம், ஜ்வரம், சோகை என்னும் நீர்க்கோவை, பாண்டு ரோகம், பிரமேஹம், அரோசகம், அர்சோரோகம், கிரஹணீ, கொடுமையான சூலநோய், க்ஷயரோகம், காமாலை இவற்றையும், பித்த வாதங்களால் உண்டாகும் ஸகல ரோகங்களையும் தீர்க்கும்; மேலும் வெவ்வேறு அநுபான முறைகளோடு உட்கொள்ளப்படுமேல் ஸமஸ்த ரோகங்களும் தீரும். 105—108.

சிலாஜது [1].

சிலாதாது இருவகைப்படும்; அவற்றுள் ஒன்று கோமூத்ர சிலாஜது; இது இரஸாயனகுணமுள்ளது. மற்றொன்று கர்ப்பூரசிலாஜது. இவ்விரண்டில் கோமூத்ர சிலாஜது ஸத்துவமுள்ளது [2], ஸத்துவமில்லாதது [3] என்று மீண்டும் இருவகைப்படும்; இவற்றுள் ஸத்துவமுள்ளது குணத்தில் மேலானது. கிரீஷ்மருதுவில் ஸூர்யகிரணங்களாலும் கடும் வெயிலால் சூடாக்கப்பெற்றவையும், பொன்-வெள்ளி-செம்புக்கனிகளுள்ளவையுமான இமயமலையின் அடிவாரங்களிலிருந்து கசிந்து சிலாஜது வெளியாகின்றது. (1) பொன் முதலியவை அங்கிய மலைப்பிரதாந்தத்திலிருந்து உண்டான சிலாஜது பொன்போன்ற நிறமுடையதாய் பாரமுள்ளதாகவும் இருக்

சிலாஜது பிரிவுகள்.

1. சிலாஜது—இது சிலாதாது என்றும் வழங்கப்படுகிறது. [தாதுவென்றால் அரக்கு; சிலையிலிருந்து வருகிற அரக்குபோன்ற வஸ்துவைகையால் சிலாஜது எனப்படுகிறது.]

2. ஸத்துவமுள்ளது ஸஸத்வசிலாஜது எனப்படுகிறது.

3. ஸத்துவமில்லாதது நிஸ்ஸத்வசிலாஜது எனப்படுகிறது.

கும்; அது கிறிது கசப்பும் விசேஷ இனிப்புமுள்ளது; இரஸாயக குணத்திற் சிறந்தது. (2) வெள்ளிக்கனிகளுள்ள மலையிலிருந்து உண்டாகும் சிலாஜது மதுர ரஸமுள்ளது; வெண்மையானது; குருகுணமுடையது; பித்த ஸம்பந்தமான ரோகங்களைத் தீர்க்கக்கூடியது; விசேஷமாகப் பாண்டுரோகத்தைப் போக்கும். (3) செம்புக் கனிகளடங்கிய மலைப்பிராந்தத்திலுண்டானது கருநிறமாகவும், திரள் திரளாகவும், பாரமுள்ளதாகவும் இருக்கும்; சுவையிற் கசப்பு; வீர்யத்தில் உஷ்ணமானது; இது கபதோஷ வாததோஷங்களை ஹரிக்கும்; க்ஷயரோகத்தையும் போக்கும். 109—113½.

சிலாஜது லக்ஷணம்.

(1) அக்னியிற்போட்டால் எது புகையாமலே லிங்க வருவமடைகிறதோ, தண்ணீரிற் போட்டால் கரைந்து விடுகிறதோ, அது சுத்தமான சிலாஜது என்றறிக. (2) சிலாஜதுவானது ஜ்வரம், பாண்டு, மேஹரோகம், அக்னி மாந்தம் இவற்றைத் தணிக்கும்; தேஹத்தில் அதிகமாகச் சேர்ந்துள்ள கொழுப்பைக் கரைக்கும்; க்ஷயரோகத்தைத் தணிக்கும்; சூலமென்கிற வயிற்றுநோயைத் தீர்க்கும்; குல்மம், ப்லீஹ வீக்கம், மஹோதரம், இருதயத்தைப் பற்றிய வலி, ஆமதோஷம், ஸகல விதமான சர்மரோகங்கள் ஆகிய வற்றைப் பரிஹரிக்கும். சுருங்கச்சொல்லுமிடத்து இது தேஹத்தைப் பலப்படுத்தவும், உலோஹ முறைகளைச் செய்யவும் வெகு உபயோகமானது. மேலும் இரஸங்கள், உபரஸங்கள், இரஸேந்திரம், இரத்தினங்கள், உலோஹங்கள் இவற்றில் எக்குணங்கள் உண்டோ அவ்வனைத்தும் சிலாதாதுவில் அடங்கியிருக்கின்றன; ஆகவே இது கிழத்தனமும் மரணமும் சீக்கிரம் நேரிடாவண்ணம் செய்யக் கூடியது. 114—116.

சிலாஜதுவின் பொதுவான குணங்கள்.

(1) க்ஷாரங்கள் [1], அம்லங்கள் [2], கோமூத்திரம் இவற்றால் கழுவினால் சிலாஜது சுத்தியாகும். (2) சிலாஜதுவைப் பாலிற் கரைத்தாகிலும் சுத்திசெய்யலாம். (3) த்ரிபலாகஷாயத்தையாவது, கையாந்தகரைச் சாற்றையாவது, இரும்புப் பாத்திரத்தில் ஊற்றி, அதில் சிலாஜதுவைப் போட்டு நன்கு சுத்தி செய்யலாம். (4) க்ஷாரங்கள், காடிகள், மஹிஷாக்ஷிகுக்குலு இவற்றை ஸ்வேதந யந்திரத்தில் சேர்த்து, அதில் சிலாதாதுவைச் சேர்த்து ஒரு நாழிகை காலம் ஆவியிற் பக்குவம் செய்ய சிலாஜது சுத்தமாகும். 117—118½.

சிலாஜது சுத்தி.

1. யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம் முதலியவை க்ஷாரங்கள்.

2. அம்லங்கள்—காஞ்ஜிகம் என்னும் காடி, எலுமிச்சை முதலிய அம்ல வகைகள்.

சிலாஜது பஸ்மம்.

மனச்சிலை, கந்தகம், தாளகம் [1] இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் ஆட்டி, அதில் சிலாஜதுவைக் கூட்டி எட்டு வறட்டிகளைக் கொண்டு புடமிட நன்கு பஸ்மமாகும். 119, 120.

சிலாஜது ரஸாயநம்.

பஸ்மமாகச் செய்த சிலாஜதுவுக்குச் சமநிறையாக காந்த பஸ்மமும் வைக்ராந்த பஸ்மமும் கூட்டி, த்ரிபலை, த்ரிகடி இவற்றின் சூர்ணமும் அவ்விதம் கூட்டி, நெய்விட்டு ஆட்டி ஒரு வல்லப்பிரமாணம் [2] அதை உட்கொள்ளலாம். பாண்டு, க்ஷயம், அக்னிமாந்தியம், மேஹரோகங்கள், மூலரோகம், குல்மம், ப்லீஹோதரம், மஹோதரம், பலவிதமான சூலைகள் என்கிற வயிற்று நோய்கள், யோனியைப்பற்றிய நோய்கள் ஆகியவற்றில் இது உபயோகமானது. ஆறு மாஸங்கள் இதை இரஸாயக முறைப்படி உபயோகித்து வந்தால் கிழத்தனம் தோன்றுமல், ஆரோக்கியமாக நூறுண்டு வாழலாம். 121, 122.

சிலாஜது ஸத்துவம்.

திராவணவர்க்கச் சரக்குகளாலும் [3], அம்லவர்க்கச் சரக்குகளாலும் [4] சிலாஜதுவை ஆட்டி, மூசைக்குள் வைத்து மூடி, கரிகளைக்கொண்டு கடுந்தீயிட்டு எரிக்க, அதிலிருந்து அயத்திற்கொப்பான ஸத்துவம் உண்டாகும். 123½.

கர்ப்பூர சிலாஜது.

(1) கர்ப்பூரசிலாஜது என்பது வெண்மையாகவும், உருவத்தில் மணல் மணலாகவும் இருக்கும். (2) மூத்ரக்ருச்சிரம், அச்மரீ, மேஹரோகம், காமாலை, பாண்டு ஆகிய வற்றை நிவ்ருத்தி செய்யும். (3) இது ஏலக்காய் கஷாயத்தில் ஊறவைப்பதனல் சுத்தியடையும். (4) இதற்கு பஸ்மமுறையாவது, ஸத்துவ மெடுக்கும் முறையாவது இவ்விஷய மறிந்தவர்களால் கூறப்படவில்லை. 124, 125.

துத்தம் [5].

அத்த வற்ப த்திமுதலிய விசேஷம்.

முன்னுல் கருடன் அழுதத்துடன் விஷத்தையும் ஒருமிக்கப் பருகி, மரகத பர்வதத்தில் அவற்றைக் கக்கிவிட, அவ்விதம் கக்கிய வஸ்து உறைந்து ஸஸ்யகம் என்னும் தூரிசாக ஆயிற்று; அதில் மயிலின் கழுத்துக்குச் சமானமான நிறமுள்ளதும், [6] அதிக கனமாயி

1. மனச்சிலை முதலியவற்றைச் சுத்தி செய்தே உபயோகிக்க வேண்டும்.

2. இரண்டு குஞ்ஜா (குன்றுமணி) எடை 'ஒரு வல்லம்',

3. திராவணவர்க்கம்—10-ம் அத்தியாயம் பார்க்க.

4. அம்லவர்க்கம் 10-ம் அத்தியாயம் பார்க்க.

5. துத்தம்—ஸஸ்யகம், மயூரகுத்தம் என்றும் ஸம்ஸ்கிருதப் பெயர்கள்; தூரிசு என்றும் தமிழில் வழங்குவர்.

6. மயிலின் கழுத்துக்குச் சமான நிறமுள்ளதாலே மயில்துத்தம் என்று வழங்கப்படுகிறது.

ருப்பதுமான துரிசு மிகச் சிறந்தது. ஒரு சாரக்கு விஷம் கலந்ததா யிருந்தால் அச்சாரக்கின் வீர்யம் இயற்கையினும் அதிகப்படுகிறது. அவ்விதமே அமுதம் கலந்த விஷமும் குணத்தில் அமுதத்தினும் மேலானதாகும். 126—128.

மயில் துத்தமானது கோளாறடைந்த மூன்று தோஷங்களையும் சமனம் செய்யும்; விஷம், இருதய ரோகம், சூலம், மூலம், குஷ்டம், அம்ல பித்தம், மலபந்தம் இவற்றைப் போக்கும்; சிறந்த இரஸாயநமுமாகும்; வாந்தியையும் விரேசனத்தையும் உண்டுபண்ணும்; கபமென்னும் விஷத்தாலான கோளாறையும் நிவருத்திசெய்யும்; வெண்குஷ்டத்தையும் நீக்கும். 129.

துத்தத்தின் குணங்கள்.

(1) துத்தத்தை இக்தவர்க்கத்தில்[1] ஏழுதடவை பாவனை செய்து, அவ்விதமே ஸ்நேஹவர்க்கத்தில்[2] கரைத்து எடுக்க அது நன்கு சுத்தியடையும். (2) பசு, எருமை, வெள்ளாடு இவற்றின் சிறுநீர்களில் ஏதேனும் ஒன்றில் சிறிது கர்ப்பரமும் கலந்து[3], அதில் டோலாயந்திர முறையில் பக்குவம் செய்தாலும் துத்தம் சுத்தமாகும். 130, 131.

துத்த சுத்தி.

எலுமிச்சம்பழச்சாறு, கந்தகம், மனச்சிலை, வெங்காரம் இவற்றுடன் துத்தத்தைக் கூட்டி, மூஷையில் வைத்து குக்குட புடமிட்டால்[4] அது பஸ்மமாகும்.[5] 132.

துத்த பஸ்மம்.

(1) மயில்துத்தத்தைப் பொடிசெய்து, அதற்கு நாலிலொரு பங்கு வெங்காரம் கூட்டி, புங்கயெண்ணெய்க்குள் ஒரு நாள் வைத்திருக்கவும்; பிறகு அதை அந்தமூஷைக் குள்ளே[6] வைத்து, கரிகளிட்டு எரிக்கவும்; இவ்வாறு மூன்று புடங்களிட, பட்டுப்பூச்சிநிறமான வெகு சிறந்த ஸத்துவம் அதிலிருந்து வெளியாகும். (2) துத்தத்தைச் சிறிதளவு வெங்காரத்துடன் கூட்டி, வேப்பஞ்சாற்றில் ஆட்டி, மூஷைக்குள் வைத்து, சீலிடசெய்து, நெருப்பிலிட்டு, நன்கு ஊதினால் தாம்ரம் போன்றதான ஸத்துவம் வெளியாகும. (3) சுத்திசெய்த துத்தத்தை முற்கூறிய சாரக்குளோடு[7] கூட்டியும், வேறுபல முறைகளைக் கொண்

துத்த ஸத்துவம்.

1. இரக்தவர்க்கம்—10-வது அத்தியாயம் பார்க்க.
2. ஸ்நேஹவர்க்கம்—பத்தாம் அத்தியாயத்தில் விவரம் காண்க.
3. கர்ப்பரம்—இதைப்பற்றி இரஸகத்தின் கீழ் பார்க்க.
4. குக்குடபுடம்—10-வது அத்தியாயத்தில் விவரம் பார்க்க.
5. மயில்துத்தத்தை மோர்விட்டு அரைத்து, மூஷையிலிட்டு சீலை செய்து, ஏழு புடங்களிட பஸ்மமாகும். (இரஸப்ரதீபம்.)
6. அந்தமூஷை—பத்தாவது அத்தியாயத்தில் வஜ்ரமூஷை யென்பதைப் பார்க்க.
7. வெங்காரம், புங்கயெண்ணெய், வேப்பஞ்சாறு முதலியவை முற்கூறிய சாரக்குகள்.

மெ[1] அக்னியிற் பக்குவம் செய்ய நிச்சயமாக ஸத்துவம் வெளியாகும். 133—136.

துத்த ஸத்துவத்தை யெடுத்து, அத்துடன் வன்மையான பூநாகத்தின்[2] ஸத்துவத்தைக் கூட்டி, அவற்றைக்கொண்டு மோதிரம் செய்பவனும்; இம்மோதிரத்தால் பரிசித்தால் சீக்கிரம் வயிற்றுவலி நீங்கும். இம்மோதிரத்தைக் கண்களில் தொட்டால் ஜங்கம ஸ்தாவரவிஷங்களையும்,[3] பூதங்களையும், டாகினி முதலிபிசாசுகளையும் நிவாரணம் செய்யலாம். இந்த மோதிரத்தின் குணம் நம்பிக்கையாக பலன் தருகிறது. இம்மோதிரத்தை எண்ணெயில் போட்டுக் காய்ச்சி, வயிற்றில் வலியுள்ளவிடத்தில் தேய்க்க உடனே வலிதணியும்; பிரஸவிக்கும் ஸ்த்ரீகளுக்கு உபயோகித்தால் உடனே ஸுகப்பிரஸவ முண்டாம்; நேத்ர வியாதிகளில் உபயோகித்தால் அந்த வியாதி சீக்கிரம் குணமடையும். 137—142

துத்தஸத்துவ மோதிரமும் அதன் உபயோகமும்.

சபலம்[4].

சபலம் என்னும் இரஸச்சரக்கு மஞ்சள், வெண்மை, சிவப்பு, கறுப்பு என்று நிறங்களைக்கொண்டு நான்குவிதமாகப் பிரிக்கப்படுகின்றது. அவற்றுள் பொன்னிறமானதும், வெள்ளி நிறமானதும் விசேஷமாக இரஸத்தைக் கட்டும் சுபாவ முடையன; மற்றவிரண்டும் மத்திம வகையவை; அரக்கைப் போலே எளிதில் உருகக்கூடியவை; உபயோகமில்லாதவை; வங்கத்தைப்போலே அக்னி ஸம்பந்தத்தால் வெளியில் உருகுந் தன்மையதாகையால் 'சபலம்' என்று வழங்கப்படுகிறது. 143, 144.

சபலம் பேதங்களும் அவற்றின் குணங்களும்.

சபலமானது லேகநம், ஸந்திக்தம், தேஹலோஹகரம்[5] என்னும் குணங்களையுடையது; இரஸத்தைப் பக்குவம் செய்வதற்கான காரியங்களில் உதவக்கூடியது; சுவையில் கைப்பும் இனிப்பும் கலந்தது; உஷ்ணவீர்யம்;

சபலத்தின் குணங்கள்.

1. அரிசைப் பொடிசெய்து, இரும்புப் பாத்திரத்தில் தண்ணீர் சேர்த்துக் கலக்கவும்; சிறிது நேரம் அசையாமல் வைத்திருந்து பிறகு மேலே தெளிந்துள்ள நீரைக் கொட்டிவிடவும். மீண்டும் அதில் நீர் சேர்த்து அவ்விதமே அலசிக் கழுவவும். இவ்வாறு பலமுறை செய்ய துத்த ஸத்துவம் தாம்ரரூபமாய் அடியிற் படிந்திருக்கும். இது மூன்றாவது துத்தத்தின் வேறு ஸத்துவபாதக முறையாம்.
2. பூநாகம்—நாக்குப்பூச்சி.
3. ஜங்கம விஷம்— ஸர்ப்பம், தேள் முதலியவற்றின் விஷம்; ஸ்தாவரவிஷம்—அலரி, எட்டி, பாஷாணம் முதலியவை.
4. சபலம் என்பது வைக்ராந்தம் போன்ற ஒருவித தாதுப் பொருளன். ஆனால் வைக்ராந்தம் வெகு கடினமானது; சபலம் சூட்டுக்கு எளிதில் இளகக் கூடியது. சபலம் என்பது இன்ன வஸ்துவென்று கோகிலேஸ்வர யென்று பி. வி. ராய் முதலானோர் கூறுகிறார்கள்.
5. தேஹத்தை உலோஹம்போல் திடமாகச் செய்வது.

உருவத்திற் படிகக்கல் போன்றதாகவும், ஆறு பட்டைகளையுடையதாகவும், நிகி நிகிப்பாகவும், பாரமாகவும் இருக்கும். மூன்று தோஷங்களாலுண்டாகும் கோளாறுகளைப் போக்கும்; அதிக விருஷ்யகுணமுள்ளது; [1] இரஸத்தைக் கட்டுங்குணமுடையது. ஆகவே சிலர் சபலத்தை மஹாரஸங்களில் ஒன்றாகக் கூறலாயினர். 145, 146.

சபலசுத்தியும் ஸத்துவபாதகமும்.

(1) சபலத்தை ரஜோமிச்சம்பழம், பெரும்பூணி, இஞ்சி இவற்றின் இரஸங்களில் பாவனை செய்து எடுக்க சுத்தியாகும். (2) சபலக் கற்களைப் பொடி செய்து, காஞ்சிகம் என்னும் காடி, உபவிஷங்கள், விஷங்கள் [2] இவற்றால் ஆட்டி, ஓர் உருண்டையாகச் செய்து, அதை முறைப்படி எரித்து ஸத்துவமெடுக்கலாம். 147, 148.

இரஸகம். [3]

இரஸகம் என்னும் சரக்கு தர்துரம் என்றும், காரவேல்லகம் என்றும் இருவகைப்படும். இவற்றுள் சிதள்களோடு கூடியது தர்துரம் என்றும், சிதள்களில்லாதது காரவேல்லகம் என்றும் கூறப்படும். அவற்றுள் முதலிற் கூறியது ஸத்துவமெடுப்பதற்குச் சிறந்தது; இரண்டாவது ஔஷதம் முதலிய முறைகளுக்குச் சிறந்தது. 149, 149½.

இரஸகபேதங்கள்.

இரஸகமானது ஸகல மேஹங்களையும், கபம், பித்தம் இவற்றின் கோளாறுகளையும் தீர்க்கும்; நேத்திரரோகங்கள், கூஷயம் இவற்றையும் பரிஹரிக்கும்; அயம் இரஸம் இவற்றை இரஞ்ஜநம் [4] செய்ய உபயோகமாகும்; இரஸம், இரஸகம் என்கிற இரண்டும் தேஹத்தை மிகவும் பலப்படுத்துமியல்புள்ள சிறந்த ஸித்தரஸங்கள் என்று நாகார்ஜுனனால் கூறப்பட்டவையாம். இரஸம், இரஸகம் ஆகிய இரண்டையும் எவர் நெருப்புக்கு நிற்கும்படியாகச் செய்கின்றனரோ அவருக்கு தேஹத்தை உலோஹம் போற் செய்துவிடும் ஸித்தி முற்றிலும் வசமாய்விடுமென்பதில் ஐயமில்லை. 150—152½.

இரஸகத்தின் குணங்கள்.

1. விருஷ்யம்—சுக்ரதாது முதலியதை விருத்திசெய்து, ஸ்த்ரீ புருஷர்களுடைய வீர்யத்தை பலப்படுத்துந் தன்மை.

2. விஷங்கள், உபவிஷங்கள் இவற்றைப் பற்றிய விஷயம் இந்நூலின் இறுதியில் விஷகல்பாத்யாயத்தில் விவரிக்கப்படும்.

3. இரஸகம்—இதை கர்ப்பரம், கபரி என்றும் ஸம்ஸ்கிருதத்தில் வழங்குவர்; மடல்துத்தம் என்று தமிழில் கூறப்படுகிறது (Calamine).

4. இரஞ்ஜநம்—சாயமேற்றுவது; அல்லது சிவக்கச் செய்வது.

இரஸகசுத்தியும் இரஞ்ஜநமும்.

(1) இரஸகத்தைப் பேய்ச்சுரையின் ஸ்வரஸத்தில் சேர்த்து பக்குவம்செய்ய அதுதோஷங்கள் நீங்கி சுத்தமாகவும், பொன்நிறமாகவும் ஆகிறது. (5) இரஸகத்தைக் காய்ச்சி, கொம்மட்டி மாதளைச் சாற்றில் தோய்க்க வேண்டும்; இவ்விதம் ஏழு முறைகாய்ச்சித் தோய்க்க அது சுத்தமாகும். (3) மனிதனின் அல்லது குதிரையின் சிறுநீரிலாவது, மோரிலாவது, காஞ்ஜிகமென்னும காடியிலாவது இதைக் காய்ச்சி அமிழ்த்தினாலும் சுத்தியடையும். (4) இரஸகம் ஒருமாத காலம்சிறுநீரில்ஊறினால்அது நன்கு சாயமேற்ற உதவும். 153—156.

இரஸகஸத்துவபாதக முறை.

(1) சுத்தி செய்யப்பெற்றவையான செம்பு, இரஸம், வெள்ளி, பொன் இவற்றை இரஸகத்திற்குச் சம அளவாகவும், மஞ்சள், த்ரிபலை, மருக்களா, இந்துப்பு, ஓட்டடை, வெங்காரம், சோராங்கொட்டை இவற்றை இரஸகத்திற்குக் கால்பங்கு அளவாகவும் சேர்த்து, அனைத்தையும் அம்லவர்க்கத்தினால் ஆட்டி, அக்கல்கத்தை வ்ருந்தாகமூஷையிற் பூசி [1], உலர்த்தி, அதன்மேல் சீலைசெய்து, மூஷையின் மேலே இரஸகத்தை வைத்து, பிறகு நன்றாக மூடிக்கவும். இரஸகம் உருகிப்போனதும் அக்னிஜ்வாலை நீலமாகவாவது வெண்மையாகவாவது தோன்றும். அப்போது ஸத்வபாதம் [2] என்னும் கருவியினால் மூஷையைப் பிடித்திழுத்துக் கவிழ்த்து, மூஷை உடையாதபடி மெதுவாகத் தரையிலேயே தட்டவும். அதினின்று வங்கத்தைப்போலே இரஸகஸத்துவம் விழும். இவ்விதமே முன்று நான்குமுறை பக்குவம் செய்ய, அந்த இரஸகத்தினின்று ஸத்துவ மனைத்தும் வெளியாய்விடும். (2) கடுக்காய்த்தூள், அரசு, நாகம், மஞ்சள், ஓட்டடை, வெங்காரம் இவற்றை இரஸகத்துக்கு முக மூஷையில் [3] வைத்துத் தீயிட்டு ஊதியினால் அதினின்றும் ஸத்துவமும் சுத்தமாக வெளியாகும். (3) அரக்கு, கள்ளிவேர், வெண்கடுகு, பசுங்காய், மஞ்சள், ஸர்ஜகூரம், வெங்காரம் இவற்றை இரஸகத்துக்கு சமனாகக் கூட்டி சூர்ணம் செய்து, அச்சூர்ணத்தைப் பசும் பாலினிலும் நெய்யிலும் சேர்த்து பக்குவம் செய்து எடுத்து, குளிகையுருட்டைகளாகச்செய்து, வ்ருந்தாக மூஷையினுள் அடைத்துச் சீலை செய்து, நன்றாக மூடவேண்டும். அதை அப்பால் ஓர் கற்பாறையில் கவிழ்க்க, முன்சொன்னவிதம் பலமுறை செய்ய, இரஸகத்தினின்று பள பளப்பான ஸத்துவம் வெளியாகும். (4) அல்லது முற்கூறிய விதமாக இரஸகத்தைநெய்முதலிய நிற்பக்குவம்செய்து, அதை மூஷையில் அடைத்து சீலை செய்து, ஒருசட்டியில் சிறிது மண்போட்டு ஒருசிறிய ஜலபாத்திரத்தைப் புதைத்தாற்போல வைக்கவும்; அச்சட்டியின் வாயை ஒரு சிறுதுவாரமுள்ள அகலால் மூடி, அந்த துவாரத்

1. வ்ருந்தாக மூஷை—பத்தாவது அத்தியாயம் பார்க்க.

2. ஸந்தம்சம்—குறடு.

3. முக மூஷை—பத்தாம் அத்தியாயம் பார்க்க.

திற்குச் சரியாக முற்கூறிய மூசையைக் கவிழ்த்துவைத்து, அதன் மேல் தீமூட்டி நன்றாக ஊதி ஜ்வலிக்கச்செய்யவும்; மூசையிலிருந்து பாத்திரத்திலுள்ள ஜலத்தில் ஸத்துவம் விழும்; அதையெடுத்து முறைப்படி யுபயோகிக்கலாம். 157—166½.

இரஸக பஸ்மமும் உபயோகமும்.

முற்கூறியவாறு சிரத்தித்த இரஸகத்தைத் தாளகத்துடன் கூட்டி, பாணியில் இட்டு, தீயேற்றி, இரும்புத் தடியினலே நன்றாக மதிக்தால் அது பஸ்மமாவது நிண்ணம். (1) அந்த பஸ்மத்தை அதற்குச் சமளவான காந்தபஸ்மத்தோடு கலந்து, அதில் எட்டு குன்றுமணி யெடை யெடுத்து, த்ரிபலையின் கஷாயத்துடன் உட்கொள்ளவும். (2) அதே பஸ்மத்தை இரவில் காந்தமயமான பாத்திரத்தில் சேர்த்து, நல்லெண்ணெய் கூட்டி யுபயோகிக்கலாம். இது மதுமேஹத்தையும் வெகு சீக்கிரத்திற் போக்கும். மேலும் பித்தக்கோளாறு, க்ஷயம், இரத்தகுல்மம், பிரதரம், ஸோமரோகம், ஸகலவிதமான யோனிரோகங்கள், விஷமஜ்வரங்கள், ருதுசூலை, காஸம், ச்வாஸம், விக்கல் ஆகிய பிணிகளிலும் உபயோகமானது [1]. 167—172.

மூன்றும் அத்தியாயம்.

உபரஸங்களும் ஸாதாரண ரஸங்களும்.

உபரஸங்கள்.

எட்டு உபரஸங்கள்.

கந்தகம், கைரிகம் [2], அன்னபேதி, படிகாரம், தாளகம், மனச்சிலை, அஞ்ஜநம், [3] கங்குஷ்டம் [4] என்று உபரஸங்கள் எண்வகைப்படும். அவை இரஸத்தைக் கொண்டு செய்யப்படும் ஔஷத முறைகளில் உபயோகப்படுகின்றன.—1.

1. இரஸகம் என்னும் கர்ப்பரத்தை பஸ்மாதிகள்செய்யும் வேறு சில முறைகள்:—(1) இரஸகத்துடன் இரஸம் கூட்டி அரைத்து, வாலுகாயந்திரத்தில் ஒருநாள் எரித்தெடுக்க சிவப்பான பஸ்மமாகும். (2) இரஸமும் வெங்காரமும் ஒவ்வொரு பாகம், பசுமையான கர்ப்பரம் இரண்டுபாகம்; இவற்றை யெல்லாம் இரஸ மூனைத்துடனும் நன்கு கலக்கும் வரையில் அழுத்தி அரைக்கவும்; பிறகு எலுமிச்சம்பழச்சாற்றிலும், கள்ளிப்பாலாலும் ஆட்டி, வெய்யிலில் உலர்த்தி, பிறகு எருக்கன்பாலில் அதை பாவனை செய்யவும். இவ்விதம் பக்குவம் செய்த எடுத்த கல்கம் ஒரு பாகம், வெங்காரம் ஒருபாகம், தாம்ரம்மூன்றுபாகம் ஆகக் கூட்டி அந்த மூசையில் வைத்துத் தீயிட்டு ஊதவும். இதிலிருந்து குங்குமம் மாதிரியாக ஸத்துவம் தோன்றும்.-இரஸேந்திரசிந்தாமணி (3)"இரஸகம் என்பது ஒருவித தாத்தம்; அதுவே கர்ப்பரமாம். தாத்தத்துக்குள்ள குணங்கள் யாவும் இரஸகத்திற்கும் உண்டு"—ஆயுர்வேத ப்ரகாசம்.

2. கைரிகம்—காவி யெனப்படும் ஒருவித தாதுப்பொருள்.

3. பிறகு கூறப்படும் ஸௌவீராதி அஞ்ஜந வர்க்கம்.

4. கங்குஷ்டம்—'கங்குஷ்டம்' என்று பிறகு வரும் விஷயத்தைப் பார்க்க.

கந்தகம்.

கந்தகமானது பார்வதியின் இரஜஸ்ஸிலிருந்து ஆதியில் ஆவிர்ப்பவித்ததாகக் கூறப்படுகிறது [1]. இதற்குள்ள ஒருவித ஸம்பந்தத்தைக்கொண்டு 'கந்தகம்' என்னும் பெயர் இதற்கு வழங்கப்பட்டது. (1) அக்கந்தகம் மூன்று விதமாம்; அவற்றுள் கிளிமூக்குபோல் சிவந்தநிறமாயிருப்பது சிறந்தது; மஞ்சள் நிறமானது குணத்தில் மத்திமமானது; வெண்மையாயுள்ளது அதமமாம். (2) கந்தகம் வெண்மை முதலிய நிறங்களைக்கொண்டு நான்கு விதமாகவும் பகுக்கப்பட்டிருக்கிறது; வெண்மையான கந்தகம் கடிகை எனப்படும்; அது சிலபங்களின் முறையிலும், உலோஹ பஸ்மமுறையிலும் உபயோகமாகிறது. பசுமையான கந்தகம் ஆமலஸாரம் எனப்படுகிறது; அதுவே சுகபிச்சம் [2] என்றும் கூறப்படும்; இரஸஸம்பந்தமான ஔஷதமுறைகளிலும், இரஸாயன முறைகளிலும் அது சிரேஷ்டமானது. சென்னிறமாயுள்ளது சுகதுண்டம் [3] என்று வழங்கப்படுகிறது; அது இரஸவாத முறைக்குச் சிறந்த சரக்கு. கிருஷ்ண கந்தகம் என்னும் கருநிறமான கந்தகம் கிடைப்பது அரிது; அது பிறந்தனமும் மரணமும் நேரிடாமல் தடுக்க உபயோகமாவது. 2—15.

கந்தகத்தின் குணங்கள்.

கந்தகமானது சிறந்த இரஸாயநம்; சுவையில் இனிப்பாகவும், விபாகத்தில் கடுரஸமாகவும், வீர்யத்தில் உஷ்ணமாகவும் இருக்கும். அரிப்பு, குஷ்டம், விஸர்ப்பம் என்னும் அக்கி, படை ஆகியவற்றைப் போக்கும்; அக்னிதீபநம் செய்து, ஜீர்ண சக்தியையும் விருத்தி செய்யும்; ஆமதோஷத்தைத் தீர்க்கும்; விஷஹரம்; பாரதமென்னும் இரஸத்துக்கு வீர்யங் கொடுக்கும்; கிருமிஹரம்; பார்வதியின் ஸத்துவம் எனப்படுகிற இது இரஸத்தை பஸ்மமாக்கும். [4] 16—19.

(1) கந்தகத்தைப் பாலில் சேர்த்து ஒரு நாழிகைச் சமைக்கவும்; பிறகு அதை யெடுத்து ஜலத்திற் கழுவ வேண்டும்; பிறகு

1. இங்கே பார்வதியின் இரஜஸ் என்னும் ஸ்த்ரீதாது கந்தகமாகமாறிய இதிஹாஸம் மூலக்கிரந்தத்தில் விரிவாக விவரிக்கப்படுகிறது. அவ்விவரணம் பிரக்ருத சாஸ்திர ஸம்பந்தத்திற்கு அவசியமல்லாதெனக் கருதி மொழிபெயர்க்கப்படவில்லை.

2. சுகபிச்சம்—கிளியின் இறகு போன்றது என்று பொருள்.

3. சுகதுண்டம்—நிறத்தில் கிளிமூக்குபோன்றது.

4. இங்கே பலிச்சக்ரவர்த்தி அதிக பலம் பெறுவதற்காக கந்தகத்தை முதலில் உட்கொண்டதாகவும், வாஸுகியைக் கட்டி யிழுக்கும்போது அது முகஜ்வாலையாலே அவன் உடலில் அக்கந்தகம் உருக, முகஜ்வாஸனையோடு, அவன் உடலிலிருந்து கொழுப்புப் பசை ஒருவித கந்தகமாக வெளியானதாகவும், அது பலி யென்றும், பலிவஸா என்றும் வழங்கப்படுவதாகவும் புராண வரலாறு.

பசுவின் நெய்யிற் சேர்த்து உருக்கி, ஒரு வஸ்திரத்திற் கொட்டி வடிக்கட்ட வேண்டும். இவ்விதம் செய்ய அது சுத்தியடையும். இவ்விதமாகச் சுத்திசெய்யப்படுமானல் கந்தகத்திற் கலந்துள்ள கற்கள் வஸ்திரத்தில் தங்கிவிடும்; நெய்யில் உமிகளைப் போன்று விஷம் நின்றுவிடும்; பிறகு கந்தகம் கெட்டியாக அடியில் நிற்கும். இம்முறையில் சுத்திசெய்யப்பெற்ற கந்தகம் புஜிக்கப்படுமானல் அபத்யவுணவு செய்தாலுங்கூட தீங்குண்டாவதில்லை. வேறு வகையான கந்தகத்தை யுபயோகிக்கையில் அபத்யம் செய்தால் அது விஷம்போன்றதாய் ஆபத்துண்டு பண்ணும். (2) கந்தகத்தை உருக்கிக் கரிசிலாங்கண்ணிச்சாற்றில் ஊற்றவும்; இவ்வாறு அச்சாற்றில் ஏழு தடவை அதைக் காய்ச்சி ஊற்ற அது சுத்தமாகும். (3) ஒரு பாத்திரத்தில் போதியவளவு பால் வைத்து, அதன் வாயை வஸ்திரத்தினல் மூடிக் கட்டவும்; அவ்வஸ்திரத்தின் மீது தூளாகச் செய்த கந்தகத்தைப் பரப்பவும்; வாயகன்ற மற்றொரு சட்டியை அதன்மேல் மூடிபோல் வைத்து, அச்சட்டியின் மீது காட்டுவெறட்டிகளிட்டுத் தீ மூட்டவும்; அப்போது கந்தகம் உருகி மெதுவாக வஸ்திரத்திலிருந்து வடிகட்டப்பட்டுப் பாலில் விழும்; அந்த கந்தகம் சுத்தமானதாயிருக்கும் [1]. 20—25.

கந்தக சுத்தி முறைகள்.

முற்கூறியவாறு சுத்தி செய்யப்பெற்ற கந்தகத்தை ஒரு சாணமெடை த்ரிபலை, நெய், கையாந்தகரை, தேன் இவற்றில் ஏதேனும் ஒன்றோடு கூட்டி யுட்கொள்ள, அம்மனிதனுக்கு நேத்திரசக்தி கழுகின் கண்ணுக்குச் சமானமாக ஆவதுடன், அவனை வியாதியற்றவனாகவும், தீர்க்காயுளை யுடையவனாகவும் அது செய்யும். 20—26.

சுத்த கந்தக ரஸாயநம்.

(1) ஒரு பங்கு சுத்த கந்தகம்; அதில் நாலிலொரு பங்கு தம்கடு சூர்ணம்; அவ்விரண்டையும் கலந்து, ஒரு கையகலமுள்ள தூரிசிறிது நீண்டதுமான வஸ்திரத்தில் அதைப் பரப்பி, அத்துடன் துணியைச் சுற்றி, நூலேக்கொண்டு அதைச் சுற்றவும்; பிறகு அத்திரியை நல்லெண்ணெயில் ஒரு யாமகாலம் அமிழ்த்திவைக்கவும்; அப்பால் அவ்வர்த்தியை நடுவில் ஒரு குறட்டினல் எடித்துப் பிடித்துக்கொண்டு அக்னியில் எரிக்கவும்; அதி

கந்தக சுத்திகளும் அவற்றின் குணங்களும்.

1. "சதவாரம் க்ருதச் சைவம் நிர்க்கந்தோ ஜாயதே பலீ" என்கிற அரை ச்லோகம் சில புஸ்தகங்களில் அதிகம் காணப்படுகிறது. (அதன்பொருள்:—இவ்விதம் நூறு முறை செய்ய கந்தகம் நாற்றமொழிந்ததாய்விடும்).

"கந்தகத்தைப் பொடித்துப் பாலில் அது தோய்ந்து போகுமளவும் காய்ச்சவும்; ஸூர்யாவர்த்தம் என்னும் இலையின் சாற்றில் அதைப் போட்டு மீண்டும் காய்ச்சவும்; பிறகு த்ரிபலையின் கஷாயத்தில் மறுபடி பக்குவம் செய்யவும்; இவ்விதம் செய்வதால் கந்தகமானது தனக்குள்ள நாற்றத்தை இழக்கும்."—ஆயுர்வேத ப்ரகாசம்.

ருந்து துளித் துளியாகப் பெருகும் கந்தகத்திரவத்தை ஒரு பிங்கான் பாத்திரத்தை அடியில் வைத்து, ஏந்திக்கொள்ளவும். அந்த திரவத்தை வெற்றிலையில் மூன்று பிங்குக்கள் அளவாக விட்டு, ஒரு வல்லப் பிரமாணம் [1] சுத்த ரஸமும் அதிற் கூட்டி, விரலால் நன்முகக் குழைத்து, அவ்வெற்றிலையோடு கந்தகத்திருதியையும் இரஸத்தையும் புஜித்துவிடவேண்டும். இது அதிக தீபநசக்தியை யுண்டுபண்ணும்; கூயரோகம், பாண்டுரோகம், காஸம், ச்வாஸம், வயிற்றுளைத்தல், கடுமையான கிரஹணீரோகம் இவற்றைப் போக்கும்; ஆமதோஷத்தையும் [2] விரைவில் நீக்கும்; தேஹத்திற்கு இலகுத் தன்மையையும் தரும். (2) நெய் தடவிய ஒரு இரும்புப் பாத்திரத்தில் சுத்த கந்தகத்தை உருக்கி, அதை நெய் தடவிய ஒரு கரண்டியினல் எடுத்து, இரண்டு நிஷ்கப்பிரமாணம் [3] உட்கொள்ளவும்; இது கூயம் முதலிய பலமான வியாதிகளையும், முக்கியமாய் குஷ்டரோகத்தையும் போக்கும்.

கந்தகமுபயோகிக்கையில் விலக்க வேண்டியவை.

கூஷாரங்கள், புளிப்பு, நல்லெண்ணெய், காடி, வயிற்றில் அழற்சியுண்டுபண்ணும் பதார்த்தங்கள், துவரை முதலிய இரு பிளவுகளுள்ள பருப்புவகைகள் ஆகியவற்றை முறைப்படி சுத்த கந்தத்தை உட்கொண்டு வருபவன் விலக்கிவிட வேண்டும். 27—34.

விலை கந்தகப்பேயாகங்கள்.

(1) கந்தகம் ஒரு பங்கு, மிளகு ஒரு பங்கு, த்ரிபலை ஆறு பங்கு; இவற்றைப் பெருவாகையின் வேர்க்கஷாயத்தினல் அரைத்து உட்கொள்ள எல்லாக்குஷ்டங்களும் தீரும். (2) கந்தகத்தை அவ்வேரின் இரஸத்தில் அரைத்து, தினந்தோறும் தேஹத்திலும் தேய்த்து வருவதால் அதிக உபயோகமுண்டு. இம்முறைகளை யுபயோகித்து வந்த பல்வேறு ரோகிகள் எல்லோரும் ஸ்வஸ்தமடைந்ததாக அனுபவத்தில் கண்டறிந்ததாக ஸ்ரீலோமதேவன் என்னும் வித்தர் கூறியிருக்கிறார். (3) இரண்டு நிஷ்கப்பிரமாணம் சுத்தகந்தகத்தைச் சிறிது எண்ணெயோடு பருகவும்; பிறகு காயுருவிச்சாறு, எண்ணெய், சிறுபுரிப்பொடி இவற்றைக் கூட்டி, தேஹம் முழுதும் தேய்த்துக்கொண்டு வெயிலில் நிற்கவும்; பிறகு மூன்றுவது யாமத்தில் மோரை அன்னமுமாகச் சாப்பிடவும்; இரவில் சில நேரமும், பிறகு மறுநாளிருந்து காலையில் சிறிது நேரமும் நெருப்புக்கு அருகில் நிற்கவும்; இவ்விதம் செய்துவிட்டு, எருமைச்சாணத்தைக்கொண்டு தேஹத்தைத்

1. வல்லம்—இரண்டு குஞ்ஜா பிரமாணம் (சுமார் 8 தானிய எடை).

2. ஆமதோஷம்—குடலில் உணவு ஜீர்ணமாகாமையாலும், சளைபோன்ற மலங்கள் அதிகம் சேர்ந்து விடுவதாலும், வேறு காரணங்களாலும் உண்டாகிற ஒருவித விஷம்.

3. நிஷ்கம்—சாணம் என்னும் கூறப்படும் ஓர் அளவு. சுமார் 32 அல்லது 64 குன்றிமணியெடை.

தேய்த்துக் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்யவேண்டும்; அதன் பிறகு நெய்யை உடம்பிற் பூசிக்கொண்டு, தாங்கக்கூடிய உஷ்ண முள்ள ஜலத்திலல் மீண்டும் ஸ்நானம் செய்யவும். இந்தக் கிரமத் தில் சிகித்ஸைசெய்து கொண்டு வந்தால் வெகு நாட்பட்டதும், வளி நில் தீர்க்கக்கூடாமலுள்ளதுமான சிரங்கும், சொறியும் சீக்கிரத் தில் நீங்கிப் போகும். 35—42.

கந்தக தைலம்.

ஒரு நீண்ட துண்டுச் சீலையில் எருக்கம் பாலையும், கள்ளிப் பாலையும் தடவியுலர்த்தவும்; இவ்விதம் ஏழு தடவை மேன்மேலும் தடவியுலர்த்த வேண்டும். பிறகு கந்தகத்தை வெண்ணெயிற் குழைத்து அவ்வஸ்திரத்தின் மேல் கனமாகப் பூசவும்; அச்சீலையை வர்த்தியாகச் சுருட்டி குறட்டால் எடுத்துத் தீயிற்காட்டி யெரிக்கவும்; அவ்விதம் எரியும் வர்த்தியை ஒரு பாத்திரத்திற்கு மேலே தலை கீழாகப் பிடிக்கவும்; அதிலிருந்து வடிகிற தைலத்தை முற்கூறிய வியாதிகளில் முறைப்படி யுபயோகிக்கவும். 43, 44.

சுத்த கந்தக குணங்கள்.

சுத்தமான கந்தகமானது குஷ்டம், அகால மரணம், கிழத்தனம் ஆகியவற்றைப் போக்கும்; ஜாடராக்னியை விருத்திசெய்யும்; சுக்ரத்தையும் அதிகப்படுத்தும்; வீர்யத்தில் அதிக உஷ்ணமானது.[1] 45.

கைரிகம்[2]

கைரிகத்தில் பாஷாணகைரிகம் என்பது ஒன்று; இரண்டாவது ஸ்வர்ண கைரிகம் என்பதாம்.

கைரிகம் இரண்டு வகை.

(1) அவற்றுள் கடினமானதாகவும், செம்புபோன்ற நிறமுள்ளதாகவும் இருப்பது பாஷாணகைரிகம் எனப்படுகிறது. (2) ஸ்வர்ணகைரிகமோ அதிக சிவப்பாகவும், ஸ்நிக்தமாகவும், மழமழப்பாகவும் இருக்கும். 46½.

கைரிகங்களின் குணங்கள்.

(1) ஸ்வர்ண கைரிகமானது இனிப்பும் துவர்ப்புமான சுவையுடையதாகவும், ஸ்நிக்தமாகவும், வீர்யத்தில் சீதமாகவும் இருக்கும். நேத்திரத்திற்கு ஹிதமானது. இரத்தபித்தம், விக்கல், வாந்தி, விஷதோஷம், இரத்த தோஷம் இவைகளைத் தீர்க்கும். (2) பாஷாண கைரிகம் என்கிற மற்றொரு வகையான சில ஸ்வர்ணகைரிகத்தினும் குணத்திற் குறைந்தது. 47, 48.

1. சுத்த கந்தகத்தை அர்ஜுநகஷாரத்தினுள் (மருதமரப்பட்டை முதலியதை எரித்தெடுக்கும் ஒருவித காரமான உப்பு) வைத்து, ஒரு ஸம்புடத்தில் எரிக்கவும்; பிறகு அக்கந்தகத்தைக் கீழாநெல்லிச்சாற்றில் மூன்று யாமநேரம் ஆட்டி, கபோத புடத்தில் (10-வது அத்தியாயம் பார்க்க) எரிக்க நன்கு பஸ்மமாகும்.—வாத மஞ்ஜரீ.

2. கைரிகம்—காவிபோன்று காணப்படுகிற ஒருவித சிலையுருவமான தாதுப்பொருள். (Bolus armenia rubra என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும்.)

கைரிக சுத்தி, கைரிகஸத்துவம்.

(1) கைரிகத்தைப் பசுவின்பாலில் சில தடவை பாவனை செய்ய அது சுத்தியடையும். (2) கைரிகதாது சுயம் ஸத்துவ ரூபமானது என்று நந்தீச்வரஞல் கூறப்படுகிறது. வேறு சில வித்தர்கள் இதை கஷாரங்களிலும், அம்லவர்க்கத்திலும் பாவனை செய்து பக்குவம் பண்ணினால் இதிலிருந்து ஸத்துவம் வெளியாகுமென்கிறார்கள். (3) கைரிக ஸத்துவம் ஸுதேஜந்த்ர மென்கிற இரஸத்துடன் நன்கு கூடுமியல்புடையது; அப்படிக் கூடுவதால் அது குணத்தில் மிகச் சிறப்படைகிறது. 49, 50.

காஸீஸம்—அன்னபேதி.

அன்ன பேதியும் அதன் குணங்களும்.

(1) காஸீஸம் என்கிற அன்னபேதி வாலுகா காஸீஸம் என்றும், புஷ்ப காஸீஸம் என்றும் இருவகைப்படும். இரண்டு காஸீஸங்களும் பொதுவாக கஷாரம், அம்லம், அகிற் கட்டையின் புகை இவற்றைப் போன்ற நிறமுள்ளனவா யிருக்கும். (2) சுவித்ரம் என்னும் புண்ணைக் குஷ்டத்தைப் போக்கும்; மயிர்களைக் கருமையாக்கும். புஷ்ப காஸீஸம் மற்றொன்றைவிட மிகப் பிரசஸ்தமானது; சிறிது உஷ்ண வீர்யமுள்ளது; துவர்ப்பும் அம்லமும் கலந்த சுவையுடையது; நேத்திரத்திற்கு மிகவும் ஹிதமானது; விஷதோஷம், வாதரோகங்கள், சிலேஷ்ம ரோகங்கள் இவற்றைப் பரிஹரிக்கும்; வெண்குஷ்டம், கூஷயம் இவற்றையும் தீர்க்கும்; கேசரஞ்ஜநகுணமும் இதற்குண்டு.[1] 51—53.

அன்ன பேதி சுத்தி முறை காஸீஸ ஸத்துவமும்.

(1) அன்னபேதியானது கையாந்தகரைச் சாற்றில் ஒரு முறை பாவனை செய்யப்படுவதால் சுத்தமாகும். (2) பித்தவர்க்கங்களில் பாவனை செய்தாலும் இது சுத்தியடைகிறது. (3) பிறகு கூறப்படும் துவரி யென்னும் தாதுப் பொருளிலிருந்து ஸத்துவமெடுப்பது போலவே இதிலிருந்தும் ஸத்துவமெடுக்கலாம். 54.

1. "காஸீஸம் என்னும் அன்னபேதி தாது காஸீஸம், புஷ்ப காஸீஸம் என்று இருவகைப்படும். (வாலுகா காஸீஸமே தாது காஸீஸம் என்றும், பாம்ஸு காஸீஸ என்றும் கூறப்படுகிறது.) இவற்றுள் தாது காஸீஸம் இலேப்பசுமையும் சிவப்பும் கலந்த நிறமுடையது; ஒருவாறு மண் அல்லது பஸ்மம் போன்றது; புஷ்பகாஸீஸமோ ஒருவாறு மஞ்சள் நிறமுள்ளது. வீர்யத்தில் உஷ்ணமானது: புளிப்பு, கைப்பு, துவர்ப்பு இச்சுவைகள் கலந்தது; வாத கப ரோகங்களைத் தணிக்கும்; கேசங்களுக்கு ஹிதமானது; நேத்திர ரோகஹரம்; சொறி, விஷதோஷம் இவற்றை நீக்கும்; மூத்ரக்ருச்ரம், அச்மரீ, வெண்குஷ்டம் இவைகளையும் தீர்க்கும்."—இரத்ன மாலா.

"காஸீஸம், தாது காஸீஸம், புஷ்ப காஸீஸம் என்று அன்னபேதி மூன்று விதம்" என்று பைஷஜ்ய ரத்நாவலி.

அன்ன பேதியை கந்தகம் கூட்டி பஸ்மம் செய்யவும்; அவ்வி தமே அன்னபேதியைக் கூட்டி கந்தலோஹத்தை பஸ்மம் செய்யவும். இவ்விரண்டையும் ஸமபாகமா கச்சேர்த்து, த்ரிபலை, வாய்விடங்கம் இவற்றின் சூர் ணத்தையும் ஸமபாகமாகக் கலந்து, அதில் சாணிமடையெடுத்து, நெய்யும் தேனும் சிறிது ஏற்றக்குறைவான அளவில் கூட்டி, விடியற் காலையில் உட்கொண்டுவரவும்; இதுவெண்குஷ்டம், பாண்டு, கூஷயம், குல்மம், ப்லீஹரோகம், சூலை, மூலம் இவற்றைப் போக்குவதிற் சிறந்தது. மேலும் இரஸாயநமுறைப்படி ஒரு வருஷமளவும் இதை யுபயோகித்து வருவதால், இது ஆமதோஷத்தைப் போக்கும்; அக்னிமாந்தியத்தைப் போக்கி ஜாடராக்னியை விருத்தி செய்யும்; நிரை கரைகளையும் போக்கும். 55.—58.

காளீஸ ரஸாயநம்.

துவரி [1].

ஸௌராஷ்ட்ர தேசத்திலுண்டாகிற கல்லிலிருந்து வரும் ஒரு வித மண் 'துவரி' எனப்படுகிறது; வஸ்திரங்களிற் பூசுவதால் இது அவற்றிற்கு மஞ்ஜிஷ்டியைப் போ ன்று ஒருவகைச் சாயம் கொடுக்கும்; அதற்குபடிகி[2] என்று பெயர். இதில் மற்றொருவகைக்கு புல்லிகா[3] எனப்பெயர். (1) அவற்றுள் படிகி யென்பது சிறிதுபசுமைநிறமா னது; குருவாகவும், ஸ்நிக்தமாகவும் இருக்கும்; விஷஹரம், விரண ஹரம், குஷ்டஹரம் என்னும் குணங்களும் உண்டு; இதற்கு பீதிகா என்றும் பெயர். (2) புல்லதுவரி[4] என்கிற மற்றொருவகையான துவ ரியானது இலேசாகவும், வெண்மையாகவும், ஸ்நிக்தமாகவும், அம் லரஸமுள்ளதாகவும் இருக்கும்; அதை அயத்தின்மேல் பூசித் தேய்க்கும் முறையால் அயம் செம்பாக மாறும். 59—62.

துவரியின் பே தங்களும் இல கூணங்களும்.

துவரிக்கு துவர்ப்பு, சிறிது கார்ப்பு, புளிப்பு ஆகிய சுவைக ளும், கண்ட்யம்[5], கேச்யம்,[6] விரணஹரம், விஷஹ ரம், ச்வித்ரஹரம்[7], த்ரிதோஷஹரம்[8] என்னும் குணங்களும் உண்டு; நேத்ரத்திற்கு ஹிதமானது. பாரதம் அல்லது இரஸத்தை ஜாரணம் செய்யவும்[9] உதவும். 63.

துவரியின் பொதுக் குணங்கள்.

1. இதுவேஸௌராஷ்ட்ரமருத்திகையெனப்படுகிறது (காங்கஷி).
2. இது ஸ்ப்படிகி என்றும், பீதிகா என்றுங் கூட கூறப்படுகி றது. (படிக்காம்).
3. இது புல்லதுவரீ என்றுங் கூறப்படும்.
4. புல்லதுவரியை அலுமினியம் என்று கூறுவர்.
5. கண்ட்யம்—கண்டத்திற்கு (தொண்டைக்கு) ஹிதமானது.
6. கேச்யம்—மயிர்களே வளர்க்கவும் செம்மைப்படுத்தவும் உபயோ கமானது.
7. ச்வித்ரஹரம்—வெண்குஷ்டத்தைப் போக்குவது.
8. த்ரிதோஷஹரம்—வாத-பித்த-கபங்களைத் தணிப்பது.
9. ஜாரணம் என்பதைப்பற்றி 8-ம் அத்தியாயம் பார்க்க.

(1) துவரியை காஞ்ஜிக மென்னும் கரடியில் மூன்று தினங்கள் போட்டு வைத்தால், அது சுத்தியடையும். (2) அதை க்ஷாரங்களையும் அம்லங்களையும் விட்டு அரைத்து அக்னியில் ஊதினால், ஸத்துவத்தை வெளியிடும். (3) துவரியை நூறுமுறை பசுவின் பித்தத்தில் பாவனை செய்து, பிறகு அதை நெருப்பிலிட்டு ஊதினால் ஸத்துவம் வெளிப்படும். 64, 65.

துவரியின் சுத்தியும் ஸத்துவமும்.

தாளகம்.

தாளகம் என்னும் தாதுப்பொருள்[1] பத்ரதாளகம் என்றும், பிண்டதாளகம் என்றும் இருவகைப்படும். (1) பொன்னிறமாகவும், கன்னத்தில் குருத்தன்மையதாக வும், ஸ்நிக்தத்தமாகவும், மெல்லிய தளங்களைப் பெற்றதாகவும், பள பளப்பாகவுமுள்ளது 'பத்ரதாளகம்' எனக் கூறப்படும். இதில் அதிக மலங்களையுடைய தாளகம் இரஸாயந குணமுள்ளதாம். (2) தளங் களில்லாததும், பிண்டம் போன்றிருப்பதும், பாரமுள்ளதுமான தாளகம் 'பிண்டதாளகம்' எனப்படுகிறது. அது மிகச் சொற்ப ஸத்துவமுள்ளது; குணத்திற் குன்றியது. ஹரிதாளகத்திற்கு ஸ்த்ரீபுஷ்பஹரம்[2] என்னும் குணமும் உண்டு.

தாளகம்.

தாளகத்தின் பொதுவான குணங்கள்.

சிலேஷ்மஹரம், இரக்ததோஷஹரம், விஷஹரம், வாததோஷஹரம், பூததோஷஹரம், ஸ்நிக்தம், உஷ்ணவீர்யம், கடுரஸம், தீபகம், குஷ்டஹரம் என் னும் குணங்களையுடையது. சுத்தி செய்யப்படாத தாளகமானது ஆயுளைப் போக்கும்; கபம், வாதம், மேஹம் இவற் றை விருத்தி செய்யும்; மேலும் தேஹ அழுற்சி, கொப்புளங்கள் இவற்றை யுண்டுபண்ணும்; அவய வங்களைச் சுருங்கச்செய்யும்; ஆகவே தாளகத்தைச் சுத்தி செய்த பிறகே உபயோகிக்கவேண்டும். 66—70.

சுத்தி செய்யாத தாள கத்தின் பொ துக் குணங்கள்

(1) சாம்பற் பூசுணிக்காயின் சாற்றிலாவது, (2) திலக்ஷாரத் தின் தண்ணீரிலாவது, (3) சுண்ணும்புக் கரைத்த ஜலத்திலாவது டோலாயந்திரத்திற் கட்டி தொங்கவிட்டால் தாள கம் சுத்தியடையும். (4) தாளகத்தைச் சிறு சிறு துண்டுகளாக உடைத்து, அதற்குப் பத்தில் ஒரு பங்கு வெங்காரம் கூட்டி, எலுமிச்சம்பழச் சாற்றிலும், பிறகு கன்யாநிகமென்னும் காடியிலும் அத்துண்டுகளைக் கழுவி, நான்கு பாகமாகச்செய்த வஸ்திரத்திற் கட்டி, டோலாயந்திரத்தில்[3] ஒரு நாள் புடியவும் சமைக்கவேண்டும். (5) சோற்று நீரில் சுண்ணும்பைக் கலக்கி அதிலாவது, (6) கூஷ்மாண்டச் சாற்றிலாவது ஒரு நாள்

தாளகம் சுத்தி செய்யும் முறைகள்.

1. தாளகம்—இதற்கு ஹர்தாளம் என்றும் பெயருண்டு.
2. ஸ்த்ரீபுஷ்பஹரம்—ஸ்த்ரீகளுடைய மாதவிடாயைப் போக் கும் குணம்.
3. டோலாயந்திரம்—இதைப்பற்றி 9-ம் அத்தியாயம் பார்க்க.

டோலா யந்திரத்தில் பக்குவம் செய்யலாம். (7) இலவம் பட்டைக் கஷாயத்தின் ஆவியிலாவது அவ்விதமே பக்குவம் செய்ய தாளகம் சுத்தியடையும். 71—73.

பலாசவேரைக் கஷாயமிட்டு, அதைத் தேன்போல மிகக் குழம்பாகக் காய்ச்சி, அக்கஷாயத்தில் சுத்திசெய்த தாளகத்தை மூன்று முறை பாவனை[1] செய்யவும். பிறகு அதை யெடுத்து, எருமையின் கிறுநீர்விட்டு ஆட்டி யெடுத்து, பத்து வறட்டிகளைக் கொண்டு புடமிடவும்; அதை மீண்டும் முன்போலவே அரைத்துப் புடமிடவேண்டும்; இவ்விதம் பன்னிரண்டு முறை புடம்போட, சுத்தமான பஸ்மமாகும். பிறகு அதை முறைப்படி ஔஷதமாயுபயோகிக்கலாம்[2]. 74, 75.

தாளக பஸ்ம முறை

(1) சுத்திசெய்த தாளகத்தை ஒரு பாத்திரத்தில் வைத்து, அதிற் சிறிதளவு கொள்ளுக் கஷாயத்தையும், புளித்த மோரையும், எருமை நெய்யையும், தேனையும் சேர்க்கவும்; பிறகு நடுவில் சிறு துவாரம் விட்ட ஓர் அகலால் அப்பாத்திரத்தின் வாயை மூடி சீலை செய்யவும்; அடியில் பிறகு நீயிட்டு, அத்தீயைக் கிரமமாக அதிகப்படுத்த வேண்டும்; அகலின் துவாரத்தைச் சாணத்தினால் ஒரு யாம காலம் மூடி வைத்திருந்து, பிறகு அந்த துவாரத்தைத் திறந்து பார்க்க, அவ்வழியாக வெண்மையான புகை கிளம்புவதைப் பார்க்கலாம்; பிறகு பாத்திரத்தை இறக்கி, பாத்திரத்திலுள்ளது நன்றாகக் குளிர்ந்த பிறகு, அதிலுள்ள ஸத்துவத்தை யெடுத்துக் கொள்ளவும். இவ்விதமே ஸகலமான ஏனைய பாஷாணங்களி

தாளக ஸத்துவ முறைகள்.

1. பாவனை—சரக்குகளுக்குச் சுறுக்கேற்றும் முறை.

2. வேறு சில தாளக பஸ்மமுறைகள்:—(1) அரசம்பட்டையைப் பொடி செய்து, வெகு மிருதுவாக வஸ்திர காளகம் செய்தெடுத்து, ஒரு சிறு சட்டியில் ஓர் அங்குலம் கனமாக அச்சூர்ணத்தைச் சேர்த்து, அதன்மீது சுத்தி செய்த தாளகத்தை வைத்து, அதன்மேல் சட்டியின் கழுத்து வரையில் அச்சூர்ணத்தைப் பரப்பி, ஒரு மடக்கினால் சட்டியை மூடவும்; அதை அடுப்பில் வைத்து, சட்டியிலுள்ள சூர்ணத்திற் பாதி வேகும் வரையில் எரித்து, அப்பால் சட்டியை அப்புறப்படுத்தவும். எல்லாம் நன்றாக ஆறிய பிறகு, உள்ளே பஸ்மமாயுள்ள தாளகத்தை யெடுத்துக் கொள்ளவும்:—(நாகார்ஜுந தந்திரம்.) (2) 'சுத்தமான பத்ர தாளகத்தை வெள்ளைச் சாறடைச் சாற்றால் ஒரு நாள் அரைத்து, உருட்டி யுலர்த்தவும்; அல்லது சக்கரம்போல் செய்து உலர்த்தவும்; ஒரு சட்டியில் புளிநவாகூரத்தைப் பாதியளவு பரப்பி, அதில் தாளகத்தை வைத்து, அந்த கூரத்தை மீண்டும் கழுத்துவரையிலும் பரப்பி, சட்டியை அடுப்பின்மேல் ஏற்றி எரிக்கவும்; இவ்விதம் நாள் விட்டு நாளாக ஐந்து நாட்கள் எரித்தெடுக்கவும். இவ்விதம் பக்குவம்செய்ய, தாளகம் பஸ்மமாகும். இதை உபயோகிக்கும் அளவு ஒரு ராஜிகை':—பாவப்ரகாசம்.

மிருந்தும்[1] ஸத்துவம் எடுக்கும் முறைகள் அநேகம் உண்டு; (2) ஒரு பலம் தாளகத்தை எருக்கம்பால் விட்டு ஒரு நாள் ஆட்டி, பிறகு ஒரு பலம் நல்லெண்ணெய் கூட்டிக் கலக்கவும். பிறகு அதைத் திறந்த வெளியில் ஏழு யாமகாலம் நன்றாக எரிக்கவும்; பிறகு தானே ஆறிய பிறகு, பாத்திரத்தின் அடியில் உள்ள வெண்மையான ஸத்துவத்தை யெடுத்துக் கொள்ளவும். (3) ஆடு, குதிரை இவற்றின் உமிழ்நீரையும், கந்தகத்தையும் தாளகத்துடன் சேர்த்து, இரண்டு நாட்கள் விடாமுயற்சியாய் அரைக்கவும்; பிறகு நிராவணவர்க்கத்தைக்[2] கூட்டி, மேலே மூன்று சீலைகள் செய்த காசிக்குப்பியில் அடைத்து, அக்குப்பியை ஒரு பாத்திரத்தில் வைத்து, குப்பியின் பாதிபாகம் வரையில் மணலை நிரப்பி, பன்னிரண்டு யாமங்கள் நீயிட்டு எரிக்கவும்; பிறகு பாத்திரத்தை இறக்கி, ஆறியதும், குப்பியின் கழுத்தில் சேர்ந்துள்ள சுத்தமான ஸத்துவத்தைக் கிரஹித்துக் கொள்ளவும். (4) அரைப்பலம் தாளகத்தை நிடமான வெள்ளைத்துணியில் கட்டி, கந்தகத்தை அதன்மேல் மூன்று வரிசை தடவி யுலர்த்தி யெடுக்கவும்; மூன்று பலம் தாம்ரத்தை உருக்கி, அதில் அத்தாளகப் பொட்டலத்தைப் போட்டு, உடனே சாம்பலால் மூடிவிடவும்; பிறகு தாம்ரத்தினுள் சூழ்ந்துகொள்ளப்பட்டதும், வெளுப்பாகவும், மிருதுவாகவும் உள்ள தாளகஸத்துவத்தைக் கிரஹிக்கவும்; இது இரஸவைலைகளுக்கும் இரஸாயந முறைகளுக்கும் உபயோகமானது. 76—87.

மநச்சிலை.[3]

மநச்சிலையானது ச்யாமிகா, கணவீரகா, கண்டா, என்று மூவகைப்படும். அவற்றின் கன்மை அடியில் பகுத்து விவரிக்கப்படுகிறது:—(1) கறுப்பு, சிவப்பு, வெண்மை ஆகிய கலப்பு நிறங்கொண்டதாகவும், அதிக கனமாகவும் இருப்பது ச்யாமிகா எனப்படும். (2) வெண்மை நீங்கியதாகவும், பளபளப்பாகவும், செம்பு நிறமுடையதாகவும் இருப்பது கணவீரகா. (3) எளிதிற் பொடியாகக் கூடியதாகவும், அதிக பளபளப்பாகவும், அதிக கனமாகவும் இருப்பது கண்டா என்று கூறப்படும். இவற்றுள் முதலாவதினும் இரண்டாவது குணத்திற் சிறந்தது; அதினும் இறுதியிற் கூறியது அதிக குணமுள்ளது; அது அதிக ஸத்துவமும் நிறைந்தது. 88—90.

மநச்சிலை விதம்.

(1) மநச்சிலையானது சிரேஷ்டமான இரஸாயநச் சரக்கு; மநச்சிலையின் சுவையில் கைப்பும் கார்ப்பும் கலந்தது; வீர்யத்தில் உஷ்ணமானது; கபவாதங்களை ஹரிக்குங்குண

1. இதனால் தாளகம் பாஷாண மென்றும், ஆகவே சங்கபாஷாணாதிகளைப் போலவே அதை வெகு ஜாக்கிரதையாயுபயோகிக்க வேண்டுமென்றும் அறிக.

2. நிராவண வர்க்கம்—பத்தாம் அத்தியாயம் பார்க்க.

3. இதை மனோசிலையென்று தமிழில் வழங்குவர்.

மூள்ளது; சுயம் ஸத்துவரூபமானது; பூததோஷம், விஷக் கோளாறு, அக்னிமாந்த்யம், சொறி, காஸம், கூஷயம் இவற்றைப் பரிஹரிக்கும். (2) சுத்தி செய்யாத மகரிலையானது அச்மரீ, மூத்ரக்ருச்ரம், அக்னிமாந்த்யம், மலபந்தம் ஆகியவற்றையுண்டு பண்ணும்; சுத்த மகரிலையே ஸகல நோய்களையும் போக்கவல்லது. 91, 92.

மகரிலையின் சுத்திமுறைகள்.

(1) அகத்தியிலைச் சாற்றிலாவது, இஞ்சிச் சாற்றிலாவது ஏழு முறை பாவனை செய்தால் மகரிலை நன்கு சுத்தமாகும். (2) தழுதாழை, கரிசிலாங்கண்ணி, செவ்வகத்தி இவற்றில் எதேனுமொன்றின் சாற்றை ஒரு கலத்திற் சேர்த்து, அதில் டோலா யந்திர முறையில் மகரிலையை ஒரு யாம காலம் பக்குவம் செய்து, அவ்விதமே ஆட்டு மூத்திரத்திலும் பக்குவம் செய்து, அரிசி கழுவிய நீரால் பிறகு அதைக் கழுவி யெடுக்கவும். அதைப் பிறகு எல்லா ரோகங்களிலும் உபயோகிக்கலாம். 93, 94.

மகரிலாஸத்துவ பாதன முறைகள்.

(1) சுத்தி செய்த மகரிலையை எட்டுப்பங்கு இரும்புச் சிட்டத்துடனும், வெல்லம் மஹிஷாக்ஷி நெய் இவற்றோடுங் கூட்டி, கோஷ்டீயந்திரத்தில்[1] அடைத்து, கடுந்தியிட்டு ஊத, அதிலிருந்து ஸத்துவம் வெளியாகும். (2) நாகஸத்துவம்[2], வெங்காரம், மருக்காரை யென்னும் மதனபலம் இவற்றைப் பாகலிலைச் சாற்றால் அரைத்து, அக்கல்கத்தை மூஷையினுட்புறத்திற் பூசிவிடவும். கூஷாரங்களாலும் அம்லவர்க்கத்தினுலும் அரைக்கப்பெற்ற மகரிலையை அந்தமூஷையில் வைத்து, கரியிட்டு இரண்டு நாழிகை ஊதவும்; அதனுல் மகரிலையிலிருந்து ஸத்துவம் வெளியாகும். 95—97.

1. கோஷ்டீயந்திரம்-9-ம் அத்தியாயம் பார்க்க.

2. நாகஸத்துவம்—பூநாகஸத்துவம்; நாகப் பூச்சியிலிருந்து எடுக்கப்படும் சத்து.

அஞ்ஜநங்கள்.

ஸௌவீராஞ்ஜநம், இரஸாஞ்ஜநம், ஸ்ரோதோஞ்ஜநம், புஷ்பாஞ்ஜநம், நீலாஞ்ஜநம் ஆகியவை அஞ்ஜநவகுப்பைச் சேர்ந்த சரக்குகளாம். இவற்றின் தன்மைகள் இதனடியில் விவரிக்கப்படுகின்றன. 98, 98½.

அஞ்ஜநங்கள்.

இவற்றுள் ஸௌவீராஞ்ஜநம்[3] என்பது தூமநிறமாயிருக்கும்; சீத வீர்யமானது; இரக்தபித்தத்தைப் போக்கும்; விஷக்கோளாறு, விக்கல், நேத்திர ரோகம் இவற்றைத் தீர்க்கும்; விரணசோதநம்[1], விரண ரோபணம்[2] என்னும் குணங்களும் இதற்குண்டு. 99½.

ஸௌவீராஞ்ஜநம்.

3. 'ஸௌவீரா' என்னும் நதியில் உண்டாவதால் ஸௌவீரம் என்று இதற்குப் பெயர் வந்ததாம். விந்துநதிக் கரையிலுள்ள ஸௌவீரமென்னும் பர்வதப்பிராந்தத்தில் உண்டாவதாகச் சிலர். இதைக் கறுப்புச் சுர்மா என்றும், ஆங்கிலத்தில் Sulphide of Lead என்றும் வழங்குவர்.

இரஸாஞ்ஜநம்[3] நிறத்தில் ஒருவாறு மஞ்சளாயிருக்கும்; விஷக்கோளாறு, முக ரோகங்கள் இவற்றைத் தீர்க்கும்; ச்வாஸரோகம், வீக்கம், வாதரோகங்கள், இரக்த பித்தம் ஆகியவற்றையும் போக்கவல்லது; தேஹ நிறத்தையும் செம்மைப் படுத்தும். 100½.

இரஸாஞ்ஜநம்.

ஸ்ரோதோஞ்ஜநம்[4] என்பது சீத வீர்யம்; ஸ்நிக்த குணம்; மேலே கபில நிறமானது; சுவையில் ஒருவாறு இனிப்பானது; லேகநம்[5], நேத்ரியம்[6] என்னும் குணங்களுள்ளது; விக்கல், விஷக்கோளாறு, வாந்தி, கபதோஷம், இரக்தபித்தம் ஆகிய நோய்களைத் தீர்க்கக் கூடியது. மேனும் பார்ப்பதற்குப் புற்றைப் போலவும், உடைத்தால்

ஸ்ரோதோஞ்ஜநம்.

1. விரணசோதநம்—விரணங்களைச் சுத்தம் செய்யுந் தன்மை.

2. விரண ரோபணம்—விரணங்களை ஆற்றுந் தன்மை.

3. மரமஞ்சளைக் கஷாயமிட்டு, அது பாகு பதத்திற்கு வந்தால், அதை இரஸாஞ்ஜநம் என்று கூறுவர். "மரமஞ்சளை நன்முகக் காய்ச்சிக் கஷாயமிடவும்; அதற்குச் சமமாகப் பால் சேர்த்து, நன்கு குழம்பாக வரும் வரையில் காய்ச்சி யெடுக்கவும். இது இரஸாஞ்ஜநம் எனப்படுகிறது. நேத்ரரத்திற்கு வெகு சிறந்த ஔஷதம்" என்பது இதன் முறை. 'பெர்பெரிப்பட்டையின் (Berberis Asiatica) கஷாயத்தால் செய்யப்படுவது இரஸாஞ்ஜநம்' என்று பி. வி. ராய். தார்க்ஷ்யம் அல்லது தார்க்ஷ்யசைலம் எனப்படுவதும், ஸ்ரோதோஞ்ஜநம் என்பதும் இந்த இரஸாஞ்ஜநந்தான் என்றும், இது ஒரு வகையான கறுத்த இயற்கைக் கல்லுருவமான சரக்கென்றும் ஸுச்ருதர். (ஸு. ஸூ. 38.அ.)

4. 'ஸ்ரோதோஞ்ஜநம் வெளுப்பு நிறம்; யமுனையாறு உண்டாகுமிடத்தில் உற்பத்தியாவது; இதுவும் ஒருவகை சுர்மா என்னும் மை வகையைச் சேர்ந்தது; ஆஞல் கறுப்புச் சுர்மாவினும் குணத்திற் சிறந்தது' என்று பி. வி. ராய். 'ஸ்ரோதோஞ்ஜநம் கறுப்பு; ஸௌவீராஞ்ஜநம் வெண்மை. இவ்விரண்டுங் குணத்திற் சமமானவை; ஆகிலும் ஸௌவீராஞ்ஜநத்தினும் ஸ்ரோதோஞ்ஜநம் சிறந்தது' என்று பாவப்ரகாசம்.

5. லேகநம்—கபம் முதலியதைக் கல்லி வெளிப்படுத்துவது, அல்லது தோஷம் சேர்ந்துள்ள விடத்திலிருந்து அதைக் கிளப்பி வெளிப்படுத்துவது.

6. நேத்ரியம்—நேத்ர தோஷத்தைப் போக்குவது; கண்ணுக்கு ஹிதமானது.

உட்புறம் கரு நெய்தல் நிறமாகவும், தேய்த்தால் காவியின் நிறமாகவும் இருப்பதை ஸ்ரோதோஞ்ஜநம் என்றறிக.[1] 101, 102.

நிறத்தில் வெளுப்பா யிருப்பது புஷ்பாஞ்ஜநம்.[2] அது ஸ்நிக்தத் தன்மையும், சீத வீர்யமும் உடையது; பெரும் பாலும் எல்லா நேத்திரரோகங்களையும் தீர்க்கும்; தீராத கடும் விக்கலையும் நீர்க்க வல்லது; விஷக்கோளாறு, ஜ்வரம் ஆகிய நோய்களையும் பரிஹரிக்கும். 103.

புஷ்பாஞ்ஜநம்.

நீலாஞ்ஜநம்[3] என்பது கனமும், குருகுணமும், ஸ்நிக்தத் தன்மையும் உடையது; நேத்ரியம், த்ரிதோஷ ஹரம்,[4] இரஸாயநம் என்னும் குணங்களைப் பெற்றது; ஸ்வர்ணத்தை பஸ்மம் செய்யக் கூடியது; அயத்தை மெதுப் படுத்தும் தன்மையது. 104.

நீலாஞ்ஜநம்.

(1) அஞ்ஜநங்கள் எல்லாம் கையாந்தகரைச் சாற்றினால் சுத்தமாகும். (2) ஸௌர்யாவர்த்தாதி வர்க்கத்திற்[5] கூறுகிற சாக்குகளின் சாற்றினால் இரஸாஞ்ஜநம் சுத்தியடையும். (1) மநச்சிலையிலிருந்து ஸத்துவம் எடுக்கப்படும் விதமாகவே அஞ்ஜநங்களிலிருந்தும் ஸத்துவம் கிரஹிக்கலாம். (2) இராஜாவர்த்தத்திலிருந்து[6] கிரஹிப்பதுபோலவே ஸ்ரோதோஞ்ஜநத்திலிருந்தும் ஸத்துவமெடுக்கலாம். (3) பசுவின் சாணம், பசுவின் மோர், கோமூத்ரம் இவைகளிலும், நெய், தேன், கொழுப்பு ஆகியவைகளிலும் அநேகமுறை ஸ்ரோதஞ்ஜநத்தைப் பாவநை செய்துதித்தால், பிறகு அவ்வஞ்ஜநப் பாதரஸத்தை எளிதிற் கட்டுவதற்கான சக்தியைப்பெறுகின்றது. 105—108.

அஞ்ஜநங்களின் சுத்தி.

அஞ்ஜநங்களிலிருந்து ஸத்துவமெடுத்தல்.

ஸ்ரோதோஞ்ஜநத்திற்கு இரஸபந்தந குணம்.

1. பிறகு 106-வது ச்லோகம் ஸ்ரோதோஞ்ஜநத்தைப் பற்றிய தாகையால், அதன் மொழி பெயர்ப்பும் இங்கேயே சேர்த்து எழுதப் பட்டது. அதை 102-வது ச்லோகமாக இங்கே எடுத்துக்கொண்டோம்.

2. "புஷ்பாஞ்ஜநம் ஒரு செயற்கையான அஞ்ஜநப் பொருள்" என்று சிலர். 'இது ஒரு வெண்மையான சுண்ணம்' என்று ராய். 'பித்தளைச் சுண்ணம்' என்று வில்ஸன்.

3. நீலாஞ்ஜநத்தை Antimony என்று சிலரும், Sulphide of Iron என்று சிலரும் கூறுகிறார்கள். நீலாஞ்ஜநத்திற்குக் கூறப் படுகிற அயத்தை மிருதுவாக்குங் குணம் முதலியதைக் கொண்டு பிந்திய வஸ்துவாகவே இருக்கவேண்டும்.

4. ஸந்நிபாதஹரம் என்றும் வழங்கப்படும்.

5. கங்குஷ்டசுத்திமுறையில் ஸௌர்யாவர்த்தாதி வர்க்கம் கூறப்படுகிறது.

6. இராஜாவர்த்தம்—ஸாதாரண ரஸங்களுக்குப் பிறகு கூறப்படும் ஒரு சாக்கு.

கங்குஷ்டம்.[1]

கங்குஷ்டமும் அதன் பேதங்களும்.

(1) இமயமலையின் அடிவாரத்திலும், சிகரங்களிலும் 'கங்குஷ்டம்' என்பது உண்டாகிறது. அது இருவகைப்படும்; அவற்றுள் ஒன்று நாளிகை எனப்படும்; மற்றொன்று ரேணுகம் என்று கூறப்படும். அவற்றுள் முதலாவது மஞ்சள் வர்ணமானது; கனமானது; ஸ்நிக்தத்தமாகவும் இருக்கும்; இது சிறந்த கங்குஷ்டம். ரேணுகமென்பது கருமஞ்சள் நிறமாகவும், இலேசாகவும், ஸத்துவமற்றதாகவும் இருக்கும்; இது சிறந்ததல்ல. (2) கருமஞ்சள் நிறமான கங்குஷ்டம், புதிதாகப் பிறந்த யானைக்குட்டியின் மலமென்றும், அது ரேசந குணமுடையதென்றும்[2] சிலர் கூறுகிறார்கள். (3) வேறு சிலர் உயர்ஜாதிக்குதிரையின் பீஜாளத்திலிருந்து கங்குஷ்டமென்னும் திரவ்யம் எடுக்கப்படுவதாகக் கருதுகிறார்கள்; அது வெண்பசுமை நிறமென்றும், அதிக விரேசநகுணமுடையதென்றும் கூறுகிறார்கள். மேலும் இரஸௌஷதமுறைகளிலும், இரஸாயநமுறையிலும் இது சிறந்தது. அதுவே ஸத்துவ மற்றிருந்தால் பலவித கோளாறுகளையுண்டுபண்ணும். 109—112½.

கங்குஷ்டகுணங்கள்.

கங்குஷ்டமானது கைப்பும் கார்ப்பும் கலந்த சுவையுடையது; வீர்யத்தில் உஷ்ணமானது; அதிக ரேசநகுணமுள்ளது; விரணங்களை ஆற்றும்; உதாவர்த்தம், சூலரோகம், அர்சஸ் என்கிற மூலம், குல்மம், ப்லீஹரோதரம் இவற்றைப் பரிஹரிக்கும். 113.

கங்குஷ்ட சுத்தி முதலியது.

(1) கங்குஷ்டத்தை மூன்றுமுறை சுக்குக்கஷாயத்தில் பாவனை செய்துதித்தால் அது சுத்தமாகும். (2) கங்குஷ்டம் சுயம் ஸத்துவமயமாயிருப்பதுபற்றி இதிலிருந்து ஸத்துவமெடுக்குமுறை யெதுவும் கூறப்படவில்லை. (3) கங்குஷ்டத்தை யவப்பிரமாணமாக கிராஹி[3] என்னும் குணமுள்ள அநுபாநங்களோடு விரேசநத்திற்காக உட்கொள்

1. இமயமலையின் அடிவாரத்திலுண்டாகும் ஹரிதாளம் போன்ற சாக்குக்கு 'கங்குஷ்டம்' என்று பெயர் என்று இரஸஸாரஸங்கிரஹம். பர்வதப்பிராந்தத்திலுண்டாகும் ஒருவித மண்ணுருவமான சாக்கென்று சிலர். 'வெள்ளியைப் போன்றதாகவும், பொன் போன்றதாகவும் கங்குஷ்டம் இருவகைப்படும்.' என்று இராஜநிகண்டு. 'இக்தகாலம் என்றும் அண்டகம் என்றும் கங்குஷ்டம் இருவகைப்படும்; இவற்றுள் முதலிற்கூறியது சிரேஷ்டம்' என்று பாவப்ரகாசம். 'அதிக ரேசநகுணமுள்ள ஒருவித மருத்திகையே கங்குஷ்டம்' என்று வில்ஸன்.

2. ரேசநம்—குடல் முதலியதைக் கல்லித் திரவங்களைச் சுரப்பித்து, மலத்தைத் திரவமாக்கி வெளிப்படுத்தும் குணம்.

3. வயிற்றுப்போக்கை அல்லது திரவமான மலாதிகளைக் கட்டுந் தன்மைக்கு 'கிராஹி' என்று பெயர்.

ளலாம்; விரேசநத்தை யுண்டுபண்ணி சிறிது நேரத்திலேயே ஆமதோஷத்தினுலான வயிற்று நோயைத் தணித்துப்போடும்.(4) இதையே வெற்றிலைகளோடு கூட்டியுட்கொண்டால், இது அஸாத்யமான விரேசநமுண்டுபண்ணி சீக்கிரம் உயிரைப் போக்கிவிடும். (5) கருவேலம் வேரைக் கஷாயமிட்டு, அதில் ஜீரகமும் வெண்காரமும் ஸம அளவாகக் கூட்டி, அடிக்கடியும் குடித்தால் கங்குஷ்டவிஷம் தீரும். (6) நாய்க்கடுகுவேர், வாழைக்கிழங்கு, பேய்த் தும்மட்டி, பேய்ச்சுரை, தேவதாலி, முருங்கப் பட்டை, காட்டுக் கருணைக்கிழங்கு, நீர்த்திப்பிலி, மணத்தக்காளி இவற்றுள் ஏதேனுமொன்றின் சாற்றில் இலவணவர்க்கம், க்ஷாரவர்க்கம், அம்லவர்க்கம் ஆகியவற்றை உசிதப்படி கூட்டி, அதில் மஹாரஸங்களையும், உபரஸங்களையும் பாவனை செய்ய அவை சுத்தமாகும். பிறகு அவற்றைக் கடுந்தீயிலிட்டு ஊதினுல் அவற்றிலிருந்து ஸத்துவம் வெளிப்படும்[1]. 114—119.

கங்குஷ்டத்தை ஔஷதமாயுபயோகித்தல் முதலியன.

இரஸோபரஸங்களின் பொதுவான சுத்தி முதலியது.

ஸாதாரண ரஸங்கள்.

கம்பில்லம், [2] கௌரிபாஷாணம், நவஸாரம், கபர்தம் என்னும் சோழி, அக்நிஜாரம், கிரிஸிந்தூரம், ஹிங்குளம் என்னும் விங்கம், ம்ருத்தாரசிருங்கம் என்னும் முராதாரசிங்கு என்று ஸாதாரணரஸம் எண்வகைப்படும். இவை இரஸஸித்தியை யுண்டுபண்ணுபவை யென்று நாகார்ஜுனன் முதலிய வித்தர்களால் கூறப்படுகின்றது. 120, 121.

ஸாதாரண ரஸங்கள் எட்டு.

(1) 'கம்பில்லம்' எனப்படுகிற சரக்கு ஒருவாறு செங்கற்பொடி போன்றதாய், சந்திரிகையென்னும் மினுமினுப்பு அடர்ந்ததாகக் காணப்படும்; இது ஸௌராஷ்ட்ர தேசத்தில் உற்பத்தியாவது; அதிக ரேசநகுணமுள்ளது. (2) கம்பில்லமானது பித்தவிகாரங்கள், விரணங்கள், வயிற்றுப்பொருமல், மலபந்தம் ஆகியவற்றைத் தீர்க்கும்; சிலேஷ்ம ஸம்பந்தமான வயிற்றுளைத்தல், கிருமிகள், குல்மரோகம்,

கம்பில்லம்: அதன் குணங்கள்.

1. இது மஹாரஸ-உபரஸங்களைப்பற்றிய விஷயங்களின் முடிவுரை. இவ்விஷயம் மூலக்ரந்தத்தில் கங்குஷ்ட சுத்திக்கு முன்பு அச்சிடப்பட்டிருப்பது முறை தவறியிருப்பதால், இம்மொழிபெயர்ப்பில் அவ்விஷயம் உபரஸங்களின் முடிவுரைக் க்ரமத்தில் இறுதியில் எழுதப்பட்டது.

2. மூலத்தில் "கம்பில்லச் சாபரோ கௌரீபாஷாணே" என்றிருக்கவேண்டிய பாடம் 'கம்பில்லச் சபலோ கௌரீபாஷாணே' என்று பிழைபட சபலம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது. இதை ஊன்றிப் பாராமல் பி. வி. ராய் முதலானோர்கூட சபலம் என்பதை ஸாதாரணரஸத்திலும் கூட்டிப் படித்து, விஷயம் ஒத்து வராமல், ஏதேதோ குறிப்பு எழுதுகிறார்கள்.

மூலரோகம், ஆமதோஷ ஸம்பந்தமான சோபை, ஜ்வரம் ஆகியவற்றையும் பரிஹரிக்கும்; ரேசநகுணமும் விஷஹரத்தன்மையுமுடையது[1]. 122, 123.

கௌரி பாஷாணம்: அதன்பேதங்கள்-குணாதிகள்.

(1) பீதம், விகடம், ஹதசூர்ணம் என்று கௌரிபாஷாணம் மூன்று விதம்; அவை முறையே உருவத்தில் படிகம் போன்றனவாகவும், சங்குபோன்று வெளுத்த நிறமாகவும், மஞ்சள் நிறமாகவும் இருக்கும். இவற்றுள் ஹதசூர்ணத்தினும் விகடமும், அதைவிட பீதமும் குணத்தில் மேலானது. (2) ஒரு பெரிய முசையில் பாகற்காய்களைக் கீறி வைத்து, அவற்றுள் கௌரிபாஷாணத்தைத் திணித்து, ஒரு மட்பாண்டத்தில் ஸ்வேதயந்த்ர முறையில் பக்குவம்செய்ய, அது சுத்தமாகும். (3)சுத்தமான இதை ஔஷத பாயுபயோகிக்கலாம். மேலும் தாளகத்திலிருந்து எடுக்கப்படுவதுபோல இதிலிருந்தும் வெண்மையான ஸத்துவம் க்ரஹிக்கலாம். (4) கௌரிபாஷாணம் ஸ்நிக்தமானது; தோஷஹரம்; இரஸத்தைக் கட்டுவதற்கும், இரஸத்தின் வீர்யத்தை விருத்தி செய்யவும் உபயோகமானது[2]. 124—126.

நவஸாரம்: அதன் பேதங்கள்.

(2) மூங்கிற்குருத்து, பீலுமரப்பட்டை இவை வேகும்போது அவற்றிலிருந்து உண்டாகும் க்ஷாரம் 'நவஸாரம்' எனப்படுகிறது; இது சூலிகாலவணம் என்றும் வழங்கப்படுவதுண்டு. (2) நவஸாரம் செங்கற்சூளை பரியும்போதும் அதிலிருந்து வெண்மையான உப்பாக உப்பத்தியாகிறது. (3) இது பாரதமென்னும் இரஸத்தை ஜாரணம் செய்யும், உலோஹங்களை த்ரவமாக்கவும் உபயோகமாகிறது; ஜாடராக்நியை விருத்திசெய்யும்; குல்மம், ப்லீஹரோகம், வாய்வு இவற்றைத் தீர்க்கும்; புஜித்த மாம்ஸம் முதலியதை ஜீர்

1. கம்பில்லத்தை குங்குமம் என்று சிலர்; குங்குமம் போன்ற ஒரு ஔஷதப்பொருள் **கம்பில்லம்** என்று இரஸசாஸ்த்ரவல்லோரின் கருத்து. ஆங்கிலத்தில் கமெலா அல்லது கமலா (Kamala or Mallotus Philippinensis) எனப்படுகிற ஒரு சாயச்சரக்கை (இது ஒரு காட்டுமரத்துப் பழத்தினுள் சூழ்ந்திருக்கும் சிவந்த மாப்பொடி) கம்பில்லமென்று கருதி, அது தாதுப் பொருட்களின் இனத்தில் எவ்வாறு படிக்கப்படுகிறதோ தெரியவில்லையென்று பி. வி. ராய் ஸந்தேஹப்படுகிறார்.

2. "**கௌரிபாஷாணம்** வெண்மை, பசுமையென்று **இருவகைப்படும்**; அவற்றுள் சங்குபோன்று வெளுப்பாயிருப்பது **வெள்ளைப் பாஷாணம்** அல்லது **சங்கபாஷாணம்** எனப்படும்; பசுமையானது பாலம்பழ நிறமாயிருக்கும். இவற்றுள் வெண்மையான பாஷாணம் பயற்கைச் சரக்காகவும், பசுமையாயிருப்பது மலைப்பிரதேசங்களில் பூமியிலுண்டாவதாகவும் கருதப்படுகிறது; இவ்விரண்டும் விஷகுணமுள்ளவை; இரஸௌஷதங்கள் செய்வதற்கு உபயோகமானவை."—ஆயுர்வேதப்ரகாசம்.

ணம் செய்விக்கும்; ஸந்நிபாததோஷத்தையும் பரிஹரிக்கும். இதற்கு பிடம் என்கிற குணமுமுண்டு[1]. 127—129.

வராடம்: அதன் குணம் முதலியவை.

(1) 'வராடம்' என்னும் சோழி ஒருவாறு பசுமைநிறம் கலந்தது; பின்புறத்தில் கிரந்திபோன்ற பிதுக்கமுள்ளது; உருவத்தில் மீண்டும் உருண்டுமிருப்பது; இதை இரஸவைத்தியர்கள் 'சராசரம்'[2] என்றும் வழங்குவர். இதில் ஒன்றரை நிஷ்கம் எடையுள்ளது சிரேஷ்டமானது; ஒரு நிஷ்கமெடையுள்ளது குணத்தில் மத்திமமானது; முக்கால் நிஷ்கம் அல்லது அதற்குக் குறைந்த எடையுள்ள வராடம் குணத்திற் குன்றியதாம். (2) பரிணமசூல முதலிய வயிற்றுவலி, கிரஹணீ, கூஷ்யம் ஆகிய நோய்களைப் போக்க வல்லது. கடுரஸம், உஷ்ணவீர்யம், தீபநம், விருஷ்யம், நேத்ரியம், வாத-கபஹரம் என்னும் குணங்களுள்ளது. (3) இரஸஜாரணத்திற்கு உபயோகமானது; பிடத்திரவியங்களில்[3] சிரேஷ்டமானது. முற்கூறிய இலக்ஷணமுள்ளவைகளைத் தவிர்த்து மற்ற வராடங்கள் குருகுணமும், சிலேஷ்ம-பித்தங்களை விருத்தி செய்யுந்தன்மையுமுள்ளவை. (4) சோழிகளைக் காஞ்ஜிகமென்னும் காடியில் ஸ்வேதயந்திரமுறையில் ஒரு யாமம் பக்குவம் செய்ய சுத்தியடையும்.[4] 130—134.

---

1. **நவஸாதாம்** என்றும், **நவஸாகாம்** என்றும், **நவசாரம்** என்றும் பலவாறுகக் கூறப்படுகிறது. "மனிதருடையவும், பன்றிகளுடையவும் மலங்களுக்குள்ளும் இது கிட்டம்போல் கிடைக்கும். இது க்ஷாரங்களைச் சேர்ந்த சரக்கு. இது பொன்னைச் சுத்திசெய்வதிற் சிறந்தது. பிடதிரவ்யங்களில் உபயோகப்படுவது. க்ஷாரங்களுக்குள்ள குணங்கள் இதற்குமுண்டு" என்று ஆயுர்வேதப்ரகாசம்.

2. சராசரம்—நத்தை மாதிரியான ஊர்வன ஜாதியைச் சேர்ந்தது சோழி. உள்ளே அடங்கிய ஜந்து நகிக்கும் வலையில் சரமாகவும் (ஜங்கமமாகவும்), அது நகித்தபின்பு அசரமாகவும் (ஸ்திரமான தாதுப் பொருளாகவும்) ஆவதால் சராசரம் எனப்படுகிறது.

3. பிடத்திரவியங்கள்—8-ம் அத்தியாயத்தில் விவரம் காண்க.

4. வராடம், வராடிகா, கபர்தம், சோழி, சோகி, கவடி, பலகறை என்று இது பலவாறு கூறப்படும். "சோழியை கரித்தணலில் இட்டு ஊதினால் நன்றாக மலர்ந்து பொரியும்; அப்போது அதை எடுத்து, ஆறவைக்கவும்; அது **வராடபஸ்மம்** எனப்படும். அதைப் பொடியாக்கி ஔஷதமாயுபயோகிக்கவும்"—ஆயுர்வேதப்ரகாசம். "சிறிய பள்ளம் பூமியில் தோண்டி, அதில் பாதியளவுக்கு உமியைப் போட்டு, அதன் மேல் ஒரு கலசத்தில் பலகறைகளை வைத்து, கலசத்தை நன்கு மூடி, அதன்மேல் வறட்டிகளை மூடி தீயிட்டால், அது நன்கு **பஸ்மமாய்** விடும்." இரஸேந்திர ஸாரஸங்க்ரஹம்.

அக்னிஜாரமும் அதன் குணங்களும்.

(1) அக்நி நக்ரம் என்னும் ஒருவித நீர்வாழும் ஜந்துவின்[1] ஜராயுவானது[2], கடலில் அலைகளால் கரையில் ஒதுக்கப்பட்டு, வெய்யிலின் தாபத்தினால் உலர்த்தப்பட்டுப் போனால், அது அக்னிஜாரம்[3] எனக் கருதப்படுகிறது. (2) அக்னிஜாரமானது ஸந்நிபாதஹரம்; தநுர்வாதம் முதலிய ஆக்ஷேபகவாதங்களைத் தணிக்கும்; இரஸத்திற்கு வீர்யத்தையும், தீபநசக்தியையும் விருத்தி செய்வதோடு, அதை ஜாரணம் செய்யவும் உபயோகமானது. (3) அது கடலிலுள்ள க்ஷாரங்களில் ஊறி, சுயமாகவே சுத்தியாய்விடுவதால், அதற்குப் பிரத்தியேகமாகச் சுத்தி முறை கூறப்படவில்லை. 135, 136.

கிரிஹிந்தூரமும் அதன் குணங்களும்.

(1) பெரிய மலைகளில், பாறைகளின் அடிப்புறச்சந்துகளில் சொற்ப அளவாகத் தங்கியிருக்கும் இரஸமானது சுஷ்கித்துப்போய் சென்னிறங்கொள்ளும். அச்சரசுக்கு 'கிரிஸிந்தூரம்'[4] எனப்படுகிறது. (2) அது ஸந்நிபாதஹரம்; மலத்தையுடைத்து வெளிப்படுத்தும் பேதியென்னும் குணமுடையது; இரஸத்தைக் கட்டுவதற்குச் சிறந்த சரக்கு; தேஹத்திற்கு வன்மை தருவது; உலோஹங்களைப் பக்குவம் செய்வதற்கு ஏற்றது; நேத்ரத்திற்கு அனுகூலமானது. 137, 138.

---

1. அக்நி நக்ரம் என்பது மூதலே யென்று சிலரால் பொருள் படுத்தப்பட்டிருக்கிறது. மூதலே கடலில் வஸிப்பதில்லை யென்றும், அக்நி ஜாரத்தின் உற்பத்தி முறை ஒருக்கால் பௌராணிக சரித்திரம் போன்றதாயிருக்கலா மென்றும் பி. வி. ராய் அபிப்பிராயப்படுகிறார். ஆனால் **அக்நி நக்ரம்** என்பது கடலிலுள்ள, **வயிற்றில்** பளபளப்புள்ள ஒருவித பெரிய மத்ஸ்ய ஜாதியென்று தெரிகிறது.

2. ஜராயு—கர்ப்பத்தில் சிசுவைப் போர்த்திருக்கும் ஒருவகை மெல்லிய புறணியாலான கவசம்.

3. அக்னிஜாரம்—ஒருவகை நீர்வாழும் பிராணியின் கருப்பையிலிருந்து வெளியான ஜராயு வெனனும் சர்மமென்று இங்கே கூறப்படுகிறது. 'அம்பர்' என்று வழங்கப்படும் சரக்கென்று சிலர். ஆனால் நிகண்டுவில் இதுஒரு கடலோரத்திலுண்டாகும்ஔஷதி(மூலிகை) என்று கூறப்படுகிறது. "அக்னிஜாரம் பரிசித்தால் அழற்சிதரும்;பிசபிரப்புள்ளது; கடலில் உற்பத்தியாகிறது; இஃதோர் ஜராயு வென்னும் பொருள்; இதில் நிறத்தால் நான்குவகைகளுண்டு; அவற்றுள் சிவந்தது சிறப்பானது; சுவையில் கடு; வீர்யத்தில் உஷ்ணம்; இலகுபாகம்; கபதோஷம், வாததோஷம், ஸந்நிபாதம் இவற்றைப் பரிஹரிக்கும்; க்ஷயரோகத்தைத் தீர்க்கும்; பித்தத்தை விருத்திசெய்யும்; மூலரோகத்திலும் உபயோகமானது."

4. 'இது மலையில் உற்பத்தியாகும் ஹிங்தூரம்; கிரிஹிந்தூரம் வழங்கப்படுகிறது; ஒருவாறு ஹிங்குலத்தைப் போன்றதாயிருக்கும்' என்று ஆயுர்வேதப்ரகாசம்.

ஹிங்குளம் அல்லது லிங்கம்.

(1) ஹிங்குள மென்னும் லிங்கமானது [1] **சர்மாரம்** என்றும், சுக துண்டம் என்றும், ஹம்ஸபாகம் என்றும் மூவ கைப்படும். அவற்றுள் முதலிற்கூறியது சொற்ப குணமுடையது. பவளம் போன்ற நிறமுடையதும் வெண்மைக் கோடுகளுடன் கூடியதுமான லிங்கம் **ஹம்ஸபாகம்**[2] எனப்படுகிறது; இது குணத்திற் சிறந்தது. **சுகதுண்டம்** என்னும் லிங்கம் குணத்தில் மத்திமமானது [3]. (2) ஹிங்குள மானது த்ரிதோஷஹரம், தீபநம், மிகச்சிறந்த இரஸாயனம், ஸர்வரோகஹரம், வ்ருஷ்யம் என்னும் குணங்களையுடையது; ஜாரணம் என்கிற இரஸபாகமுறைக்கு வெகு உபயோகமானது. இதிலிருந்து எடுக்கப்படும் இரஸமானது பஸ்மமாக்கிய கந்தகத்திற்குச் சமான மான குணங்களுடையது. (3) இஞ்சிஸ்வரஸத்தி லாவது, எலுமிச்சம்பழச்சாற்றிலாவது லிங்கத்தை பாவனைசெய்து உலர்த்தி யெடுக்கவும்; இவ்வித மாக ஏழு முறை பாவனை செய்தால் ஹிங்குளம் தோஷங்கள் நீங்கிய தாகும். (4) வெள்ளாட்டுப்பாலிலாவது, அம்லவர்க்கத்திலாவது லிங்கத்தை பலமுறை பாவனைசெய்து, வெய்யலிலும் நன்கு உலர்த்தி எடுக்க அது குங்குமம் போல் சிறந்த சென்னிறம் பெறும். (5) தண் ணீரடங்கிய ஒரு மட்பாண்டத்தில் பாதநாயந்திர முறைப்படி லிங்கத்திலிருந்து ஸத்துவம் இறக்க லாம்; அச்சத்துவந்தான் ஸூதம் அல்லது இரஸ மெனப்படும்.[4] 139—144.

ஹிங்குள சுத்தி முதலியன.

லிங்கத்திலிருந்து இரஸ மிறக்குதல்.

1. ஹிங்குளம் என்பது தரதம், சூர்ணபாரதம், லிங்கம், பவள மாகச்சிலை, உலாந்தா லிங்கம், ஜாதி லிங்கம் என்றெல்லாம் கூறப்படும்.

2. இதுவே **ஹம்ஸபாதம்** என்று ஆயுர்வேதப்பிரகாசம் முதலியதில் வழங்கப்படும்.

3. "சர்மாரம் என்னும் லிங்கம் **வெண்மை** நிறமானது; சுகதுண் டம் என்பது பச்சையும் மஞ்சளும் கலந்த நிறமுள்ளது; ஹம்ஸபாதம் என்பது ஜபாபுஷ்பம் போல் சிவந்தது; இதுதான் வெகு சிறந்தது" என்று ஆயுர்வேதப்பிரகாசம்.

4. **ஹிங்குளகுணங்கள்**—கைப்பு, துவர்ப்பு, கடு ஆகிய சுவைகள்கலந் தது; நேத்திரரோகஹரம்; கப பித்தஹரம்; இருதயத்துடிப்பு, குஷ்டம், ஜ்வரம், காமாலை, ப்லீஹரோகம், ஆமவாதம் ஆகிய கோளாறுகளையும் தீர்க்கவல்லது. **அசுத்தமான லிங்கம்** கண்ணை அழித்துப்போடும்; தேஹ த்தை இளைக்கச் செய்யும்; சோர்வையும் தலைச்சுற்றலையும் உண்டுபண் ணும்; மேஹரோகத்திற்கும் காரணமாம். ஆகையால் லிங்கத்தைச் சுத்தி செய்தே உபயோகிக்க வேண்டும். **ஹிங்குளத்திலிருந்து இரஸம் இறக்கு தல்:**—"டமருயந்திரத்தில் ஊர்த்வபாதந முறைப்படி லிங்கத்தை எரிக்க வும்; மூதலில் லிங்கத்தை எலுமிச்சம் பழச் சாற்றில் அல்லது வேப் பிலைச்சாற்றில் ஒரு யாமகாலம் அரைத்து, அதை மட்பாண்டத்தினுள் வைத்து, ஊர்த்வபாதந யந்திரத்தில் இறக்கவும். அப்பொழுது மேலே யுள்ள பாண்டத்தின் உட்புறத்தில் படிந்துள்ள இரஸத்தைக் கிரஹித் துக் கொள்ளவும்; இது வெகு சுத்தமான சிறந்த இரஸம்; இதை எல்லா முறைகளிலும் நன்கு உபயோகிக்கலாம்". ஆயுர்வேதப்பிரகாசம்.

மருத்தாரச்சுங்கம் அல்லது முரதாரசிங்கு.

கூர்ஜரதேசத்தில் அர்புத மென்னும் பர்வதத்திற்கு அருகில் "மருத்தாரச்சுங்கம்" என்னும்[1] சரக்கு உற்பத்தி யாகிறது; தளங்கள் அல்லது சிதளுள்ளதாகவும், மஞ்சள் நிறமாகவும் இருக்கும். அது ஸீஸமென் னும் ஈயத்தின் ஸத்துவம்; அதிக பளுவுள்ளது; சிலேஷ்மதோஷத்தைச் சமனம் செய்யும்; புருடர்களுக்குண்டாகும் நபும்ஸகதோஷம் முதலியதைப் போக்கும்; இரஸத்தைக் கட்டுவ தற்கு மிகச் சிறந்தது; கேசரஞ்ஜநம்[2] என்னும் குணத்தில் சிரேஷ் டமானது. 145, 146.

ஸாதாரண ரஸங்களின் சுத்திமுறை.

(1) ஸாதாரண ரஸங்களனைத்தையும் கொடிமாதுளை, இஞ்சி இவற்றின் சாற்றில் மூன்று நாள் பாவனை செய்து உலர்த்தியெடுக்க அவை தோஷம் நீங்கியவையாம்; (2) முற்கூறிய இரஸவர்க்கங்களிலிருந்து கிரஹிக்கப் படும் ஸத்துவங்கள் அனைத்தும் சுத்திவர்க்கச் சர க்குகள்[3] கூட்டி ஊதப்பட்டால் சுத்தியடைவதுடன், அவை ஒன் றோடொன்று நன்றுகவும் கூடுகின்றன.[4] 147, 148.

இராஜாவர்த்தம்.

(1) 'இராஜாவர்த்தம்' என்பது சிறிது சிவந்தும் மிக்க நீலநிற மும் கலந்த தாதுப்பொருள்.[5] அதிக பாரமுள்ள தது; வழவழப்பானது; இவ்விதகுறிகளுள்ளதே சிற

1. மருத்தாரச்சுங்கம்—இதுவே போதாரச்சுங்கம், பூதாரச்சு ங்கம், கேதாரச்சுங்கம் என்றெல்லாம் கூறப்படுகின்றது. தமிழில் இதை 'முரதார சிங்கு' என்பார்கள். "போதாரச்சுங்கம் என்பதுவெளி றிய மஞ்சள்நிறமானது; அது ஸதளம், நிர்தளம் (தளங்களுள்ளது, தளங்களற்றது) என்று இருவகைப்படும்." என்று ஆ. ப்ரகாசம்.

2. கேசரஞ்ஜநம்—மயிர்களுக்குக் கருநிறமுண்டாக்குங் குணம்.

3. சுத்திவர்க்கம்—பத்தாவது அத்தியாயம் பார்க்க.

4. இரஸங்களுடைய வகுப்புப்பிரிவு வேறு சில கிரந்தங்களில் வேறு வேறு வகையாகக் கூறப்பட்டிருக்கிறன:—"மாக்ஷிகம், விமலம், சிலாஜது, சபலம், இரஸகம், ஸஸ்யகம், தரதம், ஸ்ரோதோஞ்ஜநம் ஆகிய இவ்வெட்டும் **மஹாரஸங்கள்**. கந்தகம், தாளகம், சிலாஜது, ஸௌராஷ் ட்ரம்ருத்திகை, அப்ரகம், கைரிகம், இராஜாவர்த்தம், கங்குஷ்டம் ஆகிய இவ்வெட்டும் **உபரஸங்கள்**." என்று ஸாரஸங்ரஹம். "கந்தகம், ஹிங்கு ளம், அப்ரகம், தாளகம், சிலாஜது, ஸ்ரோதோஞ்ஜநம், டங்கணம் என்னும் வெங்காரம், இராஜாவர்த்தம், படிகாரம், சங்கம், கைரிகம், அன்னபேதி, இரஸகம், சோழி, கங்குஷ்டம், ஸௌராஷ்ட்ரம் ருத்திகை முதலியவை உபரஸங்கள்" என்று பாவப்பிரகாசம்.

5. "இராஜாவர்த்தம் உபரஸங்களின்வகுப்பைச்சேர்ந்ததென்று சில ரது கொள்கை. சிவப்பு கலந்தது, நீலம் கலந்தது என்று இது இரண்டு விதம். பர்மாயிருப்பது சிறந்தது." என்று ஆயுர்வேதப்பிரகாசம். (ஸாதா ரணரஸங்கள் எட்டு என்று முன்சொல்லியிருப்பதால், இராஜாவர்த்தம் இவ்வகுப்பிலில்லாமல் உபரஸங்களின் வகுப்பிலேயே சேர்ந்திருக்க வேண்டுமென்றுநன்கு விளங்குகிறது. உபரத்தங்களில் இதுஒன்று என் றும் கூறுவர். இச்சரக்கு ஆங்கிலத்தில் Lapis Lazuli எனப்படுகிறது.

ந்தது; மற்றது குணத்தில் மத்திமமானது. (2) பிரமேஹம், கூஷயம், அர்சஸ் என்னும் மூலம், பாண்டு, சிலேஷ்மதோஷம், வாத தோஷம் ஆகியவற்றைத் தீர்க்கும்; மேலும் தீபகம், பாசநம், விருஷ்யம், இரஸாயநம் என்னும் குணங்களையும் பெற்றது. (3) எலுமிச்சம் பழச்சாறு, பசுமூத்திரம், க்ஷாரவர்க்கம் இவற்றைக் கூட்டி, அத்திரவத்தில் இரண்டு அல்லது மூன்று முறை ஸ்வேதமுறைப்படி பக்குவம் செய்ய, இராஜா வர்த்தம் முதலிய தாதுப் பொருட்கள் சுத்தியடைகின்றன. காட்டுவாகைப் பூவின் சாறு, இஞ்சிச்சாறு இவற்றிலும் இராஜாவர்த்தத்தைச் சுத்தி செய்யலாம். (4) இராஜாவர்த்தத்தைச் சூர்ணம் செய்து, கொடிமாதுளைச் சாற்றையும், கந்தகத்தையும் கூட்டி புடமிடவும்; இவ்விதம் ஏழுமுறை புடமிட இராஜாவர்த்தம் பஸ்மமாகும். (5) இராஜாவர்த்தத்தைச் சூர்ணம் செய்யவும்; அதில் மநச்சிலையையும், நெய்யையும், எருமைப்பாலையும் கலந்து ஓர் இருப்புப்பாத்திரத்தில பக்குவம் செய்யவும்; பிறகு வெண்காரம் சேர்த்து, அனைத்தையும் பஞ்சகவ்யம் விட்டு அரைத்து ஓர் உருண்டையாகச் செய்யவும்; அதைக் கருங்காலிக் கட்டையிட்டு எரித்தால் சிறந்த ஸத்துவம் அதிலிருந்து வெளியாம். (6) இம்முறைப்படி கைரிகமென்னும் காவியையும், விமலத்தையும் பக்குவம் செய்ய அவற்றிலிருந்து முறையே பசுமை நிறமாகவும், சென்னிறமாகவும் ஸத்துவம் வெளிப்படும். 149—156.

இராஜாவர்த்தத்தின் சுத்தி முதலியது.

இராஜவர்த்த பஸ்மம் முதலியன.

நான்காம் அத்தியாயம்.

இரத்தினங்கள் [1].

(1) இரத்தினங்கள் என்கிற மணிகளும் இரஸத்தைக் கட்டுந் தன்மையுடையன. (2) வைக்ராந்தம், ஸூர்யகாந்தம், வஜ்ரம்,[2] மௌக்திகம்,[3] மாணிக்கம், சந்திரகாந்தம், இராஜாவர்த்தம், கருடப்பச்சை ஆகியவை மணிகள் எனப்படும். (3) புஷ்பராகம், மஹாநீலம், பத்மராகம், பிரவாளம்,[4] வைதூர்யம், நீலம் ஆகிய இவையும் மணிகள் எனப்படும். இவற்றை இரஸத்தைக் கட்டுவதன் பொருட்டுக் கிரஹித்து வைக்கவேண்டும். 1—3.

பொதுவான இரத்தினங்கள்.

(1) பத்மராகம், இந்திரநீலம், மரகதம், புஷ்பராகம், வஜ்ரம் ஆகிய இவ்வைந்தும் **பஞ்சரத்தினங்கள்** எனப்படும். (2) மாணிக்கம், முத்து, பவளம், மரகதம், புஷ்பராகம், வஜ்ரம், நீலம், கோமேதகம், வைதூர்யம் ஆகியவை முறையே நவக்கிரஹங்களுக்குச் சம்பந்தப்பட்டவையாம். [1] (3) பத்மராகம், புஷ்பராகம், பவளம், முத்து, மரகதம், வஜ்ரம், நீலம், கோமேதகம், வைதூர்யம் இவைகளை முறையே அந்தந்த கிரஹத்தின மித்திரபாவத்தைக்கோரி, மோதிரமாகச் செய்து தரித்துக்கொண்டால் கோரியது ஸித்திக்கும். 4—6.

பஞ்சரத்தினங்களும், நவரத்தினங்களும்.

இரஸௌஷத முறையிலும், இரஸாயன முறையிலும், தானம் செய்வதிலும், அணிகளிலும், தேவதார்ச்சனைகளிலும், நல்ல இலக்ஷணங்களையுடைய சிறந்தஜாதி இரத்தினங்களை யுபயோகித்தால் நற்பயனுண்டாம் எனக் கருதப்படுகிறது. 7.

இரத்தினங்களின் பொது உபயோகங்கள்.

மாணிக்கம் என்பது **பத்மராகம்** என்றும், **நீலகந்தி** என்றும் இருவகைப்படும். (1) பத்மராக மென்னும் மாணிக்கமானது நிறத்தில் தாமரையிதழ்போன்றது; மாசற்றது; ஸ்நிக்தத்தமானது; அதிக பளபளப்புள்ளது; உருண்டகன்றது; பருத்து மேடுபள்ளமுமற்றது; இது சிறந்த மாணிக்கம் எனப்படுகிறது. (2) நீலகந்தி யென்னும் மாணிக்கம் கங்கை நீரில் உற்பத்தியாவது; கருநிறம் உள்ளடங்கிய சிவப்புச் சாயையைப் பெற்றது; இது, முன் மாணிக்கம் போலவே குணத்திற் சிறந்தது. (3) சில்லி அல்லது சந்து விழுதல், நீரோட்டமில்லாது சுறசுறப்பாயிருத்தல், மாசுபடர்தல், ரூக்ஷத்தன்மை, விசதமின்மை [2], சொட்டை, இலேசாயிருத்தல், கோணல் ஆக இவ்வேட்டும் மாணிக்கத்திற்கான தோஷங்களாம். (4) தீபகம், விருஷ்யம், கபஹரம், வாதஹரம், கூஷயஹரம் என்னும் குணங்களும், பூதம்-வேதாளம்-இவற்றைப் போக்கும் தன்மையும், கர்ம பலன்களாய் நேரிடும் வியாதிகளைப் பரிஹரிக்கும் தன்மையும் மாணிக்கத்திற்குள்ள குணங்களாம் [3]. 8—12.

மாணிக்கமும் அதன் குணங்களும்.

(1) பார்க்கும்போது களிப்பூட்டுவது, வெண்மை, இலகு, ஸ்நிக்தம், ஒளியுறுதல், மாசுமறுவின்மை, பருமன், தண்ணீரைப்போன்ற தன்மை, உருட்சி ஆக ஒன்பது நற்குணங்களையுடையது நல்முத்து. (2) நல்முத்தானது குணத்தில் இலகு; சீதவீர்யம்; சுவையில் இனிப்பு; தேஹகாந்தியையும் திருஷ்டியின் சக்தியையும் பித்த தோஷத்தையும் விருத்தி செய்யும்; விஷத்தை ஹரிக்கும்;

நல்முத்து: அதன் குணங்கள்

---

1. இரத்தினங்களை **மணிகள்** என்றும் வழங்குவர்.
2. வஜ்ரம்—**ஹீரம்** என்றும் கூறப்படும்.
3. மௌக்திகம்—நல்முத்து.
4. பிரவாளம்—பவளம்.

1. மாணிக்கம் முதலிய ஒன்பதும் **நவரத்தினங்கள்** எனப்படும்; இவற்றை **மஹாரத்தினங்கள்** என்றும் வழங்குவர்.
2. விசதமின்மை—தெளிவில்லாமை.
3. **மாணிக்க சுத்தியும் பஸ்மமும்:**—"மாணிக்கத்தைப் பசுமூத்திரத்திலிட்டு மூன்று நாள் கடும் வெயிலில் வைத்து பாவனைசெய்து, பிறகு வெந்நீரால் கழுவ அது சுத்தமாகும். அவ்விதம் சுத்தமான மாணிக்கத்தை எருக்கம்பாலில் மூன்று நாள் பாவனைசெய்து, அகல்களில் வைத்து புடமிடவும். இவ்விதம் மூன்றுபுடமிட மாணிக்கம் பஸ்மமாம்."
—வைத்யக சப்தஸிந்து.

மலத்தை இளக்கி வெளிப்படுத்தும்; வீர்யத்தை விருத்திசெய்யும். (3) சுக்தி என்கிற முத்துச்சிப்பியானது தீபநம், பாசநம், என்னும் குணங்களையும், வயிற்று வலியைப் போக்குந்தன்மையையும் உடையது. (4) சூக்ஷமான உருவமுடையதாகவும், நீரோட்டமற்றதாகவும், தூமநிறமாகவும், செம்புபோன்ற காந்தியுள்ளதாகவும், பார்ப்பதற்கு உப்பைப் போன்றதாகவும், பாதி வெளிறியதாகவும், ஒழுங்கினமான உருவமுடையதாகவும், கறடு கட்டியதாகவும் உள்ள முத்துக்கள் தோஷமுள்ளவையாம்; அவற்றை ஏதற்கும் கிரஹிக்கக் கூடாது. (5) நல்முத்தானது கப-பித்தங்கள், க்ஷயரோகம், காஸம், சுவாஸம், அக்னிமாந்த்யம் இவைகளைப் பரிஹரிக்க உதவும்; தேஹ புஷ்டியைத் தரும்; விருஷ்யம், ஆயுஷ்யம், தாஹசமநம் ஆகிய குணங்களையுமுடையது[1]. 13—16.

பவளமும் அதன் குண குணங்களும்.

(1) பவளமானது நிறத்தில் நன்கு பக்குவமான கோவைப் பழம் போன்றது; உருவத்திற் சிறிது நீண்டும் உருட்சியாகவுமிருக்கும்; வக்கிரத்தன்மை யற்றது; ஸ்நிக்த்தம்; கறடு அல்லது சொட்டைவிழாதது; பருமனுயிருக்கும்; ஆகப் பவளத்திற்கு ஏழுவித மான நற்குணங்கள் உண்டு. (2) வெண்மை, அழுக்கடைந்த தன்மை, உருவத்திற் சின்னஞ்சிறியதா யிருத்தல், கறடு அல்லது சொட்டைகள் ஏற்பட்டிருத்தல், சந்துகள் விழுந்திருத்தல், கனமின்மை, தூமவர்ணம் ஆகிய பவளத்திற்கு எட்டுவித தோஷங்களாம். (3) பவளமானது க்ஷயரோகம், காஸம், இரக்த-பித்தம், நேத்திர ரோகங்கள் ஆகியவற்றைத் தீர்க்கவல்லது; தீபநம், பாசநம், இலகு, விஷஹரம், பூதசமநம் என்னும் குணங்களுடையது.[2] 17—19.

1. **நல்முத்துப் பரீக்ஷை:**—உப்பு அல்லது க்ஷாரங்களைப் பசுமூத்திரத்திற் கரைத்து, அதில் மௌக்திகமென்கிற நல்முத்தைத் தேய்த்துப்பார்க்க, அது எவ்வித விகாரமும் அடையாமலிருந்தால் சிறந்த தென்று அறியலாம். **நல்முத்து சுத்தி:**—அம்லவர்க்கங்களாலாவது, காஞ்ஜிகமென்னும் காடியிலுலாவது, கோமூத்திரத்திலுலாவது, புளியம்பழச் சாற்றிலாவது பாவனை செய்ய மௌக்திகம் சுத்தியாகும். **மௌக்திக பஸ்மம்:**-வெண்கண்டங்கத்திரிச்சாற்றில் மூற்கூறிய சுத்தி செய்த நல்முத்தை பாவனைசெய்து, பூமியில் புடம்போட நன்கு பஸ்மமாகும்:—வைத்தியக சிந்தாமணி.

2. **பவளத்தின் சுத்தி:**—நற்பவளத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு யாம காலம் பாவனை செய்து, பிறகு வெந்நீரில் அலம்பி யெடுக்க சுத்தமாகும். **பிரவாள பஸ்மம்:**—அவ்விதம் சுத்தி செய்த பவளத்தை எருக்கம்பாலில் மூன்றுநாள் பாவனை செய்து, பிறகு கஜபுடத்தில் எரிக்க, அது நன்குபஸ்மமாகும்.—வைத்தியக சிந்தாமணி. **பிரவாள பரீக்ஷை:**—கடல் நீரில் உண்டாவதும், பாலசூரிய நிறம்பொருந்தியதுமானது நற்பவளம்; அதைக் கல்லில் தேய்த்து உரைத்தாலும் அதன் நிறம் அல்லது காந்தி குறைவடையாது.

மாகதம்: அதன் குண குணங்கள்.

(1) தார்க்ஷ்ய மென்கிற மரகத மணியானது நிறத்திற் பச்சை; கனமானது; ஸ்நிக்த்தம்; ஒளிவீசிப் பிரகாசிக்கும்; மழமழப்பானது; மாசற்றது; உருவத்திற் பருமனுனது; ஆக இவ்வேழும் மாகதத்தின் சிறந்த குணங்களாம். (2) கபிலநிறம், நீலநிறம், வெண்மை, கறுமை ஆகிய நிறங்களும், கறடுமுறடா யிருத்தல், இலகுவாயிருத்தல், சட்டையாயிருத்தல், கோணல், சூக்ஷமாயிருத்தல் ஆகியவையும் மாகதத்தின் தோஷங்களாகும். (3) ஜ்வரம், வாந்தி, விஷப்பற்றுகள், சுவாஸ ரோகம், ஸந்நிபாததோஷம், அக்னி மாந்த்யம், அர்சஸ் என்னும் மூலம், பாண்டு ரோகம், சோபம் இவற்றைத் தீர்ப்பதற்கு மாகதம் உபயோகமானது; மேலும் ஓஜோதாதுவை[1] இது விருத்தி செய்கிறது.[2] 20—22.

புஷ்பராகத்தின் குண குணங்கள்.

(1) புஷ்பராகம் என்னும் இரத்தினம் பளுவுள்ளது; மாசற்றது; ஸ்நிக்த்தமானது; உருவத்திற் பருத்தது;[3] மேடுபள்ளமற்றது; மிருதுவானது; கொன்றைப் பூவுக்குச் சமானமான நிறமுடையது; பரிகிப்பதற்கு வழவழப்பானது; ஆக எண்வகை குணங்கள் இதற்குண்டு. (2) சாடபல் நிறம், கபில நிறம், வெண்மை, ஒளியற்றது, கடினம், சூக்ஷம், பசுமை, கறுமை, மேடுபள்ளமானது ஆகிய தன்மைகளுள்ள புஷ்பராகம் ஒளஷதமுறையில் விலக்கத்தக்கது. (3) புஷ்பராகமானது விஷதோஷம், வாந்தி, கபதோஷம், வாததோஷம், அக்னிமாந்தியம் இவைகளைப் பரிஹரிக்கும்; மேலும் காபம், குஷ்டம், இரக்தபித்தம் இவைகளையும் தீர்க்கும்; தீபநம், பாசநம், இலகு என்னும் குணங்களும் இதற்குண்டு.[4] 23—25.

வஜ்ரம் மூன்று விதம்.

வஜ்ரம் என்னும் இரத்தினத்தில் புருஷ வஜ்ரம், ஸ்த்ரீவஜ்ரம், நபும்ஸகவஜ்ரம் என்று மூன்று விதம் உண்டு. இவற்றிற்குள்ள இரஸம்-வீர்யம்-விபாகம் என்னும் குணங்களைக்கொண்டு இம்மூன்றிலும் பிந்தியதை விட முந்தியது மேன்மேலும் சிறந்ததாம். (1) அவற்றுள் புருஷ வஜ்ரம் எட்டுக் கோணங்களும், எட்டு அல்லது ஆறு பட்டைகளும் உடையது; அதிக ஒளிவீசுவது; மேகத்திலுள்ள இந்திரதனுஸ்

1. ஓஜஸ்—சரீரத்திலுள்ள ஏழு தாதுக்களுடையவும் ஸாராம்சமான எட்டாவது தாது. தேஹத்துக்கு மிகப் பிரதானமான ஜீவதாது அதுவே.

2. காருத்மகம், இராஜ நீலம், ரௌஹிணேயம், ஸௌபர்ணம் முதலிய வேறு பெயர்களும் மாகதத்திற்குண்டு.

3. 'உருவத்திற் பருத்தது' என்பதனால் சிறுத்த புஷ்பராகம் உதவாதெனக் கருத்து.

4. புஷ்பராகம்—இதற்கு மஞ்ஜுமணி, பீதஸ்படிகம், குருரத்நம், பீதமணி என்கிற பெயர்களும் உண்டு. ஆகவே சுத்த வெண்மையான இரத்தினமல்ல வென்று அறிக. ஒருவாறு செம்பொன்னிற முள்ளது புஷ்பராகம்.

ஸைப்போல பல நிறமுள்ள ஒளிகளைப்பெற்ற நீரோட்டமுள்ளது. (2) அதுவே சப்பட்டையாகவும், சிறிது நீண்டு உருட்சியாகவும் இருந்தால் ஸ்த்ரீவஜ்ரம் எனப்படும். (3) உருண்ட வடிவத்துடன் கூர்மையற்ற கோணவரம்புகளையுடையதாய், அதிக கனமில்லாததாயிருந்தால் அது நபும்ஸக வஜ்ரமாம். ஸ்த்ரீவஜ்ரத்தை ஸ்த்ரீகளுக்கும், நபும்ஸக வஜ்ரத்தை நபும்ஸகருக்குமே உபயோகிக்கவேண்டும். புருஷவஜ்ரத்தைத் தவிர மற்றிரண்டையும் இவ்விதிக்கு மாறாக உபயோகித்தால் பயன் உண்டாகாது. (4) வெண்மை, பசுமை, சிவப்பு, கறுப்பு என்னும் நிறங்களைக்கொண்டு முற்கூறிய வஜ்ரம் ஒவ்வொன்றும் நான்கு வகைப்படும். அவை முறையே பிராம்மணர், க்ஷத்ரியர், வைசியர், சூத்ரர் ஆகிய பெயர்களைக் கொண்டு வழங்கப் படுகின்றன. இவ்விதி பைரவரால் கூறப்பட்டது.[1] 26—31.

வஜ்ரத்தின் உட்பிரிவுகள்.

வஜ்ரமானது ஆயுளை விருத்தி செய்யும்; நல்ல குணங்களை விரைவில் அளிக்கவல்லது; விருஷ்யம்; ஸந்நிபாத தோஷத்தைத் தணிக்கும்; எல்லா வியாதிகளையும் தீர்க்கும் சிறந்த சரக்கு வஜ்ரமே. இரஸத்தைக் கட்டுவதற்கும், பஸ்மம் செய்வதற்கும் உபயோகமானது; தீபன குணத்திற் சிறந்தது; உயிருக்கு ஆபத்தான நிலைமையிற் பிரயோஜன முள்ளது. 32.

வஜ்ரத்தின் குணங்கள்.

கிராஸம், திராஸம், பிந்து, ரேகை, ஜலகர்ப்பம் என்று[2] எல்லாவித இரத்தினங்களிலும் பொதுவாக ஐந்து தோஷங்கள் உண்டு. ஆனால் இரத்தினங்களுண்டாகும் கனிகள் உள்ள பூமியிலிருந்தோ நீரிலிருந்தோ சேர்ந்த அத்தோஷங்கள் இரத்தினங்களில் பற்றுவதில்லை.[3]—33½.

இரத்தினங்களின் பொது தோஷங்கள்.

1. "பிராம்மணவஜ்ரம் இரஸாயந முறையில் உபயோகமாகின்றது; அணிமை முதலிய பிரபாவம் தரத்தக்கது. க்ஷத்ரிய வஜ்ரமானது நரை, திரை முதலிய விகாரங்களையும், கிழத்தனத்தையும் நீக்கவல்லது; மிருத்யுவையும் தடுக்கும். வைச்யவஜ்ரம் செல்வம் தரும்; தேஹத்துக்கு தார்ட்யம் கொடுக்கும்; சூத்ரவஜ்ரமானது பல கடும் வியாதிகளைப் போக்கும்; தீர்க்காயுளைத் தரும்."—இரஸார்ணவம்.

2. கிராஸம்—பூமியிலிருந்து பற்றிய நிறம் முதலிய தோஷம். திராஸம்—ஒளி மழுங்கியிருத்தல். பிந்து—உள்ளே புள்ளி விழுந்திருத்தல், ரேகை—கோடு விழுந்திருத்தல். ஜலகர்ப்பம்—உள்ளே நீர்தங்கியிருத்தல்.

3. குறிப்பிட்ட ஒரு இரத்தினத்தைப்பற்றிய விஷயம் விவரிக்கப் படுகையில் பொதுரத்தினங்களைப்பற்றிய இவ்விஷயம் இடையில் சேர்க்கப் பட்டிருப்பதற்குக் காரணம் சிந்திக்கத்தக்கது.

வஜ்ர சுத்தியும் பஸ்ம முறைகளும்.

கொள்ளின் கஷாயத்திலாவது, வரகுக் கஷாயத்திலாவது வஜ்ரத்தை ஒரு யாமகாலம் போட்டுக் காய்ச்ச, அது சுத்தமாகும். (1) வஜ்ரத்தை மூட்டப்பூச்சியின் இரத்தத்தில் நான்கு முறை பாவனை செய்து, மூஞ்சுருவின் இறைச்சியை வாட்டி யெடுத்து நன்றாக அரைத்து, அக்கல்கத்தினுள் அவ்வஜ்ரத்தை வைத்து, மூப்பது முறை வராஹபுடத்திற் பக்குவம் செய்யவும். பிறகு அவ்வஜ்ரத்தை நெருப்பிலிட்டு ஊதி, கொள்ளின் கஷாயத்திற் போடவும்; இவ்வாறு நூறு முறை அதைக் காய்ச்சிக் காயச்சி அக்கஷாயத்தில் தோய்த்தெடுக்க வேண்டுமம. (2) கொள்ளின் கஷாயத்தையும், எலுமிச்சம் பழச் சாற்றையும் கூட்டி, அதைக்கொண்டு மனச்சிலையை அரைத்து, அக்கல்கத்தினுள் மூசையின் உட்புறத்தைப் பூசவேண்டும்; அம் மூசையில் வஜ்ரத்தையிட்டு, மேலே சீலை செய்து, வறட்டிகளைக் கொண்டு நன்றாக எட்டுமுறை புடமிடவும். பிறகு நூறு முறை அதைக் காய்ச்சிக் காய்ச்சி சுத்தமான பாதரஸத்திற் போடவேண்டும்; இவ்விதம் செய்ய வஜ்ரம் நீரில் மிதக்கும்படியாக பஸ்மமாகும். இரஸமுறைகளிற் பற்றுள்ளவரும், பொய்யா மொழியினருமாகிய ஸோமேஸ்வரதேவர் என்பவர் அனுபவ முறைப்படி இவ்வஜ்ர பஸ்ம முறையை மொழிந்தனர். (3) மூட்டப்பூச்சியின் இரத்தத்தை வஜ்ரத்தின்மேல் பூசி யுலர்த்தவும்; இவ்வாறு ஏழு முறை அதைப்பூசி யுலர்த்தியபின், ஓர் இரும்புப் பாத்திரத்தில் ஊசித்தகரைச்சாற்றை வைத்து, அதில் இவ்வஜ்ரத்தைப் போட்டு, நெருப்பில் வைத்து ஊதவும்; இவ்விதம் ஏழுதடவை செய்ய வஜ்ரம் பஸ்மமாகும். இந்த முறையைக் கூறியது பிரம்மஜ்யோதிர்முனியென்பவர். (4) நீலியென்னும் அவிரிவேர்ச் சாற்றிலும், வாலுழுவை வேர்ச்சாற்றிலும் வஜ்ரத்தைப் போட்டுத் தேய்த்து இழைத்து, வெயிலில் நன்றாக உலர்த்தி யெடுக்க, ஞாலுக்கினியினுல் கர்மத்தைப் போல வஜ்ரம் நன்கு பஸ்மமாகும். (5) மருக்காரைப் பழச்சாற்றுல் நாகப்பூச்சிகளை ஆட்டி, அக்கல்கத்தினுல் வஜ்ரத்தின்மேல் பூச்சிடவும்; அதை இருபது முறை புடமிட நன்கு பஸ்மமாகும். பிறகு அதை இரஸௌஷத முறைகளிற் பிரயோகிக்கலாம். (6) பிறகு அவ்வஜ்ரத்தைப் பொடி செய்து, அத்துடன் சிறிது வெண்காரமும், இருபதிலொரு பங்கு பூநாகத்தின் ஸத்துவமும் கூட்டி நன்றாக ஆட்டி யெடுத்து, அப்பால் அதற்குச் சமயெடை சுத்தி செய்த பொன்னைச் சேர்த்து, அக்னியிலிட்டு எரிக்கவும். பிறகு அதை இரஸௌஷதி முறைகளிற் பிரயோகிக்கலாம்.[1] 34—46.

1. (1) அரசம்பட்டை, இலந்தம்பட்டை, மருதோன்றிப்பட்டை, நண்டின் ஓடு, தேன், கள்ளிப்பால் இவற்றைச் சமபாகமாகக் கூட்டி அரைத்து, அக்கல்கத்தினுள் வஜ்ரத்தை வைத்து, கஜபுடத்திற் புடமிட பிராம்மண வஜ்ரம் பஸ்மமாகும். (2) அலரிவேர், ஆடுதீண்டாப்பாளைவேர், இலந்தம்பட்டை, அத்திப்பட்டை இவற்றைச் சமயெடையெடுத்து,

வஜ்ர குளிகை.

மூற்கூறியவாறு பக்குவம் செய்த வஜ்ரத்துடன் மூன்று பங்கு இரஸங்கூட்டி ஆட்டி யெடுத்து, குளிகை யாகச் செய்து வாயில் அடக்கிக்கொண்டு வந்தால், ஆடிக்கொண்டிருக்கும் பற்களும் சீக்கிரத்திலேயே கெட்டியாய்விடும்.—47.

வஜ்ரபஸ்மம் ரஸாயநம்.

வஜ்ரபஸ்மம் முப்பது பாகம், ஸ்வர்ணபஸ்மம் பதினாறு பாகம், வெள்ளி பஸ்மம் எட்டு பாகம், சுத்தமான இரஸம் பதினேழு பாகம், அப்ரகபஸ்மம் நான்கு பாகம், ஸ்வர்ணமாக்ஷிகபஸ்மம் எட்டு பாகம், வைக்கிராந்தபஸ்மம் ஆறு பாகம் ஆக இவற்றைக் கூட்டி, முற்கூறிய கஷாயங்களை அனுபான்மாகக் கொண்டு, அவரவருக்கேற்ற அளவின்படியுட்கொண்டுவர ஸகல லித்திகளும் உண்டாம்.—48.

நீலரத்தினம் இருவகை.

நீலரத்தினம் ஜலநீலம் என்றும், இந்திரநீலம் என்றும் இரு வகைப்படும். இவற்றுள் இந்திரநீலம் சிறந்தது. (1) உட்புறம் வெளிறியதாய் மேலே நீலநிறம் கொண்டுள்ளது ஜலநீலம்; அது இலேசாகவும் இருக்கும்; குணத்திலும் குறைவானது. (2) உட்புறம் கருநிற நீரோட்டமுள்ளதாய், பாரமுள்ளதாயிருப்பது இந்திரநீலமாம். 49,—50.

நீலரத்தினத்தின் குண தோஷங்கள்.

(1) ஓரே நிறமுள்ள காந்தி, பாரம், ஸ்நிக்த்தம், நிர்மலம், உருட்சி, மிருது, மத்தியில் ஒளி வீசுதல் ஆகிய ஏழும் நீலமணிக்குள்ள சிறந்த குணங்களாம். (2) ஐந்து வர்ணங்களின் சேர்க்கை, ரூக்ஷத்தன்மை, பாரமின்மை, இரத்த நாற்றம், தட்டையான உருவம், மிகச் சிறுத்த உருவம், ஜலநீலம் ஆகியவை நீலமணியின் ஏழு விதமான தோஷங்களாம். 51,—52.

நீலரத்தினத்தின் உபயோகங்கள்.

நீலமணியின் உபயோகங்களாவன :— ச்வாஸகாஸஹரம், விருத்யம், த்ரிதோஷஹரம், சிறந்த தீபநம் ஆகிய குணங்களையுடையது. விஷமஜ்வரம், மூலரோகம் ஆகிய ரோகங்களை நிவர்த்தி செய்யும்.[1]—53.

எருக்கமபாலால் ஆட்டியெடுத்து, முன்போல் புடமிட க்ஷத்ரிய வஜ்ரம் பஸ்மமாகும். (3) சிறுமுட்டி, பேராமுட்டி, கந்தகம், ஆமையோடு இவற்றைக் கள்ளிப்பாலால் ஆட்டி, இந்த கல்கத்தினுள் வைசிய வஜ்ரத்தை வைத்துப், புடமிட ப்ராம்மண வஜ்ரம்போலவே பஸ்மமாகும். (4) கருணைக்கிழங்கு, வெள்ளுள்ளி, சங்கு, மனச்சிலை இவற்றைச் சமயெடையாகச் சேர்த்து, ஆலம்பாலால் ஆட்டி கல்கமாகச் செய்து, அதனுள் சூத்ரி வஜ்ரத்தை வைத்து புடமிட பஸ்மமாகும்.—இரஸரத்நாகரம்.

1. நீலமணியைக் கழுதையின் மூத்திரத்திலிட்டுக் கடும் வெயிலில் வைத்து ஒரு நாள் பாவனை செய்ய, அது சுத்தியடையும். இது நீலமணி சுத்திமுறை. பிறகு அந்த நீலத்தைப் பாலக்கீரையின் சாற்றில் போட்டு மூன்றாம காலம் பாவனை செய்து, கருமானுலையில் எரித்தெடுக்க பஸ்மமாகும்.—வைத்திய சிந்தாமணி.

கோமேதம்: அதன் குண தோஷங்கள்.

பசுவின் சிறுநீருக்குச் சமானமான நிறமுள்ளதாயிருப்பதால் இந்த இரத்தினம் கோமேதம் எனப்படுகிறது. (1) மிக்க நிர்மலமான பசுவின் மூத்திரம் போன்ற சாயலையுடையது; நிர்மலமானது; ஸ்நிக்த்தமானது; மேடுபள்ளமற்றது; பாரமுள்ளது; செதிளற்றது; மழமழப்பானது; பளபளப்புள்ளது; ஆக எட்டு நல்ல குணங்களையுடையது கோமேதம். (2) அழுக்கடைந்த காந்தி, இலேசாயிருத்தல், ரூக்ஷத்தன்மை, தட்டை, செதிள்களுடைமை, பளபளப்பின்மை, பசுமையான பீங்கானுருவம் ஆகியவை கோமேதத்தின் தோஷங்களாம்.[1] 54—,55.

கோமேதத்தின் உபயோகங்கள்.

கோமேதமானது கப-பித்தங்களை ஹரிக்கும்; க்ஷயம், பாண்டு ரோகம் இவற்றைப் போக்கும்; தீபகம், பாசகம், ருச்சியம் என்னும் குணங்களையு முடையது; நாக்குக்கு நற்சுவையையும் தரும்; புத்தியைத் தெளியச் செய்து விருத்தி செய்யும்.[2]—56.

வைடூர்யம்: சிறந்ததும் தோஷமுள்ளதும்.

(1) வைடூர்யம் என்னும் இரத்தினம் கறுப்பு கலந்த வெண்ணிறமுடையது; மேடுபள்ளமற்றது; நிர்மலமானது; பாரமுள்ளது; ஒளி வீசுவது; உட்புறத்தில் வெண்ணிற மேகம்போன்ற மாலையுருவான இரேகையைப் பெற்றது. இந்த இலக்ஷணங்களைப் பெற்ற வைடூர்யம் சிறந்ததாகக் கருதப்படும். (2) கருமை நிறம், நீருக்குச் சமானமான காந்தி, சப்பட்டையான உருவம், இலேசு, கடினம், சென்னிறமான மாலைபோன்ற உட்புற இரேகை ஆகிய இலக்ஷணமுள்ள வைடூர்யம் தோஷமுள்ளதாம்[3]. 57,—58.

---

1. சுத்த ஜலமுள்ள பாத்திரத்தில் சிறந்த கோமேதகத்தைப் போட, அந்த ஜலம் பசு மூத்திரம் போலப் பிரகாசங்கொள்ளும்; அந்த மணியைத் தேய்த்தாலும் அதன் ஒளி மழுங்காது. அதுதான் சிறந்த கோமேதம் என்றறிக.—ஆயுர்வேதப்ரகாசம்.

2. கோமேதசுத்தி—கோமேதகமணியைக் குதிரை மூத்திரத்திலும், நிலப்பனங்கிழங்கின் ஸ்வரஸத்திலும் மூன்று மூன்று நாட்கள் பாவனை செய்ய சுத்தியாகும். கோமேதபஸ்மம்: சுத்தியான கோமேதகத்தைத் கரு ஊமத்தன் சாற்றில் பாவனை செய்து, மூன்று முறை புடமிட பஸ்மமாகும்.—வைத்திய சிந்தாமணி.

3. (1) பூமியில் உண்டான வைடூர்யமே சிறந்தது. அது உஷ்ணவீர்யமும், அம்லரஸமும் உடையது; கபஹரம், வாதஹரம் என்னும் குணங்களையும் பெற்றது; குல்மம் முதலிய குடலிப்பற்றிய கோளாறுகளைத் தீர்க்கவல்லது. (2) மூங்கிலிலைபோன்ற காந்தியையுடையது ஒன்று; மயிற் கழுத்துபோன்ற ஒளியுடையது மற்றொன்று; பூனையின் விழியைப்போன்று பொன்னிறம் பெற்றுத் துலங்குவது மற்றொன்று; ஆக வைடூர்யம் மூன்று வகைப்படும். (3) பருவானது; மிகவும் ஸ்நிக்தமானது; செதிளற்றது; நிர்மலமானது; ஆகிய இலக்ஷணமுள்ளதே சிறந்த வைடூர்யமாம்:—ஆயுர்வேதப்ரகாசம்.

வைடூர்யமணியின் உபயோகங்களாவன :—இரக்த - பித்த ஹரம்; அறிவை விருத்திசெய்யும்; ஆயுளைப் பெருக்கும்; பலத்தை அதிகப்படுத்தும்; பித்தப் பிரதானமான ரோகங்களைத் தீர்க்கும்; தீபகம், மல சோதகம் என்னும் குணங்களையும் உடையது [1].—59.

வைடூர்யத்தின் உபயோகங்கள்.

(1) அம்லவர்க்கங்களின் சாற்றில் அல்லது காடியினுல் மாணிக்கம் சுத்தியடையும். (2) தக்காளிச் சாற்றில் நல் முத்து சுத்தமாகும். (3) க்ஷாரவர்க்கத்தினுல் நற்பவளம் சுத்தியடையும். (4) பசுவின் பாலால் கருநடப் பச்சைக்கல் சுத்தியடையும். (5) கொள்ளின் கஷாயம் கூட்டிய காடியினுல் புஷ்பராகம் சுத்தமடையும். (6) வஜ்ரமானது முள்ளுக்கீரையின் சாற்றால் சுத்தமாகும். (7) அவிரிச்சாற்றில் இந்திர நீலம் சுத்தமாகும். (8) கோமேதகம் கோரோசனையினுல் சுத்தமாகும். (9) வைடூர்யம் த்ரிபலாகஷாயத்தினுல் சுத்தமாகும். 60—62.

நவரத்தினங்களின் சுத்தி முறைகள்.

மனச்சிலை, கந்தகம், தாளகம் இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றில் ஆட்டி, எட்டுமுறை புடம்போட வஜ்ரத்தைத் தவிர மற்ற இரத்தினங்கள் பஸ்மமாகும்.—63.

இரத்தினபஸ்ம முறை, பொது.

காயம், பஞ்சலவணங்கள், மூன்று க்ஷாரங்கள், மாம்ஸரஸம், புளிவஞ்சி, நவஸாரம், பழுத்துப் பருத்த கும்பி பலம், [2] சுத்தமான கலப்பைக் கிழங்கு, எலிச்செவிச் செடி, அழுகண்ணிப் பாலைக்கீரை, சித்திரமூலம் ஆகியவற்றைப் பொடித்து, அவற்றில் கள்ளிப்பாலையும் வெள்ளெருக்கம்பாலையும் கூட்டி நன்றாக ஆட்டி, உருண்டையாக்கி, அதனுள் நற்குணமுள்ள நவரத்தினங்களைச் சுத்திசெய்து அடக்கம் செய்யவும். அவ்வுருண்டையின்மீது பூர்ஜபத்திரத்தைச் சுற்றி, நன்றாக நூல்களால் சுற்றிவிடவும். அதன் மேல் ஒரு சீலையையும் சுற்றி, பிறகு கூறப்படும் அம்லவர்க்கத் திரவம் நிரம்பிய பாண்டத்தில் டோலாயந்திரத்தில் அக்கோளத்தை வைத்து, கடுந்தீயிட்டு மூன்று நாட்கள் எரிக்கவேண்டும். பிறகு இரத்தினங்களின் திரவத்தை அதிலிருந்து எடுக்கவும். இரத்தினம்போன்ற ஒளி இதற்குண்டு; ஆனல் இலேசாகவும், தேஹத்தை உலோஹம் போன்று கடினமாகச் செய்யும் தன்மையுடையதாகவும் இருக்கும். 64—69½.

1. **வைடூர்ய சுத்தி**:—வைடூர்யத்தைக் குதிரையின் சிறு நீரிலும், கூஷ்மாண்ட ஸ்வரஸத்திலும் இரண்டு தினங்கள் பாவனைசெய்ய சுத்தமாகும். **வைடூர்ய பஸ்மம்**:—அவ்வைடூர்யத்தைக் கல்லுரலிச் சாற்றில் பாவனைசெய்து, கருமாரவுலையில் நன்றாக எரித்தெடுத்து, வஜ்ர மூசையில் பிறகு கஜபுடங்கொண்டு எரித்தெடுக்க வைடூர்யம் பஸ்மமாகும்:—வைத்திய சிந்தாமணி.

2. கும்பீபலம்—பேய்ச்சுரை யென்று சிலர். நேபாளவித்துகள் அடங்கிய காயும் கும்பீபலம் எனப்படுவதுண்டு.

நல் முத்துக்களைப் பொடி செய்து, எழு நாட்கள் புளிவஞ்சி ரஸத்தினுல் அரைக்க வேண்டும். பிறகு அதை எலுமிச்சம் பழத்திற்குள் வைத்து, தானியங்களுக்குள் அடக்கம் செய்யவும். அதை ஏழு நாட்கள் கழித்து எடுத்து புடம்போட, மௌக்திகத்திரவம் உண்டாம். 70,—71.

மௌக்திக த்ருதி.

பிரண்டையைக் கல்கமாகச் செய்து, அதனுள் வஜ்ரத்தை வைத்து மூடிவிடவும். பிறகு காடியடங்கிய பாத்திரத்தில் இதை டோலாயந்திர முறையில் ஏழு நாட்கள் எரித்துப் பக்குவம் செய்ய, வஜ்ரம் திரவமாகும்.—72.

வஜ்ரத்ருதி.

(1) வெண்ணிறமான வைக்ராந்தத்தைப் புளிவஞ்சிச் சாற்றில் ஏழு நாட்கள் பாவனை செய்து, கடும் வெயிலில் காயவைத்து வந்தால் அது திரவத்தன்மையை யடையும். (2) தாழைவேரின் சாற்றில் இந்துப்பு, கொன்றை, இந்திரகோபமென்னும் சென்னிறப் பூச்சி இவற்றை ஒரு பாண்டியிலிட்டு, அதில் வைக்ராந்தத்தைப் போட்டு, ஏழு நாட்கள் எரித்துப் பக்குவம் செய்ய அது திரவமாகும். (3) அஷ்ட லோஹங்களின் [1] பஸ்மத்தினும், வஜ்ரபஸ்மத்தினும் வைக்ராந்தத்தைக் காய்ச்சினலும், அல்லது அவை அடங்கிய நீரின் ஆவியில் டோலாயந்திரமுறையிற் பக்குவம் செய்தாலும் வைக்ராந்தம் திரவமாகும். இந்த முறையானது ஸகல இரத்தினங்களுடையவும் நிராவகமுறைக்கு மிகச் சிறந்தது [2] 73—76.

வைக்ராந்த த்ருதி.

இரத்தினம் முதலியவற்றின் த்ருதிகளை குசும்பதைலத்தில் வெவ்வேறாகப் போட்டு வைத்தால் அவை வெகு காலம் குணத்திற் குறைவு படாமலிருக்கும். பிறகு அவசியமானபோது அவற்றை யெடுத்து உபயோகிக்கலாம்.—77.

த்ருதிகளைச் சேமித்துவைக்கும் முறை.

இரத்தினங்களை சரீரத்தில் எப்பொழுதும் அணிந்துகொண்டிருந்தால் அடியிற்குறிப்பிடப்படும உபயோகங்கள் உண்டு. சூரியன் முதலிய கிரஹங்களாலுண்டான பீடைகள் பரிஹரிக்கப்படும்; தீர்க்காயுள் உண்டாம்; ஆரோக்கியம் விருத்தியாம்; அழகு அதிகரிக்கும்; செல்வம் செழிக்கும்; மனம் தென்புறும்; தைரியம்

இரத்தினங்களை அணிதலின் உபயோகங்கள்.

1. அஷ்ட லோஹங்கள்:—பொன், வெள்ளி, செம்பு, வங்கம், கருவங்கம், பித்தளை, காந்தலோஹம், லோஹம் என்பன வாம்.

2. இதற்குப் பிறகு, இடையில் 'இராஜாவர்த்தம்' என்பதைப் பற்றி மூன அத்தியாயத்தின் இறுதியிற் கூறியுள்ள விஷயம் ஆசபோத வித்யாபூஷணன் முதலியவர்களால் கல்கத்தாவில் பிரசுரிக்கப்பட்டுள்ள புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

மேலெழும்; முகமாசு ஒழியும்; பாக்கியக்கேடு தொலையும்; பூத-பிசாசாதிகளாலான தீமைகளும் தீரும். [1]—78.

ஐந்தாம் அத்தியாயம்.

உலோஹங்கள் [2].

(1) பொன், வெள்ளி, செம்பு, தீக்ஷணம் என்கிற உருக் கிரும்பு [3] ஆகியவை சுத்த லோஹங்கள் [4] எனப்படும். (2) நாகம், வங்கம் என்னும் இரண்டும் பூதிலோஹங்கள் [5] எனப்படுகின்றன. (3) பித்தளை, வெண்கலம், வர்த்தலோஹம் [6] என்கிற மூன்றும் மிச்ரலோஹங்கள் என்று வழங்கப்படும். பொன் முதலான லோஹவர்க்கங்களுக்கு 'லூஹ தாது' என்றும் பெயருண்டு. லோஹம் என்னும் பெயர் அநேகம் சரக்குகளுக்கு [7] வழங்கப்படும். [8]—1.

உலோஹங்களின் ஜாதிகள்.

ஸ்வர்ணம்—பொன்.

ஸ்வர்ணமானது பிராக்ருதஸ்வர்ணம், ஸஹஜஸ்வர்ணம், அக்னிஜஸ்வர்ணம், கநிஜஸ்வர்ணம், இரஸவேதஜ ஸ்வர்ணம் என்று ஐந்துவிதமாம்.—2.

ஸ்வர்ணம் ஐந்து விதம்.

---

1. புஷ்பராகம், பத்மராகம், வஜ்ரம் முதலிய மூற்கூறியவை **இரத்தினங்கள்** என்றும், வைக்ராந்தம், ஸூர்யகாந்தம், ஹீரகம், மௌக்திகம், சந்திரகாந்தம், இராஜாவர்த்தம், கருடப்பச்சை ஆகிய எழும் **மணிகள்** என்றும் **வழங்கப்படுவதாக** ஆயுர்வேத ப்ரகாசம்.

2. பொன், வெள்ளி, செம்பு, அயம் முதலிய பாரமும் பளபளப்புமுள்ள ஒன்பது விதமான தாதுக்களுக்கும் பொதுவாக உலோஹம் என்று பெயர். ஆனால் முக்கியமாக தீக்ஷணம் என்கிற உருக்கு அல்லது அயம் லோஹம் என்று வழங்கப்படுகிறது. முகம் முதலியதற்கு ஒளியளிக்கக் கூடிய ஒருவித அகில் அல்லது அகரு என்னும் கந்தத்திரவ்யத்துக்கும் லோஹம் என்று பெயர் உண்டு. ஆகவே இதன் கீழ் மூலத்தில் 'லோஹம் என்னும் பெயர் அநேகம் சரக்குகளுக்குப் பொதுவாக வழங்கப்படும்' எனக் கூறப்படுகிறது.

3. உருக்கிரும்பு—எஃகு என்றும் வழங்கப்படும்.

4. 'சுத்தலோஹம்' என்றால் வேறு லோஹங்களின் அல்லது தாதுக்களின் கலப்பில்லாமல் சுயமாயுண்டாகுபவை யெனப்பொருள்.

5. ஒருவித நாற்றம் அவற்றிலிருப்பதால் 'பூதிலோஹம்' எனப்படுகிறது.

6. வர்த்தலோஹம் என்பதைப்பற்றி பிறகு அதன் தலையங்கத்திற்பார்க்கவும்.

7. 'கர்ஷார்த்தவாசீ' என்கிற பாடப்படி லோஹங்களைக் **கர்ஷம்** என்றும் கூறுவர் எனப் பொருள்.

8. 'பொன், வெள்ளி, செம்பு, வங்கம், அத்தகாகம், காரீயம், அயம் ஆகிய இவ்வேழும் கனியிலுண்டாகும் ஏழு தாதுக்கள்' என்று ஆயுர்வேதப் பிரகாசம்.

(1) பொன்னின் பொதுவான குணங்களாவன: ஆயுளைவிருத்தி செய்யும்; லக்ஷ்மீகரம்; தேஹகாந்தி, புத்தி, ஸ்மிருதி யென்னும் ஞாபகசக்தி இவைகளையும் தரும்; எல்லா வியாதிகளையும் தீர்க்கவல்லது; அணிபவரைப் புனிதமாகச் செய்யவல்லது; பூததோஷங்களைப் போக்கக்கூடியது; காமேச்சையை விருத்தி செய்வது; ஆரோக்கியத்தையும், சரீரபுஷ்டியையும் மேலோங்கச் செய்யும். (2) வெள்ளியின் குணங்களாவன: விஷஹரம்; பித்தத்தனத்திலும் தேஹரம் இளைப்புமுமற் செய்யும்; மேஹ ரோகஹரம்; இளைத்த தேஹதாதுக்களைப் புஷ்டியாக்கும்; இந்திரியங்களுக்கு வலிமையைக் கொடுத்து அவற்றை மிகத் தெளிவுறச் செய்யும்; வீர்யத்தை விருத்தியாக்கும்.—3.

பொன் வெள்ளிகளின் பொதுக்குணங்கள்.

(1) இரஜோ குணத்திலுள்ளதாகிய யாதொரு தாதுவினுல் ஆதியில் பிரம்மாண்டம் என்கிற அண்டகோசம் மூடப்பட்டிருந்ததோ அந்த ஸ்வர்ணம் **பிராக்ருதம்** எனப்படும்.[1] அது தேவர்களுக்கும் கிடைப்பதரிது. (2) பொன் மயமான யாதொரு ஜராயுவினுல் [2] மூடப்பட்டுப் பிரம்மதேவன் உண்டானதினது அது மேருபர்வதமாக ஆயிற்று; அப்பொன் **ஸஹஜம்** எனப்படும். (3) அக்னி தேவன் தான் உட்கொண்ட சிவனது வீர்யத்தை-அதன் கடும் தேஜஸ்ஸைத் தாங்காதவனுய்—வெளியிற் கக்கிவிட, அவ்வீர்யமனைத்தும் ஸ்வர்ணமாக ஆய்விட்டது; அவ்விதமான பொன் **அக்னிஜம்** எனப்படும். இம்மூன்றுவித ஸ்வர்ணங்களும் தேவாம்சம் பெற்ற அபூர்வமான இனங்கள்; இவை பதினுறு மாற்றுகிறமுள்ளவை; இவற்றைத் தேகத்தில் அணிந்து கொண்டிருந்தாலே கிழத்தனமோ இறப்போ அவனுக்குண்டாகாது. (4) ஆங்காங்கு மலைகளிலுள்ள கனிகளில் உண்டாகும் பொன் **கநிஜம்** எனப்படும்; அது பதினுன்கு மாற்றுள்ளதாய், உட்கொள்ளப்படின் எல்லாப் பிணிகளையும் தீர்க்கவல்லதாயிருக்கும். (5) இரஸேந்திரம் என்கிற பாதரஸத்தைக் கொண்டு வாத முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொன் **வேதஜம்** என்று வழங்கப்படும். அவ்விதமான

---

1. உலகப்படைப்புக்கு இரஜோகுணம் காரணமாதலால், பிரம்மதேவன் உண்டாவதற்கு ஆதாரமாயிருந்த அண்டமும் அக்குணமுள்ளதாயிருந்ததெனப்படுகிறது. 'பரமாத்மா அநேகவிதப் பிரஜைகளைத் தன் தேஹத்திலிருந்து படைக்க விரும்பி ஆதியில் ஜலத்தைப் படைத்தார்; அதில் தன் வீர்யத்தைவிட, அது ஸ்வர்ணமயமான அண்டமாக ஆயிற்று; அது ஆயிரம் சூரியன்களுதித்தாற் போலப் பிரகாசித்தது; உலக மனைத்தையும் படைப்பவரான பிரம்மதேவன் அதில் உண்டானர். என்று மனு ஸம்ஹிதை.

2. கருப்பத்திற் சுவைப் போர்த்திருக்கும் சவ்வுப்பை ஜார்யு எனப்படும்.

பொன் மிகவும் சுத்தமானது; மிகச் சிறந்த இரஸாயனமுமாகும்.[1] 4—9.

பொன்னின் குணங்கள்.

ஸ்வர்ணம் ஸ்நிக்தமானது; மேதை யென்னும் விசேஷ புத்தியை விருத்தி செய்வது; விஷங்களையும் கிருத்திம விஷங்களையும் நிவருத்தி செய்யும்; பிருஹ்மணத்திலும், விருஷ்யம் என்னும் குணத்திலும் முதன்மையானது; யக்ஷர்களாலுண்டாகும் தொந்தரவுகளையும், உன்மாத மென்னும் பித்தையும் நிவருத்திப்பதிற் சிறந்தது; தேகத்திலுண்டாகும் மற்றும் பிணிகளையும் பரிஹரிக்க வல்லது; ஞாபகசக்தியை வலுப்படுத்தும்; ஸந்நிபாததோஷங்களை நீக்கும்; நாக்கில் நற்சுவையைத் தரும்; அக்னிதீபனம் செய்யும்; விபாகத்தில் மதுரமானது.—10.

அசுத்த ஸ்வர்ணத்தாலுண்டாகும் தீமை.

ஸ்வர்ணத்தைச் சுத்தம் செய்யாமலும், முறைப்படி பஸ்மம் செய்யாமலும் உபயோகித்தால், பொதுவாக தேஹ தோஷ ரோகங்கியம் கெடும்; வீர்யம் சீரழியும்; உடல்வன்மை கெடும்; பலவகையான ரோகங்களையும் அவ்விதஸ்வர்ணம் உண்டுபண்ணும்; ஆகவே அதைச் சுத்தம் செய்தே உபயோகிக்கவேண்டும்.—11.

ஸ்வர்ண சுத்தி முறை.

ஸ்வர்ணத்தை முள்ளால் குத்தக்கூடியவாறு மிக மெலிய ரேக்குகளாக அடித்து, சிறிது கந்தகம்[2] கூட்டி, அகலில் வைத்து அதை மற்றோர் அகலால் மூடி சீலைசெய்து, தணலில் வைத்து அரை யாமநேரம் நன்றாக ஊதி யெரித்தால் பொன் சுத்தமாம்; சிறந்த நிறத்தையும் பெறும்.[3]—12.

1. சிறந்த ஸ்வர்ணமும், கலப்பு ஸ்வர்ணமும்:-காய்ச்சினால் சிவப்பம், வெட்டினால் உட்புறம் வெளுப்பும், உறைத்தால் குங்கும நிறமும் உடையதாயிருந்தால் அந்தப் பொன், வெள்ளி செம்புகளின் கலப்பில்லாத தென்றறியவும், மேலும் அது ஸ்நிக்தமாகவும், நயப்புள்ளதாகவும், கனமாகவும் இருக்கவேணும். ஆயுர்வேத ப்ரகாசம்.

2. 'படு தாது' என்கிற மூலபதத்திற்கு கந்தகம் என்று 'ரஸத்தி நஸமுச்சய போதிநி' என்னும் வியாக்யாநம். படு என்றால்உப்பு; தாது என்றால் மனச்சிலை; இவ்விரண்டையும் கூட்டி என்றும் பொருள்கூறலாம். படு தாது என்றால் படிக்காரம் என்றும் சிலர்.

3. பஞ்சம்ருத்திகைகளை எலுமிச்சம்பழச்சாற்றால் ஆட்டி, அக்குழம்பினால் பொன்ரேக்குகளைப் பூசி, பெரிய கும்மட்டியில் இருபது வறட்டிகள் இட்டு, காற்றில்லாத இடத்தில் நன்றாகக் காய்ச்சியினால் பொன் சுத்தமாவதோடு சிறந்த நிறத்தையும் பெறுகின்றது; அவசியமானால் வறட்டிகளை இன்னும் அதிகமாகவும் உபயோகிக்கலாம்:—ஆயுர்வேதப்ரகாசம். [புற்றுமண், ஒட்டடை, காவி, செங்கற்பொடி, உழமண் ஆகியவை பஞ்ச மிருத்திகைகள்.]

நான்கு வகையான உலோஹ பஸ்மமுறைகள்.

(1) எல்லா உலோஹங்களையுமே இரஸபஸ்மத்தைக் கொண்டு மாரணம் செய்வது சிறந்த முறை.[1] (2) மூலிகைகளைக்கொண்டு பஸ்மம் செய்வது மத்திம முறை. (3) கந்தகம் முதலியவற்றால் மாரணம் செய்வது அதம முறையாம். (4) தாளகத்தைக் கொண்டு உலோஹங்களை பஸ்மம் செல்வதால், அப்பஸ்மம் தூர்க்குணத்தைப் பெறும். 13—13½.

ஸ்வர்ண பஸ்ம முறைகள்.

(1) முள்ளால் குத்தியெடுக்கக் கூடியவாறு ஸ்வர்ணத்தை ரேக்குகளாக அடித்து, கொடிமாதுளைச் சாற்றிற் குழைத்த இரஸபஸ்மத்தினால் அந்த ரேக்குகளைப் பூசி புடம்போடவும்; அவ்வாறு பத்து புடங்களிட ஸ்வர்ணம் பஸ்மமாகும். (2) பொன்னை நன்கு உருக்கவும்; பொன்னினைடை இரஸபஸ்மம் கூட்டவும்; பிறகு கொடிமாதுளைச் சாற்றில் ஆட்டியெடுத்த விங்கத்தையும் கூட்டி, பன்னிரண்டு முறை புடமிட பொன் மிகச் சிறந்த குங்குமநிறமான பஸ்மமாகும். (3) ஒரு பங்கு பொன்; கால் பங்கு இரஸபஸ்மம்; இவற்றை எதேனும் ஒரு புளிப்புச் சாற்றால் அரைத்துப் புடமிடவும்; இவ்விதம் எட்டு முறை புடமிட ஸ்வர்ணம் பஸ்மமாகும்.[2] 14—17.

ஸ்வர்ண த்ருதி.

(1) தவளையின் எலும்பு, கொழுப்பு, வெண்காரம், அலரிவேர், மழைக் காலத்தினுண்டாம் இந்திரகோபமென்னும் பட்டுப்போன்ற பூச்சி இவற்றைச் சூர்ணம் செய்து, உருக்கியெடுத்த ஸ்வர்ணத்தில் தூவிவிட்டால், அப்பொன் உருகிய நிலையிலேயே வெகு நேரம் இருக்கும். (2) இந்திரகோபப்பூச்சிகளை தேவதாளிக்கனியின் ஸத்தில் பாவனை செய்து, அதை உருக்கிய பொன்னில் விட்டால், வெகு நேரம் பொன் நீரைப்போலவே திரவமான நிலைமையில் இருக்கும். 18—19.

ஸ்வர்ண பஸ்ம குணங்கள்.

மூற் கூறிய ஸ்வர்ணபஸ்மத்தை இரண்டு குன்றுமணி யெடைத்திரிகடு சூர்ணத்துடன் நெய்யின் அதுபானத்தோடு கலந்து உட்கொள்ளவும்; இது கஷயரோகம், அக்னிமாந்த்யம் என்னும் பசியின்மை, க்வாஸம், காஸம், அரோசகம், பாண்டுரோகம், கடுமையான கிரஹணீரோகம், கிருத்திம விஷக்கோளாறுகள், மற்றும் பலவகையான விஷ

1. 'உலோஹங்கள் இரஸத்துடன் கூடினால் அவற்றிலுள்ள தோஷங்கள் நீங்கும்; இரஸமும் உலோஹங்களின் சேர்க்கையினால் தோஷமற்றதாகும். ஆகையால் எந்த லோஹத்தையும் இரஸம் சேர்க்காமல் பஸ்மம் செய்யலாகாது'—இரஸ ஸங்கேத கலிகா.

2. எந்த லோஹத்தின் பஸ்மத்தையானாலும் எலுமிச்சம்பழச் சாற்றில் குழைத்து, இரும்பாலான கத்தியில் தடவி, அது சென்னிறமடைந்தால், அதைக் கொண்டு பஸ்மம் நன்கு நிறை வேறியதாகத் தெரிந்து கொள்ளவேண்டும்:—இரஸஸங்கேத கலிகா.

ஸம்பந்தமான விகாரங்கள் ஆகியவற்றைப் பரிஹரிக்க உதவும்; மேலும் ஒஜோதாதுவை இது விருத்தி செய்யும்; தேஹவலிமையையும் அதிகரிக்கச் செய்யும்.[1]—20.

இரஜதம்—வெள்ளி.

வெள்ளியானது ஸஹஜம், கநிஜம், க்ருத்ரிமம் என்று மூவகைப் படும். இவற்றுள் க்ருத்ரிமத்தினும் கநிஜம் சிறந்தது; அதைக் காட்டிலும் ஸஹஜம் சிலாக்கியமானது. (1) கைலை முதலிய மாமலைகளில் உண்டான வெள்ளி ஸஹஜ ரஜதம் எனப்படும். அதை மனிதர் பரிசித்தாலே வியாதிகள் நீங்கும். (2) இமாலயம் முதலான பர்வதங்களில் உண்டாகும் வெள்ளி கநிஜ ரஜதம் என்று வழங்கப்படுகிறது. அது மிகச் சிறந்த இரஸாயந குணமுடையது. (3) ஸ்ரீராமனுடைய பாதுகைகளின் ஸம்பந்தத்தினால் எத்தனை வங்கம் வெள்ளியாக மாறிவிட்டதோ அது க்ருத்ரிம ரஜதம் எனக் கூறப்படுகிறது;[2] இதற்குப் 'பாதரஜதம்' என்றும் பெயருண்டு; இது எல்லா ரோகங்களையும் தீர்க்கும். 21—25.

மூன்றுவித வெள்ளிகள்.

கனமாயிருத்தல், நிர்மலம், குருத்தன்மை, ஸ்நிக்தத்தன்மை, காய்ச்சினாலும் வெட்டினாலும் வெண்மையாயிருத்தல், மிருதுத்தன்மை, நிறம் முதலியதில் சங்குபோன்றிருத்தல், வழவழப்பு, கொப்புளம் அல்லது புள்ளிகள் இல்லாதிருத்தல் ஆகியவை சிறந்த வெள்ளியின் குணங்கள்.—26.

சிறந்த வெள்ளியின் இலக்ஷணங்கள்.

எந்த வெள்ளியைக் காய்ச்சினால் சிவப்பு அல்லது பசுமை அல்லது கருப்பு ஆகிய நிறத்தை அது பெறுகின்றதோ, ரூக்ஷத்தன்மையையும், பளுவின்மையையும், காய்ச்சியபிறகு பருத்திருப்பது போன்ற தோற்றத்தையும், நயப்பின்மையையும் அடைகின்றதோ அது தோஷமுள்ள வெள்ளியாம்; ஆகவே வெள்ளிக்கு முற்கூறிய எட்டு தோஷங்கள் உண்டு.[3]—27.

வெள்ளியின் தோஷங்கள் எட்டு.

1. இதன் பிறகு "பலஞ்ச வீர்யம் ஹரதே ச" என்கிற ச்லோகம் அதிகப் படியாகவும் பிரக்ஷிப்தமாகவும் தெரிவதால் அவ்விஷயம் இங்கு மொழிபெயர்க்கப்படவில்லை. இதே விஷயம் "அசுத்தஸ்வர்ணத்தால் உண்டாகும் தீமைகள்" என்ற இதற்கு முன் கூறப்பட்டுள்ளது.

2. வங்கம் முதலியதோடு இரஸத்தைக் கூட்டுவதால் வெள்ளி போன்ற வஸ்து உண்டாகும்; அது 'க்ருத்ரிம ரஜதம்' எனப்படும்.—ஆயுர்வேத ப்ரகாசம்.

3. கடினத்தன்மை, ரூக்ஷத்தன்மை, சிவப்பு, பசுமை, செதில் செதிகளாக விரிதல், இலேசாயிருத்தல் ஆகியவை வெள்ளியின் தோஷங்கள்:—ஆயுர்வேத ப்ரகாசம்.

வெள்ளியானது மதுர விபாகமுள்ளது;[1] துவர்ப்பு, புளிப்பு ஆகிய சுவைகளுடையது; சீத வீர்யம்; மலம் முதலியதை நெகிழச் செய்வது; லேகநம் என்னும் தோஷங்களைத் தூண்டி வெளிபடுத்துங் குணமுள்ளது; நாக்குக்கு நற்சுவையைத் தருவது; ஸ்நிக்த்தம்; வாதபித்தஹரம்; ஜாடராக்னியை உத்தீபநம் செய்வது; தேஹபலத்தை மிக்க விருத்தி செய்வது; நீண்ட ஆயுளைத் தருவது; புத்தியை விருத்தி செய்வது ஆகியவையாம்; மேலும் குணத்தில் குருவானது; இரஸாயந முறைப்படி யுபயோகிக்க எல்லா வியாதிகளையும் தீர்க்க வல்லது.—28, 29.

வெள்ளியின் பொது குணங்கள்.

வெள்ளியைச் சுத்தி செய்யாமலும், பஸ்மமாக்காமலும் உபயோகித்தால் அது ஆயுளைக் குறைக்கும்; புருட வீர்யத்தையும், தேஹ வன்மையையும் போக்கும்; உடலில் அழற்சியையும், மலபந்தத்தையும், மற்றும் பல ரோகங்களையும் உண்டுபண்ணும்; ஆகவே வெள்ளியைச் சுத்தி செய்வதோடு, அதை பஸ்மமாகச் செய்தும் உபயோகிக்க வேண்டும். (1) வெள்ளியை உருக்கி நல் லெண்ணெயிலும், மோரிலும், பசுமூத்திரத்திலும் கொள்ளைப் பக்குவம் செய்திதுத்த காடியிலும் முறையே எவ்வேழு தடவை ஊற்றவும். இந்தச் சுத்திமுறை பொன் முதலியவற்றின் சேக்குகளைச் சுத்தி செய்யவும் சிறந்ததாம். (2) வெள்ளியை உருக்கி, அதிற சிறிது துத்தகாகப் பொடியையாவது, வெண்காரப் பெடியையாவது நூலினால் வெள்ளி சுத்தமாகும். (3) வெள்ளியை உருக்கி வாலுளுவைத் தைலத்தில் மூன்றுமுறை வார்த்தெடுத்தாலும் அது சுத்தமாகும். (4) ஒரு கப்பரையில் சாம்பலும் சுண்ணாம்பும் கூட்டி அதனுல் சுற்றிலும் வரம்பு கட்டவும்; ஈயம் கலந்துள்ள வெள்ளியை அவ்வரம்புக்கிடையில் வைத்து, ஈயம் முற்றிலும் பிரிந்து அழியும் வரையில் நெருப்பில் வைத்து அடிக்கடியும் ஊதவும்; இவ்விதம் சுத்தி செய்த வெள்ளியை இரஸௌஷத முறைகளில் உபயோகிக்கலாம். 30—34½.

அசுத்த வெள்ளியால் உண்டாம் தீக்குணங்கள்.

வெள்ளியின் சுத்தி முறைகள்.

(1) எலுமிச்சம்பழச்சாற்றையும் பாதரஸத்தையும் சேர்த்து ஆட்டி, அக்குழம்பினுல் வெள்ளி சேக்குகளைப் பூசவும்; ஒரு மூசையினுள் அடியில் சிறிது கந்தகம் வைத்து, அதன்மீது இவ்வெள்ளிசேக்கை வைத்து, மீண்டும் சிறிது கந்தகத்தை அதன்மீது போடவும். பிறகு அதை வாலுகா யந்திரத்தில் வைத்து ஒருநாள் முடியவும் பெருந்தீயிட்டு

ரஜத பஸ்ம முறைகள்.

1. விபாகம்:—ஆயுர்வேத முறைப்படி. எப்பொருளும் உண்ணும்போது நாக்கில் ஒருவித சுவையுள்ளதாகவும், குடலில் ஜீர்ணமாகும்போது வேறுவித சுவையுள்ளதாகவும் இருக்கும். அவ்விதம் குடலில் தோன்றும் இரஸமே விபாகரஸம் எனப்படும்.

எரிக்கவும். பிறகு அதை ஆறிப்போனவுடனே யெடுத்து, அதி லுள்ள மெழுகை வெளியில் எடுத்து, அத்துடன் சிறிது தாளகமும் காடியும் சேர்த்துப் புடமிடவேண்டும்; இவ்விதமாகப் பன்னிரண்டு புடங்களிட வெள்ளி பஸ்மமாகும். (2) ஸ்வர்ணமாக்ஷிகப் பொடியை யும், கொடிமாதுளைச் சாற்றையும் ஆட்டி, அதை வெள்ளிரேக்கு களில் தடவி புடமிடவும்; இவ்விதம் மூப்பது புடம் போட பொன் நன்கு பஸ்மமாகும். (3) கள்ளிப்பாலில் பொன் நிமிஷையை பாவனை செய்யவும்; அந்தக் களிம்பை வெள்ளி ரேக்குகளின்மேல் நன்கு கப் பூசி முறைப்படி புடமிட பொன் நன்கு பஸ்மமாகும். (4) பஸ்ம மிடவேண்டிய வெள்ளிக்கு நாலிலொரு பங்கு சுத்த தாளகம் எடு த்து, அதை எலுமிச்சம்பழச்சாற்றில் ஆட்டி, அக்களிம்பை வெள்ளிரேக்குகளின் மேல் பூசவும்; பிறகு இதை அந்த மூஷையி லிட்டு[1] உலர்த்தி, மூப்பது வறட்டிகளைக் கொண்டு புடமிடவும்; இவ்வாறு பதினைது புடங்களிட்டால் வெள்ளி நிருத்தமாக[2] பஸ்ம மாகும். 35—41.

இரஜதத்ருதி அல்லது வெள் ளித் திராவகம்.

தேவதாளி யென்னும் மூலிகையைச் சிறுநீரில் ஏழு முறை பாவனை செய்துதடுக்கவும்; பிறகு அம்மூலிகையை உலர்த்தி, நன்கு சூர்ணம் செய்து, உருக்கிய வெள் ளியிலாவது பொன்னிலாவது அச்சூர்ணத்தை ஆவாபம் செய்ய,[3] உருகிய அந்த உலோஹங்கள் திரவமான நிலையிலேயே இருக்கும். 42.

இரஜத ரஸாயநம்.

நன்கு பஸ்மம் செய்த வெள்ளி ஒரு பங்கு, அதற்குச் சம யெடை அப்ரக பஸ்மம், அதே எடை தாம்ர பஸ் மம், இவ்வனைத்துக்கும் சமயெடை த்ரிகடு சூர்ணம், த்ரிகடு சூர்ணத்துக்குச் சமமாகத் த்ரிபலா சூர்ணம் ஆக இவற்றைக் கூட்டி, தேனும் நெய்யும் கலந்து விடியிற்காலையில் உட்கொள்ளவும்; இவ்விதம் செய்ய க்ஷயரோகம், பாண்டு ரோகம், மஹோதரம், மூலம், ச்வாஸரோகம், காஸரோகம், நேத்திர ரோகங்கள் ஆகியவைகளும், ஸகல பித்த ரோகங்களும் தீரும்.-43.

தாம்ரம்—செம்பு

தாம்ர இரண்டு விதம்.

தாம்ரமானதும் லேச்சம் என்றும், நேபாளமென்றும் இருவகை ப்படும். அவற்றுள் நேபாள தாம்ரம் சிறந்தது. நேபா ளதேசத்தைத் தவிர்த்து மற்ற விடத்துக் கனிகளி லுண்டாகும் செம்பு ம்லேச்சம் எனப்படுகிறது.

1. அந்த மூஷை—இதுவே வஜ்ரமூஷை யென்றும் கூறப் படும். பத்தாம் அத்தியாயத்தில் விவரம் காண்க.

2. நிருத்தம்—எந்தச் சரக்கும் பஸ்மமாகச் செய்யப்படும் பக்ஷத் தில் மீண்டும் அது பழைய நிலைமையை அடைய முடியாமற் போகும். அவ்விதம் செய்யப்படும பஸ்ம முறை நிருத்தம் எனப்படும்.

3. ஆவாபம்—எட்டாம் அத்தியாயத்தில் பரிபாஷைகளைப் பார்க்க.

(1) ம்லேச்சதாம்ரமானது வெளுப்பு, கறுப்பு, சிவப்பு ஆகிய நிறங்கள் கலந்ததாகவும், அதிக வாந்தியுண்டுபண்ணுவதாகவும், அதிக கடின மாகவும், எவ்வளவு கழுவிய போதிலும் மீண்டும் கருநிறம் பெறுவ தாகவும் இருக்கும். (2) வெகு ஸ்நிக்தமாகவும், மிருதுவாகவும், சென்னிறம் பொருந்தியதாகவும், வலிய அடிகளைத் தாங்கி விறிவு ருந்ததாகவும், பளுவுள்ளதாகவும், எவ்வித மாசுகளற்றதாகவும் உள்ளது நேபாளதாம்ரம்; இது குணத்திற் சிறந்தது. நிறத்தில் வெளுப்பு, கறுஞ்சிவப்பு, இலேசாயிருத்தல், எளிதிற் சிதைவுறுந்தன் மையதாயிருத்தல், சூக்ஷ்மான உருவமுடைமை, சிதள்களோடு கூடியிருத்தல் ஆகிய தன்மைகளைப் பெற்ற தாம்ரம் இரஸௌஷத முறைக்குத் தகுந்ததல்ல. 44—47.

தாம்ரத்தின் குணங்கள்.

செம்பானது சுவையில் கைப்பும் துவர்ப்பும் உடையது; விபா கத்தில் புளிப்பும் மதுரரஸமுமுள்ளது; வீர்யத் தில் உஷ்ணமானது; பித்தம்-கபம் இவற்றைப் பரி ஹரிக்கும்; குடலைப்பற்றிய நோய்கள் அல்லது மஹோதரம், குஷ்டம், ஆமதோஷம், கிருமிரோகம் இவற்றைத் தீர்க்கும்; வாந்தியையும் விரேசனத்தையும் உண்டுபண்ணி குடலைச் சுத்தம் செய்யவல்லது; விஷத்தை வெளிப்படுத்தும்; யக்ருத்தாலீ யென்னும் கல்லீரல் வீக்கத்தைப் போக்கும்; பசியை விருத்தி செய்யும்; மூலரோகம், க்ஷயம், பாண்டு ரோகம் இவற்றை யும் தீர்க்கும்; நேத்திர ரோகங்களில் உபயோகமானது; லேகநம் என்னும் தோஷங்களைக் கல்லி வெளிப்படுத்தும் குணத்திற் சிறந்த தது.—48.

அசுத்த தாம்ர த்தால் உண்டாம் தீங்குகள்.

(1) சுத்தி செய்யப்படாத செம்பானது ஆயுளைக் குறைக் கும்; உடலின் ஒளி, வீர்யம், தேஹவன்மை இவற் றைப் போக்கிவிடும்; வாந்தி, மூர்ச்சை, தலைச் சுற்றல், வாயில் நீரூறல் ஆகிய துர்க்குணங்களையும் உண்டுபண்ணும். பஸ்மம் செய்யப்படாத தாம் ரத்தை யுபயோகித்தால் குஷ்டரோகத்தையும், சூலை யென்னும் வயிற்றுவலித்தலையும் அது உண்டுபண்ணும். (2) குமட்டல், பேதி, தலைச்சுற்றல், தாபம், மயக்கம் ஆகியவை தாம்ரத்தின் ஐந்துவித தோஷங்களால் உண்டாகும் துர்க்குணங்கள். அவை கடுமையானவை. சுத்தி செய்தால் அது இத் தோஷங்கள் நீங்கி, இரஸத்திலும், வீர் யத்திலும், விபாகத்திலும் அமுதத்திற்குச் சமானமாகும். 49 – 50.

தாம்ர சுத்தி முறைகள்.

(1) தாம்ரத்துடன் யவக்ஷாரம் முதலிய க்ஷாரங்களையும், காஞ் ஜிகம் என்னும் காடியையும் கூட்டி, நன்றாகக் காய் ச்சி யுருக்கி, சிறிது காவித்தூள் சேர்த்து, எருமை மோரிலும், சாணத்திலும் அதை ஊற்றவேண்டும்; இவ்விதம் ஏழு முறை செய்ய தாம்ரமானது பஞ்ச தோஷங்கள் நீங் கியதாம். (2) பளபளப்புள்ள செப்பு ரேக்குகளின்மீது இந்துப்பை எலுமிச்சம்பழச்சாற்றில் ஆட்டிப் பூசி, நன்றாக அக்னியில் இட்டு

ஊதி, காடியிற் போடவும்; இவ்விதம் எட்டுமுறை செய்தால் செம்பு நன்கு சுத்தமாம். (3) எலுமிச்சம்பழச்சாற்றில் இந்துப்பை ஆட்டி, அதைச் செப்புரேக்குகளின் மீது பூசி, நெருப்பிற் காய்ச்சி, நொச்சியிலைச்சாற்றில் அவற்றைத் தோய்க்கவும்; இவ்விதம் எட்டு முறை செய்தால் தாம்பரம் சுத்தமாகும். (4) செப்புத்தகுட்டைப் பசுமூத்திரத்திலிட்டு, கடுந்தீயிட்டுச் சமைக்க அது சுத்தமாகும். 51—54.

தாம்ரபஸ்ம முறைகள்.

(1) இரஸம், கந்தகம் இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் ஆட்டி, செப்புத்தகடுகளின்மீது பூசி, அத்தகடுகளை அகலில் வைத்துக் கவசமிட்டு மூன்று முறை புடமிட செப்பு பஸ்மமாகும். (2) பஸ்மம் செய்த தாம்ரத்தை ஏதேனும் ஒரு அம்லவஸ்துவை விட்டு ஆட்டி, உருண்டையாகச் செய்து, அதை ஒரு கருணைக்கிழங்கினுள் வைத்து, மேலே நன்றாக மண் முதலியதால் பூசி உலர்த்தி, அப்பால் கஜபுடத்திற் பக்குவம் செய்யவும்; இவ்விதம் செய்வதால் செம்புக்குள்ள எல்லாத் தோஷங்களும் நீங்கி, ஸந்திபாத தோஷங்களையும் அது நிவருத்தி செய்யக் கூடியதாகும்; வாந்தி, தலைச்சுற்றல், விரேசனம் ஆகியவற்றையும் அவ்வித பஸ்மம் உண்டுபண்ணுவதில்லை[1]. (3) மெல்லிய செப்புத்தகடுகளைப் பசுவின் மூத்திரத்தில் ஐந்து யாமநேரம் போட்டு வைத்து எடுத்து, ஒரு பாத்திரத்தில் அதற்குச் சமயெடை இரஸமும் இரு மடங்கு கந்தகமும் சேர்த்து, அவ்விரண்டையும் புளியரணைச்சாற்றில் அரைத்து, அக்கல்கத்தைச் செப்புத்தகடுகளின்மேல் பூசி, ஒரு பாத்திரத்தினுள் அதை வைத்து சீலை மண் செய்து, ஒரு யாமகாலம் கடுந்தீயிட்டு எரிக்கவும்; அவ்விதம் செய்ய செம்பு பஸ்மமாகும்; அதை முறைப்படி வியாதிகளில் உபயோகிக்கலாம். 55—60.

ஸோமநாத தாம்ரம்.

பக்குவம் செய்யவேண்டிய தாம்ரத்திற்குச் சம அளவாகச் சுத்த ரஸம் எடுத்துக் கொள்ளவும்; அதே எடை சுத்த கந்தகமும், அதிற் பாதி யெடை தாளகமும், தாளகத்திற்பாதி யெடை மனச்சிலையும் கூட்டி, இரஸம் முதலிய நான்கையும் வெகு வழவழப்பான கஜ்ஜலியாக ஆட்டியெடுக்கவும்; மிகக் கறுப்பான அக்கஜ்ஜலியை யந்திரவிதி அத்தியாயத்திற் கூறப்படும் கர்ப்பயந்திரத்தினுள் அடியில் வைத்து, அதன்மீது செப்புரேக்குகளை வைக்கவும்; அப்படியே மாற்றி மாற்றி இவற்றை ஒன்றன்மீது ஒன்றாக வைத்து மூடியிட்டு, ஒரு யாமகாலம் எரித்துப் பக்குவம் செய்யவேண்டும்; பிறகு தானாகவே ஆறியதும், உள்ளே பக்குவமாயிருக்கும் செம்பையெடுத்து நன்றாகப் பொடி செய்து கொள்ளவும். இவ்விதம் பக்குவம் செய்த

1. "இவ்விரண்டாம் முறை இரஸரத்நாகரத்திற் கூறப்பட்டது" என்று வாக்படரே தன் கிரந்தத்திற் குறிப்பிடுகிறார்.

தாம்ரத்தை இரண்டு வல்லங்களின் அளவாக அந்தந்த ரோகத்தின் பரிஹாரத்திற்காக உபயோகிக்கப்படும் சரக்குகளை அதுபானமாகக்கொண்டு உட்கொள்ளலாம்; அது பரிணாமசூலை, மஹோதரம், வயிற்றுளைத்தல், பாண்டுரோகம், ஜ்வரம், குல்மம், ப்லீஹரோகம். யக்ருத் என்னும் கல்லீரல் வியாதி, க்ஷயம், பசியின்மை, மேஹ ரோகங்கள், மூலரோகம், கடுமையான கிரஹணீரோகம் ஆகிய வற்றைப் போக்கும். இது 'ஸோமநாத தாம்ரம்' எனப்படும். 61—64.

தாம்ர ரஸாயநம்.

பாதரஸம் ஒருபங்கு, செப்புத்தகடு இரண்டுபங்கு, இவற்றைச் சீசாற்றுக் கற்றாழைச் சாற்றில் ஊறவைத்து, அப்பால் தாம்ரத் தகடுகளுக்குச் சமபாகம் கந்தகம் எடுத்து, ஒரு மட்பாத்திரத்தில் அக்கந்தகத்திற், பாதியைப் போட்டு, அதன்மீது தாம்பரம் முதலியதை வைத்துமற்றப்பாதி கந்தகத்தையும்தாம்ரத்திற்கு மேலே சேர்த்து, அதன்மீது ஒரு அகலை மூடவும்; அவ்வகலின்மேல் சிறிது உப்பைப் பரப்பி, அதன் மேலும் மற்றொரு அகலைக்கொண்டு மூடியிடவேண்டும். பிறகு நாலு யாமகாலம் தீயிட்டெரிக்கவும். அது ஆறிய பிறகு தாம்ரத்தை யெடுத்து சூர்ணம்செய்து, அதில் இரண்டு குன்றுமணியெடை ஔஷதத்தைத் திப்பிலிப்பொடி-தேன் இவ்வநுபானங்களோடு பொதுவாக எல்லா வியாதிகளிலும் உட்கொள்ளலாம். இது முக்கியமாக ச்வாஸம், காஸம், க்ஷயம், பாண்டு, பசியின்மை, அரோசகம், குல்மம், ப்லீஹவீக்கம், யக்ருத் என்னும் கல்லீரல் வீக்கம், மூர்ச்சை, வயிற்றுளைத்தல் ஆகியவற்றிற்குச் சிறந்த ஔஷதம். மேலும் ஸந்திபாததோஷத்தாலான வியாதிகளையும் நன்கு நிவருத்தி செய்யும்; ஜ்வரத்திற்கு உசிதமான ஔஷதங்களாகிய அநுபானத்துடன் இதைக் கூட்டியுபயோகிக்க, தாதுக்களைப் பற்றிய ஜ்வரமும் தீரும். முற்கூறிய அளவின்படி வேறு இரஸௌஷதமுறைகளிலும், இரஸாயன முறைகளிலும் இவ்வௌஷதத்தையும் உபயோகிக்கலாம். 65—69.

அயஸ்—அயம்.

(லோஹம்.)[1]

அயமானது முண்டம் தீக்ஷ்ணம், காந்தம் என்று மூவகைப் படும்.—69½.

அயம்.

அவற்றுள் முண்டம் என்னும் லோஹம் மிருது என்றும், குண்டம் என்றும், கடாரம் என்றும் மூன்று விதம்.

முண்ட லோஹம் மூன்று விதம்.

(1) அவற்றுள் மிருதுலோஹம் எளிதில் உருகும்; விறிவடையாது; கெட்டியாயிருக்கும்; நயப்பும் மிருதுத் தன்மையுமுடையது; இந்த அயம்

1. பொன், வெள்ளி, செம்பு, அயம் முதலிய எல்லாவற்றிற்கும் **லோஹம்** என்னும் பெயர் பொதுவாக வழங்கப்படுவதோடு, அயத்திற்கு முக்கியமாக அப்பெயர் வழங்கப்படும்.

சிறந்தது. (2) சம்மட்டியால் அடிக்கப்படுகையில் எது எளிதில் அகலுவதில்லையோ அது குண்டலோஹம் எனப்படும்; இது குணத்தில் மத்திமமானது. (3) அடிக்கப்படுகையில் எது எளிதில் விரிந்து விடுகிறதோ, பிளந்தவிடத்தில் கருகிறமாயிருக்கின்றதோ அது கடார லோஹம் எனக் கூறப்படும். இது இழிவான குணமுள்ளது. 70—72.

முண்டலோஹத்தின் குணங்கள்.

முண்டலோஹமானது-அதிலும் முக்கியமாக மிருதுலோஹம் கபதோஷம், வாததோஷம், சூலமென்னும் வயிற்றுநோய், மூலரோகம், ஆமதோஷம், மேஹரோகம், காமாலை, பாண்டு, குல்மம், ஆமவாதம் என்னும் தில்வாதநோய், மஹோதரம் ஆகியவற்றைத் தீர்க்கும்; மேலும் ஜடாராக்னியை விருத்தி செய்யும்; தோஷ மென்னும் வீக்கத்தைப் போக்கும்; இரத்தத்தை விருத்திசெய்யும்; குடலைச் சுத்திசெய்யும்.—73.

அசுத்த லோஹத்தினுலுண்டாம் தீங்குகள்.

சுத்தி செய்யப்படாத அயம் ஓர்திதமானதல்ல. அதையுபயோகித்தால் அது ஆயுளையும், தேஹவன்மையையும், தேஹகாந்தியையும் நிச்சயமாய் ஒடுக்கிவிடும். இருதயத்தில் பீடையையும், உடலுக்குப் பொதுவாகச் சுகவீனத்தையும், வேறுவித நோய்களையும் அம்மதுண்டுபண்ணும். ஆகவே லோஹத்தைச் சுத்தி செய்தே உபயோகிக்க வேண்டும்.—74.

தீக்ஷ்ணலோஹம் ஆறுவிதம்.

தீக்ஷ்ணலோஹம் என்னும் உருக்கிரும்பானது கரம், ஸாரம், ஹரிருந்நாளம், தாராவட்டம், வாஜிரம், காலலோஹம் என்று ஆறு வகைப்படும். (1) உரத்ததாகவும், மயிர்ச்சுருள் போன்ற இரேகைகளற்றதாகவும், உடைத்தால் உட்புறத்தில் பாதரஸம் போன்ற ஒளியுள்ளதாகவும், வளைத்தால் விரிந்துதன்மையதாகவும் இருப்பது கரலோஹம் எனப்படும். மயிர்ச்சுருள் போன்ற இரேகைக்கு அங்கஹூயா' என்றும், 'வங்கம்' 'என்றும், 'போகரம்' என்றும் மூன்று பெயர்களுண்டு. உலோஹத்தில் சுருண்ட உரோமம் போன்ற யாதோர் உருவமுண்டோ அதுதான் போகரம் எனப்படுகிறது.[1] (2) வேகமான தாக்குதலால் எதன் கருக்கு சிதைந்து விடுகின்றதோ அது ஸாரலோஹம் எனப்படுகின்றது; மேலும் ஸாரலோஹம் ஒருவகையான போகரமுள்ளதாகவும், வெண்ணிற நிலத்தில் உற்பத்தியாவதாகவும் இருக்கும். (3) வெண்கறுப்பான நிறமுள்ளதாய், ஆமனக்கு விதை போன்று பருத்த போகரமுள்ளதாய், எளிதில் வெட்டமுடியாதவாறு கடினமாயிருப்பது ஹ்ரருந்நாளலோஹம் என்று

1. போகரம்—உருக்கிரும்பில் பளபளப்பான காந்தியோடு மயிர்ச்சுருள் அல்லது மயிரிழை போன்று அலங்கும் ஒருவித சாயை.

வழங்கப்படும். (4) வஜ்ரத்திற்கு இருப்பவைபோன்ற போகரங்களோடும், ஸூக்ஷ்மமாகவும் அடர்த்தியாகவுமுள்ள இரேகைகளோடும் கூடியதாய், கறுத்த உருவமுமுள்ளதாயிருக்கும் தீக்ஷ்ணலோஹம் வாஜிரம் எனக் கூறப்படுகிறது. (5) கறுத்த நீலச்சாயையுடையதாய், வெகு அழுத்தமானதாய், மழமழப்பாய், பாரமுள்ளதாய், பளபளப்பாய், சம்மட்டியால் பலமாக அடித்தாலும் ஒடிபடாத கருக்குள்ளதாயுமிருப்பது கால லோஹம் எனப்படுகிறது. 75—81.

தீக்ஷ்ண லோஹத்தின் குணங்கள்.

(1) கரலோஹமானது[1] குணத்தில் ரூக்ஷமானது; விபாகத்தில்[2] மிகவும் மதுரமாயிருக்கும்; சீதவீர்யம்; சிறிது கைப்பும் உஷ்ணகுணமும் உள்ளது; கபஹரம்; பித்தஹரம்; குஷ்டம், மஹோதரம், ப்லீஹரோகம், ஆமதோஷம், பாண்டுரோகம் இவற்றில் உபயோகமானது; சூலம் என்னும் வயிற்றுநோய், யக்ருத் என்னும் கல்லீரலைப்பற்றிய வியாதிகள், க்ஷயம் இவற்றைத் துரிதமாக நிவருத்திக்கவல்லது; கிழத்தனத்தை எளிதில் வராமல் தடுக்கும்; மேஹரோகங்கள், ஆமவாதம் இவற்றையும் தீர்க்கும்; அக்னிதீபனம் உண்டுபண்ணும்; சிறந்த இரஸாயனகுணமும், பலத்தை விருத்திசெய்யும் தன்மையும் உடையது; மூலரோகத்தையும், அழற்சியையும் போக்கும். (2) கர லோஹத்தினும் மற்ற ஐந்து வித தீக்ஷ்ணலோஹங்களும் ஒன்றைவிட மற்றொன்று மேன்மேலும் முறையே நூறுமடங்கு அதிகமான குணங்களுடையன.[3] 82—83.

காந்தலோஹம் ஐந்து விதம்.

பிராமகம், சும்பகம், கர்ஷகம், திராவகம், உரோம காந்தம் என்று காந்த லோஹம் ஐந்து விதமாம். (1) இவற்றுள் ஒவ்வொன்றும் ஒரு பாரிசத்தில் முகமுடையது,[4] இரண்டு முகமுடையது, மூன்று முகமுடையது, நான்கு முகமுடையது, ஐந்து முகமுடையது, எல்லாப் பக்கங்களிலும் முகமுடையது என்று பலவகைப்படும். ஒரே பாரிசத்தில் முகமுடைய காந்தம் குணத்திற் குறைந்தது; இரண்டு

1. கரலோஹத்திற்குக் கூறுகிற குணங்கள் 1-பங்காலும், ஸாரலோஹத்தின் குணங்கள் 100-பங்கு; ஹ்ரருந்நாளத்தினுடையவை 200-பங்கு; தாராவட்டத்தினுடையவை 300-பங்கு; வாஜிரத்தினுடையவை 400-பங்கு; கால லோஹத்தினுடையவை 500-பங்கு.

2. விபாகம்—குடலில் உணவு பக்குவமாதல்; பாகம் என்றும் வழங்கப்படுகிறது.

3. 'காஸாரம், ஹோத்ராக்ரம், தாராவர்த்தம், பிடம், காலலோஹம், கஜம் என்று தீக்ஷ்ணலோஹம் ஆறுவிதம்':—இரஸஸாரம்.

4. காந்தமானது அதன் எந்தப் பக்கத்திலுல் உலோஹத்தை ஆகர்ஷணம் செய்கிறதோ அந்தப் பக்கம் அதற்கு முகம் எனப்படுகிறது. அவை முறையே ஏகமுக காந்தம், த்விமுக காந்தம், த்ரிமுக காந்தம், சதுர்முக காந்தம், பஞ்சமுக காந்தம், ஸர்வதோமுக காந்தம் என்று ஆறுவிதமாக வழங்கப்படும்.

அல்லது மூன்று முகங்களுள்ளது குணத்தில் மத்திமமானது; நான்கு அல்லது ஐந்து முகங்களுள்ளது குணத்திற் சிறந்தது; எல்லாப் பாரிசங்களிலும் முகமுள்ளது மிகவும் உத்தமமானது. (2) அங்ஙனமே அவை ஒவ்வொன்றும் தனித்தனியே பசுமை, கறுப்பு, சிவப்பு ஆகிய நிறங்களில் ஏதேனும் ஒன்றைப் பெற்றிருக்கும்; முறையே அவற்றில் பிரம்மதேவனும், விஷ்ணுவும், சிவனும் இருப்பதாகக் கருதப்படுகிறது. (3) அவற்றுள் பசுமை நிறமான பீதகாந்தம் பரிசவேதியாகவும்,[1] கருநிறமான கிருஷ்ணகாந்தம் இரஸாயகவேஷியிற் சிறந்ததாகவும், சென்னிறமான இரக்தகாந்தம் இரஸத்தைக் கட்டுவதிற் சிறந்ததாகவும் உபயோகமாகின்றன. (4) மேலும் பிராமகம் குணத்தில் இகழ்ந்தது; சும்பகம் மத்திம குணமுள்ளது; கர்ஷகம் உத்தமகுணமுள்ளது; திராவகம் அனைத்தினும் குணத்தில் மிகச் சிறந்தது. (1) பிராமகம்—அருகில்வந்த உலோஹத்துள்களைத் தன்னைச் சுற்றிலும் சுழலச்செய்யும் காந்தம். (2) சும்பகம்—இரும்பை இழுத்துத் தன்னுடன் சேர்த்து ஒட்டிக் கொள்ளச் செய்யும் காந்தம். (3) கர்ஷகம்:—சற்றுத் தூரத்திலுள்ள உலோகத்தைத் தன்னிடம் இழுக்கும் சக்தியுள்ள காந்தம். (4) திராவகம்:—உலோகத்தைத் தனது சேர்க்கையால் திரவிக்கச் செய்யும் காந்தம். (5) உரோம காந்தம்:—பிளவுண்ட இடத்தில் உரோமங்களைப் போன்ற சுணைகள் தோன்றும் காந்தம். (1) பிராமகம், சும்பகம் இவ்விரண்டும் வியாதிநிவாரணத்திற் சிறந்தவை. (2) கர்ஷகமும் திராவகமும் இரஸௌஷத முறையிலும், இரஸாயக முறைகளிலும் உபயோகமானவை. 84—91½.

காந்தம்கிரஹிக்கத்தகுந்த பூமி.

(1) பாதரஸமானது மத்தகஜம் போல் கட்டுக்கு அடங்காதது; அதை அடக்கிக் கட்டுவதற்குக் காந்தம் மாவட்டியெனத் தகுந்தது. (2) விஷயமறிந்தவன் கேஷத்திரமறிந்து பெருமுயற்சி கொண்டு அதை வெட்டியெடுக்கவேண்டும். பெருங்காற்றும், வெயிலும் அடித்து வரட்சியடைந்த பூமியிலுள்ள காந்தம் உபயோகமற்றதென விலக்கவேண்டும்.

காந்தலோஹத்தைப் பரீக்ஷிக்கும் நான்கு முறைகள்.

(3) சிறந்த காந்தத்தினுலாகிய பாத்திரத்தில் தண்ணீர் வைத்து, அத்தண்ணீரில் எண்ணெய்த் துளியை விட அது தண்ணீரில் பரவாமலிருக்கும். அப்பாத்திரத்தில் காயத்தைப் பூச அது மணமிழக்கும். அங்ஙனமே வேப்பிலைக் கல்கத்தைப் பூச அதன் கைப்பு ஒழியும். அப்பாத்திரத்திற் பாலைக் காய்ச்சினுல், அது கோபுரம் போல் பொங்கி யெழுட்புமேயன்றி வெளியிற் பொங்கி வழியாது. இவ்விதமான காந்தமே சிறந்தது; வேறுவிதமான இலக்ஷணங்களைப்பெற்றது இகழ்ந்ததாம். 92—94.

1. பரிசவேதி—பரிசத்தினுல் சுவர்ணமில்லாத அவயவத்தில் சுவர்ணமுண்டாக்கும் தன்மையது; அல்லது இரஸவாத முறையில் லேதம் என்றும் வேலையைச் செய்வது.

காந்தத்தின் பொது குணங்கள்.

காந்தமென்னும் அயம் மிகவும் உத்தமமான இரஸாயகம்; ஆரோக்கிய நிலைமையிலிருப்பவனுக்கு ஆயுளை மிகவும் விருத்தி செய்யும்; ஸ்நிக்த குணமுள்ளது; மேஹரோகஹரம்; ஸந்நிபாததோஷத்தைப் போக்கும்; வயிற்றுளைத்தல், ஆமதோஷம், மூலரோகம் இவைகளைத் தீர்க்கும். மேலும் குல்மம், ப்லீஹரோகம், யக்ருத் என்னும் கல்லீரல் வியாதி, கூஷயரோகம், பாண்டுரோகம், மஹோதரரோகம் ஆகியவற்றையும் பரிஹரிக்கும். சுவையில் கைப்பும், சிறிது உஷ்ணகுணமும், விசேஷமாகச் சீதவீர்யமும் உடையது; அன்றியும் அந்தந்த வியாதிகளுக்கு ஏற்ற ஔஷத முறைகளோடு சேர்த்து உபயோகித்தால் எல்லா வியாதிகளுமே இதனுல் நீங்கும்.—95.

காந்தத்திற்கு இரஸலிங்தவிற் கூறிய குணங்கள்.

காந்தமென்னும் அயம் தேஹத்திற்குச் சிறப்பான காந்தியைத் தரும்; பாண்டுரோகத்தை வேரறுக்கும்; கூஷயரோகத்தைத் தொலைக்கும்; கரவிஷத்தைப் போக்கும்; ஸந்நிபாதத்தைத் தீர்க்கும்; பலவகையான குஷ்டங்களையும் பரிஹரிக்கும்; சுருங்கச் சொல்லில் எல்லா வியாதிகளையும் தீர்க்கவல்லது; தேஹத்திற்கு வன்மை தரும்; விருஷ்யம்; திடமான வயதை நிலைக்கச்செய்யும்; சிரேஷ்டமான இரஸாயகம்; பூலோகத்திற்கான அமுதம் இதையன்றி வேறில்லை.[1]—111.

உலோஹத்தின் சுத்தி-பஸ்மாதி முறைகள்.

உலோஹ சுத்திமாரணதிகளைப் பற்றிய பொது விதிகள்.

(1) அநேக வகையான ஔஷத கல்பங்களுக்குள்[2] செம்மையாகச் செய்த உலோஹகல்பமே சிறந்ததாம். ஆகவே எல்லாவகையிலும் உலோஹத்தைப் பஸ்மம் செய்ய முயலவேண்டும். (2) அயத்தை ஐந்து பலங்களுக்குக் குறைவாகவாவது, பதின்மூன்று பலங்களுக்கு அதிகமாகவாவது ஒரு தடவையில் பக்குவம் செய்வது தகாதென்பர் சிலர். (3) முதலில் மந்திர மோதி, பிறகுதான் அயத்தைச் சுத்தி முதலியது செய்யவேண்டும்: 'ஓம், அம்ருதோத்பவாய ஸ்வாஹா' என்கிற மந்திரத்தை யோதி, உலோஹத்தை பஸ்மம் செய்ய வேண்டும். (4) முற் கூறிய உலோஹவகைகளில் யாவும் முந்தியதினும் பிந்தியது மேன்மேலும் இலக்ஷம் மடங்கு குணத்திற் சிறப்புடையதாம்.

1. இந்த விஷயமான ச்லோகம் மூலத்தில் லோஹபஸ்ம முறைகளுக்கு இடையில் 110-வது ச்லோகத்திற்குப் பிறகு எழுதப்பட்டிருக்கிறது. அவ்விஷயம் இவ்விடத்திலேயே இருக்க வேண்டியது உசிதம்; அவ்விடத்தில் ஏதோ ஒழுங்குத்தவறுதலால் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். ஆகவே அந்த 111-ம் ச்லோக விஷயம் 95-வதுக்குப் பிறகு இங்கே எழுதப்பட்டிருக்கிறது.

2. த்ரிபலாகல்பம், சால்மலீகல்பம் முதலியவை. மற்றுமுள்ள ஔஷதகல்பங்களைப்பற்றி அஷ்டாங்க ஹ்ருதயம்கல்பஸ்தானம்பார்க்க.

ஆனல் காந்தலோஹம் மாத்திரம் மற்றவைகளினும் குணத்திற் கோடியத்தினை அதிகச் சிறப்புள்ளதாம்[1]. 96—98.

லோஹ சுத்தி முறைகள்.

(1) அயத்தின் மீது முயல் இரத்தத்தை தடவி, அக்னியி லிட்டுக் காய்ச்சவும்; இவ்விதம் மூன்று முறை செய்யமுண்டம் முதலான எல்லா லோஹமும் அவற் றிலடங்கிய ஸகல தோஷங்களும் நீங்கியவைகளாய் விடும். (2) பதினறு பலம் த்ரிபலையை எட்டுப் பங்கு ஜலத்தில் சேர்த்து, அது நாலிலொரு பங்காகக் காய்ந்ததும், அக்கஷாயத்தில் தகடுகளாக அடித்த ஐந்து பலம் உலோஹத்தைக் காய்ச்சித் தோய்க்கவும்; அவ்விதம் ஏழு முறை காய்ச்சித் தோய்க்க மலை முதலியவற்றிலிருந்து பற்றியிருந்த தோஷம்[2] நீங்கிவிடும். (3) அயத்தின் மீது கரியுப்பைக் குழைத்துப் பூசி, அக்னியிற் காய்ச்சி, த்ரிபலாகஷாயத்தில் தோய்க்க அதிலுள்ள கிரிதோஷம் நீங்கும். (4) புளியம்பழத்தைக் கரைத்துக் கொதிப்பித்து, அதில் அயத்தை ஊறவைத்தாலும் சுத்தமாகும். (5) அல்லது பசு மூத்திரத்தில் த்ரிபலையைச் சேர்த்துக் கஷாயம் காய்ச்சி, அதில் 'சிறிது நேரம் அயத்தைப் பக்குவம் செய்யவும்; பிறகு கஷாயத்தை வடித்து விட்டு அயத்தை யெடுத்து, ஒரு கப்பரையிற் போட்டு, நெய் கூட்டி வறுக்கவும்; அதில் தூரும்பையிட அது எரியும் நிலைமை வரும்வரை யில், ஓர் இருப்புத்துடுப்பால் கிளறிக் கொண்டிருக்க வேண்டும்; இவ் விதமாக மீண்டும் கஷாயத்திலிட்டு, நெய் கலந்து ஐந்து முறை வறுத்தெடுக்கவும். (6) அல்லது நெல்லிக்கனி ரஸத்திலாவது, த்ரிபலாகஷாயத்திலாவது அயத்தைக் காய்ச்சி, முன் போல் வறுத்து சுத்தி செய்யலாம். 99—105.

லோஹபஸ்ம முறைகள்.

(1) முற்கூறிய விதமாகச் சுத்திசெய்த அயத்தை நாலுமுறை புடம்போட, அது நீரில் மிதக்கக் கூடிய விதமாய்[3] பஸ்மமாகும். (2) அயப்பொடியை பசுமூத்திரத்தி லும், மஞ்சள் கடுக்காய் இவற்றின் கல்கரஸத்திலும் கலந்து

1. "கிட்டத்தினும் முண்டம் நூறு மடங்கும், அதினும் தீக்ஷணம் நூறு பங்கும், தீக்ஷணத்தினும் காந்தம் இரண்டு பங்கும் உபயோகிப்பவருக்குக் குணத்தைத் தரும். ஆகவே கிழத்தனமும் மரணமும் சீக்கிரம் நேரிடாமலிருப்பதற்கு எப்பொழுதும் காந்தத்தை யுபயோகிப்பது நலம்:"—இரஸரத்நாகரம்.

கிரௌஞ்சம், காலிங்கம், கலி, பத்ரம், வஜ்ரம், பாண்டி, கிரங்கம், காந்தம் என்ற உலோஹம் எட்டு விதம்:—இரஸேந்திரசிந்தாமணி.

2. 'மிகவும் பாரமாயிருத்தல், கடினத்தன்மை, கசிவு, அழுக் கடைந்திருத்தல், அழற்சியைத் தருதல், கல் ஸம்பந்தமான தோஷம், தூர்நாற்றம் ஆகிய ஏழும்அயத்தின் தோஷங்களாகும்.'—பாவப்ரகாசம். இவற்றுள் கல் ஸம்பந்தமான தோஷமே அச்மதோஷம் என்றும் கிரி தோஷம் என்றும் கூறப்படும்.

3. எந்த பஸ்மமும் நன்கு பக்குவமாஞல் நீரில் மிதப்பது இயல்பு. அதற்கு வாரிதாம் என்று பரிபாஷைப் பெயர்.

ஊறவைத்து, பிறகு எண்ணெயினும் பிசறி வறுக்க வேண்டும்; இவ்விதமே ஏழு முறை வறுத்தெடுத்த அயத்தை எல்லாப் பிணிகளினும் உபயோகிக்கலாம். (3) தீக்ஷண லோஹத்தைச் செந்நிள் செதிளாக வராமல் மெல்லிய தகடுகளாக அடித்து, கடுந்நீயிலிட்டு ஊதியெடுத்து, உடனே தண்ணீரிற் போடவும்; அத்தகடுகளை யெடுத்து ஒரு கற்பாறையின்மேல் வைத்து, கன மான இரும்புச்சம்மட்டியால் ஓங்கியோங்கி யடித்துச் சிறு துண்டு களாகச் செய்யவும். இவ்விதம் துண்டித்த பிறகு பரும்படியா யுள்ள நீக்ஷணலோஹத்துண்டுகளை ஒரு சட்டியிற்போட்டு மற் றொரு சட்டியால் மூடி, நன்றாக எரிக்கவேண்டும்; பழுக்கக் காய்ந்ததும் அத்துண்டுகளை யெடுத்து, தண்ணீரிற் போட்டு, மீண் டும் முன்போலவே சம்மட்டியால் இடித்துப் பொடியாக்கவும். அத் தீக்ஷணலோஹப்பொடியோடு இரஸமும் கந்தகமும் கலந்து புடமிடவும்; ஒவ்வொரு தடவையிலும் அதை நன்றாக அரைத்து அரைத்து இருபது முறை புடமிட, தீக்ஷணலோஹம் பஸ்மமாகும்; இப்பஸ்மத்தை அந்தந்த ரோகத்தில் யுக்தப்படி யுபயோகிக்க லாம்.[1] (4) ஐந்து பலம் லிங்கத்தை முலைப்பால் விட்டு ஆட்டவும்; அதை ஐந்து பலம் லோஹத்தகடுகளின் மேல் பூசவும்; அதை கஜபுடத்திலிட்டு எரிக்கவும்; மீண்டும் த்ரிபலாகஷாயத்திலாவது, எலுமிச்சம்பழச்சாற்றிலாவது, காடியிலாவது இருபதி லொரு பங்கு லிங்கத்தை அரைத்து, மீண்டும் அந்த லோஹத் தகடுகளின்மீது பூசி, முன்போல் புடமிடவும்; மறுபடி முன் கூறிய கஷாயாதி திரவங்களால் அதைப் பக்குவம் செய்யவும். இவ்வாறு ஜாதிலிங்கத்தை அரைத்தரைத்துப் பூசி நாற்பது புடங்களிட்டால் காந்தம், தீக்ஷணம், முண்டம் என்னும் இம்மூன்று லோஹங்களும் ஸந்தேஹமின்றியே பஸ்மமாம். (5) பிறகு முற்கூறிய தீக்ஷண லோஹத்தை வெள்ளைச்சாறடை, ஆடாதோடை இவற்றின் சாற் றில் அரைத்து அரைத்து முப்பது முறை புடமிட, அது ஸிந்தூரம் போன்ற நிறமுள்ளதாய் மிகச் சென்னிறங் கொள்ளும். (6) அல்லது தீக்ஷண லோஹத்தகடுகளை மிக மெல்லிய பொடிகளாகச் செய்து, அதை த்ரிபலா கஷாயமும் சிறிது அன்னமும் கூட்டி அரைத்துப் பிசைந்து, வட்டமாகச் சக்கரம்போல் செய்து, நன்றாக உலர்த்தி யெடுத்து, ஐந்து முறை புடமிடவும்; அது மிகச் சென்னிறமான பஸ்மமாகும்; அதை அந்தந்த ரோகம் பார்த்துப் பிரயோகிக்க வும். (7) பொன்னுங்கண்ணி, கந்தகம், காயம் இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் ஆட்டி எந்த லோஹத்தின்மீதும் நன்றாகப் பூசவும்; பிறகு பொன்னுங்கண்ணி யிலைகளை அரைத்துக் கல்கமாய் உருட்டி, அக்கல்கத்தினுள் அந்த லோஹத்தை வைத்து, அக்

1. இவ்விடத்தில் மூலத்தில் 'காந்தாய: .....' என்கிற சுலோ கத்தின் மொழி பெயர்ப்பு "காந்தத்தின் பொது குணங்கள்" என்கிற விஷயத்துக்குப் பின்னல் சேர்க்கப்பட்டிருக்கிறது.

னியிலிட்டு, இரட்டைத் துருத்திகொண்டு ஊதி, த்ரிசூலம் போன்ற ஜ்வாலை கிளம்பும் வரையில் எரிக்கவும்; பிறகு அதைப் பசுமூத்திரத்திற் காய்ச்சிய த்ரிபலாகஷாயத்தில் எடுத்துப்போடவும்; அதை அக்கஷாயத்திலிருந்தெடுத்து, நன்றாகச் சம்மட்டியால் அடிக்க, அதிலிருந்து உதிரும் பஸ்மத்தை யெடுத்துக்கொண்டு, மற்ற அயத்தை முன்போலவே புடமிட்டு பஸ்மமாக்கவும். (8) கந்தகத்தைப் பொடித்துச் சேர்த்து, த்ரிபலாகஷாயம், வெல்லம் இவற்றையுங் கூட்டி புடமிடவும்; இவ்வாறு முப்பது தடவை புடம்போட அயம் நிருத்தமான[1] பஸ்மமாகும். (9) கந்தகமும் அயப்பொடியும் ஸம அளவாகக் கூட்டி, கற்றுழைச்சாற்றில் அரைத்து, சிறிது காலம் அதைக் கோபுரம் போலச் சேர்த்து மூடி வைத்திருந்தால், அது தானாகவே பஸ்மமாய்விடும். (10) லிங்கத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் கூட்டிவைத்து, அதில் அயத்தைக் காய்ச்சி, அநேக முறை புடமிட அயம் பஸ்மமாகும். (11) த்ரிபலையைப் பசுமூத்திரத்திற் கஷாயமிட்டு, அக்கஷாயத்தில் அயத்தை மூன்று வாரங்களளவும் பாவனை செய்யவும்; பிறகு அதே கஷாயத்தினால் ஒருநாள் நன்றாக அதை ஆட்டியெடுத்து, கஜபுடத்தில் ஒரு நாள் எரிக்கவும்; மீண்டும் பகலெல்லாம் முன்போலவே அரைத்து, இரவெல்லாம் புடமிட்டு எரிக்கவேண்டும்; இவ்வாறு இருபத்தேழாரு நாள் இருபத்தேழாரு புடமிட மூன்றுவிதமான லோஹங்களும் பஸ்மமாகும். 106—128.

தீக்ஷ்ண த்ருதி முறைகள்.

(1) பேய்ப்பீர்க்கங்காயை உலர்த்தியெரித்து, அச்சாம்பரைப் பசுமூத்திரத்தில் இருபத்தேழாரு முறை பாவனை செய்து உலர்த்தியெடுக்கவும்; அச்சாம்பரை மூசையிற் காயும் தீக்ஷ்ணலோஹத்தில் ஆவாபம்[2] செய்ய, அந்த லோஹம் த்ரவமாகும். (2) கடற்பாலையைச் சமூலம் சாம்பராக்கி, அதைப் பசுமூத்திரத்தில் இருபத்தேழாரு முறை கலக்கி வடித்தெடுத்து, உலர்த்தி, மூசையிற் காயும் தீக்ஷ்ணலோஹத்தில் ஆவாபம் செய்ய, அது ஜலம் போல் நீராகும். 129—130.

லோஹ ரஸாயநம்.

இவ்விதம் முற்கூறியவாறு அபுநர்ப்பவமாகச் செய்த லோஹபஸ்மமானது தேவாம்ருதம் போன்றதாய், ஸித்தர்களால் புகழப்பெற்ற சிறந்த இரஸாயநமாகும். இதை நிஷ்கமளவில்[3] த்ரிகடு, வாய்விடங்கம், நெய், தேன் இவற்றுடன் கூட்டியுட்கொள்ள கிழத்தனம், மரணம் ஆகியவையும் எளிதில் நெருங்கமாட்டா. திடசாலியான புத்திரனுண்டாகவும் அது காரணமாம்; முன்னொல் காலயவனன் என்பவனை உண்டாக்குவதற்கு அவனது பிதாவுக்குச் சிவபெருமானால் இந்த லோஹ ரஸாயந முறை உபதேசிக்கப் பெற்றதாம்.—131.

1. நிருத்தம்—அபுநர்ப்பவம் 8-வது அத்தியாயம் பார்க்க.
2. ஆவாபம்—8-ம் அத்தியாயம் பார்க்க.
3. நிஷ்கம்—சுமார் 4 உளுந்து எடை.

இராமராஜி முறைப்படி காந்த லோஹாதிகளின் சுத்தி-பஸ்மாதிகள்.

(1) காந்த பரீக்ஷை :—காந்த லோஹமயமான பாத்திரத்தில் ஜலம் வைத்து, அதில் எண்ணெய்த் துளியைவிட, அந்த எண்ணெய் ஜலத்திற் பரவுவதில்லை; மேலும் அவ்வித காந்தம் வெள்ளியோடும் எளிதிற் கலந்து விடும். அவ்விதமான காந்த லோஹமே அயம் ஸம்பந்தமான சரக்குகளுக்குள் மிகச் சிறந்தது. (2) காந்த சுத்தி முறை:—அவ்விதமான காந்த லோஹத்தை மெல்லிய தகடுகளாக அடித்து, அதைக் காய்ச்சிக் காய்ச்சி த்ரிபலா கஷாயத்தில் தோய்க்கவும். (3) இவ்விதம் சுத்தமான லோஹங்களோ ஏதேனுமொரு அம்லம் விட்டு அரைத்துக்கொள்ளவும்; அவற்றின்மீது அவற்றிற்குக் கால் பங்கு இரஸபஸ்மத்தைப் பூசி, புடமிட்டு எரிக்கவும். (4) அல்லது தாளகம், கந்தகம், மனச்சிலை, இர்ஸம் இவற்றைச் சமயெடையாகக் காந்தத்துடன் கூட்டி, முயல் இரத்தத்தினால் அரைத்து உருட்டியெடுக்கவும்; அதன்மீது யவக்ஷாரத்தைக் காடியில் அரைத்து, மேலே பூசி அக்னியிற் காய்ச்சவும்; இவ்வாறு சுத்தி செய்தால் காந்த லோஹம் எல்லாத் தோஷங்களும் நீங்கியதாய் விடும். (5) அக்னியில்லா பஸ்மமுறை :—சுத்தமான பாதரஸம் ஒரு பங்கும், சுத்த கந்தகம் இரண்டு பங்கும் கூட்டி, கல்வத்திலிட்டு கஜ்ஜலியாகச் செய்து, அவ்விரண்டுக்கும் ஸமியெடை அயப்பொடியைக் கூட்டி, கற்றுழைச் சாற்றில் இரண்டு யாமகாலம் பலமாக அரைக்கவும்; பிறகு அதை உருட்டியெடுத்து ஆமணக்கிலைகளால் கவசம் செய்து, செப்புப் பாத்திரத்தில் சேமித்து வைக்கவும்; பிறகு அரை யாமத்திற்கெல்லாம் அது மிகச் சூடுள்ளதாகும்; அப்பால் அதை யெடுத்து நெற்களஞ்சிய மொன்றுக்குள் அடக்கம் செய்யவும்; பின்பு மூன்று நாட்கள் சென்ற பின அதை யெடுத்து, நன்றாக அரைத்து, வஸ்த்ரகாளநம் செய்தெடுக்கவும்; இது உண்மையில் வாரிதரமான பஸ்மமாகும்.[1] இதே முறையினால் காந்தம், தீக்ஷ்ணம், முண்டம் ஆகிய மூன்று அயங்களும் நிருத்தமாக பஸ்மமாகும். (6) இம்முறைப்படியே ஸ்வர்ணம் முதலியவைகளையும் நன்றாகப் பொடித்து அயத்தைப் போலவே செய்யலாம். இது ஸித்தலோஹம் என்று பெயர் பெற்றது; ஸித்தர்களுடைய பொய்யா முகத்தினாற் கூறப்பட்டதாகும். ஸகல ரோகங்களைப் பரிஹரிப்பதற்கும், மூப்பைத் தடுப்பதற்கும் உபயோகிக்கப்பட்ட அனுபவஸித்தமுறை. (7) அநுபானம் :—இதை த்ரிபலை, தேன் இவற்றுடன் கலந்து எல்லாப் பிணிகளிலும் உபயோகிக்கலாம். (8) லோஹத்தின் குணங்கள் :—லோஹமானது கிருமி ரோகம், பாண்டு, வாதக்ஷயம், பித்த வியாதிகள், மேதோரோகம், மூலரோகம், கிரஹணி, ஜ்வரம், கபதோஷம், சோகை, பிரமேஹம், குல்மம், ப்லீஹரோகம், விஷக்கோளாறுகள், குஷ்டம், அக்னி

1. அக்னியிற் புடமிடாமற் செய்யப்படும் இந்த லோஹபஸ்ம முறைக்கு ஸோமாம்ருதம் என்று பெயர்.—ஆயுர்வேதப்ரகாசம்.

மாந்த்யம், இவைகளைத் தீர்க்கவல்லது; தேஹவன்மையை விருத்தி செய்யும்; ஆரோக்கியத்தை நிலைநிறுத்தும்; சிறந்த இரஸாயநம்; மரணத்தையும் தடுக்கும். காந்தம் முதல் கிட்டம் வரையில் லோஹம் அனைத்துக்கும் இக்குணங்கள் உண்டு. லோஹங்கள் பஸ்மமாலும் இரஸௌஷதங்களைப் போலவே ஆய்விடுகின்றன; அவை முறைப்படி யுபயோகிக்கப்பட்டால் மஹத்தான வியாதிகளையும் தீர்க்கும். நீடித்த நாள் வழக்கமாக உபயோகித்துவந்தால் திடமான தேஹ ஸித்தியையும்[1] தரும். 132—142.

லோஹ சுத்யாதிமுறைகளில் வேறு சில வகைகள்.

(1) நன்றாகக் கனிந்த காவற்பழம் போன்ற நிறமுடையதே சிறந்த காந்தமாகும். (2) கடற்பாலையைச் சமூலம் சாம்பராக்கி, அதைச் சிறுநீரால் காளநம்[2] செய்து, அதிலிருந்து வரும் க்ஷாரத்தை இருபத்தோரு முறை காந்தத்தில் ஆவாபம் செய்ய காந்தம் பஸ்மமாகும். (3) கந்தகத்தையும் காந்த லோஹத்தையும் ஸமபாகம் எடுத்துச் சூர்ணம் செய்து, உருகிய லோஹத்தில் பிரதீவாபம்[3] செய்ய, எட்டுவித லோஹங்களும் திரவமாகும். (4) கடற்பாலைச்சாற்றில் கந்தகத்தை ஏழு நாள் பாவனை செய்யவும்; அக்கந்தகத்தை ஆவாபம் செய்தால் லோஹங்கள் இரஸம்போல் திரவமாகப் போகும்[4]. 143—146.

மண்டூரத்தின சுத்தி-பஸ்மம்-உபயோகம் முதலியன.

(1) தான்றி மரக்கட்டைகளின் தழல்களால் லோஹ கிட்டத்தை நன்றாக ஊதி எரித்து, அதை யெடுத்துத் தான்றி மரத்தாலாகிய பாத்திரத்தில்வைத்துள்ள பசுமூத்திரத்தில் தோய்க்கவும்; இவ்விதம் ஏழு முறை செய்யவும்; மண்டூரம் என்று வழங்கப்படுகிற இதை மிகவும் மிருதுவாகப் பொடித்து அயத்தைப் போலவே பிரயோகிக்கவும். (2) த்ரிபலையைப் பசுமூத்திரத்திற் சேர்த்துக் கஷாயமாகக் காய்ச்சவும்; லோஹ கிட்டத்தைப் பழுக்கக் காய்ச்சி, அக்கஷாயத்தில் மெதுவாகத் தோய்க்க

1. தேஹ ஸித்தி—யோகாதிகளால் பெறக்கூடிய அணிமாதி ஸித்திகள்; கிழத்தனம், மரணம் முதலியதைத் தடுக்கும் திறமையையும் இது குறிக்கும்.

2. காளநம்—வடித்தல். நீரில் கரைந்துள்ள கனவஸ்துவிலிருந்து நீரைத் தனியாக வடித்தல். மிருதுவான நுண்ணிய வஸ்துக்களைப் பருமணல வஸ்துக்களிலிருந்து பிரிப்பதற்கான சலிக்கும் வேலையும் காளநமாம்.

3. பிரதீவாபம்—ஆவாபம். 8-ம் அத்தியாயம் பார்க்க.

4. யாதாமொரு ஔஷத முறையில் ஸ்வர்ணமாவது வெள்ளியாவது சேர்க்கப்பட வேண்டியிருந்து, அவை சமயத்திற் கிடைக்காமற் போனால், காந்தம் அவற்றிற்குச் சற்றேறக்குறையச் சமானமான குண முடையதாகையால், அவற்றிற்குப் பதிலாக காந்த லோஹத்தை அம் முறையில் உபயோகிக்கலாம்:—இரஸஸாரம்.

வும்; இவ்விதம் சுயமாகப் பொடிப் பொடியாகச் சிதறும் வரையில் அதைக் காய்ச்சிக் கஷாயத்தில் தோய்க்கவேண்டும்; அந்த மண்டூரத்தை நன்றாக அரைத்து உபயோகிக்கவும். (3) பஸ்மமாக்கிய முண்ட லோஹத்திற்கு எக்குணங்கள் உண்டோ அவை லோஹகிட்டத்திற்கும் உண்டு; ஆகவே அயத்தை யுபயோகிக்கக் கூடிய எல்லாப் பிணிகளிலும் மண்டூரத்தையும் பிரயோகிக்கலாம். (4) லோஹௌஷதங்களை யுபயோகிப்பவருக்கு முண்டமானது கிட்டத்தினும் பத்தத்தை குணத்தையும், தீக்ஷ்ணமானது முண்டத்தைவிட நூறு மடங்கு குணத்தையும், காந்தமானது தீக்ஷ்ணத்தினும் லக்ஷமடங்கு அதிக குணத்தையும் மனிதருக்குக் கொடுக்கும்; ஆகவே கிழத்தனமும் மரணமும் எளிதில் நேரிடாமலிருக்கக் கருதி, காந்த லோஹத்தை மனிதர் எப்பொழுதும் உட்கொள்ளலாம்.[1] 147—150.

அசுத்த லோஹத்தின் அர்க்குணங்களும் சுத்த லோஹத்தின் குணங்களும்.

(1) சுத்தி செய்யாத லோஹத்தையுபயோகிப்பதால் ஆயுளும், தேஹபலமும், காந்தியும் அழியும்; இருதயத்திற் கோளாறு உண்டாகும்; பொதுவாக தேஹாரோக்கியம் சீர்செட்டுப் பல வியாதிகள்தோன்றும்; ஆகவே அயத்தைச் சுத்தி செய்தே பஸ்மம் செய்யவும். (2) சுத்தி செய்த அயமோ ஆயுளை விருத்தி செய்யும்; தேஹபலம், வீர்யம் இவற்றைக் கொடுக்கும்; பலரோகங்களைத் தீர்க்கும்; ஆண்மையை அதிகரிக்கச்செய்யும்; அயத்திற்குச் சமானமாக அவ்வளவு சிறந்த இரஸாயநம் வேறொன்று மில்லை.[2] 151, 152.

வங்கம்[3]

வங்கமானது குரகம், மிச்ரகம் என்று இரண்டு வகையாம். அவற்றுள் குரகம் குணத்திற் சிறந்தது; மிச்ரகம் உபயோகமானதன்று. (1) குரவங்கம் வெண்மையானது; மிருதுவானது; ஸ்நிக்தமானது; துரிதமாய் உருகும்; கனமானது; தட்டினால் சப்தமுண்டாகாது. (2) மிச்ரக வங்கம் நிறத்தில் வெண் கருமையானது.—153, 154.

வங்கம் இரண்டுவித்தம்.

1. லோஹ முபயோகிப்பவனுக்குப் பத்தியம்:—பூசணி, கல்லெண்ணெய், உளுந்து, கடுகு, மதுபானம், புளிப்புள்ள உணவுப்பொருள்கள் ஆகியவை அயமுட்கொள்பவனுக்குத் தகாதவை:—இரஸஸங்கேத கலிகா.

2. இவ்விஷயம் அனைத்தும் வேறு கிரந்தத்திலிருந்து சேர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.

3. வங்கம்—வெள்ளீயம் எனப்படும். இதற்கு ரங்கம், த்ரபு, பிச்சடம் என்றும் பெயர்களுண்டு.

வங்கமானது நித்தரஸமும், உஷ்ணவீர்யமும், ரூக்ஷத்தன்மையு முள்ளது; வாததோஷத்தைச் சிறிது பிரகோபிக்கச் செய்யும்; மேஹரோகங்கள், கபதோஷத்தா லான வியாதிகள், மேதோரோகம், கிருமிரோகம் ஆகியவற்றைப் பரிஹரிக்கக்கூடியது [1].—155.

வங்கத்தின் பொது குணங்கள்.

(1) குரவங்கத்தை உருக்கி, மஞ்சள்பொடி கலந்த கருநொச்சியிலைச் சாற்றில் ஊற்றவும்; இவ்விதம் மூன்று முறை செய்ய குரவங்கம் சுத்தமாகும். (2) பிச்சக வங்கத்தைப் புளித்த மோரிலும், வெள்ளைச்சாரடைச்சாற்றிலும், ஆடாதோடைச்சாற்றிலும், எட்டிக்கொட்டைக் கஷாயத்திலும், பேய்ச்சுரையின் சாற்றிலும் தனித்தனியே உருக்கிச் சேர்த்தால் சுத்தியடையும்.—156, 157.

இரு வங்கங்களுடையவும் சுத்திமுறை.

(1) உருக்கிய வங்கத்தைக் கருநொச்சியிலைச் சாற்றில் ஊற்றி வதோடு, அதில் நொச்சி வேரின் சூர்ணத்தை ஆவாபம் செய்து, வெயிலில் வைக்கவும்; இவ்விதம் ஏழு முறை செய்ய வங்கம் சுத்தமாம். (2) இப்படியே நாகம், வெண்கலம், செம்பு இவற்றையும் சுத்தி செய்யலாம். [2]—158.

வங்கம், நாகம், வெண்கலம், தாம்ரம் இவற்றிற்குப் பொதுவான சுத்தி முறை.

(1) வங்கத்தை மெல்லிய தகடுகளாக அடித்து, எருக்கம்பால் விட்டு ஆட்டிய தாளகத்தை அத்தகடுகளின் மேல் தடவி, அரசம்பட்டை புளியம்பட்டை இவற்றி லிருந்தெடுத்த க்ஷாரங்களுக்கிடையில் அத்தகடுகளைப் புதைத்து இலகுவாகப் புடம் போடவும்; பிறகு அரைத்தெடுத்து அப்பஸ்மத்தை இரஸௌஷத முறைகளின்படி உபயோகிக்கவும். (2) ஒரு பாணலியில் வங்கத்தை உருக்கி, அதில் பதினறிலொரு பங்கு இரஸத்தைச் சேர்த்து, தாளகத்தையும் சிறுகச் சிறுக அதன்மேல் பொடித்துத் தூவிக் கொண்டே, காட்டுப் பருத்தி மரத்தினுலான துடுப்பினுல் தேய்த்துக் கிளறிக் கெடிருந்தால் வங்கம் பஸ்மமாகும்; இதுவும் இரஸௌஷத முறைகளிற் சேர்த்துப் படிக்கப்படுகிறது. (3) பலாசம் வேரின் சாறு விட்டு ஆட்டிய தாளகத்தை வங்கத்தகடுகளின் மேல் பூசி, அப்

வங்க பஸ்ம முறைகள்.

1. 'வங்கமானது இலகு, ஸரம் (எளிதில் தாதுக்களிற் பாவுந் தன்மை), ரூக்ஷம், உஷ்ணம், மேஹஹரம், கபஹரம், கிருமிஹரம்; பாண்டுரோகம், காஸ-ச்வாஸம் இவற்றைப்பரிஹரிக்குந் தன்மை, சிறிது பித்தத்தை விருத்தி செய்யும் தன்மை ஆகியவையும் அதற்கு உண்டு; நேத்திரத்திற்கும் அது ஹிதமானது.—ஆயுர்வேத ப்ரகாசம்.

2. அசுத்த வங்கத்தின் தூர்த்குணங்கள்:—சுத்தி செய்யப்படாத வங்கமானது குஷ்டம், குல்மம், பாண்டு, பிரமேஹம், வாதரக்தம், மற்றும் பல கடுமையான கோளாறுகள் ஆகியவற்றையுண்டு பண்ணும்; பலத்தைப் போக்கும்:—வைத்திய சிந்தாமணி.

பால் புடமிட ஐயமின்றி அது பஸ்மமாகும். (4) வங்கத்தின் மேல் சேராங்கொட்டைத் தைலத்தைப் பூசி, அதன் மேல் சீலை செய்யவும்; புளி, அரசு, பலாசு இவற்றின் கட்டையை எரித்து அதனுல் அதைப் புடமிட பஸ்மமாம். 159—163.

வங்கபஸ்மம், காந்தபஸ்மம், அப்ரகபஸ்மம் இவற்றைச் சமயெடையாக எடுத்து, அவற்றை ஊமத்தையிலைச் சாற்றுல் [1] முதலில் அரைக்கவும்; பிறகு வேப்பிலைச் சாற்றுலும், மாதுளையிலைச்சாற்றுலும், நாயுருவிச்சாற்றுலும் தனித்தனியே அரைக்க வேண்டும்; அதன் பிறகு வங்கபஸ்மத்திற்குச் சம அளவாக இராஜாவர்த்த பஸ்மத்தையும் கூட்டி, கோமூத்திர சிலாஜதுவின் [2] குழம்பால் நன்றுக ஆட்டவேண்டும் [3]; பிறகு வெண் குங்கிலயக் குழம்பு விட்டு எட்டு நாட்கள் அரைத்து, உலர்த்தி மீண்டும் பொடியாக்கி, அச்சூர்ணத்திற்குச் சமஅளவாகப் பொரித்தெடுத்த இலவம் பிசினையும், வாலுழுவை விதையின் சூர்ணத்தையும் [4] கூட்டிக் கலந்து, வஸ்திரகாளகம் செய்து, தகுந்த சிமிழில் வைத்துக் கொள்ளவும்; 'வங்க ரஸாயநம்' எனப்படும் இதை இரண்டு குஞ்ஜாப்பிரமாணமாகப் பசுவின் மோரிற் குழைத்த மஞ்சள் சூர்ணத்தினுள் அனுபானத்துடன் உட்கொள்க. இதனுல் இருபது வகையான மேஹரோகங்கள் நிவாரணமாகும். சம்பா அரிசி, பயற்றம்பருப்பு, வெண்ணெய், நல்லெண்ணெய், புடல், காட்டுக்கோவை இவை இவ்வௌஷத முபயோகிக்கையிற் பத்தியமான உணவாம். 164—170.

வங்க ரஸாயநம்.

ஸீஸம்

(நாகம்—கருவங்கம்)

ஸீஸமானது துரிதமாய் உருகும்; அதிக பாரமுள்ளது; அறுத்தால் அறுபட்டவிடத்தில் கறுப்பாகப் பளபளப்புள்ளதாயிருக்கும்; ஒருவித துர்காற்றமுடையது; வெளிப்புறம் கறுப்பாயிருக்கும்; இவ்விதமிருப்பதுதான் சுத்தமான ஸீஸம்; இவ்வித இலக்ஷணங்களைப் பெறுதது இதற்கு எதிரிடையான குணங்களைப் பெற்றது.—171.

ஸீஸத்தின் இலக்ஷணங்கள்.

1. 'கங்காம்போபி:' என்பதற்குப் பதிலாக 'கன்யகாம்போபி:' என்று இரஸரத்நஸமுச்சய போதினியில் கூறப்படுகிறது; அப்பொழுது கற்றுழைச்சாறு என்று பொருள் கூறவேண்டும்

2. "கோமூத்ரக-சிலாஜதுஜலை." என்கிற மூலவாக்கியத்திற்குப் 'பசுமூத்திரத்தினுலும், சிலாஜதுக்குழம்பாலும்' என்றும் பொருள் கூறலாம்.

3. ஒவ்வொரு திரவத்தினுலும் எவ்வேழு முறை அரைக்க வேண்டுமென்று "இரஸரத்நஸமுச்சய போதினி."

4. "உச்சித்திலகம் என்கிற ஒரு வேலன் பிசினேனும், ஈச்வரவல்லிவிதையின் சூர்ணத்தோடும் கூட்டியரைக்கவும் என்று" வேறுபாடம்.

ஸீஸமானது வீர்யத்தில் மிகவும் உஷ்ணமானது; குணத்தில் ஸ்நிக்தமானது; சுவையில் கைப்பு; வாத-கபஹரம்; மேஹஜீதாஷஹரம்; தீபநம்; ஆயுஷைத வியாதியைப் பரிஹரிக்கவல்லது.—172.

ஸீஸத்தின் குணங்கள்.

ஸீஸத்தை உருக்கி, அதில் வெண்ணெய்க்கீரை, அபேஹுகம், பஞ்சன் இவற்றின் சூர்ணத்தைச் சேர்த்து, பிறகு கருநொச்சியிலைச் சாற்றில் ஊற்றவும்; இவ்விதம் மூன்று முறை செய்ய ஸீஸம் சுத்தமாகும்; இச்சுத்தி முறையினால் நாகம் கறுப்பான நிலைமையையும், வெடித்துப் பொடியாகும் தன்மையையும் பெறுது.—173, 173½.

ஸீஸ சுத்தி.

(1) குறுக்காக கீட்டுருவத்தில் அமைத்த அடுப்பின்மீது குறுக்காக நீண்ட மூகமுள்ள ஒரு சட்டியை[1] வைத்து, அச்சட்டியின் வாய்ப்புறம் தவிர மற்றெல்லாப் பாகத்தையும் மண்பூசி நன்கு மறைத்துவிடவும். இது **பிரஷ்டயந்திரம்** எனப்படும். (2) அச்சட்டியில் (1) இருபது பலம் சுத்த ஸீஸத்தைப் போட்டு, கடுந்தீயிட்டு எரித்து, ஸீஸம் உருகும்போது அதில் கால் பல மெடை சுத்த ரஸம் சேர்த்துக் கலக்கவும்; பிறகு அர்ஜுநக்ஷாரம், அக்ஷக்ஷாரம், மஹாசாகக்ஷாரம், தாடிமக்ஷாரம், அபாமார்கக்ஷாரம்[2] இவற்றில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பலம் அதிற் கூட்டி, துடுப்பால் நன்றாக மதிக்கவும்; இவ்விதமாகக் கடுந்தீயிட்டு இருபது நாள் இரும்புத்துடுப்பால் மதித்து வந்தால், ஸீஸமானது சென்னிறமான அல்லது மாடப்புறு நிறமான பஸ்மமாக மாறும்; தோஷம் நீங்கியதான இந்த நாகபஸ்மம் சிறந்த இரஸாயநமாகும். (2) நாகத்தை ஒரு முறை ஒருவாறு பஸ்மமாக்கவும்; அதை ஊர்த்வபாதந யந்திரத்தைக்கொண்டு மீண்டும் நாகமாகச் செய்துகொள்ளவும்; இவ்விதமே அதைப் பத்துமுறை செய்தால் அந்த ஸீஸம் எத்தோஷமும் நீங்கி மிகச் சிறந்த பஸ்மமாகும்; அது இரஸாயநமாகும். (3) ஒரு பாத்திரத்தில் ஸீஸத்தைப் போடவும்; அரசம்பட்டையையும் புளியம்பட்டையையும் சாம்பராக்கி, அச்சாம்பரை ஸீஸத்திற்கு நாலிலொரு பாக அளவில் சேர்த்து, இரும்புத்துடுப்பால் கிளறவும்; இவ்விதம் செய்ய ஒரு யாமத்தில் அது பஸ்மமாகும்; அப்பஸ்மத்தை யெடுத்து, அதற்குச் சமயெடை மனச்சிலையைக் கூட்டி, எலுமிச்சம் பழச்சாற்றாலாகிலும் காடியினாலாவது ஆட்டி, உலர்த்தி புடமிடவும். மீண்டும் அதை ஆறிய பிறகு எடுத்து, இருபதிலொரு பங்கு மனச்சிலை சேர்த்து, காடிவிட்டு

ஸீஸஸ்ய முறைகள்.

1. வறுக்கும் சட்டி, அல்லது வறையோடு.

2. அர்ஜுநக்ஷாரம்—மருதம்பட்டையை எரித்தெடுத்த உப்பு. அக்ஷக்ஷாரம்—தான்றிமரப்பட்டையை யெரித்தெடுத்த உப்பு. மஹாசாகக்ஷாரம்—பெரு தேக்கம்பட்டையிலிருந்தெடுத்த உப்பு. தாடிமக்ஷாரம்—மாதுளம் உப்பு. அபாமார்கக்ஷாரம்—நாயுருவியுப்பு.

ஒரு யாமகாலம் அரைத்து முன்போலவே புடமிடவேண்டும். இவ்விதம் அறுபது புடமிட்டால் நாகம் நிருத்தமாக பஸ்மமாகும். (4) ஸீஸத்தை மெல்லிய தகடுகளாகச் செய்து, அதன்மேல் மனச்சிலையையும் எருக்கம்பாலையும் அரைத்துப் பூசவும்; பிறகு புடமிடும் முறைப்படி பக்குவம் செய்ய நிருத்தமாக[1] பஸ்மமாகும். 174—184½.

ஸீஸாயநம்.

முற் கூறியவகைகளில் புடமிட்டெடுத்த நாகபஸ்மம் ஒரு பங்கு, தாளகபஸ்மம் அரைப்பங்கு, தாம்ரபஸ்மம் கால்பங்கு, விமலபஸ்மம் கால்பலம், காந்தஸத்வம், அப்ரகஸத்வம், ஸ்படிகஸத்வம் இவையும் வகைக்குக் கால்பங்கு; ஆக இவ்வனைத்தையும் ஒன்றாகக் கூட்டி, த்ரிபலாகஷாயம் சேர்த்து, மூப்பது வறட்டிகளைக் கொண்டு மூப்பது முறை புடம் போட்டு, அரைத்து வைத்துக்கொள்ளவும். இதை இரண்டு குன்றுமணியெடை யெடுத்து, அதற்குச் சமயெடை த்ரிகடு, வாய்விடங்கம் இவற்றின் சூர்ணத்தைக்கூட்டி, தேன் அல்லது நெய்யிற் குழைத்து, அந்தந்த அநுபாநங்களுடன் உட்கொள்ள, எண்பது வகையான வாத ரோகங்களும், முக்கியமாக தநுர்வாதமும், எல்லாவிதமான கபரோகங்களும், மூத்ர ரோகங்களும், ச்வாஸம்-காஸம்-கூஷயம்-பாண்டு-சோகை-குளிர் ஜ்வரம்-கிரஹணீ-ஆமவாதம்-கடுமையான அக்னிமாந்த்யம்-கபோதரம் முதலிய மற்றெல்லா நீர் ரோகங்கள் ஆகியவைகளும் தீரும்.[2] 185—191.

பித்தளை[3].

பித்தளை இரண்டுவிதம்.

ரீதிகா என்றும், காகதுண்டி என்றும் பித்தளை இரண்டு விதப்படும். (1) எது காய்ச்சப்பட்டுக் காடியில் இடசெப்பு நிறங்கொள்ளுகிறதோ அப்பித்தளை ரீதிகா எனப்படும். (2) எது அவ்விதம்செய்தால் கறுப்பு நிறமாகுமோ அது காகதுண்டி எனப்படும். 192, 192½.

பித்தளைகளின் குணங்கள்.

(2) ரீதிகா என்னும் பித்தளை சுவையில் கைப்பு; ருக்ஷ குணமுடையது; கிருமி ஹரம்; இரக்த பித்த ஹரம்; தகுந்தஅநுபாநங்களுடன் உபயோகித்தால் குஷ்டமும் இதனால் தீரும்; உஷ்ண சீத வீர்யங்கள் கலந்தது. (2) காக

1. நிருத்தம்—8-ம் அத்தியாயம் பார்க்க.

2. ஸீஸத்திற்கு முன்பு ஜஸதம் என்கிற ஒரு லோஹம் ஆயுர்வேத ப்ரகாசத்திற் கூறப்படுகிறது. 'ஜஸதம் என்பது வங்கம் போன்றது; அது பித்தளையுண்டாவதற்கும் காரணவஸ்து. வங்கத்தைப் போலவே சுத்தி பஸ்மமுறைகளும்.' ஜஸதம்—அத்தநாகம்.

3. 'ரீதி யென்னும் பித்தளையானது தாம்ரம், ஜஸதம் இவற்றின் சேர்க்கையாலான உபதாதுவே யாகும். ஆகவே பித்தளை அதற்குக் காரண வஸ்துக்களின் குணங்களைப் பெற்றிருக்கும்; சேர்க்கை முறைகளிலுள்ள வித்யாஸங்களையநுஸரித்து பித்தளையின் குணங்களும் பல வாறு மாறுபடும்.'—பாவப்ரகாசம்.

தண்டி யென்பது ரூக்ஷமானது; திக்த ரஸமும், உஷ்ணவீர்யமு முடையது; யக்ருத் என்னும் ஈரல், ப்லீஹம் இவற்றின் வியாதி களைப்போக்க வல்லது; சிறிது சீதவீர்யமுமுடையது.—193, 194.

பித்தளையிற் சிறந்ததும், இகழ்ந்ததும்.

(1) பாரம், மிருதுத் தன்மை, பசுமை நிறம், வன்மை, அடித் தால் சிதறாமல் அடிகளைத் தாங்குந் தன்மை, மிக வும் ஸ்நிக்த்தமா யிருத்தல், மழமழப்பு ஆகிய இலக்ஷணமுள்ளது சிறந்த பித்தளையாம். (2) வெண் பசுமை நிறம், சுறசுறப்பா யிருத்தல், ரூக்ஷத் தன்மை, வன்மை யின்மை, அடி தாங்காமை, காய்ச்சும்போது ஒரு வித துர்நாற்ற முண்டாக்குதல், பாரமின்மை ஆகிய இலக்ஷணங் கள் தாழ்ந்த பித்தளையைக் குறிப்பிடும்; அவ்வித பித்தளை இர ஸௌஷத முறைகளுக்கு உபயோகமானதன்று.—195, 196.

பித்தளையின் சுத்திமுறை.

ஒரு பாத்திரத்தில் மஞ்சள் பொடி கலந்த கரு கொச்சி யீலச் சாற்றை வைத்து, அதில் பித்தளையைக் காய்ச்சித் தோய்க்கவும்; அவ்விதம் ஐந்து முறை காய்ச்சித் தோய்க்க பித்தளை நன்கு சுத்தமாகும்.—197.

பித்தளைத்ருதி.

பொன்னிறமான பித்தளையைப் [1] பொடித்து, கொழுத்துக் கறுப்பான இளம் ஆட்டுக்குத் தீனியில் கலந்து வைத்து அதை யுண்ணச் செய்யவும்; பிறகு அது இடும் சாணத்தை யெடுத்து, ஒரு கப்பரையினுள் பூசி, அடுப்பில் வைத்து அதைக் காய்ச்ச, அச்சாணத்திலிருந்து சிறந்த பித்தளைத் திரவம் வடியும்; அது பதினெறு மாற்றுப் பொன்னுக்கு நிகரான காந்தி யுடையதா யிருக்கும்; அது தேஹத்திற்கு நல்ல வன்மை யைத் தருவதற்கும், உலோஹ முறைக்கும், இரஸாயந முறைக்கும் உபயோகமானது. 198—200.

பித்தளை பஸ்மம்.

(1) மனச்சிலை, கந்தகம் இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து, பித்தளை ரேக்குகளின்மேல் கனமாகக் கவசம் செய்வது போலப் பூசி, புடமிடவும்; இவ் வாறு எட்டுமுறை புடமிட்டால் பித்தளை பஸ்மமாகும்; பிறகு அதை முறைப்படி யுபயோகிக்கலாம். (2) பித்தளையைத் தாளதைப் போலவே பஸ்மம் செய்து அவச்யமான எல்லாவற்றிலும் உபயோகிக்கலாம்.—201, 201½.

பித்தளை இரஸாயநம்.

பித்தளை பஸ்மம், கந்தபஸ்மம், அப்ரகபஸ்மம் ஆகிய மூன் றையும் ஸம அளவாகச் சேர்த்துக் கலந்து கொள்ள வும்; த்ரிகடுகம், வாய்விடங்கம், பலாசம்வித்து, ஓமம், சித்திரமூலம், சேராங்கொட்டை, எள்ளு இவற்றைச் சம அளவாக எடுத்து நன்கு சூர்ணம் செய்து, இச்சூர் ணத்தை முற்கூறிய மூன்று பஸ்மங்களோடும் ஸம எடையாகக்

1. உயர்ந்த வகையான ரீதிகா என்னும் பித்தளையானது சிறந்த மஞ்சள் நிறமானது; ஆகவே அது ஸுவர்ண ரீதிகா என்றும் வழங்கப் படும். பித்தளைக்கு ஆகூடம் என்றும் பெயர்.

கூட்டிக் கொள்ளவும். இவ்வௌஷதத்தை நிஷ்கப் பிரமாணமாக உட்கொண்டுவந்தால் வயிற்றிற் சேரும் கிருமிகள் ஒழியும்; குஷ்ட ரோகத்திலும், மிக முக்கியமாக வெண் குஷ்டத்திலும் இது உப யோகமானது; தீபகம், பாசகம் என்னும் குணங்களும் இதற் குண்டு.[1] 202—204.

வெண்கலம்.

(காம்ஸ்யம்—கோஷம்.)

வெண்கலம் கலப்பு லோஹம்.

தாம்ரம் எட்டு மடங்கு, குரவங்கம் இரண்டு பங்கு; இவ் விரண்டையும் உருக்கிக் கூட்டுவதால் உண்டாகும் உலோஹமே 'வெண்கலம்' அல்லது 'காம்ஸ்யம்' எனப்படுகிறது; அதில் ஸௌராஷ்ட்ர தேசத்திய வெண்கலம் சிரேஷ்டமானது.—205.

வெண்கலத்திற் சிறந்ததும் இகழ்ந்ததும்.

(1) கணீரென்று சப்தித்தல்; மிருதுத்தன்மை; ஸ்நிக்த்தம்; சிறிது கறுநீரோட்டதுடன் கூடிய வெண்மை; களங்கமில்லாத பளபளப்பு; காய்ச்சினுல் சென் னிறமடைதல்; ஆக இவ்வாறும் சிறந்த வெண்கலத் தின் குணங்களாம். (2) காய்ச்சினுல் பசுமை நிறங் கொள்ளுதல், ஸாதாரண நிலைமையிற் சென்னிறமா யிருத்தல், கடி னத் தன்மை, ரூக்ஷத்தன்மை, அடிதாங்காமை, மந்தமாகச் சப்தித் தல், பளபளப் பின்மை ஆக இவ்வேழும் வெண்கலத்தின் தூர்க் குணங்க ளாகையால் அவ்வித வெண்கலத்தை ஔஷத முறைகளில் உபயோகிக்கக்கூடாது.—206, 207.

வெண்கலத் தின் குணங்கள்.

(1) வெண்கலம் இலகுகுணமுள்ளது; சுவையில் கைப்பு; உஷ்ண வீர்யம்; லேகநம்;[2] நேத்திரத்திற்குத் தெளிவைத் தருவது; கிருமி ஹரம்; குஷ்ட ஹரம்; வாத-பித்தஹரம்; தீபகம். (2) வெண்க லத்தில் நெய் ஒன்றைத் தவிர்த்து மற்றெல்லாவற் றையும் வைத்திருந்து உட்கொண்டால் ஆரோக்யமும் சுகமும் உண் டாகும்; அவ்வித உணவுகள் ஸாத்மியமுமாகும்.[3]—208, 209.

காம்ஸ்யத்தின் சுத்தியும் பஸ்ம முறைகளும்.

(1) வெண்கலத்தைக் காய்ச்சி, பசுமூத்திரத்தில் தோய்த் தெடுத்தால் அது சுத்தமாகும். (2) கந்தகமும், தாளகமும் கூட்டி வெண்கலத்தை ஐந்து புடமிட நிருத்தமான பஸ்மமாகும். (3) மூன்று[4] க்ஷாரங்

1. பித்தளை இராஜரீதி என்றும், பிம்மரீதி யென்றுங் கூட இரண்டு விதமாக வழங்கப்படுவதுண்டு.

2. லேகநம்—தேஹத்திலுள்ள தாதுக்களையாவது மலங்களை யாவது வாரச் செய்து, அவற்றைக் கழியச் செய்யும் குணம்.

3. ஸாத்மியம்—பத்தியமாகாத வஸ்துவும் அப்யாஸவசத்தால் தேஹத்திற்கு இதமாய்விடுதல்.

4. மூன்று க்ஷாரங்கள்—யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், டங்கண க்ஷாரம் என்பனவாம்.

கள், பஞ்ச லவணங்கள்[1] இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் பாவனை செய்யவும்; அவ்விதம் ஏழு முறை பாவனை செய்த கூசாராதி களை வெண்கலம் பித்தளை இவற்றின் தகடுகளின் மேல் கனமாகத் தடவி, கஜபுடத்தில் வைத்துப் பக்குவம் செய்ய, வெண்கலம் சுத்த மான பஸ்மமாகும்.—210, 211.

வர்த்தலோஹம்.

வர்த்தலோஹம்.

வெண்கலம், தாம்ரம், பித்தளை, அயம், நாகம் ஆகியவற்றின் சேர்க்கையாலான லோஹம் வர்த்தலோஹம்[2] எனப்படும். உலோஹதத்துவ மறிந்தவர் இதையே பஞ்சலோஹம் என்றும் வழங்குவர்.—212.

வர்த்தலோஹத்தின் குணங்கள்.

(1) வர்த்தலோஹம் சீதவீர்யமும், கடரஸமும், ரூக்ஷகுணமு முடையது; கப-பித்தஹரம்; அரோசகத்தைப் போக்கும்; சர்ம ரோகங்களில் ஹிதம் செய்யும்; கிருமிஹரம்; நேத்ரரத்திற்கு ஹிதமானது; மலத்தை நன்கு வெளிப்படுத்தும். (2) வர்த்த லோஹத்தினாலான பாத்ரத்தில் சமையல் செய்த அன்னம், வியஞ்ஜநங்கள், பருப்பு முதலியதெல்லாம் தீபநம்-பாசகம் என் னும் குணங்களை விருத்தி செய்வதிற் சிறந்தவையாம்; ஆனால் புளிப் புள்ள எவ்வஸ்துவையும் வர்த்தலோஹத்தினாலான ஔஷத முப யோகிப்பவர் விலக்கிவிடவேண்டும்.—213, 214.

வர்த்த லோஹ சுத்தியும் பஸ்ம மும்.

(1) வர்த்த லோஹத்தைக் கடுந்தியிட்டு எரித்து உருக்கிக் குநிரையின் சிறுநீரில் ஊற்ற, அது சுத்தமாகும். (2) அவ்விதம் சுத்தி செய்த வர்த்தலோஹத்துடன் கந்தகமும் தாளகமும் கூட்டி புடமிட, அந்த லோஹம் பஸ்மமாகும். முறைப்படி அப்பஸ் மத்தை அந்தந்த யோகங்களில் உபயோகிக்கலாம்.—215, 216.

இரஸ ஸித்தியும் பஸ்மங்களும்.

இரஸ-லோஹ பாஷாணதிகள் பஸ்மமான பிறகே இரஸ முறைக்கு உப யோகம்.

(1) இரஸங்கள்,[3] உபரஸங்கள், லோஹங்கள் முதலியவை சிறந்த இனங்களாகவும், சுத்தி செய்யப்பட்டன வாகவும், முறைப்படி பஸ்மம் செய்யப் பெற்றவை யாகவும் இருந்தால், அவற்றைக் கொண்டு இரஸம்[4] ஸித்தமாகுமேயன்றி வேறுவிதமாயாகாது. (2) இரத் தினங்கள், உலோஹங்கள், கவடி, சிப்பிகள், பாஷா ணவகைகள், குளம்புகள், மான் கொம்பு முதலிய

1. பஞ்ச லவணங்கள்—ஸௌவர்ச்ச லவணம், ஸைந்தவலவ ணம், பிடால லவணம், ஔத்பித லவணம், ஸாமுத்ர லவணம்.

2. வர்த்தலோஹத்தை நீலலோஹம் என்றும் கூறுவர். வர்த்த லோஹம், வெண்கலம், பித்தளை இம்மூன்றும் மிச்ரலோஹங்கள் எனப்படும்.

3. இரஸங்கள்—மஹாரஸங்கள் எனப் பொருள்.

4. இரஸம்—பாதாரஸம் என்னும் பாரதம்.

கொம்புகள், எலும்பு, மஹாரஸாதிகளில் உருவத்திற் கடினமாயுள்ள சாக்ருகள் ஆகிய இவைகளும் நன்கு பஸ்மம் செய்யப்பட்டால்தான் இரஸௌஷதமுறைகளில் உபயோகிக்க உதவும். 217, 218.

பூநாக ஸத்துவம்.[1]

இரஸ-வஜ்ரங் களில் பூநாக ஸத்துவத்தின் உபயோகம்.

வஜ்ரம் முதலிய இரத்தினங்களைத் திரவமாகச் செய்வதற்கு உபயோகமான பூநாகங்களென்கிற நாகப்பூச்சிகளி லிருந்து ஸத்துவமெடுக்கும் முறை மொழியப்படு கின்றது. ஸூதராஜனென்கிற இரஸம், வஜ்ரம் இவ்விரண்டுக்கும் ஒளியை மிக்க விருத்தி செய்வ தற்கு அச் சத்துவமே ஏற்றது. 219.

பூநாக ஸத்துவ மெடுக்கும் முறைகள்.

(1) நாகப்பூச்சிகளைக் கொண்டுவந்து நன்றாகக் கழுவி, சாம்ப ராகச் செய்து, அச்சாம்பரைக் கரிசிலாங்கண்ணிச் சாற்றில் மூன்று நாட்களும், எலுமிச்சம்பழச் சாற் றில் மூன்று நாட்களும், கொச்சியிலைச் சாற்றில் மூன்று நாட்களும் அரைக்க வேண்டும்; பிறகு அதை திராவணவர்க்கச் சரக்குகளாலும்[2] ஆட்டி யெடுத்து, வட கங்களாகச்[3] செய்யவும்; அவ்வடகங்களைப் பிடிமூஷையில் அடைத்து, கடுந் தீயிட்டு இரண்டு யாமகாலம் எரிக்கவும். பிறகு அது தானே ஆறியதும் மூஷையிலிருந்து கடுகுபோன்று சிறியனவா யுள்ள வெள்ளை ரவைப் பொடிகளை வஸ்திரத்தில் கொட்டி காளநம் செய் தெடுக்கவும்; அத்துடன் பணிரெண்டில் ஒரு பங்கு தாம்ரத்தை யும் கூட்டி, நன்றாகத் தீயிட்டு எரித்து ரவைகளாகச் செய்யவும்; அந்த ரவைகளை யெடுத்து, நன்றாகக் கழுவி, வஜ்ரம் முதலியவற் றைத் திரவமாக்குவதற்கு முறைப்படி யுபயோகிக்கலாம். இந்த ரவைகள் கடினமா யிருக்குமாகையால் இச்சரக்கு கரஸத்துவம் எனப்படும்; இது உத்தமமான இரஸாயநமாகவும் உபயோகப்படும். ஒரு தடவை மூஷையி லடைத்து மூன்றுமுறையாவது ஊதினாலும் இச் சத்துவம் வெளியாகும்; இல்லையேல் மூன்று முறை மூஷைகளில் அடைத்து எரிக்க ஸத்துவம் வெளி வருவது நிண்ணம். (2) பொன், வெள்ளி, செம்பு, சாந்த லோஹம் ஆகிய லோஹங்கள் உற்பத்தி யாகும் பூமிகளில் உண்டான நாக்குப் பூச்சிகளை நான்கு பிரஸ்த் தம் அளவு கொண்டுவந்து, மஞ்சள் நீரால் முதலிற் கழுவி, பிறகு குளிர்ந்த நீராலும் கழுவி, அப்பூச்சிகளைப் பட்டிணியால் வருந்தும்

1. பூநாகஸத்துவம்—நாகப்பூச்சிகளிலிருந்து எடுக்கப்படும் சத்து. இது ஓர் உபரஸம் என்று வைத்யக சப்தகல்பத்து. நாகம் என்னும் லோஹத்தின் ஸத்துவமே பூநாக ஸத்துவம் என்றும் சிலர்.

2. திராவணவர்க்கம்—10-ம் அத்தியாயத்தில் விவரம் பார்க்க.

3. வடகங்கள்—சிறிய அடைகளைப்போல ஔஷதங்களைச் செய்து உலர்த்தினால் அவை வடகங்கள் எனப்படும்.

மயிலுக்காவது, சுறுசுறுப்பான கோழிக்காவது இரையாகப் போடவும்; அவற்றைத் தின்று அப்பறவையிடும் மலங்களைக் கவனமாகச் சேர்த்து, அவற்றை க்ஷார வர்க்கங்களும்[1] அம்ல வர்க்கங்களும்[2] கூட்டி அரைத்து, கல்ல வெயிலில் உலர்த்தி யெடுக்கவும்; பின்பு அதை ஓர் அகன்ற அகலிலிட்டு, எரித்து மையாக்கவும்; அந்த மையை நிரவண வர்க்கச் சரக்குகளால்[3] ஆட்டி யெடுத்து, மூசையில் அடைத்து, குப்மட்டியி லிட்டு இரண்டு நாழிகை நேரம் நன்றாக எரிக்கவேண்டும்; பிறகு மூசையை வெளியிலெடுத்துத் தானே ஆறிய பிறகு அதனுள்ளிருக்கும் கோடத்தை[4] யெடுத்து, நன்கு அரைக்கவும்; சரைகளுருவமான ஸத்துவத்தைச் சிதறுமா லெடுத்து, அலம்பி, ஸமயெடை பொன் கலந்து, நெருப்பிலிட்டு ஊதி, அச்சத்துவத்தைக் குப்பியில் எடுத்து வைக்கவும்; சில நாள் பழகிய பிறகு அதை யுபயோகிக்க வேண்டும்.[5] 220—230.

நாகப்பூச்சிகளிலிருந்து எடுக்கப்படும் ஸத்துவம் இரஸ முறைகளில் உபயோகிக்கச் சிறந்ததென்றும், அடியில் வரு மாறு அதையுபயோகிப்பது நலமென்றும் ஸ்ரீலோமதேவர் என்னும் ஸித்தர் கூறுகிறார். இரண்டு சாணமெடை பொன்னுடன் அதிற் கால் பங்கு அளவாக அச்சத்துவத்தைக் கூட்டி ஒன்றுக்கி, மோதிரம் ஒன்று செய்து, அம்மோதிரம் கழுவிய ஜலத்தை விஷம் தீண்டியவிடங்களிற் பூச, ஸ்த்தாவர விஷங்களும்[6] ஜங்கம விஷங்களும்[7] தீரும்; மேலும் நேத்திரரோகங்கள், வயிற்றுளைத்தல், மூலரோகம், காது நோய்கள், ஸ்தனிகாரோகங்கள் ஆகியவைகளும் தீரும். 231.

பூநாக ஸத்துவமும், அதன் குணங்களும்.

1. க்ஷாரவர்க்கம்—10-ம் அத்தியாயம் பார்க்க.
2. அம்லவர்க்கம்—10-ம் அத்தியாயம் பார்க்க.
3. நிரவண வர்க்கம்—10-ம் அத்தியாயம் பார்க்க.
4. கோடம்—இரஸத்தை ஜாரணம் பண்ணவும், கட்டுவதற்கும், உபயோகமான ஸத்துவம்.
5. நாகப்பூச்சிகளைக் கொண்டுவந்து, மயிலையாவது வலிவுள்ள கோழியையாவது அவற்றைத் தின்னும்படியாகச் செய்து, பிறகு அவை யிடும் மலத்தையும் மீசையும் முதலில் இடுவதைத் தவிர்த்து மற்றவைகளைக் கிரஹித்து, க்ஷாரங்கள்-தேன-நெய் இவற்றால் அவற்றை ஆட்டி, நன்றாகத் தீயிட்டு ஊதி, அப்பால் வெளிவரும் தாரம் பொன்ற ஸத்துவத்தை யெடுத்துக் கொள்ளவும். அச்சத்துவத்தினாலான மோதிரத்தைக் கையிலணிந்து கொண்டு தண்ணீர் அருந்த ஸகல விஷமும் தீரும்.—இரஸேந்திர சிந்தாமணி.
6. ஸ்த்தாவர விஷங்கள்—செடிகொடி மரங்கள் முதலியவற்றைச் சேர்ந்த விஷங்கள, அலரிவேர், எட்டிக்கொட்டை, அபினி முதலியன.
7. ஜங்கம விஷங்கள்.—பிராணிகள் ஸபந்தமான விஷங்கள் பாம்புகள், சிலந்திகள், நாய்முதலியவற்றின் விஷங்கள்.

தைலபாதந முறை[1].

அங்கோல பீஜதைலம்.

(1) ஆற்றுத்தும்மட்டிவேர்களை யெடுத்து இடித்துக் காடியிற் போடவும்; அவ்விதமே ஏறழிஞ்சிற் கொட்டைகளிலிருந்து சோறு எடுத்து இடித்து அதையும் அதிற் சேர்க்கவும்; அதில் நெய்போல் தோய்ந்துள்ள தைலத்தை முறைப்படி[2] கிரஹிக்கவேண்டும். (2) ஆற்றுத்தும்மட்டியிலைகளையும், வாலுழுவையிலைகளையும் காடி விட்டு அரைத்து, அக்கல்கத்தைக் கொண்டு ஏறழிஞ்சில் வித்துகளின் சூர்ணத்தை நன்றாக அரைத்தெடுத்து, அவ்வரைத்தையும் வெல்லம்போன்ற வஸ்திரத்திற் கட்டி, கடும் வெயிலில் ஒரு கழியிற் கட்டித் தொங்கவிட்டு, அதனடியில் ஒரு கிண்ணத்தை வைக்கவும்; அக்கிண்ணத்தில் வடியும் தைலத்தை யெடுத்துவைத்துக் கொள்ளவும்; அது சீனித்தரம் என்கிற வெண்குஷ்டத்தைப் போக்கும். (3) ஏறழிஞ்சிற் கொட்டைகளைச் சூர்ணம் செய்து, காடியில் ஒரு இரவு முடியவும் ஊறவைத்து நன்றாக அரைத்து, ஒரு பிண்டமாக உருட்டி, கந்துகயந்திரத்தில்[3] வைத்து, இரண்டு நாழிகை காலம் ஸ்வேதநம்[4] செய்யவேண்டும்; அப்பிண்டத்தை ஒரு கெட்டி வஸ்திரத்திற் கட்டி, கனத்த இரு கழிகளால்[5] அழுத்தி நசுக்கிப் பிழிய, அடியில் வைத்த பாத்திரத்தில் எண்ணெய் வடியும். அத்தைலத்தை யெடுத்து ஏற்ற வியாதிகளில் உபயோகிக்கவும். இவ்விதமே கந்துகயந்திரத்தைக் கொண்டு வேறு எல்லாச் சரக்குகளிலிருந்தும் தைலத்தை வடித்தெடுக்கலாம். (4) வெண்குன்றுமணியைச் சமூலமாகக் கொண்டு வந்து சாறு பிழிந்து, அச்சாற்றில் ஏறழிஞ்சில் வித்துகளை அரைத்து முன்போலவே தைலமெடுக்கலாம். 232—233½.

பலவேறு சரக்குகளிலிருந்து தைலம் இறக்கு முறைகள்.

(1) வாலுழுவை, (2) தேவதாளி இவற்றின் விதைகளைப் பெரும் பூசணி வேர்களின் சாற்றில் அரைத்தும் முன்போலவே தைலம் எடுக்கலாம். (3) நாயுருவிச் சாற்றில் எட்டிக் கொட்டையை அரைத்து அதிலிருந்தும் தைலமெடுக்கலாம். (4) கற்றுழை வேரின் சாற்றில் நேபாள விதைகளை ஆட்டி, அதிலிருந்தும் தைலம் இறக்கலாம். (5) சிறந்த நாயுருவி வேரின் கஷாயத்தினால் வாலுழுவைவித்துக்களை அரைத்து, அவற்றிலிருந்து தைலமெடுக்கலாம். (6) திப்பிலி, (7) வெண் குன்றுமணி இவற்றைச் சூர்ணம் செய்து, மிக்க மிருதுவான காந்தலோஹப் பொடியையும்

1. தைலமும் சில விதை முதலியவற்றின் ஸத்துமாகையால் இவ்விஷயம் இங்கே குறிக்கப்படுகிறது.
2. முறைப்படி யென்றால் காய்ச்சியோ நசுக்கிப்பிழிந்தோ எடுப்பது எனக் கருத்து.
3. கந்துகயந்திரம்—9-ம் அத்தியாயம் பார்க்க.
4. ஸ்வேதநம்—8-ம் அத்தியாயம் பார்க்க.
5. இரு கழிகளாலான இடுக்கிமாதிரியான கருவி கிட்டி எனப்படும்.

அத்துடன் கூட்டி, தானியக் களஞ்சியத்தில் புகைத்து வைத்து, பிறகு ஒரு பலகம் கழிந்து மடித்து முன்போலவே தைலம் இறக்கலாம்.[1] 239—242.

ஆறும் அத்தியாயம்.

சிஷ்யோபநயநம்[2].

இரஸ சாஸ்திரப் பிரகடகத்திற்கு முகாந்தரம்.

இரஸ ஸம்பந்தமான விஷயங்களைக் கூறும் நூல்களனைத்தையும் நன்முகப் பரிசீலனை செய்து, ஸாதகர்களின்[3] நன்மையைக் கருதி கிரமப்படி[4] இதில் விஷயங்கள் வெளியிடப்படுகின்றன. கிரமமில்லாமல் சாஸ்திரமில்லை; சாஸ்திரமின்றி கிரமமுமில்லை; ஆகவே கிரமத்துடன் கூடிய சாஸ்திரத்தைக் கற்றறிந்து எவன் காரியம் செய்கிறானோ அவனே லக்ஷ்மி பெறுவான்.[5] 1, 2.

இரஸ சாஸ்திர குருவின் இலக்ஷணங்கள்.

இரஸசாஸ்திரம் கற்பிக்கும் ஆசாரியர் அறிஞனுகவும், திறமைசாலியாகவும், இரஸ சாஸ்திரத்தில் தேர்ந்தவனுகவும், மந்திரஸித்தி பெற்றவனுகவும், மனோ திடமமைந்தவனுகவும், சிவபக்தனுகவும், தேவீ பக்தனுகவும், வேள்விகளைச் செய்பவனுகவும் இருத்தல் வேண்டும்; மேலும் எல்லாச் சாஸ்திரங்களிலுள்ள விசேஷங்களையும் அறிந்து, இரஸச் சரக்குகளின் வேலைகளில் ஸாமர்த்தியம் பெற்றவனுகவும்

---

1. 'பலவேறு சரக்குகளிலிருந்து தைலமிறக்கும் முறைகள்' என்னும் இத்தலையங்கத்தின்கீழ் கூறப்படும் 7 விதமுறைகளும் கந்தக யந்திரத்தின் உதவியினுல் செய்யப்படுபவை. இவற்றுள் முதல் முறை **வாதசீ** தைலம், இரண்டாவது தேவதாளிதைலம், மூன்றுவது விஷமுஷ்டி தைலம், நான்காவது ஜைபாலதைலம், ஐந்தாவது **வாதசீ** தைலம், ஆறுவது கிருஷ்ண தைலம், ஏழாவது, **காகதுண்டிதைலம்** என்ற முறையே வழங்கப்படும்.

2. மஹாரஸாதிகள் நன்கு பக்குவம் செய்யப்படுவதற்கும், அவற்றைக் கொண்டு ரஸத்தை நன்கு ஸித்தம் செய்வதற்கும் ஏற்ற முறைகளைச் சாஸ்திர ரீதியாகக் கற்க வேண்டுமானுல் தகுந்த குருவும், ஏற்ற சீடனும் அவசியமாகையால், சீடன் முறைப்படி குருகுலவாஸம் செய்து இரஸ சாஸ்திரம் கற்க வேண்டிய முறை இங்கு விவரிக்கப்படுகிறது. சிஷ்யனைப் பயில்விக்கும் அத்தியாயம் எனப் பொருள்.

3. ஸாதகர்—இரஸத்தை முறைப்படி பக்குவம் செய்து, அதனுல் அணிமாதி அஷ்ட முகத்திகளையடையும் உபாயங்களைக் கற்பவர்.

4. கிரமப்படி—முறைப்படி; முன்பின் ஒழுங்கு தவருதபடி: என்றுமாம். ஸ்வேதநம்-மூர்ச்சநம்-உத்தாபநம் முதலான ஸம்ஸ்கார முறைகளின் ஒழுங்கை யனுஸரித்து என்று பொருள். அல்லது அநுஷ்டான முறை தவருமல் என்னும் பொருள் கூறலாம்; சாஸ்திரத்திற் கூறிய முறைகளை அனுபவத்தில் தான் செய்தும் பிரயோகித்தும் பார்த்து என்பது கருத்து.

5. இரஸசாஸ்திரத்திற் கைதேர்ந்த வித்தகனுவான் எனப் பொருள்.

இரஸசாஸ்திரம் பயிலும் மாணக்கனது இலக்ஷணங்கள்.

இருக்கவேண்டும்; இவ்வித இலக்ஷணங்களுடன் கூடிய புருஷனே இரஸ சாஸ்திரத்திற்குக் குருவாகலாம். 3—4½.

சீடர்கள் குருவினிடம் பக்தர்களாகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும், ஸத்தியந் தவருதவராகவும், விரதாநுஷ்டானங்களைச் செய்வதில் திடமான பற்றுதலுள்ளவராகவும், சோம்பலற்றவராகவும், தமது தர்மங்கள் எவையென்பதையறிந்தவராகவும், குருமாரது கட்டளைகளுக்கு எப்பொழுதும் காத்திருப்பவராகவும் இருத்தல்வேண்டும்; மேலும் ஆடம்பரம் துவேஷம் ஆகியவை நீங்கியவனுகவும், தொன்று தொட்டுவரும் ஆசாரங்களில் திகைஷ பெற்றவராகவும், சாந்த குணம் நிரம்பியவராகவும், மந்திர சாஸ்திரத்திலும் தேவதைகளைப் பூஜிப்பதிலும் நோக்கமுள்ளவராகவும், சிறந்த ஸாதகர்களாகவும் உள்ள சிஷ்யர்களே இரஸஸம்ஸ்கார முறையில் கைதேர்ந்தவராவர். 5—7.

இரஸபாகங்களில் ஸஹாயகர்கள்.

ஸஹாயகர்கள் இரஸச்சரக்குகளைப் பக்குவம் செய்யும் வேலைகளில் எப்பொழுதும் சுறு சுறுப்புள்ளவராகவும், சீட்டர்களைவிட அதிக அடக்கமுள்ளவராகவும், குலசீலர்களாகவும், யஜமானனிடம் பயபக்தியுள்ளவராகவும் இருக்கவேண்டும்; அத்தகைய ஸஹாயகர்களே இரஸ வேலைகளில் உபயோகமுள்ளவராயிருப்பர். 8.

இரஸவித்தையில் வித்தி பெறவியலாதவர்.

நாஸ்திகர்கள், நல்லொழுக்கமற்றவர், மிகச்சொற்ப அறிவுடன் ஆடம்பரம் செய்யுந்தன்மையர் ஆகியவர்கள் களத்தனமாகவும், கபடமாகவும், மூர்க்கத்தனமாகவும் குருவினிடமின்றி வேறிடங்களிலிருந்தும் வித்தையைக் கைக்கொள்ள விரும்புவர். அத்தகையவர்களுக்கு மணி-மந்திர-ஔஷதங்கள் சிறிதும் பயன்படமாட்டா; ஒருக்கால் மூடத்தனத்தினுல் ஏதேனும் இரஸ முறைகளை அவர்கள் செய்தால் தம்பொருளை அவர்கள் அழித்துக் கொள்ள நேரிடும். அவர்களுக்கு இவ்வுலகிலும் மேலுலகிலும் இன்பமே இல்லை. ஆகையினுல் சீடன், பக்தி விசேஷத்தைக்கொண்டு குரு முற்றிலும் மனங்களிக்குமாறு நடந்து, இரஸவித்தையைத் தான் அதில் ஸித்தியடையும் பொருட்டுப் பயில வேண்டும்; சீடன் சிரத்தைற் கைகூப்பி வணங்கி ஆசிரியினிடமிருந்து ஆசியைப் பெற்று இரஸவித்தையை நன்கு ஸாதிக்கவேண்டும். 9—12.

இரஸசாலையின் அமைப்பு.

1. மனோஹரமான ஓரிடத்தில் இரஸசாலையை அமைக்க வேண்டும்; அவ்விடம் பிணிகள் பரவக் கூடாததாகவும், அறநெறிதவருது ஆளப்படும் இராஜ்யத்தைச் சேர்ந்ததாகவும், பார்வதி பரமேச்வரர்கள் கோயில் கொண்டிருப்பதாகவும், நகரத்திற்குச் சமீபமாய் நீர்வளம நிலவளங்களால் செழிப்புள்ளதாகவும் இருத்தல் வேண்டும். அத்தகையவிடத்திலேயே இரஸ வேலைகளைச் செய்து ஸித்தி

பெறலாம். இது இரஸசாலேக்கேற்ற தேசம் ஆம். (2) நகரத்திற்கு அருகில் மனதைக் கவரக்கூடியதான தோட்டமொன்றில் இரஸசாலையை அமைக்க வேண்டும். அத்தோட்டத்திற்குச் சுற்றிலும், நாற் புறமும் வாயிற்படிகளுடன் கூடியதாய் மதிற்சுவர் இருக்கவேண்டும்; அச்சாலே வெகு விஸ்தாரமாகவும், இரம்யமாகவும், போதியவளவு பெரிதான பெரிய சாளரங்கள் அமைக்கப்பெற்றதாகவும், நிருமிக்கப்படவேண்டும். அதற்கு அருகில், ஸமமாகவும் நல்ல வெளிச்ச முடையதுமாக இரஸமண்டபம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்; அதுவும் நன்கு விசாலமாகவும், அணைவரும் நடமாடக்கூடாது ஏகாந்தமாகவும், கதவும் தாழ்ப்பாளும் அமைக்கப் பெற்றதாகவும் இருக்கவேண்டும்; அவ்விடத்தில் தரையானது மேடுபள்ளமில்லாமல் ஸமமாகவும், கெட்டியாகவும், கண்ணுடிபோல் வழவழப்புடன் பளபளப்புள்ளதாகவும் இருக்கவேண்டும். அதன் மத்தியில் அழகாக ஒரு திண்ணையும் அமைக்கப்படவேண்டும். 13--18.

இரஸலிங்கமும் அதன் பூஜை முறைகளும்.

பொன்சேக்கு மூன்று நிஷ்கப்பிரமாணம்;[1] இரஸேந்திரம்[2] ஒன்பது நிஷ்கப்பிரமாணம்; இவ்விரண்டையும் கூடி விட்டு ஒரு யாமகாலம் ஆட்டவும்; அதைக்கொண்டு ஒரு லிங்கம் செய்யவும்; அந்த லிங்கத்தை ஓர் எனுமிச்சம் பழத்தினுள் அடக்கம் செய்து, காடியுள்ள பாத்திரத்தில் டோலாயந்திரத்தில்[3] ஒரு நாள் எரித்துப் பக்குவம் செய்யவும். அந்த லிங்கத்தை முற்கூறிய மண்டபத்தில் வைத்து முறைப்படி பூஜை செய்யவும்; ஒரு இரஸலிங்கத்தைப் பூஜை செய்தால் ஆயிரங்கோடி லிங்கங்களை அர்ச்சித்த பலன் உண்டு; இரஸலிங்கத்தைத் தரிசிப்பதாலும், பரிசிப்பதாலும் ஸகல பாவங்களும் தீரும்; முத்தியும் பெறலாம்; எனச் சிவபெருமான் கூறியுள்ளார். ஆக்நேய திசையில் 'ஸ்ரீம்' என்று அகோர மஹாமந்திரத்தையும் கூறி இரஸலிங்கத்தைப் பூஜிக்கவேண்டும். பதினெண் புயங்களோடும், ஐந்து முகங்களோடும், மூன்று நேத்திரங்களோடும் கூடியதாகவும், வெண்ணிறமாகவும், நீலநிற கண்டமுள்ளதாகவும், பீடத்தில் ஏறியிருப்பதாகவும், இரஸலிங்கஸ்வரூபம் தோன்றுவதாகத் தியானிக்கவேண்டும். இரஸலிங்கத்தின் மடியில் ஒரு முகத்தோடும், நான்கு கைகளோடும், பொன்னிற வஸ்திரத்தோடும், உருக்கிய தங்கநிறமாய் மஹாதேவியார், வலது கரத்தில் ஜபவடத்தையும் இடது கரத்திற் பாசத்துடன் கூட அபயமுத்திரையையும் தரித்துக் கொண்டு வீற்றிருப்பதாகவும் தியானம் செய்ய வேண்டும். 'வாங்மாயா ஸ்ரீ: காமராஜ சக்திபீஜம். ரஸாங்குசாயை

1. நிஷ்கம்—சுமார் 32—குன்றுமணி யெடை.
2. இரஸேந்திரம்—முதல் அத்தியாயத்தில் ஐந்துவித ரஸங்கள் என்னும் தலையங்கம் பார்க்க.
3. டோலாயந்திரம்—9-ம் அத்தியாயம் பார்க்க.

ஸ்வாஹா; த்வாதசாம்சைவ[1] ஜ்ஞேயா வித்யா ரஸங்குசா' என்னும் மந்திரமோதி ஸுகந்தங்கள், புஷ்பம், அக்ஷதை முதலியவற்றைக் கொண்டு தேவீபூஜையைச் செய்யவும். இரஸசாலையின் கீழ்த்திசையில் நந்தீச்வரரையும், தென்திசையில் ப்ருங்கீச்வரரையும், மேற்கில் மஹாகாலேச்வரரையும், வடதிசையில் குளீசேச்வரரையும் பிரதிஷ்டைசெய்து, ஒவ்வொருவருக்கும் பிரணவத்தை முதலிலும், நம: என்பதை முடிவிலும் வைத்து நாமமந்திரங்களைக் கூறி[2] பூஜிக்க வேண்டும். இவ்வாறு ஆங்கு இரஸலிங்கத்தின் பொருட்டு இரஸலிங்கார்ச்சனையை நாள்தோறும் செய்யவேண்டும். இவ்விதம் சிவபெருமான் கூறிய இரஸவித்தையை முற்கூறிய விதிகளின்படி, ஜாதகனுக்கு, குரு மிகவும் மனங்குளிர்ந்து அனுக்கிரஹ பூர்வகமாய் உபதேசிக்கவேண்டும். சிறந்த நக்ஷத்திரத்தில், நல்ல முகூர்த்தத்தில் நீர் நிரம்பிய கும்பமொன்றை பொன் இரத்தினங்கள் கனிகள் ஆகியவற்றுடன் கூடியதாய் இரஸசாலையில் இரஸலிங்கத்தின் முன்னிலையில் ஸ்தாபிக்கவேண்டும்; அக்கும்பத்தின் மேல் சிறந்த வஸ்திரத்தைச் சுற்றவும்; ஸுகந்தம், புஷ்பம், அக்ஷதை, தூபம், நைவேத்யம் முதலியவற்றால் பக்தியுடன் அதைப் பூஜிக்கவும். பூஜையின் முடிவில் முக்கோணவடிவமான ஹோமகுண்டத்தில் எள்ளு, நெய், பாயஸம், சதகுப்பி முதலியவற்றின் புஷ்பங்கள் ஆகியவற்றைக் கொண்டு அகோரமந்திரத்தையும், இரஸாங்குசமந்திரத்தையும் ஓதி ஹோமம் செய்யவும். அதன் முடிவில் சிஷ்ய அழைக்கவேண்டும்; அவன் காலிரீ தேவதையின சக்தியைப் பெற்றவனுகவும், இரஸஸித்தி பெறுவதிற் பற்றுள்ளவனுகவும் இருக்கவேண்டும். இவ்வித சக்தியைப் பெற்ற சிஷ்ய சிறந்த குருவினிடம் தீக்ஷையைப்[3] பெறவேண்டும். சுத்தமாக ஸ்நானம் செய்து வந்த சிஷ்யனை முற்கூறியபடி மந்திரத்தினுல் பரிசுத்தமான கும்பஜலத்தினுல் அபிஷேகம் செய்து வைத்து, அகோரவித்தையையும் அங்குசவித்தையையும் சிஷ்யனுக்கு உபதேசிக்கவேண்டும. அவரவரது சக்திக்கியன்றவளவு சிஷ்யன் குருவுக்கு தக்ஷிணையும் அளிக்கவேண்டும். குருவின் கட்டளைப்படி அகோரமந்திரத்தையும்,[4] இரஸாங்குசமந்திர

1 இரஸாங்குச வித்யை—"ஓம், ஐம், ஸ்ரீம், க்லீம், ஹ்ரீம் ரஸாங்குசாய நம:" எனுகிற பன்னிரண்டு அக்ஷரங்களடங்கிய மந்திரம். அல்லது ஓம், காமராஜ சக்தி பீஜரஸாங்குசாயை நம:.

2. "ஓம் நந்தீச்வராய நம:, ஓம் ப்ருங்கீச்வராய நம:, ஓம் மஹாகாலாய நம: ஓம் குளீராய நம:" என்றவாறு.

3. இரஸதீக்ஷை—இரஸத்தை ஸம்ஸ்காரம் செய்யு முறைகளுள் பட அதற்கான மந்திர தந்திராதிகளைச் சிஷ்யனுக்கு உபதேசிக்கும் சடங்கு.

4. அகோர மந்திரம்—"ஓம், ராம், ஹ்ரீம், ஹ்ரூம், அகோரதர, ப்ரஸ்புட ப்ரஸ்புட, ப்ரகட ப்ரகட, கஹ கஹ, சமய சமய, ஜாத ஜாத, தஹ தஹ, பாதய பாதய, ஓம், ஹ்ரீம் ஹ்ரைம், ஹ்ரௌம், ஹ்ரூம், அகோராய, பட்."

த்தையும் தனித்தனியே இலக்ஷம் முறை ஜபிக்கவும். முடிவில் த்ரிகோண ரூபமான குண்டத்தில் ஜபத்தின் எண்ணிக்கையிற் பத்தி லொரு பாகம் தடவைகள் ஜாதிப பூக்களை த்ரிமதுரத்தில் [1] நனைத்து நனைத்து ஹோமம் செய்யவேண்டும். இறுதியில் முற்கூறிய காளி நீ கன்னிகையைக் கொண்டு இரஸ லிங்கத்துக்கு அரச்சனை செய்விக்கவும். இதை யெல்லாம் நிறைவேற்றிய பின் இரஸ சாலையிற் பிரவேசிக்கலாம். 19—42.

இரஸசாலை பரிசுத்தமாகவும், மெழுகப்பெற்றதாகவும், பெரிய திண்ணையுள்ளதாகவும் இருக்கவேண்டும். அத்

இரஸ சாலையில் இரஸாதிகளை வைக்கும் முறை.

திண்ணையில் லிங்காரத்தைக்கொண்டு இரண்டிரண்டு முழம் விஸ்தீர்ணமுள்ளவையாய் வட்டமான ஆறு கோணங்கள் வரையவும்; திண்ணைக்கு வெளியிலும் அவ்விதமே எட்டு வட்டங்களை வரைக அத்திண்ணைக்கு நான்கு வாயிற்படிகளமைத்து, ஒவ்வொரு வாயிலிலும் நான்கு கோணங்களான இரேகைகளுக்கிடையில் தாமரை தளங்கள் நான்கு வரைக. அனைத்துக்கும் இடையில் கர்ணிகை இருக்குமிடத்தில் கல்வத்தை வைக்கவும்; அக்கல்வம் இரும்பாற் செய்யப்பட்டு, பொன்னுலாகிய இரேகைகளைப் பெற்றிருத்தல் நலம். அக்கல்வத்தில் நூறு பலம், அல்லது ஐம்பது பலம், அல்லது இருபத்தைந்து பலம் இரஸத்தைச் சேர்த்து, இரஸலிங்கத்துக்குச் செய்தது போலவே பூஜை செய்யவும். (1) வஜ்ரம், வைக்ராந்தம், வஜ்ராப்

இரஸ சக்திகள்.

ரகம், காந்த லோஹம், டங்கணமென்னும் வெங்காரம், பூநாகஸத்துவம் ஆகிய இவ்வாறும் இரஸ சக்திகள் எனப்படும்; இவற்றை முறையே முன் வரையப்பட்ட சக்கிரத்தில் ஆறு மூலைகளில் வைத்து பூஜிக்கவும். (2) கந்தகம், தாளகம், அன்னபேதி, மனச்சிலை, கங்குஷ்டம்,

உபரஸங்கள்.

ஸௌராஷ்ட்ரம்ருத்திகை, இராஜ வர்த்தம் [2], கைரிகமென்னும் காவி ஆகிய இவ்வெட்டும் உபரஸங்களாம். இவற்றை முற்கூறிய சக்கிரத்தில் முறையே கீழ்த்திசையிலுள்ள தளம்முதற் கொண்டு ஈசான திசை வரையிலுள்ள எட்டு திக்குகளிலுமுள்ள தளங்களில் வைக்க வேண்டும். (3) இரஸகம், விமலம், ஸ்வர்ண

மஹாரஸங்கள்,

மாக்ஷிகம், சபலம், பால் துத்தம், இரஸாஞ்ஜனம், லிங்கம், மயில்துத்தம் என்பவை மஹாரஸங்களாம். இவற்றைச் சக்கிரத்தின் மூனையிலுள்ள எட்டு தளங்களின் மூனைகளிலும் கிழக்கு மூனையாரம்பித்து ஈசான மூலையிலுள்ள தளம் வரையில் முறையே வைத்துப் பூஜிக்கவும். (4) பிறகு கிழக்கு வாயிலில் ஸ்வர்ணத்தையும் வெள்ளியையும் வைக்கவும்; தாம்பம்

1. த்ரிமதுரம்—மூன்று இனிப்புகள்: அவை:—தேன், சர்க்கரை, நெய்.—இராஜ நிகண்டு. "மதுத்ரயம்" என்றும் கூறப்படும்.

2. இராஜாவர்த்தம் இரத்தினங்களைச்சேர்ந்ததாயிருந்தும், இரஸவித்தி முறையில் இது உபரஸங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

ஈயம் இவற்றைத் தெற்கு வாயிலிலும், வங்கம் காந்தம் இவ்விரண்டையும் மேற்கு வாயிலிலும், முண்டம் தீக்ஷ்ணம் இவற்றைவடக்கு வாயிலிலும் வைத்து, இவ்வனைத்

அஷ்டலோஹங்கள்.

தையும் அகோரமந்திரத்தைக்கொண்டும் இரஸாங்குச மந்திரத்தைக்கொண்டும் பூஜிக்கவேண்டும். (5) வாயிற்படிக்கு வெளியில் அடியில் வரும் பொருட்களையும் கருவிகளையும் வைக்க

இரஸகர்மத்தில் உதவும் கருவி முதலியன.

வேண்டும்:—பிடம்,[1] காஞ்சிக மென்னும் காடி, யந்திரங்கள்,[2] க்ஷாரங்கள்,[3] மண்கள்,[4] இலவணங்கள், கோஷ்டிகள்,[5] மூஷைகள், வங்கநாளம்,[6] உமி, தழல், காட்டுவறட்டிகள், துருத்தி, பலவகைக் குறடுகள், அம்மி, கல்வங்கள், உரல், தட்டான் வைத்துக்கொள்ளும் கருவிகள், எல்லாவிதமான நிறைகளோடுகூடிய பலவகைத் தராசுகள், மண்மரம்-செம்பு உலோஹம் இவற்றாலாகிய பலவகைப்பாத்திரங்கள், திவ்யமான ஔஷதிவர்க்கங்கள்,[7] இரஞ்ஜக[8] ஸ்நேஹரசக்ருகள்[9] ஆகியவைகளாம்; இவற்றையெல்லாம் பஞ்சாக்ஷர மென்னும் மூலமந்திரத்தினால்[10] பைரவதேவதையையும் ஆங்கு பிரதிஷ்டை செய்து பூஜிக்க வேண்டும். அப்பொழுது இரஸகர்மத்தில்

1. பிடம்—இரஸத்தை ஜாரணம் செய்வதற்குபயோகமான க்ஷாரரூபமான சரக்கு. "வெங்காரத்தைப் பலாசம் பட்டையின் சாற்றில் நூறுமுறை பாவனை செய்யவும்; இது அக்நிமுகபிடம் எனப்படும்; இது எல்லாவற்றையும் ஜாரணம் செய்ய உதவும்" என்று இரஸேந்திரசிந்தாமணி. பிடம் பலவகைப்படும்.

2. யந்திரங்கள்—9-வது அத்தியாயத்திற் கூறப்படுபவை.

3. க்ஷாரங்கள்—ஸர் ஜக்ஷாரம், டங்கணக்ஷாரம், யவக்ஷாரம்.

4. "புற்றுமண், ஓட்டடை, காவிக்கல், செங்கல், உப்புமண் ஆகிய இவ்வைந்தும் பஞ்ச மிருத்திகைகள் எனப்படும்."

5. கோஷ்டிகள்—10 வது அத்தியாயம் பார்க்க.

6. வங்கநாளம்—நெருப்பை ஊதுவதற்கான ஒருவித கருவி.

7. ஔஷதிவர்க்கங்கள்—ஜீவநீயாதிகணங்களைச் சேர்ந்த மூலிகைகள் முதலியன.

8. இரஞ்ஜகம்—நிறமுண்டுபண்ணும் வஸ்துக்கள்; "மஞ்ஜிஷ்டி, பலாசு, கருங்காலி, செஞ்சந்தனம், அலரி, தேவதாரு, ஒருவித மட்டிப்பால் போன்ற பிசினுண்டாகும் ஸரளதேவதாரு, மஞ்சள், மாமஞ்சள், மற்றுமுள்ள சிவந்த புஷ்பங்கள் இவற்றைச் செவ்வரக்குக் குழம்பால் ஆட்டி, தைலம் காச்சவும். அத்தைலத்தினால் பீஜம் முதலியதற்குச்சாய மேற்றலாம்." என்று இரஸேந்திரசிந்தாமணி.

9. ஸ்நேஹரசம்—சரக்குகளுக்கு ஸ்நிக்தத்தத்துவம் என்னும் எண்ணெய்ப் பசையை யுண்டாக்கும் சரக்குகள்.

10. மூலமந்திரம்—'வாக், மாயா, ஹ்ரீம், க்ஷேம், க்ஷ்மம்' என்பது பஞ்சாக்ஷர மூலமந்திரம் என்று கூறப்படுகிறது.

ஸித்திபெற்ற ஸகல ஸித்தர்களுடையவும் அடியில் வரும் நாமங்களைச் சங்கீர்த்தனம் செய்யவேண்டும்:—வியாளா சார்யர்,[1] சந்திரஸேநர், ஸுபுத்தி,[2] நரவாஹனர், நாகார்ஜுனர், இரத்னகோஷர்,[3] ஸுராநந்தர், யசோதனர், இந்திரதூமர்,[4] மாண்டவ்யர், சர்ப்படி,[5] சூரஸேனர், ஆகமர்,[6] நாகபுத்தி,[7] கண்டர், காபாலிகர், காமாரி,[8] தாந்த்ரிகர்,[9] சம்பு, லங்கர்,[10] லம்படர், சாரதர்,[11] பாணஸுரன்,[12] முனிச்ரேஷ்டர்[13], கோவிந்தர், கபிலர், பலி[14] ஆகிய இவ்வனைவரும் இரஸ ஸித்தியைப் பெற்று மிகவும் தேஹமோக்ஷபலமும் பெற்றவர்; பூதங்களையும் வென்று வசப்படுத்தியவர்; சிரஞ்ஜீவிகளாயிருந்து, இன்பத்தி லாழ்ந்தவராய் உலகமெங்கும் ஸஞ்சரிப்பவர்; இவ்விருபத்தேழு ஸித்தர்களும் இரஸஸித்தி யளிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள்; வணங்கி வழிபாடு செய்வதற்கேற்றவர். இந்த நாம ஸங்கீர்த்தனத் திற்குப் பிறகு சிரத்தையுடன் இரஸபூஜை செய்யவேண்டும். பின்னர் இஷ்டதைவங்களையும் தொழுதுக் களிப்புறச் செய்ய வேண்டும். இவ்வாறு இரஸசாலையில் ஸகலத் திரவ்யங்களையும் ஒழுங்காகச் சேமித்து வைத்து, இரஸோத்ஸவத்தை நிறைவேற்றவேண்டும்; அத்சிருஷ்டா இரஸஸாதந வேலையில் எத்தடங்கலும் உண்டாகாமற் செய்யக் கூடியதா யிருப்பதோடு, இஷ்டஸித்தியடையவும் பயன்படும். அப்படிக்கின்றி, விஷயமறியாமல் ஒருவன் இரஸஸம்பந்தமான மந்திரதீக்ஷையில்லாமலும் குருபதேசமின்றியும் இரஸக்கிரியையைச் செய்ய விரும்பினால் அவன் பெரு முயற்சி செய்தும் அதில் ஸித்திபெறமாட்டான். ஆகவே எம் முயற்சி செய்தேனும் சாஸ்திரத்திற் கூறிய வண்ணம் இரஸக் கிரியையைச் செய்யவேண்டும்:43—66.

இருபத்தேழு ஸித்தர்கள்.

1. வியாளா சார்யர்—வியாளர் அல்லது வியாடி.
2. ஸுபுத்தி—கோமுகர் என்றும் கூறப்படுவர்.
3. இரத்ன கோஷர்—இரத்ன கோசர்.
4. இந்திர தூமர்—இந்திரதர்.
5. சர்ப்படி—ஹரி.
6. ஆகமர்—ஆதிமர்.
7. நாகபுத்தி—நாகபோதி.
8. காமாரி—காபாலி.
9. தாந்த்ரிகர்—ஸாத்விகர்.
10. லங்கர்—லங்கேசர்.
11. சாரதர்—விசாரதர்.
12. பாணஸுரன்—பாஸ்கரர்.
13. முனிச்ரேஷ்டர்—பிரம்மா.
14. பலி—மத்தர்.

இரஸவித்யையைக் கற்க விரும்புபவர் பிடம்[1] முதலான உபாயங்களைக் கசடறத் தெரிந்து கொள்வதிற் பெரிதும் முயற்சியுள்ளவராயிருக்கவேண்டும்; குருமார்களையடுத்து வித்யையைக்கற்கவேண்டும்; அத்தொழிலுக்கு அவச்யமான அதிகாரத்தை அரசாங்கத்தினிடமிருந்து பெற்றிருந்தால்தான் அவர் நன்கு விளங்குவர். இரஸ வித்யையைத் தவிர்த்து வேறு எப்பணியிலும் அவர் கருத்தைச் செலுத்தக் கூடாது; இரஸக் கிரியைகளை நன்கு நிறைவேற்றப்போதுமான திரவ்ய வான்களாகவும், அத்தொழிலைச் செய்வதற்கு ஜனங்களால் வேண்டப்பெற்றவராகவும் இருத்தல்வேண்டும்; இரஸாதிகளின் பரிமாணங்களையும், பக்குவ முறைகளையும், அவற்றிற்கு அவசியமான யந்திரங்களையும் நன்கறிந்து அவற்றைப் பிரயோகிப்பதில் திறமையுள்ளவராகவும், எல்லா ஔஷதங்களையும் பக்குவம் செய்து உபயோகிப்பதிற் சமர்த்தர்களாகவும் இருக்கவேண்டும். கிழத்தனம்-மரணம்-வியாதிகள் முதலான பீடைகளினின்றும் மீட்டு மனிதரைக் கரையேற்றி வைக்கும் பிரபாவமுள்ள[2] பாதரஸமானது முற்கூறிய குணமுள்ளவருக்கே ஸித்தியைத் தருமன்றி வேறு வகையிற் பயன்தராது. 67.

இரஸஸித்தி பெறுவதற்கான யோக்யதைகள்.

(1) இரஸசாஸ்திரத்தை அந்தணர்களுக்கு தர்மத்தின் பொருட்டும், க்ஷத்திரியர்-வைசியர் இவர்களுக்கு விருத்தியின் பொருட்டும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கும் உபதேசிக்க வேண்டும். (2) இரஸ வித்தையைத் தேன்றியவாறு அனைவருக்கும் வெகு பஹிரங்கமாகக் கூறுவதால் அச்சாஸ்திரத்தின் மஹிமை குன்று மாகையால், கூடுமானவரையில் அதை கோப்யமாக வைத்திருப்பது நலம். (3) ஔஷதமும் அப்படியே; ரோகிகளும், வேறு பலரும் அறிய ஔஷதங்களைச் செய்வதும், சிகித்ஸைகளை நிறைவேற்றுவதும் உசிதமல்ல; அப்படிச் செய்வதால் ஔஷதாதிகளுக்குள்ள வீர்யம் பெருமையுறாது. 68—71.

இரஸ சாஸ்திரோபதேசத்திற்குப் பாத்திரமானவர்கள்.

1. பிடம்—இதைப் பற்றி 8-ம் அத்தியாயம் பார்க்க.

2. "இரஸமானது மனிதருக்கு நேரிடும் பலவகையான பிணிகள், கிழத்தனம், மரணம் இக்காரணங்களால் உண்டாகும் பயத்தைப் போக்கி, அவர்களைக் கடைத்தேறச் செய்வதால் பாதம் என்று கூறப்கிறது:—இரஸேச்வரதர்சநம்.

ஏழாம் அத்தியாயம்.

இரஸ சாலை[1].

இரஸ சாலை அமைக்கப்பட வேண்டிய வகை.

வெயிற் காற்று முதலியவைகளாலுண்டாகக் கூடிய எவ்வித நிலையாபத்துகளுக்காத சிறந்ததோர் இடத்தில் இரஸ சாலையை நிருமிக்கவேண்டும். எல்லா மூலிகைகளும் கிடைக்கக் கூடியதாகவும், சிறந்த நிலைமைகளுள்ளதாகவும், மிகச் சுத்தமாய் மனோஹரமானதாகவும் அவ்விடம் இருக்கவேண்டும்; இரஸ சாலைக்கு உபயோகமான ஒரு தோட்டத்தில் அதன் வடதிசையிலாவது, ஈசான்ய திக்கிலாவது, கிழக்குப் பக்கத்திலாவது வெகு விமர்சையாக அச்சாலை அமைக்கப்படவேண்டும்; அதில் அவசியமான அகில சரக்குகளும் கருவிகளும் பாத்திரம் முதலிய மற்றெல்லா உபகரணங்களுமே சேமித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். 1, 2.

இரஸசாலையில் எதெது எவ்வெவ்விடத்தில் அமைக்கப்பட வேண்டுமென்பது.

இரஸ சாலையின் கிழக்குப் பக்கத்தில் இரஸ பைரவனை[2] ஸ்தாபிக்க வேண்டும்; தென் கிழக்கு மூலையில் அக்கினியின் உதவியைக் கொண்டு செய்யவேண்டிய காரியங்களுக்கு[3] வஸதிகளை அமைக்கவேண்டும்; தெற்குப்பக்கத்தில் உடைப்பது - இடிப்பது - குத்துவது முதலான கல்லுரல் கல்வம் முதலியதிற் செய்யும் வேலைகளுக்கு இடமேற்படுத்தவேண்டும்; தென்கிழக்கில் சஸ்திரகர்மங்களுக்கும்,[4] மேற்கில் கழுவுதல் முதலியதற்கும், வடமேற்கில் சோஷணமென்னும் உலர்த்துவது முதலான வேலைகளுக்கும், வடக்கில் வேதநகாரியத்திற்கும்,[5] வடகீழ் மூலையில் பக்குவ முறைகளால் முடித்துச் சித்தம் செய்யப்பட்ட ஸகல சரக்குகளையும் ஔஷதாதிகளையும் சேர்த்து வைப்பதற்கும் வஸதிகள் அமைக்கப் படவேண்டும். 3—4½.

இரஸாதிகளைச் சித்தம் செய்வதற்கு அவசியமான ஸகல வஸ்துக்களையும் இரஸ சாலையிற் சேர்த்து வைக்கவேண்டும். அவை

1. முன் அத்தியாயத்தில் சுருக்கமாகக் கூறிய இரஸசாலை விஷயம் இச்சாஸ்திரத்தில் முக்கியமெனக் கருதி, அதே விஷயம் சிறிது விஸ்தரித்து இவ்வத்தியாயத்தில் விளக்கப் படுகின்றது.

2. இரஸ பைரவன்—முன் அத்தியாயத்திற் கூறிய இரஸலிங்கம்.

3. அக்னியிலுலாகவேண்டிய காரியங்கள் — உலோஹாதிகளை உலையிற் காய்ச்சுதல், உருக்குதல், புடமிடுதல் முதலியன.

4. தாது லோஹாதிகளை வெட்டுவது, அறுப்பது, இழைப்பது முதலிய வேலைகளுக்கு உதவும் கருவிகள் இதனால் குறிக்கப்படுகின்றன.

5. வேதநம்—வேதனை யென்றும் வழங்கப்படும்; இரவேஷந்திரம் தாக்குவதாலே தாம்ராதிகள் சுய குணம் விட்டு ஸ்வர்ணாதிகளின் தன்மையைப் பெறுமாறு செய்யும் முறை வேதநம் எனப்படும்.

யாவன :—ஸத்வபாதந கோஷ்டி[1], காரகோஷ்டி, பூமி கோஷ்டி,[2] சலத் கோஷ்டி,[3] பல அளவான ஜலத்ரோணிகள், இரண்டு தூருத்திகள், ஊதுவதற்கு மூங்கிற் குழல் ஒன்று, இருப்புக் குழல் ஒன்று, பொன்-இரும்பு-வெண்கலம-செப்பு-கருங்கல் ஆகியவற்றுலான குடங்கள், சர்மகாரர்[4] உபயோகிக்கும் வெவ்வேறு வகையான கருவிகள், சிறிதும் பெரிதுமான அரைக்கும் உரல்கள், அவற்றிற்கு வேண்டிய சிறியவையும் பெரியவையுமான குழவிகள், கல்வங்கள், வட்டமான வாயையுடைய பெரிய கல்வங்கள், அதேவிதமான இரும்புக் கல்வங்கள், தப்தகல்வங்கள்[5], அவ்விதமே அரைக்கவும் இழைக்கவும் வேண்டிய குழவி முதலிய கருவிகள், மிகவும் துட்பமான ஜீரணக்கணக்கான கண்ணறைகளையுடைய சல்லடை, நன்றாகப் பதனிட்டுச் சுத்தமாயுள்ள அகன்ற தோல் துண்டுகள், சலாகைகள், புரிமணைகள் ஆகியவைகள் இரஸசாலையில் எப்பொழுதும் இருக்கவேண்டியவை. சல்லடை மூன்று வகைப்படும். அவற்றின் தன்மைகளாவன—(1) மூங்கிற் சிம்புகளால் வேயப்பட்டு, மெல்லிய கயிறுகளால் கட்டப்பட்டுள்ளது ஒருவித சல்லடை; இது கனத்த வஸ்துக்களைச் சலிப்பதற்கு உபயோகமானது. (2) மூங்கிற் சிம்புகளைக் கொண்டே சூர்ணங்களைச் சலிப்பதற் கேற்றவாறு சிறிய துவாரங்களுள்ளதாய் மற்றொரு சல்லடையும் செய்யப்படுவதுண்டு. (3) சரக்கொன்றை, இலவன், இளமூங்கில் இவற்றின் கொடிபோன்ற மிகவும் மெல்லிய கழிகளால், சுற்றிலும் நாலு அங்குலம் உயரமுள்ள வரம்புகள் கட்டப்பட்டு, அவற்றைப் பதனிட்ட ஆட்டுச் சர்மத்தினுல் சுற்றிக் கட்டவும்; அவ்வரம்பு உயரத்தில் ஒரு பிடி அளவாகவாவது இருக்கலாம்; அதற்கு அடியில் குதிரை வால் மயிர்களைக் கிட்டக் கிட்ட அழுத்தமாகப் பின்னியாவது, நல்ல வஸ்திரத்தைத் தைத்தாவது அடித்தலம் நிருமிக்கப்படவேண்டும். மிகவும் ஸூக்ஷ்மமான-மிருதுவான சூர்ணம் வேண்டுமானுல் இவ்விதச் சல்லடையினுல் சலிக்கவேண்டும். மேலும் மூலைகள் செய்வதற்குபயோகமான மண், உமி, பஞ்சுகள், எரிமுட்டைகள்,

மூன்றுவிதச் சல்லடைகள்.

இரஸசாலையில் இருக்க வேண்டிய வஸ்துக்கள்.

1. ஸத்வபாதந கோஷ்டி—அங்காரகோஷ்டி; 10-ம் அத்தியாயம் பார்க்க.

2. பூமி கோஷ்டி—பாதாள கோஷ்டி; 10-ம் அத்தியாயம் பார்க்க.

3. சலத் கோஷ்டி—எவ்விடத்திலும் எடுத்துப் போகக்கூடிய அரைக்கும் கும்மட்டி.

4. சர்மகாரர்—தோல் வேலை செய்பவர்; செம்மான்கள்.

5. தப்தகல்வம்—கல்வத்தின் கீழ் தீயிட்டு மருந்தைச் சுடப்பண்ணிக் கொண்டே அரைக்க உதவக்கூடிய சிறந்த கல்வங்கள். இதற்குச் சாதாரணமாய் இரும்பாலாகிய கல்வங்கள் உபயோகிக்கப்படுவது வழக்கம்.

மாவகைகள்; மூன்றவித ஔஷதங்கள் முதலியன. தாதுத்திரவ்யங்களாலும், பிராணி ஸம்பந்தமான வஸ்துக்களாலும், மூலிகைகளாலும் ஆகிய மூன்றுவித ஔஷதங்கள்; கட்டைக் கரி, பசுவின் காலால் பொடியாக்கப்பட்டு உலர்ந்துள்ள சாணத்தூள், மணல், மாக்கல்; (1) கட்டைகள் எரிந்த பிறகு சாம்பராவதற்கு முன் நீர் ஊற்றி அணைக்கப்பட்ட கரிகள் சிகித்ரங்கள் எனப்படும். (2) கட்டைகள் எரிந்துவருகையில் நீரில்லாமல் மண் முதலியதில் அடக்கம் செய்து அணைத்துவிட்டால் அதிலிருந்துண்டாகும் கரிகள் கோகிலங்கள் என்று

கரி முதலியன.

குப்பிகள் கிண்ணங்கள் முதலியன. வழங்கப்படும். பிஷ்டகம், சகுணம், சாணம், உபலம், உத்பலம், கிரிண்டம், உபலஷாடி ஆகியவை உலர்ந்த சாணத்தின் பெயர்களாம். பீங்கான், இருப்பு, மண், கவடி இவற்றாலாகிய குப்பிகளும், அவற்றாலாகிய கிண்ணங்கள் ஆகியவையும் வேண்டும். (1) கூபிகா, குபிகா, கோலா, கிரிண்டிகா என்பவை குப்பியின் பர்யாய நாமங்களாம். (2) அங்ஙனமே சஷகம், கடோரீ, வாடிகா, காரிகா, கஞ்சோலீ, கராஹிகா என்பவை ஔஷதாதிகளைப் பருகுவதற்கான கிண்ணங்களின் பெயர்களாம். மேலும் மூங்கிற் சிம்புகளாலாகிய சுளகுகளும், சிறிய முறங்களும், மற்றும் கூடை முதலியனவும் தேவை. சிறிய சங்குகளும், கத்திகளும், உறிகளும், மற்றும் அவ்விடத்தில் உபயோகப்படுபவையும் சேர்த்துவைக்கப்படவேண்டும். பாலிகைகள்,[1] கூர்ச்சங்கள்,[2] காய் முதலியவை நறுக்க வேண்டிய கருவிகள், மற்றும் சாலையைக் கூட்டிச் சுத்தமாக்குவது முதலாக, இரஸ பாகங்களைச் செய்து முடிப்பதீறுகவுள்ள எல்லாக் காரியங்களுக்கும் தேவையான வஸ்துக்களும் கருவிகளும் அவ்விடத்தில் ஆயத்தமாயிருக்க வேண்டும். இவ்வனைத்தையும் இரஸாங்குசமந்திரத்தினால் ஜபித்துச் சேமித்துவைக்க வேண்டும். 5—22½.

இரஸசாலைக்கு வைத்தியர்கள் பரிசாரகர் முதலானோர்.

(1) இரஸசாஸ்திரத்தைக் கசடற வுணர்ந்தவர்களும், வைத்திய நிகண்டுவை யறிந்துள்ளவரும், சாஸ்திரதத்துவங்களை விரித்துரைக்க வல்லவரும், எல்லாத் தேச பாஷைகளைக் கற்றவருமான வைத்தியர்களையும் இரஸஸாதகர்கள் உதவிக்குப் பெறவேண்டும். (2) அவ்விடத்திற் பரிசாரகர்கள் சுறுசுறுப்பாகவும், பரிசுத்தமாகவும், மிகத் திறமைசாலிகளாகவும், தேர்ந்த வலிமையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். (3) அறநெறிதவறாதவனுகவும், ஸத்தியம் பேசுபவனுகவும், படிப்பிற்றேர்ந்தவனுகவும், சிவன்-விஷ்ணு இவர்களைப் பூஜிப்பவனுகவும், தயை கூர்ந்தமனத்தினனுக

1. பாலிகை—வாயகன்ற பாத்திரம்.

2. கூர்ச்சம்—குச்சு.

வும், பத்மஹஸ்தனுகவும்[1] முள்ளவனுக்கே இரஸவைத்தியத்திற் பிரவேசமளிக்கலாம். (4) எந்தவைத்தியனது ஹஸ்தத்தில் பதாகை, குப்பம், தாமரைப்பூ, மத்ஸியம், தனுஸ் ஆகியவற்றைப் போன்ற இரேகைகள் இருக்கின்றனவோ, மேல்நோக்கிய

அம்ருத ஹஸ்தன்.

ரேகை அநாமிகையெல்லும் ஆழிவிரலுக்கு அடிப்புறம் வரையில் நீண்டிருக்கின்றதோ அவன் அம்ருத ஹஸ்தன் எனப்படுகிறன். (5) தைவபிதழ்பவன், தயையில்லாதவன், உலோபி, குருவினிடம் வித்தையைக் கற்காதவன், கையில் கறுப்புக் கோடுகளைப் பெற்றவன் ஆகிய

தக்கத்தஹஸ்தன்

இத்தகைய வைத்தியன் தக்கத்தஹஸ்தன் எனப்படுகிறன்; அவனுக்கு இரஸாதிக்ரியைகளில் அதிகாரமளிக்கக்கூடாது. 23—27½.

நிதிஸாதகம், பலிஸாதகம், இரஸாயகம், தாதுவாதம், ஔஷதிக்கிரஹணம்.

(1) பூதங்களோட்டுவதற்கும் அடக்குவதற்கும் உபயோகமான மந்திரங்களை எவர் அறிந்திருக்கின்றனரோ அவர்களை நிதிகளைக்[2] கண்டுபிடிக்கும் வேலையில் நியமிக்கவேண்டும். (2) தேஹபலவிமையிற் சிறந்தவர்களும், ஸத்தியம் பேசுபவர்களும், சிவந்த நேத்திரங்களைப் படைத்துக் கறுத்த தேஹத்துடன் கூடியவர்களாய் பூதங்களை விரட்டும் வித்தையைக் கற்றவர்களாயுமுள்ள மனிதரையே பலிஸாதக வேலையில்[3] நியமிக்க வேண்டும். (3) உலோபிகளல்லாதவர்களாயும், ஸத்தியம் பேசுபவராகவும், தேவர்களையும் அந்தணரையும் வணங்கித்தொழுபவராகவும், இந்திரியங்களை அடக்கியாளுபவராகவும், பத்திய போஜனமுபயோகிப்பவராகவுமுள்ள பிணியாளருக்கே இரஸாயநம் அளிக்கப்படவேண்டும். (4) செல்வவான்களாகவும், கொடையாளிகளாகவும், ஸகல உபகரணங்களைப் பெற்றவராகவும், குருவின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டவராகவுமுள்ள மனிதரையே தாதுவாத வேலையில்[4] நியமிக்கவேண்டும். (5) ஒவ்வொரு மூலிகையின் பெயரை அறிந்தவர்களாயும், பரிசுத்தர்களாயும், வஞ்சகெஞ்சல்லாதவராகவும், அநேக தேசபாஷையுணர்ந்தவராகவுமுள்ளவர்களையே மூலிகைகளைக் கிரஹித்துவருவதற்கு நியமிக்கவேண்டும். 28—32.

1. பத்மஹஸ்தன்—அம்ருதஹஸ்தன். அத்தகைய வைத்தியன் கையால் செய்யப்படும் சிகித்ஸை ஆரோக்கியத்தையும் ஆயுளையும் விருத்தி செய்யும் எனக் கருதப்படுகிறது.

2. நிதி—புதையல்; இங்கு இரஸேந்திர மென்கிற பாதரஸம் இருக்கும் கனியே முக்கியமாக நிதி யெனப்படுகிறது.

3. பலிஸாதகம்—தேவீபூஜை முதலியதற்கான பிராணிகளைச் சம்பாதித்தல் என்று ஒரு வியாக்யானம் எழுதுகிறது. ஆனால் முதலில் இரஸஸாதகம் கூறப்பட்டிருப்பதால் அடுத்தாற்போல பலி யென்பதற்கு கந்தகம் என்பதுதான் ஏற்ற பொருளாகும்.

4. தாதுவாதம்—இரஸவாதம்.

(1) பரிசுத்தமாகவும், ஸத்தியமே பேசுபவராகவும், ஆஸ்திகராகவும், தாராளமான கொள்கையுடன் தீர்களராகவும், எதிலும் எச்சந் தேஹமுமில்லாத மனத்தையுடையவராகவுமுள்ள ஸாதகர்களுக்கே எப்பொழுதும் இரஸஸித்தியுண்டாகும். (2) இரஸத்தைப் பதினெட்டு வகையான ஸம்ஸ்காரமுறைகளால் ஸித்தம் செய்தால், அவ்வித இரஸமே ஸித்தி பெறுவதற்கு மிகவும் ஏற்றதாகும். ஒரு முறை இரஸஸித்தியேற்படாவிடில் மறுமுறை அதை நிறைவேற்றிக்கொள்ள முயல வேண்டும். (3) இரஸஸித்தி பெற்ற மனிதன் கொடையாளியாவான்; இன்பங்களை யனுபவிப்பான்; அவன் வேறெவரிடமும் இரக்கமாட்டான்; நிழத்தனத்தைப் பெறுன்; உலகத்தோரால் கொண்டாடப்படுவான்; நல்ல தேஹகாந்தியைப் பெறுவான்; எப்பொழுதும் ஆரோக்கியமாக வாழ்வான். 33—35.

இரஸ ஸித்தியும் பலனும்.

எட்டாம் அத்தியாயம்.

இரஸ பரிபாஷைகள்.

ஸோமதேவன் என்னும் ஸித்தராலும், வேறு ஸித்தர்களாலும் இயற்றப்பட்டுள்ள இரஸசாஸ்திரத்திலிருந்து, இரஸத்தைப் பக்குவம் செய்வதற்கான முறைகளைப் பற்றிய பரிபாஷைகள் இவ்வத்தியாயத்தில் மொழியப்படும். 1.

இரஸ பரிபாஷை கூகுவுரை.

தன்வந்தரிபாகம்:—ஜாரணாதி முறைப்படி பக்குவம் செய்து ஸித்தமான இரஸௌஷதங்களிலும், தைலங்களிலும், கிருதங்களிலும் பாதி பாகத்தையும், லேஹ்யத்தில் எட்டிலொருபாகத்தையும், முறைப்படி பக்குவம்செய்து முடிக்கப்பட்ட உலோஹௌஷதங்கள்-சூர்ணங்கள்-குளிகைகள் ஆகியவற்றில் எழிலொரு பகுதியையும் அவற்றைத் தனக்காகப் பக்குவம் செய்யும் வைத்திய சிரேஷ்டனுக்குப் பிணியாளியானவன், அவ்வைத்தியனை தன்வந்தரியாகக் கருதி அளித்துவிடவேண்டும்; அக்கொடை அப்பிணியாளிக்கு முற்றிலும் ஆரோக்கிய சுகத்தையளிக்கும்; அவ்வித்தம் வைத்தியருக்குக் கொடுக்கப்படும் ஔஷதபாகம் தன்வந்தரி பாகம்[1] என்று வழங்கப்படும். 2.

ருத்ரபாகம்:—(1) ஔஷதங்களுக்கான சரக்குகளைப் பிணியாளிக்காக விற்பனை செய்யும் வர்த்தகனிடமிருந்து, விற்பனையிற் கிடைத்தத் தொகையிலிருந்து வைத்தியன் பதினொன்றிலொரு பகுதி திரவ்யத்தைப் பெறலாம்; அது ருத்ரபாகம் என்று மொழியப்படுகிறது. (2) ருத்ராம்சத்தை அதிகமாகக் கிரஹிப்பதும்,

1. தன்வந்தரிபாகம்—இது அச்வினீகுமாரபாகம் என்றும் கூறப்படும். வைத்தியர்களிடம் தன்வந்தரியின் அம்சம் உண்டென்று நம்பப்படுவதால் இப்பெயர் வந்தது.

அப்படிக் கிரஹித்த ஔஷதத்தை உலோபியான எவ்வைத்தியன் தகாத விதமாகச் செய்து கொடுக்கின்றானே, அவன் நம்பிக் கைத்திரோஹம் செய்தவனுவான். 3, 4.

கஜ்ஜலி.

தாதுத்திரவ்யங்களையும், கந்தகம் முதலியவற்றையும் திரவப் பொருள் சேர்க்காமலே, வெகு மிருதுவாக அரைக்க மைமாதிரியாக அவ்வௌஷதத்தும் மாறும்; கறுப்பாக மாறிய இக்கூட்டுச்சரக்கு கஜ்ஜலி யென்று[1] கூறப்படும். 5.

இரஸ பங்கம்.

முற்கூறிய சரக்குகளை ஏதேனும் திரவப்பொருள் கூட்டி அரைக்கச் சாந்துபோல் வருமானால் அது இரஸ பங்கம்[2] எனப்படும். 6.

பிஷ்டி.

(1) அரை நிஷ்கப் பிரமாணம் கந்தகம்; அதில் பன்னிரண்டிலொரு பாகம் இரஸம். இவ்விகிதப்படி எடுத்து கல்வத்திலிட்டு, அதைக் கடும் வெயிலில் வைத்து, இரஸத்தின் மீது சிறுகச் சிறுக கந்தகத்தைச் சேர்த்துக்கொண்டே அரைக்க, அவை வெண்ணெய் போன்று சாந்தாகும். அதற்கு பிஷ்டி யென்று பெயர். (2) இரஸத்தையும் கந்தகத்தையும் கல்வத்திலிட்டு, பால் விட்டு நன்றாகக் குழைத்து அரைத்தால் அவை சாந்து போலாகும்; இதையும் பிஷ்டி யென்று[3] சிலர் கருதுவர். 7, 8.

பாதரபிஷ்டி.

இரஸம் ஒரு பங்கு, ஸ்வர்ணம் அதில் நாலிலொரு பங்கு; இவ்விரண்டையும் கூட்டி நன்றாக அரைத்து பிஷ்டியைப் போலாக்கவும்; இது பாதரபிஷ்டி யெனப்படும்.[4] இது உத்தமமான இரஸஸித்திக்கு உபயோகமாகும். 9.

ஹேம க்ருஷ்டி, தார க்ருஷ்டி.

(1) வெள்ளியையாவது ஸ்வர்ணத்தையாவது இரஸ-கந்த காதிகளுடன் கூட்டி பஸ்மமாகுமாறு பக்குவம் செய்யவும்; பிறகு பலமுறை பாதரயந்திராதிகளைக் கொண்டு அந்த லோஹங்களை உத்தாபனம் செய்ய[5], அவை முறையே தாரக்ருஷ்டி யென்றும், ஹேம க்ருஷ்டி யென்றும் கூறப்படும். (2) பொன்னை உருக்கி, அதனுடன் ஹேமக்ருஷ்டியைக் கூட்டினால், அப்பொன்னின் நிறம் குறையாமலாட்டாது. (3) ஹேமக்ருஷ்டியினால் ஆகிய பீஜத்திரவ்யமானது[6] இரஸத்தைச் சென்னிறமாக்கவல்லது. 10, 11.

1. கஜ்ஜலி—மை யென்ற பொருள்.

2. இரஸ பங்கம்—சாந்து போன்ற இரஸம் அல்லது இரஸக் குழம்பு என்ற பொருள்.

3. பிஷ்டி—மீர்விட்டுப் பிசைந்த மாப்பண்டம் போன்றது எனப் பொருள்.

4. ஊர்த்வபாதந யந்திராதிகளால் இதைப் பக்குவம் செய்ய வேண்டியிருப்பதால் இப் பெயர் வந்தது.

5. உத்தாபனம்—இதே அத்தியாயத்தில் பிறகு கூறப்படுகிறது.

6. பீஜத்திரவ்யம்—இதே அத்தியாயத்தில் பிறகு விவரிக்கப்படுகிறது.

தாம்ரத்தையும் தீக்ஷ்ண லோஹத்தையும் உருக்கி, கந்தகம் கலந்த எலுமிச்சஞ் சாற்றில் பலமுறை[1] ஊற்றவும்; அவ்விதம் உருக்கி யெடுத்த இந்த மிச்ரலோஹம் வரலோஹம் எனப்படும். 12.

வரலோஹம்.

அவ்வரலோஹத்தினுல் பொன்னுக்குச் சென்னிறம் அதிக முண்டாக்கலாம்; அவ்விதம் செய்த ஸ்வர்ணம் ஹேம ரக்தி. ஹேம ரக்தி யென வழங்கப்படும். அந்த ஹேம ரக்தியை உருகிய ஸ்வர்ணத்திலிட்டால், அது அப்பொன்னுக்கு விசேஷமான சிறந்த நிறத்தைக் கொடுக்கும். இது வெள்ளிக்கும் சென்னிறத்தைக் கொடுக்கும்; பீஜத்திரவ்யத்திற் குள்ள சிவப்பையும் உண்டுபண்ணும். 13, 13½.

ஹேம ரக்தி.

முற்கூறிய முறைப்படியே தார ரக்தியையும் செய்யலாம்; அது பார்ப்பதற்கும் மிகுஹரமாயிருக்கும். வெள்ளி யைச் சிவப்பாக்குந்தன்மையுள்ளது. பீஜத்திரவ்யங்க ளையும் அவ்வாறு செய்யக்கூடியதாயிருக்கும். 14.

தார ரக்தி.

(1) பஸ்மமாகச் செய்த அல்லது கட்டப்பட்ட இரஸத்தினு லாவது, பஸ்மமான வேறு உலோஹத்தினுலாவது பக்குவம் செய்து லித்தமான மற்றொரு உலோ ஹமானது வெண்மையையாவது மஞ்சள் நிறத்தை யாவது அடைந்தால், அவ்விரண்டும் முறையே சந்திரதளம் என்றும், அக்னிதளம் என்றும் வழங்கப்படும். (2) ஏதேனும் மூலிகைத்திரவங்களில் பாவனை செய்து கட்டப் பெற்ற இரஸத்துடன் வேறொரு உலோஹத்தைக் கூட்டி, அல்லது அவ்வி தமே பாவனை செய்து பஸ்மாதி முறையிற் பக்குவம் செய்த ஒரு உலோஹத்துடன் மற்றொரு உலோஹத்தைக் கூட்டி, அவ்விதம் கூட்டப்பெற்ற உலோஹத்திற்கு வெண்மை நிறத்தையும், மஞ்சள் நிறத்தையும் உண்டுபண்ணுவதும் சந்திரதளம் என்றும் அக்னி தளம் என்றும் கூறப்படுவதுண்டு. 15, 16.

சந்திரதளம் அக்னிதளம்.

(1) தாம்ரத்தை மாகூகிகம் கூட்டி பஸ்ம ரூபமாகச் செய்யவும்; பிறகு அதை உத்தாபகம் செய்யவும்; இவ்விதம் பத்துமுறை அதை பஸ்மமாக்கி உத்தாபகம் செய்து எடுக்கவேண்டும். சுத்தி செய்த நாகத்தையும் அவ்விதமே பஸ்மமாக்கி பிரித்தெடுக்கவும். இப்படி யெடுத்த ஒவ்வொரு உலோஹமும் நான்கு பலம்; இவ்விரண்டையும் கூட்டி நீலாஞ்ஜநம் சேர்த்து பஸ்மம் செய்து முன்போல் ஏழுமுறை உத்தாபநமுறை யிற் சுத்தம் செய்யவும். இவ்விதம் செய்து முடிவில் எடுக்கப்பட்ட ஒரு வித உலோஹத்தை சுல்பநாகம்[2] என்பார்கள். (2) சுல்ப

சுல்ப நாகம்.

1. பலமுறை யென்பதற்கு ஏழுதடவை யெனக் கருத்தென்று போதிநீ வியாக்யாநம்.

2. சுல்பநாகம்—தாம்ரம் கலந்த ஸீஸம் என்று பொருள்.

நாகத்தின் உபயோகம்: சுல்பநாகத்தினுல் பக்குவம் செய்தெடுத்த இரஸத்தை வாயிலிட்டு அடக்கிக்கொண்டிருந்தால் ஒரு மாஸத் தில் எவ்விதமான மேஹரோகமும் தீரும்; அத்துடன் நன்கு பத் திய முறையில் உணவுகளை யுண்டுவந்தால் ஒரு வருஷத்தில் அம் மனிதன் நரை திரைகள் நீங்கி, பார்வையும் வெகு தீக்ஷ்ணமடைந்து, தேஹபுஷ்டியையுமடைந்து, பல வகையிலும் ஆரோக்கியமுள் ளவனுவான். 17—20.

இரண்டு உலோஹங்களைக் கடுந்தீயிட்டு ஊதி, பிரத்தியேக மாக உருக்கி, அப்பால் இரண்டையும் ஒன்றுகச் பிஞ்ஜரி. சேர்த்து, ஏதேனும் திரவத்தில் ஊற்ற, அது வெண் பசுமை நிறமடைந்தால், அந்த உலோஹம் பிஞ்ஜரி யென்று[1] கூறப்படும். 21.

பதினறு பங்கு வெள்ளி, பன்னிரண்டு பங்கு தாம்ரம், ஆக இவ்விரண்டையும் ஒன்றுகக் காய்ச்சி யுருக்கி சந்திரார்க்கம். யெடுக்க, அக்கூட்டு லோஹம் சந்திரார்க்கம் என்று கூறப்படுகிறது. 22.

பக்குவம் செய்யவேண்டிய அல்லது பஸ்மம் செய்யவேண்டிய ஒரு லோஹம் காய்ந்து வருகையில், அதில் வங்க நிர்வாபணம். நாளம் என்னும் குழலின் வழியாய் மற்றொரு உலோ ஹத்தை ஊற்றினுல் அது நிர்வாபணம் எனக் கூறப்படும். பக்குவம் செய்யப்படவேண்டிய வஸ்துவில் நிர்வாபணத் திரவ்யத்தைச் சம அளவாகச் சேர்க்கவேண்டும். ஆவாபம்[2] செய்யவேண்டியபோது அவ்விதம் ஆவாபம் செய்யப்படும் வஸ்து அவ்வவ்விடத்தில் கூறப் படும் அளவை யனுஸரித்து ஆவாபம் செய்யப்படவேண்டும். 23, 24.

ஒரு உலோஹத்தை மாரணம்[3] செய்தபின், அதைத் தண்ணீரில் போட்டால் அதன்மேல் அப்பஸ்மம் மிதக்கும்; வாரிதரம். அவ்வித உலோஹ பாகத்தை வாரிதரம் என்பார்கள். நன்கு பக்குவமான உலோஹபஸ்மத்தை விரல்களாலெடுத்துத் தேய்த்துப் பார்க்க, அது அவ்விரல்களின் இரேகைகளுக்குள் படிந்து ஒட்டினுல், அது சிறந்த ம்ருதலோஹம் எனக் கருதப்படு கிறது 25, 26.

1. பிஞ்ஜரி யென்றுல் பசுமை நிறமுடையது என்று பொருள்.

2. ஆவாபம்—இதை அத்தியாயத்தில் பிறகு விவரிக்கப் படுகிறது.

3. மாரணம்—பஸ்மமாக்குதல்; பஸ்மமுறையே மாரணம் என்றும், ம்ருதியென்றும் வழங்கப்படும். வாரிதரம் என்றுல் நீரில் மிதப் பது என்று பொருள்.

வெல்லம், குன்றுமணி, வெங்காரம், தேன், நெய், இவற்றுடன் கூட்டினால் ஏந்த பஸ்மம் ஒன்றுகக் கலந்துவிடுமோ,[1] அக்னியிலிட்டு ஊதினால் எது பஸ்மமாவதற்கு முன் னிருந்த உலோஹாதிநிலைமையைப் பெற மாட்டாதோ, அப்பஸ் மத்திற்கு அந்த நிலைமை அபுநர்ப்பவம்[2] எனப்படுகின்றது. 27.

அபுநர்ப்பவம்.

உலோஹம் எதுவும் முற்கூறிய இலக்ஷணங்களுள்ளதாய் பஸ்மமான பின்பு, அதிற் சிறிதளவு தண்ணீரில் போட்டு, அப்பஸ்மத்தின்மீது தான்யம் முதலிய ஏதேனும் சிறிது கனமான வஸ்துவை வைக்க, அத்துடன் அப்பஸ்மம் தண்ணீரின்மீது ஹம்ஸம் போல மிதக்க வேண்டும்; அவ்விதம் மிதக்கும் தன்மையைப் பெற்றால் அதை ஊநமம் என்பார்கள். 28.

ஊநமம்.

நன்கு பஸ்மமான உலோஹத்தை வெள்ளியுடன் கூட்டி, உலை யிலிட்டு நன்றாக ஊதினால், அது அவ்வெள்ளியுடன் நன்றாகக் கலந்துவிடவேண்டும்; அப்பொழுது அந்த உலோஹம் முற்கூறியவாறு அபுநர்ப்பவமாய்விடுகிறது; அந்நிலை மையை 'நிருத்தம்' என்று வழங்குவர். 29.

நிருத்தம்.

முற்கூறிய நிர்வாபணக்கிரமத்தை அனுஸரித்து சில விசேஷ முறைகளில் ஸாத்யலோஹத்துக்குப்[3] பிரகேஷ்ப லோஹாதிகளின்,[4] அந்தந்த நிறமும், மெதுத்தன் மையும், பலவகையான மாறுபட்டத் தோற்றமும் உண்டாம்; அது பீஜம் என்று கூறப்படும். இதையே வைத்தியர் உத்தரணம் என்பார்கள். 30, 30½.

பீஜம் அல்லது உத்தரணம்.

ஒன்றோடொன்று கலந்துள்ள இரண்டு உலோஹங்களுள் ஒன்றை வெங்காரத்தினால் ஊதி யெரித்து அழித் துப்போடும் முறையானது 'தாடகம்' என்று வழங்கப்படுகின்றது. 31.

தாடகம்.

1. தேன், நெய், குன்றுமணி, வெங்காரம், குங்குலியம் ஆக இவ்வைந்து சரக்குகளும் உலோஹாதிகளைக் கலக்க உபயோகமானவை யென்றும், இவற்றிற்கு மீத்திரபஞ்சகம் எனப் பெயரென்றும் இர ஸெந்திரஸாரம். இங்கே குங்குலியத்திற்கு பதில் வெல்லம் குறிக்கப் படுகிறது.

2. அபுநர்ப்பவம்—மீண்டும் சுய ரூபத்தை யடைய முடியாமை யென்பது பொருள். இதற்கும் நிருத்தம் என்பதற்கும் விசேஷ பேத மில்லை.

3. ஸாத்யலோஹம்—பஸ்மாதிகளாகப் பக்குவம் செய்யவேண் டிய உலோஹம்.

4. பிரகேஷ்பலோஹம்—உருக்கிய உலோஹத்தில் வேறு உலோஹங்களைச் சேர்த்தால், அவ்விதம் சேர்க்கப்படுவது பிரகேஷ்ப லோஹம் எனப்படும்.

அப்ரகத்தைச் சூர்ணம் செய்து, அத்துடன் நெல்லிக் கலந்து, அவ்வனைத்தையும் வஸ்திரத்திற் கட்டி, காடியில் அலசித் தேய்க்க, அவ்வஸ்திரத்தின் கண்ணறை களிலிருந்து, காஞ்ஜிகத்திற் படியும் மிருதுவான அப்ரகப்பொடி 'தான்யாப்ரகம்' என்று வழங்கப்படும். 32.

தான்யாப்ரகம்.

ஏதேனும் தாதுப்பொருள்[1] க்ஷாரங்கள்[2], அம்லங்கள்[3], திரா வகச்சரக்குகள்[4] இவற்றுடன் கூட்டி, கோஷ்டீயந்தி ரத்திலிட்டு[5] எரிக்கப்படுகையில், அத்தாதுவி லிருந்து, யாதொரு ஸாரம் வெளியாகிறதோ அது 'ஸத்துவம்' என்று கூறப்படுகிறது. 33.

ஸத்துவம்.

குமட்டி யென்னும் கோஷ்டத்தில் கரியைக் குவியலாக நிரம் பவும் போட்டு, அதனுள் மூசையை அமிழ்த்தி, அதை அக்னியிட்டு ஊதிக்கொண்டே வந்தால், அக்கரிக்குவியலானது கிரமமாக அதனுள்ளடங் கிய மூசையின் கழுத்துக்குக் கீழ்வரையில் அடங்கிக் குறையும்; அவ்விதம் குறைவதற்கான செய்முறை 'ஏகதோலீஸகம்' எனப் படுகிறது. 34.

ஏகதோலீஸகம்.

(1) திராவகங்களையும் ஸத்துவபாதங்களையும் செய்வதற்கான வேலைகளில் இலுப்பைக்கட்டைகளும், கருங்காலிக் கட்டைகளும் ஏற்றவை. (2) எளிதில் திரவமாக்க வியலாத திரவ்யங்களை எரிப்பதற்கு மூங்கில் விறகாக உபயோகிக்கலாம். (3) ஸ்வேதகம் என் கிற ஆவியிற் பக்குவம் செய்யும் வேலைக்கு இலந்தங்கட்டையை விற காக உபயோகிப்பது நலம். 35

திராவணதி வேலைகளுக் குரியவிறகுகள்.

ஹிங்குளம் என்கிற லிங்கத்தை இஞ்சிச்சாற்றில் ஆட்டி, அதை வித்யாதரயந்திரத்தில் வைத்து எரித்து, யாதொரு பாதரஸம் இறக்கப்படுகிறதோ அது 'ஹிங்குளாக் ருஷ்டம்' எனப்படுகிறது. 36.

ஹிங்குளாக் ருஷ்டம்.

காம்ஸ்யமென்கிற வெண்கலத்துடன் சிறிதளவு தாளகம் கூட்டி, வங்காளத்திலுள்ள பலமாக ஊதுகையில் அநிலடங்கிய வங்கம் விவரபட்டுப் போகும்; அவ்விதம் வங்கத்திலிருந்து பிரித்தெடுத்த தாம்பரம் 'கோஷ்டாக்ருஷ்டம்'[6] எனப்படும். 37.

கோஷ்டாக் ருஷ்டம்.

1. தாதுப்பொருள் — அப்ரகம், சிலாஜது, அயம், வங்கம் முதலியன.

2. க்ஷாரங்கள்—யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம் முதலியவை.

3. அம்லங்கள்—காஞ்ஜிகம் முதலிய அம்லவர்க்கச் சரக்குகள்.

4. திராவகம்—குன்றுமணி, வெங்காரம் முதலிய திராவகவர்க் கச் சரக்குகள்.

5. கோஷ்டீயந்திரம்—9-ம் அத்தியாயம் பார்க்க.

6. கோஷ்டம்—வெண்கலம். அதிலிருந்து இறக்கப்பட்டது கோஷ்டாக்ருஷ்டம் எனப்படுகிறது.

நீலாஞ்ஜநம் இவற்றுடன் கூடிய நாகத்தைப் பலமுறை பலமாக ஊதி யெரிக்க, அது மிருதுத் தன்மையையும், கருநிறத்தையும் பெறும்; பிறகு எளிதிலும் உருகும்; அவ்விதமெடுத்த நாகம் 'வரநாகம்' என்று வழங்கப்படும். 38.

வரநாகம்.

மாரணம் அல்லது பஸ்மம் செய்த சரக்குக்கு மீண்டும் சுய நிலைமை யுண்டுபண்ணும் முறை 'உத்தாபநா' என்று கூறப்படுகிறது. 38½.

உத்தாபநா.

உருகிய சரக்கை வேறு திரவஸ்துவிற் சேர்க்கும் முறைக்கு 'டாளநம்' எனப் பெயர். 39.

டாளநம்.

முப்பது பலம் நாகத்தை எருக்கம்பால் விட்டு அரைத்துப் புடமிடவும்; இவ்விதமே அவ்வளவு நாகமும் கால்பலமாகக் குறையும் வரையில் புடமிடவேண்டும். அப்பால் அது ஆயிரம் புடமிட்டாலும் குறைவதில்லை. சாஸ்திர பரிசீலனம் செய்த மூத்தோர்கள் இதை நாகத்திலிருந்துண்டான 'சபலம்' என்பார்கள். நாகசபலத்தைப் போலவே வங்கசபலத்தையும் செய்து முடிக்கலாம். முற்கூறிய சபலங்களைப் பரிசித்து அதே கையால் இரஸத்தைப் பரிசிக்க, அந்த இரஸம் வேறு எவ்வஸ்துவின் சேர்க்கையுமில்லாமலே கட்டப்பட்டுப்போம்; ஆனால் அவ்விதம் கட்டப்பட்ட இரஸம் இரஸவாத வேலைகளில் உபயோகப்படும்; இரஸாயனமாக அது உபயோகப்படுவதில்லை. இந்த சபல முறைகள் கர்ப்பணர் என்னும் ஸித்தர் பரிசீலனை செய்து கூறியவை.[1] 40—43.

நாக சபலம். வங்கச பலம்.

நாகப்பூச்சிகளின் மலத்தைக் கரணித்து, அதைத் தண்ணீர் கொண்டு நன்றாகக் கழுவி யெடுத்து, அதிலிருந்து வரும் பஸ்மரூபமான ஸாராம்சத்தை யெடுத்துக் கொள்ளவும்; அது துலக்கமாகக் கருநிறமாகக் காணப்படும்; இதை இரஸவாதிகள் 'தௌதம்' என்பார்கள்[2]. 44.

தௌதம்.

இரண்டு சரக்குகளைக் கூட்டி, நன்றாக அரைத்து, கும்மட்டியிலிட்டு ஊதும் வேலை 'த்வந்த்வாநம்' எனப் படுகிறது. 44½.

த்வந்த்வாநம்.

1. "நாகத்துடன் ஆறு மடங்கு கபரியைக் கூட்டி புடமிடவும்; அவ்விதம் அறுபதுமுறை புடமிட்டு, அதில் நாலிலொரு பங்கு வெள்ளியைக் கூட்டி வேதந முறைப்படி பக்குவம் செய்ய, அது ஸ்வர்ணமாகும்". "நாகம் நிருத்திதம் க்ருத்வா கர்ப்பரைஷ் ஷட்குணைஸ் ஸஹ, ஷஷ்டிச் சதுர்த்தவேதேந தாரமாயாதி காஞ்சநம்" என்கிறவொரு ச்லோகம் 43-வது ச்லோகத்திற்குப் பிறகு சில புஸ்தகங்களில் காணப்படுகிறது.

2. "விஷ்டாம் பூநாகஸம்பூதாம் ப்ரகூர்ய பஹு-ஃபீர் ஜலை :/ ஸமாஹ்ருத்ய ரஜ : க்ருஷ்ணம் தௌதாக்யம் ரஸவாதிபி :" என்று இதே விஷயமாக வேறொரு ச்லோகமும் கேள்விப்படுகிறோம்.

உருக்கிய பொன்னில் அதுபோன்ற நிறமுள்ள வேறு சரக்கை அதிக அளவாகக் கூட்டியாவது, திராவகவர்க்காதிகளைச் சேர்த்தாவது பொன்னின் மாற்றைக் குறைத்துப்போடும் வேலை இரஸவாதிகளால் 'பஞ்ஜரி'[1] யென்று வழங்கப்படுகிறது. 45½.

பஞ்ஜரி.

வெள்ளியாவது வேறு எந்த உலோஹமாவது அடியிற் கூறப்படும் பதங்கியென்னும் வர்ணகல்கத்தின் சேர்க்கையினால் பொன்னுருவத்தைப் பெறுகிறது; ஆனால் அந்த நிறம் சில நாட்கள் இருந்து அழிந்துவிடும்; இந்த முறைக்கு 'சுல்லகா'[2] எனப் பெயர். 46½.

சுல்லகா.

நன்றாக நெடுநேரம் காய்ச்சிச் சிவப்பாகச் செய்யப்பெற்ற, அல்லது வெகு நேரம் ஊதியுருக்கப்பெற்ற உலோஹத்திலிருந்து சிவந்த நிறமாக வெளியாகும் பிறின் போன்ற ஒருவித வர்ணவஸ்து 'பதங்கீராகம்'[3] எனப்படுகிறது. 47, 48.

பதங்கீராகம்.

உருக்கிய உலோஹம் முதலிய வஸ்துவில் மற்றொரு வஸ்து ஏதேனும் போடப்பட்டால், அது 'ஆவாபம்'[4] என்றும், 'பிரதீவாபம்' என்றும், 'ஆச்சாதகம்' என்றும் வழங்கப்படும். 49.

ஆவாபம்.

ஒரு உலோஹம் உருக்கப்பட்டு, அது அக்கினியில் இருக்கும் போதே எட்டு விநாடிகள் பொறுத்திருந்து, அதன் மீது தண்ணீரை வார்க்கும் முறை 'அபிஷேகம்' என்று கூறப்படும். 50.

அபிஷேகம்.

நன்றாகக் காய்ந்த உலோஹம் முதலியதைத் தண்ணீரில் தோய்க்கும் முறை 'நிர்வாபம்' என்றும், 'ஸ்நபநம்' என்றும் கூறப்படுகிறது. 50½.

நிர்வாபம்.

உலோஹமானது உருகி, நன்றாகச் சுத்தமான நிலைமையில் இருக்கும்போது தான் பிரதீவாபம் முதலியதைச் செய்ய வேண்டும்.—51.

ஆவாபாதிகளுக்கான விதி.

ஔஷத மூஷை முதலியது அடங்கிய அக்கினியானது எப்பொழுது வெண்மையான ஜ்வாலையோடு நன்கு கொழுந்துவிட்டெரிகின்றதோ, அது தான் உலோஹாதிகளிலிருந்து ஸத்துவம் வெளிவரும் தருணமாகும்; ஸத்துவம்

சுத்தாவர்த்தம்.

1. பஞ்ஜரி—அழிப்பது அல்லது குணத்தைக் குறைப்பது என்று பொருள்.

2. சுல்லகா—கில்டு என்று தற்காலம் வழங்கப்படுவது.

3. பதங்கீராகம்—நிறமுண்டுபண்ணும் பதங்கம் எனப் பொருள்.

4. ஆவாபம், பிரதீவாபம்—சேர்ப்பது என்று பொருள்; அதாவது ஒன்றன் மீது வேறொன்றையேனும் தூவுவது அல்லது போடுவது.

5. 'பிரதீவாபம் முதலியது' என்பதால் ஆவாபம், அபிஷேகம், நிர்வாபம் ஆகியவை குறிக்கப்படுகின்றன.

வெளியாகும்போது அக்கினி அல்லிதம் எரியும் நிலைமை 'சுத்தாவர்த்தம்'[1] எனப்படும். 52.

உலோஹாதிகளைத் திரவமாகச் செய்ய அக்கினியை ஊதி வருகையில், உருக்கப்படும் வஸ்துவுக்குச் சமான நிறமுள்ள தாய் ஜ்வாலை தோன்றுமாயின், அது அவ் வஸ்து திரவமாகும் நிலைமையைக் காட்டுகிறது; அந்நிலைமை 'பீஜாவர்த்தம்'[2] எனக் கூறப்படும். 53.

பீஜாவர்த்தம்.

பக்குவம்செய்யப்பட்ட சரக்கு அக்கினியுள்ள அடுப்பு முதலிய நின்மீது இருந்தவாறே, அவ்வக்கினி சிறுகச் சிறுகக் குறைந்து அணைந்தபிறகு ஆறிப்போமானால், அது 'ஸ்வாங்கசீதம்',[3] எனப் படுகிறது. 53½.

ஸ்வாங்கசீதம்.

அக்கினியுள்ள அடுப்பு முதலிய திலிருந்து வெளியிலெடுத்து ஆறிய ஔஷதாதிகள் 'பஹிச்சீதம்' என்று[4] கூறப்படும். 54.

பஹிச்சீதம்.

க்ஷாரங்கள், அம்லங்கள் இவற்றாலாவது, சுத்தி செய்வதற்கான வேறு ஔஷதச்சரக்குகளாலாவது டோலா யந்திரத்திலுள்ள சரக்கைச் சலனப்பது அல்லது பக்குவம் செய்வது 'ஸ்வேதநம்' எனப் படும்.[5] இம்முறையால் ஸ்வேதநம் செய்யப்படும் சரக்குகளிலுள்ள தோஷங்கள் நீக்கப் படும். 55.

ஸ்வேதநம்.

உலோஹாதிகளை ஆங்காங்கு கூறியுள்ள ஔஷதங்களாலும்,[6] எல்லாவிதமான அம்லங்களாலும், காஞ்ஜிகமென்னும் காடியாலும் அரைப்பதற்கு 'மர்த்தநம்' எனப் பெயர்; இவ்விதி மர்த்தநமானது உலோஹாதிகளிலுள்ள வெளியழுக்குகளைப் போக்கும். 56.

மர்த்தநம்.

மர்த்தநத்திற்காகச் சாஸ்திரத்திற் குறித்துள்ள ஔஷதச் சரக்குகளைக் கொண்டு பாதரஸத்தை அரைப்பதால் அதற்குள்ள ஓடுந்தன்மை நீங்கி, அது பிசைந்த மாவைப்போல் கட்டப்பட்டால் அது 'மூர்ச்சநம்' எனப் படும்; இதனால் இரஸத்திலுள்ள வங்க நாகாதி ஸம்பந்தமான கலப்புத் தோஷங்கள் நீங்கும். 57.

மூர்ச்சனம்

1. சுத்தாவர்த்தம்—துலக்கமான ஜ்வாலை எனப் பொருள்.
2. பீஜாவர்த்தம்—பீஜம் என்றால் திராவகமாக்குவதற்கான சரக்கு; அதற்குச் சமான நிறமுள்ள ஜ்வாலை பீஜாவர்த்தம் எனக் கருதப்படுகிறது.
3. ஸ்வாங்கசீதம்—தனக்குத் தானே ஆறுவது.
4. பஹிச்சீதம்—வெளியிலெடுத்த பின்பு ஆறுவது.
5. ஸ்வேதநம்—ஆவியைக்கொண்டு பக்குவம் செய்வது.
6. கஷாயம் முதலிய திரவௌஷதங்கள் இதனால் குறிக்கப்படுகின்றன.

முற்கூறிய மர்த்தநாதிமுறைகளால் உரலத்தில் மாறுத தலடைந்த சரக்கை ஸ்வேதநம், வெயிலில் வைப்பது முதலிய உபாயங்களைக்கொண்டு மீண்டும் சுயத் தன்மைக்குக் கொண்டுவரும் முறைக்கு 'உத்தாபநம்' என்று பெயர்; இது மூர்ச்சநத்தினால் ஏற்படக்கூடிய உருமாறுபாடு முதலியதைப் போக்கும். 58.

உத்தாபநம்.

மர்த்தநம் முதலியதால் இரஸத்தைப் பிஷ்டமாகச்[1] செய்வதால் அது இயற்கையான ஓடுந்தன்மையை யிழந்து கட்டப்பட்டுப் போகிறது; அவ்விதம் ஓடிப் பெருகும் சக்தியைத் தடுத்து இரஸத்தைக் கட்டும் முறையை அறிஞர் 'நஷ்டபிஷ்டி' என்பார்கள். 59.

நஷ்டபிஷ்டி.

இரஸத்தை ஆங்காங்கு கூறப்படும் ஔஷதங்களால்[2] அரைத்து, யந்திரத்திலிட்டு ஆவியாகச் செய்து, அடியிலிருந்து மேற்புறமாகவாவது, மேலிருந்து கீழ்ப்புறமாகவாவது, பக்கவாட்டமாகவாவது இறக்கும் முறை 'பாதநம்' எனப்படுகிறது;[3] இம்முறையினால் இரஸத்திற்கு வங்கம்-நாகம் இவற்றின் ஸம்பந்தமான கஞ்சுகமென்னும் தோஷம் ஒழியும். 60.

பாதநம்.

மர்த்தநாதிகளால் கட்டப்பட்ட இரஸத்தை, அதற்கு இரஸாயநாதி குணங்களை ஆப்யாயநம் செய்வதற்காக[4] இந்துப்பு கலந்த தண்ணீரடங்கிய குடத்தில் மூன்று நாள் வைத்திருப்பதுண்டு; இம்முறைக்கு 'ரோதநம்' என்று பெயர். 61.

ரோதநம்.

முற்கூறிய ரோதநத்தினால் இரஸம் வீர்யத்தை விசேஷமாகப் பெற்று, மீண்டும் அதற்கியல்பான சபலத்தன்மையையும்[5] அடையும்; வீர்யத்தை ஸ்திரப்படுத்தி, சபலத்தன்மையை மாத்திரம் நிவர்த்தி செய்வதற்காக அதை ஸ்வேதநம் செய்வதுண்டு[6]. அம்முறை 'நியமநம்' எனக்[7] கருதப்படும். 62.

நியமநம்.

1. பிஷ்டம்—மிருதுவான பிசைந்த மாப்பண்டம் போன்ற ரூபம்.
2. ஸ்வரஸம், கஷாயங்கள் முதலியவற்றால் என்று பொருள்.
3. மேலே ஆவியாகப் போகச் செய்வது **ஊர்த்வபாதநம்** என்றும், மேலிருந்து கீழ்முகமாக ஆவி ரூபமாயிறக்குவது **அதஃ பாதநம்** என்றும், குறுக்காகக் குழாய் முதலியதால் இறக்குவது **தீர்யக்பாதநம்** என்றும் வழங்கப்படும்.
4. ஆப்யாயநம்—இயற்கைக் குணங்களைச் செழிக்கச் செய்வது; வீர்யத்தை அதிகப் படுத்தல்.
5. சபலத்தன்மை—நிலத்தை நிற்காமல் அசைந்தோடுந்தன்மை.
6. ஸ்வேதநம்—யந்திராத்யாயத்திற்கூறியபடி யந்திரத்திலிட்டு ஆவியினால் பக்குவம் செய்தல்.
7. நியமநம்—நிலையில்லாத் தன்மையைப் போக்கிக் கட்டுதல்.

[ஸர்ப்பாக்ஷி, குன்றுமணி, கற்றுழை, கரிசிலாங்கண்ணி, ஊமத்தை இவற்றின் சாற்றில் இரஸத்தை ஒருநாள் முழியவும் ஸ்வேதநம் செய்ய, அது சபலத்தன்மையை விட்டு, கட்டப்பட்டுப் போம்; அது நியமநமாம். இரஸேந்திர சிந்தாமணி.]

இரஸத்தை தாதுக்கள், பாஷாணம், மூலிகை முதலியவற்றுடன் கூட்டி, அச்சரக்குகளின் வீர்யத்தை இரஸம் கிரஸம் செய்வதன் பொருட்டு [1], ஒரு பாத்திரத்தில் டோலா யந்திரத்தில் வைத்து ஸ்வேதகம் செய்யவேண்டும்; இவ்விதம் செய்யு முறையை 'தீபகம்' என்பார்கள். 63.

தீபகம்.

இவ்வளவு நிறையுள்ள இரஸம், இவ்வளவு நிறை திரவியத்தை கிரஹிக்குமென்று பரிமாணங்களாக்கொண்டு நிர்ணயிப்பதற்கு 'கிராஸமாநம்' என்று[2] பெயர். 64.

கிராஸ மாநம்.

கிராஸத்திற்கு சாரணம், கர்ப்பத்திராவணம், ஜாரணம் என்று மூன்றுவிதமான ஜாரண முறைகள் சாஸ்திரஞ்ஞரால் கூறப்பட்டிருக்கின்றன.[3] இம்மூன்றும் முறையே கிராஸம், பிண்டம், பரிணமம் என்று கூறப்படும்.—65, 65½.

ஜாரணத்ரயம்.

மீண்டும் 'ஸமுக ஜாரணை' என்றும், 'நிர்முக ஜாரணை' என்றும் ஜாரணை இருவகைப் படும். (1) அந்தந்த ஜாரணமுறைக்குக் கூறப்படும் அளவை அனுஸரித்து இரஸத்தில் பீஜத்திரவியத்தைச் சேர்ப்பது நிர்முகஜாரண எனப்படும்[4]. சுத்தமான ஸ்வர்ணமும் சுத்தமான வெள்ளியும் பீஜம் எனப்படும். (2) இரஸத்தில் அதற்கு அறுபத்தினெலொரு பங்கு பீஜத்தைக் கூட்டும் முறை முகம் எனக் கூறப்படும்; இவ்விதம் செய்வதால் இரஸமானது கிராஸத்தில் அதிக நாட்டமுள்ளதாகும்; அதனால் அது முகமுள்ள இரஸம் என்பதாய் ஆகும்; கடினமான உலோஹங்களையும் தனக்குள் சேர்த்துக்கொள்ளும் சக்தி இதனால் இரஸத்திற் உண்டாகும்; இதைத்தான் 'மிருதசாரி' யென்னும் ஸித்தர் ஸமுகஜாரண[5] எனக் கூறுகிறார். 66—69.

---

1. கிராஸம் செய்தல்—மற்றத் திரவியங்களிலுள்ள ஸாராம் சங்கஸ அல்லது வீர்யங்களை இழுத்துக்கொள்ளுதல். [கிராஸமுறைக்கும் இரஸேந்திரசிந்தாமணி முதலியதில் சில அவசியமான சரக்குகளும், முறையும் கூறப்பட்டிருக்கின்றன. "அன்னபேதி, பஞ்சலவணங்கள், வெண்கடுகு, மிளகு, முருங்க விதை, வெங்காரம் ஆகியவற்றைக் கூட்டி அரைத்து, காஞ்ஜிகமென்னும் காடியுள்ள பாத்திரத்தில் டோலாயந்திரத்தில் மூன்று நாள் எரித்துப் பக்குவம் செய்ய, அக்கூட்டுச் சரக்கு ஜாரண வேலைகளில் உதவும்."]

2. இவ்வளவு நிறையுள்ள இரஸம், இவ்வளவு நிறை ஸ்வர்ணத்தை அல்லது வேறு தாதுவைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் என்பதற்கான அளவு 'கிராஸமாநம்' எனப்படுகிறது.

3. சாரணம், கர்ப்பத் திராவணம், ஜாரணம் என்னும் இவற்றைப்பற்றி அடுத்தாற்போல் விவரணம் காணலாம்.

4. நிர்முகஜாரண—முகமற்ற ஜாரண முறை.

5. ஸமுகஜாரண—முகத்துடன் கூடிய ஜாரண முறை.

இரஸத்தை திவ்ய ஓஷதிகளுடன்[1] கூட்டி, பெரிய கோஷ்டியந்திரத்திலிட்டு வைக்க, உலோஹம் முதலிய ஸகலத்தையும் அது கிரஸிக்கும்; இது 'இராகூஸமுகயந்திரம்' எனப்படும். 70.

இராகூஸமுக ரஸம்.

இரஸத்திற்குள்ளே கிராஸம் செய்யவேண்டிய சரக்கைப் போட்டு மறையச் செய்வது 'சாரண' எனப்படும். 70½.

சாரண.

ஆவ்விதம் இரஸத்தினுல் கிரஸிக்கப்பெற்ற சரக்கை இரஸத்தினுள்ளே உருக்கி லயிக்கச் செய்யும்[2] முறை 'கர்ப்பத்ருதி' என்று வழங்கப்படும். 71.

கர்ப்பத்ருதி.

அப்ரகஸத்துவம் முதலியதை[3] வெளியிலேயே[4] உருகச் செய்து இரஸத்தின் ஜாரணத்திற்காக உபயோகிக்கும் முறை 'பாஶ்ய த்ருதி'யாகும். 72.

பாஶ்ய த்ருதி.

(1) பாத்திரம் முதலியதில் ஒட்டிக்கொள்ளாமை, உருகி திரவமாயிருத்தல், இயற்கையினும் அதிக பளபளப்புடன் கூடியிருத்தல், அதிக இலகுத்தன்மை, இரஸத்துடன் ஒன்று சேரமை ஆகிய ஐந்தும் த்ருதியின் இலகூணங்களாம். (2) ஸ்வர்ணம் முதலிய உலோஹங்களும், இதர தாதுக்களும் அவசியமான ஓஷதச் சரக்குகளைச் சேர்த்து அக்கினியிலிட்டு ஊதப்பட்டு நீர்க்கும்; அவ்விதம் திரவமாக நிலைத்திருக்கும் நிலைமை 'த்ருதி' எனப்படுகிறது. 73, 74.

த்ருதி லகூணம்.

பிடம்[5] யந்திரம்[6] முதலியவற்றின் பிரயோகத்தினுல் இரஸமானது உருகி திரவமாயுள்ள கிராஸவஸ்துவாகவே மாறுதலடைந்தால், அம்முறை 'ஜாரண'

ஜாரண.

---

1. ஜீவநீயகணத்தைச் சேர்ந்த ஓஷதிகள். திவ்ய ஓஷதி யென்பதற்கு மனச்சிலையென்றும் பொருளுண்டு; ஆகவே மனச்சிலையோடு கூட்டி யென்றும் பொருள் கூறலாம். மஹௌஷதி யென்றால் ஸ்வர்ண மாக்ஷிகத்திற்கும் பெயர்.

2. லயிக்கச் செய்தல்—ஸூக்ஷ்மமான அம்சங்களாகப் பிரித்து மறையச் செய்தல்.

3. ஸ்வர்ண ஸத்துவம், வெள்ளி ஸத்துவம் முதலானவையும் 'முதலியது' என்பதால் குறிக்கப்படுகின்றன.

4. கர்ப்பத்ருதிக்குச் செய்வதுபோல இரஸத்தினுள்ளேயே உருகச் செய்யாமல், அடுப்பு முதலியதில் வைத்து முதலில் உருக்கி, அப்பால் இரஸாதிகளில் சேர்க்கவேண்டும் என்பது வெளியில் என்பதற்குப் பொருள்.

5. பிடம்—அடுத்து வரும் விவரணத்தைப் பார்க்க.

6. யந்திரம்—9 ம் அத்தியாயத்திற் கூறப்படும் கோஷ்டியந்திரம் முதலியது.

எனப்படுறது.[1] இதில் பல வேறு வகையான முறைகளுண்டு. 75.

சூரங்களாலும்[2], அம்லங்களாலும்[3], கந்தகம் முதலானவற்றாலும்[4], மூத்திரங்களாலும்[5], இலவணங்களாலும் இரஸத்திற்குக் கிராஸமாக வேண்டிய சரக்கை ஜீர்ணம் செய்வதற்காகச் செய்யப்படும் முறைக்கு 'பிடம்' எனப்[6] பெயர். 76.

பிடம்.

நன்முகப் பக்குவம் செய்து ஸித்தமான பீஜாதாதுக்கள் முதலியவற்றை[8] ஜாரணம் செய்வித்து, இரஸத்திற்குப் பசுமை நிறம் முதலான நிறமாறுபாட்டையுண்டுபண்ணும் முறை 'இரஞ்ஜநம்' என்று வழங்கப்படும். 77.

இரஞ்ஜநம்.

இரஸமானது தைலம் நிரம்பிய யந்திரத்தில்[9] இருக்கும்போது லோஹத்திற்கு விசேஷ வேதையை விருத்தி செய்வதற்காக அதிற் பொன் முதலியதைச் சேர்க்கும் முறையானது 'ஸாரணை' என்று மொழியப்படுகின்றது. 78.

ஸாரணை.

---

1. "கெட்டியான பொன்முதலியவற்றை கிராஸம் செய்வித்து, பந்தநமான இரஸத்திற்கு மீண்டும் இயற்கைத் தன்மையை யுண்டு பண்ணும் முறை 'ஜாரணை' எனப்படும். ஆனால் இம்முறை பாதகம், காளநம் என்பவற்றைச் சேர்ந்ததல்ல" என்று இரஸேந்திர சிந்தாமணி.

2. சூரங்கள்—அபாமார்க்க சூரம், யவசூரம் முதலியன.

3. அம்லங்கள்—எலுமிச்சம்பழத்தின் அம்லம், காடி முதலியன.

4. கந்தகம், தாளகம், மனச்சிலை முதலியன.

5. மூத்திரங்கள்—பசு, ஆடு முதலியவற்றின் மூத்திரங்கள்.

6. இலவணங்கள்—இந்துப்பு, அட்டுப்பு, கடலுப்பு முதலியன.

7. "முத்துசிப்பி, சங்கு, கோழிமுட்டையோடு இவற்றைச் சூர்ணம் செய்து, கஜபுடத்தில் பக்குவம் செய்யவும். பிறகு நன்முக அதைப் பொடித்து, கவஸாரமும், கந்தகமும் கூட்டி மல்லயந்திரத்தில் வைத்து புடமிடவும், இவ்விதம் ஏழு முறை செய்து எடுத்து, இதை உலோஹங்களைத் திரவமாச்குவதற்கு உபயோகிக்கலாம்; இது சிறந்த 'பிடம்' என்னும் முறையாகும். இரஸ வைலைகளில் மிகவும் உபயோகமானது."—இரஸேந்திரசிந்தாமணி. [மல்லயந்தீரம்—இரண்டு மடக்குகளை ஒன்றன் மேலொன்றாகச் சேர்த்து செய்யப்படும் புடயந்திரம்.] "ஸர்ஜக்ஷாரம், இந்துப்பு, அன்னபேதி, படிக்காரம் இவற்றை அம்லவர்க்கங்களாலும், பசுமூத்திரத்தினாலும் ஆட்டி, புடமிடவும்; இவ்விதம் ஏழு புடமிட்டு எடுக்கப்படுவது அப்ரகஜாரணத்திற்கு உபயோகமான பிடம்.'—இரஸ ஸாரம்.

8. பீஜதாதுக்கள்—பொன், வெள்ளி முதலியவை.

9. தைலம் நிரம்பிய அந்த மூஷை யென்னும் கருவியில் என்று பொருள். [பசுவின் மூலபோன்று நீண்டிருக்கும் குழல் அந்த மூஷை].

பொன்முதலியதாக மாற்றப்படவேண்டிய உலோஹத்தை திரவ்யத்தில், வியவாயிகுணமுள்ள[1] முலிகைச் சரக்குக் கூட்டிய இரஸத்தை யிடும் முறைமையை 'வேதம்' என்று அல்லிஷயமறிந்தவர் கூறுவர்.

வேதமுறைகள்.

அவ்வேதமுறையும் அநேக விதமாம்: அவை லேபம், லேஹபம், குந்தம், தூமம், சப்தம் என்பனவாம். (1) வேதந குணம் ஏற்றுப் பட்ட இரஸத்தை உலோஹத்தின்மேல் பூசி, அதனாலேயே அந்த உலோஹம் பொன்னாகவோ வெள்ளியாகவோ மாற்றப்படும்; ஆனால் இவ்விதம் பூசிய பின்பு ஒருமுறை அவ்வுலோஹத்தை வராஹபுடத்தில்[2] எரித்தெடுக்கவேண்டும். இது லேபநம் எனப்படும். (2) பொன் முதலியதாக மாற்றப்படவேண்டிய உலோஹத்தை உருக்கி, அதில் முற்கூறிய விதமான இரஸத்தைப் பிரக்ஷேபம் செய்தால், அது க்ஷேபவேதம் எனப்படும். (3) மூர்த்திபத்தமாயுள்ள இரஸத்தைக் குட்டினால் எடுத்து, உருகியுள்ள உலோஹத்தினுள்—அதைப்பொன் முதலியதாக மாற்றுவதற்காகச் சேர்க்கும்முறையானது குந்தவேதம் என்று வழங்கப்படுகிறது. (4) அக்னியிலிடப்பெற்ற இரஸமானது புகையுருவமாகக் கிளம்பும் போது, அதனால் அக்னியும் புகையும்; அப்புகையில் உலோஹத்தையிட்டு, பொன் முதலியதாகச் செய்யப்படும் முறை தூமவேதம் எனப்படுகிறது. (5) வேதகத்திற் கேற்றவாறு பக்குவம் செய்த இரஸ குளிகையை ஒருவன் வாயில வைத்துக்கொண்டு, ஒரு கிறு உலோஹத்துண்டின்மேல் துப்புவதால் அல்லது ஊதுவதால் அவ்வுலோஹத்தைப் பொன்னாகவோ வெள்ளியாகவோ மாற்றும் முறை சப்தவேதம் என்று கூறப்படுகிறது. 79—84.

இரஸத்தைச் சேர்த்துப் பக்குவம் செய்து முடிக்கப் பெற்ற உலோஹம் முதலிய சரக்கிலுள்ள அழுக்கு முதலியதைப் போக்கவும், அதன் நிறத்துக்கு அதிக பிரகாசமளிக்கவும் தகுந்த யாதொரு முறையுண்டோ, அது 'உத்காடநம்'[3] எனப் படுகிறது. 85.

உத்காடநம்.

---

1. வியவாயி—உட்கொண்ட எச்சரக்கின் வீர்யம் அல்லது குணம் உடலெங்கும் முதலில் பரவி, பிறகு குடலில் பக்குவமடைகின்றதோ அச்சரக்கு 'வியவாயி' எனப்படுகிறது.

2 மூலத்தில் 'ஸௌகரபுடம்' என்றிருக்கிறது. அதற்கு வராஹபுடம் என்பது பொருள். ஆனால் வேறொரு புஸ்தகத்தில் 'ஸௌரகம்' என்று பாடம் காணப்படுகிறது; அதன்படி 'ஸூர்யபுடம்' என்று பொருள் கூறவேண்டும்.

3, உத்தாபநம் என்றும் இது கூறப்படும். ['முறைப்படி பக்குவம் செய்து முடித்த சரக்கைக் கொண்டு இரஸத்தின் தோஷங்களைப் போக்கவும், அதற்குச் சிறந்த நிறத்தை விருத்தி செய்யவும் பிரயோகிக்கப்படும் முறையை உத்காடநம் என்பார்கள்' என்றும் வேறொரு பாடமுண்டு.]

இரஸம் முதலிய சரக்குகளை ஒரு மட்பாத்திரத்தில் சேர்த்து, உஷ்ண வீர்யமுள்ள க்ஷாரங்களையும் அம்லங்களையும் அதிற்கூட்டி, அப்பாண்டத்தின் வாயைச் சீலை மண் செய்து வெகு நன்றாக மூடி, பூமிக்குள் புதைத்து வைக்கும் முறை 'ஸ்வேதநம்' என்று [1] வழங்கப்படுகிறது. 86.

ஸ்வேதநம்.

ஒரு பாத்திரத்தில் இரஸத்தைச் சேர்த்து, அதில் ஏதேனும் குறிப்பிட்ட முறையிற் கூறிய மூலிகைகளைக் கூட்டி, ஸ்வேதநத்திற்குக் கூறியபடி பாத்திரத்தின் வாயை நன்றாக மூடி, மிருதுவாகத் தீயிட்ட அடுப்புக்குள் அப் பாத்திரத்தை வைப்பதற்கான முறை 'ஸந்தியாஸம்' எனப்படுகிறது. 87.

ஸந்தியாஸம்.

ஸ்வேதநம், ஸந்தியாஸம் என்கிற இவ்விரண்டு முறைகளும் இரஸத்தின் குணங்களையும், பிரபாவத்தையும் உண்மையில் அதிகப்படுத்துகின்றன; அதன் குணங்களைச் சீக்கிரம் தேஹத்தில் பரவச்செய்யக் கூடிய சக்தியையும் இரஸத்திற்கு இவை உண்டு பண்ணுகின்றன.[2] 88.

ஸ்வேதந - ஸந்தியாஸங்களின் பயன்.

ஸோமதேவன் என்னும் ஸித்தர் இரஸசாஸ்திரமாகிற மஹா ஸமுத்திரத்திலிருந்து, வஸ்துக்கள் விஷயமான் சிறந்த அறிவாகும் ஒளியை யளிப்பவையான இப் பரிபாஷைகளாகிற இரத்தினங்களைத் திரட்டியெடுத்து, வெகுப் பிரயாஸத்துடன் இந்த நாமாவளிபாகிற மாலையைத் தொடுத்தார்; இதை ஒவ்வொரு வைத்திய சிரேஷ்டரும், அறிவாளிகளின் ஸபையிற் பெருமை பெறுவதற்குக் கண்டபூஷணமாகச் செய்துகொள்ளக்கடவர்.[3] இரஸவாதம் செய்பவருடை, இரஸத்தைக் கொண்டு பல வேறு முறைகளைப் பக்குவம் செய்பவரும் இவ்வத்தியாயத்தை நன்கு உருப்போட்டு வரப்படுத்திக் கொண்டால், எவ்வித இரஸலீலையிலும் கலக்கமுறமாட்டார். 89, 90.

இரஸ பரிபாஷை - முடிவுரை.

---

1. மட்பாண்டத்தினுள் ஔஷதச் சரக்குகளைச் சேர்த்து மூடி, பூமியினுள் புதைத்து வைப்பதால், உள்ளே கதகதப்பாக ஆவியேற்பட்டு, அவ்வௌஷதம் ஒருவாறு பக்குவமாகும். அக்னியில்லாமல் செய்யப்படும் இப்பக்குவத்தை அநக்நிஸ்வேதநம் என்பார்கள்.

2. சீக்கிரத்தில் தேஹத்திற் பாவுமென்பதிலிருந்து, இப்பக்குவ முறைகளால் இரஸம் வியவாயி என்னும் விசேஷகுணத்தைப் பெறுகின்றது எனபது பொருள்.

3. கண்ட பூஷணமாகச் செய்துகொள்வதென்றால், இவ்வத்தியாயத்திற் கூறியுள்ள பரிபாஷைகளை கண்டபாடமாகச் செய்துகொள்ளல் வேண்டுமென்றும் கருத்து.

ஒன்பதாம் அத்தியாயம்.

இயந்திரங்கள்.

இயந்திரங்களின் முகவுரை.

(1) இனி இரஸசாஸ்திரங்கள் அனைத்தையும் ஆராய்ந்து இயந்திரங்களைப்பற்றி ஸோமதேவனுல்[1] இங்ஙனம் சுருக்கமாக விஷயங்கள் மொழியப்படுகின்றன; அவை ஸ்வேதநம் முதலிய [2] முறைகளைச் செய்ய உபயோகமானவை. (2) வார்த்திகாகிரியர்கள் [3] பெருமுயற்சியுடன் இரஸத்தைக் கட்டுவதற்கு இவற்றையுபயோகித்ததால், இவை 'இயந்திரங்கள்' எனப்படுகின்றன. 1, 2.

டோலா யந்திரம்.[4]

ஒரு பாண்டத்தில் பாதியளவுக்கு அவசியமான திரவத் திரவியத்தை வைக்கவும்; அப்பாத்திரத்தின் கழுத்துக்கு மேற்புறத்தில் நேருக்கு நேராக இரு புறங்களிலும் சிறு துவாரங்களிடவும்; அத்துவாரங்களில் ஒரு மெல்லிய கழியை வைத்து, அதில் இரஸம் அடங்கிய பொட்டலத்தைத் தொங்கவிடவும்; அப்பால், அத்திரவத்தைக் காய்ச்சி, அதிலிருந்து எழும் ஆவியினுல் இரஸம் பக்குவம் செய்யப்படும். இந்த முறை 'டோலா யந்திரம்' எனப்படும். 3, 4.

ஸ்வேதநீ யந்திரம்.[5]

ஒரு பாத்திரத்தில் ஜலத்தை வைத்து, அதன் வாயை ஒரு வஸ்திரத்தினுல் கட்டவும்; அவ்வஸ்திரத்தின்மேல் பக்குவம் செய்யவேண்டிய வஸ்துவை வைத்து, மேலே ஏதேனும் பாத்திரத்தைக் கவிழ்த்து மூடவும்; பிறகு கீழே தீயிட்டு எரிக்க, அந்த நீரிலிருந்தெழும் ஆவி

---

1. ஸோமதேவன் என்கிற ஸித்தர் இயற்றிய இரஸக்ரந்தத்திலிருந்து இவ்வத்தியாயம் வாக்படரால் எடுக்கப்பட்டதென்பது இதனுல் விளங்கும். 'இரஸேந்திர சிந்தாமணி' என்னும் பிரதானக் கிரந்தம் ஒன்று ஸோமதேவனுல் இயற்றப்பட்டிருக்கிறது.

2. ஸ்வேதநம், மர்த்தநம், மூர்ச்சநம் முதலியவை இதனுல் குறிக்கப்படுகின்றன.

3. சாஸ்திரகிரந்தங்களில் அவசியமான வேறுவிஷயங்களையோ, விஷயங்களை விளங்கச்செய்தோ, முரண்பட்டவைகளைச்சரிப்படுத்தியோ வையப்பட்ட சாஸ்திர வாக்கியங்கள் **வார்த்திகங்கள்** எனப்படும்.

4. "அவசியமான ஔஷதங்களோடு இரஸத்தைக் கூட்டி, அதை பூர்ஜபத்திரத்தில் சுற்றி, அதன்மேல் மூன்று மடிப்புள்ள வஸ்திரத்தைச் சுற்றி, நன்றாய் பொட்டலமாகக் கட்டி, ஒரு பாத்திரத்தில் மெல்லிய கயிற்றால் கட்டித்தொங்கவிடவும்; அப்பாத்திரத்தில் அதற்கு அவசியமான திரவத்திரவ்யம் நிரப்பப்பட்டிருக்கவேண்டும்; அதன் கீழே முறைப்படி தீயிட்டு எரிக்கவும். இது **டோலா யந்திரம்** என்றும் **ஸ்வேதந யந்திரம்** என்றும் வழங்கப்படும்."—இரஸேந்திர சூடாமணி.

5. இரஸேந்திர சூடாமணி முதலியதில் டோலா யந்திரமே ஸ்வேதந யந்திரமெனக் கூறப்படுகிறது.

யினுல் அவ்வஸ்து பக்குவமாகும். இது 'ஸ்வேதநீ யந்திரம்' எனக் கூறப்படும். 5.

அதஃபாதந யந்திரம்.[1]

எட்டுஅங்குலம் உட்புறச் சுற்றளவும், பத்துஅங்குலம் ஆழமும், நான்கு அங்குலம் பருமனும் உள்ளதாய் கீருக்கு ஆதாரமான பாத்திரம் ஒன்று செய்துகொள்ளவும்; பதினறு அங்குலம் விஸ்தீர்ணமுள்ள அடிப்பாகத்துடன் கூடியதாய் மற்றொரு பாத்திரம் மேலே மூடுவதற்கு அமைக்கப்படவேண்டும்; கீழுள்ள பாத்திரத்தின் முகம் அதன் கழுத்துவரையில் மேல் பாண்டத்திற்குள் நுழைபுட்படியமைத்து, எருமைப்பால் - சுண்ணாம்பு - மண்டிரம் - பாணிதம்[2] இவற்றைக் கூட்டி, அச்சாந்தினுல் இரண்டு பாத்திரங்களின் வாய்க்கூட்டைச் சுற்றிலும் நன்முகப் பூசி யுலர்த்தவும்; இவற்றுள் அடியிலுள்ள பாத்திரத்தில் ஜலம் வைத்து, மேல் பாத்திரத்தினுள் இரஸம் இறக்குவதற்கான சரக்கைப் பூசவும்; இவ்விதம் செய்து, ஜலம் அடங்கிய பாத்திரத்தை அடுப்பில் வைத்து எரிக்க, மேல் பாத்திரத்திற் பூசியுள்ள சரக்கிலிருந்து தண்ணீர்ப் பாத்திரத்தில் இரஸம் கிரமமாக இறங்கும். இது அதஃபாதநயந்திர முறையாம். 6—9.

1. ஊர்த்வபாதநயந்திரம்:— 'ஆறு அங்குலம் உயரமும், வரய்ப்புறத்தில் ஏழு அங்குலம் குறைவும், முப்பது அங்குலம் சுற்றளவுமுள்ளதாய் ஒரு மட்பாண்டம் அமைக்கவும்; இதே அளவாக மற்றொரு பாண்டமும் செய்யவேண்டும். யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், காயம், பஞ்சலவணங்கள் இவற்றை இரஸத்துடன் சேர்த்து, அம்லவர்க்கத்தினுல் ஆட்டி, அடியிலுள்ள பாத்திரத்தினுள் பூசவும்; மற்றொரு பாத்திரத்தை இப்பாத்திரத்தின்மேல் கவிழ்த்து மூடவும்; இரண்டின் கூட்டுவாயைச் சாம்பலும் உப்பும் கலந்து நன்முகப் பூசிடவும்; பிறகு அடுப்பில் ஏற்றி எரிக்கவும்; மேலேயுள்ள பாத்திரத்தின்மேல் நான்கு யாம காலம் குளிர்ந்த ஜலத்தில் நனைத்த வஸ்திரத்தை மடித்துப் போட்டு, அதை அடிக்கடியும் குளிர்ந்த ஜலம் தெளித்து ஈரமாக்கிக்கொண்டே இருக்கவும்; பிறகு தீயை நிறுத்தி, பாத்திரம் தானே ஆறிய பிறகு, மேல் பாத்திரத்தில் படிந்துள்ள இரஸத்தை யெடுத்துக் கொள்ளவும். இது 'ஊர்த்வபாதநயந்திரமுறை' யென வழங்கப்படும்.'' அதஃபாதநயந்திரம்:—'' முற்கூறிய வகையிலேயே இரண்டு பாத்திரங்களைச் செய்து, மேல் பாத்திரத்தினுள் சரக்கைப் பூசி அடிப்பாத்திரத்தின் மேல் கவிழ்த்து மூடி, சேறு அடங்கிய பள்ளத்தில் அடிப்பாத்திரத்தைப் புதைக்கவும்; மேல் பாத்திரத்தின் மேல் அக்னியிட்டு மூன்று யாமகாலம் எரிக்க, மேல் பாத்திரத்திற் பூசியுள்ள சரக்கிலிருந்து இரஸம் அடிப்பாத்திரத்தில் இறங்கும். இது 'அதஃபாதந யந்திர முறை' யென்று வழங்கப்படும்''—இரஸப்ரகாச ஸுதாகரம்.

2. பாணிதம்—இளம்பதமாகக் காய்ச்சிய வெல்லம்; பாகு போன்று இளகிய வெல்லம்.

டீபிகாயந்திரம்.

பிறகு கூறப்போகிற கச்சபயந்திரத்தினுள் மண்ணுலாகிய பீடம் போன்ற கப்பரையில் சிறு விளக்கொன்று ஏற்றி, அவ்விளக்கின் அருகில் கப்பரையில் இரஸச் சரக்கை வைக்கவும்; அச்சரக்குச் சூடுண்டு, அதிலிருந்து இரஸம் கச்சபயந்திரத்தினுள் இறங்கும். இவ்விதம் முறை 'டீபிகாயந்திரம்' எனக் கூறப்படும். 10.

டோயந்திரம்.

ஒரு பாத்திரத்தின் கழுத்துக்கு அடியில் துவாரம் ஒன்று அமைக்கவேண்டும்; அந்த துவாரத்தில் ஒரு மூங்கிற் குழாயை அமைத்து, அக்குழாயின் மற்றொரு முனையை, ஒன்றன்மேலொன்றுகக் கனிழ்த்து மூடிய இரண்டு வெண்கலப் பாத்திரங்களுக்கு இடையில் சேர்த்து, அக்குழாயின் இரண்டு முனைகளையும் அசைவின்றி கெட்டிப் படுத்தவும்; அவ் வெண்கலப் பாத்திரத்தில் குளிர்ந்த ஜலமும், முதற்பாத்திரத்தில் இரஸம் முதலிய சரக்குகளையும் வைத்து, முதற்பாத்திரத்தினடியில் தீயிட்டு எரிக்கவும்; அப்போழுது முதற்பாத்திரத்திலிருந்து ஜலமுள்ள பாத்திரத்தில் மூங்கிற்குழாய் வழியாய் இரஸம் இறங்கும்; பாத்திரம் முற்றிலும் சூடாய் விடும்வரையில் எரிக்கவேண்டும். இது "டோயந்திரம்" எனப்படும். 11—14.

ஜாரணயந்திரம் (முதல்).

உலோஹத்தினுல் பன்னிரண்டு அங்குலம் அளவில் இரண்டு மூஷைகள் செய்யவும்; அவற்றுள் ஒன்று நுண்ணிய துவாரமுடையதாயிருக்க வேண்டும்; அதில் கந்தகத்தை அடைக்கவும். மற்றொரு மூஷையில் இரஸத்தைச் சேர்த்து, அதனுள் கந்தக மூஷையை நுழைத்து, ஜலமுள்ள ஒரு பாத்திரத்தில் இரஸ மூஷை நிற்குமபடி யமைத்து, அப்பாத்திரத்திற்குக் கீழேயும் மேலேயும் தீயிட்டெரிக்கவும். இது ஜாரணயந்திரம்[1]. 15, 16.

ஜாரணயந்திரம் (இரண்டாவது).

வெள்ளுள்ளியை இடித்துப் பிழிந்து, அச்சாற்றை வஸ்திரத்தினுல் நன்முக வடிகட்டிக்கொள்ளவும்; ஒரு கலயத்தில் இரஸத்தையும் கந்தகத்தையும் வைத்து, அவற்றின்மீது அவ்வெள்ளுள்ளிச் சாற்றைத் தாராளமாக ஊற்றி, அதன்மேல் மற்றொரு கலயத்தை நிமிர்த்து வைத்துச் சேர்த்து மூடி, அக்கலயங்களின் கூட்டுவாயைச் சீலை மண் கொண்டு நன்கு அடைத்துவிட வேண்டும். பிறகு மேலேயுள்ள கலயத்தினுள் வறட்டிகளைக் கொண்டு கபோதபுடம்[2] இடவும்; யந்திரத்திற்கு அடியிலும் வறட்டிகளைக் கொண்டு எரிக்க

1. இரஸப்ரகாச ஸுதாகாரத்தில் ஜாரணயந்திரமே ஸாரண யந்திரம் என்று கூறப்படுகிறது.

2. கபோதபுடம்—10-ம் அத்தியாயம் பார்க்க.

வும், அல்லது வேறு எதைக் கொண்டாவது கடுந்தீயிட்டு எரிக்கவும்; இவ்விதமாக இடைவிடாது மூன்று நாட்கள் செய்து, பிறகு சூடுள்ள அடுப்பின் மீதுள்ள வெந்நீரில் யந்திரத்தை வைத்துப் பிரித்து ஔஷதத்தை யெடுக்கவும்; ஆனல் குளிர்ச்சியான இடத்தில் அதைப் பிரித்தெடுக்கக் கூடாது. இவ்விதம் செய்ய இரஸம் அழிவதுமில்லே, குறைவதுமில்லே. இம்முறையை அனுஸரித்தே கந்தக ஜாரணமும் செய்யலாம். 17—21.

கச்சபயந்திரம்.

ஒரு பாண்டத்தில் தண்ணீரை நிரப்பி, அதனிடையில் விசாலமான கப்பறையொன்றை வைத்து, ஒரு பெரிய மூஷையில் இரஸம் சேர்த்து, அம்மூஷையை அக்கப்பறையின்மீது வைத்துள்ள பிடத்தினுள் [1] அமர்த்தி, மற்றொரு சிறிய உலோஹ பாத்திரத்தினுல் மூடி, ஆறு முறை சீலேமண்களேக் கொண்டு கூட்டுவாய்களே அடைத்து, முற்கூறிய கப்பறையின் இடையில் கருங்காலி-இலக்தை இவற்றின் கட்டைகளாலான கரியையிட்டெரித்து ஸ்வேதரம் செய்யவும்; அந்த யந்திரத்தில் இருக்கையிலேயே அதை மத்தினுல் தேய்த்து மர்த்தநமும் செய்யவும்; இவ்விதம் செய்ய, சூட்டின் வேகத்தினுலேயே கச்சபயந்திரத்தினுள்ள இரஸம் ஜாரணமாய்விடும். இவ்வாறே எல்லாச்சத்துவங்களும் கச்சபயந்திரத்தினுள் பக்குவம் செய்யப்பட, அதனுள் திரவத்தன்மையைப் பெறும்.[2] 22—24.

வித்யாதர யந்திரம்.

ஒரு பாண்டத்தை அடியில் வைத்து, அதில் அவசியமான ஔஷதத்தைப் போட்டு, மற்றொரு பாத்திரத்தினுல் அதன் வாயை மூடி, சீலே மண் செய்து, அதை நாற்புறமும் முகமுள்ளதாய் அமைக்கப் பெற்ற அடுப்பில் வைத்து, தீயிட்டெரிக்கவும்; இது "வித்யாதர

1. பிடம்—(1) "இந்துப்பு, யவக்ஷாரம் இவற்றை மல்லிகையின் சாற்றில் கரைத்து, ஒன்றுக்கு திரவமாக்கவும். இந்த பிடம் எல்லா இரஸவேலேகளிலும் உதவும். (2) நத்தையோடு, சங்குப்பொடி, கோழி முட்டையோடு, கவசாரம், கந்தகம் இவற்றைச் சூர்ணம் செய்து, கஜபுடத்தில் எரிக்கவும்; இவ்விதம் ஒரு முறை செய்ய இது சிறந்த பிடம் ஆகும். இது அயத்தை திரவமாக்கவும், இரஸஜாரணம் முதலியதிலும் உபயோகப்படும். (3) ஸர்ஜக்ஷாரம், இந்துப்பு, அன்னபேதி, கோபிசந்தனம் இவற்றை அம்லவர்க்கத்தாலும், மூத்திரங்களாலும் ஆட்டியெடுத்து, எழு முறை புடம்போட சிறந்த பிடம் ஆகும்; இது அப்ரகஜாரணத்துக்கு உபயோகப்படும்"—இரஸஸாரம். 8-ம் அத்தியாயத்தில் 76-ம் ச்லோகத்தின் மொழிபெயர்ப்பையும் பார்க்க.

2. கச்சபயந்திரத்தையே 'ஜலயந்திரம்' என்று இரஸேந்திர சூடாமணி கூறுகிறது.

யந்திரம்" எனப்படும்.[1] இரஸசாஸ்திரவல்லோர் சிலர் இதையே "கோஷ்டியந்திரம்" [2] என்றும் கூறுவர். 25, 26.

லோமாகல யந்திரம்.

ஒரு பாத்திரத்தில் ஜலம் நிரப்பி, அதன்மீது இரஸாதிகளே ஒரு அகலில் வைத்து மூடி, அதன் மேல் மற்றோர் பெரிய அகல் வைத்து, அதில் அக்கினியிட்டு எரிக்கவேண்டும்; இது "லோமாகல யந்திரம்" எனப்படும்; இது அப்ரகம் முதலியதை ஜாரணம் செய்ய உதவும். 27.

கர்ப்பயந்திரம்.

இனி கர்ப்ப யந்திரத்தைப்பற்றி விவரிப்போம்; அது இரஸபிஷ்டியைக் கொண்டு ஆகவேண்டிய பஸ்மம் செய்வதற்கு உபயோகமாகிறது:—நாலு அங்குலம் நீளமும், மூன்று அங்குலம் விஸ்தாரமுமுள்ளதாய் வெகு திடமாக மண் மூஷையொன்று செய்யவேண்டும்; அதன் முகம் வட்டமாக அமைக்கப்பட வேண்டும். குங்குலியம் ஒரு பாகம், அயப்பொடி இருபது பாகம், உப்பு அதற்கு அரைப்பங்கு, களிமண், இவற்றைத் தண்ணீர் ஊற்றி வெகு மிருதுவாக அரைக்கவும்; இதைக்கொண்டு அந்த மூஷைக்கு மேலே திடமாகப் பூச்சிடவும்; இம்மூஷையினுள் இரஸௌஷதம் சேர்த்து, உமிகளேயிட்டு அளவறிந்து மெதுவாக எரிக்கவும்; இவ்விதம் ஓர் இராப்பகலாவது, மூன்று நாட்களாவது, எரிக்க இரஸேந்திரம் பஸ்மமாகும். 28—31.

ஹம்ஸபாக யந்திரம்.

ஒரு சட்டியில் மணலே நிரப்பி, அதன் மேல் மற்றொரு சட்டியை வைத்து மூடவும்; ஐந்து க்ஷாரங்களேயும்[3] பிடாலலவணத்தையும் ஐந்துவித மூத்திரங்களேக்[4] கூட்டி ஆட்டி, அக்கல்கத்தை மணல்நிரம்பிய சட்டியில் அமர்த்தி, மிருது அக்னியிட்டு எரிக்கவும்; இவ்விதம் பக்குவம் செய்யும யந்திரமுறையைச் சாஸ்திரஞ்ஞர் "ஹம்ஸபாக யந்திரம்" என்பார்கள். 32, 33.

1. "ஒரு பாத்திரத்தின்மேல் மற்றொரு பாத்திரத்தை வைத்து நன்றாக மூடவும்; மேலேயுள்ள பாத்திரத்தில் ஜலத்தை வைத்து, அடிப்பாத்திரத்தில் லிங்கம் முதலியதை வைத்து அடுப்பில் தீயிட்டு எரிக்கவும். லிங்கத்திலிருந்து இரஸத்தை இறக்குவதற்கு உபயோகமான இந்த யந்திரம் வித்யாதராயந்த்ரம் எனப்படும்."—இரஸேந்திர சூடாமணி.

2. வித்யாதரயந்திரத்திற்கே கோஷ்டியந்திரம் என்றும் பெயர் என்று இங்கே குறிக்கப்பட்டாலும், கோஷ்டியந்திரம் பிரத்யேகமாகப் பிறகு கூறப்படுகிறது.

3. யவக்ஷாரம், முஷ்டிகக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், பலாசக்ஷாரம், திலக்ஷாரம் என்பவை பஞ்சக்ஷாரங்கள்.

4. பசு, வெள்ளாடு, செம்மறியாடு, எருமை, கழுதை இவ்வைந்தின் மூத்திரங்களும் பஞ்சமூத்திரங்களாம்.

(1) நீண்டு சுவிந்த முகமுடையதான ஒரு காசிக்குப்பியை யெடுத்து, களிமண்ணில் கனத்த சீலையினுல் அதன் மேல் ஓர் அங்குலம் கனம் கவசமிட்டு உலர்த்தவும்; அதனுள் மூன்று பாகமளவு இரஸச்சரக்கை நிரப்பவும். பிறகு பன்னிரண்டு அங்குலம் ஆழமுள்ள ஒரு சட்டியில் சிறிது மணலைப் பரப்பி, அதில் அக்குப்பியை வைத்து, அதில் மூன்று பாகமுயரத்துக்கு மணலை நிரப்பவும். அப்பால் பாத்திரத்தின் வாயை ஓர் அகலால் மூடி, அவற்றின் கூட்டு வாயை மண்ணைத் தடவி அடைத்து விடவும். பிறகு அச்சட்டியை அடுப்பிலேற்றி எரிக்கவும்; அவ்விதம் அப்பாத்திரத்தின் முகத்தில் மூடியுள்ள அகலின் மேல் ஒரு தருப்பை வைக்க, அது எரிந்துவிடும் நிலைமை எப்பொழுது ஏற்படுகின்றதோ அது வரையில் எரித்து வரவேண்டும். இது வாலுகாயந்திர முறை. (2) இவ்விதமே மணலுக்குப் பதிலாக உப்பைச் சேர்த்து செய்யும் முறைக்கு இலவணயந்திரம் எனப் பெயர். (3) ஒரு பாத்திரத்தில் ஐந்து ஆடகம் அளவு[1] மணலை நிரப்பி, அம்மணலுக்குள்ளேயே இரஸச்சரக்குகள் அடங்கிய கோளம் முதலியதை வைத்து பக்குவம் செய்யும் முறையும் வாலுகாயந்திரம்[2] எனக் கூறப்படும். 34—37.

வாலுகா யந்திரங்கள்.

(1) வாலுகாயந்திரத்திற்குக் கூறியவாறே உப்பை பாண்டத்தினுள் சேர்த்து இலவணயந்திரம் செய்யலாம். (2) அல்லது ஒரு செப்புப்பாத்திரத்தினுள் இரஸச்சரக்குகளைப் பூசி, அதை உப்பு நிரம்பிய அல்லது கூஷாரங்கள் நிரம்பிய மற்றொரு பாண்டத்தினுள் வைத்து, மேலே மூடி, பாண்டங்களுடைய கூட்டுவாயை உப்பும் மண்ணும் கூட்டிப் பூசி, அடியில் தீயிட்டு எரிக்கவும். இது இரஸங்களைப் பக்குவம் செய்வதற்கு உபயோகமான "இலவண யந்திரம்," எனப்படுகிறது. 38—40.

இலவண யந்திரங்கள்.

ஒரு பாண்டத்தில் உப்பை நிரப்பி, அதனுள் ஒரு இரும்புக் குழாயில் இரஸம் சேர்த்து வைத்து, மேலே அகலால் மூடி, சீலைமண் செய்து, முன்போலவே பக்குவம் செய்யவும்;[3] இது 'களிகா யந்திரம்' என்று வழங்கப்படுகிறது. 41.

களிகாயந்திரம்.

1. ஆடகம்—அறுபத்து நான்கு பலங்கள் கொண்ட அளவு; அதாவது 8-சேர். ஐந்து ஆடகங்கள் என்பது 40-சேர்.

2. வாலுகாயந்திரம்—இது ஸிகதாயந்திரம் என்றும்கூறப்படும்.

3. 'முன் போலவே' என்றால்—வாலுகா யந்திரத்திற்குப் பக்குவமுறையறிய மேல் அகலில் தருப்பை வைத்து எரியும் நிலைமையைக் கண்டு பக்குவம் அறியும் விஷயம் குறிக்கப்படுகிறது.

ஒரு பள்ளத்தில் அடியில் சிறிது மணல் சேர்க்கவும்; ஒரு மூஷையில் இரஸம் சேர்த்து மூடி, அதை அப்பள்ளத்தில் வைத்து, அம்மூஷை முற்றிலும் மறையும்படி மணலை நிரப்பி, அதன் மேல் வறட்டிகளை அடுக்கித் தீயிட்டெரிக்கவும்; இது "பூதர யந்திரம்" எனப்படும். 42.

பூதர யந்திரம்.

ஒரு அகலில் இரஸத்தை வைத்து, அதன் மேல் மற்றோர் அகலை மூடி, சீலைமண் செய்து, அதை வறட்டிகளுக்கு இடையில் வைத்தாவது, சரிகளைக்கொண்டு எரிக்கும் அடுப்பில் வைத்தாவது இரண்டு யாமகாலம் எரிக்கவும்; அது "புட யந்திரம்" என்று வழங்கப்படும். 43.

புட யந்திரம்.

பகிணறு அங்குலம் சுற்றளவும், ஒரு முழம் உயரமுமுடைய இரண்டுபாண்டங்களை ஒன்றன்முகத்தில் மற்றொன்று முகச் சமமாகச் சேரும்படி கவிழ்த்து மூடி, தாதுத் திரவியங்களிலிருந்து ஸத்துவம் இறக்குவதற்காக நிருமிக்கப்படுவது "கோஷ்டி யந்திரம்"[1]. 44.

கோஷ்டி யந்திரம்.

காந்தலோஹத்தினுல் போதிய அகலமும் உயரமுமுள்ள தாய் ஒரு பாத்திரம் செய்யவும்; அப்பாத்திரத்தின்உட்புறத்தில் மேலே இரு புறத்திலும் இரண்டு வளையங்கள் நன்கு அமைக்கவும்; அதே விதமாகச் சிறிய அளவில் மற்றொரு உலோஹ பாத்திரம்செய்து, அதைப் பெரிய பாத்திரத்தின் வளையங்களில் தூழைத்து வைக்கவும்[2]; சிறிய பாத்திரத்தில் மூர்ச்சனம் செய்த இரஸத்தைச் சேர்க்கவும்; பெரிய பாத்திரத்தில் காடியை நிரப்பவும்; இவ்விதம் அமைத்து, அடுப்பிலேற்றி இரண்டு யாமகாலம் உத்தாபனம் செய்வதற்கு எரித்து, அதிலிருந்து எழும் ஆவியினுல் இரஸத்தை உத்தாபனம் செய்யவும்; சிறிய பாத்திரத்திலுள்ள இரஸம் இதனுல் ஷாட்குண்ய குணம் பெற்று மிகச் சிறப்படையும்; இது "வலபீ யந்திரம்"[3] எனப்படும். 45—47.

வலபீ யந்திரம்.

ஒரு மண் குடத்தில் இரஸச்சரக்கை வைத்து, அப்பாத்திரத்தில் பக்கவாட்டில் சிறு துவாரம் செய்து, அதில் நீண்ட குழாய் ஒன்றை வைத்து, அக்குழாயின் மற்றொரு முனையை வேறொரு பாத்திரத்தில் அவ்விதமே துவாரம் செய்து அமைத்து, இரண்டு பாண்டங்களுடைய

நிர்யக்பாதன யந்திரம்.

1. "தாது வர்க்காதிகள் நிரம்பிய கீழ் பாண்டத்தை அடுப்பில் ஏற்றி, சிறந்த சரிகளைப் போட்டு, அளவறிந்து தீயிட்டெரிக்கவும்" என்று அத்ரிஸம்ஹிதையில் அதிக பாடம் காணப்படுகிறது.

2. உள்ளே வளையங்களில் மாட்டிவைக்கும் சிறிய பாத்திரத்தின் அடிப்புறம் பெரிய பாத்திரத்தினுள்ளே அடிப்புறத்தைத் தொடாமல் இருக்கவேண்டும்.

3. வலபீ யந்திரம்—இது பல பலீயந்திரம் என்று இரஸேந்திர சூடாமணி. ஷாட்குண்யங்கள்—வித்யை, யோசனை, சில்பஞ்ஞானம், நினைவு, அதே விஷயத்தில் கருத்தாயிருத்தல், காரியம் என்பனவாம்.

வும் முகங்களை மூடி சீலை மண் செய்து, பிறகு இரஸச்சட்டிக்குள்ள பாத்திரத்தின் அடியில் கடுந்தீயிட்டெரிக்கவும்; மற்றொரு பாத்திரத்தில் குளிர்ந்த ஜலம் வைத்து இரஸம் இறக்கவும்; சாஸ்திரஞ்ஞர் இது "தீர்யக் பாதந யந்திரம்" என்று கூறப்படுகிறது. 48—50.

பாலிகா யந்திரம்.

இருப்பிணுலாகிய வட்டமான பாத்திரத்தில் முன்னே வளைந்தஒரு கீண்டை குழாயை அமைத்து, அப்பாத்திரத்தினுள் கந்தகத்தைச் சேர்த்துத் தீயிடவும். இந்த யந்திரம் கந்தக ஜாரணம் செய்ய உபயோகமாகிறது.—51.

கடயந்திரம்.

பதினேது சேர் நீர்ப்பொருள் கொள்ளக்கூடிய உள்ளாழமுடையதாய், நான்கு அங்குலம் விசாலமான முகமுடையதாய் அமைக்கப்படும் பாத்திரம் 'கடயந்திரம்' எனப் படுகிறது; இது இரஸத்திற்கு ஸாட் குண்யம் தருவதற்கு உபயோகமானது. 52.

இஷ்டகா யந்திரம்.

ஓரிடத்தில் வட்டமாக ஒரு பள்ளம் தோண்டவும்; அதன் மேல் ஓர் அகலை வைத்து, இடையில் துவாரம் செய்த ஒரு மெல்லிய செங்கலை அவ்வகலின் மேல் மூடவும்; அத்துவாரத்தைச் சுற்றிலும் ஓர் அங்குலம் உயரமான வரம்பு ஒன்று களிமண்ணால் கட்டவும்; அத்துவாரத்தில் இரஸத்தைச் சேர்த்து, அவ்வாயின் மேல் ஒரு வஸ்திரத் துண்டைப் போட்டு, அவ்வஸ்திரத்தின் மேல் கந்தகத்தை வைக்க வேண்டும். பிறகு மற்றோர் அகலால் அவ்வாயை மூடி, அகலுடையவும் வரம்புடையவும் கூட்டு வாயை நன்றாகச் சீலைமண் கொண்டு அடைத்து, அடிக்குழியிலும், மேலேயும் வறட்டிகளை அடுக்கி கரோத புடமிடவும். இது "இஷ்டகா யந்திரம்" எனப் படுகிறது. இதனால் கந்தகத்தை ஜாரணம் செய்யலாம். 53—56.

ஹிங்குலாக்ருஷ்டி வித்யாதர யந்திரம்.

ஒரு பாத்திரத்தில் சரக்குகளை வைத்து, அப்பாத்திரத்தில் மற்றொரு பாத்திரத்தை வைத்து, பிறகு கூட்டு வாயைச் சீலைமண்கொண்டு நன்றாக அடைத்து விட்டு, மேல் பாத்திரத்தில் ஜலம் வைத்து, கீழ்ப் பாத்திரத்திற்கு அடியில் தீயிட்டு எரிக்கவும்; இது "வித்யாதர யந்திரம்" எனப்படும்.[1] லிங்கத்திலிருந்து இரஸம் எடுக்க இது உபயோகப்படுகிறது. 57, 58.

1. முன்பு ஒரு வித்யாதர யந்திரம் கூறப்பட்டிருக்கிறது. இங்கு கூறப்படுகிற ஹிங்குளாக்ருஷ்டி வித்யாதர யந்திரத்தையே ஊர்த்வ பாதநயந்திரம் என்று வழங்குவர். "பவளமனச்சிலை யென்னும் லிங்கத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் ஆட்டி, அடையாகத் தட்டி, ஒரு மட்பாண்டத்தில்வைத்து, மேலே ஒருபாத்திரத்தால் மூடி, சுற்றிலும் கூட்டி வாயைச் சீலை மண்ணால் அடைத்து, மேல் பாத்திரத்தில் குளிர்ந்த ஜலம் சேர்த்து, அடியில் எரித்தல் போடவும். மேல் பாத்திரத்து நீர் சூடாகும்போதெல்லாம் அதை இறுத்துவிட்டு,மீண்டும் குளிர்ந்தஜலம் சேர்த்து வரவும்; இவ்விதம் 30 அல்லது 40 தடவை செய்ய லிங்கத்திலிருந்து இரஸம் இறங்கும்."

டமருக யந்திரம்.

ஒரு பாத்திரத்தில் இரஸாதி சரக்குகளை வைத்து, அதன் மேல் மற்றொரு பாத்திரத்தைக் கவிழ்த்து மூடி, கூட்டுவாயைச் சீலைமண் கொண்டு நன்றாக அடைத்து, அடியில் தீயிடவும். இது 'டமருகயந்திரம்' எனப்படுகிறது; இது இரஸபஸ்ம புடத்திற்கு உபயோகமானது. 59.

நாபி யந்திரம்.

ஒரு சட்டியினுள்ளே பிறகு கூறப்படும் ஜலம்ருத்திகையை வைத்து அதில் பள்ளமிடவும்; அப்பள்ளத்தில் இரஸமும் கந்தகமும் வைத்து, அப்பள்ளத்தைச் சுற்றிலும் மூன்று அங்குலம் உயரமாக வரம்பு கட்டவும்; பசுவின் முலைக்காம்பு உருவமுள்ள மூஷையை அவ்வரம்பின்மேல் கவிழ்த்து மூடவும்; அவ்வரம்பினுடையவும் மூஷையினுடையவும் கூட்டு வாய்களை அடியிற்கூறப்படும் ஜலம்ருத்திகையினால் பூசி நன்றாக அடைத்துவிடவும். பிறகு அக்கினிம்ருத்திகையினாலும் ஒரு கவசம் செய்யவேண்டும்; இந்த ம்ருத்திகைகளால் மூடப்பட்டால் இரஸம் ஆவியாக வெளியே போக முடியாது. பிறகு அப்பாத்திரத்தில் ஜலம் சேர்த்து, அடியில் தீயிடவும், "நாபியந்திரம்" என்கிற இந்த இயந்திரம் எல்லாம் அறிந்த நந்தீசுவரனால் மொழியப்பட்டது. இதனால் கந்தகம் சுத்தமடைந்து, இரஸமும் புகையாமல் நன்று பக்குவமாகிறது.

ஜலம்ருத்திகை.

(1) பழைய இரும்புக் கிட்டத்தை, வெகு மெல்லிய பொடியாகச் செய்து, வெல்லமும் சுண்ணாம்பும் அத்துடன் கூட்டி, லேஹ்யம் போல் பக்குவம் செய்த வேலம் பட்டைக்கஷாயத்தினால் அக்கூட்டுச் சூர்ணத்தை நன்றாக ஆட்டியெடுக்கவும்; இது "ஜலம்ருத்திகை" யெனப் படுகிறது; இது ஜலத்தினால் எவ்வகையிலும் கரைக்கமுடியாதது. (2) மாக்கல், உப்பு, இருப்புக்கிட்டம் இவற்றை எருமைப்பாலால் நன்றாக ஆட்டி யெடுக்கவும். இது 'அக்னிம்ருத்திகை' எனப்படுகிறது; இந்த ம்ருத்திகை மிகக் கடுமையான அனலின் வேகத்தையும் தாங்கி நிற்கக்கூடியது. 60—67.

அக்னி ம்ருத்திகை.

ஒரு மூஷை மற்றொரு மூஷையினுள் நுழையும்படி. இரண்டு மூஷைகளைச் செய்யவும்; அவை அடிமுதல் தூணி வரையில் சுற்றளவில் ஸமமாயிருக்க வேண்டிய தோடு, அடித்தடம் தட்டையாயமைந்திருக்க வேண்டும். இது "கிரஸ்தயந்திரம்" எனப்படும்; இரஸசாஸ்திரஞ்ஞர் இதை இரஸத்தைப் பக்குவம்செய்வதற்கு உபயோகிப்பர்: 68, 68½.

கிரஸ்த யந்திரம்.

ஒரு சிறு பாத்திரத்தில் தாம்பரம் முதலியதைப் போட்டு, அதன் வாயை ஓர் அகலால் மூடி, சீலை மண்செய்து, அப்பாத்திரத்திற்கு அடியில் தீயிட்டு எரிக்கவும். இது "ஸ்த்தாலீ யந்திரம்" என்று வழங்கப்படுகிறது. 69.

ஸ்த்தாலீ யந்திரம்.

தூபயந்திரம்.

(1) எட்டு அங்குலம் விஸ்தீர்ணமும், எட்டு அங்குலம் உயரமு முடையதாய் இருப்புப் பாத்திரம் ஒன்று செய்ய வும்; அதனுள் கழுத்துக்கு இரண்டு அங்குலம் கீழே உட்புறமாகப் பிதுங்கியதாய் சுற்றிலும் வரம்பு ஒன்று அமைக்கப்பட வேண்டும்; மெல்லிய இரும்புக் கம்பிகளை அவ்வரம் பின் மீது குறுக்கும் நெடுக்குமாகப் பரப்பி, அக்கம்பிகளின் மேல் மெல்லிய பொன்ரேக்குகளைப் பரப்பவும். அடியிற் கூறப்படும் தூபகச் சரக்குகளைப் பொன் ரேக்குகள் பரப்பியுள்ள கம்பிகளுக்கு அடியில் போடவும். [தூபகச்சரக்குகள்:—கந்தகம், தாளகம், மனச் சில இவற்றைக் கஞ்ஜலியாகச் செய்து தூபகத்திற்கு உபயோகிக்க லாம்; அல்லது நாகபஸ்மத்தையாவது உபயோகிக்கலாம்; மேற் கூறியவற்றுல் பொன் ரேக்குகளுக்கு தூபம் போடுவது சிறந்த முறையாம்.] மற்றொரு பாத்திரத்தை முற்கூறிய பாத்திரத்தின் மேல் கவிழ்த்து மூடி, அவற்றின் கூட்டு வாயை மண்பூசி நன்றாக அடைத்து, அடியில் நன்கு நீயிட்டு எரிக்கவும்; இவ்விதம் எரிப்ப தால் முற்கூறிய தூபகவஸ்துக்களிலிருந்து கிளம்பும் தூமம் ஏறி அப்பொன் ரேக்குகள் கருநிறமாகப்போய் பஸ்மமாகும்; இரஸமும் துரிதமாகப் பொன்னை ஜாரணம் செய்து, அப்பொன்னும் உருகி பஸ்மமாகிறது. (2) இவ்விதமே வெள்ளிரேக்குகளை வங்கபஸ் மத்தினுல் தூபமிடலாம்; அல்லது யுக்தப்படி வேறு உபரஸங் களாலும் தூபமிடலாம். ஜாரணம் செய்யவேண்டிய சரக்குகளைப் பக்குவம் செய்வதற்காக "தூபயந்திரம்" என்கிற இம்முறை கூறப்பட்டது. 70—76.

கந்தக யந்திரம்.

(1) பெரியதொரு பாத்திரத்தில் ஜலம் சேர்த்து, அப்பாத்திரத் தின் முகத்தில் திடமாக வஸ்திரமொன்று கட்ட வும்; அவ்வஸ்திரத்தின் மேல் ஆவியிற்பக்குவம் செய்ய வேண்டிய வஸ்துவை வைத்து, அம்முகத் தை மூடிவிட்டு, அப்பாத்திரத்தின் அடியில் தீயிடவும். இதற்குக் "கந்தயந்திரம்" எனப்பெயர். இதையே வேறு சிலர் ஸ்வேதநீ யந்திரம் என்றும் கூறுவர். (2) அல்லது ஒரு பாத்திரத்தில் ஜலம் சேர்த்து, சுத்தமான வைக்கோல் முதலிய திருணங்களை அப்பாத்தி ரத்தின் வாயில் அடைத்து, ஆவியிற் பக்குவம் செய்வதற்கான வஸ் துக்களை அதன்மேல் வைத்து, பாத்திரத்தின் வாயைமூடி, அடி யில் தீயிடவேணும். இதையும் 'கந்தயந்திரம்" என்பர். 77—80.

கல்வங்கள்.

கல்வத்திற்கு உபயோகமான சில கருப்பாகவும், அல்லது வெண் கருப்பாகவும், ஸ்நிக்தமாகவும், திடமாகவும், பார முள்ளதாகவும் இருக்கவேண்டும். (1) பெரிய கல்வத்தின் அளவு பதினறு அங்குலம் உயரம், ஒன்பது அங்குலம் அகலம், இருபத்தினறு அங்குலம் நீளம். கர்ஷணியென்னும் குழவியானது பன்னிரண்டு அங்குலம் அல்லது இருபது அங்குலம் நீளமும், சுற்றளவில் பத்து அங்குலமும் உள்ளதாயிருக்கவேண்டும்.

இது பெரிய கல்வத்தின் அளவாகும்; இரஸச் சரக்குகளை அரைப் பதற்கு இது சிறந்தது. இரஸம் முதலிய சரக்குகளை அரைப் பதற்கு மிகவும் அனுகூலமான மூன்றுவித கல் வங்கள் உண்டு. அவற்றுள் மேலே கூறிய பெரிய கல்வம் ஒன்று; இரண்டாவது பின்வருமாறு:—(2)

மூன்றுவித கல்வங்கள்.

இது உயரத்தில் பத்து அங்குலமும், நீளத்தில் பதினறு அங்குல மும், விஸ்தாரத்தில் பத்து அங்குலமும், ஆழத்தில் ஏழு அங்குல மும் அளவுள்ளதாய் அமைக்கப்பட வேண்டும்; மேலும் இதன் விளிம்பு இரண்டு அங்குலம் கனமுடையதா யிருக்க வேண்டும். உருவத்தில் அர்த்த சந்திரனைப் போலும், வெகு நாசூக்காகவும் அமைக்கப்பட வேண்டும். இதன் குழவி பன்னிரண்டு அங்குலம் உயரமுடையதா யிருக்கவேண்டும். இது இரஸச் சரக்குகளை அரைப்பதற்கு வெகு உபயோகமாயிருப்பதுடன், மேற்கூறிய இரண்டு கல்வங்களும் வெகு வழுவுண்டும், அரைக்கப்படும் சரக்கு வெளியில் சிந்திவிழாமலும் இருக்கும். மேலும் இரண்டாவது கல் வத்தில் ஐந்து பலம் இரஸம் சேர்த்து சுத்தி முதலிய வேலைக்கு அரைக்கலாம். அன்றியும் சரக்குகளின் பரிமாணத்துக்குத் தகுந் தவாறு அவற்றை வேறு கல்வங்களிலும் அரைக்கலாம். (3) வழு முண்ட சிலையினுல் மற்றொரு கல்வம் செய்து கொள்ளவும்; இது உருவத்தில் வட்டமாயிருக்க வேண்டும்; மத்தியில் மிக்க வழவழப் பாய் அமைக்கப்பட வேண்டும்; சுற்றளவில் பன்னிரண்டு அங்குல மும், ஆழத்தில் நான்கு அங்குலமும் இதன் அளவு. அரைக்கும் குழவி அடிப்புறம் தட்டையாகவும், தலைப்புறம் நல்ல கைப்பிடி யுடையதாகவும் அமைக்கப்பட வேண்டும். இந்த வர்த்துள கல்வ மானது அரைப்பதற்கு வெகு ஸௌகரியமானது. ஒன்பது அங்கு லம் விஸ்தாரமும், ஆறு அங்குலம் ஆழமும் உள்ள தாய் இரும்பினுல் ஒரு கல்வம் செய்யவேண்டும். அரைக்கும் குழவி எட்டுஅங்குலம் உயரமுள்ளதாயிருக்கவேண்டும். இதுவே தப்தகல்வம் என்றும் கூறப்படும். இக்கல்வத்தின் உருவ மாகவே ஓர்அடுப்பை அமைத்து,இவ்விரும்புக் கல்வத்தை வைத்து, அடுப்பின் பக்கவாட்டில் துருத்தியைக் கொண்டு ஊதவும். இதில் இரஸபிஷ்டியைச் சேர்த்து, க்ஷாரங்களையும் அம்லங்களையும் கூட்டி அரைக்க, அனலால் வாட்டப்பட்டு அது வெகு துரிதமாக உருகி விடும். இக்கல்வமே காந்தலோஹத்தினுல் செய்து உபயோகிக் கப்பட்டால், இதில் பக்குவம் செய்யப்படும் இரஸௌஷதம் அநேக மடங்கு குணத்தில் அதிகரிக்கும். 81—91.

பத்தாம் அத்தியாயம்.

மூஷைகள்-கோஷ்டிகள்-புடங்கள்-ஔஷதவர்க்கங்கள்.

மூஷைகள்.

மூஷைகளின் விவரணம்.

(1) மூஷையென்பதே கிரௌஞ்சிகா [1] என்றும், குமுதமென்றும், கரறாடிகா என்றும், பாசநீயென்றும் [2] வஜ்ரநிபித்தா என்றும் பல பெயர்களைக் கொண்டு இரஸசாஸ்திரவல்லோரால் வழங்கப்படுகிறது. (2) 'சரக்குகளுடைய தோஷங்களை நீக்குகின்றது' என்னும் காரணத்தினால் 'மூஷை' என்று [3] வழங்கப்படுகிறது. (3) மூஷையைச் செய்வதற்கு முக்கியவஸ்துக்கள் மண்ணும் உலோஹமுமேயாம். (4) மூஷையினுள் பக்குவம் செய்தெடுக்கப்படும் சரக்கு மிகச் சொற்பமாயினும் அது சிறப்புடையதாகும்.

மூஷையின் ஸந்தி பந்தநம்

(5) மூஷையையும், அதன் மூடியையும் சேர்த்துச் செய்யும் சில மண் பூச்சானது 'பந்தநம்' என்றும், 'ஸம்ச்லிஷ்டம்' என்றும், 'ஸந்தி லேபநம்' என்றும், 'அந்திரணம்' என்றும் 'ரந்திரணம்' என்றும் பல பெயர்களால் வழங்கம்படும். 1—4.

மூஷைக்கான மற்றிதை முதலியன.

(1) வெண்மையாகவும், பெருங்கற்கள் அற்றதாகவுமுள்ள மண், மூஷை செய்வதற்கு ஏற்றதாகும். (2) அல்லது வெண் சிவப்பான பெரு மணல்களைப் போன்ற மண்ணும் உபயோகமானது; இந்த மண்கள், வெகு நேரம் அக்னியில் எரித்தாலும், எவ்விதக் கடுஞ்சூட்டையும் தாங்கக் கூடியன. அவை கிடைக்காவிட்டால் (3) புற்றுமண்ணையாவது, (4) குயவன் உபயோகிக்கும் களிமண்ணையாவது மூஷை செய்ய உபயோகிக்கலாம். (5) சாம்பலாக எரித்த உமிகளையும், சணற்கந்தைகளையும், கரியையும், குதிரைச் சாணத்தையும், மண்ணையும் இரும்புலக்கையினுல் இடித்துக் கூட்டி, அதைக் கொண்டு மூஷைகளைச் சாதாரணமாகச் செய்வதுண்டு. (6) வெள்ளை மாக்கற்கள், எரித்துச் சாம்பராக்கிய உமிக்கரிகள், சணல், பாணையோடுகள், குதிரைச் சாணம், இரும்புக்கிட்டம் இவைகளும் மூஷைக்கான மண்ணுடன் கூட்டியுபயோகிக்க ஏற்றவையாம். 5—7.

வஜ்ர மூஷை.

மண் மூன்று பங்கு, சணல் ஒரு பங்கு, குதிரைச் சாணம் ஒரு பங்கு, எரித்தெடுத்த உமி-மாக்கல் இவை முதலிய வை வகைக்கு ஒரு பங்கு, இரும்புக்கிட்டம் அரைப் பங்கு; ஆகியவைகளை உடைத்துப் பொடியாக்கி 'வஜ்ர மூஷை' என்கிற மூஷையைச் செய்யவும். இது ஸத்துவங்கள் எடுப்பதற்கு உபயோகமானது. 8.

யோக மூஷை.

எரித்த மரக்கரி, எரித்த உமி, மணற்கலந்த மண், புற்றுமண் இவைகளை அந்தந்த பிடங்களோடு [1] கூட்டி மூஷை செய்யவும்; அம்மூஷையின் மேல் அதே பிடவஸ்துக்களைக் கொண்டு மேற்பூச்சு பூசவேண்டும். அவ்வாறு செய்த யாதொரு மூஷையுண்டோ அது 'யோகமூஷை' என்று கூறப்படுகிறது. இம்மூஷையினுல் பக்குவம் செய்யப்பட்ட இரஸமானது வெகு சிறந்ததாயிருக்கும். 9, 10.

வஜ்ரத்வாவண மூஷை.

மணலும் சுண்ணும்பும் கலந்த காரை, கழுவியெடுத்த பூநாகம், சணல், எரித்தெடுத்த உமி, இவை ஸமபாகம், மூஷைக்கான களிமண் ஒரு பங்கு; இவற்றை எருமைப்பாலால் ஆட்டியெடுத்து, இம்மூஷை யுருவான யந்திரத்தைச் செய்யவும்; இதில் பலவகை யுண்டு. இவ்வாறு செய்யப்பட்ட மூஷை வஜ்ரத்தைத் திரவமாக்கும் வேலைக்கு உபயோகமாகும் [2]. 11, 12.

காரமூஷை.

எரித்தெடுத்த காரைப்பொடி [3] ஆறு பங்கு, இரும்புக்கிட்டம்-கரி-சணல்-கறுப்புக் களிமண் இவை வகைக்கு எட்டு பங்கு, ஆக இவற்றைக் கூட்டி அரைத்து மூஷை செய்யவும்; இது 'காரமூஷை' எனக் கூறப்படுகிறது. [4] இரண்டு யாமகாலம் தொடர்ந்து கடுந்தீயில் எரித்தாலும் இம்மூஷை உருகுவதில்லை. 13, 13½.

---

1. கிரௌஞ்சிகா—கோவிகா என்றும் கூறப்படும்.
2. பாசநீ—பாதிநீ என்றும் கூறப்படும்.
3. மூஷை—'மூஷ்ணதி ரஸாதிகதாந் தோஷாந்' இதி—மூஷா. (இரஸம் முதலியதிலுள்ள தோஷங்களைப் போக்குவது என்கிற பொருளில் 'மூஷா' என்று பெயர் வந்தது).

1. பிடங்கள்—விவரணம் 108-ம் பக்கம் பார்க்க.
2. வஜ்ரத்வாரண மூஷை—இதுவே 'வஜ்ர மூஷை' என்று இரஸப்ரகாச ஸுதாகரம். "குளவிக்கூடு, பூநாக ஸத்துவம், உமிக்கரி, சணல், மணல் கலந்தமண் இவற்றை எருமைப்பாலால் மூன்று நாட்கள் அரைத்து, அப்பால் பதினைந்து நாட்கள் வைத்திருந்து, அதனுல் மூஷை செய்யவும். பிறகு மூட்டைப் பூச்சிகளின் இரத்தத்தினுல் மேலே பூச்சிடவும்; அவ்விதமே பிறகு சிற்றாமுட்டி ஸ்வரஸத்தினுலும் பூசி, பிறகு நான்கு யாமகாலம் எரித்து ஊதினுலும் அது அக்னியில் உருகுவதில்லை; இது வஜ்ர மூஷை யெனப் படுகிறது; வஜ்ரத்தை உருக்குவதற்கு உபயோகமானது."—இரஸப்ரகாச ஸுதாகரம். இதே மூஷையைப் பற்றி பிறகு 19—21ம் ச்லோகங்களின் மொழிபெயர்ப்புகளையும் பார்க்க.
3. காரை—சுண்ணும்பு, மணல் முதலியது கலந்து செய்யப்படும் ஒருவித கலப்பு மண். ஆனல் குளவிக்கூட்டின் அரக்குபோன்ற வஸ்து காரையெனப்படுவதாகச் சிலர்.
4. "காரை, பூநாகஸத்துவம், சணல், எரித்த உமி இவைகளை மண்ணுடன் கூட்டி, எருமைப்பால் விட்டு ஒரு பகலும் நாட்கள் அரைத்து, அதனுல் செய்யப்படும் மூஷை காரமூஷை யெனப்படும்:"—இரஸப்ரகாச ஸுதாகரம்.

வஜ்ரம், கரி, உமி இவை ஸமபாகம்; அவற்றிற்கு நான்கு மடங்கு களிமண்; மண்ணுக்குச் சம அளவு காரை; இவ்வனைத்தையுங் கூட்டி யரைத்து நிர்மிக்கப்படும் மூஷை 'வஜ்ரமூஷை' என மொழியப்படும். இது ஒரு யாமகாலம் கடுந்தீயைத் தாங்கக்கூடியது[1]. 14, 15.

வஜ்ர மூஷை.

(1) இடித்துப் பொடியாக்கிய கற்கள், சிவந்த மண் இவற்றை இரத்தவர்க்கச் சரக்குகளாலான[2] கஷாயத்தைச் சேர்த்து அரைத்து மூஷை செய்யவும்; மண்ணே யும் அன்னபேதியையும் கூட்டியிழைத்து, அம் மூஷையின் மேல் பூசவேண்டும். இது 'வர்ணமூஷை' என்று வழங்கப்படுகிறது; இது இம்மூஷையிற் பக்குவம் செய்யப்படும் சரக்கு களுக்குச் சிறந்த சிவப்பு வர்ணத்தைக் கொடுக்கும். (2) இவ்வித மாகவே ச்வேத வர்க்கச் சரக்குகளால்[3] 'ரூப்ய மூஷையும்'[4] செய்ய லாம். 16, 17.

வர்ண மூஷை. ரூப்ய மூஷை.

அந்தந்த மருத்திகைகளால் மூஷையைச் செய்து, பிறகு அந் தந்த பிடச்சரக்குகளால் அம்மூஷையின் மேலே பூச்சிடவேண்டும்; தேஹத்தை உலோஹம் போலே திடப்படுத்துவதற்குரிய ஔஷதமுறைகளைப் பக்குவம்செய்வதற்கு உபயோகமானது இம்மூஷை; இது 'பிடமூஷை' என்று[5] வழங்கப் படுகிறது. 18.

பிட மூஷை.

காரைப்பொடி, சுத்தமாக்கிய பூநாகம், தேய்த்துச் சுத்தம் செ ய்த உமி, சணல் இவை ஸமபாகம், அவற்றிற்குச் சம பாகமாக மூஷைக்கான மண்; ஆகியவற்றை எரு மைப்பாலால் பதினைந்து நாள் ஆட்டியெடுத்து, மூஷை செய்யவும்; பிறகு அதன்மேல் மூட்டைப்பூச்சிகளின் இரத் தத்தையும், இளசான அம்மாம்பச்சரிசி யிலைச்சாற்றையும் நன்று கப் பூசவும்; பிறகு வேறு ஏற்ற திரவவர்க்கச் சரக்குகளையும் பூசி

வஜ்ராவண மூஷை. இரண் டாவது.

1. "துணிக்கந்தை, அதற்குச் சமஅளவு உமி, கரி, அவற்றிற்கு நாலு மடங்கு மண், மண்ணுக்குச் சம அளவு காரை, இவற்றைக் கூட்டி செய்யப்படுவது வஜ்ரமூஷை யெனப்படும்; இது கடுந்தீயை ஒரு யாம நேரம் தாங்கும்"—இரஸப்ரகாச ஸுதாகரம்.

2. இரக்த வர்க்கம்—இதே அத்யாயம் 92-ம் ச்லோகத்தின் மொழி பெயர்ப்பு பார்க்க.

3. ச்வேத வர்க்கம்—இதே அத்யாயம் 95-ம் ச்லோகத்தின் மொழி பெயர்ப்பு பார்க்க.

4. ரூப்யமூஷை—வெள்ளியைப் போல் வெண்மையாயிருப்ப தால் இப்பெயர் வந்தது.

5. பிடமூஷை—"பிடத்தினுலேயே முற்றிலும் ஆக்கப்பட்டு, பிடத்தினுலேயே மேலே லேபநம் செய்யப்பட்டதும், தேஹத்திற்கு உலோஹம் போன்ற வன்மையுண்டுபண்ணத் தகுந்ததுமான மூஷை பிட மூஷை யெனப்படுகிறது"—இரஸப்ரகாச ஸுதாகரம். [பிடம் என்பதைப்பற்றி 8-ம் அத்தியாயம் பார்க்க.]

னால், இந்த மூஷை நாலு யாமகாலத்திற்குக் குறையாமல் கடுந் தீயைத் தாங்கும். இது 'வஜ்ரத்ராவணமூஷை' எனப்படு கிறது[1]. 19—21.

மூஷையை நெருப்பில் வைத்து நன்றாக ஊதிவருகையில், அதில் சேர்த்துள்ள திரவமாக்க வேண்டிய திரவ் யம் உருகும் தருவாயில் அம்மூஷையை ஒரு கொ டிப்பொழுது வெளியிலெடுத்து அரைத்துக் கொ டுக்கும் முறை 'மூஷாப்யாயநம்' எனக் கூறப்படுகிறது. 22.

மூஷாப்யா யநம்.

கத்திரிக்காய் போன்றதோர் மூஷையைச் செய்யவும்; அதன் சுற்றளவும் உயரமும் எட்டு அங்குலம் அளவுள்ள தாயிருக்கவேண்டும்; அதில் ஒரு புறத்தில் சிறிது துவாரம் அமைத்து, அதில் ஊமத்தம் பூவைப் போன்ற உருவமுள்ளதாய் பன்னிரண்டு அங்குலம்[2] நீளமுள்ள குழாயொன்றை இணைத்து, அவற்றின் கூட்டு வாயைச் சிறிதும் சந் தில்லாமல் திடமாய் அடைத்துவிடவும். இது 'விருத்தாக மூஷை' யெனப்படும். இம்மூஷையின் உதவியினுல் கர்ப்பரம்[3] முதலிய மிருதுவான தாதுத்திரவியங்களினிருந்து ஸத்துவ மெடுக்கலாம். 23, 24.

விருத்தாக மூஷை.

எந்த மூஷையானது பசுவின் மூலக்காம்பு போன்றதாய் அமைக்கப்பட்டு, நடுவிற் காம்புள்ள மூடியுடன் கூடியதாகச் செய்யப்படுகின்றதோ அது 'கோஸ் தநமூஷை' எனப்படும். அது ஸத்துவங்களை உருக்குவதற்கும், சரக்குகளைச் சுத்தி செய்வதற்கும் உபயோக மானது. 25.

கோஸ்தந மூஷை.

இரண்டு குறுகிய அகல்களை ஒன்றன்மேல் மற்றொன்றாகக் கவிழ்த்து மூடிச் செய்யப்படுவது 'மல்ல மூஷை' என்று வழங்கப்படுகிறது. இரஸபர்ப்படி முதலிய வற்றை ஆவியிற் பக்குவம் செய்யும் முறைக்கு இம்மூஷை யுப யோகமாகின்றது. 26.

மல்ல மூஷை.

குயவனுடைய கலயம் போன்றதாய், மூடியுடன் வெகு கெட் டியாகச் செய்யப்படும் மூஷையை 'பக்வமூஷை' என்பார்கள்[4]. இது போடலி ரூபமான இரஸௌ ஷதங்களைச் செய்ய உபயோகப்படும். 27.

பக்வமூஷை.

1. இதற்கு முன் 11-12-ம் ச்லோக மொழி பெயர்ப்புகளையும் பார்க்கவும்.

2. இக்குழாய் பத்து அங்குலம் நீளமாயிருக்கவேண்டுமென்று இரஸப்ரகாச ஸுதாகரம்.

3. கர்ப்பரம்—22, 23-ம் பக்கங்களைப் பார்க்க.

4. "எந்த மூஷையானது நன்கு உலர்த்தப்பட்டு, நெருப்பி லிட்டு சூடுபட்டு, பக்குவம் செய்யப்படுகிறதோ அது பக்வமூஷை யெனப்படும்.":—இரஸப்ரகாச ஸுதாகரம்.

புடமிட வேண்டிய திரவ்யம் உள்ளே அடங்கப்பெற்றதாய், மூடப்பெற்ற முகமுடையதாய், கோளம் போன்ற உருவமுடையதான மூஷை 'கோளமூஷை' என்று கூறப்படுகின்றது. இது வெகு துரிதமாகத் திரவமாகக் கூடிய திரவ்யத்தை அவ்விதம் ஆகாமல் தடுக்குந்தன்மையுடையது. 28.

கோளமூஷை.

யாதொரு மூஷையானது அடிப்புறத்தில் குவிந்தும், க்ரமமாக மேற்புறம் அகன்று விரிந்தும், பெரிய கத்திரிக்காய் போன்று பருத்தும் இருக்கின்றதோ அது 'மஹாமூஷை' என்று கூறப்படும். அது அயம், அப்ரகம் இவற்றின் ஸத்துவம் முதலானவைகளைப் புடம் போடுவதற்கும், த்ராவகமாக்குவதற்கும் உபயோகப்படுகின்றது.[1] 29, 29½.

மஹாமூஷை.

உருவத்தில் ஸம்புடம் போன்றதாய், ஆழத்திலும் நீளத்திலும் அகலத்திலும் ஆறு அங்குலம் அளவுள்ளதாய் அமைக்கப்படும் மூஷைக்கு 'மஞ்ஜூஷ மூஷை' எனப் பெயர். இம்மூஷையை நிலத்தில் புதைத்து, அதன்மேல் புடமிடுவது முறை.[2] 30, 31.

மஞ்ஜூஷ மூஷை.

யாதொரு மூஷையானது அடியில் தட்டையாகவும், சுற்றிலும் வட்டவடிவமாகவும், உயரத்தில் எட்டு அங்குலம் அளவுடையதாகவும்[3] அமைக்கப் படுகின்றதோ, அது 'மூஸல மூஷை' என்று கூறப்படும்.[4] இது சக்ரிபத்தரஸம்[5] தயார் செய்ய உபயோகப்படுகின்றது. 32.

மூஸலமூஷை.

1. "மிகப் பருமனுகவும், மிக்க நீளமாகவும், முகத்தில் சிறிது அகன்றதாகவும் செய்யப்பட்டுள்ள மூஷை **மஹாமூஷை**யெனப்படும். இது சீக்கிரம் உருக்கக்கூடிய சரக்குகளைச் சுத்தம் செய்ய உதவும்."—இரஸப்ரகாச ஸுதாகரம்.

2. "உயரமும் ஆழமும் உள்ளதாய், நான்கு சதுரமுள்ளதாய் மூஷை யொன்று செய்யவும்; அதன் நீளம் ஆறு அங்குலம். இது **மஞ்ஜூஷாகார** மூஷை யெனப்படும்; இரஸத்தை மாரணம் செய்ய இது உபயோகப்படும்."—இரஸப்ரகாச ஸுதாகரம். [இங்கு கூறப்படுகிற மஞ்ஜூஷமூஷைக்கான விஷயமே 'மஞ்ஜூஷமூஷை' என்றும், **கர்ப்பமூஷை** யென்றும் இரண்டு வகையாக இரஸப்ரகாசஸுதாரத்தில் கூறப்படுகிறது. "மூஷையை பூமியிற் புதைத்து, மேலே மணலை மூடி புடமிடப்பட்டால், அது **கர்ப்ப** மூஷை யெனப்படும்; இது இரஸத்தைக் கட்டுவதற்கு உபயோகமாகும்."]

3. இரண்டு அங்குலம் அளவென்று இரஸப்ரகாசஸுதாகரம்.

4. **பஸ்மமூஷை**யென்று மற்றொரு மூஷை இரஸார்ணவத்திற் கூறப்படுகிறது. அது பின்வருமாறு: "எள்ளுத்தட்டுகளையெரித்த சாம்பல் இரண்டு பங்கு; செங்கற்பொடி ஒரு பங்கு; இவற்றைக் கூட்டி செய்யப்படுவது 'பஸ்மமூஷை' யெனப்படுகிறது; இது வெள்ளியைச் சுத்தம் செய்வதற்கு உபயோகமானது."

5. சக்ரிபத்தரஸம்—ஸ்த்ரீ ரோகாத்யாயத்தில் (22-ம் அத்தி.) விவரிக்கப்படும் ஒரு ஔஷதமுறை.

கோஷ்டிகள்[1].

ஸத்துவங்களை இறக்குவதற்காகவும், இறக்கியவற்றைச் சுத்தம் செய்வதற்காகவும் பலவகையான உருவமைந்த கோஷ்டிகள் அமைக்கப்படுவதுண்டு; அவற்றிற்கு இலக்ஷணங்கள் அடியிற்கூறப்படுகின்றன. 33.

கோஷ்டிகளின் பொது உபயோகம்.

இரண்டு முழம் உயரமும், அதிற் பாதியளவு நீளமும் அகலமும் உடையதாய், நான்கு மூலைச் சதுரமும் உள்ளதாய் மண்ணில் ஒரு கோஷ்டியை நிருமிக்கவும்; அதன் மேற்புறத்தில் நாற்புறமும் சுவர் ஏற்படுத்த வேண்டும்; ஒரு பக்கத்துச் சுவரில் பன்னிரண்டு அங்குலம் சுற்றளவுள்ளதாக ஒரு துவாரம் ஏற்படுத்தவேண்டும்; சுவருக்கு அடிப்புறத்தில் ஆறு அங்குலம் விஸ்தீர்ணமுள்ளதாய் திடமாகவும் ஒழுங்காகவும் உசிதப்படி மற்றொரு துவாரம் அமைக்கப்படவேண்டும்; அத்துவாரம் அக்நியை ஊதுவதற்காக அமைக்கப்படுகிறது. நிண்ணை அல்லது சுவருக்கு மேற்புறமாக ஒற்றைச் சாண் அளவில் சுற்றிலும் ஒரு சுவர் அமைக்கப்படவேண்டும்; அதன் மேலே ஒற்றைச்சாண் சுற்றளவுள்ளதாய் மற்றொரு துவாரம் அதில் அமைக்கப்படவேணும். அடியிற் செய்துள்ள துவாரங்களில் இரண்டு துருத்திகளின் குழாய் மூனைகளை வைத்து, கூட்டுச் சந்துகளை நன்றாகச் செங்கல்லைக்கொண்டு அடைத்து, மண்ணையும் நன்கு பூசிவிடவேண்டும். இக்கோஷ்டியைக் கரிகளால் நிரப்பி, நன்றாக இரண்டு துருத்திகளாலும் ஊதவேண்டும். கரிகளையும், ஊதிப் பக்குவம் செய்யவேண்டிய சரக்குகளையும் மேலேயுள்ள துவாரத்தினூலேயே கோஷ்டியினுள் செலுத்த வேண்டும்; ஸத்துவ பாதனத்திற்கான கோலிகளையும் ஐந்தைந்தாக அடிக்கடியும் சேர்க்கவேண்டும். இது 'அங்காரகோஷ்டி' யெனப்படும்; இது கடினமான வஸ்துக்களிலிருந்து ஸத்துவமெடுப்பதற்கு உபயோகப் படுகின்றது.[2] 34—39.

அங்கார கோஷ்டி.

திடமான நிலத்தில் பன்னிரண்டு அங்குலம் குறுக்களவு உள்ளதாய், அவ்வளவு ஆழமுள்ளதாய், வட்டமான குழியொன்றை ஒழுங்காய் அமைக்கவும்; அதன் மத்தியில் நான்கு அங்குலம் விஸ்தாரமும், அதே அளவு ஆழமுமுடையதாய் மற்றொரு குழியையும் அமைக்கவேண்டும். இவ்வுள்ளடங்கிய சிறு குழியின் அடியிலிருந்து பூமி மட்டம் வரையில் மற்றொரு மார்க்கமாய் சாய்வாகக் கீழிருந்து மேல் நோக்கியதாய் மெல்லிய துவாரம் செய்து, அதனுள் ஒரு

பாதாள கோஷ்டி.

1. கோஷ்டிகள்—கும்மட்டிகள், அல்லது உலைகள்.

2. அங்காரகோஷ்டி—கரியடுப்பு அல்லது கரிக் கும்மட்டி. இதையே **ஸத்வபாதநகோஷ்டி** யென்றும் கூறுவதுண்டு.

குழாயைச் செலுத்தி, இக்குழாயின் பூமிமட்ட முனையில் ஒரு தோல் துருத்தியை இணைக்கவும்; ஐந்து கண்களுடையதாக மண்ணால் ஒரு சக்கிரம் செய்து, அதை உட்புறத்திலுள்ள சிறு குழியின் மேல் மூடினாற்போல் வைத்து, அதற்கு மேல் கரிகளை நிரப்பி, தீயிட்டுத் துருத்தியினால் ஊதவேண்டும். மிருதுவான சரக்குகளிலிருந்து ஸத்துவம் இறக்குவதற்கு உபயோகப்படும் இது 'பாதாள கோஷ்டி' எனப்படுகின்றது. சரக்குகளைத் துருத்தியினால் ஊதி பக்குவம் செய்யவேண்டியதற்காக நந்தி யென்பவரால் இது ஏற்படுத்தப்பட்டது. 40—43½.

காரகோஷ்டி.

(1) பன்னிரண்டு அங்குலம் ஆழமும், ஒற்றைச் சாண்[1] குறுக்களவும் உள்ளதாய் ஒரு குழியை அமைக்கவும். குழியின் அடித்தடத்திலிருந்து நான்கு அங்குலம் உயரத்தில் உட்புறச் சுவரைச் சுற்றிலும் வரம்பு ஒன்று அமைத்து, அவ்வரம்பின்மேல் அநேகம் கண்ணறைகளுள்ளதாய் ஒரு மண் சக்கிரத்தை வைத்து, அதன் மேல் கரிகளை நிரப்பி, நெருப்பிட்டு, வங்கநாளத்தினால் ஊதவேண்டும். சுத்தி செய்த உலோஹத்தைப் பஸ்மம் செய்வதற்கு உபயோகமான இது 'கார கோஷ்டி' எனப்படுகிறது. (2) மூஷை செய்வதற்கான மண்முதலியவற்றால் ஒரு சாண் சுற்றளவுள்ளதாய் ஒரு குடுவை செய்து, அதன் கீழ்வாயில் ஐந்து அங்குலம் நீளத்தில் குழாய் ஒன்றை அமைக்கவும். இது 'வங்கநாளம்' எனக் கூறப்படும்; இடமாக அக்கினியை ஊதுவதற்கு இது உபயோகமாகும். 44—47½.

வங்கநாளம்.

கோஷ்டியின் பொதுலக்ஷணம்.

ஸித்தரஸம் முதலியவைகளைத் தயார் செய்வதற்காக 'கோஷ்டி' யென்பது நிருமிக்கப்படுகிறது. அதன் பொதுவான உருவம் உயரத்தில் பன்னிரண்டு அங்குலமும், குறுக்களவில் நாலு அங்குலமும் அளவுள்ளதாயிருக்கும்; அதற்குப் பக்கவாட்டில் ஊதுவதற்காகக் குறுக்காய் முகமும் அமைக்கப்பட்டிருக்கும். இவ்விதகோஷ்டிகள் மிருதுவான திரவியங்களைச் சுத்தி செய்வதற்கு அனுகூலமானது. 48, 49.

புடங்கள்.

புடமிடுவதால் உண்டாகும் பலன்.

(1) இரஸம் முதலான வஸ்துக்கள் பக்குவமாவதற்குப் புடமே மிகப் பிரதானமாயுள்ளது. எச்சரக்கையும் ஏற்றக் குறைவான அளவில் பக்குவம் செய்வது விரும்பத் தக்கதல்ல; முறைப்படி நன்றாகப் பக்குவம் செய்த ஔஷதமே ஹிதமானது. (2) உலோஹம் முதலியவற்றிற்கு அபுநர்ப்பவம்[1], குணத்திற் சிறப்பு, அதனால் உபயோகத்தில் மேன்மை, நீரில் அமிழ்ந்து போகாமை, இரேகாபூர்ணத்வம்[2] என்கிற தன்மைகள் அவற்றைப் புடமிடுவதாலேயே ஏற்படுகின்றன. சிலை[3] முதலியவைகளும் புடமிடுவதால் எடையிலும் குணத்திலும் இலகுத் தன்மையைப் பெற்று, உபயோகிப்பவருடைய தேஹத்தில் எளிதிற் பரவக் கூடியதாகவும், தீபகம் உண்டுபண்ணுவதாகவும் ஆகிறது; மேலும் உலோஹங்களைப் புடமிடுவதால், அவை ஜாரணம் செய்யப்பட்ட இரஸேந்திரத்தினும் அதிக குணம் பெறுகின்றன. (3) எரிக்கப்படுவதால் சிலைகள் கூட, அவற்றின் வெளிப்புறத்திற்படும் அக்கினியின் கடும் வேகத்தைப் பெற்றுச் சூர்ணம் முதலிய நிலைமைகளைப் பெறுவது போலே, உலோஹங்களிலும் அக்கினியிற் புடமிடுவதாலே உண்மையில் விசேஷ குணங்கள் ஏற்படுகின்றன. 50, 53.

மஹாபுடம்.

ஆமம்-நீளம்-அகலம் இவற்றில் இரண்டு முறம் அளவுள்ளதாய் ஒரு பள்ளம் தோண்டவும்; அது உருவத்தில் நான்கு முலைச் சதுக்கமாயிருக்கவேண்டும். அதில் ஆயிரம் காட்டுவறட்டிகளை அடியில் அடுக்கி, புடமிடவேண்டிய ஔஷதச் சரக்கை மூஷையில் அடக்கம் செய்து, அவ்வறட்டிகளின் மேல் மூஷையை வைத்து, அம்மூஷையின்மீது ஐன்னூறு வறட்டிகளை அடுக்கி, உள்ளே தீயிட்டு எரிக்கவும். இது 'மஹாபுடம்' என்று கூறப்படும். 54—55½.

கஜபுடம் வராஹபுடம்.

(1) இராஜஹஸ்தப்பிரமாணங்கொண்ட[4] அகலநீளங்களும் ஆழமுமுடையதாய் நான்கு முலைச் சதுக்கமாக ஒரு பள்ளம் அமைக்கவும்; அதில் கழுத்து வரையில் வறட்டிகளை அடுக்கி, புடமிடவேண்டிய சரக்கு நிரம்பியுள்ள மூஷையை அதன்மேல் வைத்து, முன் அடுக்கிய வறட்டிகளுக்குப் பாதியளவு வறட்டிகளை மீண்டும் அதன் மேல் அடுக்கித் தீயிடவும். இது 'கஜபுடம்' என்று வழங்கப்படும்; இப்புடம் சரக்களுக்கு மிகச் சிறந்த குணங்களை யுண்டு

(1) ஒற்றைச் சாண்—பெருவிரலையும் ஆள்காட்டிவிரலையும் நீட்டிப் பிடிப்பதால் ஏற்படும் ஓர் அளவு; இது சுமார் 6 அங்குளம் அளவு.

1. அபுநர்ப்பவம்—100-ம் பக்கம் பார்க்க.

2. இரேகாபூர்ணத்வம்—இரேகைகள் பதியும் தன்மை. [வெகு மிருதுவாகப் பக்குவமான எந்த பஸ்மத்தையும் ஒரு சிறிது எடுத்து விரல்களால் அழுத்திப் பார்க்க, அவ்விதம் அழுத்திய பஸ்மத்தின்மீது விரல்களின் இரேகைகள் பதியும்.]

3. சிலை—இது மநச்சிலை முதலிய கற்களைக் குறிப்பிடுகின்றது. இரத்தினங்களும் இதில் அடங்கும்.

4. இராஜ ஹஸ்தம்—'இதுவே கஜஹஸ்தம்' என்றும் சொல்லப்படும். ஒன்றே கால் முழம் அல்லது 30-அங்குலம் அளவு என்று பர்வப்ரகாசம். 6-ம் பக்கமும் பார்க்க.

பண்ணும்[1]. (2) அகல நீளங்களிலும் ஆழத்திலும் ஒரு சாண் அளவுள்ளதாய் முன்போலவே அமைக்கப்படும் புடம் 'வராஹ புடம்' எனக் கூறப்படும். 56—59.

குக்குட புடம்.

பூமியின்மீது ஒரு முழம் உயரமாக ஒரு மேடையமைக்கவும்; அம்மேடையின் அகலநீளங்களும் அதே அளவாய் அமைக்கப்படவேண்டும். அதன்மீது வறட்டிகளை அடுக்கியிடப்படும் புடம் 'குக்குட புடம்' எனப்படும்[2]. 60.

கபோத புடம்.

பூமியின்மீது எட்டு வறட்டிகளைக் கீழும் மேலுமாகப் பரப்பி, அதனுள்மூஷையில் சரக்கைவைத்துப் புடமிடவும்; இது 'கபோதபுடம்' எனக் கூறப்படும். இரஸபஸ்மம் செய்யவும், தாம்ரபஸ்மம் செய்யவும் உதவுகின்றது.[3] 61.

கோவரமும்-கோவர புடமும்.

(1) பசுக்களைக் கட்டும் தொழுவத்தில் பசுக்களிட்ட சாணம் உலர்ந்து போய், பசுக்களின் குளம்புகளால் மிதிக்கப்பட்டுப் பொடியாக்கப்பட்டுப்போனால் அது 'கோவரம்' என்று வழங்கப்படும்[4]; இரஸௌஷதங்களைப் பக்குவம் செய்வதற்கு அது சிறந்தது. (2) இக்கோவரங்களாலாவது, உமிகளாலாவது எப்புடம் இடப்படுகிறதோ அது 'கோவரபுடம்' என்று கூறப்படுகிறது[5]; இரஸபஸ்மம் நன்கு நிறைவேறுவதற்கு இப்புடம் உபயோகமானது. 62, 63.

பாண்ட புடம்.

பெரியதொரு மட்பாண்டத்தில் உமியை நிரப்பி, அதற்குள் மூஷையை அடக்கம் செய்து, அடுப்பிலேற்றித் தீயிட்டு எரிக்கவும். இது 'பாண்ட புடம்' என்று மொழியப்படுகின்றது[6]. 64.

1. "நீளம்-அகலம்-ஆழம் இவற்றில் 1¼ முழம் அளவுள்ளதாய் குழியமைத்து, ஆயிரம் காட்டுவறட்டிகளை அதில் அடுக்கி, புடமிட வேண்டிய சரக்கு அடங்கியதான மூஷையை முகத்தை மூடி அதில் வைத்து, முன் அடுக்கிய வறட்டிகளில் பாதியளவு அதன்மேல்மூடி, தீயிடவும். இது கஜபுடம் எனப்படும்; எல்லாப் புடங்களிலும் இது சிறந்தது."—பாவப்ரகாசம்.

2. "இரண்டு விதஸ்திகள் (ஒரு முழம்) அகல-நீள-ஆழமுள்ளதாய், நான்கு மூலைச் சதுரமாய் பள்ளம் தோண்டி, அதில் வறட்டிகள் அடுக்கி இடப்படுவது குக்குட புடம்."—இரஸப்ரகாச ஸுதாகரம்.

3. இரஸபஸ்மம் செய்வதற்கு மாத்திரம் கபோதபுடம் உபயோகமாகிறது என்று பாட பேதங்களால் தெரிகிறது.

4. கோவரம்—இது கோர்வரம் என்றும், கோமயம் என்றும் கூறப்படும்.

5. "பெரியதொரு பாண்டத்தில் கோவரத்தை நிரப்பி, அதில் மூஷையில் இரஸச்சரக்கை வைத்து பஸ்மம் செய்வதற்காகப் புடமிட அது கோவரபுடம் எனப்படும்."—பாவப்ரகாசம்.

6. பாண்டபுடமே 'ம்ருத்பாண்ட புடம்' என்று இரஸப்ரகாசஸுதாகரம். உமிக்குப் பதிலாக மண்ணே அப்பாண்டத்தில் நிரப்பவேண்டும் என்று கூறப்படுகிறது.

வாலுகா புடம்.

ஔஷதம் அடங்கிய மூஷையானது அடிப்புறத்திலும் மேற்புறத்திலும் வெகு சூடான மணலால் மூடப்பட்டுப் புடமிடப்படுமானால், அது 'வாலுகாபுடம்' என்று வழங்கப்படுகிறது[1]. 65.

பூதர புடம்.

ஔஷதச் சரக்கு அடங்கிய மூஷையை பூமியில் இரண்டு அங்குலம் ஆழத்திற்குக் கீழே நன்றாகப் புதைக்கவும்; அதன்மீது வறட்டிகளை அடுக்கிப் புடமிட்டால், அது 'பூதரபுடம்' எனக் கூறப்படும். 66.

லாவக புடம்.

கர்ஷப்பிரமாணங்கொண்ட உமிகளைக் கொண்டாவது, கோவரங்களைக் கொண்டாவது பூமியின்மீது யாதொரு புடம் இடப்படுமோ அதை 'லாவகபுடம்' என்பார்கள்; [2] இது மிகவும் மிருதுவான சரக்கைப் புடமிட்டுப் பக்குவம் செய்ய ஏற்றதாகும். 67.

புடங்களை நிர்ணயிப்பதில் பொது விதி.

மேலும் புடங்களுடைய உருவப் பிரமாணங்கள் கூறப்படாத விடங்களில் புடமிட்டுப் பக்குவம் செய்யவேண்டிய சரக்குகளுடைய வன்மை மென்மைகளுக்கிணங்க, இவ்விஷயங்களில் திறமையுள்ளவர்கள் நன்கு ஆலோசித்து ஏற்ற அளவு முதலியவற்றைத் தெரிந்து எல்லாப் புடங்களையும் இடவேண்டும். 68.

வறட்டியின் பெயர்கள்.

பிஷ்டகம், சகணம், சாணம், உத்பலம், உபலம், கிரிண்டம், உபலசாடீ, வராடீ ஆகிய இச்சொற்கள் வறட்டியைக் குறிப்பிடும் பர்யாய பதங்களாம். 69.

ஔஷதாதி வர்க்கங்கள்.

அஷ்ட லோஹங்கள்.

(1) பொன், வெள்ளி, தாம்ரம், வங்கம், ராகம், அயம் இந்த ஆறும் ஸஹஜ லோஹங்கள். (2) வெண்கலமும், பித்தளையும் க்ருத்ரிம லோஹங்கள் எனப்படும்[3]. 70.

ஆறு லவணங்கள்.

ஸாமுத்ரலவணம், ஸைந்தவ லவணம், பிடால லவணம், ஸௌவர்ச்சல லவணம், ரோமக லவணம், சூலிகாலவணம் என்று இயற்கை உப்புகள்[4] ஆறு வகைப்படும். 71.

1. "ஒரு பாண்டத்தில் அடியில் மணலைப் பரப்பி, அதன்மேல் மூஷையை வைத்து, அதன்மேலும் மணலைக் கொட்டி நிரப்பி, அதற்கு அடியிலும் மேலும் தீயிட்டு எரித்தால் அது வாலுகாபுடம் எனப்படுகிறது":—இரஸப்ரகாச ஸுதாகரம்.

2. ஷோடசிகா என்பதற்குக் கர்ஷம் (கால் பலம்) என்று பொருள். அதன்படி லாவகபுடம் இவ்வது எவ்விதமோ யோசிக்க வேண்டிய விஷயம்.

3. உலோஹங்களைப் பற்றி 54-ம் பக்கமும் பார்க்க.

4. ஸாமுத்ரம்—கடலுப்பு, ஸைந்தவம்—இந்துப்பு, பிடாலம்—கரியுப்பு, ஸௌவர்ச்சலம்—அட்டுப்பு, ரோமகம்—உழமண்ணுப்பு, சூலிகா—நவசாரம்.

(1) யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், டங்கணக்ஷாரம் ஆகிய மூன்றும் "க்ஷாரத்ரயம்" என்று வழங்கப்படும். (2) பலாசக்ஷாரம், முஷ்டிக க்ஷாரம், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், திலக்ஷாரம் ஆகிய இவ்வைந்துக்கும் 'க்ஷாரபஞ்சகம்' எனப் பெயர்.[1] 72.

க்ஷாரத்ரயம், க்ஷாரபஞ்சகம்.

'நெய், வெல்லம், தேன் இம்மூன்றும் 'மதுரத்ரயம்' என்று[2] வழங்கப்படுகின்றன. 72½.

மதுரத்ரயம்.

வாலுழுவை, பேய்த்தும்மட்டி, சோம்பு, மணித்தக்காளி, வில்வ விதை, கண்டங்கத்திரி விதை, வெண் கடுகு, ஆட்டாங்கொடி, நான்றிக்காய், ஆனி விதை, கருஞ்சீரகம்,[3] வேப்பம் பித்து, எள், நாயுருவி, சீகுவதாளி,[4] கேபாளம், உதியன், எருமிஞ்சில், கருநொச்சி, சேறுங் கொட்டை, முருக்கவிதை ஆகிய இவற்றினிருந்து தைலம் இறக்கி இரஸச் சரக்குகளைப் பக்குவம் செய்ய உபயோகிக்கலாம். 73—75½.

தலைவர்க்கச் சரக்குகள்.

நரி,[5] கவளை, ஆமை, கோழி, சிகமாரம் என்கிற மத்ஸியம், பசுமாடு, பன்றி, மனிதர், வெள்ளாடு, ஒட்டகம், கழுதை, செம்மறியாடு, எருமைக்கடா இவற்றின் கொழுப்புகள் இரஸ வேலைகளில் உபயோகிக்க உதவும்; இது 'வஸா வர்க்கம்' எனப்படும். 76, 77.

வஸா வர்க்கம்.

(1) யானை, ஒட்டகம், எருமை, கழுதை, குதிரை,[6] பசு, செம்மறியாடு இவற்றின் மூத்திரங்களையும் இரஸவைதங்களைப் பக்குவம் செய்ய உபயோகிப்பதுண்டு. (2) அவ்விதமே ஸ்த்ரீகளுடைய புஷ்பமும், புருடர்களுடைய சுக்ரமும் உபயோகமாகும். 78.

மூத்ர வர்க்கம்.

(1) எருமையினுடைய தயிர், பால், நெய், சாணம், சிறுநீர் இவ்வைந்துக்கும் "பஞ்ச மாஹிஷம்" எனப் பெயர். (2) அவ்விதமே செம்மறியாட்டினுடைய தயிர் முதலிய ஐந்தும் "சாகல பஞ்சகம்" என்று கூறப்படும். 79.

பஞ்சமாஹிஷம் பஞ்ச சாகலம்.

1. க்ஷாரங்களைப்பற்றி 18, 79, 101, 108, 115 இப்பக்கங்களையும் பார்க்க.

2. வெல்லத்திற்குப் பதிலாய் சர்க்கரை கூறப்படும். (88-ம் பக்கம் பார்க்க.)

3. கருங்காலி யென்றும் சிலர். [தைலவர்க்கத்திற்கு இரஸவைதங்களில் உபயோகத்தைப்பற்றி 83-ம் பக்கம் பார்க்க.]

4. தேவதாளீ—கடற்பாலே யென்றும் கூறுவர்.

5. பெட்டைக்கோழி யென்றும் (நரிக்குப் பதிலாய்) பாடம் உண்டு.

6. யானை, குதிரை முதலிய ரூபிருகங்களின் ஸ்த்ரீஜாதிகளுடைய சிறு நீர்களே வீர்யமுள்ளவை யென்றும், ஆகவே அவைகளே உபயோகிக்கத் தகுந்தவை யென்றும் பரிபாஷாப்ரதீபம்.

புளிவஞ்சி, எலுமிச்சை, கிச்சிலி, கொம்மட்டிமாதளை, புளியாரை, கடலைப்புளிப்பு, சரக்கொன்றைப்புளி, இலக்ஷை, மாதளை, மாங்கிப்பத்திரி, புளி, நாரத்தை, விளாம்பழப்புளி, பெருங்களா இவைகளும், மற்றும் புளிப்பாயுள்ள சரக்குகளும் கூட்டி "அம்லவர்க்கம்" எனப்படும். இவற்றுள் சணகாம்லம் எனப்படுகிற கடலைப்புளிப்பு ஒன்று மாத்திரம் உத்தமமானது; புளிவஞ்சியில் எல்லாவற்றினும் மிகச் சிறந்தது. இவை இரஸாதிகளைச் சுத்தி செய்வதற்கும், நிரவகமாக்குவதற்கும், ஜாரணம் செய்வதற்கும் ஏற்றனவாம். 80—83.

அம்ல வர்க்கம்.

இலக்ஷை, மாதளை, புளி, கொடிமாதளை, புளிவஞ்சி இவ்வைந்தும் 'பஞ்சாம்லம்" எனக் கூறப்படும்; இவற்றை "அம்லபஞ்சகம்" என்றும் கூறலாம்.[1] 84.

பஞ்சாம்லம்.

சென்கல், காவிக்கல், உப்புமண், சாம்பர், புற்றுமண் ஆகிய இவ்வைந்தையும் இரஸசரக்குகளின் வேலைக்கு உபயோகமான 'பஞ்ச ம்ருத்திகைகள்' என்று வழங்குவர்.[2] 85.

பஞ்ச ம்ருத்திகைகள்.

சிருங்கிகம், காலகூடம், வத்ஸநாபம் இவையும், க்ருத்ரிம விஷங்களும், பித்த ஸம்பந்தமான விஷமும் 'விஷ வர்க்கம்' என்று கூறப்படும்.[3] இவை இரஸத்தைக்

விஷ வர்க்கம்.

1. "எலுமிச்சை, நாரத்தை, புளிவஞ்சி, புளி, கொம்மட்டிமாதளை இவ்வைந்தும் ஸமபாகமாகச் சேர்க்கப்படுமானால் 'அம்லபஞ்சகம்' எனப்படும். வாய்சுத்தமாவதற்கும், நாவரட்சி உடனே சமனமாவதற்கும் உபயோகமானது"—இராஜநிகண்டு.

2. 'சாம்பர்' என்பதற்குப் பதிலாய் 'ஓட்டடை' என்று வேறு இடங்களில் கூறப்படுகிறது. (89-ம் பக்கம் பார்க்க.)

3. **சிருங்கிகம்**—இது நாபியைப் போன்றதோர், அதினும் கொடிய விஷச் சரக்கு. பசுவின் கொம்பில் இச்சரக்கைக் கட்டிஞல் அதன் பால் செண்ணிறமாக மாறும் எனப் படுகிறது. **காலகூடம்**—இவ்விஷம் ஒரு விருக்ஷ ஜாதியைச் சேர்ந்தது; உருவத்தில் அரசு போன்றது; இம்மரத்திலிருந்து கசியும் பிசின் போன்ற சத்து காலகூட விஷம் எனப்படுகிறது; இவ்விருவகை அஹிசேகத்திரத்திலும், சிருங்க பேரத்திலும், கொங்கணத்திலும், மலயபர்வதத்திலும் உண்டு என்று கூறப்படுகிறது. **வத்ஸநாபம்**—வத்ஸநாபியைப் போன்ற இவ்விஷச் சரக்கின் செடி ஆவாரயிலை போன்றது; இதன் அருகில் வேறு செடிகள் பயிராகா. இம்மூன்றும் ஸ்தாவரவிஷவர்க்கங்களைச் சேர்ந்தவை. **க்ருத்ரிம விஷங்கள்**—சிற்சில சரக்குகளின் சேர்க்கையால் எற்படும் விஷங்கள். இவை காவிஷம் என்றும், தூஷீவிஷம் என்றும் இரு வகைப்படும். **பித்தவிஷம்**—சில மத்ஸியம்; முதலியவற்றின் பித்தம் விஷகுணமுள்ளது. ["சிருங்கிகம், காலகூடம், முஸ்தகம், வத்ஸநாபம், ஸக்தகம் என்கிற இவை **மஹாபஞ்சவிஷங்கள்** எனப்படும்" என்று இராஜநிகண்டு.]

கட்டுவதற்கும், இரஸத்தைப் பக்குவம் செய்வதற்கான வேறு முறைகளுக்கும் உபயோகமாகின்றன. இவ்வர்க்கச் சரக்குகளை முறைதவறுக உபயோகித்தால் பிராணபாயம் நிச்சயமாய் உண்டாகும். 86, 87.

உபவிஷங்கள். சிவனார் கிழங்கு, எட்டிக் கொட்டை, அலரி, கஞ்ஜா, சேருங் கொட்டை, ஊமத்தை, எருக்கு ஆகியவற்றின் கூட்டுக்கு 'உபவிஷவர்க்கம்' என்று[1] பெயர். 88.

க்ஷீரவர்க்கம். (1) யானைப்பேடு, குதிரைப்பேடு, பசு, பெண் கழுதை, வெள்ளாடு, செம்மறியாடு, ஒட்டகப்பேடு இவைகளுடைய பால், (2) அந்திப்பால், அரசம்பால், எருக்கம்பால், ஆலம்பால், உதியம்பால், சிறுபாலியின் பால், கள்ளியினங்களின் பால்கள், காட்டாமணக்குப்பால் இவை 'க்ஷீரவர்க்கம்' என்று வழங்கப்படும்; இரஸாதிகளைப் பக்குவம் செய்வதற்கு இந்தப் பால்கள் உபயோகமானவை[2]. 89, 90.

மலவர்க்கம். பருந்து, காடை, மாடப்புறு, மயில், கழுகு, கோழி இப்பறவைகளின் மலங்கள் 'மலவர்க்கம்' எனக் கூறப்படும்; இவற்றை மேலே பூசுவதாலும், இவற்றைக் கொண்டு புடமிடுவதாலும் எல்லா உலோஹங்களையும் சுத்தம் செய்யலாம். 91, 91½.

இரக்த வர்க்கம் குசும்பாவிதை, கருங்காலி, அரக்கு, மஞ்ஜிஷ்டி, செஞ்சந்தனம், துணை, செம்மரம், கஸ்தூரி மஞ்சள், ஸ்வர்ணமாக்ஷிகம் ஆகிய இச்சரக்குகள் மிகச் சென்னிறங் கொடுப்பவை; இவ்வகுப்புக்கு 'இரக்த வர்க்கம்' என்று பெயர். 92, 93.

பீத வர்க்கம். பலாசு, சரக்கொன்னை, டஞ்சள், மரமஞ்சள் ஆகிய மஞ்சள் நிறச்சரக்குகள் 'பீத வர்க்கம்' என்று வழங்கப்படும்; இவை இரஸேந்திரத்தைப் பக்குவம் செய்யும் முறைகளில் உபயோகப்படுகின்றன. 94.

சுவேத வர்க்கம் நந்தியாவட்டை, வெட்பாலை, குருக்கத்தி, குன்றுமணி, சிறுபாலை, வெண் தாமரைக் கிழங்கு ஆகியவை 'சுவேத வர்க்கம்' எனப்படும். 95.

1. "எருக்கம்பால், கள்ளிப்பால், கலப்பைக்கிழங்கு, அலரி, குன்றுமணிவேர், அபினி, ஊமத்தை இவ்வேழும் ஸ்தூல உபவிஷங்கள் எனப்படும்" என்று வேறு சில நூல்களில் கூறப்படுகிறது. "கள்ளி, எருக்கு, சிவனார்கிழங்கு, குன்றுமணி, அலரி, எட்டிக்கொட்டை, நேபாளம், ஊமத்தை, அபினி என்கிற ஒன்பதும் நவோபவிஷங்கள் ஆம்" என்றும் சிலர்.

2. இங்கு குறிக்கப் பட்டுள்ளவைகளே யன்றி, பாலுள்ள வேறு எல்லாச் செடி கொடிகளுங்கூட க்ஷீரவர்க்கத்தைச் சேரும் எனப்படுகிறது. [இங்கே முதல் வகுப்பைச் சேர்ந்தவற்றை 'ஜங்கம க்ஷீரவர்க்கம்' என்றும், இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவற்றை 'ஸ்தாவர க்ஷீரவர்க்கம்' என்றும் கருதுக.]

கிருஷ்ண வர்க்கம். வாழை, பாகல், திரிபலை, அவரி, தட்டைக்கோரை, சேறு, அன்னபேதி, மாம்பிஞ்சு ஆகியவை 'கிருஷ்ணவர்க்கம்' எனக் கூறப்படும். 96.

இரக்தாதி வர்க்கங்களின் உபயோகம். இரக்தவர்க்கம் முதலிய நான்கு வகையான வர்க்கங்களில் அடங்கிய சரக்குகளால் ஜாரணம் செய்ய வேண்டிய திரவ்யத்தை முறை தவறுமல் பாவனை செய்ய, அவ்வர்ணச்சரக்குகளின் நிறத்தை அந்த திரவ்யம் அடையும். 97.

சோதநீய வர்க்கம். காரசம், வெங்காரம், நத்தைசூரி இவற்றின் கூட்டுக்கு 'சோதநீயகணம்' எனப் பெயர். இவ்வர்க்கம் ஸ்துவங்களுடையவும், கட்டப்பெற்ற இரஸத்தினுடையவும், உலோஹங்களுடையவும் களிம்புகளைப் போக்கடிக்கக் கூடியது. மேலும் 'காபாலிக கணத்வம்ஸி' என்றும்[1] இவ்வர்க்கத்தை இரஸவாதிகள் வழங்குவர். 98.

லோஹ காடிந்யநாசிவர்க்கம். பெருங்கிழங்கு, ஆடுதீண்டாப்பாளை, வாலுழுவை, பலாசவித்து, முயலிலம்புகள் ஆகிய இவை 'லோஹகாடிந்ய நாசகவர்க்கம்' எனக்[2] கூறப்படும். 99.

திராவண வர்க்கம். வெல்லம், குங்குலியம், குன்றுமணி, நெய் தேன், வெங்காரம் இச்சரக்குகள் 'திராவணவர்க்கம்' எனப்படும். இவை எளிதில் உருக்கமுடியாத எல்லா லோஹம் முதலியவைகளையும் எளிதில் உருக்க உபயோகப்படும். 100.

க்ஷாராதிகளின் பொது உபயோகம். (1) க்ஷாரங்கள் அனைத்தும் தோஷத்தை நீக்குந்தன்மையன. (2) அம்லங்கள் சுத்தியும் ஜாரணமும் செய்ய உபயோகப்படுகின்றன. (3) விஷங்கள் சரக்குகளின் மந்தத் தன்மையைப் போக்கி வீர்யத்தை விருத்தி செய்யும். (4) ஸ்நேஹங்கள் என்னும் எண்ணெய்ப் பசையுள்ள சரக்குகள் சரக்குகளுக்கு ஸ்நிக்தத்தத் தன்மையையுண்டுபண்ணும். 101.

1. உலோஹங்களிலும் இரஸச்சரக்குகளிலும் உள்ள தோஷங்களை இரஸவாதிகள் 'காபாலிகணம்' என்றும் அத்தோஷங்களைப் போக்கும் சரக்கை 'காபாலிகணத்வம்ஸி' என்றும் வழங்குகின்றனராம்.

2. லோஹகாடிந்ய நாசநம்—உலோஹங்களுக்கு இயல்பாயுள்ள கடினத்தன்மையைப் போக்குந்தன்மை.

பதினேராம் அத்தியாயம்.

இரஸ ஸம்ஸ்காராதிகள்.

மாக பரிபாஷை.

கிறைகள் அல்லது அளவுகள்.

[1] அணுக்கள் ஆறு சேர்ந்தது ஒரு த்ருடி. ஆறு த்ருடிகள் கூடியது ஒரு லிக்ஷை. ஆறு லிக்ஷைகள் கூடியது ஒரு யூகம். ஆறு யூகங்கள் சேர்ந்தது ஒரு இரஜஸ். ஆறு இரஜஸ்ஸுகள் சேர்ந்தது ஒரு ஸர்ஷபம். ஆறு ஸர்ஷபங்கள் கூடியது ஒரு யவம். யவங்கள் ஆறு கூடியது ஒரு குஞ்ஜா. இரண்டு குஞ்ஜாக்கள் சேர்ந்தது ஒரு நிஷ்பாவம். மூன்று குஞ்ஜாக்கள் சேர்ந்தால் ஒரு வல்லம். இரண்டு வல்லங்கள் சேர்ந்தால் ஒரு மாஷம். இரண்டு மாஷங்கள் கூடியது ஒரு தரணம். இரண்டு தரணங்கள் கூடியது ஒரு சாணம்; சாணத்திற்கே நிஷ்கம், கலி என்றும் பெயர்களாம். இரண்டு சாணங்கள் சேர்ந்தது ஒரு வடகம்; அதுவே கோலம் எனப்படும். கோலங்கள் இரண்டு கொண்டது [2] ஒரு தோலம்; அதாவது நான்கு நிஷ்கங்கள் கொண்டது; தோலத்திற்கே கர்ஷம், உதும்பரம், பாணிதலம், ஸுவர்ணம், கவலக் கிரஹம், அக்ஷம், பிடாலபதகம் என்றும் பெயர். இரண்டு தோலங்கள் கொண்டது ஒரு சுக்தி. சுக்திகள் இரண்டு கூடியது ஒரு பலம் என்று சிலர்; மூன்று சுக்திகள் கூடியது ஒரு பலமென்று வேறு சிலர் வழங்குவர்; பலமே முஷ்டியென்றும், பிரகுஞ்சமென்றும், பில்வமென்றும் கூறப்படும். இரண்டு பலங்கள்

1. "ஆறு த்ருடிகள் சேர்ந்தால் ஒரு லிக்ஷை எனப்படும். ஆறு லிக்ஷைகள் ஒரு யூகம். ஆறு யூகங்கள் ஒரு இரஜஸ். ஆறு இரஜஸ்ஸுகள் ஒரு ஸர்ஷபம்; ஸர்ஷபமே ஸித்தார்த்தம் என்றும் கூறப்படும். ஆறு ஸித்தார்த்தங்கள் ஒரு யவம் எனப்படும். ஆறு யவங்கள் சேர்ந்தால் ஒரு குஞ்ஜா. மூன்று குஞ்ஜாக்கள் ஒரு வல்லம். ஆறு குஞ்ஜாக்கள் ஒரு மாஷம். பன்னிரண்டு மாஷங்கள் ஒரு தோலம். எட்டுத் தோலங்கள் சேர்ந்து ஒரு பலமாகும்." [இந்த மாக பரிபாஷை பூனு பதிப்பு மூலத்தில் ஒன்பதாம் அத்தியாயத்தின் முடிவில் இருக்கிறது. இதே விஷயம் 10-ம் அத்தியாயத்தின் ஆரம்பத்திலும் மொழியப்படுவதால் பிசகாக இவ்விஷயம் 9-ம் அத்தியாயத்தின் முடிவில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. வேறு பதிப்புகளில் இவ்விஷயத்தையும் 10-ம் அத்தியாயத்தின் ஆரம்பத்தில் சேர்த்துப் படிக்கிறார்கள்.]

2. 'கோலங்கள் மூன்று கொண்டது ஒரு தோலம்' என்று ஒரு பாடம். ஆனால் இதர கிரந்தங்களில் 'கோலங்கள் இரண்டு கொண்டது ஒரு தோலம்' என்று கூறப்படுவதாலும், 'நான்கு நிஷ்கங்கள் கொண்டது ஒரு தோலம்' என்று இங்கேயே அடுத்தாற்போலே மொழியப்படுவதாலும் "இரண்டு கோலங்கள் ஒரு தோலம்" எனுகிற பாடமே சரியானது எனக் கருதுகிறோம்.

கொண்டது ஒரு பிரஸ்ருதம். இரண்டு பிரஸ்ருதங்கள் சேர்ந்தது ஒரு குடவம்; அதற்கே அஞ்ஜலி யெனவும் பெயர். இரண்டு குடவங்கள் சேர்ந்தது ஒரு மாநிகை. இரண்டு மாநிகைகள் சேர்ந்தது ஒரு பிரஸ்த்தம். இரண்டு பிரஸ்த்தங்கள் சேர்ந்தது ஒரு சுபம். இரண்டு சுபங்கள் சேர்ந்தது ஒரு ஆடகம்; அது பாத்ரத்வயமென்றும் கூறப்படும். நான்கு ஆடகங்கள் கூடியது ஒரு கடம்; அதுவே உன்மாநம், நல்வணம், அர்மணம், சூர்ப்பம், திரோணம் என்கிற பர்யாய நாமங்களால் வழங்கப்படும். நூறு பலங்கள் கொண்டது ஒரு துலாம். இவ்விதம் நூறு பலங்கள் கொண்ட துலாம் நாற்பது சேர்ந்தால் ஒரு பாரம் எனப்படுகிறது. இவ்விதமாக இரஸ சாஸ்திரத்திற்கு உபயோகமான அளவுகள் சொற்பமாத்திரம் இரஸார்ணவாதிசாஸ்திரங்களைப் பார்த்து மொழியப்பட்டது. இனி இரஸேந்திரத்தை ஸம்ஸ்காரம் செய்யும் வகைகள் விவரிக்கப்படுகின்றன.[1] 1—10.

---

1. இக்கிரந்தத்திலும் இதர கிரந்தங்களிலும் வழங்கப்படும் மாகங்களின் தாரதம்யங்கள்:—

11-ம் அத்தியாயம் ஆரம்பம்.

6 அணுக்கள் = 1 த்ருடி.
6 த்ருடிகள் = 1 லிக்ஷா.
6 லிக்ஷாக்கள் = 1 யூகம்.
6 யூகங்கள் = 1 இரஜஸ்.
6 இரஜஸ் = 1 ஸர்ஷபம்.
6 ஸர்ஷபங்கள் = 1 யவம்.
6 யவங்கள் = 1 குஞ்ஜா.
2 குஞ்ஜாக்கள் = 1 நிஷ்பாவம்.
3 ஷி = 1 வல்லம்.
2 வல்லங்கள் = 1 மாஷம்.
2 மாஷங்கள் = 1 தரணம்.
2 தரணங்கள் = 1 சாணம்.
2 சாணங்கள் = 1 வடகம்.
2 வடகங்கள் = 1 கர்ஷம்.
2 கர்ஷங்கள் = 1 சுக்தி.
2 சுக்திகள் / 3 ஷி } = 1 பலம்.
2 பலங்கள் = 1 பிரஸ்ருதம்.
2 பிரஸ்ருதங்கள் = 1 குடவம்.
2 குடவங்கள் = 1 மாநிகை.
2 மாநிகைகள் = 1 பிரஸ்த்தம்.
2 பிரஸ்த்தங்கள் = 1 சுபம்.
2 சுபங்கள் = 1 ஆடகம்.
4 ஆடகங்கள் = 1 திரோணம்.
100 பலங்கள் = 1 துலாம்.
40 துலாங்கள் = 1 பாரம்.

10-ம் அத்தியாயம் முடிவிலுள்ளது.

6 த்ருடிகள் = 1 லிக்ஷா.
6 லிக்ஷா = 1 யூகம்.
6 யூகங்கள் = 1 இரஜஸ்.
6 இரஜஸ் = 1 ஸர்ஷபம்.
6 ஸர்ஷபங்கள் = 1 யவம்.
6 யவங்கள் = 1 குஞ்ஜா.
3 குஞ்ஜாக்கள் = 1 வல்லம்.
2 வல்லங்கள் = 1 மாஷம்.
12 மர்ஷங்கள் = 1 தோலம் (கர்ஷம்.)
8 தோலங்கள் = 1 பலம்.

இதர நூல்களிலுள்ளது.

30 பரமாணுக்கள் = 1 த்ரஸரேணு.
6 த்ரஸரேணுக்கள் = 1 மரீசி.
6 மரீசிகள் = 1 இராஜிகை.
3 இராஜிகைகள் = 1 ஸர்ஷபம்.
8 ஸர்ஷபங்கள் = 1 யவம்.
4 யவங்கள் = 1 குஞ்ஜா.
6 குஞ்ஜா = 1 மாஷம்.

(138-ம் பக்கம் தொடர்பு.)

ஸ்வேதகம், மர்த்தகம், மூர்ச்சகரம், உத்தாகம், பாதகம், ரோதகம், நியமகம், தீபகம், அப்பகதோஸமாகம், ஸஞ்சாரணம், கர்ப்பத்ருதி, பாஷ்யத்ருதி, ஜாரணம், கிராஸம், ஸாரணம், கிராமணம், வேதகம், சரீரயோகம் என்று இரஸஸம்ஸ்காரமுறைகள்[1] பதினெட்டு வகைப்படும். 11, 12.

இரஸ ஸம்ஸ்கார முறைகள்-பதினெண் வகை.

(1) மர்மஸ்த்தாகம் சிதைவுபட்டிருக்கையிலும், க்ஷாரங்களாலாவது அக்னியிலாவது சுடப்பட்டிருக்கையிலும் இரஸத்தை உபயோகிக்கக் கூடாது. (2) இரஸம் நன்கு சுத்தியடைந்திருந்தால், அது மிருதுவான தீயைத் தாங்கும் இயல்புடையது. (3) மூர்ச்சகரம் அடைந்த இரஸம் பிணிகளைப் பரிஹரிக்கவல்லது. (4) மாரணமடைந்த இரஸம் கடுந்தீயிலும் சிறிதும் பறந்துவிடாமல் நிலைத்திருப்பதுடன் ஆரோக்கியத்தையும் ஆயுளையும் அபிவ்ருத்தி செய்யுந்தன்மையது. 13, 13½.

இரஸத்திற்குப் பல வேறு நிலைமை களிலுள்ள குணங்கள்.

(1) விஷம், அக்னி, மலம் என்பவை இரஸத்திற்குள்ள மூன்று விதமான இயற்கைத் தோஷங்களாம்; அவை முறையே மரணம், அழற்பி, மூர்ச்சை என்பவைகளுக்குக் காரணங்களாம். (2) நாக தோஷம், வங்க தோஷம் என்று வேறிரண்டு தோஷங்கள் இரஸத்திற்கு உண்டு; அவ்விரண்டும் யௌகிகதோஷங்கள்[2] எனப்படும்; இத்தோஷங்கள் விரைத்தல், பொருமல், குஷ்டம் ஆகிய கோளாறுகளை யுண்டுபண்ணும். (3) இரஸம் உற்பத்தியாகிற பூமியிலிருந்தும், மலைகளிலிருந்தும், ஜலத்திலிருந்தும் ஸம்பந்தித்த கஞ்சுகதோஷங்கள்[3] எனப்படும் வேறு ஏழுவித தோஷங்களும் இரஸத்திற்கு உண்டு; அவற்றிற்கு பர்ப்படீ, பாடனீ, சேதீ, த்ராவீ, மலகாரீ,

இரஸத்தின் பண்ணிரண்டு தோஷங்கள்.

(முன்பக்கத் தொடர்ச்சி.)

4 மாஷங்கள் = 1 சாணம்.	2 குடவங்கள் = 1 மாநிகை.
2 சாணங்கள் = 1 கோலம்.	2 மாநிகைகள் = 1 பிரஸ்த்தம்.
2 கோலங்கள் = 1 கர்ஷம்.	4 பிரஸ்த்தங்கள் = 1 ஆடகம்.
2 கர்ஷங்கள் = 1 சுக்தி.	4 ஆடகங்கள் = 1 திரோணம்.
2 சுத்திகள் = 1 பலம்.	2 திரோணங்கள் = 1 கும்பம்.
2 பலங்கள் = 1 பிரஸ்ருதம்.	2 கும்பங்கள் = 1 திரோணீ.
2 பிரஸ்ருதிகள் = 1 குடவம்	4 திரோணிகள் 1 காரி.
	100 பலங்கள் = 1 துலாம்.
	2000 பலங்கள் = 1 பாரம்.

1. பதினெட்டு விதமான இரஸ ஸம்ஸ்கார முறைகள் இனி விவரிக்கப்படும்.

2. யௌகிகதோஷங்கள்—சில சரக்குகளின் சேர்க்கையாலான தோஷங்கள்.

3. கஞ்சுகதோஷங்கள்—இரஸத்தின் வீர்யத்தை மறைத்துப் போடும் தோஷங்கள்.

அந்தகாரீ, த்வாங்க்ஷீ என்று பெயர்;[1] இவ்வேழும் ஔபாதிக தோஷங்கள் என்று[2] வழங்கப்படும். இரஸத்திற்கு ஆகப் பன்னிரண்டு தோஷங்கள் உண்டென்று இரஸசாஸ்த்ரம்நிந்தவர் கூறுவர். பூமியிலிருந்து பற்றிய தோஷங்கள் குஷ்டத்தை யுண்டுபண்ணும். மலைகளிலிருந்து பற்றியவை விரைப்பைத் தரும். தண்ணீரிலிருந்து பற்றியவை வாதவிகாரங்களை யுண்டுபண்ணும். நாகம் வங்கம் இவற்றால் உண்டான தோஷங்கள் ஆட்யவாதம் எனப்படுகிற ஆமவாத விகாரத்தையும் உண்டுபண்ணும். ஆகவே இரஸத்தை நன்கு பக்குவம் செய்வதற்கு இவ்வேஷயில் நிபுணர்களாயுள்ளவர்களை உதவியாகக் கொண்டு, மற்றும் ஸகல உபகரணங்களையும் சேர்த்து ஆயத்தமாக வைத்துக் கொண்டு இரஸ ஸம்ஸ்காரங்களை நிறைவேற்ற வேண்டும். 14—20

இரஸ ஸம்ஸ்கார முறைகள்.

ஸம்ஸ்காரத்திற்குத் தேவையான இரஸ பரிமாணம்.

(1) அடியில் வரும் ஸம்ஸ்காரங்களைச் செய்வதற்கு இரஸத்தை உத்தமாம்மாகக் கிரஹிக்கும் அளவு இரண்டாயிரம் பலம்; ஆயிரம் பலங்களும் கிரஹிக்கலாம்; அல்லது நூறு பலங்கள் கிரஹித்தாலும் கிரஹிக்கலாம்; இருபத்தெட்டு பலங்களாவது, பதினேந்து பலங்களாவது, ஒரு பலமாவது கிரஹிக்கலாம்; அல்லது அதமபக்ஷம் அரைப் பலம் இரஸமாவது ஸம்ஸ்காரத்திற்குக் கிரஹிக்கப்படவேண்டும்.[3] (2) சுபமான தினத்தில் சுபநக்ஷத்ரத்தில் இரஸசோதகத்திற்கு ஆரம்பிக்கவேண்டும். 21, 22.

1. பர்ப்படி—பர்ப்படம் போன்றது. பாடனீ—பிளவுறுதல். சேதீ—த்வரா முண்டுபண்ணுவது. த்ராவீ—உலோஹங்களை நீர்க்கச் செய்வது. மலகாரீ—வாதாதி தோஷங்களை யுண்டுபண்ணுவது. அந்தகாரீ—கருகிற முண்டுபண்ணுவது. த்வாங்க்ஷீ—சுயம் கருப்பாயிருப்பது.

2. ஔபாதிக தோஷங்கள்—வெளிக்காரணங்களால் உண்டாகும் தோஷங்கள்.

3. "ஸம்ஸ்காரத்தின் பொருட்டு இரஸத்தை நூறு பலமாவது, ஐம்பது பலமாவது, இருபத்தைந்து பலமாவது, பத்துப் பலமாவது, ஐந்து பலமாவது, ஒரு பலமாவது, அரைப் பலமாவது கிரஹிக்கலாம். குறைந்த பக்ஷம் கால் பலம் இரஸமாவது வேண்டும். இரஸத்தை நன்றாக ஸப்ஸ்கரிக்கவேண்டுமானால் கால் பலத்துக்குக் குறைவாகக் கிரஹிக்கக் கூடாது. ஆகவே மேற்கூறிய அளவுகளில் கிடைக்குமான அளவு இரஸத்தை யெடுத்துப் பக்குவம் செய்யலாம்."—இரஸேந்த்ரஸாரம்.

த்ரிகடு, இந்துப்பு, வெண்கடுகு, சித்திரமூலம், இஞ்சி, முள்ளங்கி இவற்றை இடித்து காஞ்ஜிகத்தில் சேர்த்து,[1] அதில் இரஸத்தை[2] மூன்று நாட்கள் எரித்து ஸ்வேதநம்[3] செய்யவேண்டும். 23.

ஸ்வேதநம்.

(1) ஓட்டடை, செங்கற்பொடி, தயிர், வெல்லம், இந்துப்பு, வெண்கடுகு இவை பிரத்யேகம் இரஸத்தில் பத்தில் ஒரு பங்கு, இவற்றுடன் இரஸத்தைச் சேர்த்து மூன்று நாட்கள் அரைக்கவேண்டும். (2) அதன் பிறகு இரஸத்திலுள்ள அழுக்குகளைப் போக்கிச் சுத்தமாக்குவதற்காக ஜீர்ணப்ரகத்தையும், பீஜத்ரவ்யத்தையும், ஜீர்ண இரஸத்தையும்[4] கூட்டி அரைக்கவேண்டும்; இவ்விதம் செய்ய, சுத்தமான இரஸம் அரைத்து வருகையில், எவ்வளவுக் கெவ்வளவு ஒவ்வொரு சரக்கையும் அது கிரஸம் செய்து வருகின்றதோ அதற்கு ஏற்றவாறு அதற்குச் சென்னிறம் ஒவ்வொரு முறையும் அதிகப்பட்டுவரும். இவ்விதம் இரஸத்தை அரைக்கும் முறை 'மர்த்தநம்' எனப்படுகிறது[5]. இம்முறையினால் இரஸத்தின் குணம் அதிகமாகும். 24—27.

மர்த்தநம்.

சோற்றுக் கற்றழையானது இரஸத்திலுள்ள அழுக்கைப் போக்கும்; த்ரிபலை அக்கினி தோஷத்தைப் பரிஹரிக்கும்; சித்திரமூலம் விஷதோஷத்தை நீக்கும்; ஆகவே இவற்றால் ஏழு முறை தனித் தனியே இரஸத்தை மர்த்தநம்

மூர்ச்சநம்.

1. காஞ்ஜிகம்—தாந்யாம்லம் என்னும் ஒருவித காடி. ["கிடைக்கக் கூடிய பலவித தான்யங்களை உமி நீக்கி, ஒரு மட்பாண்டத்தில் சேர்த்து, அதில் தண்ணீரை நிரப்பி, மூடி யிட்டு நன்றாகப் புளிக்கும் வரையில் வைத்திருக்கவும். பிறகு கோரைக்கிழங்கு, வல்லாரை, கொட்டைக்கரந்தை, விஷ்ணுக்ராந்தி, சாறடை, பொன்னாங்கண்ணி, ஸர்ப்பாக்ஷி, நெய்ச் செட்டிக்கீரை, தண்ணீர் விட்டாங்கிழங்கு, த்ரிபலை, மலையகத்தி, செருப்படை, சித்திரமூலம், இவற்றுள் கிடைப்பவைகளைச் சமூலமாக இடித்து, முற்கூறிய காடியில் சேர்த்துப் புளிக்கவைத்து எடுத்து, வடிக்கட்டி வைத்துக்கொள்ளவும். இது தாந்யாம்லம் எனப்படும். இரஸத்தை ஸ்வேதநம் செய்யும் முதலிய வேலைகளுக்கு இது உபயோகமாகும்":—ஆயுர்வேதப்ரகாசம்.]

2. நான்கு மடிப்புகளாகச் செய்த வஸ்த்ரத்தில் இரஸத்தைக் கட்டித் தொங்கவிடவேண்டும் என்பது சிலரது கொள்கை.

3. ஸ்வேதநம்—ஆவியிற் பக்குவம் செய்தல். ஸ்வேதநீ யந்திர முறையைப்பற்றி 111-ம் பக்கம் பார்க்க.

4. ஜீர்ண இரஸம், ஜீர்ணப்ரகம், பீஜம் ஆகிய விஷயங்களைப் பற்றி 100, 106, 108-ம் பக்கங்களைப் பார்க்க.

5. மர்த்தநம்—104-ம் பக்கம் பார்க்க. "கல்வத்தில் ஐந்து பலம் இரஸம் சேர்த்து, ஸ்வேதநத்திற்காகக் கூறிய சரக்குகளாலும் காஞ்ஜிகத்தினாலும் மூன்று நாட்கள் அதை ஆட்டியெடுத்து, சூடான காஞ்ஜிக நீரால் அலம்பவும்; இதனால் இரஸத்திற்கு வெளிதோஷம் நீங்கி அது பரிசுத்தமாகின்றது."—இரஸப்ரகாசஸுதாகரம்.

செய்யவும்; இவ்வஸ்துக்களால் செய்யப்படும் மர்த்தநம் 'மூர்ச்சநம்' எனப்படுகிறது[1]; இம்மூர்ச்சந விதியினால் இரஸம் தோஷம் நீங்கியதாகும். 28, 29.

உத்தரணம்.

முற்கூறிய சோதந முறையினால் சுத்தியடைந்த இரஸத்தை காஞ்ஜிகக்ஷாயத்தில் பூதிதோஷம்[2] என்கிற அழுக்கைப் போக்குவதற்காகப் போட்டு வைத்து, அதிலிருந்து மீண்டும் எடுக்கவும்; இப்படி எடுக்கப்படும் முறை 'உத்தரணம்'[3] எனப்படும். 30.

பாதநம்.

(1) இரஸத்துடன் தாம்ரசூர்ணம் கூட்டி அரைத்து, அதை ஒரு சக்கரம் போலச் செய்து, ஊர்த்வபாதந யந்திரமுறையில் வடிக்கவும்; இப்படிச் செய்ய இரஸமானது வங்கதோஷ-நாகதோஷங்கள் நீங்கி சுத்தமாகும். இரஸத்திற்குத் தாம்பத்தைக் கூட்டி மூன்று முறை ஊர்த்வபாதந யந்திரத்தில்[4] பக்குவம் செய்தெடுக்க வேண்டும். (2) பிறகு த்ரிபலை, முருங்கப்பட்டை, சித்திரமூலம், இந்துப்பு, கடுகு இவற்றைச் சேர்த்து இரஸத்தை ஆட்டி நஷ்டபிஷ்டியாகச் செய்து, அதை ஒரு பாத்திரத்தின் உள்ளே பூசி, அதை மற்றொரு பாத்திரத்தின் மேல் கவிழ்த்து மூடி, கூட்டு வாய்களைச் சீலைமண் கொண்டு அடைத்து, அதஃபாதந மூறையில்[5] அடியில் வறட்டிகளை யிட்டு எரிக்கவும். (3) மாமஞ்சள், ஏறழிஞ்சில், சரக்கொன்னை, கற்றழை, த்ரிபலை, சித்திரமூலம், அம்மாம்பச்சரிசி, சாறடை, காயம், இந்துப்பு,

1. மூர்ச்சநம்—"சில சரக்குகளைக் கொண்டு செய்யப்படும் மர்த்தநமுறையே மூர்ச்சநம் எனப்படும்." 104-ம் பக்கமும் பார்க்க. ["மூர்ச்சநம் என்பது ஏழுவித கஞ்சுகங்களையும் போக்கக்கூடிய சோதநமுறை:—ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், பஞ்சலவணம், அம்லவர்க்கம், இவற்றைக் கொண்டு இரஸத்தை கல்வத்தில் மூன்று நாட்கள் ஆட்டியெடுக்கவும்; அதனால் இரஸம் நஷ்டபிஷ்டமென்னும் நிலைமையைப் பெறும்; இம்மூர்ச்சந முறையால் இரஸம் நிர்மலமாகின்றது."—இரஸப்ரகாச ஸுதாகரம்.]

2. பூதிதோஷம்—கந்தகம் முதலியதை யரிக்கையில் உண்டாகும் ஒருவித நாற்றம்.

3. உத்தரணம்—இதுவே உத்தாபநம் எனப்படுகிறது. 105-ம் பக்கம் பார்க்க. ["ஸ்வேதநம், பாதநம் முதலிய முறைகளால் நஷ்டபிஷ்டயாதி ரூபத்திலிருந்து மீண்டும் இரஸத்திற்கு இயற்கைத் தன்மையை யுண்டுபண்ணுவது உத்தாபநம் எனப்படும்; இது மூர்ச்சநத்தினுலான உருமாறு பாட்டைப் பரிஹரிக்கும் முறையாம்."—இரஸபத்ததிவ்யாக்யா. "இரஸத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து, வெயிலில் வைத்து எடுக்கவும். இவ்விதியினால் எடுக்கப்பட்ட இரஸம் போகயிச்சமுள்ள சூர்ணம் போன்ற இரஸத்தை பாதநாயந்திரத்திற் பக்குவம் செய்தெடுக்கவும்."—ஆயுர்வேதப்ரகாசம்.]

4. ஊர்த்வபாதந யந்திரம்—112-ம் பக்கம் பார்க்க.

5. அதஃபாதந யந்திரம்—112-ம் பக்கம் பார்க்க.

ஸ்வர்ணமாக்ஷிகம் இவற்றுலாவது, (4) அடியிற் கூறப்போகிற ஸர்ப்பாக்ஷ்யாதி கணச்சரக்குகளையும்[1] இந்துப்பையுங் கூட்டியாவது இரஸத்தை அரைத்து, நஷ்டபிஷ்டியாகச் செய்து, பாதநாயந்திரத்திற் பக்குவம் செய்யவும். (5) அல்லது வெங்காரம், குங்குலியம் இவற்றைக் கூட்டியாவது பாதநயந்திரத்தில் இரஸத்தைப் பக்குவம் செய்யவும். இவ்விதமாக அதஸ்பாதநயந்திரத்திலும், ஊர்த்வ பாதநயந்திரத்திலும் பக்குவம் செய்யப்பட்ட பின் இரஸம் அவ்வச் சரக்கின் சேர்க்கையினுல் இரஸாயநத்தில் உபயோகிப்பதற்கு மிகவும் ஏற்றதாகிறது. (6) அல்லது இரஸத்தை தீபிகாயந்திரத்திலாவது[2], (7) திர்யக்பாதந யந்திரத்திலாவது[3] பக்குவம் செய்ய, அது எல்லாத் தோஷங்களும் நீங்கியதாகும். (8) வெகு நுண்மையாகப் பொடி செய்த அப்ரகத்தையும்,[4] காடியையும் இரஸத்துடன் கூட்டி, கல்வத்தில் இரஸம் நஷ்டபிஷ்டமாகுமளவும் ஆட்டியெடுத்து, அதை திர்யக்பாதநயந்திரத்தில் வைத்து, அடுப்பிலேற்றி கிரமமாகத் நீயை விருத்தி செய்து, இரஸமனைத்தும் ஜலபாத்திரத்தில் திர்யக்பாதந குழாய் மூலமாய் இறங்கும் வரையில் எரிக்க வேண்டும். அப்பொழுது இரஸம் நன்றாகச் சுத்தியடையும்; எல்லா வேலைகளிலும் உபயோகிப்பதற்கும் உதவும். இவ்வாறு மர்த்தநம், மூர்ச்சநம், பாதநம் முதலிய முறைகளால் இரஸம் வீர்யத்தில் மந்தப்பட்டுச் சாந்தமான குணத்தைப் பெறும்[5]. 31—40.

நிரோதநம்.

இரஸத்தை இந்துப்பு கரைத்த ஜலத்திற்[6] சேர்த்து, ஒரு பாண்டத்திலிட்டு அடக்கம் செய்து வைத்தால், அதற்கு முகம் ஏற்பட்டுவிடும். ஸ்வேதநம் முத

1. ஸர்ப்பாக்ஷ்யாதிகணம்—இரஸமூலிகாவர்க்கம். 144-ம் பக்கம் பார்க்க.

2. தீபிகாயந்திரம்—113-ம் பக்கம் பார்க்க.

3. திர்யக்பாதந யந்திரம்—117-ம் பக்கம பார்க்க.

4. வெகு நுண்மையாக வழவழப்பாய் அரைக்கப் பெற்ற அப்ரகம் **நவநீதாப்ரகம்** என்று மொழியப்படும்.

5. பாதநம்—ஊர்த்வபாதநம், அதஸ்பாதநம், திர்யக்பாதநம் என்று பாதநம் மூவகைப்படும். "குறிக்கப்பட்ட ஔஷதச் சரக்குகளைக் கூட்டி இரஸத்தை பாதநாயந்திரத்திலிட்டு மேல் முகமாகவாவது, கீழ் முகமாகவாவது, குறுக்கு முகமாகவாவது ஆவிப்பாகச் செய்து இறக்கும் முறை "பாதநம்" எனப்படும். இது வங்க தோஷம், அக்னிதோஷம் ஆகிய கஞ்சுகங்களைப் பரிஹரிக்கும்."—இரஸபத்ததி வ்யாக்யா. 105-ம் பக்கமும் பார்க்க.

6. மூலத்தில் "ஸ்ருஷ்ட்யம்புஜை" என்று இருக்கின்றது. 'ஸ்ருஷ்ட்யம்பு' என்பதற்கு ஸைந்தவநீர் என்று ஆயுர்வேதப்ரகாசம். "சிறுநீர், சுக்ரம் ஆர்த்தவம் என்பவை ஸ்ருஷ்ட்யம்பு எனப்படும்" என்று வேறு சிலர். ஆனால் தற்காலத்திய உரையாசிரியர் ஒருவர் "ஸ்ருஷ்டி = ருத்தியென்னும் மூலிகை; அம்பு = குறுவேர்; ஜ = விஷம் என்று" ஒவ்வோரு பொருள் கூறுகிறார்.

லிய ஸம்ஸ்காரங்களால் இரஸமானது சிறந்த வீர்யத்தைப் பெறுகின்றது[1]. இவ்விதம் அடக்கம் செய்யும் முறை நிரோதநம் எனப்படும்[2]. 41.

நியமநம்.

அதன் பிறகு அடியிற் கூறப்படும் முறைப்படி இரஸத்தை அதற்குள்ள ஓடுந்தன்மை நீங்குவதற்காக நியமநம்[3] செய்ய வேண்டும். (1) அதற்குப் பெரும்பூசணி, ஸர்ப்பாக்ஷி, தேள்கொடுக்கு இலை, அல்லிக்கிழங்கு, கரிசிலாங் கண்ணி இவற்றின் சாற்றையும், இச்சாற்றிற்குச் சம அளவு காடியையும் கூட்டி, அதில் இரஸத்தை மூன்று நாட்கள் ஸ்வேதநம் செய்ய வேண்டும். (2) அல்லது பிளகு, ஸுவர்ணமாக்ஷிகம், இந்துப்பு, வெண்கடுகு, முருங்கை, வெங்காரம் இவற்றைக் காஞ்ஜிகத்துடன் சேர்த்து, அதில் இரஸத்தை ஸ்வேதநம் செய்தால் அது கிராஸத்தில்[4] கவர்ச்சியுள்ளதாகும். 42—43½.

தீபநம்.

(1) க்ஷாரத்ரயம்,[5] இந்துப்பு, ஸுவர்ணமாக்ஷிகம், சித்திரமூலம், முருங்கை, வெண்கடுகு, தீக்ஷ்ணலோஹம், புளிவஞ்சி, கடலுப்பு, திப்பிலி, புளி, காடி இவற்றைக் கூட்டி, அதில் நேபாளமும், செப்புபோக்குகளும் போட்டு, வெயிலில் வைத்து ஒருவாறு சுண்டச் செய்து எடுத்தால் அதற்கு ஆஸவாம்லம் எனப் பெயர். இது இரஸத்தை தீபநம் செய்ய உதவும். (2) இரஸத்திற்கு வீர்யமும் ஒளியும் விருத்தியாவதற்காக ஆஸவாம்லத்தில் அதை ஸ்வேதநம் செய்யவேண்டும். அடியிற் கூறப்படும் ஸர்ப்பாக்ஷ்யாதி வர்க்கத்தைச் சேர்ந்த மூலிகைகளில் எவை கிடைக்கக் கூடியவைகளோ அவற்றின் ஸ்வரஸத்திலும் இரஸத்தை ஸ்வேதநம் செய்யலாம். இது தீபநமுறையாம்[4]. 44, 45.

1. முகம்—அப்ரகாதி தாதுக்களைத் தனக்குள் சரிப்பித்துக் கொள்ளுவதற்காக இரஸத்தில் ஏற்படும் ஒருவித வாய்.

2. நிரோதநம், போதநம் என்றும், பேதநம் என்றும் வழங்கப்படும். 105-ம் பக்கம் பார்க்க. ["மர்த்தநம், மூர்ச்சநம், பாதநம் முதலியவற்றுல் இரஸம் வீர்யமிழந்து சாந்தத் தன்மையடையும்; அத்தன்மையைப் போக்கி வீர்யத்தை விருத்தி செய்வதற்காக போதநம்செய்ய வேண்டும். கொட்டாங்கச்சியிலாவது, பீங்கான் பாத்திரத்திலாவது இரஸத்தைச் சேர்த்து, அதில் இந்துப்புநீரை வார்த்து, பூமியில் இராஜ ஹஸ்தப் பிரமாணம் ஆழமான குழியில் மூன்று நாட்கள் புதைத்து வைத்தெடுக்கவும்; இதனுல் இரஸத்திற்கு ஷண்டத்தன்மை (வீர்யமின்மை) நீங்கிப்போம்."—ஆயுர்வேதப்ரகாசம்.]

3. நியமநம்—105-ம் பக்கம் பார்க்க.

4. கிராஸம்—106-ம் பக்கம் பார்க்க.

5. க்ஷாரத்ரயம்—132-ம் பக்கம் பார்க்க.

ஸர்ப்பாக்ஷி, பாலே, காட்டுவெள்ளரி, பொன்னுங்கண்ணி, செங்கங்குப்பி, தக்காளி, மயிர்மாணிக்கம், பிரம்மதண்டு, எலிச்செவி, சாறடை, அழுக்கிருங் கிழங்கு, அறுகு, கருப்புமருதோன்றி, கைதல், கறுப்புப் பயறு, தண்ணீர்விட்டான், பிரண்டை, காட்டுக்கருணை, அக்னிகர்ணிகா, வெள்ளெருக்கு, முருங்கை, ஊமத்தை, கஸ்தூரிப்புல், முசுமுசுக்கை, வாழை, மஞ்ஜிஷ்டி, கோரைக் கிழங்கு, கருநொச்சிலி, தொட்டாற் சுணங்கி, தேவதாளி, பிரமி, கருடங் கிழங்கு, சித்திரமூலம், தும்பை, மணத்தக்காளி, திப்பிலி, மஞ்சள், செஞ்சந்தனம், ஜாதிமல்லிகை, தக்காளி, பில்வம், நிலக்கடம்பு, குசும்பாச்செடி, பீர்க்கு, நீர்த்திப்பிலி, கலம்பைக் கிழங்கு, பேய்ச்சுரை, பேயாவாரை, சீந்தில், கருணைக்கிழங்கு, சூரியகாந்தி, மூங்கில், நிலப்பனங் கிழங்கு, யானைவணங்கி ஆகிய இவை இரஸமூலிகைகள்[1] எனப் பெரும்பாலும் வழங்கப்படும். இவை இரஸத்தை பாவனை செய்யவும், ஸ்வேதநம் செய்யவும், மூஷைகளிற் பூசுவதற்கும் சிறந்தவையாம். 46—52.

இரஸ மூலிகா வர்க்கம்.

இரஸ பந்தந முறைகள்.

(1) மேலே எட்டு விதமான இரஸ ஸம்ஸ்கார முறைகள் கூறப்பட்டன; இரஸத்தை ஔஷதத் திரவ்யங்களோடு சேர்ப்பதற்கும், தனியாக இரஸாயநமுறையில் இரஸத்தை உபயோகிப்பதற்கும் அவ்வெட்டு முறைகளும் பிரயோஜனப் படுகின்றன. கேவலம் ஔஷதத் திரவ்யங்களில் மாத்திரம் இரஸத்தைச் சேர்ப்பதற்காக அந்த இரஸத்திற்குச் செய்யப்படும் மற்ற ஸம்ஸ்கார முறைகள்[2] இங்கு மொழியப்படவில்லை. (2) இனி இருபத்தைந்து விதமான இரஸபந்தந முறைகள் மொழியப்படும்; அவற்றுல் இரஸத்திற் குள்ள கிரஹிக்கமுடியாமை, ஓடிந்தன்மை ஆகியவை நீங்கும் என்றும், இரஸம் அம்முறைகளால் கட்டப்படுமென்றும் சாஸ்திரஞ்ஞர் கூறுவர். அவையாவன :— ஹடம், ஆரோடம், ஆபாஸம், க்ரியா ஹீநம், பிஷ்டி, க்ஷாரம், கோடம், போடம், கல்கம், கஜ்ஜலி, ஜீவம், நிர்ஜீவம், நிர்பீஜம், ஸபீஜம், சிருங்கலா, த்ருதி, பாலம், குமாரம், தருணம், வ்ருத்தம், மூர்த்தி, ஜலம், அக்னி, ஸுஸம்ஸ்க்ருதம், மஹாபந்தம் என்று இரஸத்தைக் கட்டும் முறைகள் இருபத்தைந்து

இருபத்தைந்து வித இரஸபந்தங்கள்.

1. இரஸ மூலிகை—இரஸத்தைப் பக்குவம் செய்வதற்கு உபயோகமான ஓஷதிகள். இதுவே ஸர்ப்பாக்ஷ்யாதிகணம் எனப்படும்.

2. அப்ரகக்காஸமாகம், சாரணம், கர்ப்பத்ருதி, பாஷ்யத்ருதி, ஜாரணம், ஸாரணம், கிராமணம், வேதநம், ஸேவநம், இரஞ்ஜநம் என்கிற மற்றும் பத்துவித இரஸ ஸம்ஸ்காரமுறைகள் இவ்வத்தியாயத்தின் இறுதியில் அநுபந்தமாக விவரிக்கப்படும்.

விதமெனக் கூறப்படுகிறது. ஜலாகாபந்தம் என்கிற இருபத்தாறுவது முறையையும் சிலர் கூறுகின்றனர்; ஆனல் அம்முறை தேஹத்திலுண்டாகும் வியாதிகளில் உபயோகமாவதில்லை; அது ஸ்திரீகளை வசப்படுத்துவதற்கான சிறந்த முறையாம். 53—58½.

எந்த இரஸமானது தகுந்தவாறு சுத்தி செய்யப்படாமல் உபயோகிக்கப்படுகிறதோ அது "ஹடபந்தரஸம்" எனக்கூறப்படும்; அதை மனிதர் உபயோகத்தால் மரணமாவது ஸம்பவிக்கும், அல்லது கடுமையான வியாதியாவது அதனுல் உண்டாகும்.—59½.

ஹடபந்தம்.

நன்முகச் சுத்தி செய்யப்பட்ட இரஸமானது "ஆரோடபந்தம்" என்று வழங்கப்படும். அவ்வித இரஸம் தேஹத்தைத் திடப்படுத்துவதிற் சிறந்தது[1]; வியாதிகளை மெதுவாக நிவாரணம் செய்யக்கூடியது. 60½.

ஆரோட பந்தம்

புடங்களால் எரிக்கப்பட்டு பக்குவம் செய்யப்பட்டுள்ள யாதொரு இரஸமானது பிறகு தாதுக்கள்-மூலிகைகள் முதலியவற்றில்[2] பாவனை செய்யப்படுகையில், பஸ்மாதி ரூபத்தைவிட்டு அதன் இயற்கைத் தன்மையைப் பெறுகிறதோ அந்த இரஸம் 'ஆபாஸபந்தம்' என்று கூறப்படும். 61½.

ஆபாஸ பந்தம்.

சுத்தி செய்யாத உலோஹம் முதலியவற்றுல் எந்த இரஸம் பக்குவம் செய்யப்படுகிறதோ, அது 'க்ரியா ஹீநபந்தம்' என்று வழங்கப்படும். அதை உபயோகிக்கையில் அபத்யம் செய்தால் கோளாறுகள் உண்டாகும். 62.

க்ரியா ஹீந பந்தம்.

மிகக் கடும் வெயிலில் இரஸத்தைக் கல்வத்திலிட்டு மிகவும் பலமாய் அரைக்க, அந்த இரஸம் வெண்ணெய் அல்லது மாப்பிண்டம்போல் ஆகும்; அந்த இரஸம் 'பிஷ்டிகா பந்தம்' எனப்படும்; தீபநம், பாசநம் என்கிற குணங்களில் அது சிறந்தது. 63½.

பிஷ்டிகா பந்தம்.

சங்கு, முத்து, நத்தை முதலியவற்றின் சிப்பிகள், பலகறை இவை முதலியவைகளால் இரஸம் பக்குவம் செய்யப்படுமானல் அது 'க்ஷாரபந்தம்' எனப்படும். இவ்விதம் பக்குவமான இரஸம் தீபநசக்தியை விருத்தி செய்யும்; சூலையென்னும் வயிற்றுளைத்தலையும் பரிஹரிக்கும். 64½.

க்ஷாரபந்தம்.

1. 'க்ஷேத்ரகரணம்' என்கிற மூலத்திற்குத் தேஹத்தைத் திடப்படுத்தல் என்றுவது, கர்ப்பாசயத்தைப் பலப்படுத்தி ஸந்தாந விருத்தி செய்யவல்லது என்றுவது பொருள் கூறலாம்.

2. தாதுக்கள் என்பதால் பொன் முதலியவைகளும், மூலிகைகள் என்பதால் ஸர்பபாக்ஷ்யாதி மூலிகைகளும் குறிக்கப்படுகின்றன.

அக்னியிலிட்டு பக்குவம் செய்கையில் இரஸம் ஒருவாறு முட்டை வடிவமடைந்து, பிறகு அக்னியில் மேன்மேலும் ஊதினால் அளவிற் குறைந்து வருமானால் அது 'கோடபத்தரஸம்' எனப்படும்[1]. அவ்விதம் பக்குவம் செய்த இரஸம் ஸகல ரோகங்களையும் பரிஹரிக்கக் கூடியதாகும். 65½.

கோட பந்தம்.

இரஸத்தைக் கஜ்ஜலியாகச் செய்து, அதை வாழையிலையில் இட்டு மடித்துவைத்தால், அது தட்டையாக அதில் வழுமூண்ட உருவத்தைப் பெற்றுப் பொட்டளம் போல் ஆகும்; அது 'போடபத்த இரஸம்' எனப்படும்; அதையே 'பர்ப்படி' என்றும் கூறுவர்[2]. அது பாலர்களுக்குக் காணும் வியாதிகளையெல்லாம் நிவ்ருத்தி செய்யவல்லது. 66½.

போட பந்தம்.

ஸ்வேதம் முதலிய முறைகளால் பக்குவம் செய்யப்பட்ட இரஸமானது பங்கத் தன்மையை[3] அடைகிறது; அவ்விதம் இரஸம் 'கல்கபந்தம்' எனக் கூறப்படும்; இது அந்தந்த முறைகளிற் கூறிய பலனைக்[4] கொடுக்கும். 67, 68.

கல்க பந்தம்.

இரஸமும் கந்தகமும் சேர்க்கப்பட்டு உண்டாகும் சரக்கு 'கஜ்ஜலி' எனப்படும்; அது மிக்க மிருதுவாகவும், மையைப் போன்ற நிறமுடையதாகவும் இருக்கும். அது அந்தந்த முறைகளின்படி வெவ்வேறு சரக்குகளோடு சேர்க்கப்படும். இவ்விதம் செய்யப்படுகிற இரஸத்தை 'கஜ்ஜலிபந்தம்' என்பார்கள். 69.

கஜ்ஜலி பந்தம்.

பஸ்மமாகச் செய்யப்பெற்ற இரஸம் அக்னி ஸம்பந்தத்தினால் ஆவியாகப் போய்விடுமானால், அது 'ஜீவபத்தம்' என்று கூறப்படும்; இதை புட்கொண்டால் இரஸ பஸ்மத்தினால் நேரிடும் தீய குணம் உண்டாகாததோடு, இது குறிப்பிட்ட வியாதிகளையும் எளிதில் நிவாரணம் செய்யும். 70.

ஜீவ பந்தம்.

அப்ரகம் சேர்த்தாவது, கந்தகம் சேர்த்தாவது ஜாரணம் செய்யப்பட்டுள்ள இரஸத்தை பஸ்மமாக்கவும்; இவ்வாறு பஸ்மமாக்கிய இரஸம் எல்லா உலோஹங்களின் பஸ்மங்களினும் மிகச் சிறந்ததாம்; அக்னி ஸம்பந்தத்தினால்

நிர்ஜீவ பந்தம்.

1. "பொன்னிறமாய், கோழிமுட்டையின் உருவமடைந்ததாய் பக்குவம் செய்யப்பட்ட இரஸம் கோடம் எனப்படுகிறது. எளிதில் உடையுந் தன்மையுள்ளது; அது எளிதில் அக்னியினால் அழிக்கக் கூடியதாகையால், மிருதுவான தீயில் அதைப் பக்குவம் செய்யவேண்டும்" என்று சப்தவிந்து.

2. பர்ப்படி—இரஸபர்ப்படி யென்றும் கூறப்படும். அப்பளாம் போன்றிருக்கும் உருவம் பர்ப்படி யெனப்படுகிறது.

3. பங்கத்தன்மை—சாந்துபோன்ற தன்மை.

4. ஸ்வேதநம் மர்த்தநம் முதலியதைச் செய்கையில் உபயோகிக்கப்படும் சரக்குகளுடைய குணங்களை அனுஸரித்தேற்படும் பயன் எனக் கருத்து.

ஆவியாகாத இந்த இரஸ பஸ்மம் 'நிர்ஜீவ பத்தம்' எனப்படுகிறது. இது ஸகல ரோகங்களையும் எளிதில் நீர்க்க வல்லது. 71.

கால் பங்கு ஸ்வர்ணத்தை ஜீர்ணம் செய்து கொண்டுள்ள[1] இரஸத்துடன் ஸமபாகம் கந்தகம் கூட்டிப் பிஷ்டியாகச் செய்து புடமிடவும்; இவ்விதமே மறு முறையும் கந்தகம் கூட்டி அந்த இரஸத்தைப் புடமிட அது 'நிர்பீஜ பத்தம்' எனப்படும்; இதுவும் எல்லா வியாதிகளிலும் உபயோகிக்கக் கூடியது. 72.

நிர்பீஜ பந்தம்.

அப்ரக ஸத்துவம், ஸ்வர்ணம், வெள்ளி, தாம்ரம், காந்தம் இவைகளைச் சாந்து மாதிரியாக அரைத்து, அவற்றில் ஜாரணம் செய்யப் பெற்ற இரஸத்துடன் ஆறு மடங்கு கந்தகம் கூட்டி பஸ்மம் செய்யவும்[2]. அவ்விதம் பக்குவம் செய்த இரஸத்தை 'பீஜ பத்தம்' என்பார்கள். இதன் பிரபாவம் மிகப் பிரபலமானது. 73.

பீஜ பந்தம்.

வஜ்ரம் முதலியதைக் கூட்டிச் செய்த இரஸபஸ்மத்தையும், வேறுவித முறைகளால் செய்த இரஸபஸ்மத்தையும் ஸம அளவாகக் கூட்டி அரைத்தெடுத்தால், அம்முறை 'சிருங்கலாபத்தம்' எனப்படுகிறது; இது உலோஹம் போல் பலப்படித்தக் கூடியது. இது வெகு எளிதில் தேஹத்திற் பரவும். இதன் பிரபாவம் வெகு விசித்திரமானது. 74.

சிருங்கலா பந்தம்.

இரஸமானது கட்டப் பெற்றுவது, பஸ்மமாகச் செய்யப் பெற்றுவது பாஷாணத்துகளோடு கூட்டமும் பெறுமானால், அது 'த்ருதிபத்தம்' எனப்படும். அதை இராஜிகையளவு உட்கொண்டாலும் கஷ்ட ஸாத்யமான வியாதிகளும் தீரும். 75.

த்ருதி பந்தம்.

ஸம அளவான அப்ரகத்தை ஜீர்ணம் செய்துகொண்டுள்ள இரஸத்தை ஸ்வேதந முறையிற் பக்குவம் செய்து, ஏற்ற ஔஷதச் சரக்குகளுடன் கூட்டி யுபயோகிக்கலாம். இது 'பாலபத்தரஸம்' என்று கூறப்படும். இது சிறந்த இரஸாயநம்; பாலர்களுக்கு உண்டாகும் கிரஹ தோஷங்களையும், உபத்திரவங்களையும் தீர்க்கும்; அநேகம் வியாதிகளையும் தேஹத்திற் சேராமல் தடுக்கும். 76.

பால பந்தம்.

இரு மடங்கு அப்ரகத்தை ஜீர்ணம் செய்துகொண்ட இரஸம் முன்போல் பக்குவம் செய்யப்பட, அது 'குமார பத்தம்' எனப்படும். இதை ஓர் அரிசிப் பிரமாணம் உபயோகிக்க மூன்று வாரத்திற் கடுமையான எப்பிணியும் தீரும்; இது சிறந்த இரஸாயநமுமாகும். 77.

குமார பந்தம்.

1. ஸ்வர்ணம் சேர்த்து ஜாரணம் செய்யப்பட்ட இரஸம் எனப் பொருள்.

2. இதை ஷட்குண பலி ஜாரித ரஸம் என்று வழங்குவர்.

அவ்விதமே நான்கு மடங்கு அப்ரகத்தை ஜீர்ணம் செய்து கொண்டுள்ள இரஸத்தை 'தருணபத்தம்' என் பார்கள். அது மிகச் சிறந்த இரஸாயநம்; ஒரு வாரத்தில் எல்லாப் பிணிகளையும் நீர்க்கும்; வீர்யம், தேஹ வன்மை இவைகளையும் தரும். 78.

தருண பந்தம்.

அங்ஙனமே ஆறு மடங்கு அப்ரகத்தை ஜீர்ணம் செய்து கொண்டுள்ள இரஸம்[1] அக்னியிலிட்டாலும் பற ந்துவிடாமலிருந்தால், அது 'வ்ருத்தபத்தம்' எனக் கூறப்படும். இது தேஹ ஸித்தியையும், உலோஹஸித்தி யையும் தரக்கூடிய மிகப் பிரபாவம் வாய்ந்தது. 79.

வ்ருத்த பந்தம்.

அபூர்வமான திவ்ய மூலிகைகளால் பக்குவம் செய்யப்பட்டு, அப்ரகஜாரணத்தைப் பெறுந்தாய், அக்னியைத் தாங்கக் கூடியதாயுள்ள இரஸம் 'மூர்த்திபத்தம்' எனப்படுகிறது; இந்த மஹாரஸம் ஜாரணம் செய்யப்பட்டாலும், அக்னியின் ஸம்பந்தத்தினால் பறந்து போவதில்லை. இதை எந்த வியாதிக்கு உபயோகித்தாலும் ஒப்பற்ற பயனுண்டாகும். 80,81.

மூர்த்தி பந்தம்.

சிலோதகம்[2] முதலான நீர்களால் அரைக்கப்பட்டு கட்டுண்ட இரஸம் 'ஜலபத்தம்' எனப்படுகிறது. அது நிழற்தனம், வேறு வியாதிகள் ஆகியவற்றை நிவாரணம் செய்யும்; மேலும் ஸித்தஸாதகமுறைகளுக்குக் கூறப்படும் பிரயோஜனங்களையும் உண்டுபண்ணும். 82.

ஜல பந்தம்.

இரஸமானது தனியாகவாகிலும், உலோஹத்துடன் கூடிய தாகவாகிலும் நீயிலிட்டு ஊதப்படும்போது சூளி கையினுருவத்தைப் பெற்று, கூடியமடையாமலும் நிற்குமானால் அது 'அக்னிபத்தரஸம்' எனப்படும். அது

அக்னி பந்தம்.

1. "இரஸம் இரு மடங்கு அப்ரகத்தை ஜீர்ணம் செய்து கொண்டால், அது சிறிதும் புகையாது. (2) நான்கு மடங்கு அப்ரகத்தை ஜீர்ணம் செய்துகொண்டால் இரஸம் பறந்துவிடாமல், மூஷையினுள் குதிப்பது போலத் தத்தளிக்கும். (3) ஆறு மடங்கு அப்ரகத்தை ஜீர்ணம் செய்துகொண்ட இரஸம் அடிக்கடியும் குதிக் கும்; ஆனால் வெளியில் துள்ளி வராமல் இருந்தவிடத்திலேயே நிலை த்துவிடும். (4) எண் மடங்கு அப்ரகத்தை ஜீர்ணம் செய்துகொண்ட இரஸம், அக்னியில் ஊதப்படுகையில் சிறிது கூர்ணித்து வரும்; வெண்மை முதலிய பலவித நிறங்கள் எற்படும்; அக்னியில் அவ்வித இரஸம் அசைவதுமில்லை, ஆவியாகப் பறப்பதுமில்லை."—இரஸஸாரம்.

2. சிலோதகம்—கனிகளில் ஊறும் தாதுப் பொருட்களடங் கிய ஜலம். வேறு சிலரது கொள்கை பின்வருமாறு:—"தண்ணீர் நிரம்பிய ஒரு பாத்திரத்தில் ஸமயெடை கந்தகத்தையும் தாளகத்தை யும் சேர்க்கவும்; பிறகு அந்த நீரில் குமிழிகள் கிளம்பும்போது, அதை வடித்து எடுத்துக்கொள்ளவும்; இந்த நீர் சிலோதகம் எனப் படும்"—இரஸார்ணவம்.

ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் சக்தி முதலியவற்றை யுண்டுபண் ணும். 83.

ஸ்வர்ணத்துடனுவது, வெள்ளியுடனுவது இரஸத்தைக் கூட்டி அக்னியிலிட்டு ஊதினால் அவற்றுடன் அவ்விரஸம் ஒரு மிக்கச் சேர்ந்துவிடும்; மேலும் இரஸம் க்ஷீணிக்காமலும், நன்றாகத் திரண்டு கனத்துப்போய் குளிகை யுருவத்தையும் பெற்று, மிகவும் ஒளி வீசி ஜ்வலிக்கும்; அதை யெடுத்து உடைத்தால் உப்பைப் போலப் பொடியாகும்; தேய்த் தால் அது அழுக்கடைந்து கோடுகள் தோன்றும்; மீண்டும் அக்னி யிலிட்டு ஊத, நாற்றமொன்றும் உண்டாகாமல் எளிதில் திரவமா கும்; அவ்வித இரஸம் 'மஹாபத்தம்' எனக் கருதப்படுகிறது. 84.

மஹா பந்தம்.

விஷ்ணுக் கிராந்தி, சீந்தில், நேபாளம், ஊமத்தை வேர், பேய்ப் புடல், பேய்த்தும்மட்டி, காட்டாமணக்கு, கரு ணைக்கிழங்கு, புலியுகிர், தும்பை, தேன்கொடுக்கு இலை, யானைவணங்கி, செருப்படை, பொட்டிலுப்பு இவற்றை இரஸத்துடன் கூட்டி, கன்றுயின்றுத பசுவின் சிறு நீராலாவது, பசுவின் பித்தத்தினுலாவது அதை ஆட்டி யெடுத்து, குக்குடபுடத்திற் பக்குவம் செய்தெடுக்க வேண்டும்; இவ்வா று பக்குவமான இரஸத்தை உலோஹ பஸ்மங்களுடன் கூட்டி அரைத் தெடுத்து, ஏதாவது தகுந்த யந்திரத்தில் வைத்து மூர்ச்சனம் செய்ய வும். இரஸத்திற்கு இவ்விதம் செய்யப்படும் பக்குவமுறை 'ஸுஸம்ஸ்க்ருதபந்தம்' என்று[1] வழங்கப்படும். 85—87.

ஸுஸம்ஸ்க்ருத பந்தம்.

(1) அரைப்பங்கு ஸ்வர்ணத்தையாவது, கால்பங்கு நாகத்தை யாவது ஜீர்ணம் செய்துகொண்டுள்ள இரஸத்துடன் எண்ணெயையும், வாளுழுவையையும் கல்கமாகச் செய்து சேர்க்கவும்; மேலும், ஆமணக்குவித்து, இலவங்கொட்டை, கஞ்சா, ஆளிவிதை, பெருங்குருமபை, இலந்தங்கொட்டை இவற் றின் சூர்ணத்தையும் கூட்டி, அனைத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைக்கவும்; இது இரஸத்திற்கு 'ஜலூகாபந்தம்' என்கிற இரு பத் தாறுவது பந்தன முறையாம். அவ்விதம் பக்குவம் செய்த ஜலூகாரஸத்தை காஞ்சோறியின் சூணைகளைச் சேர்த்து அதில் வைத்து, ஆளிவிதைத் தைலத்தில் ஊறவைத்து எடுத்து, கற்பூரம், வெங்காரம், தவணம், நிப்பிலி இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய கஷாயத்தில் ஸ்வேதந முறைபில் பக்குவம் செய்ய, அந்த இரஸம்

ஜலூகா பந்தம்.

1. விஷ்ணுக் கிராந்தி முதலியதைக் கொண்டு செய்யப்படும் இம்முறை இரஸமூர்ச்சனைக்கு உபயோகமான 'கல்பம்' என்று மூலத்தில் உள்ளது. ஆனால் அவதாரிகையிற் கூறியவண்ணம் ஸுஸம்ஸ்க்ருதபந்தம் என்பதாக ஆந்த்ரலிபியிலுள்ள புஸ்தகத்தில் காணப்படுவது யுக்தமாகத் தோன்றுவதால் அவ்விதமே இங்கு எழுதப் பட்டது.

மிகத் துலக்கமுள்ளதாய் ஆகும்; அதை தப்தகல்வத்தில் இட்டு முறைப்படி நன்றாக அரைத்து, வலயமாகச் செய்து உபயோகிக்கலாம்; இது சிறந்த ஜலாகாபத்தரஸமாகும். (2) ஆத்திக் கீரைச் சாறு, இலை மொட்டுக் கஷாயம், ஜாதிமல்லிகை வேர்க்கஷாயம், சிம்சபாமரப்பட்டையின் கஷாயம், நெஞ்சறுப்பான், த்ரிபலா சூர்ணம், சரிப்பொடி இவற்றைக் கல்வத்திலிட்டு, இரஸத்தை அவற்றுடன் கூட்டி அரைக்கவும். இவை புருடர்களுக்கு ஆண்மையை அதிகரிக்கச் செய்வதற்கு உபயோகமான ஜலாகாபந்த முறைகளாம்[1]. 88—108.

இரஸ பஸ்ம முறைகள்.

(1) செம்முருக்கம் வித்து, ஜீவகமென்னும் மூலிகை இவற்றை இரஸத்துடன் கூட்டி, எலுமிச்சம்பழச்சாற்றில் ஆட்டி, பாதராயந்த்ரத்திலிட்டு இறக்கிப் புடமிட இரஸம் பஸ்மமாகும். (2) நாயுருவி விதைகள், தாமரை வித்து இவற்றை நன்றாகச் சூர்ணம் செய்து, அச்சூர்ணகல்கத்துடன் இரஸத்தைக் கூட்டி, திடமான முறையிலிட்டு முறைப்படி புடமிட இரஸம் பஸ்மமாகும். (3) பேயத்திப் பாலில் காயத்தை நன்றாக பாவனை செய்து, அக்காயத்தையும் இரஸத்தையும் கூட்டி யரைத்து, முறைப்படி புடமிட இரஸம் பஸ்மமாகும். (4) நீர்க்கடம்பு, விஷ்ணுக்கிராந்தி இவ்விரண்டையும் காடிவிட்டு அரைத்து, அக்குழம்பை யெடுத்துக்கொண்டு, அக்குழம்பில் இரஸத்தை நன்றாக ஆட்டி, மூர்ச்சநம் செய்யவும்; அவ்விதம் ஏழு முறை செய்து, அந்த இரஸத்தை ஒரு பாணலியில் சேர்த்து, முற்கூறிய குழம்பை விட்டுக்கொண்டே அடுப்பில் பக்குவம் செய்யவும்; அவ்விதம் ஒரு நாள் செய்ய இரஸம் பஸ்மமாகும்; அப்பஸ்மம் பார்ப்பதற்கு உப்பைப்போலத் தோற்றும். (5) நாயுருவி வித்துகள், ஆமணக்கு வித்துகள் இரண்டையும் சூர்ணம் செய்து கொள்ளவும்; ஒரு மூசையில் முதலில் இச்சூர்ணத்தை அடியிற் போட்டு, அதன்மேல் இரஸத்தைச் சேர்த்து, அதன்மேல் மீண்டும் முற்கூறிய சூர்ணத்தைப் போட்டு மூடி, இலுவாக நான்கு முறை புடமிட இரஸம் பஸ்மமாகும். (6) பேய்ச்சுரை வேரை அரைத்துக் கல்கமாகச் செய்து, அதனிடையில் முலைப்பாலை ஊற்றி, அதில் இரஸத்தை வைத்து மறைத்து வறட்டிகளை யடுக்கி, அதனுள் அக்கல்கத்தை வைத்துப் புடமிடவும்; இவ்வாறு ஏழு முறை புடமிட இரஸம் பஸ்மமாகும். (7) ஏறழிஞ்சில் வேரைக் கஷாயமிட்டு, அக்கஷாயத்தினுல் கல்வத்தில் ஸமயெடை கந்தகத்துடன் சேர்க்கப்பட்ட இரஸத்தை ஒரு பகல் முழுதும் அரைத்தெடுக்கவும்; பிறகு பூதராயந்த்ரத்தில் காலையிலிருந்து மாலை வரையில் எரித்

1. இரஸௌஷத முறைகளுக்குச் சம்பந்தமில்லாத வேறு ஏழு முறைகள் இங்கு மொழி பெயர்க்கப்படவில்லை; அவை யாவும் ஸ்த்ரீ வசீகரணத்திற்கான **மதநவலயங்கள்** என்னும் முறைகளாகும்.

தெடுக்க இரஸம் பஸ்மமாகும். (8) இரஸத்தையும், அதற்குச் சமயெடை அப்ரகத்தையும் கல்வத்திலிட்டு, ஆலம்பால் விட்டு மூன்று யாமங்களளவும் அரைக்கவும்; பிறகு ஆலம் விறகிட்டு அந்த இரஸத்தை எரிக்க, அது பஸ்மமாய் விடும்[1]. 109—118.

இரஸௌஷத முட்கொள்ளும் முறை.

பிறகு முற்கூறிய இரஸத்தை கொம்பு, தந்தம், மூங்கில் ஆகிய ஏதேனுமொன்றாலாகிய பாத்திரத்தில் வைத்திருந்து, (1) இரஸமுறையிற் கைதேர்ந்த குருவின் உபதேசத்தைக் கேட்டு, அதன்படி இரஸௌஷதத்தை வெற்றிலையில் வைத்து மடித்து மென்று விழுங்கிவிட வேண்டும். (2) சிறுகீரை, கொத்தமல்லிக்கீரை, புடல், சுரை முதலியவைகளை நெய், இந்துப்பு, தனியா, ஜீரகம், இஞ்சி ஆகியவற்றால் பக்குவம் செய்து, இரஸௌஷத முபயோகிப்பவர் அவற்றை உட்கொள்ளலாம். மேலும் கோதுமை, பழகிய சம்பா அரிசி இவற்றாலான அன்னம், பசுவின் பால், பசுவின் நெய், பசுவின் தயிர், ஹம்ஸோதகம்[2], பயற்றங் கஞ்சி ஆகியவைகளும் உபயோகமாகும்; இது இரஸௌஷத முபயோகிப்பவருக்குச் சுருக்கமான பத்தியமுறை. (3) கத்திரி, பில்வம், பூசுணி, பிரப்பங்கொழுந்து, பாகல், உளுந்து, கடலை, காராமணி, கொள், கடுகு,

இரஸௌஷத தங்களுக்குப் பத்திய முறை.

1. **இரஸபஸ்ம பரீக்ஷை:**—"பளபளப்பில்லாமலும், கணமில்லாமலும், வெண்மையாகவும், உலோஹத்தை மாரணம் செய்யக்கூடியதாயும், அக்னியில் ஓடாமலும் இருந்தால் அவ்வித இரஸபஸ்மம் சிறந்தது" —இரஸஸங்கேதகலிகா. "இரஸபஸ்மத்தை உமித்தணலில் ஒரு யாமகாலம் எரித்தாலும் பறந்துவிடாமல் இருந்தால் அது சிறந்த பஸ்மம். அதிலும் மூலிகைகளைக் கொண்டு பஸ்மமாக்கிய இரஸம் சிறந்தது."—இரஸரத்நாகரம்.

இரஸகர்ப்பூர முறை:— "காவிக்கல், செங்கல், ஸௌராஷ்ட்ர மருத்திகை, படிகாரம், இந்துப்பு, உழமண்ணுப்பு, செம்மண் இவற்றைச் சமபாகம் எடுத்து அரைத்து வஸ்த்ரகாளகம் செய்து, அதே யெடை இரஸமும் கூட்டி, ஒரு யாமகோரம் அரைத்து, அவ்வளைத்தையும் ஒரு காசபாத்திரத்தில் சேர்த்து, அதன் மீது மற்றொரு பாத்திரத்தைச் சமமாக வைத்து மூடி, கூட்டு வாயை நன்கு சீலமண் செய்து மூடி, பிறகு பாத்திரத்தின் மேற்பாகம் முடியவும் மூன்று சீலமண் செய்து உலர்த்தி யெடுத்து, அடுப்பிலேற்றி மூன்று அல்லது நான்கு தினங்கள் தீயிட்டு எரிக்கவும். பிறகு மெதுவாகப் பாத்திரத்தைத் திறந்து, மேல் பாத்திரத்தினுள் கர்ப்பூரம் போலப் படிந்துள்ள இரஸௌஷதத்தை யெடுத்துக் கொள்ளவும். 'இரஸகர்ப்பூரம்' எனப்படுகிற இதை சந்தனம், கஸ்தூரி, குங்குமப்பூ முதலியதுடன் உட்கொள்ளலாம்."—ஆயுர்வேதப்ரகாசம்.

2. **ஹம்ஸோதகம்**—சூரிய கிரணங்களின் பரிசத்தை எப்பொழுதும் பெற்று, இரவில் சந்திர கிரணங்களாலும் குளிர்ச்சியாக்கப் பெற்று, அகஸ்திய நக்ஷத்திரத்தின் ஒளிபட்டு எத்தோஷமும் நீங்கியதான மிகப் பரிசுத்தமான ஜலம்.

எள், இலையும், இலங்கமும், எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தலும், கோழியின் இறைச்சியும், மதுபானமும், ஆநாபமாம்ஸமும், காடியும், வாழையிலையில் போஜனம் செய்வதும், வெண்கலப் பாத்திரங்களின் உபயோகமும், குருகுணம்-தீக்ஷ்ணம்-உஷ்ணம் ஆகிய குணமுள்ள பதார்த்தங்களை யுபயோகிப்பதும் இரஸௌஷத முட்கொள்பவருக்குத் தகாதவையாம். மேலும் 'ககாராதி கணங்கள்' எனப்படும் அடியிற் கூறப்படும் வஸ்துக்களும்

ககாராதி கணங்கள்.

அபத்தியங்களாம்:—(1) கண்டங்கத்திரிக்காய், காஞ்ஜிகமென்னும் காடி, நல்லெண்ணெய், கடுகு, ஆமை, தேற்றாங்கொட்டை, வாலுழுவை, பூசுணி, கக்கிரிக்காய், மயில், கோழி, பாகல், பெருப்பூசுணி, கத்தாரி, விளாம்பழம் இவை ககாராதி கணச்சரக்குகளாம்[1]; இவை தேஷீ சாஸ்த்திரத்திற் கூறப்பட்டவை. இதர சாஸ்திரங்களிற் கூறப் பட்டுள்ள மற்றொரு ககாராதி கணமும் அடியிற் கூறப்படுகிறது:— (2) சென்னெல், பாக்கு, இலந்தை, கோழி, குயில், பன்றி, கொள், கண்டங்கத்திரி, கடுகெண்ணெய், புரு, ஆமை, மயில், திப்பிலி, வெள்ளரிக்காய், பாகல், தேத்தாங்கொட்டை, பெரும்பூசுணி, நண்டு, கிளி, காடி இவை ஸ்ரீ கிருஷ்ணதேவன் கூறிய ககாராதி கணமாகும். எந்தெந்த இரஸப் பிரயோகத்தில் இக் ககாராதிகணச் சரக்குகளில் எவை குறிப்பிட்டு அபத்தியமானவையெனக் கூறப் படுகின்றனவோ அவ்வவற்றில் அவ்வச்சரக்குகளை விலக்கவேண் டும். இரஸௌஷத முபயோகிக்கையில் (1) தேக் கெறிவு உண்டானால் தயிரும் அன்னமும் கலந்துட் கொள்வதுடன், ஜீரகம் கூட்டிய கருப்பு மதனியமும் புஜிக்கலாம். (2) வாதக்கோளாறு உண்டா னால் நாராயண தைலம் முதலியதால் அப்யங்கம் செய்யலாம். (3) அரட்டனும் புறட்டனும் ஏற் பட்டால் சிரஸ்ஸின்மீது குளிர்ந்த நீரைத் தெளித்து வரலாம். (4) நாவரட்சி யுண்டானால் இளநீரும், சர்க்கரை கூட்டிய பயற்றங் கஞ்சியும் உட்கொள்ளத் தகுந்தவை. (1) திராக்ஷை, மாதளம்பழம், பேரீச்சு, வாழைப்பழம், தயிர், பால், கரும்பு, சர்க்கரை இவற்றை இர ஸௌஷதங்களின் வீர்யத்தை விருத்தி செய்வதற்காக உட்கொள்ளலாம்; வேறுவித சீதோப சாரங்களையும் செய்யலாம். (2) இரஸௌஷதம் உபயோகிப்பதை நிறுத்தும்போது கண்டங்கத்திரி, பில்வம் இவற்றைப் புஜிக்கலாம். இவை இரஸௌஷத முபயோகிப்பதற்கான ஸாதாரண விதிகள். 119—132.

இரஸௌஷதத்தாலுண்டாம் கோளாறுகளுக்குப் பரிஹாரங்கள்.

இரஸௌஷதத்தின் வீர்யத்தை விருத்தி செய்பவை.

1. இவ்வகுப்பிற் கூறப்படும் சரக்குகளுடைய பெயர்கள் ஸம்ஸ்க்ருதத்தில் ககரத்தில் ஆரம்பிப்பதால் இது 'ககாராதிகணம்' என்று வழங்கப்படுகிறது.

இரஸ ஸம்ஸ்கார முறைகள்

அநுபந்தம்.

(144-ம் பக்கம் டிப்பணியைப் பார்க்க. 8-ம் அத்தியாயமும் படிக்க.)

[இதற்கு முன் 11-ம் அத்தியாயத்தில் ஸ்வேதநம், மர்த்தநம், மூர்ச்சநம், உத்தரணம், பாதநம், நிரோதநம், நியமநம், தீபநம் என்று எட்டு ஸம்ஸ்காரங்கள் கூறப்பட்டன; மற்றுமுள்ள பத்து ஸம்ஸ்கார முறைகள் இங்கு கூறப்படுகின்றன.]

பின் வருமாறு ஒரு ஜலயந்திரம் செய்யவும்:—வட்டமாக ஒரு உலோஹ பாத்திரம்[1] செய்யவும். அதனிடையில் வெகு கெட்டியான உலோஹ ஸம்புடத்தை[2] வைக்கவும். அச்சம்புடத்தில் சுத்தரஸத்தையும், அதற்குப் பதினாறு பங்கு பிடத்தையும்,[3] அறுபத்தினாறு மடங்கு அப்ரகஸத்துவத்தையும் கூட்டி வைக்கவேண்டும். அச்சம்புடத்திற்கு மூடியிட்டு, கூட்டுவாயை ஜலம்ருத்திகையினாலாவது அக்னிம்ருத்திகையினாலாவது[4] பூசியடைத்து, உலோஹபாண்டத்தில் மூன்று ஆடகம்[5] உஷ்ணஜலம் சேர்த்து, அப்பாத்திரத்தை அடுப்பிலேற்றி, சிறுகச் சிறுக அக்னியை விருத்தி செய்து, இரண்டு யாம காலம் எரிக்கவேண்டும். இவ்விதம் செய்ய இரஸம் அப்ரகத்தை அளவில் முறைப்படியாக கரஸிக்கும். அப்ரகஸத்துவத்தைக் கர

அப்ரக கரஸமாகணம்.

1. இரும்பாலாகிய பாத்திரம் எனப் பொருள்.

2. 'கரோடி யென்கிற மண்டை யோடுகள் மூடியிருக்கும் வகையில் இரும்பிஞல் ஸம்புடம் செய்யவேண்டும்'—இரஸப்ரகாசஸுதாகரம். [அடியில் ஒரு கிண்ணமும், மேல் பக்கமும் பக்கங்களும் மூடும்படி பக்கவாட்டில் இரண்டு கிண்ணங்களும் செய்து, அச்சம்புடத்தினுள் சரக்குகளை வைத்து மூடவும். அல்லது அடியிலும் மேலுமாக இரண்டு கிண்ணங்களும் கூட்டுவாயில் நன்கு பதியுமாறு செய்யப்படலாம். இதற்கு கரோடி முறைச் சம்புடம் எனப் பெயராம்.]

3. பிடம்—108-ம் பக்கம் பார்க்க.

4. ஜலம்ருத்திகை, அக்னிம்ருத்திகைகள்—119-ம் பக்கம் பார்க்க.

5. ஆடகம்—137, 138-ம் பக்கங்களைப் பார்க்க.

ஸித்த பிறகு அந்த இரஸத்தை எல்லாக் காரியங்களிலும் பிரயோகிக்க நல்ல பலன்[1] உண்டாம்.

சாரணம்.

கர்ப்பத்ருதியிற்[2] பக்குவமானதற்கு அதன் குணத்தை விருத்தி செய்வதற்காகச் செய்யப்படும் ஸம்ஸ்கார முறை 'சாரணம்' எனப்படும். தாளக ஸத்துவம், அப்ரகஸத்துவம், கோஷாக்ருஷ்டம்[3], தாம்ர ஸத்துவம் இவற்றைச் சமயெடையாகக் கூட்டி, மூஷையிலிட்டு, கருங்காலிக்கட்டைகளைக் கொண்டு எரிக்கவேண்டும்; அவ்வக்கினியை இரண்டு தருத்திகளால் ஊதி, அப்ரக ஸத்துவம் மாத்திரம் மிகுந்து நிற்குமளவும் எரிக்கவும். அவ்வப்ரகஸத்துவத்தைச் சம அளவான இரஸத்துடன் கூட்டி சாரணம்[4] செய்ய வேண்டும்.

கர்ப்பத்ருதி.

முற்கூறிய வகையிலேயே ஒரு பங்கு இரஸத்தில் மூன்று பங்கு அப்ரகத்தை ஜாரணம் செய்வதற்கான முறை 'கர்ப்பத்ருதி' எனப்படும். வேறு உலோஹாதிகளையும் இரஸத்தில் ஜாரணம் செய்யலாம். அதாவது வேறு உலோஹாதிகள் இரஸத்தில் ஐக்கியப்பட்டுத் திரவரூபத்தைப் பெற்று இரஸத்தோடு இரஸமாகக் கூடிப் போதலாம். இதில் அப்ரக ஸத்துவம் முதலியதை இரஸத்துடன் முதலிற் கூட்டிய பிறகே ஜாரணம் செய்யவேண்டும்.

பாஹ்யத்ருதி.

ஒரு மூஷையில் அப்ரகஸத்துவத்தைப் போட்டு, அதில் பிரண்டையின் சாற்றை ஊற்றி, அட்டுப்பும் கூட்டி எரிக்க இரஸரூபத்தைப் பெறும். அவ்விதம் திரவமானதை 'அப்ரகத்ருதி' என்பார்கள். அவ்வப்ரகத்ருதியையும் இரஸத்தையும் பிறகு ஸம அளவாகக் கூட்டினால் இரண்டும் ஒன்று சேரும். இவ்விதம் முதலில் திரவமாக்கிய அப்ரக ஸத்துவாதிகளைப் பிறகு இரஸத்துடன் சேர்த்துச் செய்யும் முறையே 'பாஹ்யத்ருதி' எனப்படுகின்றது. இம்முறை மிகத் தேர்ந்த குருவின் உபதேசத்தால் ஸித்திக்குமென்று கூறப்படுகிறது.

ஜாரணம்.

(1) அப்ரகத்தையும், தாளகஸத்துவத்தையும் ஸம அளவாகச் சேர்த்து ஊதி யெரிக்கவும்; அப்ரகம் மிகுமளவும் எரித்து, அப்பால் இரஸத்துடன் அதை ஜாரணம் செய்யவேண்டும். (2) அப்ரக ஸத்துவத்தை மிகவும் நுண்மை

1. அப்ரகக்கிராஸப் பிரயோஜனம்—"அப்ரகஸத்துவத்தைத் தவிர வேறு எதுவும் இரஸத்திற்குள்ள பறக்கும் தன்மையை நீக்க மாட்டாது. ஆகையால் இரஸத்தை ஓரிடத்தில் நிறுத்தவும், கட்டவும் அப்ரக ஸத்துவம் உபயோகப்படுகிறது"—இரஸஹ்ருதயம்.

2. கர்ப்பத்ருதி—அடுத்தாற்போல் விவரிக்கப்படுவது.

3. கோஷாக்ருஷ்டம்—101-ம் பக்கம் பார்க்க.

4. அப்ரகம், பொன் முதலியவை இரஸத்தில் மறைந்து விடுதல் சாரணம் எனப்படுகிறது.

யாகப் பொடியாக்கவும்; நான்கு வல்லங்களளவான (முகமுள்ள) இரஸத்தில் ஒரு வல்லம் அளவு அவ்வப்ரகஸத்துவத்தைக் கூட்டவும். அவ்வித இரஸத்துடன் கல்கத்தைச்[1] சேர்த்து, மூன்று நாட்கள் தப்தகல்வத்தில் அரைத்து, காடிகள் விட்டு அதைக் கழுவி யெடுத்து, ஒரு பிங்கான் பாத்திரத்தில் வைக்கவும். பிறகு எட்டிலொரு பங்கு பிடத்தை அதற்குக் கீழும் மேலும் சேர்த்து, பூர்ஜ பத்திரங்களால் அப்பாத்திரத்தின் வாயை மூடி, நூல்களால் சுற்றி, வஸ்திரத்தினால் மேலே முற்றிலும் சுற்றி, டோலாயந்திரத்தில் ஸ்வேத முறையில் கோமூத்திரத்தில் ஒரு நாளும், அம்லவர்க்கத்தில் ஒரு நாளும், காடியில் ஒரு நாளும் பக்குவம் செய்யவும்; இவ்விதம் பக்குவம் செய்வதற்குக் கற்சட்டியையாவது, இரும்புப் பாத்திரத்தையாவது, பிங்கான் பாத்திரத்தையாவது உபயோகிக்க வேண்டும். பிறகு உஷ்ணமான காடி கலந்தநீரால் அந்த இரஸத்தை அலம்பி, நான்கு மடிப்புகளாக மடித்த வஸ்திரத்தில் சேர்த்துப் பிழிய, அடிப்பாத்திரத்தில் இரஸம் விழும்; அதில் வேறு எப்பதார்த்தத்தின் கலப்பும் பார்வைக்குத் தோன்றுவிட்டால் அந்த இரஸம் அப்ரகத்தை நன்கு ஜாரணம் செய்துகொண்டதாகக் கருதலாம். இவ்விதம் அப்ரகத்தைச் சம பாகம் ஜாரணம் செய்துகொண்ட இரஸம் 'பாலரஸம்' என்று கூறப்படும்; இரு மடங்கு அல்லது மூன்று மடங்கு அப்ரகத்தை ஜாரணம் செய்துகொண்ட இரஸத்தையும் 'பாலரஸம்' என்பார் சிலர். நான்கு மடங்கு அப்ரகத்தை ஜாரணம் செய்துகொண்டதை 'கிசோரரஸம்' என்பார்கள். ஐந்து மடங்கு அப்ரகத்தை ஜாரணம் செய்துகொண்டது 'யுவரஸம்' எனப்படும். ஆறு மடங்கு அப்ரகத்தை ஜாரணம் செய்துகொண்ட இரஸம் 'வ்ருத்தரஸம்' எனப்படும். ஏழு மடங்கு அல்லது எட்டு மடங்கு இரஸத்தை ஜாரணம் செய்துகொண்ட இரஸம் 'அதிவ்ருத்தரஸம்' என்று வழங்கப்படும். இவ்விதம் பக்குவமான இரஸம் எல்லா ஸித்திகளையும் தரக்கூடியது. இவ்வாறே எல்லா உலோஹங்களையும் இரஸத்தில் ஜாரணம்[2] செய்யலாம்.

1. செப்புப் பாத்திரத்தில் புளிப்பான வஸ்துவையும், இந்துப்பையும் சேர்த்து மூன்று நாட்கள் வைத்திருக்க, மயில் துத்தம் போன்ற நீலநிறச் சாரு ஒன்று தோன்றும்; அவ்விதமே அப்பாத்திரத்தில் பாலையும் உப்பையும் வைத்தாலும் நீலநிறப்பொருள் உண்டாம்; அது கல்கம் என்று கூறப்படுகிறது, இதையே 'களிம்பு' என்று வழங்குவர்.

2. ஜாரணம் என்பது காளகம் பாதகம் என்கிற முறைகளினும் வேறுபட்டது. அப்ரகம், பொன் முதலியதை கிராஸம் செய்துகொள்வதோடு, இரஸம் தன் முந்திய இயற்கை நிலைமையையும் பெற்றிருப்பது ஜாரணமாம்.

பிறகு மொழியப் போகும் வேதமுறையை விருத்தி செய்ய உபயோகமான ஸாரணம் என்னும் ஸம்ஸ்கார முறை இங்கே கூறப்படுகிறது. வாய்ப்பக்கம் மிக்க விசாலமாகவும், காம்புப்பக்கம் மிகக் குறுகலாகவுமுள்ள, உருவில் ஊமத்தம்பூ போன்றதாய் எட்டு அங்குல நீளத்தில், நாலு அங்குலம் சுற்றளவில் மண்ணால் ஒரு மூசை செய்யவும்; அதன் உட்புறம் வெகு வழவழப்பாயிருக்க வேண்டும். நன்கு ஆழமுள்ளதாய் நடுவில் துவாரமுள்ளதாய் மற்றொரு மூசையை அதன் மேல் மூடியாகப் போடும் வகையில் தயார் செய்யவும். நன்றாக ஸாரணம் செய்யப் பெற்ற சுத்த இரஸத்தை முதல் மூசையின் மத்தியில் வைக்கவும். பிறகு மத்ஸியம், ஆமை, தவளை, அட்டை, வெள்ளாடு, பன்றி இவற்றின் கொழுப்புகளைச் சேகரித்து, ஒன்று கூட்டி அந்த இரஸத்தின் மேல் சேர்க்கவும். அதில் பூநாகலத்தவம், தேன் ஆகியவற்றையும் சேர்க்கவும்; இக்கொழுப்பு முதலியவற்றின் அளவு இரஸத்திற்குப் பதினாறில் ஒரு பங்கு வேண்டும்; அவற்றின் மீது பிஜத்திரவியத்தையும் கூட்டி, மற்றொரு மூசையினால் அதை மூடவும்; இம்மூசைகளின் கூட்டுவாயை உப்பும் சாம்பலும் கலந்த கல்கத்தினால் பூசி அடைத்து, மூசையை அதில் மூன்று பாகம் மறையுமாறு பூமியில் புதைத்து, கரிகளை மேலே சேர்த்து, கடுந்தீயிட்டு ஊதவும்; இவ்விதம் எரிக்க மேலெயுள்ள திரவியங்கள் திரவமாகி, ஜாரணமடைந்து இரஸத்தின்மீது விழும்; இவ்விதம் செய்ய, இரஸம் கட்டுண்டு, ஸாரணம் என்னும் ஸம்ஸ்காரத்தைப் பெறும். எப்பொழுதுமே முதலில் இரஸத்திற்கு ஜாரண ஸம்ஸ்காரத்தைச் செய்து, அதன் பிறகு ஸாரணம் செய்தால்தான் நன்றாகக் கட்டப்படும்.

ஸாரணம்.

வெங்காரம், எருமையின் காதிலுள்ள மலம் ஆகியவற்றைச் சமபாகமெடுத்து, எருமைப்பாலால் ஒரு நாள் முடியவும் ஆட்டி யெடுக்கவும்; மேலும் வத்ஸநாபி, லிங்கம், இரஸகம், கந்தகம், காந்தம், பால்துத்தம், பொன் நிமிளை இவற்றையும் மேற்கூறிய கல்கத்துடன் கூட்டி நன்றாக ஆட்டி, அந்த மூசையிற் கீழே பரப்பி, அதன்மேல் இரஸத்தை வைத்து, இரஸத்தின் மேலும் அக்கல்கத்தைப் பரப்பி, அக்கினியிட்டு ஊதவும். இவ்விதம் செய்ய இரஸமானது மற்றச் சரக்குகளில் பாய்ந்து, ஒவ்வொரு சரக்கிலும் இரஸம் ஸூக்ஷ்மமாகப் பரவுகின்றது. தாளகத்ரவம், சுத்த நாகம் இவற்றையும் இரஸம் ஆக்ரமிப்பதற்கு பீஜச் சரக்குகளாக உபயோகிக்கலாம். இவ்விதம் இரஸத்தை ஸம்ஸ்காரம் செய்யும் முறைக்கு 'கிராமணம்' எனப் பெயர்.

கிராமணம்.

அபினி சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய், ஊமத்தை விதையெண்ணெய், ஆளிவித்தெண்ணெய், இலவங்கப்பூதைலம், ஜாதிக்காயெண்ணெய், அலரிவேரெண்ணெய் இவை முதலிய எண்ணெய்கள் வேதகம் என்னும் ஸம்ஸ்காரத்திற்கு உபயோகமான தைலங்களாம். நன்றாகச் சுத்தம் செய்த இரஸத்துடன் இவற்றைக் கூட்டி அரைக்க இரஸ வேதகம் செய்யலாம். இது லேபவேதம், கேஷபவேதம், குந்தவேதம், தூம வேதம், சப்தவேதம் என்று ஐந்து விதமாம். (1) வெள்ளியை அல்லது செப்பை வெகு மெல்லிய சேக்குகளாக அடித்து, முற்கூறிய தைலகல்கத்தையும் இரஸத்தையும் அவற்றின் மேல் பூசி, அந்த மூசையில் இட்டு, அக்கினியிலிட்டு ஊதவும்; ஆறிய பிறகு அதை யெடுத்துக்கொள்ள வேண்டும். இது லேபவேதம் எனப்படும். (2) செப்பையாவது, வெள்ளியையாவது உருக்கி, அவ்விதம் உருகியுள்ள நிலைமையில் இரஸத்தில் அதைப்போட, உடனே அந்த லோஹங்கள் பொன்தன்மையை அடையும். இது கேஷப வேதம் என்னும் முறையாம். (3) நாகத்தையாவது, செம்பையாவது, வெள்ளியையாவது, வேறு உலோஹங்களையாவது உருக்கி, அதில் இரஸத்தைச் சேர்த்து, சலாகையினால் குத்திக் குத்திக் கிளற, அந்த உலோஹம் பொன்தன்மையைப் பெறும்; இந்த முறை குந்தவேதம் எனப்படும். (4) செம்பு முதலிய உலோஹங்கள், இரஸத்தின் தூமம் அவற்றின் மேல் படிவதால் பொன்னின் அல்லது வெள்ளியின் தன்மையைப் பெற்றால், அம்முறை தூமவேதம் என்று வழங்கப்படும். (5) கட்டப்பட்ட இரஸத்தைத் தட்டினால் ஒருவித சப்தமுண்டாம்; அவ்வித இரஸத்தின பரிசத்தினால் தாம்ரம் முதலியது பொன்தன்மையைப் பெறலாம். அவ்வித முறையைச் சப்தவேதம் என்பார்கள்.

வேதகம்.

சாஸ்திர முறைப்படி இரஸத்தை உபயோகித்தால் குறித்த பலனைத் தரும்; வேறு வகையில் உபயோகித்தால் விஷத்தன்மையைக் காட்டி உயிருக்கு அபாயம் விளைவிக்கும். முதலில் வமகம் செய்வித்து, பிறகு விரேசகம் செய்விக்கவேண்டும். அதன் பிறகு அப்ரகபஸ்மத்தை உட்கொள்ளச் செய்து, பிறகு இரஸத்தை உட்கொள்ளக் கொடுக்கவேண்டும். முற்கூறிய முறைகளிற் பக்குவம் செய்து விதமான இரஸமே தேஹத்திற்கு நல்ல வலிவைத் தரும். எந்த அளவில் இரஸமானது உலோஹத்தை வேதகம் செய்யவல்லதோ, அந்த அளவில் அதை உட்கொண்டால் ரோகங்களைப் போக்கி உடலுக்கு வன்மையையும் தரும். ஸாதாரணமாக இரஸத்தை யுட்கொள்ளும் அளவு ஒரு வல்லப பிரமாணம். இரஸௌஷதங்களை வெற்றிலையில் மடித்து புஜிக்கவேண்டும்.

இரஸத்தை இரஞ்ஜநம் செய்வதற்குப் பல வேறு முறைகளுண்டு:—அவற்றுள் சில இங்கு கூறப்படும்:—

இரஞ்ஜநம்.

இரஸத்தை அந்தமூசையில் சேர்த்துச் செப்புப் பொடியையும், இரஸகத்தையும் அல்லது இரக்தவர்க்கச் சரக்கு

கலையும் கூட்டி பரித்தால், இரஸம் சென்னிறங்கொள்ளும். இவ்விடி காயந்திரத்தில் இரஸத்தை வைத்து, இரக்தவர்க்கங்களைச் சேர்த்தும் இரஞ்ஜநம் செய்யலாம். இரஸத்துடன் இரஸகத்தையும், தீக்ஷ்ணை லோஹப் பொடியையும் கூட்டி, வெகு நன்றாக அரைத்தாலும் இரஸம் சென்னிறமடையும். தாம்பப் பொடியையும், இரஸத்தையும் கூட்டி வெகு மிருதுவாக அரைத்துக் கல்கமாக்கி, ஏழு நாட்கள் வைத்திருந்தாலும் இரஸம் இரஞ்ஜநமடையும். மண்ணால் மூஷை செய்து, இரக்தவர்க்கச் சரக்குகளின் கல்கத்தை அதன் மேல் பூசி, அம்மூஷையில் இரஸத்தை வைத்து ஊதினாலும் இரஸம் இரஞ்ஜநமாகும். இரஸத்திற்கு இவ்வித இரஞ்ஜநத்தினால் வீர்யம் அதிகப்படும்.

இரஸ ரத்தின ஸமுச்சயத்தின் விஷய அகாரதி.

அகோர மந்திரம், 87
அக்னி, 144, 148
,, தளம், 98
,, நக்ரம், 41
,, பந்தம், 148
,, மருத்திகை, 119
அக்னியில்லா பஸ்ம முறை, 71
அக்னியினால் ஆகவேண்டிய காரியங்கள், 92
அக்னிஜ ஸ்வர்ணம், 54, 55
அக்னி ஜாரத்தின் குணதிகள், 41
அக்னி ஜாரம், 38, 41
அங்க கூடியா, 64
அங்கார கோஷ்டி, 93, 127
அங்கோல பீஜ தைலம், 83
அசுத்த தாம்ரத்தாலுண்டாகும் தீங்குகள், 61
,, தாளகத்தின் பொது குணங்கள், 31
,, லிங்கம், 42
,, லோஹத்தினால் உண்டாகும் தீங்குகள், 64, 73
,, வங்கத்தின் தூர்க்குணங்கள், 74
,, வெள்ளியால் உண்டாகும் தூர்க்குணங்கள், 59
,, ஸ்வர்ணத்தால் உண்டாகும் தீமைகள், 56
அச்வினீ குமாரபாகம், 96
அஞ்ஜநம், 24, 34
,, ஐந்து விதம், 34
,, சுத்தி, 36
,, ஸத்துவம், 36
அஞ்ஜலி, 137
அட்டுப்பு, 131
அணுக்கள், 136, 137
அண்டகம், 37
அதம லோஹ பஸ்ம முறை, 57
அதமபாதக நோஷ்டம், 9
,, பாதகம், 105, 112
அதிவருத்தாஸம், 156,
அநுபானம், 71
அந்தகாரீ (இரஸ தோஷம்), 139
அந்த முஷை, 60, 108
அந்திரணம், 122
அபாமார்க க்ஷாரம், 76
அபிஷேகம், 103
அபுநர்ப்பவம், 7, 100
அப்ரக நிராஸமாகம், 138, 153
,, நிராஸப் பிரயோஜனம், 154
,, குணங்கள், (பொது) 5
,, குணகுணங்கள், 6, 7
,, சுத்தி முறைகள், 7
,, சுத்தி அஸாத்யம், 11
,, பஸ்ம முறைகள், 8
,, ஸத்துவ சுத்தி, 15
,, ஸத்துவ பாதக முறைகள், 8
,, ஸத்துவ ரஸாயநம், 10
,, விந்தாரங்கள், 8.
அப்ரகத்தை எடுக்கவேண்டிய ஸ்தலத்தின் ஆழம், 6
,, நயப்படுத்தல், 9
அப்ரகம், 5, 6, 7, 43
,, நான்கு விதம், 6
அம்பர், 41
அம்ருத ஹரஸ்தன், 95
அம்லங்களின் பொது உபயோகம், 135
அம்லங்கள், 18, 101, 108, 133
அம்ல பஞ்சகம், 133
,, வர்க்கம், 133
அயம், 54, 63, 80, 131
,, சுத்தி முறைகள், 67, 68, 71
,, தீக்ஷ்ணத்ருதி, 70
,, பஸ்ம முறைகள், 67, 68, 71,
,, முன்று விதம், 63

அய ரஸாயநம், 70
அயஸ், 63
அர்மணம், 137
அர்ஜுந நக்ஷத்ரம், 28, 76
அளவுகள், 136
அன்னபேதி, 24, 29, 43, 88
,, குணங்கள், 29
,, மூன்றுவிதம், 29
அஷ்டமீலாஹ்நங்கள், 89, 131
அஷ்டாதச ரஸஸம்ஸ்காரங்கள், 3,138
அஸுரம், 136
அஸ்வ க்ஷாரம், 76

ஆச்சாதநம், 103
ஆடகம், 116, 137, 138
ஆறு இரஸக்ரந்தங்கள், 2
ஆபாஸ பந்தம், 145
ஆபாஸம், 144, 145
ஆப்யாயநம், 105
ஆமதோஷம், 27
ஆமலஸாரம், 25
ஆயுஷ்யம், 5
ஆரகூடம், 78
ஆரோடபத்ரம், 145
ஆரோடம், 144, 145
ஆவாபம், 60, 103
ஆவாபாதிகளுக்கான விதி, 103
ஆறு லவணங்கள், 131
ஆஸவாம்லம், 143

இங்குளம், 5
இந்திரநீலம், 44, 50
,, சுத்தி, 52
இந்துப்பு, 131
இந்நூலில் வழங்கப்படும் விஷயங்கள், 2
இந்நூலின் பெயரும் ஆசிரியரும், 2
இந்நூலுக்கு ஆதாரமான இரஸக்ரந்தங்கள், 2
இயந்திரங்கள், 111
இயற்கைத் தோஷங்கள் (இரஸத்தின்), 138
இரக்த காந்தம், 66
இரக்த காலம், 37
,, வர்க்கம், 143
இரக்தாதிவர்க்கங்களின் உபயோகம், 135
இரக்தாப்ரகம், 6
இரஞ்ஜநச் சரக்குகள், 89
இரஞ்ஜநம், 22, 23, 89, 108, 157
இரண்டுவித கைரிகங்கள், 28
இரத்தினங்களின் பொது உபயோகம், 45
,, பொது தோஷங்கள், 48
இரத்தினங்கள், 44, 54
,, அணிவதில் உபயோகங்கள், 53
இரத்தின த்ருதி, 52
இரஜத த்ருதி, 60
,, பஸ்ம முறைகள், 59
,, ரஸாயநம், 60
இரஜதம், 58
இரஜஸ், 136, 137
இரஸக குணங்கள், 22
,, சுத்தி 23
,, பஸ்மத்தின் உபயோகம் 24
,, பஸ்மம், 24
,, பேதங்கள், 22
,, ஸத்ம்ய பாதந முறை, 23
இரஸகம், 5, 22, 24, 43, 88
இரஸ கர்ப்பூர முறை, 151
,, கர்ப்பூரம், 151
,, கர்மத்தில் உதவும் கருவி முதலியன, 151
,, க்ராஸம், 7
,, குழம்பு, 97
,, சக்திகள், 88
,, சாலை, 85, 86, 92
,, சாலைக்கு ஏற்ற தேசம், 86
,, ,, வைத்தியர் முதலாளோர், 94
,, சாலையில் இரஸாதிகளை வைக்கும், முறை 88, 92, 93
,, ,, இருக்கவேண்டிய வஸ்துக்கள், 93

இரஸ சாலையின் அமைப்பு 85, 92
,, சாஸ்திர உபதேசத்திற்குப் பாத்திரமானவர்கள், 91
,, சாஸ்திர குருவின் குணங்கள், 84
,, ,, பிரகடநத்திற்கு முகாந்தரம், 84
,, சாஸ்திரம் பார்ப்பவரின் இலக்ஷணங்கள், 85
,, தைலம், 87
,, பங்கம், 97
,, பந்தந முறைகள், 144
,, பரிபாஷைகள், 96
,, ,, முகவுரை, 96
,, ,, முடிவுரை, 110
,, பரிமாணம், 139
,, பர்ப்படி, 146
,, பஸ்ம பரீக்ஷை, 151
,, ,, முறைகள், 150
,, பாகங்களில் ஸஹாயகர்கள், 85
,, பைரவன், 92
,, மண்டபம், 86
,, மூலிகாவர்க்கம், 144
,, மூலிகை, 144
,, லிங்க பூஜா முறைகள், 86
,, ,, ஸ்வரூபம், 86
,, லிங்கம், 86
,, லோஹ பாஷாணாதிகள் பஸ்மமான பிறகே இரஸ முறைக்கு உபயோகம், 80
,, வஜ்ரங்களில் பூநாகஸத்வத்தின் உபயோகம், 81
,, வாதம், 95
,, வித்தையில் லித்திபெறலியலாதவர், 85
,, வேதஜ ஸ்வர்ணம், 54
,, ஸம்ஸ்கார முறைகள், 139
,, ,, ,, பதிணெண் வகை, 138
,, ஸம்ஸ்காராதிகள், 136, 138
,, லித்த லோஹம், 71
,, லித்திபெறுவதற்கான யோக்யதைகள், 91
இரஸ லித்தியும் பலனும், 96
,, லித்தியும் பஸ்மங்களும், 80
,, லேஹநம், 158
இரஸங்களுடைய வகுப்புகள், 43
இரஸங்கள், 2
இரஸத்திற்கு அக்னி தோஷம், 138
,, இயற்கைத் தோஷங்கள், 138
,, உற்பத்தி, 2
,, ஔபாதிக தோஷங்கள், 138
,, கஞ்சுகாதி தோஷங்கள், 4
,, பஞ்ச கதிகள், 4
,, பல வேறு நிலைமைகளிலுள்ள குணங்கள், 138
,, பன்னிரண்டு தோஷங்கள், 138, 139
,, மலதோஷம், 138
,, மஹிமை, 2
,, யௌகிக தோஷங்கள், 138
,, விஷதோஷம், 138
இரஸத்தை கிரஹித்தல், 5
இரஸம், 3, 4, 42
,, அக்னி பந்தம், 148
,, ஆபாஸ ,, 145
,, ஆரோட ,, 145
,, கல்க ,, 146
,, கஜ்ஜலி ,, 146
,, கிரியாஹீந ,, 145
,, குமார ,, 147
,, கேரட ,, 146
,, சிருங்கலா ,, 147
,, தருண ,, 148
,, திருதி ,, 147
,, நிர்பீஜ ,, 147
,, நிர்ஜீவ ,, 146
,, பால ,, 147
,, பிஷ்ட ,, 148
,, பீஜ ,, 147
,, போட ,, 146
,, மஹா ,, 149

இரஸம் மூர்த்தி பந்தம் 148
,, வருத்தி ,, 148
,, ஜல ,, 148
,, ஜலூகா ,, 149
,, ஜீவ ,, 146
,, ஸுஸம் ஸ்க்ருத ,, 149
,, ஹட ,, 145
,, க்ஷார ,, 145
,, ஷட்குணபலி ஜாரிதம், 147
இரஸாங்குச வித்யை, 87
இரஸாஞ்ஜநம், 34, 35, 36, 88
இரஸாயநம், 95
இரஸேந்திரம், 3, 4
இரஸோத்பத்தி, 1
இரஸோபரஸங்களின் பொதுவான சுத்தி முறை, 38
இரஸௌஷதங்களால் உண்டாம் கோளாறுகளுக்குப் பரிஹாரங்கள் 152
இரஸௌஷதங்களுக்குப் பத்திய முறை, 151
இரஸௌஷதத்தின் வீர்யத்தை விருத்தி செய்பவை, 152
இரஸௌஷதம் உட்கொள்ளும் முறை, 151
இராமராஜி முறைப்படி கந்தலோஹாதிகளின் சுத்தி பஸ்மாதிகள், 71
இராஜ நீலம், 47
,, நீதி, 79
,, ஹஸ்தம், 6, 129
இராஜாவர்த்தம், 36, 43, 44, 53, 54, 88
,, சுத்தி முதலியது, 44
,, பஸ்மம் முதலியது, 44
இராகூஸ முகாஸம், 107
இருபத்தேழு வித்தர்கள், 90
இருபத்தைந்து வித இரஸபந்தங்கள், 144
இரும்புக் கல்வங்கள், 93
இரு வங்கங்களுடையவும் சுத்தி முறை, 74
இரேகாபூர்ணத்வம், 129
இலவணங்கள், 108
,, ஆறு, 131
இலவண யந்திரம், 15, 116
இஷ்டகா யந்திரம், 118

ஈயத்தின் ஸத்ருவம், 43

உதும்பரம், 136
உத்காடநம், 109
உத்தாணம், 100, 141
உத்தாபநம், 105, 109, 138, 141
உத்தாபநா, 102
உத்பலம், 131
உந்மாநம், 137
உப ரஸங்களும் ஸாதாரண ரஸங்களும், 24
,, ரஸங்கள், 2, 24, 43, 88
,, ,, எட்டு, 24
,, விஷங்கள், 124
உபல சாடு, 131
உபலம், 131
உப்பு மண், 89
உருக்கிரும்பு, 54, 64
உரோமகாந்தம், 65, 66
உலாந்தாலிங்கம், 42
உலகள், 127
உலோஹ காடிந்ய நாசநம், 135
,, ,, நாசி வர்க்கம், 135
,, கிட்டம், 72
,, குணங்கள், 76
,, சுத்தி முறைகள், 67, 68
,, பஸ்மாதி முறைகள், 57, 67, 68, 72
,, பஸ்மத்தில் சிறந்தது, 57
,, ,, மத்திமம், 57
,, ,, அசிமம், 57
,, ரஸாயநம், 70
உலோஹங்களின் ஜாதிகள், 54, 131
உலோஹங்கள், 2, 53, 54, 131
,, எட்டு விதம், 68, 131
உழமண், 56
உழமண்ணுப்பு, 131

ஊர்த்வ பாதநம், 105, 112
,, பாதநயந்திரம், 112, 118
ஊநமம், 100

எட்டிக்கொட்டைத் தைலம், 83
எட்டு உபரஸங்கள், 24
,, உலோஹங்கள், 68, 72
எஃகு, 54

ஏக கோலீஸகம், 101
,, முக காந்தம், 65
ஏழு உபவிஷங்கள், 134
,, தாதுக்கள், 54

ஐந்துவித அஞ்ஜநங்கள், 34
,, இரஸங்கள், 3
,, இரஸ பூஜைகள், 2
,, வேதங்கள், 157
,, க்ஷாரங்கள், 132

ஒட்டடை, 56, 89
ஒற்றைச் சாண், 128
ஒன்பது உபவிஷங்கள், 134
,, தாதுக்கள், 54

ஓஜஸ், 47
ஓஷதி கிரஹணம், 95
ஓஷதி வர்க்கம், 89

ஔத்பிதலவணம், 80
ஔபாதிக தோஷங்கள் (இரஸத்தின்), 139
ஔஷத வர்க்கங்கள், 122
ஔஷதாதி வர்க்கங்கள், 122, 123

ககாராதி கணங்கள், 152
கங்குஷ்ட குணங்கள், 37
,, சுத்தி முதலியது, 37
,, பேதங்கள், 37
கங்குஷ்டத்தை ஔஷதமாயுப யோகித்தல் முதலியன, 38
கங்குஷ்டம், 24, 37, 38, 43, 88
கச்சப யந்திரம், 114
கஞ்சுக தோஷங்கள், 138
கஞ்சோலீ, 94
கடம், 137
கடலுப்பு, 131
கடவுள் வழிபாடு, 1
கடார லோஹம், 63, 64
கடிகை, 25
கடோரீ, 94
கணவீரகா, 33
கண்டா, 33
கண்டயம், 30
கநிஜ ரஜதம் (வெள்ளி), 58
,, ஸ்வர்ணம், 54, 55
கந்தக குணங்கள், 25, 28
,, சுத்தி முறைகள், 26
,, தைலம், 28
,, த்ருதிகள், 26
,, த்ருதி குணங்கள், 26
,, பஸ்மம், 28
,, பேதங்கள், 25
,, யோகங்கள், 27
,, ரஸாயநம், 26
கந்தகத்தின் நாற்றத்தைப் போக்கும் முறை, 26
கந்தகம், 24, 25, 43, 88
,, உபயோகிக்கையில் விலக்க வெண்டியவை, 27
சந்துக யந்திரம், 120
கபரி, 22
கபர்தம், 38, 40
கபோத புடம், 130
கம்பில்லத்தின் குணங்கள், 38
கம்பில்லம், 38, 39
கரம், 64
கர லோஹம், 64, 65
கர விஷம், 133
கர ஸத்துவம், 81
,, ஸாரம், 65
கர ஹாடிகா, 122
கரி அடுப்பு, 127
,, கும்மட்டி, 127
,, முதலியன, 94
கருடப்பச்சை, 44
,, சுத்தி, 52, 54
கருப்புச் சுர்மா, 34
கருவங்கம், 15, 53, 75

கரோடி முறைச் சம்புடம், 153
கர்ப்ப திராவணம், 106, 197
,, த்ருதி, 107, 138, 155
,, மூஷை, 126
,, யந்திரம், 115
கர்ப்பரம், 20, 22, 24
கர்ப்பூர சிவாஜது, 17, 19
கர்ஷகம், 65, 66
கர்ஷம், 54, 131, 136, 137, 138
கலப்பு லோஹரம், 79
,, ஸ்வர்ணம், 56
கலை, 136
கல்க பந்தம், 146
கல்கம், 144, 146, 155,
கல்வங்கள், 93, 120
,, மூன்று விதம், 121
கல்வத்திற்கு உபயோகமான சிலை, 120
கல்வத்தின் அளவு, 120
கவடி, 40
கவலக்கிரஹரம், 136
களிம்பு, 155
கஜ புடம், 129, 130
,, ஹஸ்தம், 129
கஜம், 65
கஜ்ஜலி, 97, 144, 146
,, பந்தம், 146

காகதுண்டி, 77
,, தைலம், 84
காங்கி ,30
காஞ்ஜிகம், 18, 140
காடி ,18
காந்த சுத்திமுறை, 71
,, பரீக்ஷைகள், 66
,, பஸ்மம், 72
,, லோஹமுகம், 65
,, லோஹரம், 53, 88
,, ,, ஐந்து விதம், 65
காந்தத்திற்கு அநுபானம், 71
,, இரஸ விந்துவிற் கூறிய குணங்கள், 67
காந்தத்தின் பொது குணங்கள், 67
காந்தம், 63, 65, 71
,, திரஹிக்கத் தகுந்த பூமி, 66
காபாலிக கணத்வம்ஸீ, 135
,, கணம், 135
காம்ஸ்ய சுத்தி முறைகள், 79
,, பஸ்ம முறைகள், 79
,, விமலம், 16
காம்ஸ்யம், 79
கார கோஷ்டி, 93, 128
,, மூஷை, 123
கார வேல்லகம், 22
காரிகா, 94
காரீயம், 15, 54
காருத்மதம், 47
காரை, 123
கால கூடம், 133
கால லோஹரம், 64, 65
காவி, 24, 56, 88, 89
காளகம், 72
காஷீஸ குணங்கள், 29
,, சுத்தி, 29
,, பேதங்கள், 29
,, ரஸாயகம், 30
,, ஸத்துவம், 29
காஷீஸம் (அன்னபேதி), 29

கிசோர ரஸம், 155
கிட்டி, 83
கிண்ணங்கள் முதலியன 94
கிரஹித்தல், 7
கிரஸ்த யந்திரம், 119
கிராமணம், 138, 157
கிராஸமாகம், 106, 138
கிராஸம், 48, 51, 106, 106 138
,, செய்தல், 106, 138
கிராஹி, 37
கிராஹிகா, 94
கிரிண்டம், 131
கிரிண்டிகா, 94
கிரிஷிந்தூரத்தின் குணாதிகள், 41
கிரிஷிந்தூரம், 38, 41
கிருஷ்ண கந்தகம், 25
,, காந்தம், 66
,, வர்க்கம், 135

கிருஷ்ணை தைலம், 84
கிருஷ்ணைப்ரகம், 6
கிரௌஞ்சிகா, 122

குக்குடபுடம், 130
குஞ்ஜா, 19, 136, 137
குடவம், 137, 138
குண்டம், 9
குண்டலோஹரம், 63, 64
குந்தவேதம், 109, 157, 158
குப்பிகள் முதலியன, 94
குமாரபந்தம், 147
குமாரம், 144, 147
குமுதம், 122
கும்பீபலம், 52
கும்மட்டிகள், 127
குரவங்க சுத்தி முறை, 74
குரவங்சம், 73, 74
குருதத்தினம், 47

கூபிகா, 94
கூர்ச்சம், 94

கேசராஞ்ஜநம், 43
கேச்யம், 30
கேதார சிருங்கம், 43

கைரிக குணங்கள், 28
,, சுத்தி, 28
,, ஸத்துவம், 28
கைரிகம், 24, 28, 43, 88
,, இரண்டு விதம், 28

கோகிலங்கள், 94
கோடபந்தம், 146
கோடம், 82, 144, 146
கோமூத்ர சிலாஜது, 17
கோமேதகம், 44, 45, 51
,, சிறந்தது, 51
கோமேத சுத்தி, 51, 52
கோமேதத்தின் உபயோகங்கள், 51
,, குணதோஷங் கள், 51
,, பரீக்ஷை, 51

கோலம், 136, 131
கோலா, 94
கோவர புடம், 130
கோவரம், 130
கோவிகா, 122
கோள மூஷை, 126
கோஷம், 79, 101
கோஷ்டாக்ருஷ்டம், 101
கோஷ்டம், 9
கோஷ்டிகளின் பொது உபயோகம், 127
,, ,, லக்ஷணம், 128
கோஷ்டிகள், 122, 127
கோஷ்டீ, 9
,, யந்திரம், 115, 117
கோஸ்தந மூஷை, 125

கௌரிபாஷாண குணங்கள், 39
,, பேதங்கள், 39
கௌரிபாஷாணம், 38, 39

க்ரியாஹீநபந்தம், 145
க்ரியாஹீநம், 144, 145
க்ருத்ரிம ரஜதம், 58
,, லோஹங்கள், 131
,, விஷங்கள், 133

சகணம், 131
சங்க பாஷாணம், 39
சங்கம், 43
சதுர்முக காந்தம், 65
சந்திர காந்தம், 44, 54
,, தளம், 98
சந்திரார்க்கம், 99
சந்நிகை (அப்ரகதோஷம்), 7
சந்நிகையைப் போக்குதல், 10
சபலங்களின் தன்மைகள், 21
சபல குணங்கள், 21
,, சுத்தி, 22
,, பேதங்கள், 21
,, ஸத்துவம், 22
சபலத்தன்மை, 105
சடலம், 5, 21, 43, 88, 102
சப்தவேதம், 109, 157, 158

சாராசாரம், 40
சரீரயோகம், 138
சர்மாரம், 42
சரத் கோஷ்டி, 93
சல்லடைகள், 93
சஷ்டிகம், 94

சாகல பஞ்சகம், 132
சாணம், 27, 131, 136, 137, 138
சாரணம், 106, 138, 155
சாரணை, 107

சித்திரங்கள், 94
சில காந்தயோகங்கள், 27
சிலா தாது, 17
சிலாஜது, 5, 17, 43
,, உண்டாகுமிடங்கள், 17, 18
,, குணங்கள் (பொது), 18
,, சுத்தி, 15
,, நிஸ்ஸத்துவம், 17
,, பஸ்மம், 19
,, பேதங்கள், 17
,, ரஸாயநம், 19
,, லக்ஷணம், 18
,, ஸத்துவம், 19
,, ஸஸத்துவம், 17
சிலோதகம், 148
சிறந்த உலோஹ பஸ்மமுறை, 57
,, உலோஹத்தின்குணங்கள், 73
,, காந்தம், 72
,, வெள்ளியின்லக்ஷணங்கள், 58
,, ஸ்வர்ணம், 56
சிஷ்யோபநயநம், 84

சுக மண்டம், 25, 42
,, பிச்சம், 25
சுக்தி, 46, 136, 137, 138
சுத்த கந்தக குணங்கள், 28
,, ,, ரஸாயநம், 26
,, லோஹங்கள், 54
,, லோஹத்தின் குணங்கள் 73,
சுத்தாவர்த்தம், 103, 104
சுபம், 137
சும்பகம், 65, 66
சுர்மா, 34
சுல்ப நாகத்தின் உபயோகம், 98, 99
,, நாகம், 98
சுல்லகா, 103

சூத்திர வஜ்ரபஸ்மமுறை, 50
,, வஜ்ரம், 48
சூர்ணபாரதம், 42
சூர்ப்பம், 137
சூலிகாலவணம், 39, 131

செங்கற் பொடி, 56, 89
செம்பு, 53, 54, 60, 74

சேதீ, 138

சோகி, 40
சோதநீயவர்க்கம், 135
சோழி, 38, 40, 43

ச்யாமிகா, 33
ச்ருங்கம், 133
ச்ருங்கலா, 144, 147
,, பந்தம், 147
ச்வித்ரஹரம், 30
ச்வேத மாக்ஷிகம், 14
,, வர்க்கம், 134
ச்வேதாப்ரகம், 6

டங்கணம், 43, 88
டங்கண க்ஷாரம், 79
டமருக யந்திரம், 119
டாளகம், 102

டேகீ யந்திரம், 113
டோலா யந்திரம், 111

தக்கத்த ஹஸ்தன், 95
தப்த கல்வம், 93, 121
தரணம், 136, 137
தரத தேசம், 5
தரதம், 5, 42, 43
தருண பந்தம், 147
தருணம், 148

தர்தூரம், 22
தன்வந்தரி பாகம், 96

தாடநம், 100
தாடிம க்ஷாரம், 76
தாது, 55, 101
,, காலீஸம், 29
,, பொருள், 101
,, வாதம், 95
தாந்யாப்ரகம், 78, 101
தாந்யாம்லம், 140
தாம்ரத்தின் ஐந்துவித தோஷங்கள், 61
,, குணங்கள், 61
தாம்ர சுத்தி முறைகள், 61, 74
,, பஸ்மமுறைகள், 61, 74
,, ரஸாயநம், 63
தாம்ரம், 60, 80, 131
,, இரண்டு விதம், 60
தார க்ருஷ்டி, 97
,, மாக்ஷிகம், 14
,, ரக்தி, 98
,, விமலம், 16
தாரா வட்டம், 64, 65
தாரா வர்த்தம், 65
தார்க்ஷ்ய சைலம், 35
தார்க்ஷ்யம், 35, 47
தாளக குணங்கள், (வேறு), 31
,, சுத்தி முறைகள், 31
,, பஸ்மமுறைகள், 32
,, பேதங்கள், 31
,, ஸத்துவ முறை, 32
தாளகம், 24, 31, 33, 43, 88

திரஸரேணு, 137
திராவகம், 65, 66, 101
திராவணவர்க்கம், 135
திராவணாதி வேலகளுக்குரிய விறகுகள், 101
திராஸம், 48
திரோணம், 137, 138
திர்யக் பாதநம், 103
,, பாதநயந்திரம், 113
தில க்ஷாரம், 115
திவ்ய ஔஷதி, 107
நிர்யாப்ரக குணங்கள், 11

தீபநம், 106, 138, 143
தீபிகாயந்திரம், 113
தீக்ஷ்ண சுருதி முறைகள், 70
,, லோஹத்தின் குணங்கள், 65
,, லோஹம், 54, 63, 64, 69
,, ,, ஆறுவிதம், 64
தீக்ஷ்ணம், 63, 71

துத்த உற்பத்தி முதலியது, 19
,, குணங்கள், 20
,, சுத்தி, 20
,, நாகம், 54
,, பஸ்மம், 20
,, ஸத்துவ மோதிரத்தின் உபயோகம் 21
,, ,, மோதிரம், 21
,, ஸத்துவம், 20, 21
துத்தம், 19, 24
துரிசு, 19
துருத்தி, 93, 144, 147
துலாம், 137, 138
துவரி, 30
துவரியின் இலக்ஷணங்கள், 30
,, குணங்கள், 30
,, சுத்தி, 31
,, பேதங்கள், 30
,, ஸத்துவம், 31

தூபநச் சாக்குகள், 120
தூபயந்திரம், 20
தூம கதி, 4
,, வேதம், 109, 156, 157
தூஷீ விதம், 133

தேவதாளி தைலம், 83, 84
தேறற லோஹகரம், 21
,, ஸித்தி, 72

தைல பாதந முறை, 83

தோலம், 136

தௌதம், 102

த்ரபு, 73
த்ராவீ (இரஸதோஷம்), 138, 139
த்ரி கடு, 15
,, தோஷஹரம், 30, 36
,, முககாந்தம், 65
த்ரியூஷணம், 15
த்ருடி, 136, 137
த்ருதிகளைச் சேமித்து வைக்கும் முறை, 53
த்ருதிகள், 2
த்ருதி பந்தம், 147
,, லக்ஷணம், 107
த்வந்த்வாகம், 102
த்வாங்க்ஷீ, 129
த்விமுக காந்தம், 65

நபும்ஸக வஜ்ரம், 47, 48
நல்முத்து, 45
,, குண குணங்கள், 54
,, சுத்தி, 46, 52
,, த்ருதி, 53
,, பரீக்ஷை, 46
,, பஸ்மம், 46
நல்வணம், 137
நவ உபவிஷங்கள், 134
நவ கீதப்ரகம், 142
நவ ரத்தினங்களின் சுத்தி முறைகள், 52
நவரத்தினங்கள் 44, 45
நவஸாகரம், 40
நவஸாதரம், 40
நவஸாரத்தின் குணங்கள், 39
நவஸாரம், 38, 39, 40
நவாசாரம், 40
நவிகா யந்திரம், 116
நவ்டபிஷ்டி, 105

நாக சபலம், 102
,, சுத்தி, 74
,, பஸ்மம், 76
,, ஸத்துவம், 34
நாகம் (அப்ரகம்), 6
நாகம், 15, 54, 75, 80
நாபி யந்திரம், 119
நாளிகை, 37
நான்கு வித அப்ரகங்களின் குண குணங்கள், 6
,, ,, அப்ரகங்கள், 6
,, ,, லோஹ்ர பஸ்ம முறைகள், 57

நிதி, 95
நிதிகளைக் கண்டுபிடித்தல், 95
நிதிஸாதகம், 95
நிமிஷ, 13
நியமகம், 105, 138, 143
நிருத்தம், 60, 100
நிரோதகம், 142
நிர்தளம், 43
நிர்பீஜபந்தம், 147
நிர்பீஜம், 144, 147
நிர்முகஜாரணை, 106
நிர்வாபணம், 99
நிர்வாபம், 103
நிர்ஜீவபந்தம், 146
நிர்ஜீவம், 144, 146
நிறைகள் அல்லது அளவுகள், 136
நிஷ்கம், 27, 86, 136
நிஷ்பாவம், 136, 137
நிஸ்ஸத்வ சிலாஜது, 17

நீலகண்டி, 45
நீலம், 44, 45
நீலமணி, 50
,, சுத்தி முறை, 50
,, பஸ்மம், 50
நீல ரத்தினத்தின் உபயோகங்கள், 50
,, ,, குணதோஷங்கள், 50
,, ரத்தினம், 50
,, ,, இருவகை, 50
நீலாஞ்ஜகம், 34, 35

நேத்ரியம், 35
நேபாளம், 60, 61
நேபாளவிதைத் தைலம், 83

பக்வ மூஷை, 125
பங்கத் தன்மை, 146
பங்கம், 146
பஞ்ச அம்லம், 133
,, ஆஜம், 9
,, கவ்யம், 9
,, சாகலம, 132
,, மாஹிஷம், 9, 132
,, முக காந்தம், 65
,, மூத்ரங்கள், 115
,, ம்ருத்திகைகள், 56, 89, 133
,, ரத்தினங்கள், 44
,, லவணங்கள், 80
,, லோஹம், 80
,, க்ஷாரங்கள், 132
பஞ்ஜரி, 103
படிகாரம், 24, 30, 43, 56
படிகி, 30
படு, 56
,, தாது, 56
பதங்கம், 103
பதங்கி ராகம், 103
பத்மராகம், 44, 45, 54
பத்மஹரஸ்தன், 95
பத்ராப்ரகம், 7
பந்தநம், 122
பரமாணுக்கள், 137
பரிசவேதி, 66
பரிசாரகர்கள், 94
பரிணமம், 106
பர்ப்படி, 138, 139, 146
பலகறை, 40
பலபலீ யந்திரம், 117
பலம், 136, 137, 138
பலவேறு சரக்குகளிலிருந்து தைலம் இறக்கும் முறைகள், 83, 84
பலி, 25
,, வஸா, 25
,, ஸாதகம், 95
,, பலாசக்ஷாரம், 115
பல்யம், 5
பவளத்தின் எட்டு தோஷங்கள், 46
,, ஏழு குணங்கள், 46
,, குணகுணங்கள், 46
பவளத்தின் சுத்தி, 46, 52
பவள மகரிஷி, 42, 118
பவளம், 44, 45, 46
பஸ்மங்களின் பரிசோதனை, 57
பஸ்மங்கள், 2
பஸ்ம மூஷை, 126
பஹிச் சீதம், 104

பாகம், 65
பாசனீ, 122
பாடனீ, 138, 139
பாணிதம், 112
பாணிதலம், 136
பாண்ட புடம், 130
பாதக பிஷ்டி, 97
,, யந்திரம், 5
பாதகம், 105, 138, 141, 142
பாதனீ, 122
பாத ராஜதம், 58
பாதாள கோஷ்டி, 127
பாத்ரத்வயம், 137
பாம்ஸு காஹ்ஸம், 29
பாரதம், 3, 4, 91
பாரம், 137, 138
பால பந்தம், 147
,, ரஸம், 155
பாலம், 144, 147
பாலிகா யந்திரம், 118
பாரிகைகள், 94
பால்துத்தம், 88
பாவனை, 32
பாஷ்யத்ருதி, 107, 138, 154

பிச்சடம், 73
பிஞ்ஜரி, 99
பிட மூஷை, 124
பிடம, 40, 65, 89, 108, 114
பிடால பதம், 136
,, லவணம், 80, 131
பிண்டம், 106
பித்த விஷம், 133
பித்தளை, 53, 54, 131
,, இகழ்ந்தது, 78
,, இரண்டு விதம், 77

பித்தளை குணங்கள், 77
,, சிறந்தது, 78
,, சுத்தி முறை, 78
,, பஸ்மம், 78
,, ரஸாயநம், 78
பிரகம், 6
பிந்து, 48
பிரகுஞ்சம், 136
பிரதிவாபம், 103
பிரம்ம ரீதி, 79
பிரவாள குணங்கள், 46
,, சுத்தி, 46, 52
,, பரீக்ஷை, 46
,, பஸ்மம், 46
பிரவாளம், 44
பிரஷ்ட யந்திரம், 76
பிரஸ்தம், 137, 138
பிரஸ்ருதம், 137, 138
பிரஹேபலோஹம், 100
பிராக்ருத வைர்ணம், 54, 55
பிராக்ருதரதி ஸ்வர்ணங்கள், 55
பிராமகம், 65, 66
பிராம்மண வஜ்ர பஸ்ம முறை, 49
,, வஜ்ரம், 48, 49
பிஷ்வம், 136
பிஷ்டகம், 131
பிஷ்டம், 105
பிஷ்டி, 97, 144, 145
பிஷ்டிகாபந்தம், 145

பீத காந்தம், 66
,, மணி, 47
,, வர்க்கம், 134
,, ஸ்படிகம், 47
பீதம், 39
பீதரப்ரகம், 6
பீதிகா, 30
பீஜ தாதுக்கள், 108
,, பந்தம், 147
பீஜம், 100, 144, 147
பீஜாவர்த்தம், 104

புடங்களை நிர்ணயிப்பதில் பொது விதி, 131
புடங்கள், 122, 128
புட யந்திரம், 117
புருஷ வஜ்ரம், 47
புல்ல தூவரி, 30
புல்லிகா, 30
புற்று மண், 56, 89
புஷ்ப காஸீஸம், 29
,, ராகத்தின் குணகுணங்கள், 47
,, ,, சுத்திமுறை, 52
,, ராகம், 44, 45, 47, 54
புஷ்பாஞ்ஜநம், 34, 36,

பூதர புடம், 131
,, யந்திரம், 117
பூதாரச்ருங்கம், 43
பூமி தோஷம், 141
,, லோஹங்கள், 54
பூநாகம், 21
பூநாக ஸத்துவ அங்குலீயக குணங்கள், 82
,, ,, அங்குலீயகம், 82
,, ஸத்துவம், 34, 81, 88
,, ,, எடுக்கும் முறைகள், 81
பூமிகோஷ்டி, 93

பேதீ, 139

பொன், 53, 54, 131
,, குணங்கள், 56
,, சுத்தி முறை, 56
,, மிஸ்ரை, 14
,, பொது குணங்கள், 56
,, ரேக்குகள், 120

போகரம், 64
போட பந்தம், 146
போடம், 144, 146
போதநம், 143
போதாரச்ருங்கம், 43

ப்ருஹத் வர்ண மாக்ஷிகம், 14

மஞ்ஜுமணி, 47
மஞ்ஜுஷ மூஷை, 126

மஞ்ஜுஷாகார மூஷை, 126
மடல் அத்தம், 22
மணிகள், 44, 54
மண்கள், 89
மண்டூகம் (அப்ரகம்), 6
மண்டூரத்தின் சுத்தி பஸ்மாதி முறைகள், 72
மண்டூரம், 72
மதகவலயங்கள், 150
மதுரத்ரயம், 132
மத்திம லோஹ பஸ்ம முறை, 57
மரச்சிலை, 19, 24, 33, 55, 88
,, குணங்கள், 33
,, சுத்தி முறைகள், 34
,, மூன்று விதம், 33
,, ஸத்துவபாதந முறைகள், 34
மயில் அத்தம், 19, 88
மயூர அத்தம், 19
மாகதத்தின் குணகுணங்கள், 47
,, சிறந்த குணங்கள், 47
,, தோஷங்கள், 47
மாகதம், 44, 45, 47
மரீசி, 137
மர்த்தநம், 104, 138, 140
மல கதி, 4
,, காரீ, 138, 139
,, வர்க்கம், 134
மலங்கள், 6
மல்ல மூஷை, 125
மஞ்ஜிஷ்ட, 33
மஹா சாகக்ஷாரம், 76
,, நீலம், 44
,, பஞ்ச விதங்கள், 133
,, பந்தம், 144, 149
,, புடம், 129
,, மூஷை, 15, 126
,, ரத்தினங்கள், 45
,, ரஸங்கள், 5, 8, 43, 88
மஹௌஷதி, 107

மாணிக்கத்தின் எட்டு தோஷங்கள், 45
,, குணதிகள், 45
,, சுத்தி, 45, 52
மாணிக்க பஸ்மம், 45
மாணிக்கம், 44, 45
மாத பரிபாலனை, 136
மாமிகை, 137, 138
மாரணம், 7, 99
மாஷம், 136, 137, 138
மாஹிஷ பஞ்சகம், 132
மாக்ஷிக உற்பத்தி, 13
,, குணங்கள், 14
,, சுத்தி, 14
,, தருத்தி, 16
,, பஸ்மம், 14
,, பேதங்கள், 14
,, ஸத்துவ குணங்கள், 15
,, ஸத்துவ ரஸாயநம், 15
,, ஸத்துவம், 15
மாக்ஷிகம், 5, 13, 15, 43

மிச்ரக சுத்தி முறை, 74
,, வங்கம், 73, 74
மிச்ரகம், 3, 4
மிச்ர லோஹங்கள், 54
மித்ர பஞ்சகம், 100
மிருது லோஹம், 63

முகமுள்ள ரஸம், 106
முகம், 143
முண்டம், 63, 71
முண்ட லோஹத்தின் குணங்கள், 64
,, லோஹம், 63
,, ,, மூன்று விதம், 63
முத்தி, 44, 54
முத்துக்களின் தோஷங்கள், 46
முத்துச் சிப்பி, 46
முரசார சிங்கு, 38, 43
முஷ்கக க்ஷாரம், 115
முஷ்டி, 136
முஸல மூஷை, 126

மூத்திரங்கள், 108
மூத்திரவர்க்கம், 132
மூர்ச்சநம், 104, 138, 140, 141
மூர்த்தி, 144, 148
,, பந்தம், 148

மூல மந்திரம், 89
மூலிகைகளைக் திரஹித்தல், 95
மூன்று வித ஔஷதங்கள், 94
,, கல்வங்கள், 121
,, சல்லடைகள், 93
,, மதுரங்கள், 132
,, வெள்ளிகள், 58
,, க்ஷாரங்கள், 79, 132
மூஷா, 122
மூஷாப்யாயநம், 125
மூஷைகள், 122
மூஷைக்கான ம்ருத்திகை முதலி யன, 122
மூஷையின் விவரணம், 122
,, ஸந்தி பந்தநம், 122

மௌக்திக சுத்தி, 46
,, த்ருதி, 53
,, பரீக்ஷை, 46
,, பஸ்மம், 46
மௌக்திகம், 44, 54

ம்ருத பாண்டபுடம், 130
,, லோஹம், 99
ம்ருது லோஹம், 63
ம்ருத்தார சுருங்கம், 38, 43
ரஸலக்சம் (தாம்ரம்), 60, 61

யந்திரங்களின் முகவுரை, 111
யந்திரங்கள், 111
யந்திர முறைகள், 2
யவம், 136, 137
யவக்ஷாரம், 18, 99, 115

யுவரஸம், 155

யூகம், 136, 137

யோக மூஷை, 123

யௌகிக தோஷங்கள், 138

ரக்த வர்க்கம், 134
ரக்தாப்ரகம், 6
ரங்கம், 73
ரந்திரணம், 122
ரஜத குணங்கள், 59
,, சுத்தி முறைகள், 59
,, தோஷங்கள், 58
,, த்ருதி, 60
,, பஸ்ம முறைகள், 59
,, லக்ஷணங்கள், 58
,, ரஸாயநம், 60
ரஜதம், 58
ரஸகம, 5
ரஸம், 3, 4
ரஸேந்திரம், 3, 4
ராகம், 131
ராமராஜி முறைப்படி காந்த லோஹாதிகளின் சுத்தி பஸ் மாதி முறைகள், 71
ராஜரீதி, 79

ரீதிகா, 77, 78

ருசிகரம், 5
ருத்ர பாகம், 96

ரூப்ய மூஷை, 124

ரேகை, 48
ரேசநம், 37
ரேணுகம், 37
ரோதநம், 105, 138, 142, 143
ரோமகலவணம், 131

ரௌஹிணேயம், 47

லயிக்கச் செய்தல், 107

லாவக புடம், 131

லிங்கத்திலிருந்து இரஸமிறக் குதல், 42
லிங்க சுத்தி முதலியது, 42
லிங்கத்தின் குணங்கள், 42
,, ஸத்துவம், 42
லிங்கம், 38, 42, 88

விகூடை, 136, 137

லுஹ தாது, 54

லேகநம், 35, 79
லேபநம், 109
லேப வேதம், 109, 156, 157

லோஹ கல்வம், 121
,, காடிந்ய நாசி வர்க்கம், 135
,, கிட்ட பஸ்மம், 72
,, கிட்டம், 72
,, குணங்கள், 71
,, சுத்தி, 67, 68, 72
,, பஸ்மாதிகள், 67, 68, 72
,, ரஸாயநம், 70
லோஹங்கள், 2, 53, 54, 131
,, எட்டு, 131
லோஹங்களின் திரிதோஷம், 68
,, திராவக முறை, 72
,, ஜாதிகள், 54
லோஹம், 63
,, உபயோகிப்பவனுக்கு பத்தியம, 73
,, எட்டு விதம், 68

வங்க குணங்கள் (பொது), 74
,, சபலம், 102
,, சுத்தி முறை, 74
,, பஸ்ம முறை, 74
,, ரஸாயநம், 75
வங்க-நாக-தாம்ர-வெண்கலங்களின் சுத்தி முறை (பொது) 74
வங்க நாளம், 89, 128
வங்கம், 53, 54, 64, 73, 74, 131
,, இரண்டு விதம், 73
வடகம், 81, 136, 137
வடித்தல், 72
வத்ஸ நாபம், 133
வராட்டி, 131
வராட்டியின் பெயர்கள், 131
வர நாகம், 102
,, மூஷை, 124
,, லோஹம், 98
வராட குணங்கள், 40
,, பஸ்மம், 40
வராடம், 40
வராடி, 131
வராடிகா, 40
வராஹ புடம், 14, 129
வர்ண மூஷை, 124
வர்த்த லோஹ குணங்கள், 79
,, ,, சுத்தி, 80
,, ,, பஸ்ம முறை, 80
,, லோஹம், 54, 80
வர்த்துள கல்வம், 121
வலபீ யந்திரம், 117
வல்லம், 19, 27, 136, 137
வறையோடு, 76
வஜ்ர குணங்கள், 48
,, குளிகை, 50
,, சுத்தி, 49, 52
,, த்ராவண மூஷை, 123, 124
,, த்ருதி, 53
,, பஸ்ம முறைகள், 49, 50
,, ,, ரஸாயநம், 50
,, மூஷை, 122 123
வஜ்ரத்தின் உட்பிரிவுகள், 48
வஜ்ரம், 6, 44, 45, 47, 54, 88
,, மூன்று விதம், 47
வஜ்ராப்ரகம், 6, 88
வஸா வர்க்கம், 132

வாகுசீ தைலம், 83
வாடிகா, 94
வாரிதரம், 99
வார்த்திகங்கள், 111
வாலுகா புடம், 131
,, யந்திரங்கள், 116
,, யந்திர முறை, 116
வாலுழுவைத் தைலம், 82
வாலை, 9
வாஜிர லோஹம், 64, 65

விகடம், 39
வித்யாதர யந்திரம், 114, 115, 118
விபாகம், 59, 65
விமலத்தின் உருவம், 16

விமல குணம், 16
,, சுத்தி, 16
,, பஸ்மம், 16
,, பெதங்கள், 16
,, ரஸாயநம், 17
,, ஸத்துவம், 16
விமலம், 5, 16, 43, 88
வியவாயி, 109, 110
விரண சோதநம், 35
,, ரோபணம், 35
விருத்தியம், 5, 22
விஷ மூர்ச்சி தலம், 8
,, வர்க்கம் 133
விஷங்களின் பொது உபயோகம், 133

வெங்காரம், 43
வெண்கல சுத்தி, 74, 79
,, பஸ்ம முறை 79
வெண்கலத்திற் சிறந்ததும் இகழ்ந்ததும், 79
வெண்கலத்தின் குணங்கள், 79
வெண்கலம், 54, 74, 79, 80
,, கலப்பு லோஹம், 79
வெண்ணி மிளை, 14
வெள்ளி, 53, 54, 58, 131
,, கநிஜம், 58
,, குணங்கள், 55, 59
,, நிராவகம், 60
,, ரஸாயநம், 60
,, ரேகுகள், 120
,, ஸஹஜம், 58
வெள்ளியின் எட்டு தோஷங்கள், 58
,, சுத்தி முறைகள், 59
,, த்ருதி, 60
,, பஸ்ம முறைகள், 59
,, பொது குணங்கள், 59
,, லக்ஷணங்கள், 58
வெள்ளீயம், 73
வெள்ளைப்பாஷாணம், 39

வேதநம், 92, 138, 156
வேத முறைகள், 109, 156
வேதம், 109
வேதம் ஐந்து விதம், 156
வேதஜ ஸ்வர்ணம், 55
வேதை, 92

வைக்ராந்த குணங்கள் (பொது), 11
,, சுத்தி 12
,, த்ருதி, 53
,, பஸ்ம முறைகள், 12
,, ரஸாயந குணங்கள், 13
,, ,, முறைகள், 13
,, லக்ஷணம், 11
,, ஸத்துவம், 13
வைக்ராநதத்தின் தைவீக வரலாறு, 12
வைக்ராந்தத்தைக் கிரஹிக்கும் விதி, 12
,, பற்றி சிலரது கொள்கை, 12
வைக்ராந்தம், 5, 11, 12, 16, 44, 53, 54, 88
வைச்ய வஜ்ர பஸ்ம முறை, 50
,, வஜ்ரம், 48
வைடூர்யத்தின் உபயோகங்கள், 52
,, குணங்கள், 51
,, சுத்தி, 52
,, தோஷங்கள், 5
,, பஸ்மம், 52
வைடூர்யம், 51
வைதூர்யம், 44, 45, 51
வைத்தியர்கள், 94

வ்ருத்த பந்தம், 148
,, ரஸம், 155
வ்ருத்தம், 144, 148
வ்ருத்தாக மூஷை, 125
வ்ருஷ்யம், 5, 22

ஜங்கம விஷம், 21, 82
ஜராயு, 41, 55
ஜல கதி, 4
,, கர்ப்பம், 48
,, திரோணி, 93
,, நீலம், 50
,, பந்தம், 148

ஜல ம்ருத்திகை, 119
,, யந்திரம், 114
ஜலம், 144, 148
ஜலூகா பந்தம், 149
ஜஸதம், 77

ஜாதி லிங்கம், 42
ஜாரணம், 106, 138, 154, 156
ஜாரணை, 106, 107, 108
,, க்ரயம், 106
,, க்ரியம், 106
,, யந்திரம், 113

ஜீவ கதி, 4
,, பந்தம், 146
ஜீவம், 144, 146

ஜைபால ஜதலம், 84

ஷட்குணபலி ஜாரிதரஸம், 147

ஷாட்குண்யங்கள், 117

ஷோடசிகா, 131

ஸஞ்சாரணம், 138
ஸதளம் (ம்ருத்தாரச்ருங்கம்) 43
ஸத்வபாதந கோஷ்டி, 93, 127
,, பாதநம், 2
ஸதவம், 9, 101
ஸத்வாப்ரகம், 9
ஸத்வாப்ரக ரஸாயந முறைகள், 10
ஸந்தமசம், 23
ஸந்திலேபநம், 122
ஸந்நிபாத ஜ்வரம், 36
ஸந்நியாஸத்தின் பயன், 110
ஸந்நியாஸம், 110
ஸபீஜம், 141
ஸப்த உபவிஷங்கள், 134
ஸமூக ஜாரணை, 106
ஸம்ச்லிஷ்டம், 122
ஸம்ஸ்காரத்திற்குத் தேவையான, இரஸபரிமாணம், 139
ஸர்ப்பரக்ஷ்யாதிகணம், 144

ஸர்வதோ முககாந்தம், 61
ஸர்வபம், 136, 137
ஸர்ஜக்ஷாரம், 18, 79, 115
ஸஸத்வஹிலாஜது, 17
ஸஸ்யகம், 5, 19, 43
ஸஹஜ ரஜதம், 58
,, லோஹங்கள், 131
,, ஸ்வர்ணம், 54, 55

ஸாதகர், 84
ஸாதாரணங்களின் சுத்தி, 43
ஸாதாரண ரஸங்கள், 24, 38, 43
,, ,, எட்டு, 38
ஸாத்மியம், 79
ஸாத்ய லோஹம், 100
ஸாமுத்ர லவணம், 80, 131
ஸாரணம், 108, 138, 156
ஸாரணை, 108, 155
,, யந்திரம், 113
ஸார லோஹம், 64, 65

ஸிகதா யந்திரம், 116
ஸித்தார்த்தம், 136

ஸீஸ குணங்கள், 76
,, சுத்தி, 76
,, பஸ்ம முறைகள், 76
,, ரஸாயநம், 77
,, லக்ஷணங்கள், 75
,, ஸத்துவம், 43
ஸீஸம், 15, 75

ஸுவர்ணம், 54, 136
ஸுவர்ண ரீதிகா, 78
ஸுஸம்ஸ்க்ருத பந்தம், 149
ஸுஸம்ஸ்க்ருதம், 144

ஸுதம், 3, 4, 42
ஸுர்யகாந்தம், 44, 54
ஸுர்யாவர்த்தநி வர்க்கம், 36

ஸைந்தவ லவணம், 80, 131

ஸோமநாத தாம்ரம், 62

ஸோமாநல யந்திரம், 114
ஸோமாம்ருதம், 71

ஸௌபர்ணம், 47
ஸௌராஷ்ட்ர ம்ருத்திகை, 43, 88
ஸௌவர்ச்ச லவணம், 80, 131
ஸௌவீரம், 34
ஸௌவீராஞ்ஜநம், 34

ஸ்த்தாலீ யந்திரம், 119
ஸ்த்தாவர விஷம், 21, 82
ஸ்த்ரீ புஷ்பஹரம், 31
,, வஜ்ரம், 47, 48
ஸ்நபநம், 103
ஸ்நிக்த்தம், 7
ஸ்நேஹங்களின் பொது உப யோகம், 135
ஸ்நேஹதம், 89
ஸ்ரோதோஞ்ஜநத்திற்கு இரஸபந் தந குணம், 36
ஸ்ரோதோஞ்ஜநம், 5, 34, 35,36,43
ஸ்வர்ண குணங்கள், 55, 56
,, சுத்தி முறை, 56
,, த்ருதி, 57
,, பஸ்ம குணங்கள், 57
,, ,, முறைகள், 57
ஸ்வர்ணம், 54
,, அக்னிஜம், 55
,, ஐந்து விதம், 54
,, கநிஜம், 55
,, பிராக்ருதம், 55
,, வைதஜம், 55
,, ஸஹஜம், 55
ஸ்வாங்ச ஜீதம், 104
ஸ்வேதநம், 104, 105, 110, 140

ஸ்வேதந யந்திரம், 111
,, ஸந்நியாயங்களின் பயன், 110
ஸ்வேதநீயந்திரம், 111, 120

ஹட பந்தம், 145
ஹடம், 144, 145
ஹத சூர்ணம், 39

ஹம்ஸ கதி, 4
,, பாகம், 42
,, பாக யந்திரம், 115
,, பாதம், 42
ஹம்ஸோதகம், 151
ஹரிதாளம், 31

ஹிங்குளத்திலிருந்து இரஸம் இறக்குதல், 42, 101
ஹிங்குளத்தின் குணங்கள், 42
,, சுத்தி முறை, 42
ஹிங்குளம், 5, 38, 42, 43
ஹிங்குளாக் ருஷ்டம், 101
ஹிங்குளாக் ருஷ்டி வித்யாதர யந்திரம், 118

ஹீரகம், 54

ஹேம க்ருஷ்டி, 97
,, மாக்ஷிகம், 14
,, ரக்தி, 98
,, விமலம், 16
ஹேமாத்ராக்ரம், 65

ஹ்ருந்நாள லோஹம், 64, 65

க்ஷத்ரிய வஜ்ரபஸ்ம முறை, 50
,, வஜ்ரம், 48

க்ஷாரங்களின் பொது உபயோகம், 135
க்ஷாரங்கள், 18, 89, 101, 108
க்ஷார த்ரயம், 132
,, பஞ்சகம், 132
,, பந்தம், 145
க்ஷாரம், 18, 89, 101, 108, 144, 145
க்ஷாராதிகளின் பொது உபயோகம் 135

க்ஷீரவர்க்கம், 134

க்ஷேத்ரகரணம், 145
க்ஷேபவேதம், 109, 157

இரஸரத்தின ஸமுச்சயத்திலும் நூன்முகத்திலும் குறிக்கப்பட்டுள்ள

ஸித்தர்கள், நூலாசிரியர்கள், நூல்கள் ஆகியவற்றின் பெயரகராதி.

[ஒவ்வொரு பெயருக்கும் எதிரில் குறித்துள்ள ஆங்கில எண்கள் இரஸரத்தின ஸமுச்சயத்தினுடையவும், தமிழ் எண்கள் நூன்முகத்தினுடையவும் பக்கங்களைக் காட்டுகின்றன.]

அகத்தியர், கo
அகுதோபய வியாக்யாநம், கஉ
அக்நிவேசர், உக
அச்வினீகுமாரர், உக
அத்ரிஸம்ஹிதை, 117
அமரஸிம்மன், நஉ
அஷ்டாங்க ஸங்கிரஹம், உச உந, உள, உஅ, உக, நo, நக
அஷ்டாங்க ஹ்றுதயம், எ, கச, உச உடி, உசு, உள, உஅ, உக, நo, நக, நஉ, நசு
அஷ்டாங்கஹ்றுதய தமிழ்மொழி பெயர்ப்பு, உச, உடி, நஉ
ஆகமர், 90
ஆசார்ய வாக்படன், (வாக்படர் என்பதைப் பார்க்க)
ஆசுபோத வித்யாபூஷண, 53
ஆதிமர், 1, 90,
ஆத்ரேயர், உக,
ஆயுர்வேதப்ரகாசம், கo, 24, 26, 39, 40, 41 42, 43, 51, 54, 56, 58, 71, 74, 77, 140, 141, 143, 151
ஆரோக்ய மஞ்ஜரி, கஅ
இத்ஹிங், நக
இந்த்ராதூமர், 90
இந்த்ரர், 1
இந்து, நஉ
இரசகாமதேனு, கo
இரச சூடாமணி, கo, உஉ
இரச தந்த்ர நூல், கo
இரசப் பிரகாணம், கo
இரச மாலை, கo
இரச ராசாங்கம், கo
இரத்தின கோசர், 1
இரத்தின கோஷர், 1, 90
இரத்தின மாலா, 29
இரத்தினுகார், 2
இரஸ கல்பம், கo
இரஸ சிந்தாமணி, கo
இரஸ தந்த்ரம், கo
இரஸ நகூத்திரமாலை, கo
இரஸபத்ததி, க, 142
இரஸபத்ததி வியாக்யா, 142
இரஸப்ரகாச ஸுதாகரம், க, 112, 113, 123, 124, 125, 126, 130, 131, 140, 141, 153
இரஸப்ரதீபம், கo, 20
இரஸரத்தின ஸமுச்சய போதிநி, 56, 75
இரஸரத்தின ஸமுச்சயம், உக
இரஸரத்தினுகரம், க, கஉ, கஅ, உநு, உசு, 14, 50, 62, 68
இரஸராஜ லக்ஷ்மி, கo
இரஸராஜஸுந்தரம், கo
இரஸ ஸங்கேத கலிகா, க, 57, 73
இரஸஸாரம், க, 65, 72, 114, 148
இரஸஸிந்து, உஉ
இரஸஹ்றுதயம், க, 154

இரஸாங்குசர், 2
இரஸார்ணவம், கூ, கஉ, உஉ, 5, 6, 15, 43, 48, 126, 148
இரஸேச்வரதர்சநம், கo, 91
இரஸேந்திரசிந்தாமணி, கo, 24, 68, 82, 89, 105, 108
இரஸேந்திரசூடாமணி, கo, ககூ, உங, 111. 114, 115, 117
இரஸேந்திரதிலகயோகி, 2
இரஸேந்திர ஸாரம், 139
இரஸேந்திர ஸாரஸங்கிரஹம், கo, 40
இராம ராஜி, 22, 71
இராஜ தரங்கிணி, ஙo
இராஜ நிகண்டு, 88, 133
எயின்ஸிலீ, கஙூ
கண்டர், 1, 90
கதாஸரித்ஸாகரம், உஅ
கபாலி, 1, 90
கபாலிகர், 1, 90
கபிலர், 1, 90
கம்பலி, 1
கயாதாஸன், ஙஉ
கரிசல், கo
கலிபா, கஙூ, ஙக
ககூபுடதந்திரம், கஅ
காகசண்டீச்வரதந்திரம், கo
காகசண்டீச்வரர், 2
காதம்பரி, கஉ, உஙூ
காபாலிகர், 90
காமாரி, 90
கீத், ககூ
குமாரஜீவன், ககூ
கோபாலபட்டன், கo
கோமுகர், 1, 90
கோரக்கர், உச
கோவிந்த பகவத்பாதர், கூ
கோவிந்தர், 1, 90
கோவிந்தாசாரியர், கூ
சக்ரதத்தர், (சக்ரபாணி என்பதைப் பார்க்க.)
சக்ரதத்தஸங்கிரஹம், அ, கஅ, ஙo
சக்ரபாணி, கூ, கஅ, உo, ஙo
சக்ரபாணிஸங்கிரஹம் (சக்ரதத்த ஸங்கிரஹம் பார்க்க.)
சத்தியநாதர், உச
சந்திரஸேனர், 1, 90
சம்பு, 1, 90
சரக டீகா, கசூ
சரகர், எ, க்ஙு, கள, ஙo, ஙக, ஙஙூ
சரக ஸம்ஹிதை, எ, அ, கச, கள, உஉ, உஙு, ஙஙூ
சரணவியூஹம், கசூ
சர்ப்படி, 90
சாமுண்ட வைத்தியர், கூ
சாரதர், 90
சார்ங்கதர ஸம்ஹிதை, அ, கூ, கஙு, ககூ
சார்ங்கதர ஸம்ஹிதை தமிழ் மொழி பெயர்ப்பு, 9
சிவதாஸன், கசூ
சிவபெருமான், கூ, உஙூ
சிவராமன், கசூ
சூரஸேனன், 1, 90
டல்லணு சார்யர், கஅ
தர்ம ஸங்கிரஹம், ககூ
தாது மஞ்ஜரி, கo
தாதுரத்தின மாலை, கo
தாந்த்ரிகர், 90
திவாகர மிச்ரன், 20
தேவதத்தன், கo
திருடபலன், ஙo
நந்தி, கo, 2
நரவாஹனர், 1, 90
நரேந்திரர், 2
நாக புத்தி, 90
நாக போதி, 1, 90
நாகார்ஜுன தந்திரம், கஉ, 32
நாகார்ஜுன போதிஸத்வக் கிரந்தம், உo
நாகார்ஜுனன், கூ, கஙூ, கஅ, ககூ, உo, உக, 1, 22, 38, 90
நாகேசபட்டன், கள
நித்திய நாதன், கூ, கஅ, உகூ
பட்டபாணன், கஉ, உஙூ
பதஞ்ஜலி, கo, கஉ, கஙூ, கச, கஙு, ககூ, கள, கஅ, உக, உகூ

பதிணெண்ஸித்தர்கள், உச
பரிபாஷாப்ரதீபம், 132
பலி, 90
பாணுஸுரன், 90
பாணினி, கக
பாதஞ்ஜல யோகம், கச
பாரத ஸம்ஹிதை, 6
பாலுகி, 2
பாவப்ரகாசம், அ, கங்ு, 32, 43, 77, 130
பாஸ்கரர், 1, 90
பாஹடம், எ, ஙஙூ
பாஹடர், எ, ஙஙூ
பிரம்மஜ்யோதிர் முனி, 49
பிரத்யுமர, 1, 90
பேளர், ஙக
பைரவர், 2
பைஷஜ்யரத்நாவலி, 29
ப்ருஹத் ஸம்ஹிதை, கஉ
மதங்கஸிஹ்மன், கo
மதநாந்தக தேவஸூரி, கo
மத்தர், 1, 90
மந்தாக பைரவர், 2
மநு ஸம்ஹிதை, 55
மஹாதேவர், 2
மாண்டவ்யர், 1, 90
மாதவகரன், கo
மாதவ நிதாநம், கo, கஙூ, ஙo
மாதவன், கo
மாலதீமாதவம், உங
முனிச்ரேஷ்டர், 90
மூலமாத்யமிக காரிகை, ககூ
மைதிலர், 2
மோசேச்வர குண்டே, ஙக
யசோதனர், கூ, 1, 90
யோக சதகம், கஅ
யோக வார்த்திகம், ககூ
யோக ஸாரம், கஅ
ரஸரத்தின ஸமுச்சயம், உக
ரஸரத்தின ஸமுச்சய போதிநி, 56
ரஸார்ணவம், கஉ
ராமநாதன், உச
ராய் (பி.வி), உஅ, ஙக, 21, 35, 36, 38, 39
ரிகார்ட்ஸ் ஆப் புட்டிஸ்டு சிவிலிஸியன், ஙக
ருச்யச்ருங்கர், 2
லகு மஞ்ஜுஷை, கள
லங்கர், 90
லங்கேச்சர், 1, 90
லம்பகர், 1
லம்படர், 90
லெப்ரா அராபம், கஙூ
லோஹ தந்திரம், கo
லோஹ ஸர்வஸ்வம், கo
வராஹ மிஹிரர், ககூ
வாகடம், எ, ஙஙூ
வாக்படம், எ, ஙக
வாக்படர், எ, கஉ, உஉ, உச, உங, உஅ, உக, ஙo, ஙக, ஙஉ, ஙஙூ
வாக்படாலங்காரம், உக
வாதமஞ்ஜரி, 28
வாமதேவர், 2
வாஸுதேவர், 2
விசாரதர், 1
விஞ்ஞாநபிக்ஷு, ககூ
வியாகரண மஹாபாஷ்யம், கங்ு, கர, கள
வியாடி, 1, 90
வியாளாசார்யர், 90
வில்ஸன், கச, 37
விஷ்ணுதேவன், கo
வைத்தியார்த்தரத்நாகரம், கo
வைத்யகசப்தவிந்து, ஙo, 45, 146
வைத்ய சிந்தாமணி, கo, 46, 50, 51, 52, 74
ஸ்ரீகிருஷ்ண தேவன், 162
ஸ்ரீபிந்து, கூ
ஸ்ரீயார்ஜ் ஹூஜ்த், ஙக
ஜீவகன், ககூ
ஜெஜ்ஜடன், ஙஉ
ஸாதவாஹனன், உo
ஸாத்விகர், 1
ஸித்த யோகம், ஙo
ஸித்ம குப்தர், 2
ஸுச்ருதர், உக, ஙo, ஙக, 35
ஸுச்ருத ஸம்ஹிதை, 7, கச, கஅ, உங, 35

ஸுபுத்தி, 90
ஸுராநந்தர், 1, 90
ஸுரேச்வரர், கூ, கo
ஸுஷ்ருல்லேகை, ககூ
ஸோமதேவன், கo, கக, உஅ, உஅ, உகூ, ரக, 27, 82, 110, 111
ஸ்டீன், ரடo
ஸ்வச்சந்த பைரவம், கo
ஸ்வச்சந்த பைரவர், ரo, 2
ஹரி, 1, 90
ஹரீச்வரர், 2
ஹர்ஷ சரிதம், கடூ, உo, உங
ஹர்ஷ வர்த்தனன், 20
ஹராஜி கலீபா, கங
ஹரிதத், ரடக

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும்
இல்லிலிந்த டாக்டர்களும் கொண்டாடும்

சாங்கிய ஏபிதேரிஸ்தி.

ஆர்யதேச வைத்திரத்தின் எல்லை வைதாம்சங்களும் அடங்கியது.

மூலமும் பூரணமும்

பண்டித ஸ்ரீ. துளஸிராம் ஜயிகாம், எஸ். எஸ்.

அவர்களால் ஸம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில்

மொழி பெயர்க்கப்பட்டது.

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாலனத்து முதலியவைகள்.

1. பூர்வ கண்டத்தில்:—(1) வைத்தியபரிபாலனம், (2) தோஷாதி முதலியவற்றில் விவரணம், (3) ரோக பரீக்ஷாவிதி, (4) ரோக பாசகாதி குண விவரணம், (5) சரீரதத்துவாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியது, (7) சோகவிபரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

தொத்து முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வாஸ முறைகள், க்வாத கஷாய முறைகள், (3) பாண்ட ரோகமுறைகள், (4) ஸ்மிகரோக முறைகள், (5) கல்கமுறைகள், (6) சூர்ணமுறைகள், (7) குளிகை முறைகள், (8) லேஹிய முறைகள், (9) மூல-கிருத-முறைகள், (10) ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) ரஸ-லோஹ-பரதாரஜுதி-சுத்தி பற்றிய முறைகள், (12) இரஸஞ்சன இரஸக்ரியாதி முறைகள் எல்லாம் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

நித்திய நிகழ்ச்சிகள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமனவிதி, (4) விரேசனவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹணவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபானவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபனாதி விதி, (12) ரக்தமோக்ஷணவிதி, (13) நேத்ர சிகித்ஸை ஆகிய பதின் மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தீவியங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். பாலவிஜயங்களுக்கு தம்விஷய அதாதி.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ. 5-4-0.
இரண்டாந்தர பைண்டு	ரூ. 4-4-0.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி
மதராஸ்.